வெளியீடு—3—4—1972]
Issued—3—4—1972]

# தமிழ் நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1971 டிசம்பர் 4

Saturday 4th December 1971

தொகுதி XII—எண் 1

Volume XII—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

V2l1,31'N71
31N71.12
61531

# உள்ளடக்கம்

(4—12—1971)


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | 1–40 |
| 3. அறிவிப்புகள் | |
| (அ) அவையுரிமைக் கேள்வி குறித்து. | 40 |
| (ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்குத் தேர்தல். | 62 |
| 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள் | |
| (அ) மாணவர் மீது காவல் துறையினரின் தடியடிப் பிரயோகமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும். | 40 |
| (ஆ) திருச்சி ஜமால் கல்லூரி மாணவர்கள் தேசியக் கல்லூரி மாணவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்படும் செய்தி குறித்து. | 40 |
| 5. அமைச்சரின் விளக்கவுரை | |
| சென்னை மாநகராட்சி நிலைக்குழுக்களுக்கான தேர்தல் குறித்து. | 58–60 |
| 6. கவன ஈர்ப்பு | |
| தில்லி அகில இந்திய வானொலி இந்திய வானொலியில் தமிழ் அறிக்கைக்கு அளிக்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டதும், அதை மீண்டும் அதிகரிப்பதின் அவசியம் குறித்து. | 60–62 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவு | |
| தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண்.25/1971) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். | 63 |
| தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம். | 63–80 |
| பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். | 80–88 |


128–235—A

## உள்ளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 109—144 |
| 2. | அறிவிப்பு— | |
| | பேரவை அலுவல் குறித்து .. .. .. | 144—149 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | நெய்வேலி லிக்னைட்டில் அதிக அளவு கந்தகம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் சேலம் உருக்காலை சம்பந்தமான வேலையில் தாமதம் ஏற்படக்கூடிய குறித்து .. .. .. .. | 145—148 |
| 4. | அமைச்சர் அறிக்கை— | |
| | துணை வினாவிற்கான விடையைத் திருத்தி உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அளித்த அறிக்கை .. | 148—149 |
| 5. | அரசினர் தீர்மானம்— | |
| | இந்தியாமீது பாகிஸ்தானின் படையெடுப்பைக் குறித்து கண்டனத் தீர்மானம் .. .. .. | 149—185 |
| 6. | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம் தொடர்ச்சி .. .. .. | 185 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 185—186 |

# உள்ளடக்கம்

## (7—12—1971)


1. வினாக்கள்—விடைகள்

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

   (அ) சிம்ஸன் கூட்டு நிறுவனங்களில் ஏற்பட்டிருக்கும் தொழிலாளர் சச்சரவையொட்டிய நெருக்கடி நிலைமை குறித்து.

   (ஆ) சேலம் ஜில்லா ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் நடத்தவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து.

   (இ) கோவையில் சில ஆலைகள், உறுதிமொழிப்படி திறக்கப் படாமையும், தொழிலாளர் நேரடி நடவடிக்கை அறிவிப்பும் குறித்து.

   (ஈ) சுவாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் திடீரென 40 பேருந்துகளை நிறுத்தியதும், தொழிலாளர் வேலை யின்மையும்.

3. கவன ஈர்ப்பு

   சாதாரண வருமான வரியை வேளாண்மை வரியுடன் இணைப்பதற்கான மத்திய அரசின் செயற்குறிப்பு.

4. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்.

5. அறிவிப்பு

   பேரவை அலுவல் குறித்து.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 289–325 |
| 2 நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கும்படி கோரல் .. .. .. .. .. | 325-329 |
| 3 அவையுரிமைக் கேள்விகள்— | |
| பேரவைத் தலைவர் குறிப்பிட்ட நாளில் கூடவிருந்த பேரவைக் கூட்டம் தள்ளிவைக்கப்படலாம் என முதலமைச்சர் பத்திரிகைகளுக்கு அளித்தசெய்தி குறித்து .. .. .. .. .. | 329–336 |
| 4 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்— | |
| (அ) கரிவலம்வந்தநல்லூரில் நடந்த காவல் துறையினரின் துப்பாக்கிச்சூடு குறித்து .. .. | 336 |
| (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் சில இடங்களில் காவல் துறையினர் அத்துமீறி நடந்துகொண்டதாகக் கூறப்படுவது குறித்து .. .. .. | 336–340 |
| (இ) தஞ்சாவூரில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்படாதது குறித்து .. .. | 340 |
| (ஈ) இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றம் குறித்து .. .. .. .. .. | 340–342 |
| 5 கவன ஈர்ப்பு— | |
| (அ) திருப்பூரில் எலிகள் செத்து விழுவதும், பிளேக் நோய் பரவுதலைத் தடுப்பதன் அவசியமுங்குறித்து. | 342–345 |
| (ஆ) மதுரை மீனாட்சி ஆலைகள் கூட்டு நிறுவனத்தைச் சார்ந்த சில ஆலைகளில் வேலை நிறுத்தமும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும் குறித்து .. | 345–347 |
| 6 அமைச்சர் அறிக்கை— | |
| போரிலே பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டுப் போர் வீரர்களுக்கு அளிக்கவிருக்கும் சலுகைகளும், மானியங்களும் குறித்து .. .. .. .. .. | 347–349 |
| 7 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கூட்டுறவு சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு .. .. | 349 |
| (ஆ) 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருந்து முறை—ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு .. | 349-383 |
| 8 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 384 |

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் .. .. .. .. 393–434

2. கவன ஈர்ப்பு—

சென்னையில் காலரா நோயும், தடுப்பு நடவடிக்கைகளும் .. .. .. .. .. 434–437

3. தன்னிலை விளக்கம்—

திரு. க. சுப்பு அவர்கள் அளித்த தன்னிலை விளக்கம் .. .. .. .. .. 437

4. அரசினர் சட்டமுன்வடிவு—

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு .. .. 438

5. தனியார் அலுவல்கள்—

(i) சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்குதல் சட்ட முன்வடிவு .. 438

(ஆ) 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவு .. .. .. 438–439

(இ) 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு .. .. 439

(ஈ) 1971-ம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (படிகள் வழங்குதல்) சட்டமுன்வடிவு .. 439

(உ) 1971-ம் ஆண்டு கிறித்துவ வழியுரிமை (ரத்து) சட்டமுன்வடிவு .. .. 439

(ii) தனியார் தனித் தீர்மானங்கள்—

(அ) மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடங்கள் நடத்துதல் .. .. 439–467

(ஆ) கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு .. 467–491

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 492–493

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர்:

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்தியா சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி ஆட்சிமொழி நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் பொது நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்த்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான் கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. KARUNANIDHI (*Chief Minister*)—in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)—in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)—in-charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*)—in-charge of Industries, Textiles, Yarn, Handlooms, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Wakfs

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (*Minister for Agriculture*)—in-charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (*Minister for Backward Classes*)—in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (*Minister for Electricity*)—in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

**பேரவைத் துணைத் தலைவர்:**

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. மா வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

**சட்டப் பேரவைச் செயலாளர்:**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்:**

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்:

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணுமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம் |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ. |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. எஸ். .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஷின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்தீசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூ |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன், துரை. திரு. .. .. | கந்தர்வகோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்கமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஹரூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. இ. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோணையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னில், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ரம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. ஏ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. ஏ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. .. .. | முகையூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 161 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | சடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு .. .. | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ |
| 178 பாலையா, திரு. ஏ. .. .. .. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில் |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. சே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தோட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்) |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிப்பூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 திரு. கோவிந்த் சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

*சனிக்கிழமை, 1971 டிசம்பர் 4.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு* **பேரவைத்** *தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Report on aided schools*

* 66 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Committee constituted to go into the various questions relating to aided Elementary and Secondary Schools including service conditions of aided schools has submitted its report; and

(*b*) if so, whether a copy will be placed on the Table of the House?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனைக்குப் பிறகு அறிக்கை அவைமுன் வைக்கப்படும்.*

***திரு. கே. டி. கே. தங்கமணி :*** *தனியார் துறையில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்கள் சம்பந்தமாக உறுதியான நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்குச் சட்டத்தில் பலகீனம் இருக்கிறது என்ற முறையிலே பால் அவர்கள் கமிட்டி சிபார்சு தந்து 9 மாதங்கள் ஆகியும்கூட, அதன்பேரில் ஒரு சட்ட அமைப்பு வரும் என்று சொல்லியும் இன்னும் வராமல் இருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயித்து அதற்குள்ளாவது சட்டம் கொண்டு வரப்படுமா ?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, அந்தக் குழு தங்களுடைய அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. அதுகுறித்து சட்டத்துறை, கல்வித் துறை, நிதித் துறை ஆகிய துறைகளெல்லாம் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு அவர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையில் அதைச் சட்டமாகக் கொண்டுவரவேண்டும். சட்டமாகக் கொண்டுவந்து இரு அவைகளிலும் நிறைவேற்ற வேண்டும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.*

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education say as to how long it will take to finalise the report and when it will be ready for action?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, காலவரையறை குறிப்பிடுவதற்கில்லை. ஆனால், அந்தப் பரிசிலனை விரைவில் முடியும் என்று தெரிகிறது. அடுத்த தொடர்க் கூட்டத்திலாவது கொண்டுவர இயலுமா என்பதைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Many aided schools are doing excellent work in the matter of extending educational facilities to students in the State. They have the same text-books, and following the same syllabus and they are doing the same work as in Government institutions for examinations. On this basis there is need to improve the condition of aided school teachers. May I know from the Hon. Minister whether he will show sympathy and see that their condition is improved?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதற்காக அமைக்கப்பட்ட குழுவானது, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து தங்கள் அறிக்கையைச் சமர்பித்திருக்கிறார்கள். அதுதான் அரசாங்கத்தினுடைய பரிசிலனையில் இருக்கிறது. அதன்மீது தக்க முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, சட்ட வடிவு கொடுக்கப்பட்டு, இரு அவைகளிலும் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக அவைமுன் வைக்கப்படும்.

**திரு. மு. சுருளிவேல்:** தலைவர் அவர்களே, பொதுவாக அரசின் முழு உதவியும் பெற்று, ஆனால் தனியார் பெயரில் நடத்தப்படுகிற பள்ளிகளில் ஏராளமான ஊழல்களும் தவறுகளும் இன்றையதினம் நாட்டில் நடைபெற்று வருகின்றன. எடுத்துக்காட்டாக, போடி நாயக்கனூர் தொகுதியில் உப்புக்கோட்டையிலுள்ள பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுடைய பெயர்களைப் போட்டு அரசினிடமிருந்து உதவிப்பணம் பெறுகிறார்கள். ஆனால் நிர்வாகத்தினர் அந்தத் தொகையை மாணவர்களுக்கு விநியோகிக்காமல் கையாடல் செய்திருக்கிறார்கள். எனவே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள எல்லாப் பள்ளிகளையும்—துவக்கப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும்—நம்முடைய அரசே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலையை உண்டாக்குமா? இந்தப் பிரச்னையை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்து பல முறை இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலும் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. எல்லாத் தனியார்த் துறைப் பள்ளிகளும் கல்லூரிகளுமே ஊழல்களோடுதான் நடத்தப்படுகின்றன என்று கூறுவதற்கில்லை. சிலபல கல்லூரிகளும் பள்ளிகளும் அப்படிப்பட்ட முறையில் நடைபெறுமானால் அவற்றை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதை ஆராய குழு அமைக்கப்பட்டு, அக்குழு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள குறைகளை தக்க முறையில் ஆராய்ந்து பரிந்துரைகளை அளித்திருக்கிறார்கள். இப்பொழுது தக்க நடவடிக்கை எடுக்கச் சட்டத்திலே போதுமான அளவுக்கு இடமில்லாத காரணத்தால், சட்டத்தைச் செம்மையாகத் திருத்தி, அதைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த என்ன செய்யலாம் என்பதற்கு, குழு பல்வேறு தலைப்புக்களில் பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டம் திருத்தப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற குறைபாடு ஏற்படாமலிருக்கும். உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பள்ளியிலிருக்கும் குறைபாடுகள் அதிகாரிகளால் ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. என். கே. பழனிசாமி:** தனிப்பட்ட மானேஜ்மென்ட் பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குச் சர்க்காரே நேரடியாகச் சம்பளம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது சாதாரணமாக ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு பல ஊராட்சி ஒன்றியங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தால் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரடியாக ட்ரெஷரியிலிருந்து ஊராட்சி ஒன்றியத்தினர் பணம் வாங்கிச் சம்பளத்தைச் செலுத்திவிடலாம், ஒன்றியத்திற்கும் அரசுக்கும் ஏற்படுகிற அந்த வரவு-செலவுக் கணக்கைத் தனியாகப் பார்த்துச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் ஜனவரி மாதம் 1-ந் தேதியிலிருந்து நேரடியாகச் சம்பளம் கொடுக்கும் வகையில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

### சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்புகள்.

*67. வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் (Government Estate) சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்காக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. மு. சுருளிவேல்:** தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றபோது நெடு நாட்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் தங்க வேண்டியிருக்கிறது. சட்டமன்ற

உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் உள்ள கான்டீன் நடைபெறும் கொடுமையை, அவைக் குழுவின் தலைவரான மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உணர்ந்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன். கான்டீன் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது நாங்கள் வெளியிலே சென்றுதான் சாப்பிட வேண்டி இருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு தயவுசெய்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிறு சிறு க்வார்ட்டர்ஸ்லாவது கட்டித்தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் தங்க விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கு ஏற்கனவே இருந்த அரசினர் குடியிருப்புகளில் 13 குடியிருப்புகள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கேற்ற வகையில் விடப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது புதிதாகக் குடியிருப்புகள் கட்டும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. விடுதிகள் இருக்கின்றன. உறுப்பினர்களுக்காகத் தனி இல்லங்கள் கட்ட வேண்டுமென்றால் தனி முயற்சி பின்னால்தான் எடுக்க வேண்டிவரும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இப்பொழுதுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் புதிய விடுதியை த்ரீ ஸ்டார், ஃபோர் ஸ்டார் ஓட்டல்களாக மாற்றிவிட்டு அதற்கு எதிர்ப்புறத்தில் உள்ள காலி மைதானத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக் கென்று ஆண்டுக்கு ஐம்பது வீடுகள் வீதம் கட்டிக் கொடுத்தால் ஐந்தாண்டுகளில் எல்லோருக்கும் கட்டிக் கொடுத்துவிட முடியும். எனவே, இதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனை அழகான யோசனை தான். ஆனால், அதை நிறைவேற்றுவதற்கான நிதி வசதிகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அதுவும் இப்பொழுது நெருக்கடி நிலைமை நாட்டில் ஏற்பட்டதற்குப் பிறகு அந்த நிதி வசதி கிடைக்குமா என்பதில் ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே, இந்தக் குறைபாடுகளை ஓரளவுக்குச் சமாளிக்க வசதி வாய்ப்புகள் ஏற்படும்போது அதைப்பற்றி யோசிக்க வேண்டி வரும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் புது ஹாஸ்டலுக்கு எதிரில் பல குடிசைகள் போட்டிருப்பதைப் பார்க்கின்றோம். அரசாங்க அனுமதி பெற்று அந்தக் குடிசைகள் போடப்பட்டிருக்கின்றனவா ? அரசாங்க எஸ்டேட் அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கப்பட வேண்டும் ஆகவே, அங்கு குடிசைகள் அமைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வேறு இடத்தைக் கொடுத்துவிட்டு. எஸ்டேட் அழகு கெடாமல் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, போடப்பட்டிருக்கிற குடிசைகள் தற்காலிகமாகப் போடப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே குடிசைமாற்று வாரியம் அவர்களுக்கென்று தனிக் கட்டடம் அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. விரைவில் கட்டடம் கட்டி முடிந்த பிறகு குடிசைகளில் இருப்பவர்கள் அங்கே குடியேறிவிடுவார்கள். அதற்குப் பிறகு இந்த இடம் அழகுப்படுத்தப்படும். தூய்மைப் படுத்தப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவரவர்களே, அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பெரிய போர்டு ஒன்று ' குடிசை மாற்று வாரியம் ' என்று எழுதி வைத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** போர்டு எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம்.

### கேளிக்கை வரி மீதான மேல்வரி

* 68 வினா.—**திரு. சி. கணேசன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கேளிக்கை வரி மீது விதிக்கப்படும் சர்சார்ஜ் தொகையை மாநிலமெங்கும் ஒரே சீராக விதிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இந்த சர்சார்ஜிலே 90 சதவீதம் நகராட்சி மன்றங்களுக்குச் சேர்கிறது. ஆனால் இவைகளை சேல்ஸ் டாக்ஸ் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் தான் வசூலிக்கிறார்கள். நகராட்சிகளுக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கோ சர்சார்ஜ் வசூலிக்கும் உரிமை இல்லை. இன்ஸ்பெக்ஷன் செய்யும் அதிகாரம் அவைகளுக்குத்தான் இருக்க வேண்டும். ஆகவே, இந்த அரசு சர்சார்ஜ் வசூலிப்பதில் மேற்பார்வையிடும் அதிகாரத்தை நகராட்சிகளுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கே கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிக் கொடுப்பதன் காரணமாக நன்மை ஏற்படுமா, அல்லது சங்கடங்கள் ஏற்படுமா என்பதை ஆராய வேண்டும். அதன் பிறகு தான் இப்போது இதன்மீது முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, கேளிக்கை வரி டூரிங் டாக்கீஸ்காரர்களுக்கு அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் குறைக்க வேண்டுமென்று டூரிங் டாக்கீஸ்காரர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு மகஜர் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** வரி கொப்பவர்கள் எப்போதும் அதிகம், அதிகம் என்றுதான் சொல்லுவார்கள். அவர்கள் தாங்கக்கூடியவர்கள்தானா என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் வரக்கூடிய வருமானத்தில் முக்கியமானதாக இது அமைந்திருக்கிறது. இந்த வருமானத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி மன்றங்களும், நகராட்சிகளும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த வேண்டியதாக இருக்கின்றன. இந்த வரியும் போய்விட்டால் நிர்வாகத்தை நடத்துவதில் பல சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, ஒரு நகராட்சியைத் தவிர, 84 நகராட்சிகளிலே, 83 நகராட்சிகளில் 100 சதவீதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். உதகமண்டலத்தில் மட்டும் 75 சதவீதம் கேளிக்கை வரி கொடுக்கிறார்கள். சேவையின் அடிப்படையில் அது போடப்படுகிறது.

## *Retired Municipal Employees*

* 69 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that retirement benefit scheme for municipal employees is silent about those retiring prior to 14th January 1970;

(*b*) the steps that have been taken to rectify the same?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) நகராட்சி மன்றம் அனைத்திலும் உயர்ப்பணியில் உள்ள பணியாளர்கள் தொடர்பாக, மாநிலமெங்கிலும் பரந்துநிற்கும் நகராட்சிப் பணியை 14—1—1970 முதல் அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 14—1—1970 அன்று அல்லது அதற்குப் பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற, மேற்சொன்ன பணியைச் சேர்ந்த நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய அனுகூலங்கள் நீட்டிக்கப்படும். 14—1—1970-க்கு முன்னர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது பற்றிய வினா எழவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, 14—1—1970 கெஜட்டில், ஜி.ஓ. 12, தேதி 5—1—1970-ல் 14—1—70-க்குப் பின்னால் ஓய்வு பெறக்கூடியவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படும் என்று அறிவித்தும்கூட, கிட்டத்தட்ட, இரண்டு ஆண்டு காலம் ஆகியும்



ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. ஆகையினால், அதற்குரிய விதிகளைச் சட்டசபையின் இந்தத் தொடரிலேயே சமர்ப்பிக்க அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாநில நகராட்சிப் பணியின் கீழ் வரும் நகராட்சிப் பணியாளர்களால் செய்யப்பட்ட பணியின், கால அளவு ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு அமைக்கப்பட்ட நகராட்சியின் வகைப்பாடு, பணியில் சேர்த்துக்கொள்ளும் முறை, பணியின் நிபந்தனைகள் ஊதியம், படிகள், ஒழுங்கு முதலியவற்றை முறைப்படுத்துவதற்கென, தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் 77 ஏ (2) பிரிவின்கீழ் விதிகள் வகுக்கப்பட்ட பின்னர் ஓய்வூதியத்திற்கு அனுமதி வழங்கலாம். தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77-ஏ (2) வது பிரிவின் கீழ் வகுக்கப்படும். இந்த விதிகள் சட்ட மன்ற இரு அவைகளின் ஏற்பளிப்பையும் பெற வேண்டும். வரைவு விதிகள் வகுக்கப்பட்டு சட்ட மன்றத்தின் முன் வைக்கத் திட்டமிடப்பட்டது. அதை நிறைவேற்றிய பிறகுதான் இதைக் கொண்டுவர முடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, 14—1—70-ல் ஓய்வு பெற்றவர்களுக்காவது ஓரளவு போனஸ் என்று கொடுக்கப்பட்டது. ஆனால் 14—1—1970-க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்குப் போனசும் கொடுக்கப்படவில்லை; பென்ஷனும் கிடையாது என்றால் இந்த இரண்டாண்டு கால வாழ்வு எப்படி ஈடேறும்? ஆகவே, சட்ட மன்றத்தின் இந்தத் தொடரிலேயே அதற்கான விதிமுறைகளைச் சமர்ப்பித்து, சபையின் அங்கீகாரத்தைப் பெறுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதுபற்றி விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, is the minimum pension applicable to the Government servants also applicable to the servants of the Local Bodies?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கத்தின் அலுவலருக்கு 90-க்கும் அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்கு அரசாங்கத்திலே எந்த அளவுக்குத் தரப்படுகிறதோ அந்த அளவுக்கு மினிமம் பென்ஷன் தரும் சூழ்நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் இருக்கிற சங்கடங்கள் ஆராயப்பட்டு, சட்டம் கொண்டுவரப்படுகிறபோதுதான் அதன் முழுத் தன்மையும் தெரியும்.

Dr. H. V. HANDE: Sir, may I know whether this Government have received representations from the Municipal employees who had retired before 14th January 1970 especially from Madurai and Palani and if so, what action have this Government taken on it, especially in view of the fact that many of these employees are old and are in a precarious condition without any facilities being provided for them? Also, this particular Government Order leaves them out completely and so, will the Government provide some *ad hoc* benefits to them without waiting for another Government Order to be passed by both the Houses of the Legislature providing for such benefits?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, ஓய்வூதியம் 14—1—1970-லிருந்து, அதற்குப் பிறகு ஓய்வு பெறுகிறவர்கள் மட்டுமே என்று 5—1—1970-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை கூறுகிறது. ஆனால் அதற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களும் தங்களுக்குத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செய்வதாக இருந்தால் இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே சில சங்கடங்கள் ஏற்படும். ஆகையால் அதை வேறு அடிப்படையிலே தான் ஆராய வேண்டும். ஆகவே அதை பார்ட் 2 ஸ்கீமில் வைத்து முடிவெடுக்க வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்**: தலைவரவர்களே, பென்ஷன் பெறுகிறவர்கள் டிரஷரியில் போய் பென்ஷனைப் பெற்றுக்கொள்வதில் பல குறைகள் இருக்கின்றன. ஆகவே பிற சில மாநிலங்களில் கையாளுவதைப் போன்று நமது மாநிலத்திலும் பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் கிடைக்கும்படி செய்யும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: சில பல இடங்களுக்கு மற்ற சில மாநிலங்களைப்போல் மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது. சில இடங்களில் டிரஷரியில் போய் வாங்கும் நிலைமை இருக்கிறது. அதைக் கூட மாற்றி மணியார்டர் மூலம் தரலாமா என்ற யோசனை இருக்கிறது. எந்தெந்த வகையிலே என்று தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

### கோயம்புத்தூருக்கு அருகே "மாடல்" நகரம்

* 70 வினா.—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகருக்குப் பக்கத்தில் ஒரு "மாடல்" நகரம் உருவாக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**:

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சுரேந்திரன்**: சார், பல நகரப் பஞ்சாயத்துக்கள் நகராட்சிகளாக மாறுகிறபோது, பல கிராமங்கள் நகரப் பஞ்சாயத்துக்களாக மாறி இருக்கின்றன. அதை முறையாக அமைக்க மாதிரி நகரமாக ஒரு இடத்திலே ஒரு நகரத்தை அமைத்தால் நன்றாக இருக்கும். அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: இந்தக் கேள்வி இரண்டு அமைச்சர்கள் சம்பந்தப்பட்டது. எந்தெந்த இடங்கள் நகரமாக அமையலாம் அல்லது புது வளர்ச்சி பெறலாம் என்று யோசனை சொல்வது என்னுடையது. எந்த கிராமத்தை நகரமாக ஆக்கலாம் என்று முடிவு செய்வது கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிக் கேட்டால் அது பற்றி யோசிக்கப்படும்.

Dr. H. V. HANDE: Now that the Town-Planning Bill has been passed, may I know whether this Government have any ideas to see that certain towns like Coimbatore, Madurai and Madras are going to have satellite towns, whether any beginning has been made especially with regard to Coimbatore and with regard to other towns? Can the Minister give us some sort of a brief outlay?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: தலைவர் அவர்களே, அது டவுன் ப்ளானிங் மட்டுமல்ல—டவுன் அண்டு கண்டிரி ப்ளானிங் பில் ஆகும். ஒரு நகரத்தைபற்றி மட்டும் உடனடியாக ஆலோசிப்பது இல்லை. பரவலான அடிப்படையில் அமைத்து—அந்தப் பரவலான அடிப்படையில் அந்த அந்தப் பகுதியில் எந்த விதமான வளர்ச்சி தேவை என்பதை அந்தந்தப் பகுதியில் உள்ள நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட குழு பரிசீலித்து அந்தப் பரிசீலனையின் முடிவுகளும் மூன்று, நான்கு கட்டங்களில் ஆராயப்பட்டு பின்பு நடவடிக்கைக்கு வரும். இன்னமும் கூட பரிசீலனை தொடங்கப் படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி**: கோவை நகரமானது மிகவும் ஜன நெருக்கடியான பகுதியாக இருக்கிறது. அதை ஒரு மாடல் நகரமாக ஆக்க ஒரு முக்கியத்துவம் கொடுத்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதி எதாவது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்**. கோவை நகரமே ஒரு வகையில் மாடல் நகரமாகத்தான் இருக்கிறது. ஆகவே அதை ஒரு மாடல் நகரமாக ஆக்குவது என்பது அவ்வளவு பொருத்த

மாகத் தெரியவில்லை. கோவை நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை ஒரு சாடிலைட் டவுன் என்ற அளவுக்குத் தேவையான வகையில் உருவாக்கலாம்.

### சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள்

*71 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த, ஆயுர்வேத வைத்திய முறைகளை விரிவுபடுத்தி, வளர்ப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இதற்கான இயக்குநர்கள் போன்ற பதவிகள் ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(உ) வருடா வருடம் இதற்காக எவ்வளவு ரூபாய் செலவிடப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) முதல் (உ) வரை : சட்டப்பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். சுரேந்திரன் :** இம்மாதிரித் துறையில் ஈடுபட்டிருப்பவர்களை நம்முடைய கிராம டிஸ்பென்சரிகளில் பகுதி நேர ஊழியர்களைப் போல ஈடுபடுத்துகிறார்கள் என்பது உண்மையா? அதை மாற்றி அமைக்கும் உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது ஏற்கனவே ஏற்பட்ட ஒரு அமைப்பு முறையாகும். உள்ளாட்சித் துறை மூலம் பல்வேறு சிறுசிறு கிராமங்களில் எல்.ஐ.எம். டாக்டர்களை—இன்னும் சொல்லப்போனால் கிராம வைத்தியர்கள் என்று தகுதி பெற்றவர்களை—ஓரளவு மருத்துவ வசதியாவது ஏற்பட வேண்டும் என்கிற முறையில் ஆண்டுக்கு 1,800 ரூபாய் என்கிற முறையில் உதவித் தொகை வழங்கி—நியமித்தார்கள், அது தவிர பி.ஐ.எம். படித்தவர்களும் உரிய சமயத்தில் அரசாங்கத்தினரால் வேறு துறைகளிலும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

Thiru B. VENKATASWAMY : Is the Government aware that there are some excellent medicines in Siddha and Ayurvedic systems of medicines regarding family planning? Will this Government come forward to give more importance for such medicines in Ayurvedic and Siddha systems of medicines?

The Hon. Thiru K. ANBAZHAGAN : Such medicines are even now tested by eminent doctors in the allopathic field so that they may prove their worth and when the test is completed, it may be announced by the Central Government and they may be utilised.

---

87-88 ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி பத்திரிகையைப் புரட்டினால் அரைப்பக்கத்தில், முழுப்பக்கத்தில் சிட்டுக்குருவி லேகியம், மன்மத லேகியம் என்பதாக விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறதே, அவைகள் எல்லாம் உண்மையான மருந்துகள் தானா என்பதை அரசு ஆராய்ந்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதுவரையில் சித்த வைத்தியத்திலோ, ஆயுர்வேத வைத்தியத்திலோ—மருந்துகளைப் பரிசீலனை செய்கிற முறைகள் விரிவாக ஏற்படுத்தப்படவில்லை. அண்மையில் சென்னை நகரத்தில் மத்திய அரசாங்கத்தின் உதவியால் டிரக் ஸ்டாண்டர்டைசேஷன் யூனிட் மருந்துகள் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக அவைகள் ஆராயப்பட வாய்ப்பு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM : Is there any Officer(in-charge of Ayurvedic medicines appointed by the Central Government in Madras and if so, is he having any collaboration with the State Government and doing any work here for the progress of Ayurveda in this State?

The Hon. Thiru K. ANBAZHAGAN : There is no Officer appointed by the Central Government for Ayurveda here. There may be some advisers at Delhi who may advise on such medicines and there is some co-ordinated research for Ayurvedic medicines also in this State. Some of the Professors or Readers who are concerned with Ayurvedic medicines in Arignar Anna Hospital are also doing research work and are planning to do some research work according to the Central planning.

Dr. H. V. HANDE : Is it not a fact that every year from the B.I.M. College at Palayamcottah quite a number of stud are being turned out? May I know from the Hon. M whether the Government have concrete plans to see th பணித் a section of them—I know all of them cannot be absorbed in Government service? If so, may I thereof? பிரதிநிதி.

The Hon. Thiru K. ANBAZHAGAN : ருந்து ஒரு are only so keen to see that almost all of then and it is all new avenues that are to be create trying to create more avenues through the ter லிருந்து ஒரு Religious and Charitable Endowments Board and local bodies.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு அமைச்சர் அ...து, கொடுத்திருக்கிற அறிக்கையில் ஐந்து மாவட்டங்களில் உள தலைமை மருத்துவ நிலையங்களில் சித்த மருத்துவப் பகுதி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி மற்ற மாவட்டங்களில் தலைமை மருத்துவ மனைகளிலும் விரைவில் ஏற்படுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இடவசதிப் பிரச்சினை தவிர டாக்டர்கள் பிரச்சினை இல்லை. எந்த எந்த மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் இடமிருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இடவசதியுள்ள இன்னும் மூன்று நான்கு மாவட்டங்களில் சீக்கிரமே ஏற்படுத்தப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : செய்தித் தாளில் பம்பாயில் ஆண் குழந்தை வேண்டுமென்றால் ஆண் குழந்தை, பெண் குழந்தை வேண்டுமென்றால் பெண் குழந்தை பெற்றுக்கொள்வதற்கு மருந்து கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி வந்ததே. அந்த மருத்தினால் ஒரு பெண் குழந்தை வேண்டும்' என்பவர்கள் பெண் பிறந்தவுடன் பாமிலி ப்ளானை பின்பற்றலாம். அதுபோல ஒரு ஆண் குழந்தை வேண்டும் என்பவர்கள் ஆண் குழந்தை பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்க உதவியாக இருக்கும். அந்த மருந்தை பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படுகிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசாங்கம் ஏற்று நடத்துகிற அளவுக்கு அந்த மருந்தின் முழு அளவுத் தகுதி அரசுக்குத் தெரியாது.

முட்டைத்தூள் தொழிற்சாலை.

* 72 வினு.—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி (ɹəpʍod ƃƃƎ) செய்யும் தொழிற்சாலை செர்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழ்நாடு அரசிடம் வர்களோ?

என்கிற முறை எனில், அதன் விபரங்கள் யாவை ?

உதவித் தொகை

படித்தவர்களும் திரு. க. அன்பழகன் :

துறைகளிலும் ல.

THIRU B. க் கேள்விக்கு இடமில்லை.

that there ar

systems of

Governmஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, பொதுவாக குழந்

medicinதைக்குப் புரதச் சத்து குன்றுவதன் காரணமாக அறிவு

ாச்சி குறைகிறது என்று கூறப்படுகிறதே, புரதச்சத்து அளிக்க முட்டை தேவைப்படுகிறது. இப்போது கிடைக்கிற முட்டைகள் நல்லவைகளாகவும் கிடைப்பதில்லை. அதை முன்னிட்டு முட்டைப் பவுடர் தயாரிப்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் இந்தக் குறையைப் போக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் எந்த ஒரு புதிய திட்டத்தை மேற்கொள்வதாக இருந்தாலும் மூலப்பொருள் தாராளமாகக் கிடைக்குமா என்று பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் குத்து மதிப்பாக எடுத்த கணக்கில் தேவைப்படுகிற முட்டைகளோ ஆள் ஒன்றுக்கு ½ முட்டை என்ற அளவில் எழுநூறு கோடியாகும். ஆனால் முப்பத்தைந்து கோடி முட்டைகளே உற்பத்தியாவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே அரசு முட்டை உற்பத்தியைக் கணிசமாக உயர்த்துவதற்கான முயற்சியில் கவனம் செலுத்துகிறது. உற்பத்திக் தேவைக்கேற்ற அளவில் பெருகியவுடன் தான் முட்டைப் பவுடர் செய்வது சம்பந்தமாக அரசு ஆலோசிக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

*Committee on Air pollution*

* 73 Q.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether a Committee has been appointed by the Government to study the problem of air pollution;

(*b*) if so, the names of its members; and

(*c*) its terms of reference ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) இக் குழு கீழ்க்காணும் அதிகாரிகளைக் கொண்ட ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுவிலே இடம் பெற்றவர்கள்—

(1) கூட்டு இயக்குநர், சுகாதாரப்பணி—குடும்பநலத் துறை.

(2) பொதுச்சுகாதாரம் பொறியியல்--நகராட்சிப் பணித் துறை, தலைமைப் பொறியாளரின் பிரதிநிதி ஒருவர்.

(3) சென்னை மாநகராட்சியிலிருந்து ஒரு பிரதிநிதி.

(4) அரசுப் போக்குவரத்துத்துறையிலிருந்து ஒரு பிரதிநிதி.

(5) காவல் (போக்குவரத்து) துறையிலிருந்து ஒரு பிரதிநிதி.

(6) தொழிற்சாலைகள் துணை இன்ஸ்பெக்டர்.

(உ) இக்குழு காற்று எவ்வாறு தூய்மை கெடுகிறது, எவற்றினால் காற்றுத் தூய்மை கெடுகிறது என்பது பற்றி ஆய்ந்து, முதலில் சென்னை மாநகரில் காற்று தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய உருவான, நடைமுறைக்கேற்ற ஆலோசனைகளை நல்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது.

[1971 டிசம்பர் 4

முற்பகல் 10-30 **திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, திருச்சிப் பகுதியில் ஒரு பத்து மைல் சுற்றளவிற்கு வீசுகின்ற காற்று தூய்மை கெட்டிருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதற்காக இந்தக் குழு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிற ஒரு தொழிற்சாலை காரணமாக துர்நாற்றம் ஏற்பட்டு, காற்று கெடுகிறது. இதை அரசு முன்னாலேயே உணர்ந்து, அதைத் தவிர்ப்பதற்காக ஒரு குழுவை அமைத்து, அதில் நமது தலைமைச் செயலாளர் உட்பட. இருந்து அதைப்பற்றிப் பரிசீலனை செய்து வருகிறார்கள். எவ்வளவு விரைவில் அந்த நிலைமையை மாற்ற வழிவகைச் செய்ய முடியுமோ அந்த அளவில் செய்ய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, உலகிலேயே லண்டன் மாநகரத்தில்தான் காற்றுத் தூய்மை கெடாமல் இருக்க சிறப்பான முறைகளை யெல்லாம் செய்திருக்கிறார்கள். அந்த முறைகளை யெல்லாம் ஆராய வேண்டுமென்று இந்தக் குழுவை அரசு கேட்டுக் கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, காற்று தூய்மை கெடாமல் இருப்பதற்கு, நம்முடைய நிலைமைக்கேற்ப பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வழிவகைகள் இங்கேயே இருக்கிறபோது, நாம் லண்டன் மாநகரத்தை ஒப்பிடுவது சரியல்ல. நாம் இங்கே எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை யெல்லாம் எடுத்து, அதன்பின்னர் ஒரு படி மேலே சென்று, லண்டன், பாரிஸ், போன்ற நகரங்களோடு ஒப்பிட்டு, அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, நகரத்திலே காற்றுத் தூய்மை கெடுவதற்கு, அரசு போக்குவரத்துத் துறை பஸ்கள்தான் காரணம் என்பதை அரசு அறியுமா ? அவற்றை தடுத்து நிறுத்தவும், பஸ்களில் புகை வராமல் இருப்பதற்கும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அரசு போக்கு வரத்துத் துறையினர் இதைப்பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காகத்தான் போக்குவரத்துத் துறையின் பிரதிநிதி ஒருவரை இந்தக் குழுவில் சேர்த்திருக்கிறோம். இதைப்பற்றி இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே. வட ஆர்க்காடு மாவட்டத்தில், குறிப்பாக ராணிப்பேட்டையில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் துர்நாற்றம் வீசுகின்ற



1971 டிசம்பர் 4]

காரணத்தால் காற்றுத் தூய்மை கெடுகிறது. ஆகவே, அந்தக் கழிவு நீரை விஞ்ஞான ரீதியாக எவ்வாறு கட்டுப்படுத்தலாம், எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்பதையும பற்றி ஆலோசனை செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பெரும்பாலும் அப்படிப்பட்ட பொறுப்பு தொழிற்சாலைகளுக்குத்தான் வரும். கனம் அங்கத்தினர் அவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு இதை வலியுறுத்தினால், நிர்வாகத்தினர் நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, கோவை நகரத்தையொட்டி மதுக்கரையில் ஒரு சிமெண்ட் பாக்டரி இருக்கிறது. அந்த சிமெண்ட் பாக்டரியிலிருந்து வெளிவரும் புகைக் காற்றால் அந்தப் பகுதியில் பத்துமைல் விஸ்தீரணத்திற்கு விவசாயம் பாதிக்கப்படுகிறது. இதைக் குறித்து விவசாயிகள் பலமுறை அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். மேலும் அங்கே இருக்கிறவர்களுக்கு இந்தக் காற்றினால் க்ஷயரோகம் வருகிறது என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சிமெண்ட் பாக்டரியிலிருந்து வெளிவரும் காற்றால் க்ஷயரோகம் வருகிறது என்று சொல்வது சரியல்ல. அந்தத் தொழிற்சாலைக்குள் வேலை செய்பவர்களுக்கு க்ஷயரோகம் வரலாம் என்ற காரணத்திற்காகத்தான் முன்னேற்பாடாக தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற புகை அளவு எவ்வாறு தடுப்பது, என்ன என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதற்கான தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குழுவானது ' ஏர் பொலூஷன் ' பற்றிய விஷயங்களில் கவனம் செலுத்தும் என்று சொன்னார்கள். மேட்டூர் கெமிகல்ஸ்ஸிலிருந்து வெளியாகின்ற கழிவுநீரின் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள குடிநீரே கெட்டுப் போயிருக்கிறது. அந்தப் பகுதிகளில் விவசாயத்திற்கும் வசதியில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றுவதற்கான முயற்சிகளில் இந்தக் குழு கவனம் செலுத்தி, மாற்று ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் குழு ' ஏர் பொலூஷன் '—காற்று தூய்மை கெடுவது பற்றி ஆராய அமைக்கப்பட்டது. அதுவும் சென்னை நகரத்தில் முதன்முதலில் இதனுடைய பணி தொடங்கப்பட வேண்டுமென்று ஆரம்பிக்கப் பட்டது. தொழிற்சாலைகளினால் ஏற்படுகின்ற கேடுகள் பற்றியது

என்றால், அதற்காக ஏற்கெனவே உள்ள சுகாதார விதிமுறைகள்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சுகாதார விதிமுறைகளினால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை யென்று விளக்கம் அளித்தால், அதைப்பற்றி ஆலோசிப்பதற்கு அரசு தயாராக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 74, 75 இரண்டும் ஒருசேர எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### அரசு அச்சகங்கள்

*74 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரில் அரசாங்க அச்சகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

*75 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is a proposal to establish a Government Press at Dharmapuri; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அச்சகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்கிற திட்டத்தை கொள்கையளவில் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், நிதிவசதி கிடைத்தவுடனே அந்தத் திட்டங்களைத் துவக்க வேண்டுமென்றும் அரசு முடிவு செய்திருக்கிறது. அதன்படி கோவையிலும், தர்மபுரியிலும் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும். தற்போது அதுபற்றி செயற்குறிப்பில் ஒன்றும் இல்லை. மதுரையில் மட்டும் அரசு அச்சகப் பணியினைத் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகத்திலிருந்து சில முக்கியமான குறிப்புகள் வெளிவருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக திருப்பூர் டவுன் பிளானிங் நெ. 5 அச்சடிக்கக் கொடுத்து, நீண்டகாலமாகியும் வரவில்லை. ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. நான் நேரில் சொல்லியும் பயன் இல்லை. மேலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைகளை வழங்குவது பற்றிய லிஸ்ட் அச்சடிக்கக் கொடுத்தும் அச்சகத்திலிருந்து வரவில்லை. இப்படிடபட்ட பல குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட அளவில் அச்சகம் அமைக்க வழி செய்ய வேண்டும். குறிப்பாக இந்தத் திட்டத்தில் கோவை மாவட்டத்திற்கு முதலிடம் கொடுத்து பணியினைத் துவங்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி நிதிநிலைமை சீரான உடனே, எந்த அளவிற்கு விரைவாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Dharmapuri district has been declared as a very economically backward district and it needs the sympathy of the Government. So, will the Government give first preference to it in the matter of establishing a Printing Press?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் நினைவில் கொண்டு, தருமபுரியில் அரசு அச்சகம் அமைக்கும் பிரச்சினை அக்கறையுடன் கவனிக்கப்படும். அதற்கு எந்த இடம் அளிக்க வேண்டுமோ, அந்த உரிய இடம் அளிக்கப்படும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு அச்சகம் தொடங்கப்படும் என்று கூறினார்கள். அது மதுரையில் துவக்கப்படுமா? அல்லது மதுரைக்குப் பக்கத்தில் அதையொட்டி ஏதாவது ஒரு கிராமத்தில் துவக்கப்படுமா? அதற்கான மூலதனம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிவிக்க முடியும்.

### *Water for Harijan Colonies in Tiruttani taluk*

*76 Q.—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to provide pipe water supply to Harijan Colonies in Tiruttani taluk; and

(b) if so, the places where they are proposed?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

### அரூர் வட்டம் அரிசன விடுதிகள்

*77 **வினா.—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டத்திலுள்ள அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளுக்குப் புதியதாகக் கட்டடங்கள் கட்டவும், வசதிகள் பெருக்கவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*டாக்டர் ச. அ. சின்னராசு :* தலைவர் அவர்களே, புதிதாக அரிசன மாணவர்கள் விடுதிகளைத் திறக்கும்போது, அதற்கான வாடகைக் கட்டடங்கள் கிடைப்பதில்லை. கட்டடங்கள் தருவதற்குப் பலபேர் முன்வருவதே இல்லை. ஆகவே. அரசாங்கமே அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளுக்கான கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமா?

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* தலைவர் அவர்களே, அரசாங்கமே விடுதிகளுக்கான சொந்தக் கட்டடம் கட்டும் முயற்சி இருக்கிறது. அரூரில் கட்டுவதற்கான செயற்குறிப்பு இப்போது இல்லை. அதைப்பற்றி பின்னால் கவனிக்கப்படும்.

*திரு. வீ. செல்லதுரை :* தலைவர் அவர்களே, ஓமலூரில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி இருந்தும் அங்கே மாணவிகள் தங்கிப் படிக்கக் கூடிய வசதியில்லை. எனவே, அங்கே அவர்களுக்கென்று ஒரு விடுதி கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* தனிக் கேள்வி போடவும்.

### *Ceiling on urban properties*

* 78 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Special Committee on the urban property ceiling has submitted its report; and

(*b*) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்மும் :* (அ) இல்லை.

(இ) எழவில்லை.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அந்தந்த மாகாண அரசாங்கம் சீக்கிரமாக எடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் கருத்துத் தெரிவித்திருக்கிறது. அதன்படியாவது உடனடியாக அந்த அறிக்கையைத் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவர் அவர்களே, அறிக்கை தயாரிப்பதற்காகத்தான் குழுவை நியமித்திருக்கிறோம். அந்தக் குழு அறிக்கையை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் சமர்ப்பித்து விடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலை நடந்துகொண்டு இருக்கிறது.



*திரு கே. டி. கே. தங்கமணி:* தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே உள்ள உறுப்பினர்களின் பெயர்களை அறிய விரும்புகிறேன். மேலும் அந்தக் குழு 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் ரிப்போர்ட் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அந்தக் குழுவில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள் :—

(1) First Member, Board of Revenue.

(2) Member, Board of Revenue in charge of Urban Land Tax.

(3) Secretary to Government, Revenue Department.

(4) Secretary to Government, Law Department.

(5) Government Pleader, Madras.

(6) Commissioner of Urban Land Tax.

*திரு. எம். சுரேந்திரன் :* சார், நகரச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு நிச்சயிக்கும்பொழுது அந்தக் குழுவிற்கு வழிகாட்டலாக என்ன என்ன முறைகளிலே செய்யவேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது உத்திரவிட்டிருக்கிறதா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* எப்படிச் செய்யலாம் என்ற யோசனைதான் அவர்களிடத்திலே கேட்கப்பட்டிருக்கிறது.

*திரு. ஜே. ஜேம்ஸ்:* தலைவர் அவர்களே, இந்தக் குழுவிற்கு அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற 'டெர்ம்ஸ் ஆப் ரெஃபரன்ஸ்' என்ன என்பதை அறிவிப்பார்களா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* மத்திய அரசாங்கத்திலிருந்து வந்த ஒரு கடிதத்திலே இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு குழுவை நியமித்து உச்சவரம்பு நகரச் சொத்துக்களுக்கு எப்படி நிர்ணயிக்கலாம், எவ்வளவு நிர்ணயிக்கலாம் என்று ஆலோசனை கேட்டு இருக்கிறோம். அந்தக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு யோசித்து இதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

*திரு. மு. சுருளிவேல் :* தலைவர் அவர்களே, இந்த அரசு 1967-ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு கிராமப்புறங்களிலே ஏழைகளை நசுக்கி வாழ்ந்த நிலப்பிரபுக்களின் கொடுமைகளைத் தீர்ப்பதற்காக 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்ததை 15 ஸ்டாண்டர்டு ஏக்கராக குறைத்து நம்முடைய அரசு நிர்ணயித்தது. ஆனால் நகர்ப்புறங்களிலே உள்ள ஆலைத் தொழிலாளர்களின் துயரங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்க வேண்டும்.

THIRU M. SURULIVEL : I will make it a question. நகரப்புறங்களிலே உள்ள சொத்துக்களுக்கு உச்சவரம்பு நிர்ணயித்து சோஷலிஸ சமுதாயம் அமைப்பதில் நம்முடைய அரசு தீவிரமாக இருக்கிறது என்பதற்குச் சான்ருக அரசு முனைந்து செயல்பட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்தக் குழு அறிக்கையைச் சமர்ப்பித்ததற்குப் பிறகு அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்று ஏற்கனவே சொன்னேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் ஒரு கடிதம் மாநில அரசாங்கத்திற்கு அனுப்பியவுடனே பத்திரிக்கையிலே பிரசுரம் ஆனவுடனே நகரப்புறங்களில் உள்ள சொத்துக்காரர்கள் எல்லாம் தங்களுக்கு உள்ள சொத்துக்களைத் தனித்தனியாக எழுதி வைக்கின்ற நிலைமை உண்டாகியிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அப்படிப்பட்ட நிலைமையைப் பரிசீலனை செய்து உத்திரவிடும்பொழுது முன்தேதியிட்டு உத்திரவிடக் கூடியமுறையில் பரிசீலனைசெய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குழுவினுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு அதையெல்லாம் பரிசீலிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, in view of the very urgent need for ceiling on urban properties, is this Government taking proper steps to see that the Committee expedites its decisions quickly? The Committee does not need three or four months to come to a decision. Will this Government take it seriously because they profess socialism and see that the decisions are taken quickly and their recommendations considered and a Bill brought forward immediately?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் உறுப்பினர் காட்டுகிற சோஷலிச ஆர்வத்தைக்கண்டு பாராட்டுகிறேன். அந்த ஆர்வத்தினைவிட அரசாங்கம் எந்த அளவுக்கும் குறையாத அளவில் நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளிக்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, in all these Committees only officials are included. A person who is responsible for the public and whose motive is only public welfare should also be included. Will the Hon. Minister consider whether a public man or men should also be included?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அரசுத் தரப்பு ஊழியர்கள் உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்கள் கொடுக்கின்ற அறிக்கையைப் பரிசீலிக்கப் போகிறவர்கள் நாம் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்தக் குழுவை அமைப்பதற்கு முன்னலே சமதர்ம உணர்வு படைத்த ஒருசில சட்டமன்ற உறுப்பினர்களை அல்லது பிரதிநிதிகளை அந்தக் குழுவில் போட்டால்தான் நல்லமுறையில் இருக்கும். அப்படியில்லாமல் இருந்தால் ஏதாவது கோளாறு ஏற்பட்டு அதற்குப் பிறகு அதை நாம் தீர்ப்பது என்று போனல் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டே போகும். எனவே Non-Officials with socialistic idias அப்படிப்பட்டவர்களைப் போட வேண்டும். அந்த அளவுக்கு அந்தக் குழுவை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இதற்காக அடிப்படையொன்றைத் தயாரித்து பிரிலிமினரி பேசிக் ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு சோஷலிச கருத்துள்ள முற்போக்கு எண்ணங் கொண்டவர்களையும் சேர்த்துப் பரிசீலிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister whether the Government instructed the Committee to issue a questionnaire and supply copies to the members of the Assembly?

THE HON. THIRU P. U. SHANMUGAM : No, Sir.

**ஆளியாறு பழைய ஆயக்கட்டுப் பகுதியில் தண்ணீர் தீர்வை**

* 79 விளு.—திரு. அ. ப. சண்முகசுந்தரம் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், ஆளியாறு பழைய ஆயக்கட்டுக்கு உட்பட்ட விவசாயிகள் தண்ணீர்த் தீர்வை அதிகப்படுத்தியுள்ளதைத் குறைத்திட வேண்டுமென்று கேட்டு மனு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்

(இ) அந்த மனு மீது கோவை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து குறிப்புகள் வந்திருக்கின்றன. மேலும் கனம் அங்கத்தினர் அவர்களும் இது சம்பந்தமாக முறையீடு கொடுத்திருக்கிறர். இதுபற்றி வருவாய் வாரியம், மாவட்ட கலெக்டர் ஆகியவர்களின் கருத்துக்கள் தெரிந்தவுடன் உரிய முடிவு எடுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

## முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

*80 விஞ.—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

(இ) முத்திரைத்தாள் விற்பனைக்கு எத்தனை சதவீதம் கழிவு தரப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) உரிமை பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மக்கள் தொகை அடிப்படையில், அதாவது 20,000 மக்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்படுகின்றனர். இவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் இருப்பிடம், முன்னுள் அனுபவம், உடல் நலம், போதிய கல்வி, சொத்து மதிப்பு, பொது மக்களின் சௌகரியம், ஏற்கனவே உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் பெறும் கழிவுத் தொகை, அவர்கள் விற்பனை செய்யும் இடம் இவற்றைக் கவனிக்கப்படும்.

(இ) கீழே கண்ட சதவீதத்தில் கழிவு தரப்படுகிறது.

| முத்திரைத்தாள் வகை. (1) | கழிவுசதவீதம். (2) |
|---|---|
| நீதித்துறை முத்திரைத்தாள் மற்றும் நீதித்துறைக் குரியதல்லாத முத்திரைத்தாள் 1. ஒட்டக்கூடியவைகளுக்கு. | |
| 10 பைசா முத்திரை வில்லை நீங்கலாக ரூபாய் 1 மதிப்பிற்கு மேற்படாத ஒவ்வொரு முத்திரை வில்லைக்கும். | 1·5 |
| ரூ. 1-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 50-க்கு மேற்படாதது. | 1·0 |
| ரூ. 50-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 100-க்கு மேற்படாதது. | 0·3 |
| ரூ. 100-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 200-க்கு மேற்படாதது. | 0·2 |
| ரூ. 200-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 400-க்கு மேற்படாதது. | 0·1 |
| 2. முத்திரைத் தாட்களுக்கு. | |
| ரூ. 10-க்கு மேற்படாத முத்திரைத்தாள் ஒவ்வொன்றிற்கும். | 2·0 |
| ரூ. 50-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 100-க்கு மேற்படாதது. | 1·5 |
| ரூ. 100-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 200-க்கு மேற்படாதது. | 0·7 |
| ரூ. 200-க்கு மேற்பட்ட ஆனால் ரூ. 400-க்கு மேற்படாதது. | 0·3 |
| 2. உண்டிகள் .. | 2·0 |
| 3. நகல் எழுதும் முத்திரைத்தாள் .. | 1·0 |



## (2) நடைமுறைக் கேள்விகள்

### (அ) பேரவை நடந்து கொண்டிருக்கும்போது அதிகாரிகள் அவைக்குள் வருதல் குறித்து.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, சபை நடந்து கொண்டிருக்கும்பொழுது அரசாங்க அதிகாரிகள் சபைக்குள்ளே வந்து செல்லலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை நடந்து கொண்டிருக்கும்பொழுது அதிகாரிகள் வருவது சரியல்ல. தவறுதலாக நடைபெற்றிருக்கிறது. அவர்கள் திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## 1. விஞக்கள் விடைகள்—தொடர்ச்சி.

**திரு. ந. நாச்சியப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள் விற்பனை செய்ய உரிமை பெற்றவர்கள் நூற்றுக்கு இவ்வளவு சதவீதம் என்று கழிவுத் தொகை பெற்றுக்கொண்டும் கூட, மேற்கொண்டு, முத்திரைத் தாள்கள் வாங்கும் விவசாயிகளிடமிருந்து 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்குகிறார்கள். எனவே அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருக்கக்கூடிய வகையில் அதிகமாக முத்திரைத் தாள்கள் விற்பனை செய்கிறவர்களைப் போடக்கூடிய முறையை அரசாங்கம் கொண்டு வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி எங்காவது தவறு ஏற்பட்டால் கனம் உறுப்பினர் அவர்கள் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால். நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## காங்கேயம் பகுதியில் வைரக்கற்கள்

*81 விஞ.—திரு. கோவை செழியன்

திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

காங்கேயத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறந்த வைரக்கற்கள் கிடைப்பதை ஆராய்ந்து நல்ல முறையில் பயன்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாநில புவியியல் பிரிவினுலும் இந்தியப் புவியியல் பிரிவினுலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. வைரக்கற்கள் இப்பகுதியில் கிடைப்பதாகத் தகவல் இல்லை. ஆனால்

இவ்விடங்களிலிருந்து பெல்ஸ்பர், குவார்ட்ஸ் மற்றும் பெரில் போன்ற சாதாரண மதிப்புள்ள கற்கள் மிக சொற்ப அளவில் கிடைப்பதால், இந்த கற்களைப் பெரிய அளவில் வெட்டியெடுத்துப் பயன்படுத்த வாய்ப்பு இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, காங்கேயத்தைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் ஏராளமான வைரக்கற்களும், செமி ப்ரஷியஸ் கற்களும் கிடைக்கின்றன. எனவே ஜெயப்பூர் வியாபாரிகள் காங்கேயத்திற்கு வந்து அரசாங்கத்திற்குத் தெரியாமல் 10,000 ரூபாய், 12,000 ரூபாய் என்று காண்டிராக்ட் மூலம் எடுத்து வெளியே கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கிறார்கள். உலகப் போழகி கிளியோபாத்ராவின் மார்பிலேயிருந்தது படியூர் வைரம் என்று டாக்டர் ஆரோக்கிய சாமி என்பவர் ஆராய்ச்சியில் எழுதியிருக்கிறார்கள். எனவே, அந்தக் கற்களை அரசாங்கமே தொழிற்சாலை அமைப்பதன் மூலம் எடுத்துச்செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிளியோபாத்ராவைப் பற்றித் தெரியாது. ஆனால் இதிலே கிடைக்கும் கற்கள் செமி ப்ரஷியஸ் என்று குறிப்பிடுவதால் கனம் அங்கத்தினர் அவர்கள் அது குறித்துத் தகவல் தந்தால் பரிசீலித்து, யாராவது அனுமதியில்லாமல் எடுத்துச் செல்வதாகயிருந்தால் விசாரணை செய்யலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த தெந்நிலை, சின்ன தாராபுரம் போன்ற ஊர்களில் செமி ப்ரஷயஸ் கற்கள் கிடைப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்குள்ள பாமர மக்களுக்கு அதன் மதிப்புத் தெரியாமல் இருப்பதால் கொள்ளை லாபம் அடிக்கும் வணிகர்களிடம் குறைந்த விலைக்கு அவைகளைத் தருகிறார்கள். ஆகவே இதன் உண்மையான மதிப்பை பாமர மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் ஒரு நிபுணரை அந்த வட்டாரத்தில் அரசாங்கம் நியமிக்குமா? மேலும் இவைகளுக்காக ஒரு பட்டறையை அந்தப் பகுதியில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பூமியில் உள்ள இதுபோன்ற பொருள்களை அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் யாரும் எடுக்க முடியாது. அப்படிப்பட்ட தகவல் இருந்து அனுப்பி வைத்தால் விசாரிக்கலாம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எங்கெங்கு வைரக் கற்கள் கிடைக்கின்றன, எந்தெந்த இடங்களில் கிடைக்கின்றன என்பதை அரசு தெரியப்படுத்துமா?



மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோவை மாவட்டத்தைப் பற்றியது மூலக் கேள்வி. இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் முத்துக்குளிவயல் என்ற ஊர் இருக்கிறது. மன்னர்கள் ஆண்ட காலத்தில் அங்கு உயர்தர முத்துக்கள் எடுத்ததாக அறிகிறோம். பின்னர் சரியான போக்குவரத்து வசதியில்லாமலிருந்ததால் அந்தத் திட்டம் கைவிடப் பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது கோதையாறு மின் திட்டம் வந்து போக்குவரத்து வசதி ஒருமுறையாக அமைந்திருப்பதால், அந்தத் திட்டத்தைப் பற்றி மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். தனியாகக் கேட்டால் அறிந்து பதில் சொல்கிறேன்.

## பனியன்கள் ஏற்றுமதி

* 82 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து பனியன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் மோகன் நிட்டிங் தொழிற்சாலை வெளிநாடுகளுக்கு நேரடியாக பனியன்களை ஏற்றுமதி செய்கிறது. 1970-71-ம் ஆண்டு ரூ. 2,30,000 மதிப்புள்ள பனியன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நிட்டிங் பேக்டரிகளிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான துணிகள் இன்னும் இருக்கின்றன. அதற்கு மேலும் அரசாங்கத்தின் மூலம் ஊக்கம் கொடுத்து விரிவுபடுத்த புதிய சிறப்பான திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்காகத்தான் பனியன் உற்பத்தியாளர்களுக்குத் தொழில் கூட்டுறவு அமைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். செய்து முடித்த பின்னால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

### நீதிமன்றக் கட்டணங்கள் திருப்பிக் கொடுத்தல்

*83 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவில் வழக்குகளில் கோர்ட்டுக்கு வெளியே வைத்து தாவாக்களைத் தீர்த்துக்கொள்வதால் கட்டப்பட்ட கோர்ட் கட்டணத்தில் பாதியைத் திருப்பித் தர உத்திரவானதில் சென்ற ஆண்டில் மாத்திரம் (1969-70) திரும்பப் பெறாமல் நிலுவையாய் இருந்த தொகை எவ்வளவு?

THE HON. THIRU S. MADHAVAN: Rs. 3,066.10 This is due to the delay in giving refund certificates.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 84.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கேள்விகளுக்கும் சப்ளிமெண்டரி கேள்விகள் அனுமதிக்கப்பட வேண்டுமென்பது இல்லை. அந்தந்தக் கேள்வியின் அவசியத்தைப் பொறுத்து, கேள்விக்குத் தேவை என்றால் துணைக் கேள்வி அனுமதிக்கப்படுகிறது.

திரு. க. சுப்பு: கேள்வி கேட்டவருக்கு ஒரு துணைக் கேள்வி கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி என்பது அந்தந்தக் கேள்வியைப் பொறுத்தது. 30 கேள்விகள் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. ஏராளமான துணைக் கேள்விகள் கேட்டால் பல கேள்விகள் நின்று விடுமோ என்ற நிலை இருக்கிறது. அந்தந்தக் கேள்வியின் முக்கியத்துவத்தைப் பொறுத்து துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுகின்றன.

(THIRU K. SUPPU rose).—Let the hon. Member resume his seat.

கேள்வி எண் 84.

(THIRU K. SUPPU rose) The hon. Member is requested to resume his seat.

THIRU K. T. K. THANGAMANI: Sir, the Hon. Member who has tabled the question should be given an opportunity to put at least one supplementary question.

### தூத்துக்குடி அருகிலுள்ள உப்பளங்கள்

*84 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அருகில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான உப்பள நிலங்களை, தமிழ்நாடு அரசின் கோரிக்கை பேரில் அதற்குத் தரப்பட்டுள்ளதா ?



(இ) ஆம் எனில், அந்த இடத்தை எந்தக் காரியத்திற்கு பயன்படுத்த அரசு எண்ணியுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது சம்பந்தமாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று சொல்லப்பட்டால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அது அடைகிறது. அந்த அளவிற்கு அவையின் நேரத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறதே தவிர, அந்த உறுப்பினரின் தன்மையைப் பார்ப்பதாக, குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவையில் நல்ல முறையில் பணிகள் நடைபெற வேண்டுமென்றுதான் இந்த முறை மேற்கொள்ளப்படுகிறது. அடுத்து, வினா எண் 85.

### திருப்பூரைச் சுற்றிலும் வட்டச்சாலை

*85 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரைச் சுற்றி வட்ட வடிவமான ரோடு அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரத்திலிருக்கும் திருச்சி செல்லும் பாதை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி செல்லும் பாதை, பல்லடம் செல்லும் பாதை எல்லாம் ஒரேயிடத்தில் சந்திக்கும் நிலை இருப்பதால் லாரி போக்கு வரத்து அதிகமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க வட்டவடிவமான ரோடு அமைக்க பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போது அது போன்ற திட்டம் ஒன்றும் இல்லை.

### காட்பாடியிலுள்ள இரயில்வே மேம்பாலம்

*86 வினா.—திரு. துரைமுருகன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்பாடி இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்த, மத்திய அரசுக்கு, மாநில அரசு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பரிசீலிக்கப்படும்.

### கூட்டுறவு ஒன்றியங்கள்

* 87 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு மேற்பார்வை யூனியன்களைக் கலைத்துவிடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** ஆம்.

**திரு. பி. எஸ். மணியன்:** தலைவரவர்களே, இத்தகைய கூட்டுறவுத் துறைமூலம் விவசாயிகளுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியங்களைக் கிராமப் புறங்களில் விளம்பரம் செய்வதாகத் தெரியவில்லை. அந்தக் குறையை நிவர்த்திக்கின்ற முறையிலே இந்தக் கூட்டுறவு யூனியன்கள் மூலம் பிரச்சாரம் செய்தல், விளம்பரம் செய்தல், சினிமாக் காட்டுதல், நாடகம் அமைத்தல் போன்ற பிரச்சார முறைகள் பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, இவற்றையெல்லாம் செய்ய, "தாலுக்கா யூனியன்கள்" என்று அடுத்த வினுவிற்கு விடையாகச் சொல்லப்போகிறேன்.

### 2. நாடாளுமன்றக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) துணை வினு கேட்க அனுமதி வழங்காதது குறித்து.

THIRU K. SUPPU : Sir, on a point of order.

Sir, Rule 38 of the Assembly Rules says as follows :—

'(1) Any member may put a supplementary question for the purpose of further elucidating any matter of fact regarding which an answer has been given to a starred question.

(2) The Speaker may disallow any supplementary question—

(a) if in his opinion, it infringes the rules regarding questions; or

(b) if a sufficient or reasonable number of supplementary questions have already been put in respect of the same question.'

In this case no supplementary question has been put. Sir, I want your ruling.

MR. SPEAKER : First of all, your point of order is not a point of order at all.

மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் வழக்கறிஞர் என்று நான் கேள்விப்பட்டேன். அந்த விதிமுறைகளை எல்லோரும் படித்திருக்கிறார்கள். எந்த இடத்திலேயாவது சப்ளிமெண்டரி கேள்வி கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று இருந்தால் காண்பிக்கட்டும். பேரவைத் தலைவரின் உசிதம்போல் சபையின் நடவடிக்கை சிறப்பாகவும், செழுமையாகவும் அமைய—உங்களுக்கு மட்டும் அல்ல நான் கூறுவது. பல கேள்விகளுக்குக்கூட—



சப்ளிமெண்டரி இல்லாமல் போகிறது. இப்பொழுதுகூட கேள்விநேரம் முடியப் போகிறது. இன்றைக்கு 30 கேள்விகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விகள் எல்லாவற்றையும் இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமா அல்லது நாளைக்கு ஒற்றி வைக்கலாமா என்பதை அவையின் யோசனைக்கு விட இருக்கிறேன். கடந்த காலத்தில் இவ்வளவு கேள்விகள் அரசாங்கத்தின் சார்பில் வரவில்லை. இப்பொழுது 400 கேள்விகள், 500 கேள்விகள் என்று அதிகாரிகள் பதில் அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு துணைக் கேள்வி, இரு துணைக் கேள்விகள் என்று கொடுத்து 4, 5 கேள்விகளோடு முடித்துக் கொண்டு, பாக்கியுள்ள 300, 400 கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் விட்டுவிடலாமா என்று—திரு. சுப்புவின் முன்னுல் அல்ல—சட்டப் பேரவையின் முன்னுல் வைக்கப்பட வேண்டிய பிரச்சினை. அவர்கள் இந்த அவையின் நேரத்தைக் எடுத்துக் கொண்டார்களே தவிர, எந்த ஒழுங்குப் பிரச்னையையும் எழுப்பவில்லை.

THIRU K. SUPPU : Sir, one explanation . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு முடிவு சொன்னதற்குப் பிறகு அதைப்பற்றி விவாதங்கள் முடிந்து விட்டன என்பது பொருள், இந்த நிலைமையைப் பொறுத்தவரையில். வேறு எதாவது பிரச்னையிருந்தால் சொல்ல வேண்டுமே தவிர இதற்குத் தொடர்ந்து விளக்கம் அளிப்பது, வியாக்கியானம் அளிப்பது என்பது சட்டமன்ற மரபுகளுக்கு உகந்தது அல்ல.

### வினுக்கள்—விடைகள்—தொடர்ச்சி

* 88 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:— முற் பகல் 11-00

தாலூக்கா அளவில் கூட்டுறவு யூனியன்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** ஆம். இதுவரை 56 தாலுக்கா யூனியன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**திரு. பி. எஸ். மணியன்:** அத்தகைய யூனியன்கள் கூட்டுறவுத் துறை பற்றிய சாதனைகளைக் கிராமப் புறங்களில் விளக்கிக் காட்டுவதற்காகப் பிரச்சாரம் செய்தல், நாடகம் நடத்துதல், சினிமாக் காட்டுதல் போன்ற காரியங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்டுச் செயல்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்:** உறுப்பினர்கள் சொன்ன அந்தக் காரியத்திற்காகத்தான் கூட்டுறவு யூனியன்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## ஒட்டப்பிடாரத்துக்கு வேளாண்மைப் பண்ணை

* 89 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் ஒரு விவசாயப் பண்ணை அமைக்க நடத்தப்பட்ட ஆராய்ச்சிக்காக செய்யப்பட்ட செலவு எவ்வளவு?

(இ) அச்செலவு, மாநில அரசைச் சேர்ந்ததா, அல்லது மத்திய அரசைச் சேர்ந்ததா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ரூபாய் 34,568-20 (ரூபாய் முப்பத்து நாயாயிரத்து ஐநூற்று அறுபத்தெட்டு, பைசா இருபது) செலவாகி இருக்கிறது.

(இ) புது டில்லி அரசுப் பண்ணை நிறுவனம் கோரியபடி நடத்தின நீர்வள ஆராய்ச்சிக்காக ஏற்பட்ட செலவை அந்நிறுவனம் ஏற்றுக் கொள்ள இசையவில்லை. எனவே, அந்தச் செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## அரூருக்கு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

* 90 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தருமபுரி மாவட்டத்தில் துவங்க இருக்கும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அரூரில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அண்மையில், தர்மபுரி மாவட்டத்தில் ஒரு மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆராய்ச்சி நிலையத்தை அமைக்கத் தகுதியான இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

## திருப்பூர் நகராட்சியில் சலவைத் துறை

* 91 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பூர் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து திருப்பூர் நகராட்சிக்கு "டோபிகானா" கட்ட நிதி கேட்டு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) இந்நிதியாண்டில் திருப்பூர் நகராட்சியில் "சலவைத் துறை" கட்ட குறைந்தது 1 லட்சம் ரூபாய் ஒதுக்குமாறு கேட்டுள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் இப்பொழுது முடிவுறுகிறது. ஆனால் இன்னும் சில கேள்விகள் பதிலளிக்கப் படாமல் இருக்கின்றன. இந்தக் கேள்விகளை இன்றைக்கு எடுத்து முடித்துவிடலாமா அல்லது மறு நாளைக்கு ஒற்றி வைக்கலாமா என்பதிலே அவையினுடைய கருத்தை அறிய விரும்புகிறேன். (சிறிது நேரத்திற்குப் பிறகு) கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** கேள்விகள் கொடுத்து எவ்வளவோ நாட்கள் காத்திருந்து அவையின் முன்னால் பதில் அளிக்கும்போது ஒரு உபகேள்வி கூட கேட்க வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம். அதற்கு பதிலாகக் கேள்விகளை ஒத்தி போடுவது நல்ல முறை. அவையில் சமயம் இல்லையென்றால் இன்னொரு நாள் இந்தக் கேள்விகளை எடுத்துக்கொண்டு உறுப்பினர்கள் உப கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்புக் கொடுப்பது தான் 'டெமாக்ரடிக் செட்அப்' பின் நிலையாக இருக்கும். ஆகவே, இன்று சமயம் இல்லையென்று கருதினால் தலைவர் அவர்கள் இந்தக் கேள்விகளை இன்னொரு தினத்திற்கு மாற்றித் தொடருவது நல்லது என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சாதாரணமாகக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது சட்டசபையின் மரபு—பாராளுமன்றத்திலும் பின்பற்றுவது—அந்தக் கேள்விக்களுக்கான விவரமான பதில்களை அச்சடித்து அவையின்முன் வைத்துவிடுவதுதான். ஒரு மணி நேரத்தில் ஆறு அல்லது ஏழு கேள்விகளை எடுத்துக்கொண்டு ஏராளமான துணைக் கேள்விகளை அனுமதித்துவிட்டு மற்றக் கேள்விகளை அச்சடித்துக் கொடுத்துவிடுகின்ற மரபைக் கையாளலாமா? திரு. தங்கமணி அவர்கள் பாராளுமன்றத்திலே இருந்திருக்கிறார்கள். அங்கேயெல்லாம் அதைத்தான் செய்கிறார்கள். அந்த மாதிரியான மரபைக் கடைப்பிடிக்கலாம் என்று நம்முடைய அவை முடிவுக்கு வந்தால்கூட அது சட்டப் பேரவை தலைவருக்கு மகிழ்ச்சியான ஒன்றாகத்தான் இருக்கும்.

அடுத்து கேள்வி எண் 92. . .

## Lac Industry in Denkanikota area

* 92 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal with the Government to revive the lac industry in Denkanikota area; and

(b) if so, the details thereof?

[1971 டிசம்பர் 4

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Victims involved in accidents.*

* 93 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the amount disbursed to victims involved in accidents, viz., (1) employees and (2) third parties by the State Transport Department during 1969-70-71?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

| ஆண்டு. | தொழிலாளர் இழப்பீட்டுத் தொகையாகப் பணியாளர் களுக்குக் கொடுதத தொகை: | நீதிமன்றங்கள் மூலம மூனரும் நபர்களுக்கு வழங்கிய தொகை. | பேச்சுவார்த்தைகள் மூலம் செலுத்தப் பட்ட தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1969–70 | இல்லை | 2,35,323·25 | 13,080·16 |
| 1970–71 | 15,000.00 | 7,82,431·61 | 5,954·46 |

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மாதிரித் தொகை கொடுக் கும்போது இன்ஷூரன்ஸ் செய்வதன் மூலம் தொகை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைவாக இருக்குமா? இதிலே எந்த முறை லாபகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

*State Transport Central Workshop at Chromepet.*

* 94 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there was any fire accident in the State Transport Central Workshop at Chromepet about the 5th June 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையில் அரசுப் போக்குவரத்துத் துறை யின் மத்தியப் பணிக்களிரியின் உதிரிப்பாகங்கள் பண்டகசாலைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உதவாக்கெட்ட வண்டிகளில் ஒன்று 5—6—1971 அன்று காலை சுமார் 10-49 மணிக்குத் தீப்பிடித்துக் கொண்டது. அதற்கு அருகில் இருந்த மற்றொரு வண்டிக்கும் அத்தீ பாவியது. இரண்டு வண்டிகளும் சேதம டைந்தன. தீயணைப்புப் படையின் உதவியால் காலை சுமார் 11-15 மணிக்குத் தீ முழுவதும் அணைக்கப்பட்டது.



1971 டிசம்பர் 4]

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether the Government will consider putting up of fire-proof structures?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனியாக நிறுத்தி வைக்கப்பட்ட கண்டெம்டு பஸ்களில் பிடித்த தீ விபத்தாகும் இது. ஃபயர் ப்ருப் ஸ்டரக்சர்ஸ் அங்கே இடம் பெறவில்லை. வேண்டிய அளவுக்கு ஃபயர் எக்ஸ்டிங்விஷர்ஸ் வைக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீரைக் கொண்டுசெல்லும் பைப் லைனும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணமே, அழிவின் மூலந்தான் ஆக்கத்தை உருவாக்க முடியும் என்று தீவிர வாதம் பேசுகின்றவர்கள்தான் என்பது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது தீவிர வாதத் தால் வந்தது அல்ல, தீயினுல் வந்தது என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I wanted to put a supplementary on Question No. 92, but I was not given a chance.

MR. SPEAKER: The Hon. Member will get a number of chances. Chances are many.

*நிலைவாணிசுவரர் கோயிலில் நகைகள் களவு.*

* 95 விஞ—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருப்பங்குழியில் உள்ள நிலைவாணி சுவரர் கோயில் நகைகள் களவாடப்பெற்றனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சுமார் ரூ. 10,000 மதிப்புள்ள தங்க நகைகள் கோவிலுக்குள் இருந்து பாதுகாப்பு அறை மற்றும் இரும்புப் பெட்டகம் ஆகியவற்றிலிருந்து 11—7—1971 அன்று இரவு களவாடப்பட்டுள்ளன.

திரு. பெ. மலைச்சாமி : பொதுவாகக் கோயில்களில் இதுமாதிரித் திருட்டுப் போகக் காரணம் நீண்ட நாட்களாகக் கோயில்களில் இருக்கக்கூடிய கோயில் பெருச்சாளிகள்தான் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பெருச்சாளிகளைப்பற்றிய தகவல் தெரியாது.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** கோயில் பெருச்சாளிகளாக இருந்தால் இதற்கு முன்னேயே திருட்டுப்போயிருக்க வேண்டும். ஆனால் இப்போதுதான் திருட்டுப் போயிருக்கிறது. அந்தக் கோயிலில் ஆள் மாறி இருக்கிறார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(பதில் இல்லை.)

**திரு. க. மு. இராசகோபால் :** 1929-ம் ஆண்டே வரதராஜப் பெருமாள் கோயிலில் இருந்த வைர நகை (நாமம்) கொள்ளையடிக்கப்பட்டது ; ஸ்ரீரங்கத்தில் கொள்ளையடிக்கப்பட்டது. நீண்ட காலமாகவே இது நடைபெற்று வருகிறது. ஆகவே, கோயில்களுக்குச் சொத்துக்கள் இல்லாமல் இருப்பது நல்லது என்பது பற்றி அரசு ஆராயுமா?

(பதில் இல்லை.)

Dr. H. V. HANDE : Sir, has it been brought to the attention of the Government that there are certain international gangsters who are involved in the theft of idols and jewels and recently certain idols have been stolen and they have been purchased by them. Also in the recent Interpol Conference a top-ranking officer of the Police Department gave some suggestions. So may I know the steps taken by this Government to see that the thefts of costly idols are prevented hereafter ? Also what is the system of net-work that the Government propose to have at the State-to-State level and the country-to-country level ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருச்சி மாவட்டம் திருப்பங்குழியில் உள்ள கோவிலைப் பற்றியதாகும் இந்தக் கேள்வி. சிலைகளைப் பற்றிய விவரங்கள் வேண்டுமானால், அவைகள் திருட்டுப் போவதைப்பற்றிய விவரங்களை வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பொதுவாகவே இந்தக் கோவில் சொத்துக்களைப் பராமரிப்பதிலும், கோவில் சிலைகளைப் பாதுகாப்பதிலும் அக்கறை குறைந்து வருவதாகவே மக்கள் நினைக்கிறார்கள், பக்தர்கள் நினைக்கிறோம். ஆகவே உடனடியாக இந்த அரசு சிலைகள் திருட்டுப் போவதை—சமீபத்தில் மதுரையில் சிலை திருட்டு முயற்சி நடந்தது என்ற செய்தியைப் படித்தோம். இனிமேலாவது ஆண்டவன் சொத்துக்களை—அங்கிருந்து காண்ட்ரிப்யூஷன் மட்டும் வாங்கிக்கொள்கிறீர்களே அவற்றைக் காவல் காக்கும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது—ஆகவே அதற்காகத் தனியாக செக்யூரிட்டி போர்ஸ் நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திருட்டு, அதைத் திருடியவர் சிண்டிகேட் காங்கிரஸ் செயலாளர் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒருவேளை அவர்கள் சிண்டிகேட்காரர் என்ற காரணத்திற்காக மிகத் துரிதமாகக் கண்டுபிடித்தார்களோ என்னவோ, கண்டு பிடிக்காத உங்கள் கட்சியைச் சார்ந்த குற்றவாளிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்களோ எங்களுக்குத் தெரியாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கண்டுபிடிக்கப்பட்ட குற்றத்தைப்பற்றி கேட்டார்கள், விளக்கம் சொன்னேன். யார் திருடியது என்று சொன்னேன், அவர்களது கட்சியைச் சேர்ந்தவர் என்று சொன்னேன். திருட்டுப் போனதுபற்றிக் கண்டுபிடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திருடியவர்களை. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பிடிக்கிறோம். சொல்வதை அவர்கள் விளக்கமாகச் சொல்லவேண்டும், மறைமுகமாகச் சொல்லக்கூடாது. நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. திருடியவர் அவர்களது கட்சிக்காரர் என்பதை ஒப்புக்கொண்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** அவைத் தலைவர் அவர்களே, கோவில் பொருள்கள் திருட்டுப் போவது முறை அல்ல. அதைப் பாதுகாத்துக் கொடுக்கவேண்டியது சர்க்காருடைய கடமையாகும். அவற்றைப் பெருச்சாளிகள் திருகின்றனவா அல்லது பழைய பெருச்சாளிகள் திருடுகின்றனவா அல்லது அரசியல் கட்சிக்காரர்கள்தான் திருடுகிறார்களா என்ற பிரச்னைக்கே இடமில்லாமல் தயவுசெய்து அதன்பால் அன்பும் விசுவாசமும் உடையவர்களின் சொத்துக்களைப் பாதுகாத்துக்கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கோவில் சொத்துக்களைப் பாதுகாக்க ஆங்காங்கே நாம் காவலர்களைக் கோவில்களில் நியமித்திருக்கிறோம். அதையும் மீறிச் சில நேரங்களில் தவறுகள் நடந்துவிடுகின்றன. சமீபத்தில் மதுரையில் மீனாட்சியம்மன் ஆலயத்தில் கூட ஒரு விக்கிரகத்தைக் களவாட சிலர் முயற்சி செய்திருக்கிறார்கள். அதுபற்றி அங்கே போலீசார் விசாரிக்கிற நிலையில் அங்குள்ள காவலாளர்கள் சிலர் உடந்தையாக இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்கள் வேலையிலிருந்து நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிச் சில தவறுகள் நடந்து விடுவதற்கும் ஆங்காங்கு சில சளவுகள் போவதற்கும் ஏதுவாக இருக்கின்றன. இருந்தாலும் அரசு விழிப்புடன் இருந்து களவாடுவதைத் தடுப்பதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** கோவில்களில் அதுவும் குறிப்பாக பெரிய கோவில்கள் என்று கூறப்படுகிற கோவில்களில் நகைகள் திருடு போவது, சிலைகள் திருடு போவது என்பது வாடிக்கையாக இருக்கிறது. ஆண்டவன் சர்வவல்லமை படைத்தவன் என்று ஆத்திகர்கள் கூறுகிறார்களே, அப்படி சர்வ வல்லமை படைத்த ஆண்டவனால் தனது சிலைகளையும் நகைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்கு முடியவில்லை என்றால் அந்த ஆண்டவனே நமக்குத் தேவை இல்லை. ஆகவே அங்கிருக்கிற அந்த நகைகளை, சிலைகளை அரசாங்கம் அரசாங்க கஜானாவிற்கு எடுத்துக்கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மனிதர்களில் கெட்டவர்கள் யார் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக ஆண்டவன் பொறுத்திருந்து இந்தக் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**திரு. கோ. இளங்கோவன் :** அரசு ஆயிரம் அக்கறை காட்டினாலும் ஆண்டவனுக்கு சக்தி இல்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவலாக இருந்துவருகிறது என்ற காரணத்தினால் நாட்டில் திருட்டுக்கள் மிகுதியாக நடைபெறத் தொடங்கியிருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

(விடை இல்லை.)

**திரு. என். கணபதி :** அறநிலைய ஆணையாளராக ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பதவி வகித்த திரு. ராமச்சந்திர செட்டியார் என்பவர் 'கோவில் பெருச்சாளிகள்' என்று இந்தத் திருடுகள் எல்லாம் எப்படி எப்படி நடக்கின்றன என்பதைப்பற்றி விரிவானதொரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகம் பற்றி இந்த அரசு அறிந்திருக்கிறதா ? அந்தப் புத்தகத்தைப் படித்து அந்தத் திருட்டுக்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

(விடை இல்லை.)

**திரு. சொ. காவேரி மணியம் :** நம்முடைய தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோவில்களில் விலை உயர்ந்த நகைகள் எல்லாம் இருக்கின்றன. ஒரு நிர்வாகம் மாறுகிற நேரத்தில் அதாவது எக்ஸிக்யூட்டீவ் ஆபிஸர்கள் அல்லது பொறுப்புள்ள அதிகாரிகள் மாறுகிற நேரத்தில் அந்த நகைகளை ஒப்படைக்கிற போது அந்நிலையில்தான் இம்மாதிரியான பல திருட்டுக்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அவ்வாறு நகைகளை ஒப்படைக்கிறபோது அதற்காக ஒரு தனிக் குழு ஏற்பாடுசெய்து கண்காணிப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அதிகாரிகள் மாறுகிற நேரங்களில் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வருகிற புதிய அதிகாரி அங்குள்ள நகைகளை எல்லாம் சோதனை செய்து பார்த்துத்தான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். ஆகவே, அந்தமாதிரியான தவறுகள் ஏற்படுவதற்கு வழி இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த நிலைவாணிசுவரர் கோவிலில் களவு போனதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ? களவு போன நகைகளில் எவ்வளவு கைப் பற்றப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருச்சி மாவட்டம், திருப்பங்குழியில் நிலைவாணிசுவரர் கோவிலில் களவு போனது இன்றைய மதிப்புப்படி சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகள் 1962-ம் ஆண்டின் மதிப்பீடுபடி ரூ. 5,073. அதன்பேரில் திருச்சி கிராமப்புறக் காவல்துறைக் கண்காணிப்பாளர், வேறு ஒரு காவல்துறைத் துணை கண்காணிப்பாளர், வேறு ஒரு துணைக் கண்காணிப்பாளர், காவல்துறை உதவி ஆய்வாளர் இவர்கள் புலனாய்வு செய்து வருகிறார்கள். திருடர்கள் கயிற்றின் உதவியோடு மேலே ஏறி, மூலஸ்தானத்திற்குக் கீழே இறங்கியிருக்கிறார்கள். கைரேகை தெரியாமல் இருப்பதற்காக கையில் எண்ணெய் பூசிக் கொண்டு திருடர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் கை ரேகை இல்லாததன் காரணமாக இவ்வளவு நாட்கள் கண்டு பிடிக்க முடியாத ஒரு நிலை இருந்தாலும் மேற்கொண்டு அதிகாரிகள் புலனாய்வு செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** இப்படி நகைகள் திருடு போவதைத் தடுப்பதற்கு எந்தெந்தக் கோவில்களில் நகைகள் இருக்கின்றனவோ அந்த நகைகளை எல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பாதுகாப்பாக வைத்திருந்து விழாக்காலங்களில் மட்டும் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்தத் திருட்டுக்கள் மேலும் நடவாமல் தடுக்கிற வகையில் தகுந்த அறிவுரைகள் ஆங்காங்கு இருக்கிற துணை ஆணையாளர்களுக்கும், கோவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே மேற்கொண்டு திருட்டுக்கள் நடவாமல் இருக்கத்தக்க வகையில் ஆங்காங்கு காவலாளர்கள் எல்லாம் உஷார்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மேலும் திருட்டுக்கள் நடவாமல் இருப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் அறநிலையத் துறை மூலம் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** பொதுவாகக் கோவில்களில் திருட்டுக்கள் நடைபெற்றுவருவது என்பது நீண்ட காலமாக நாம் கேள்விப்படுவதும், அறியப்படுவதும் என்றாலும்கூட கழக அரசு ஏற்பட்ட பிறகு திருட்டுக்கள் குறைந்துவிட்டன என்று கூறப்படுகிறதே அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

[1971 டிசம்பர் 4

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கழக அரசு வந்ததற்குப் பின்னால் திருட்டுப் போவதை நாம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. துரைமுருகன் :**

MR. SPEAKER : I expunge these remarks. It is a reflection on the Chair. It is also an insinuation.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே. இந்தக் களவாடப்பட்ட நகைகள் களவாடப்படுவதற்கு முன்னாலே எங்கே வைக்கப்பட்டு இருந்தன ? அவைகள் ஆண்டவனின் உடம்பில் இருந்தனவா அல்லது, வேறு இடத்தில் வைக்கப்பட்டு இருந்தனவா ? எங்கே இருந்தபோது அவைகள் களவாடப்பட்டன என்ற விவரங்களை அரசு சேகரித்து உள்ளதா ? அதன் பேரில் எடுத்த நடவடிக்கைகள் என்ன ? இது சம்பந்தமாகக் கோவில் நிர்வாகஸ்தர்களுக்கு, அதிகாரிகளுக்கு என்ன உத்தரவுகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஆலயங்களில் இருக்கும் இரும்புப் பெட்டகங்களில்தான் கோவில் நகைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதிகாரிகள் வெளியே செல்லும் போதுகூட, அங்கே இருக்கும் பூட்டுக்கு சீல் வைத்து பத்திரப்படுத்திவிட்டுத்தான் செல்கிறார்கள். ஆனால் திருடர்கள் கோவிலின் மேல் தளத்திலேயே பெயர்த்துக் கீழே வந்து களவாடி இருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that the passions and emotions of God are not the same as of human-beings and that the Gods do not care whether they are having jewels or properties? It is the worshippers' duty to safeguard these things and not the God's duty. If the God gets so angry and all that, some of the political parties might not have survived this time.

(No answer).

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, பல கோவில்களில் மூல விக்கிரகங்கள் நவபாஷாணத்தால் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்த நவபாஷாணங்கள் பல நோய்களைக் குணப்படுத்த நாட்டு வைத்தியர்களுக்குத் தேவைப்படுகிற காரணத்தால், அங்கே இருக்கும் அர்ச்சகர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சுரண்டி விற்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1971 டிசம்பர் 4]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நவபாஷாணத்தைச் சுரண்டி மருந்துகள் செய்வதாகத் தகவல் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட தகவல் ஏதாவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே. கோவில் கருவூலங்களில் இருக்கும் தங்கம் 12 காரட்டா, 14, காரட்டா, அல்லது 22 காரட்டா, அல்லது தங்கம் என்று மொத்தமாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, இந்தக் கோவில்களிலே நகை இருப்பது பக்தர்களுக்குத்தான் தெரியும். ஆகவே, நகை களவாடப்படுவது பக்தர்களாலே தான் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப் பக்தர்கள் உள்ளே செல்லும்போது தகுந்த காவல் வைத்துக் கண்காணிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, திருடர்களாலேதான் நகை களவாடப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியும்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, கடவுள் பெயரால் விலையுயர்ந்த நகைகள் இருக்கின்ற காரணத்தால்தான் களவாடப்படுகின்றன. ஆகவே, அந்த நகைகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு மாற்று உலோகத்திலே மலிவான விலையில் அதே மாதிரியான நகைகளைப் போட அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, ஆண்டவனுக்குச் சினம் ஏற்பட்டால் சில அரசியல் கட்சிகள் இல்லாமல் போய் விடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில கட்சிகள் இல்லாமல் போய் இருப்பதற்கு அது தான் காரணமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, நடைமுறை அனுபவத்தைக் காரணமாகக்கொண்டு உறுப்பினர் அவர்கள் அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, கோவில்களில் நகைகள் திருடப்படுவதைப்பற்றியும், பல சிலைகள் திருடப்படுவதைப்பற்றியும் அதிகமான செய்திகள் இந்த ஆண்டு வந்திருக்கின்றன. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த எந்தக் கோவில்களில், எந்தெந்தப் பகுதிகளில் இது மாதிரியான திருட்டுகள் அதிகமாக நடைபெறுகின்றன என்று கண்டுபிடித்து அதற்காக விசேஷ அக்கறை செலுத்தி, அதிகாரிகளை நியமித்துப் பாதுகாக்க ஏற்பாடு செய்வார்களா ?

[1971 டிசம்பர் 4

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சிலைகள் திருடப்படுவதைத் தடுக்கவும், விலையுயர்ந்த நகைகள் களவாடப் படுவதைத் தவிர்க்கவும். அவற்றைப்பாதுகாப்பதற்கும் தனிப் பட்ட முறையில் ஆங்காங்கு ஏற்பாடுகளை தற்போது அதிகாரிகள் செய்து வருகிறார்கள். முக்கியமான விலை உயர்ந்த சிலைகளை யெல்லாம் போட்டோ எடுத்து அவற்றைப் பத்திரமாகப் பாது காத்து வைத்து இருக்கிறோம். இந்தச் சிலைகள் காணாமல் போனால் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு இது உதவியாக இருக்கும். அதோடு அவ்வப்போது தேவைப்படுகிற நடவடிக்கைகளை அந்தத் துறையின்மூலம் செய்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (3) அறிவிப்புகள்.

#### (அ) அவையுரிமைக் கேள்விகுறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமணி அவர்கள் அவையுரிமைபற்றிய பிரச்னைக்கு நோட்டீஸ் கொடுத்து இருக் கிறார்கள். அது என்னுடைய பரிசிலனையில் இருக்கிறது. அது முடிந்ததும், அதைப்பற்றிய முடிவை நான் அறிவிக்கிறேன்.

### (4) ஒற்றிவைப்புத்தீர்மானங்கள்.

(அ) மாணவர்மீது காவல் துறையினரின் தடியடிப் பிர யோகமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும்.

(ஆ) திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி மாணவர்கள் தேசியக் கல்லூரி மாணவர்களைத் தாக்கியதாகச் சொல்லப்படும் செய்தி குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு, திரு. அழகர்சாமி, ஆகியோர்கள் தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் ஓர் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தைக் கொடுத்து அதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

**அதாவது—**

"பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் மாணவர்களுக்குப் பிரதி நிதித்துவம் கோரியும், பட்டமளிப்பு விழாவினை ரத்துச் செய்யக் கூடாதென்று கோரியும் 3—12—1971-ல் சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர்களின் சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை யொட்டி, மாநிலக் கல்லூரி முன்பும், எழிலகத்தின் அருகிலும்



1971 டிசம்பர் 4]

[பேரவைத் தலைவர்]

மாணவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததால் பலரும் படுகாயமுற்று, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப் பதால் எழுந்துள்ள பதட்ட நிலைபற்றி விவாதிக்க" என்று ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம்பற்றி நோட்டீஸ் கொடுத்துள்ளார்கள். அதைப்போலவே திரு. கே. எம். சுப்பிர மணியம், திருமதி டி. என். அனந்தநாயகி, திரு. எம். சுரேந்திரன், டாக்டர் ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோரும் கொடுத்துள் ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாக வரும் என்பதை திரு. சுப்பு அவர்கள் முதலிலே சுருக்கமாக கூறுவார்கள். எப்படி அந்த விதியின் கீழ் வரும் என்பதையும் விளக்கவேண்டும்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத் திலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களும், பல்கலைக் கழக நிர்வாகத்தில் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை—அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு இருக்கும் கோரிக்கையை—முன் வைத்தும் அதைப்போல் வேறு சில கோரிக்கைகளை முன் வைத்தும், அமைதியான முறையில் ஊர்வலம் வந்தார்கள். அந்த ஊர்வலம் அமைதியாக மாநிலக் கல்லூரிக்கு முன்பு வரும்போது, போலீசார் தடியடி நடத்தி, அதிலே பல மாணவர்கள் காயமுற்றார்கள், அதற்குப் பின்னால் பல கலைக் கழகத் துணை வேந்தரைச் சந்தித்து, அவர்களது விண்ணப் பத்தை அளிப்பதற்காகச் சென்றிருக்கிறார்கள். விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டத் துணை வேந்தரும் கூட, இதற்கு அரசாங்கம் தான் பொறுப்புடையது, மாணவர்கள் பிரதிநிதித்துவம் கோரு வது எந்த விதத்தில் சரியானது என்பதை அரசு தான் கூற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைக்கேட்ட மாணவர் கள் எந்த விதத்திலும் கோபப்படுவதற்கு நியாயம் இல்லை. அந்த வகையில் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. மாணவர்கள் அமைதி யாகக் கலைந்து சென்று விட்டார்கள். ஆனால் எழிலகத்திற்குப் பக்கத்திலே மாணவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு முன்னால் கற்களைப் பரப்பியிருக்கிறார்கள். இவையெல்லாம் மாணவர்கள் கூட்டம் கலைந்ததற்குப்பின்னாலே அந்த ரோட்டிலே போட்டிருக்கி றார்கள். ஆங்காங்கு நமக்குக் கிடைத்தத் தகவலும், அந்த இடத்தைப் பார்த்து வந்தவர்கள் கூறுகிற தகவலின் படியும், உண்மையிலேயே ரோட்டிலே கற்கள் பரப்பி வைக்கப்பட்டிருக் கின்றன. இதை போலீசாரே தங்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்தார்கள் என்று சொன்னார் கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது பேச வேண்டிய தெல்லாம் இந்தப் பிரச்சனை எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சொல்வதற்காகத்தானே தவிர, இந்தப் பிரச்சனை மீது அவர்கள் கருதுகிற கருத்தை புகுத்துவது கூடாது.

[திரு. க. அன்பழகன்]

அமைதியாக மாணவர்கள் போனார்கள், அவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள் என்று "மோட்டிவேஷனோடு" பேசுவது 'அட்ஜர்ன்மெண்ட் மோஷன்' உடைய முக்கியத்துவத்தை குறிப்பதாக ஆகாது. அந்த நிகழ்ச்சியின் விவரங்கள் தேவையில்லை. அது எந்த விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் தான் கூறவேண்டும், என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தலைவரவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** புகுத்த விரும்பவில்லை, தொகுத்து சில சம்பவங்களைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி இந்தத் தீர்மானம் பிற அலுவல்களை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கூற வேண்டுமே தவிர, இந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டதற்குப் பிறகு கூற வேண்டிய விவரங்களைப்பற்றி இப்பொழுது பேசுவது முறையல்ல. இந்த வாய்ப்பு கொடுத்திருப்பதே எப்படி இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கூறத் தான். ஆகவே, அதைப்பற்றித்தான் பேசவேண்டும். மற்றவற்றைப்பற்றி பேசுவது முறையல்ல. இப்படிப் பேசுவது, இப்படிப்பட்ட வாய்ப்புகள் கொடுப்பதைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்றுதான் பொருள்படும்.

**திரு. க. சுப்பு :** அமைதியாகக் கலைந்து சென்ற மாணவர்கள் மீது தடியடிப் பிரயோகம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்படி நடந்தது என்ற தகவலுக்கு ஏன் போகிறீர்கள்? இந்த விதியின் கீழ் இது எப்படி வரும் என்பதைத்தான் சொல்லவேண்டும்.

**திரு. க. சுப்பு :** அதைத்தான் சொல்ல வருகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We are not going to impute motive to anybody. Unless we are allowed to speak about the adjournment motion, unless we explain the motion, how can we bring out the urgency and the importance involved in it? By merely reading the motion we cannot bring out the urgency and public importance. If you do not allow members to speak, how can we bring out the urgency and importance of the matter?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, முதலிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த அங்கத்தினர் அவர்கள் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுகிறபோது மாணவர்கள் அமைதியாகச் சென்றார்கள், போலீசார் வேண்டுமென்றே தடியடிப் பிரயோகம் செய்தார்கள், கல்லைப் பரப்பினார்கள் என்று 'மோட்டிவேஷன்' கூறிய காரணத்தால்தான், மோட்டிவேஷன் கூறக்கூடாது, இந்தத் தீர்மானம் ஏன் அனுமதிக்கப்பட



[திரு. க. அன்பழகன்]

வேண்டும் என்று சொல்லவேண்டுமே தவிர, அது அனுமதிக்கப்பட்ட பிறகு சொல்ல வேண்டியவைகளைச் சொல்லக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. The Hon. Minister for Health knows very clearly that the Government have got the ultimate right and advantage to reply. Let us not lose patience. Even the Hon. Minister when he was an Opposition Member in the Legislative Council brought forward a number of adjournment motions to ventilate grievances and it is in the official records. As I have stated earlier, the Hon. Minister for Education or somebody else on behalf of the Cabinet has got the advantage of rebutting whatever statements that may be made by the hon. Member. Of course wild imputations should not be made and I quite agree on that point. But a certain amount of latitude should be allowed for the hon. Members so that they can ventilate their grievances. Ultimately the Government have got the right to say that the statement of the hon. Member is incorrect. That is my point of order. முற்பகல் 11-30

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர், இது நம்முடைய சபை இன்று கூடுவதற்கு ஒரு நாள் முன்னதாக நடந்திருக்கும் சம்பவம். நாங்கள் வந்தவுடனே பிள்ளைகள் ஹாஸ்டலுக்கு ஓடிவந்து சொன்னார்கள். சம்பவத்தில் சில விவரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். நேற்று நடைபெற்ற விஷயத்தை வேறு முறையில் கூற, அரசு இதில் இப்படிச் செய்திருக்கக் கூடாது என்கிற அம்சத்தை வலியுறுத்திச் சொல்ல, சில விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. விவரங்கள் தவறுதலாக இருக்கலாம். திருத்துவதற்கு அரசுக்கு அவர்களிடம் விவரங்கள் இருந்தால் அவை என்ன என்று சொல்ல அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவரங்கள் கூறவேண்டாம் என்று கூறவில்லை. ஆனாலும் விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளை அனுசரித்துப் பேசவேண்டும். விதிமுறைகள் காற்றில் பறக்கட்டும் என்று விட்டுவிட்டால், விவாதம் நடத்த முடியாது. விவாதம் என்று வரும்போது, நான்கு மணி நேரம் அல்லது ஐந்து மணி நேரம் விவாதிக்கலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. விவரங்களைக் கொடுங்கள். அதற்கு உரிமையில்லை என்று சொல்லவில்லை. மன்றத்திலே ஒற்றிவைப்புத் தீர்மானம் அனுமதிக்கலாமா வேண்டாமா என்பதை விளக்கும்போது, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், பார்-வட்-லா படிப்பு படித்தவர்கள், பல சட்ட மன்றங்களிலே இருந்தவர்கள், அதற்கு ஒரு அளவு இருக்கிறது என்பதைத் தெரிந்தவர்கள். இந்த மாமன்றம் இப்படிப்பட்ட விவாதங்களை நல்ல முறையில் விவாதித்து வந்திருக்கிறது. இதைப் பொது விவாதம் ஆக்கிவிடக்கூடாது என்பதுதான் மாண்புமிகு பொதுநலத் துறை அமைச்சர் குறிப்பிட்டது. டாக்டர் ஹாண்டேக்கும் சொல்லுகிறேன்,

[1971 டிசம்பர் 4

[பேரவைத் தலைவர்]

கூடுமான வரையில் எப்படி இந்த விஷயம் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்டது, இதில் அரசாங்கத்தின் பொறுப்பு என்ன என்பதை மட்டும் விளக்க வேண்டுமேயல்லாது, வேறு எல்லாவற்றையும் விவாதிக்கக் கூடாது. அரசாங்கத்தின் மீது தவறு இருந்தால் சொல்ல வேண்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. தவறுகளைச் சொல்ல உரிமையிருக்கிறது. அது இந்த மன்றத்திலே மறுக்கப்படவில்லை. இந்தத் தீர்மானத்தை அனுமதிக்கலாமா என்பதைக் கவனிக்கும்போது, அதைப் பொது விவாதமாக ஆக்கிவிட்டால் அது சரியாகாது. அதைத்தான் குறிப்பிட்டேன். திரு. சுப்பு அவர்கள் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. நா. வீராசாமி** : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர், எந்த விவாதம் ஆனாலும், தவறான தகவல்களை இந்த மன்றத்தில் கொடுக்கக் கூடாது என்று பலமுறைகள் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது திரு. சுப்பு அவர்கள் மொத்தமாக நேற்று மாணவர்களைப் போலீசார் தாக்கினார்கள் என்று சொல்லுகிறார்கள். இல்லை, அவர்கள் அண்ணா சமாதியைத் தாக்கியிருக்கிறார்கள், கண்ணாடிகள் உடைக்கப் பட்டிருக்கின்றன; நொறுக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, தவறான தகவல்களைத் தராமல், உண்மையான தகவல்களைச் சொன்னால்தான் அரசாங்கம் பதில் சொல்ல சரியாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவர் அவர்களே, இப்பொழுது திரு. வீராசாமி அவர்கள் சொல்வது சரியான தகவல் இல்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். உண்மையான தகவல் என்ன என்பதைக் கண்டுபிடிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கோணத்தில், கருத்துக்களைப் பார்க்கிறார்கள். எது சரியானது, எது தவறானது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. அது அவரவர் அபிப்பிராயம். அதைச் சொல்லுகிறார்கள். திரு. சுப்பு அவர்கள் ஒரு நிமிஷத்திலே தான் சொல்ல வேண்டிய விவரங்களையெல்லாம், சொல்லவேண்டும் என்றேன். அட்ஜார்ன்மெண்ட் மோஷன் பற்றி விதிமுறைகள் இருக்கின்றன.

"The matter to be discussed must involve more than the ordinary administration of the law. . . . The motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved."

என்று விதிமுறை இருக்கிறது. எப்படி இது அரசாங்கத்தின் அன்றாட அலுவலுக்கு அப்பாற்பட்டது, அரசாங்கத்தின் பொறுப்பு இதில் என்ன என்பதையும், அது எப்படி அவசரமான பிரச்சினை என்பதையும் ஒட்டிச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) எல்லோரும் சொன்னால் கொஞ்சம் கொஞ்சமாக வந்துவிடும். டாக்டர் ஹாண்டே அவர்கள் இது எப்படி அவசர, முக்கியமானது என்பதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்).



1971 டிசம்பர் 4]

**திரு. க. சுப்பு** : சார், நான் இன்னும் என் பேச்சை முடிக்கவில்லை. எடுத்துச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் கொடுத்த சலுகையை உரிமையாக எடுத்துக் கொள்கிறீர்கள். முதலிலேயே தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்றுதான் அந்தச் சலுகையைக் கொடுத்தேன். சலுகையை உரிமையாக்கிக் கொள்கிறீர்கள். விதிமுறைப்படி பேரவைத் தலைவருக்கு சம்மதம் இல்லையென்றால், பேச முடியாது. தங்கள் வாய்ப்பு முடிந்து விட்டது. இப்பொழுது டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுவார்கள். பொதுவாகவே சொல்லுகிறேன். இது எப்படி அவசர, முக்கியமானது என்பதை மட்டும் சொல்லி அமரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I have given notice of the following motion :—

'That this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the Student-Police clash on 3rd December 1971 in front of the University building on the Marina.'

I wish to impress on the House how it comes within the jurisdiction of the adjournment motion. Sir, it is a fact that there has been a clash between the students and the police and the police resorted to a cane-charge. The police version is that there was only a mild cane charge. The student version is that there was a severe cane-charge. It is upto the Government to tell this House whether the police version is correct or the student version is correct. The students claim that they did not resort to any violence and it was only the police which cane-charged them. Some of them have been very much aggrieved over it. I would like the Hon. Minister to clarify the position.

Another aspect of the matter is that this agitation has been going on for some time and students have expressed their views to the Vice-Chancellor and representations also have been made to the Government. The Government have not given a clear indication as to whether they should be accepted or not.

As regards convocation, there is a feeling among students that convocations are of no meaning because they do not get any jobs. They feel, what is the use of passing a degree without being backed up by a proper job. The University in order to get over this problem, have acted in a peculiar way by splitting the convocation affairs and vested them with the various colleges. That is one aspect of the matter.

Another aspect of the matter is that the students had gone to the Presidency College and asked them to join them. It is also on record that a number of students in the Presidency College came out and so there is no question of clash between them. I would like the Government to clarify the position. The

[Dr. H. V. Hande]

Government are given a chance ultimately to explain the matter. But the Government will say that consent to the adjournment motion should be withheld.

In this connection, I wish to suggest that Members also should be given an opportunity to reply to the points raised by the Government. Now the practice is that after the Minister's reply the Chair will say that in view of the statement made by the Minister, he is not giving his consent for the adjournment motion to be discussed in the House.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, on a point of order. This adjournment motion has been brought before this House only for considering whether it is to be admitted or not. Even before the adjournment motion is admitted, the Hon. Member is pressing his claim that the Members should also be allowed to speak on the statement given by the Minister. That means that the adjournment motion should be accepted, and there should be no other way for the Chair but to accept it. But that would infringe on the right of the House to determine whether it is going to be admitted or not. So, the Hon. Member while continuing his speech should point out the necessity of the adjournment motion and not speak on the merits of the actual things that happened that day.

DR. H. V. HANDE : I am afraid the Hon. Minister for Public Health did not seem to follow the fundamental line of argument. Whenever we argue we will stress before the Speaker that the motion should be admitted . . .

THIRU M. A. LATHEEF : On a point of order, Mr. Speaker. Without giving myself to the impression of any any prejudice, I would submit that the rule regarding adjournment motions is very, very clear. The member who is seeking to adjorn the business of the House should bring about a matter which is particular . . .

MR. SPEAKER : What is the point of order? The hon. Member may explain the point of order briefly.

THIRU M. A. LATHEEF : What is the purpose for which the students agitated and demonstrated before the University and whether the police indulged in excesses—these are the questions . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* சபையின் தலைவருடைய வேலையை மாண்புமிகு உறுப்பினர்களும் மாண்புமிகு அமைச்சர்களும் எடுத்துக்கொண்டு விடுகின்றார்கள் என்பதைத்தான் நான் திரும்பத் திரும்ப எடுத்துக்காண்பிக்க வேண்டியிருக்கிறது. நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், ஓரளவிற்கு சபையின் விதி முறைகளுக்கு அப்பாற்பட்டு, ஓரளவிற்கு தாராளமாக வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இதைத்தான் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக் காண்பித்தார்



[பேரவைத் தலைவர்]

'பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' என்பதைப்பற்றிய விளக்கம் நூறு தடவைகளுக்கு மேலே இந்த மன்றத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, கூடுமான வரையில், சொல்ல வேண்டிய விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். முறையாகச் சொல்லியிருந்தால் இந்த நேரத்தில் அவற்றைச் சொல்லிமுடித்து, அமைச்சர் அவர்களும் விளக்கம் தந்து, ஒருவேளை விவாதத்திற்கேகூட அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும் கொடுக்கப்பட்டு இருக்கலாம். அல்லது அதோடு முடிந்தும் இருக்கலாம். எனவே இப்போதும் சரி, எதிர்காலத்திலும் சரி, இப்படிப்பட்ட அவசரத் தீர்மானங்களின் மீது உறுப்பினர்கள் அத்தீர்மானத்தில் அரசாங்கத்தின் பொறுப்புகளை மட்டும் வலியுறுத்திப் பேசினால்போதும், விரிவான விவாதத்திற்குள் இறங்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : The hon. Member has brought an extraneous matter to the problem. I think I must be allowed just to . . .

MR. SPEAKER : The hon. Member may resume his seat.

DR. H. V. HANDE : What I was trying to impress upon this House was that this should be brought as an adjournment motion. I was only trying to argue that it should be brought as an adjournment motion. The Hon. Minister got up and said 'you cannot press the idea of adjournment motion'. The idea of my argument is to request in a pressing manner with all the vehemence at my command and also to persuade him. I am only saying that this must be brought as an adjournment motion. But what sort of funny ideas the Hon. Minister has got? He suddenly gets up and says something. If the Hon. Minister is to get up and say something, then . . .

MR. SPEAKER : The hon. Member may avoid words like 'funny ideas'. The Minister's ideas may look funny to the hon. Member and the hon. Member's ideas may look funny to the Hon. Minister.

DR. H. V. HANDE : If all the Ministers are going to obstruct and if their getting up indirectly results in obstructing my speech . . .

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு உள்ள உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்று அமைச்சர்கள் யாரும் எண்ணவில்லை. அதிலும் குறிப்பாக மாண்புமிகு ஹாண்டே அவர்களுக்கு உள்ள உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்று யாருமே நினைக்க மாட்டோம். அவர்கள் நிறைய கருத்துக்களைச் சொல்லுவார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்

[1971 டிசம்பர் 4

[திரு. ப. உ. சண்முகம்]

சொல்ல வந்ததெல்லாம், 'பேரவைத் தலைவர் அவர்களை ஒற்றி வைக்க வேண்டும் என்று நீங்கள் நிர்ப்பந்திக்க முடியாது' என்று தான் குறிப்பிட்டார்கள். 'அமைச்சர் அவர்களுக்கு விளக்கம் தரும் உரிமையைக் கொடுத்துவிட்டால் அவற்றை மறுத்துப் பேசும் உரிமையை எங்களுக்குத் தரவேண்டும்' என்று மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்கின்றார்கள். சட்டம் அப்படி இல்லை. எனவே டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கம் தரட்டும். அவர்கள் கொடுக்கும் விளக்கம் சரியாக இருந்தால் அதற்கு மேலே அமைச்சர் அவர்கள் அதன்மேல் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுவார்கள். அவசியம் இருந்தால் பேரவைத் தலைவர் விவாதத் திற்கு அதை எடுத்துக்கொள்ளலாம். அது சபை முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். எனவே இப்படிப்பட்ட பொறுப்புகளையும் மரபுகளையும் மறந்துவிட வேண்டாம் என்று மட்டும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். ஒற்றிவைப்புத் தீர் மானம் என்று சொல்லும்போது அரசாங்கத்தின் தவறுகளையோ அல்லது சில குற்றச்சாட்டுகளையோ சொல்ல வேண்டியிருக்கிறது. அவற்றுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றார்கள் ஆனால் அமைச்சர் அவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிவிட்ட பிறகு அதற்குப் பிறகு நாம் ஒன்றும் சொல்லுவதற்கு வாய்ப்பு கிடையாது. எனவே, இதை அரசாங்கம் பொறுப்போடு பார்க்க வேண்டும். ஐம்பது மாணவர்கள் அடிபட்டு இருப்பதால், நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர் கள் குறிப்பிட்டதுபோல, விளக்கத்தைத் தருகிறோம். அரசாங்கத் தின் தரப்பில் இதை ஒற்றிவைப்புத் தீர்மானமாக ஏற்று நம் அனைவருடைய கருத்துக்களையும் சொல்லுவதற்கு ஏற்ற வாய்ப் பினைத் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளு கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் வைக்கப்பட்டுள்ள ஒற்றிவைப்புத் தீர்மானம் மிகவும் அவசரமும் அவசியமும் ஆனது. காரணம், சில காலமாகவே மாணவர்கள் சமுதாயம் அமைதி இழந்து, வருங்கால வாழ்வுபற்றி நிச்சயமற்ற தன்மையில், நிம்மதி இழந்து தவிக்கின்றார்கள். எதிர் காலத்தில் இந்த தேசத்தையே நிர்வகிக்க வேண்டியவர்களே இன்றைய மாணவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது. அது மட்டும் இன்றி, சட்ட மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி மாணவர்கள் நமது குழந்தைகளாகவோ அல்லது சகோதரர்களாகவோ இருக்கின்றார் கள். அப்படிப்பட்ட நிலையில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட கோரிக் கையை வைத்து ஊர்வலமாக வந்திருக்கின்றார்கள். சம்பந்தப்



1971 டிசம்பர் 4]

[திரு. எம். சுரேந்திரன்]

பட்டவர்கள் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும் போது அவர்களுக்கு முறையான பாதுகாப்பளித்து அவர்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். மாண்பு மிகு அண்ணா அவர்கள் இருந்தபோது இப்படிப்பட்டக் கோரிக்கை களுக்கு என மாணவர்கள் வரும்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நமக்கு நினைவில் இருக்கின்றன. எனவே, அவசர அவசி யத்தைக் கருதி இப்பிரச்சினையை ஏற்று விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் இம்மன்றத்திற்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது என்றுகூறி இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒற்றிவைப்புத் தீர் மானத்தின் மீது பேசவேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அவர்களுடைய கட்சியிலிருந்து மூன்று பேர் விருப்பம் தெரிவித் திருக்கின்றார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் அக் கட்சியின் தலைவராக, இப்போது உள்ள தலைவர் என்ற முறையில், திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசினால் போதும் என்று கருதி அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : There may be additional points to emphasise. It may be that the leader speaks about certain points; but the leader may forget one or two points.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மன்றத்தின் மரபு, ஒரே கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் தலைவர்களும் ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருப்பார்களேயானால், கட்சித் தலைவர் அவர்களை மட்டுமே பேசுவதற்கு அழைப்பது வழக்கம். உதாரணமாக மாண்புமிகு தங்கமணி அவர்களும் மாண்புமிகு சுப்பு அவர்களும் பேச வேண்டும் என்று கேட்டிருந்தால், திரு தங்கமணி அவர்களையே அழைப்பது வழக்கம்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** தலைவர் தவிர உறுப்பினர் களுக்கும் பேச வாய்ப்பினை அளித்தால் வேறு கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கும். எனவேதான் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் மிக மிக அவசியமானது, அவசரமானது என்பதை விளக்கும் வகையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சனையின்மீது மாணவர்கள் அமைதியாகக் கூடி யிருந்தார்கள். அவர்கள் கேட்டது ஒன்றும் பெரிய கோரிக்கை இல்லை. மிகச் சாதாரணமான முறையில் அதை அணுகி யிருந்தால், அது அரசாங்கமும் பல்கலைக்கழகமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுதான். இதுவரையில் இருந்த முறையே

[திரு. ப. உ. சண்முகம்]

சொல்ல வந்ததெல்லாம், 'பேரவைத் தலைவர் அவர்களை ஒற்றி வைக்க வேண்டும் என்று நீங்கள் நிர்ப்பந்திக்க முடியாது' என்று தான் குறிப்பிட்டார்கள். 'அமைச்சர் அவர்களுக்கு விளக்கம் தரும் உரிமையைக் கொடுத்துவிட்டால் அவற்றை மறுத்துப் பேசும் உரிமையை எங்களுக்குத் தரவேண்டும்' என்று மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்கின்றார்கள். சட்டம் அப்படி இல்லை. எனவே டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்கம் தரட்டும். அவர்கள் கொடுக்கும் விளக்கம் சரியாக இருந்தால் அதற்கு மேலே அமைச்சர் அவர்கள் அதன்மேல் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுவார்கள். அவசியம் இருந்தால் பேரவைத் தலைவர் விவாதத்திற்கு அதை எடுத்துக்கொள்ளலாம். அது சபை முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். எனவே இப்படிப்பட்ட பொறுப்புகளையும் மரபுகளையும் மறந்துவிட வேண்டாம் என்று மட்டும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கே சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன். ஒற்றிவைப்புத் தீர்மானம் என்று சொல்லும்போது அரசாங்கத்தின் தவறுகளையோ அல்லது சில குற்றச்சாட்டுகளையோ சொல்ல வேண்டியிருக்கிறது. அவற்றுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றார்கள் ஆனால் அமைச்சர் அவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிவிட்ட பிறகு அதற்குப் பிறகு நாம் ஒன்றும் சொல்லுவதற்கு வாய்ப்பு கிடையாது. எனவே, இதை அரசாங்கம் பொறுப்போடு பார்க்க வேண்டும். ஐம்பது மாணவர்கள் அடிபட்டு இருப்பதால், நான் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, விளக்கத்தைத் தருகிறோம். அரசாங்கத்தின் தரப்பில் இதை ஒற்றிவைப்புத் தீர்மானமாக ஏற்று நம் அனைவருடைய கருத்துக்களையும் சொல்லுவதற்கு ஏற்ற வாய்ப்பினைத் தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் வைக்கப்பட்டுள்ள ஒற்றிவைப்புத் தீர்மானம் மிகவும் அவசரமும் அவசியமும் ஆனது. காரணம், சில காலமாகவே மாணவர்கள் சமுதாயம் அமைதி இழந்து, வருங்கால வாழ்வுபற்றி நிச்சயமற்ற தன்மையில், நிம்மதி இழந்து தவிக்கின்றார்கள். எதிர் காலத்தில் இந்த தேசத்தையே நிர்வகிக்க வேண்டியவர்களே இன்றைய மாணவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது. அது மட்டும் இன்றி, சட்ட மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி மாணவர்கள் நமது குழந்தைகளாகவோ அல்லது சகோதரர்களாகவோ இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலையில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட கோரிக்கையை வைத்து ஊர்வலமாக வந்திருக்கின்றார்கள். சம்பந்தப்





[திரு. எம். சுரேந்திரன்]

பட்டவர்கள் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும் போது அவர்களுக்கு முறையான பாதுகாப்பளித்து அவர்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். மாண்புமிகு அண்ணா அவர்கள் இருந்தபோது இப்படிப்பட்டக் கோரிக்கைகளுக்கு என மாணவர்கள் வரும்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நமக்கு நினைவில் இருக்கின்றன. எனவே, அவசர அவசியத்தைக் கருதி இப்பிரச்சினையை ஏற்று விவாதத்திற்கு எடுத்துக் கொண்டால் இம்மன்றத்திற்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது என்றுகூறி இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது பேசவேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அவர்களுடைய கட்சியிலிருந்து மூன்று பேர் விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் அக் கட்சியின் தலைவராக, இப்போது உள்ள தலைவர் என்ற முறையில், திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசினால் போதும் என்று கருதி அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : There may be additional points to emphasise. It may be that the leader speaks about certain points; but the leader may forget one or two points.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மன்றத்தின் மரபு, ஒரே கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் தலைவர்களும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது பேசவேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருப்பார்களேயானால், கட்சித் தலைவர் அவர்களை மட்டுமே பேசுவதற்கு அழைப்பது வழக்கம். உதாரணமாக மாண்புமிகு தங்கமணி அவர்களும் மாண்புமிகு சுப்பு அவர்களும் பேச வேண்டும் என்று கேட்டிருந்தால், திரு தங்கமணி அவர்களையே அழைப்பது வழக்கம்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** தலைவர் தவிர உறுப்பினர்களுக்கும் பேச வாய்ப்பினை அளித்தால் வேறு கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கும். எனவேதான் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் மிக மிக அவசியமானது, அவசரமானது என்பதை விளக்கும் வகையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சனையின்மீது மாணவர்கள் அமைதியாகக் கூடியிருந்தார்கள். அவர்கள் கேட்டது ஒன்றும் பெரிய கோரிக்கை இல்லை. மிகச் சாதாரணமான முறையில் அதை அணுகியிருந்தால், அது அரசாங்கமும் பல்கலைக்கழகமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுதான். இதுவரையில் இருந்த முறையே

[திருமதி த. ந. அனந்தநாயகி]

இருக்கட்டும் என்று கேட்டார்கள். இதில் என்ன தவறு? பல்கலைக் கழக ஸெனெட்டில் இடம் அதாவது மாணவர்களுக்கு பிரதிநிதித் துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். இப்போது இது கேரளத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே இல்லை. இது கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். மாணவர்கள் அமைதியாக ஊர்வலமாகச்சென்று சம்மந்தப்பட்ட அதிகாரி களிடம் மகஜர் ஒன்றைக்கொடுக்க வேண்டும் என்று போய்க் கொண்டு இருந்த நேரத்தில், அவர்கள் போலீஸால் மிருகத்தன மாக அடிக்கப்பட்டு, பலருடைய மண்டையில் காயங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. பச்சையப்பன் கல்லூரி மாணவர் ரமேஷ் தலையில் பலமாக அடிக்கப்பட்டு மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப் பட்டார். அங்கே என்ன நடந்தது? இரண்டு மணிக்கு எடுத்துச் சென்று இருக்கின்றார்கள். மாலை ஆறு மணிக்குத்தான் கவனித் திருக்கின்றார்கள். தலையில் தையல் போட்டிருக்கின்றார்கள். முதலில் தடிகொண்டு அடிப்பது, அதிலும் தலையில் அடிப்பது மிகமிகக் கொடுமையாகும் என்று இந்த அரசுக்குத் தெரியாதா? There should be no head injury. இது மிக, மிக அநாக ரீகமானது, கண்டிக்கத்தக்கது. தலையில் அடித்தால் மூளை பாதிக்கப்பட்டு, எதிர்காலமே அவர்களுக்குப் பாழாகிவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே மேல் நாடுகளிலே they use only rubber bullets. இங்கே இம்மன்றத்தில் அரசின் தரப்பில் அடிக்கடி சொல்லப்படுவ தெல்லாம், பிரம்பால்தான் அடிக்கப்பட்டது என்று. ஆனால் அவர்களைத் தடிகொண்டுதான் அடிக்கின்றார்கள். குண்டாந்தடி யால் அடிக்கப்பட்டு, ரத்தம் சொட்டச்சொட்ட மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு இருக்கின்றார்கள். அங்கே வாசலில் காத்துக்கொண்டு இருக்கும் பெற்றோர்கள் உள்ளே அனுமதிக்கப் படுவதில்லை. இப்படி போலீஸ் மிருகத்தனமாக நடந்துக்கொள்ளு கிறது. அரசாங்கத்தை நான் குற்றம் சாட்டவில்லை. அவர்கள் நடந்துக்கொள்ளும் விதத்தினால் அரசாங்கத்திற்கே கெட்டபெயர் ஏற்படுகின்றது. அரசுத் தரப்பில் உள்ளவர்களுக்கு நற்பெயர் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றைச் சொல்லு கிறேனே தவிர குற்றம் சொல்ல வேண்டும் என்று இல்லை. மாணவர்களைத் தடியால் படுகாயப்படுத்தி இருக்கிறார்கள். அதைக் கண்டாலே மனம் உருகும். அந்த அளவுக்கு மாணவர்கள் மீது ஈவிரக்கமின்றி போலீசார் அத்துமீறி தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். உண்மையிலேயே மாணவர் சமுதாயத்தை மதிக்கக்கூடியது இந்த அரசாங்கம் என்றால் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு குறைந்தது நான்கு மணி நேரமாகிலும் ஒதுக்கி, இதைப்பற்றி விவாதிக்கவேண்டும். ஜனநாயகத்திலே நம்பிக்கை யுள்ள அரசாங்கம் அப்படிச் செய்யும். ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லையென்றால், நீங்கள் 183 பேர்கள் இருக்கிறீர்கள் என்பதால், நீங்கள் எதைவேண்டுமானாலும் செய்யலாம். ஆகவே அதை உங்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.



THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I completely endorse all the points emphasised by my leader. But there has been a terrible incident in Tiruchirappalli and that is reported in the Press to-day. Students of one College went to another College, National College, and attacked the students there with soda bottles, etc. I want to know whether the Government feel that this rowdyism should be allowed among the students and what will happen to the people in the other walks of life (Laughter). It is not a matter for laughter. The students of the National College wanted to participate in the agitation but the students of the Jamal Mohamed College wanted to stop that agition because they have been inspired by certain political motives. This is an important matter and it is not a matter for laughter. The Government are setting up one people against another people, as they have done in the case of labour. Therefore, the matter should be taken up immeddiately for discussion.

THIRU M. A. LATHEEF: Sir, on a point of order. The hon. Member has attributed some political motives to the students of the Jamal Mohamed College. This is politically motivated and it is an extraneous matter and so it should be expunged from the official records.

THIRU S. KANDAPPAN: Sir, on a point of order. As the hon. Member has attributed political motives and expressed certain unfortunate expressions, I request that these expressions should be expunged from the official records.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைப் பற்றியோ அல்லது தனி நபரைப் பற்றியோ கூறவில்லை. இப்படிப்பட்ட கருத்துக்களையும் எக்ஸ்ப்ஞ்ச் பண்ணுவதாக இருந்தால் அது சரியாகாது. ஒருவர் ஒரு அபிப்பிராயத்தைச் சொன்னால் உலகம் பூராவும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதல்ல. எனவே அதை விட்டுவிடலாம் என்று சொல்லி கல்வி-உள்ளாட்சி அமைச்சர் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவ ரவர்களே, நேற்று நடைபெற்ற மாணவர்கள் இன்னல்களைப் பற்றியும் போலீஸார் நடவடிக்கைப் பற்றியும் இங்கே—மன்றத் திலே உள்ள உறுப்பினர்கள் விவாதிப்பதற்காக இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சனையைப்பற்றி பல உறுப்பினர்கள் பலவிதமான கருத்துக் களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்சனையில் அரசியல் நோக்கத்தைக் கருதாது நாட்டினுடைய அமைதியை நிலைநாட்டும் நோக்கத்திலே நாம் அதை ஆராய வேண்டும். ஆகவே, நடை பெற்ற நிகழ்ச்சியை ஆராய்ந்து பார்த்து, அதற் கான அடிப்படை தன்மைகள் என்னவென்று கண்டு, எதிர்காலத் தில் அவற்றைத் தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

[1971 டிசம்பர் 4

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

ஏற்பட்டிருக்கிற நிலைமை என்னவென்றால், பட்டமளிப்பு விழா எப்படி நடைபெற வேண்டும் என்பதைக் குறித்து பல்கலைக்கழக சிண்டிகேட், செனெட் இரண்டும் சேர்ந்து சில முடிவுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதன்படி பட்டமளிப்பு விழாவை அந்தந்த கல்லூரிகளிலே வைத்துக்கொள்ளலாம் என்றும், டாக்டர் பட்டம், ஆராய்ச்சிப் பட்டம் பெறுகின்றவர்களுக்கு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் அளிக்கப்படும் என்றும் நிலைமை உருவாகி இருக்கிறது. இந்தமுறை கொச்சி பல்கலைக் கழகத்திலும், திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இது அந்தந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சிண்டிகேட்டும், செனெட்டும் சேர்ந்து செய்கின்ற முடிவாகும். இந்த முடிவுக்கும் அரசாங்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.

இந்த நிலைமையை மாற்றி, எல்லா மாணவர்களுக்கும் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலே பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி, மாணவர்கள் ஊர்வலமாக வந்தார்கள். வேலை நிறுத்தம் செய்துவிட்டு, மாணவர்கள் ஒன்றுதிரண்டு வந்து, பல்கலைக்கழகத் துணை வேந்தரைச் சந்திக்க வந்தார்கள்.

சென்னை நகரில் கூட்டம், ஊர்வலம் நடத்துவதற்கு ஒழுங்குமுறை செய்யப்பட்டிருக்கிறது. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு முன்னமேயே காவல்துறையினரிடம் அனுமதி பெற்றாக வேண்டும். சில நிபந்தனைகளோடு காவல்துறையினர் ஊர்வலம் நடத்த அனுமதி அளித்தனர். காவல் துறையினர் பல இடங்களில் ஊர்வலம் செல்ல தடை விதித்திருந்தனர். சில இடங்களில் தடையையும் மீறி, பெல்ஸ்ரோடு, பைக்கிராப்ட்ஸ் ரோடு வழியாக மாநிலக் கல்லூரி பக்கம் ஊர்வலம் வந்தது.

மாநிலக் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை. எனவே, ஊர்வலத்தில் வந்த மாணவர்கள் மாநிலக் கல்லூரிக்குள் நுழைந்து, அந்த மாணவர்களையும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் செய்ய முயற்சி செய்தனர். உடனே காவல்துறையினர் தலையிட்டு, அவர்களில் 5 பேர் சென்று மாநிலக் கல்லூரி மாணவர் தலைவர்களைச் சந்தித்து பேசிப் பாருங்கள் என்று கூறி, 5 பேரை அனுப்பினர். அவ்வாறு அவர்கள் கலந்து பேசியதில் சில மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொள்ள வெளியே வந்திருக்கிறார்கள். பல மாணவர்கள் வெளியே வர மறுத்திருக்கிறார்கள்.

பின் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஊர்வலமாகச் சென்று துணை வேந்தரைச் சந்திப்பதற்காக பல்கலைக் கழக மண்டபத்திற்குள் நுழைய முயற்சித்தனர். அங்கும் காவல்துறையினர் குறுக்கிட்டு, அவர்களில் 10 அல்லது 15 பேர்கள் மட்டும் சென்று துணை வேந்தரைச் சந்தித்து, பேசிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டனர். அதன்பேரில் 15 மாணவர்கள் துணை வேந்தரைச் சந்திக்கச் சென்றனர். அவர்கள் துணை வேந்தரைச் சந்தித்து, எப்போதும் போலவே இந்த பட்டமளிப்பு விழாவும் நடைபெற



1971 டிசம்பர் 4]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். "இப்பொழுதுதான் செனெட்டும், சிண்டிகேட்டும் இந்த முடிவை மேற்கொண்டுள்ளன. எனவே மீண்டும் இதைப்பற்றி முடிவு செய்ய, செனெட்டும், சிண்டிகேட்டும் கூடிதான் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களே செய்த முடிவாகையால், இந்த முடிவை மாற்றுவதில் அதிகமான தகராறுகள் இருக்க வழியில்லை. எனவே உங்கள் கோரிக்கையை அவர்களுக்கு அனுப்பி, ஆவன செய்ய ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

வெளியே வந்த மாணவர்களிடம் காவல்துறையினரின் 'வானையே' கொடுத்து, ஒலி பெருக்கி மூலம் வெளியே நின்ற மாணவர்களை அமைதியாக கலைந்து செல்லும்படியாகவும், துணை வேந்தரோடு பேசியவற்றை அவர்களுக்குத் தெரிவிக்கும்படியும் காவல்துறையினர் கேட்டுக்கொண்டனர். ஆனால் மாணவர்கள் பெரும் முழக்கங்களிட்டு, வன்முறையில் ஈடுபட்டனர். விளக்குக் கம்பங்களிலே உள்ள விளக்குகளையெல்லாம் உடைத்தனர். அருகிலே அமைந்திருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதிக்குச் செல்கின்ற வழியிலுள்ள டூம் லைட்களையெல்லாம் உடைத்து விட்டார்கள். அசம்பாவிதங்கள் நடைபெறா வண்ணம் தடுக்கவேண்டிய பொறுப்பிலே உள்ளவர்கள் காவல்துறையினர். எனவே, அவர்கள் எவ்வளவோ தடுத்தும், மேலும், மேலும் வன்முறை நடைபெறவே, பிரம்படி நடத்தி, கூட்டத்தைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அப்படி கலைந்து சென்ற மாணவர் கூட்டத்தின் ஒரு பகுதி மாநிலக் கல்லூரிக்குள் நுழைந்து, அங்கு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத மாணவர்களைத் தாக்குவதில் ஈடுபட்டனர். அவர்களுடைய தாக்குதல் தாங்கமுடியாத மாணவர்கள் பாதுகாப்பு நாடினர். அவர்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காவல் துறையைச் சார்ந்தது. எனவே அங்கு கூட்டத்தைக் கலைக்க பிரம்படி நடத்தப்பட்டது. 'டியர் காஸ்' வெடிக்கப்பட்டது. டியர் காஸ் ஆறு குண்டுகள் வெடித்திருக்கிறார்கள். காவல்துறையினர் பெரும் முயற்சி எடுத்து, கூட்டத்தைக் கலைத்து, வன்முறையை மேற்கொண்டு நடக்காமல் தடுத்திருக்கிறார்கள்.

ஊர்வலத்தில் வந்த பத்தாயிரம் மாணவர்களும் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று கூறப்படவில்லை. வேண்டுமென்றே ஒரு பகுதியினர் இந்த வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு போலீசாருக்கு ஏற்பட்டதால் மேற்கூறிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அண்ணா சமாதியின் கடைசி வரை சென்றிருக்கிறார்கள். சமாதியை உடைப்பதற்கு நண்பகல் 12.00
பெரும் பெரும் கற்களை எடுத்தெறிந்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் பார்க்கலாம். அங்கே இருக்கிற ஒவ்வொரு கண்ணாடியும் உடைபட்டிருக்கிறது. அப்படியும் கூட கலைந்துபோகச் சொல்லி டியர் காஸ் வெடித்திருக்கிறார்கள். லத்தி சார்ஜ் பண்ணவில்லை— கேன் சார்ஜ் தான் பண்ணியிருக்கிறார்கள். அமைதியை.

ஏற்படுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் அரசுக்கும், காவல்துறைக்கும் இருக்கிறது. அப்படி ஏற்படவில்லை என்றால் போலீசார் என்ன செய்தார்கள், கையில் என்ன வைத்திருந்தார்கள். தடியில்லையா, வேறு என்ன இருந்தது என்றெல்லாம் கூட கேட்பார்கள்.

நேற்றைய நிகழ்ச்சி சம்பந்தப்பட்டவரை போலீசார் முழுப் பொறுப்புணர்ச்சியுடன்தான் நடந்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள் காரசாரமாகப் பேசினார்கள். முன்பு நடைபெற்ற காலங்களிலும் பேசி இருப்பார்களானால் நிலைமை நன்றாக இருந்திருக்கும். முழுப் பொறுப்பும் குற்றமும் போலீசாரைச் சார்ந்தது, மாணவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வது சரியாகாது. அது உண்மைக்குப் புறம்பானது ஆகும். பொதுவாக வருகின்ற நாளிதழ்களைப் பார்த்தாலும் கூட ரீப்பிடெட் ரிக்வெஸ்ட் போலீஸ் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்டும் மாணவர்கள் கலைந்து போகாது அவர்களில் ஒரு பகுதியினர் வன்முறையில் ஈடுபட ஆரம்பித்தார்கள் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். டியர் காஸ் வெடிக்க வேண்டிய அவசியம், பிரம்படி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அண்ணா சமாதியில் இருந்து மாநிலக் கல்லூரி வரை மிக உயரத்தில் இருந்த விளக்குகள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் இருந்து உணர முடியும். போலீஸ் தரப்பில் 12 அதிகாரிகளுக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் பலமான காயத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். 9 மாணவர்களுக்கு காயம் ஏற்பட்டு அவர்களுக்கும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. கட்டுக்கு மீறி நிலைமை போன காரணத்தினால்தான் போலீசார் நிலைமை விபரீதமாகப் போகாது அமைதி ஏற்படுத்தப்படவேண்டும் என்கிற அளவில் டியர் காஸ் வெடித்திருக்கிறார்கள். பிரம்படிப் பிரயோகம் நடந்திருக்கிறது. போலீசார் அத்துமீறி நடக்கவில்லை—தங்கள் கடமைகளைப் பொறுப்புணர்ச்சியோடுதான் ஆற்றியிருக்கிறார்கள் என்பதை பத்திரிகைச் செய்திகள் மூலம் தெரிந்துகொள்ளலாம். போலீசார் அடக்குமுறைத் தன்மையில் ஈடுபடவில்லை. கூடுமான வரையில் அமைதியை நிலைநாட்ட—கூட்டத்தினரைக் கலைக்க பொறுப்புணர்ச்சியோடுதான் நடந்துகொண்டிருக்கிறார்கள். அதையும் மீறி இந்த நிலை அமைதியைக் காக்க எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கும் இவர்களுக்கும் தகராறு ஏற்பட்டவுடன் மாநிலக் கல்லூரி மாணவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி மேற்கொண்டும் தொடர்ந்து அமைதியைக் காக்க கல்வித் துறையினரும், காவல் துறையினரும் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, இதுபற்றி மேற்கொண்டு விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. மாணவர்களுடைய கோரிக்கையை துணைவேந்தர் அவர்களும் செனெட், சிண்டிகேட் சபைமுன் வைத்து பரிசீலிக்க ஏற்பாடு செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்.



திருச்சியில் ஏற்பட்ட விளைவைப்பற்றி திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். அங்கும் போலீசார் பொறுப்புணர்ச்சியோடு ஓரளவு அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சூழ்நிலைக்கு பாதகம் விளைவிக்கக்கூடாது. இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது—அரசு பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டு வருகிற காரணத்தினால் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலிலே மாணவர்களே எல்லாத் தவறுகளையும் செய்த மாதிரியும், தடியினால் அடிக்கப்பட்டு மண்டை உடைந்திருக்கிற நிலையில் தடியால் அடிக்கவில்லை, பிரம்பால்தான் அடித்தார்கள் என்று அளிக்கப்படுகிற விளக்கம் எங்களுக்கு நம்பிக்கை அளிக்கவில்லை, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல இருக்கிற காரணத்தினால்—அமைதி சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை என்கிற காரணத்தினால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(சாதிக் அலி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காங்கிரஸ்காரர்கள் இந்த மன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்த பிறகு இந்த மன்றத்தில் நடைபெற்ற எல்லா நடவடிக்கைகளையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து விலக்க வேண்டும்.

* * *

இந்த மன்றத்தின் பெருமையையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்காகத்தான் சில நடவடிக்கைகளை எக்ஸ்பஞ்ச் செய்கிறோம். நாம் அப்படி எகஸ்பஞ்ச் செய்யும்போது மிக்க வருத்தத்துடன்தான் செய்கிறோம். ஒவ்வொரு வார்த்தையும் எக்ஸ்பஞ்ச் ஆகும்போது அதை மிக்க வருத்தத்தோடுதான் செய்கிறோம். ஏனெனில் இந்த மன்றத்தின் மரபு, கண்ணியம், பெருமை காப்பாற்றப்பட வேண்டுமென்பதுதான் முக்கிய நோக்கம். ஆகவே, * * * * காங்கிரஸ் வெளிநடப்பிற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகளையும் எகஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களின் மீது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு இந்த அவசரத் தீர்மானங்களை அனுமதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதி இவற்றிற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[பேரவைத்தலைவர்]

இன்றைக்கு ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இன்றைக்கு இந்தத் தீர்மானத்திற்கு ஒருவேளை அனுமதி கூட வழங்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அதற்குள் காங்கிரஸ்காரர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். ஒருவேளை அவர்கள் எங்கே பேரவைத் தலைவரின் தீர்ப்பின்மீது, தீர்ப்பை ஆட்சேபித்து வெளிநடப்புச் செய்வார்களோ என்று எண்ணியிருந்தேன். அவர்கள் வெளிநடப்புச் செய்வதற்குப் பேரவைத் தலைவரின் தீர்ப்பு தான் காரணம் என்று காட்டுவார்கள் வழக்கமாக. ஆனால் இன்றைக்கு நான் தீர்ப்பு வழங்குவதற்குள்ளாகவே அவர்களே வெளிநடப்புச் செய்து, இந்த மன்றத்தில் ஒரு புதிய மரபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன் இன்றையதினம் பழைய வழக்கத்தை மாற்றி புதிய மரபை உண்டாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கான அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அரங்கண்ணல் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்னையும் அதைத் தொடர்ந்து இதுவரையில் உள்ளவையும் சபையினுடைய நடவடிக்கைகளிலே இருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமான விஷயம் முடிந்துவிட்டது.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, தலைவர் அவர்களும் மற்றவர்களும் இங்கு பேசுகின்றபொழுது—அவர்கள் வெளிநடப்புச் செய்தபொழுது-காங்கிரஸ்காரர்கள் வெளிநடப்புச் செய்தார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட் காங்கிரஸ் என்று அவர்களைக் கூறக்கூடாது என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. எனவே நாங்கள் இந்த மன்றத்திலே அவர்களைப்பற்றிக் குறிக்கும் பொழுது என்ன சொல்லி அழைப்பது என்பதைப் பற்றி தாங்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: As the leader of the Congress Organisation I would like to enlighten the hon. Member. The Supreme Court has not stated that we should not call ourselves as 'Congress' and that itself is wrong. Let him stand corrected. The Election Commission has only suggested that we could change our name. We have changed it as "Indian National Congress Organisation" and informed the Election Commission about it and their decision is awaited. So, when the hon. Member does not know the facts, why should he confuse the House about the change of the name and that is not warranted at all. I think hereafter he will be enlightened.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



THIRU DURAI MURUGAN: It has been in a confused state . . .

**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான பிரச்சினை. இதைப்பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்மீது பேசும் பொழுது மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதனையொட்டி அண்ணா சதுக்கத்தில் ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொல்ல இந்தப் பக்கத்திலிருக்கின்ற எங்களுக்குச் சந்தர்ப்பம் இல்லையென்றாலும் பல ஆயிரக்கணக்கான உள்ளங்களிலே . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The hon. Member should speak on he matter before the house now.

**திரு. செ. கந்தப்பன் :** அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினை ஒழுங்குப் பிரச்சினையல்ல, உங்களுடைய அபிப்பிராயத்தினுடைய பிரச்சினை. அதற்கான வாய்ப்பு ஏற்படும்பொழுது கூறிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிம்ஸன் பிரச்சினை, இன்னும் மற்றப் பிரச்சினைகளைப் பற்றிய ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் போகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள், இல்லாவிட்டால் விவாதித்திருக்கலாம் என்று சொன்னார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானம் நாங்களும் கொடுத்திருக்கிறோம். எனவே அவர்கள் போனாலும் நாங்கள் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்திற்கு வாய்ப்பு ஒருவேளை இருந்திருக்கலாம், அதைக்கூட நழுவ விட்டுவிட்டார்கள் என்றுதான் சொன்னேன்.

### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஒரு தீர்மானத்தின் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்கு முன் சில உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தது குறித்து.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள். அதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். சபாநாயகர் அவர்களின் தீர்ப்புக் கிடைப்பதற்கு முன்னாலேயே எதிர்க்கட்சிக்காரர்கள் வெளிநடப்புச் செய்வது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் வெளிநடப்புச் செய்யலாமா வேண்டாமா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் போனது ரொம்ப முறையானது என்பதுதான் அவையினுடைய தீர்ப்பு.

It is in perfect order.

## 5. அமைச்சரின் விளக்கவுரை.

## சென்னை மாநகராட்சி நிலைக் குழுக்களுக்கான தேர்தல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை விதிகளின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியை ஆறு நிலைக் குழுக்களின் மூலம் நிர்வகிப்பதற்காக, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது. ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 11 உறுப்பினர்கள் இருப்பர். மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இந்த நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டது. இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றுவது உகந்ததாக இருக்கும் என உறுப்பினர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை குறித்த விதித்துறைகளை நீக்க அதிகாரப்பூர்வமான திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசு வரையறுக்கக் கூடிய முறையில் தேர்தல் நடத்துவதற்கு வகை செய்யப்பட்டது. நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை இயற்றும்போது ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநித்துவ முறை பின்பற்றப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிணங்க, ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்கு வகை செய்யக்கூடிய வரைவு விதிகள் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டன. 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348 (ஏ) பிரிவிலுள்ள விதித்துறையின்கீழ் இது குறித்து சென்னை மாநகராட்சியின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. மாநகராட்சி மன்றம் 11—10—1971 நாளிட்ட 709/71 எண் தீர்மானத்தில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பெரும்பான்மை வாக்களிப்பு முறையைப் பின்பற்றவேண்டுமென அரசிடம் வேண்டுகோள் விடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. விவாதங்களின் அடிப்படையிலும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலும் இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை, 1961-ஆம் ஆண்டிற்கு முன்பு செயல்பட ஆரம்பித்த சென்னை மாநகராட்சி நிலைக்குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்



[திரு. இரா. நெடுஞ் செழியன்]

பதற்குப் பின்பற்றப்பட்டது. பெரும்பான்மை வாக்களிப்பு முறை, எல்லா நகராட்சிகளாலும் மதுரை மாநகராட்சியாலும் பின்பற்றப்படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலும் இந்த முறையிலிருந்து மாறுபட்ட ஒரு முறை பின்பற்றப்படுவதை சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்கவில்லை. பொது நிர்வாகத்திற்காகவும், நிலைக்குழுக்கள் செம்மையாக செயல்பட வகை செய்வதற்காகவும், மாநகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பேற்று நடத்தும் சென்னை மாநகராட்சி மன்றம் போன்ற முக்கியமான நிறுவனத்தின் கருத்துக்களைப் புறக்கணிக்க இயலாதென அரசு முடிவுசெய்தது.

எனவே, பெரும்பான்மை முறையைப் பின்பற்றலாம் என்று மாநகராட்சி மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348-வது பிரிவின்கீழ் இந்த விதி சட்ட மன்றத்தின் முன்பு விரைவில் வைக்கப்படும். இந்த விதித்துறைகளின்கீழ், அந்த விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இரண்டு அவைகளும் ஒப்புக்கொண்டால், இரண்டு அவைகளாலும் ஒப்புக் கொண்டபடி திருத்தியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே அவ்விதிகள் செயலுக்கு வரும்.

எனவே, இதை நான் அவையின் நாட்டத்திற்குக் கொண்டு வருகிறேன்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. I am not going into the details of the matter now before the House. Sometime ago a Bill was brought before the House and there was a discussion on it and the Hon. Minister gave some assurances on the floor of the House. We have taken it for granted that these assurances would be implemented. Now the Hon. Minister has made a statement under rule 82 of the Assembly Rules. Will it not be proper that the matter should be discussed on some other occasion and then the Government should come to a decision.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையில் விவாதம் இல்லை என்றாலும் நான் பாயிண்ட் ஆஃப் ஆர்டராக எழுப்பிப் பேசுகிறேன். ஏற்கனவே இந்த மசோதா இங்கு வந்திருந்தபொழுது என் பெயரில்தான் திருத்தம் இருந்தது. இன்னொரு உறுப்பினர் பெயரிலும் அதே திருத்தம் இருந்தது. யாராவது இருவர் கொடுத்த திருத்தமும் ஒரேமாதிரியாக இருந்தால் ஒருவர் திருத்தமே போதும் என்ற முறையில் வந்தது. பிறகு அமைச்சரவையிலே கூடி திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். கொடுத்த வாக்குறுதிப்படி இந்தக் கருத்தின் அடிப்படை, விதி முறையாக அமைக்கப்படும் என்றார்கள். ஆனால் இம்மாதிரி இன்றைக்கு 82-வது பிரிவின் கீழ் கொண்டு வந்து வைப்பது முறை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12·30

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அறிக்கை முறையாகத்தான் வந்திருக்கிறது. இந்த அவைக்கு உறுதி கொடுத்தது உண்மை, அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்த அவைக்குத் தெரியாமல் மாற்றம் செய்ய விரும்பவில்லை. ஆகவே, காரண காரிய விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். அதற்கு விதிமுறைகள் வரப்போகின்றன. இரண்டையும் சேர்த்து வைத்து விவாதிக்க இடம் அளிக்க ஆயத்தமாக இருக்கிறது அரசு. அவை முடிவு எடுத்து அனுமதியளிக்க வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவரவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னது இந்தச் சட்டசபையிலே ஒரு முக்கியமான பிரச்னைதான். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன்கூட விவாதித்திருக்கிறேன். ஒரு உறுப்பினர் ஒரு திருத்தம் கொடுக்கிறார், இன்னொரு உறுப்பினரும் அதேமாதிரியாக திருத்தம் கொண்டுவரும் நேரத்தில், சிலநேரங்களில் இரண்டும் ஒரேமாதிரியாக இருக்கின்றபொழுது ஒரு உறுப்பினரை மட்டும் முன்மொழியுமாறு சொல்கிறோம். ஆகவே, இன்னொருவருக்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்த உறுப்பினர் மனத்தை மாற்றிக்கொண்டு வற்புறுத்தாமல் விட்டுவிட்டால் அந்தக் கருத்தே கூட இடம் பெறாமல் போகிறது. இவைகளை நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகள் கமிட்டி ஆராயலாம். இந்த விவாதத்தைப் பொறுத்துக்கூட அல்ல, இரண்டு உறுப்பினர்களும் அமெண்ட்மெண்ட் கொடுக்கும் நேரத்தில் சபையில், முதலிலே கொடுத்த உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதற்கு மாற்று யோசனைகளை ரூல்ஸ் கமிட்டி ஆராய உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 6. கவன ஈர்ப்பு

**தில்லி அகில இந்திய வானொலியில் தமிழ்ச் செய்தி அறிக்கைக்கு அளிக்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டதும், அதை மீண்டும் அதிகரிப்பதன் அவசியம் குறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு திரு. மலைச்சாமி அவர்கள் கொண்டு வருவார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, "பல்லாண்டு காலமாக டில்லி, அகில இந்திய வானொலி நிலையத்தில் நாள் ஒன்றுக்கு (காலை, பிற்பகல், இரவு, ஆகிய நேரங்களில்) தமிழ்ச் செய்தி அறிக்கை நாற்பது நிமிடங்கள் படிக்கப்பெற்று வந்ததை அண்மைக் காலத்திலிருந்து முப்பது நிமிடங்களாகக் குறைக்கப் பெற்றுள்ளதால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க் வாய்ப்பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி பழைய



நேரங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டும்" என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-வாருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, "பல்லாண்டு காலமாக தில்லி அகில இந்திய வானொலி நிலையத்தில் நாள் ஒன்றுக்கு (காலை, பிற்பகல், இரவு ஆகிய நேரங்களில்) தமிழ்ச் செய்தி அறிக்கை நாற்பது நிமிடங்கள் படிக்கப்பெற்று வந்ததை அண்மைக் காலத்திலிருந்து முப்பது நிமிடங்களாகக் குறைக்கப்பெற்றுள்ளதால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப்பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி பழைய நேரங்களை மீண்டும் பயன்படுத்தவேண்டும் என்ற அவசரமும். பொது முக்கியமான காரியம் பற்றி" என்பது திரு. மலைச்சாமி அவர்களின் அறிவிப்பாகும்.

முன்னர் தில்லியில் இருந்து அஞ்சல் செய்யப்படும் தமிழ்ச் செய்தி அறிக்கை காலை 7-15 முதல் 7-30 வரையிலும், பிற்பகல், 2-00 முதல் 2-10 வரையிலும், இரவு 7-15 முதல் 7-30 வரையிலும் ஒலி பரப்பு செய்யப்பட்டு வந்தது. இப்போது இந்த நேரத்தை காலை 7-15 முதல் 7-25 வரையிலும், பிற்பகல் 12-40 முதல் 12-50 வரையிலும், இரவு 7-15 முதல் 7-25 வரையிலும் என மாற்றி இருக்கிறார்கள். இதில் காலை இரவு ஆகிய நேரங்களிலும் 5 நிமிடங்கள் வீதம் 10 நிமிடங்கள் குறைத்திருக்கிறார்கள். பிற்பகல் ஒலிபரப்பில் நேரம் குறைக்கப்படவில்லை. ஆனால் 2-00 முதல் 2-10 வரை என இருந்ததை 12-40 முதல் 12-50 வரை என மாற்றி இருக்கிறார்கள்.

முன்னர் தமிழ் செய்தி அறிக்கை ஒலிபரப்பான நேரம் நாள் ஒன்றுக்கு காலையில் 15 நிமிடங்கள், பிற்பகலில் 10 நிமிடங்கள், இரவில் 15 நிமிடங்கள் ஆக மொத்தம் 40 நிமிடங்களாகும்.

தற்போது ஒலிபரப்பு செய்யும் மொத்த நேரம், காலையில் 10 நிமிடங்கள், பிற்பகலில் 10 நிமிடங்கள், இரவில் 10 நிமிடங்கள் ஆக மொத்தம் 30 நிமிடங்களாகும்.

ஆக 10 நிமிடங்கள் நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாற்றம் 1971 ஆகஸ்டு முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த மாற்றத்தால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப்பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி பழைய நேரங்களை மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே திரு. பி. மலைச்சாமி, எம்.எல்.ஏ., அவர்களின் அறிவிப்பு.

தற்போது, அதாவது 1—8—1971 முதல் வானொலியில் நிகழ்ச்சிகளுக்கிடையே 2 நிமிட நேரம் ஆங்கிலத்திலும், இந்தியிலும் நாட்டில் அவ்வப்போது நடைபெறும் மிக முக்கிய நிகழ்ச்சிகளைப்

[திரு. ப. உ. சண்முகம்]

பற்றி காலதாமதமின்றி ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நேரத்தை சரிக்கட்டவே காலை மாலை ஐந்து நிமிடங்கள் வீதம் மொத்தம் 10 நிமிடங்கள் தமிழ்ச் செய்திகள் ஒலிபரப்பப் படும் நேரத்தில் குறைத்திருக்கிறார்கள். பிற எல்லா மொழி ஒலிபரப்பிலும் நாடு முழுவதும் இதே போன்ற மாற்றம் செய்யப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்த அறிவிப்பை வைக்கிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, தற்போது இந்திய நாட்டிற்கு பாகிஸ்தானால் கொடுமையான ஒரு செயல் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் வெளிநாட்டிலுள்ள தமிழக மக்கள் இந்தியச் செய்தியை முழுமையாகக் கேட்டால்தான் இந்தியாவிற்கு ஆதரவாக வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியும். எனவே மீண்டும் பழைய நேரங்களில் ஒலிபரப்புவதற்கு ஏற்ற வகையில் மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இப்பொழுது ஒலிபரப்பப்படும் நேரங்களில் 10 நிமிடங்கள் குறைந்திருந்தாலும் சொல்ல வேண்டிய செய்திகளை முழுதும் சொல்லி விடுகிறார்கள். இடையிடையே முக்கிய செய்திகளை நாட்டு மக்களுக்கு ஆங்கிலத்திலும், இந்தியிலும் சொல்கிறார்கள். இதனால் எந்தச் செய்தியும் குறைக்கப்படவில்லை. இப்பொழுது அவசர நிலை இருப்பதால் இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுத வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறது.

### (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவை (Senate) 6—12—1971 முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அப்பேரவைக்குத் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 8—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.



[பேரவைத் தலைவர்]

நியமனத்தாள்கள் 9—12—1971 வியாழக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 9—12—1971 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற்படுமாயின் 10—12—1971 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (7) அரசினர் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 25/1971). மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையைத்* தங்கள் அனுமதியோடு வைக்கிறேன்.

### (8) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கையும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்ட மன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார

---

* 4—12—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1971 டிசம்பர் 4

[திரு. ஓ. பி. இராமன்]

வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அளிக்கப்பட்டுள்ளது.

என்னுடைய உரையின் நகலும்* எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதால் அதையும் கவனித்து இந்த மன்றத்தின் மூலம் நல்ல ஆலோசனைகளைக் கூறும்படி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, சொந்த இடத்தில் இல்லாமல், இந்த இடத்திலிருந்து பேசுவதற்கு அனுமதியளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றையதினம் சர்க்கார் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை இங்கு வைத்திருப்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும் இந்த வரவு செலவுத் திட்டத்தைக் கொடுக்கக்கூடிய முறை காங்கிரஸ்காரர்கள் எவ்வாறு கொடுத்து வந்தார்களோ அதே முறையில்தான் அமைந்திருக்கிறது. இதிலே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இவ்வளவு லைட், இவ்வளவு பம்ப் செட்டுகளுக்குக் கரண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி ஜில்லாவில் இருக்கக்கூடிய ஒருவருக்கு கோவை ஜில்லாவில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்திலுள்ள லைட் பற்றிய விவரங்கள் தெரியவேண்டிய அவசியமில்லை. அந்தமாதிரி விவரங்களைத் தனித் தனியாக அந்தந்த மாவட்டங்களில் இருக்கக் கூடிய சட்டசபை மெம்பர்களுக்கு வேண்டுமானால் தனியாகக் கொடுத்துவிடலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக இந்த போர்டின் சொத்து எவ்வளவு, வருமானம் எவ்வளவு, விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதன் மூலம் வரக்கூடிய வருமானம் எவ்வளவு, தொழிலுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலம் வரக்கூடிய வருமானம் எவ்வளவு, என்ற விவரங்களைத் தரவேண்டும்.

1963-ம் வருஷத்தில் இந்தியாவில் இருக்கும் எல்லா போர்டுகளும் ஒரேமாதிரியான முறையில் இருக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த முறையும் இப்போது இல்லை. அது மட்டுமல்ல. இந்தியாவிலுள்ள ஆடிட்டர் ஜெனரல் போர்டு சம்பந்தப்பட்ட இன்டர்னல் செக்கிங்கைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். போர்டின் வரவு-செலவுகளைச் செக் பண்ணவேண்டும். ஆனால் நம்முடைய போர்டில் 1969-ம் ஆண்டில் இருந்து குறிப்பாக கண்டின்ஜெண்ட் ஃபண்டை எடுத்துக் கொண்டாலும் சரி, எஸ்டாப்ளிஷ்மென்ட் சார்ஜசை எடுத்துக் கொண்டாலும் சரி செக் செய்யப்பட்டு இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

---

*88–106-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1971 டிசம்பர் 4]

[திரு. என். கே. பழனிசாமி]

நமது சர்க்கார் 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி கொடுப்பது என்ற திட்டத்தின் அடிப்படையில் வேகமாக வேலை செய்து வருகிறார்கள். இந்தக் கொள்கையை நாங்கள் பாராட்டுகிறோம். அதே சமயத்தில் அதைத் திறம்பட நடத்துகிற நிபுணர்களுக்கும், நடைமுறையில் கொண்டு வருகிற தொழிலாளர்கள் அனைவருக்கும் பாராட்டுத் தெரிவிக்கிறோம். ஒரு கிராமத்திற்கு மின்சாரத்தைக் கொண்டு சென்று இரண்டு லைட்டைப் போட்டுவிட்டால் மட்டும் போதாது. அந்தக் கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் விவசாய பம்ப் செட்டுகளுக்கு வேண்டிய மின்சார் வசதி, தொழிலுக்கு வேண்டிய மின்சார வசதி, வீடுகளுக்கு வேண்டிய மின்சார வசதி, பூராவையும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இதைச் சர்க்கார் கவனத்தில்கொண்டு இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1965-ம் வருஷத்தில் போர்டின் வருமானம் 23 கோடி. இன்றைய தினம் அதனுடைய வருமானம் 63 கோடி. 40 கோடி ரூபாய் வருமானம் எவ்வாறு அதிகமாயிற்று? இந்த அதிக வருவாய் பூராவும் சாதாரண ஜனங்கள் வீடுகளுக்கு உபயோகிக்கும் மின்சாரத்திற்கு வசூலிக்கும் கட்டணத்திலிருந்துதான் இந்த அளவுக்கு அதிகமாகி இருக்கிறது. வீடுகளுக்கு உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்கு இன்றையதினம் யூனிட்டுக்கு 33 பைசா வசூலிக்கப்படுகிறது. 100 யூனிட்டுக்கு மேல் அதிகமாக உபயோகிப்பவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படுகிறது. பல்க் சப்ளை என்ற முறையில் கன்செஷன் கொடுக்கிறார்கள். ஒரு பெரிய பங்களாவில் மோட்டார் பம்ப் செட் இருந்தாலும் சரி, ரிப்ரிஜிரேட்டர் இருந்தாலும் சரி பல்க் சப்ளை என்ற முறையில் கன்செஷன் வருகிறது. அதே சமயத்தில் விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய மின்சாரத்திற்கு, பம்ப் செட்களுக்கு எவ்வளவு உபயோகித்தாலும் ஒரே கட்டணந்தான் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, இந்த பல்க் சப்ளை என்ற கன்செஷனை எடுத்துவிட்டு எவ்வளவு யூனிட் மின்சாரம் உபயோகிக்கிறார்களோ அதற்கு முழுக் கட்டணத்தையும் வசூலிக்க வேண்டும். இப்போது மில் முதலாளிகளுக்கு யூனிட்டுக்கு 1½ பைசாதான் சார்ஜ் செய்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு அந்த அளவுக்குச் சலுகை இல்லை. ஆகவே, இதை ஒரேமாதிரியாக ஆக்கி விவசாயத்திற்கு உபயோகப்படுத்துவதற்குச் சலுகை கொடுக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

சர்க்காருடைய சொத்து மொத்தம் எவ்வளவு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சட்டப் பிரகாரம் ஒவ்வொரு போர்டும் வருஷம் ஒன்றுக்கு 11 சதவிகிதம் லாபம் காட்ட வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் லாபம் 0.02 என்றுதான் காட்டப்பட்டிருக்கிறது. டிப்ரிசியேஷன் ஃபண்ட் 10 கோடி. எல்.ஐ.சி.-க்கு 12 கோடி கட்ட வேண்டும். இதைக் கழித்தால் லாபகரமாக இருக்கும். 1965-ம் ஆண்டில் சர்க்கார் பார்லிமெண்டரி கமிட்டி கூடி, மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய, எல்.ஐ.சி. கொடுக்கக்கூடிய

[திரு. என். கே. பழனிசாமி]

லோனை ஈக்விடி லோனாக ட்ரீட் பண்ணினால் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்ற நிலையில் அதன் மூலம் ஆறு கோடி ரூபாய் மிச்சம் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு விவசாயி களுக்கு இன்னும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியும். டொமஸ்டிக் சர்விஸ்களுக்கும் குறைவான கட்டணத்தில் கொடுக்க முடியும். இதைப் பற்றி ஏற்கனவே பார்லிமெண்டரி கமிட்டி சிபாரிசு செய்திருந்தபோதிலும் ஏன் அமுல் செய்யப்படவில்லை என்று தெரியவில்லை.

கல்பாக்கம் அணு மின் நிலையத்திலே நம்முடைய அரசுக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது? நம்முடைய போர்டு மூலதனம் போட்டிருக்கிறது. அந்த மின்சார நிலையத்தினால் நமக்கு என்ன சலுகை இருக்கிறது? அதிலே நமக்குப் பங்கு இருக்கிறதா? இந்த விவரங்களை எல்லாம் சொல்லியிருக்க வேண்டும். அந்த மின்சார நிலையம் 1972-ல் தொடங்கப்படுமானால் நாம் மின்சாரத்தைக் குறைந்த கட்டணத்தில் கொடுக்க முடியும். வெளி மாநிலங்களி லிருந்து, மைசூர் மாநிலத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கு அதிக மான சார்ஜ் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, அணு மின் நிலை யத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமானால் தமிழ் நாடு கிரிட் டிலேயே மின்சாரத்தைப் பெற்று குறைந்த சார்ஜில் கொடுக்க முடியும்.

இன்று மில் முதலாளிகளுக்கு யூனிட்டுக்கு 1½ பைசாவுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால், விவசாயிகளுக்கு அத்தகைய நிலை இல்லை. விவசாயிகள், குறிப்பாக வறட்சியான பகுதிகளி லுள்ளவர்கள், சேலம், கோவையிலுள்ள விவசாயிகள் கிணற்றிலே தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் 200 அடி, 300 அடி போரிங் போட்டு தண்ணீர் எடுக்கிறார்கள். அதனால் அதிகமான மின்சாரம் செலவழிகிறது. ஆனால் அதன்மூலம் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று ஏக்கர்தான் விவசாயம் செய்ய முடியும். இந்தமாதிரி வறண்ட பகுதிகளில் விவசாயிகளுடைய வருமானம் மின்சாரக் கட்டணம் செலுத்தவே போதாத நிலையில் இருக்கிறது.

ஆகவே, மற்ற மாநிலங்களைச் சுட்டிக்காட்டுவது சரியல்ல. ஆழமான கிணறுகள். கேணிகள் எல்லாம் மற்ற மாநிலங்களில் கிடையாது. ஆகவே அது தனிப்பட்ட ஒரு பிரச்னை. எனவே, விவ சாயிகளுக்கு குறைந்த விலையில் மின்சாரம் கிடைப்பதற்கு வழி வகை செய்யவேண்டும். 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங் களிலும் மின்சாரம் சப்ளை செய்யப்படப் போவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். சர்க்கார் ஐந்து முனிசிப்பாலிட்டிகளில் நடந்து கொண்டிருந்த மின்சார ஸ்தாபனங்களை சமீபத்தில் எடுத்திருக் கிறார்கள். முனிசிப்பாலிட்டிகளில் இயங்கிக் கொண்டிருந்த மின்சார ஸ்தாபனங்களை எடுக்க முன் வந்த சர்க்கார் ஏன் தனிப் பட்டவர்கள் நடத்திக்கொண்டிருக்கும் மின்சார ஸ்தாபனங்களை எடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். இன்னும் நான்கு தனியார்



[திரு. என். கே. பழனிசாமி]

மின்சார நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றை ஏன் எடுக்கக் கூடாது? இவைகளை எடுக்காவிட்டால் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பது எப்படி முடியும் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் என்று பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. எல்லாக் கட்சி களைச் சார்ந்தவர்களும் அதில் இருக்கிறார்கள். சமீப காலத்தில் அதை தனியானதொரு யூனியனாகப் பிரிப்பதற்கு முயற்சிகள் நடக்கின்றன. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்னர் கூட தனியாக ஒரு கட்சி கூட்டம் போட்டு அதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டபோது அவர்கள் இம்மாதிரிக் கூட்டங்களில் நான் கலந்து கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார்கள். அவர்களது இந்தப் பெருந்தன்மையினை நான் பாராட்டுகிறேன். இம்மாதிரி ஒவ்வொரு யூனியனையும் பிரித்து அவைகள் முதலாளிகளின் கைப்பாவைகளாக ஆவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. இந்த ஃபெடரேஷன் எல்லாக் கட்சிக்காரர் களையும் கொண்டதாகும். இருபது, முப்பது ஆண்டுகளாக அது தொழிலாளர்களுக்காக தொடர்ந்து பாடுபட்டுக்கொண்டு வரு கிறது. இப்போது 35 லட்சம் காஷ்வல் லேபரேர்ஸ் இருககிறா கள்

1970-ம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி ஐந்தாண்டுகளுக்குள்ளாக எல்லோரையும் பெர்மெனன்ட் செய்வ தாக ஒப்பந்தப்படி ஏற்பாடு. ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. எந்த அளவிற்கு அவர்கள் பெர்மெனென்ட் செய்யப்பட்டிருக்கிறார் கள்? இரண்டு மாதங்களுக்கு முன்பாக வேலை வேண்டுமென்று 450 பேர்கள் வந்தார்கள். ஏற்கனவே பீ.ஈ. படித்தவர்கள், எல்.ஈ.ஈ., படித்தவர்கள், அனுபவப்பட்டவர்கள், ஐந்தாறு ஆண்டுகள் வேலை செய்தவர்கள் இருக்கிறார்கள். வேலை காலியானவுடன் ஏற்கனவே அனுபவப்பட்டவர்களை எடுத்திருக்கலாம். அதற்குப் பதிலாக 150 பேர்களைத்தான் எடுத்துள்ளார்கள். 300 பேர்களை வெளியிலிருந்து எடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி அவர்களை ஐந்தாண்டுகளுக்குள் பெர்மெனென்ட் செய்யவேண்டும். ஏற்கனவே போனஸ் 8-1/3% கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. நம் அரசு அதற்கு மாடலாக இருந்து 8-1/3% போனஸ் கொடுக்கவேண்டும். அப்படியில்லாமல் இப்போது 5% தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலாவது இந்தக் கொள்கை அடிப்படையில் 8-1/3% கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு அனுமதி அளித்த உதவித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கையை மாண்புமிகு மின்சாரத் துறை

[திரு. கா. வேழவேந்தன்]

அமைச்சர் அவர்கள் இங்கு அளித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையை கோடானுகோடி தமிழ் மக்கள் சார்பில் நான் நெஞ்சார, மனமார, வரவேற்று சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

எங்கள் கட்சி சார்பில் முதலாவதாக இந்த நிதிநிலை அறிக்கை மீது இன்று பேசுகிற நேரத்தில், ஆளுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஆளும் கட்சியாக ஆவதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடு முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். "ஒளி வழங்கிட உதய சூரியன்" என்ற சுவரொட்டியைப் பார்த்துவிட்டு, 'ஒளி இருக்கட்டும் புளி எங்கே' என்று கேட்டார்கள், இப்போது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள். நாடு முழுவதும் எங்கே ஒளி வழங்கிட முடியும், எப்படி அதை நிறைவேற்றிட முடியும் என்று நினைத்து இப்போது எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அன்றையதினம் இன்று ஆளும் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கிண்டலும் கேலியும் செய்து பேசினாலும். இன்று நம் மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களும் ஒளி பெறுகிற ஒரு புனிதமான, மகத்தான பணியை இப்போது கழக அரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. குறிப்பாகவும் சிறப்பாகவும், ஆளும் கட்சி சார்பில் முதன்முதலில் இன்று பேசுவதற்காக நான் பெருமைப்படுகிறேன். இந்த அரசையும், நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். நான் சார்ந்த செங்கற்பட்டு மாவட்டத்தில், அண்ணா பிறந்த மாவட்டத்தில் தமிழ் நாட்டில் முதன்முதலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, வட ஆற்காடு மாவட்டத்தில் இப்போது முழுமையாக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் முழுமையாக வழங்கப்பட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் இன்றையதினம் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதம் இந்த ஆண்டு முடிவு அடைய இருக்கிறது. இந்த ஒரு மாத காலத்திற்குள் மற்ற நான்கு மாவட்டங்களிலும் முழுமை விழாக்கள் நடைபெற இருக்கின்றன. 1972-ம் ஆண்டு என்று நாம் அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறோம். ஆனால் அதற்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கக் கூடியதொரு நிலைமையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை, நான் மிகவும் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அனைத்திந்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அண்மையில் பேசுகிறநேரத்தில், இன்னும் ஒரு பத்தாண்டுகளுக்குப் பின்னால் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களையும் எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 60% கிராமங்கள் மின்சாரத்தைப் பெறும், ஒளியைப் பெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். சற்றேறக்குறைய 1982-ம் ஆண்டில்தான் அதுவும் 60% தான் கிராமங்கள் ஒளி பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள்



[திரு. கா. வேழவேந்தன்]

ஆனால் தமிழ் நாட்டில் 1972-லேயே நூற்றுக்கு நூறு கிராமங்களும் மின்வசதி பெறப் போகின்றன. அப்படிப்பட்டதொரு நிலை இந்தியாவில் உள்ள கிராமங்களில் எல்லாம் ஏற்பட, இந்தியாவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் மின்வசதி ஏற்பட கி.பி. 2000-ல் வரலாம் போல் இருக்கிறது. ஆனால் நாம் 1972-க்குள் அதை முடித்துக் கொள்கிறோம் என்றால் இதைவிட பூரிப்பான செய்தியை திராவிட முன்னேற்றக் கழக அரசு வேறு வகையில் அறிவிக்க முடியாது என்று தான் இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். எவ்வளவோ இடர்ப்பாடுகளுக்குப் பின்னால்—அண்டை மாநிலங்களிடமிருந்து மின்சாரம் விலைக்கு வாங்கியிருக்கிறோம்—இந்நிலையை நாம் எய்தியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில், ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் என்று சொல்லப்படுகிற ஆற்று நீர் திட்டங்களை எல்லாம் நாம் இப்போது முழுமையாகப் பயன்படுத்திவிட்டோம். இனிமேல் அணு மின்சாரத்தையும், அனல் மின்சாரத்தையும் நாம் பெருவாரியாகப் பெருக்கியாக வேண்டும். நம் நாட்டில் மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. ஆகவேதான் ஆளும் கட்சி சார்பில் நான் மத்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்துகிற தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு உதவி செய்ய முன்வர வேண்டும். தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 500 மெகா வாட்ஸ் கிடைக்கக் கூடிய அத்திட்டத்தை விரைவுபடுத்தி நிறைவேற்றித் தர வேண்டும். அதேமாதிரி, நெய்வேலி இரண்டாம் சுரங்கத் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதையும் விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசு முன்வர வேண்டும். ஏனெனில் மற்ற மாநிலங்களுக்கு இல்லாத ஒரு தனிப் பெருமை தமிழ் நாட்டிற்கு உண்டு.

மூன்று பம்ப் செட்டுகள் இந்தியா முழுவதிலும் உள்ள விவசாயிகள் வைத்துக் கொண்டிருக்கின்றன என்றால், அதிலே ஒரு பம்ப் செட் தமிழ் நாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் மாடுகள் எல்லாம் கமலை ஏற்றங்கள் இறைக்க கால் ஒடிய இழுத்துக் கொண்டிருந்தன. ஆனால் இன்றையதினம் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை மேலே கொண்டுவருவதற்காக தமிழக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மேகங்கள் பொய்த்துப் போகலாம். பருவக் காற்று ஏமாற்றிவிடலாம். அந்த நேரங்களில் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை மேலே கொண்டுவந்து பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டிய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்று தமிழ் நாடு முழுவதும் அமைக்கப்பட இருக்கிற மின்சாரத் திட்டத்தைப் பார்க்கிறபோது எல்லாக் கிராமங்களிலும் மின்சாரக் கம்பிகள் போய் ஊடுருவ வேண்டும். மின்சாரக் கம்பிகள் இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாது. இன்னும்

[1971 டிசம்பர் 4

[திரு. கா. வேழவேந்தன்]

சொல்லப்போனால் படத்தயாரிப்பாளர்கள் கூட, புராணப் படங்கள் எடுக்கவேண்டிய நேரத்தில் எந்தக் கிராமத்திற்கும் போக முடியாது என்ற நிலையை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். உலகத்தின் சுற்றளவு எவ்வளவு இருக்கிறதோ அதேமாதிரி ஐந்து முறை சுற்றிவந்தால் எவ்வளவு நீளம் இருக்குமோ அந்த அளவிற்கு மின்சாரக் கம்பிகளை தமிழ் நாடு முழுவதும் இன்று நாம் அமைத்திருக்கிறோம். இதைப் பார்க்கின்ற நேரத்தில், இது மகத்தான சாதனை என்றுதான் சொல்ல விரும்புகிறேன். அந்த வகையில் பசுமைப் புரட்சியை இந்த மின்வாரியம் சிறந்த முறையில் ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக அந்தத் துறையோடு தொடர்புள்ள அமைச்சருக்கும், அந்த நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தி, சிறந்த பணியாற்றிடும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த அமைச்சரவைக்கும் என்னுடைய பணிவான பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறேன்.

இந்தத் துறையின் தலைவரிடத்தில் 84,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று நம்புகிறோம். இன்றைக்கு இவர்கள் தந்திருக்கும் திட்டங்களின் மூலம் இன்னும் 25,000-க்கு அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பேசும்போது, தொழிலாளர் வர்க்கத்தை மறக்க வேண்டாம் என்கிற கருத்தைச் சொன்னார்கள். இந்திய அரசாங்கத்தால் வேஜ் போர்டுகள் கொண்டு வரப்பட்ட போது, மின்சார வேஜ் போர்டில் நான்கு கோடி ரூபாய் தந்தது முதன் முதலில் தமிழக அரசுதான் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு வயல்களில் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு, 25 காசுகள் உயர்த்திக் கொடுத்து, மாதம் அவர்களுக்கு 7½ ரூபாய் அதிகம் கிடைக்கும் வகையில் தமிழக அரசு உத்தரவு போட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது. ஆனாலும் ஏறிக் கொண்டிருக்கும் விலைவாசிகளைப் பார்க்கும்போது, எவ்வளவு கொடுத்தாலும் அவர்களுக்கு நிறைவு இல்லை என்கிற நிலைதான் இருக்கிறது. ஆனாலும் மின்சார வாரியம் நட்டத்தில் நடக்கிறது என்பதையும் நாம் மறக்க முடியாது. கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு அதிகமான ஊதியமும் கொடுக்க வேண்டும் என்றால் அது சற்று சிரமம் தான். நட்டத்தில் ஓடும் வாரியத்தில் போனஸ் கொடுக்கக் கூடாது என்கிற சட்டம் இருக்கிறது. இருந்தாலும், தமிழக அரசு 5 சதவிகிதம் போனஸ் தொழிலாளர்களுக்குத் தந்திருக்கிறது. இவையெல்லாம் பாராட்டத் தக்கவை தான் என்றாலும், எதிர்த் தரப்பிலுள்ளவர்கள், இன்னும் வருவாயை எப்படியெல்லாம் பெருக்கலாம் என்பதற்கான யோசனைகளைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 டிசம்பர் 4]

[திரு. கா. வேழவேந்தன்]

இன்றைக்கு இந்த வாரியம் சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும், தங்கள் ஆலோசனைகளை எஸ்.ஈ. மட்டத்தில் குழுக் கூட்டங்கள் போட்டு எடுத்து வைப்பதற்கான முறையில் அவையெல்லாம் முறையாக நடைபெறுகின்றன. சட்ட மன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்வதும், அதைச் செயல்படுத்துவதும் நல்ல வழக்கமாக இருக்கிறது. இந்த முயற்சிகளைச் செய்திருக்கிற அமைச்சர் அவர்களை முழுக்க முழுக்கப் பாராட்டுகிறேன்.

என்னுடைய யோசனைகளாக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களுக்கெல்லாம் மின் விசை கொடுத்திருக்கிறோம் என்றாலும், இன்னும் சில கிராமங்களில், பல்புகள் கெட்டு விடுகின்றன என்ற செய்திகள் வருகின்றன. அப்படிப்பட்ட நிலைகளில் ஊராட்சிகளே பல்புகளை வாங்கிப் பொருத்திக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும். இன்னும், ஊராட்சிகள் தனி மீட்டர் வைக்க வாரியம் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

பம்பு செட்டுக்களைக் கொடுப்பதில் தீவிரம் இருக்கிறது என்றாலும், சில விவசாயிகள் விண்ணப்பம் போட்டு, 5, 6 மாதங்கள் ஆகியும், இப்பொழுது அவர்களுடைய பேப்பர் எங்கேயிருக்கிறது என்று தெரியாமல் அவர்கள் திரும்பத் திரும்பச் சட்ட மன்ற உறுப்பினர்களைக் கேட்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைக் கேட்கிறார்கள். இப்படி ஆறு மாதங்களுக்கு மேல் ஆன விண்ணப்பங்களைப் பார்த்து, அவர்களுக்கு 'உங்கள் விண்ணப்பம் இன்னின்ன காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, இன்ன சிக்கல் இருக்கிறது' என்கிற விவரம் கொடுத்து கடிதம் அனுப்பினால் நலமாக இருக்கும். வாரியத்திற்கு கூடுதலான வருவாய் இல்லாததால், உடனடியாக பம்பு செட்டுக்கள் கொடுக்க முடிவதில்லை. ஆனால் அது விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. அவர்கள் எங்களைக் கேட்கிறார்கள். இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிற கும்மிடிப்பூண்டி செக்ஷன் விரிவானதாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் இந்த மின்சார வாரியம் தமிழகம் முழுவதையும் ஒளிமயமாக்கப் போகிறது. முதலிலே ஒரு வீட்டிலே நுழைந்ததும், வீட்டிலே விளக்குத்தான் போடுகிறார்கள். அதேபோல் நாட்டில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க அரசு விரும்புகிறது. ஏழை எளிய அரிசனங்களின் குடியிருப்புக்களில் ஒளி பெருக வேண்டும் என்று. 1972-க்குள் இவ்வளவு பரந்த மாநிலத்தில் முடிக்க

[திரு. கா. வேழவேந்தன்]

வேண்டும் என்று நாம் மிகச் சிறப்பான வகையில் நிறைவேற்றி வருகிறோம். இது சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அமைச்சரவைக்கும், அதிகாரிகளுக்கும் என்னுடைய பணிவான பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : பெருமதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மின்சார அமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற மின்சார வாரிய வரவு-செலவுத் திட்டத்தை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், கடந்த 4, 5 ஆண்டுகளில் மின்சாரம் எந்த அளவில் அதிகமாக கிராமங்களுக்கும் சென்று ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது, எந்த அளவில் மின் வேகத்தில் வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அந்த அளவில் மக்களுக்கு நன்மைகளைச் செய்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. தொழில் துறையானாலும் சரி, வேறு துறையானாலும் சரி, தமிழகத்தில் அண்மையில் பசுமைப் புரட்சிக்கு இந்தத் துறை மூலாதாரக் காரணமாக இருந்திருக்கிறது. பசுமைப் புரட்சியை உண்டுபண்ணி நல்ல முறையில் செயல்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வளர்ச்சி போதுமா என்றால், போதாது.

ஒரு நாட்டின் தொழில் வளமும், விவசாய வளமும் பெருக வேண்டும் என்றால், நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்றால், நாட்டின் 'பவர்' என்று சொல்வார்களே, சக்தி, அந்த சக்திதான் தேவை. அது மின் சக்தியாக இருந்து, தமிழகத்தில் 5 ஆண்டு காலத்தில், மின் சக்தி ஏராளமாக வளர்ந்திருக்கிறது. தொழில் துறைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த முன்னேற்றத்தைவிட, அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சென்ற ஆண்டு மட்டும், நம்முடைய மின் வாரியம், 61,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறது. மொத்தமாக 5 லட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், சென்ற ஆண்டு மட்டும் காட்டியிருக்கும் சாதனை 61,000. ஆகவே, நிச்சயமாக இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இதற்கு முன்னால் இருந்ததைவிட ஏழு மடங்கு வேலை ஒரே ஆண்டில் செய்திருக்கிறார்கள். மொத்தம் ஏழு பங்கில் இந்த ஆண்டு மட்டும் ஒரு பங்கினைச் செய்திருக்கிறார்கள். இதற்காக நிச்சயமாக இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளையும், இளமைத் துடிப்பு உள்ள அமைச்சரையும். இத்துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் முதல்வரையும், இந்த அரசையும் நிச்சயமாக ஏழை. எளிய. பாமர விவசாய மக்கள் . பாராட்டத் தவற மாட்டார்கள். அவர்களுடைய பாராட்டுதல்களை என்றென்றும் தமிழக அரசு பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னும் ஒன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். யுத்த நெருக்கடி பிரகடனம் செய்யப்பட்டி



[திரு. மா. வெ. கரிவேங்கடம்]

ருக்கிறது. அதன் காரணமாக வேலைகள் நடப்பதற்கு குந்தகம் ஏற்படுமோ என்கிற அச்சம் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துறையைச் சேர்ந்தவர்களை, இந்த நெருக்கடியைக் காட்டி, வேலைகள் நிறுத்தப்பட்டால், அது மக்களைப் பாதிக்கும். ஆகவே இந்த மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், நெருக்கடி நிலையைக் காட்டி, வேகத்தைக் குறைத்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கூடுமானால், வேகத்தை அதிகப்படுத்தாவிட்டாலும், இருப்பதைக் குறைக்கக் கூடாது என்கிற வேண்டுகோளை விடுக்கிறேன்.

ஒரு 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால், மின் ஒளி பெற்ற கிராமங்கள் 28,000. அதாவது 1966-67-ல் அந்த நிலை. 1970-71—ல் மொத்தமாக தமிழகத்தில் ஒளி பெற்ற கிராமங்கள் 54,000. ஆகவே, இந்த நான்கு ஆண்டுகளில் நம்முடைய அரசு 26,000 கிராமங்களுக்கு மின் ஒளி கொடுத்திருக்கிறது. அதே நேரத்தில் முன்பு இருந்த அரசு மொத்தமாகக் கொடுத்திருந்தது 28,000 கிராமங்கள்தான். ஆகவே, நம்முடைய அரசு கிராம மின் விளக்கு விஸ்தரிப்புத் திட்டத்தில் முன் அணியில் நிற்கிறது. அங்கும் இங்குமாக குறைகள் இருக்கலாம். ஆனால் மின்சாரத் துறையை எடுத்துக் கொண்டு பார்க்கின்ற நேரத்தில், மற்றத் துறைகளை விட, அதிகமான கவனம் செலுத்தி, அதிகாரிகளுக்குக் குறைகளை எடுத்துச் சொல்லும்போது, அதைக் கவனிக்கிறார்கள் குறைகளைக் களைகிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். குற்றங்குறைகளை எடுத்துச் சொல்லும்போது, மற்ற, மற்ற துறைகளைப் பற்றியும் சொல்லுகிறோம். இத்துறைப்பற்றியும் சொல்லுகிறோம். மற்ற துறைகளில் குற்றங்குறைகளைக் களைவதற்கு சிறிது தாமதமானாலும், இத்துறையைப் பொறுத்தவரையில் அவற்றைக் கவனிப்பதில் தாமதம் இன்றிச் செய்கின்றார்கள். இதுவிஷயத்தில் இத்துறையினர் மிக விரைவாகச் செயல்படுகின்றார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அரிசனங்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு, விசேஷ கவனம் செலுத்தி, அது லாபகரமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மின் இணைப்புக் கொடுப்பதில் தீவிரமாகச் செயல்படுவது குறித்து பெருமை கொள்ளலாம். சென்ற ஆண்டு மட்டும் ஏறத்தாழ 1,176 அரிசனக் காலனிகளுக்கு விசேஷ சலுகைகளைக் கொடுத்து மின் இணைப்புகளைக் கொடுத்து தெருவிளக்குகளைப் பொருத்தியிருக்கின்றார்கள். ஏற்கெனவே 3,890 கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும் சென்ற ஆண்டிலே மட்டும் 1.176 காலனிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது முன்பு கொடுக்கப்பட்டவை போல மூன்று மடங்கு கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளே, கின்றது. இது மொத்தத்தில் 25 சதவிகிதம் என்று ஆகிறது. நிதிநிலை பயிக்கப்

அடுத்து மின் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் நா' ந்துக்களை நிலையில் 1,220 மெகாவாட்ஸ் மின்சக்தியை கிறோம். இதிலேகூட தமிழகம் ஒரு பெரிய சாதனை

[திரு. மா. வெ. கரிவேங்கடம்]

இன்றது என்று சொன்னால் அது மிகையாகாது. முன்பு 1,070 மெகா வாட்ஸ் மின்சக்தி தான் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் சென்ற ஆண்டில் மட்டும் பல்வேறு மின் இணைப்புகளை ஏற்படுத்தியதாலும் நீர் நிலை மின்சார உற்பத்தியினை அதிகப்படுத்தியதாலும் 150 மெகாவாட்ஸ் மின்சாரத்தை நாம் அதிகமாக உற்பத்திசெய்திருக்கிறோம். ஆக, 12.5 சதவிகிதம் இதிலும் அதிகமாகியிருக்கிறது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். ஆக கிராமங்களுக்கு மின்சப்ளையை விஸ்தரிப்பது, விசை ஏற்றங்களுக்கு இணைப்புத் தருவது, போன்ற துறைகளில் சாதிக்க முடியாத சாதனையை இத்துறை சாதித்து இருப்பது பாராட்டுக்குரியதாகும். ஆனாலும் நமக்குத் தேவையான மின்சக்தியை நாமே உற்பத்திசெய்து கொள்ளுகிறோமா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு அப்போது இருந்த ஆட்சியாளர்கள் ஹொகேனகல் பகுதியில் ஒரு பெரிய ஆய்வினை நடத்தி, அங்கு காவிரியின் குறுக்கே ஓர் அணைகட்டி ரூ. 55 கோடி செலவில் 840 மெகாவாட்ஸ் அளவிற்கு மின்சாரத்தினை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு திட்டத்தினைத் தீட்டியிருந்தார்கள். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு மைசூர் அரசின் அனுமதி வேண்டும் என்று அன்றைக்குச் சொல்லப்பட்டு, இது இன்று வரையிலும் நிறைவேற்றப்படாமல் இருந்துவருகிறது. எனவே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் நமக்கு வேண்டிய அளவிற்கு மின்சாரத்தினை நாம் உற்பத்தி செய்துகொள்ள முடியும். எனவே இதுபற்றி மத்திய அரசு தலையிட்டு இதை நிறைவேற்றினால் நமக்கு வேண்டிய மின் சக்தியில் மொத்தத்தில் 60 அல்லது 70 சதவிகிதத்தினை நாமே உற்பத்தி செய்துகொள்ளுவதாக அமையும். மற்ற மற்ற திட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது இதற்காக ஆகும் செலவானது அதிகமில்லை, மிகச் சிக்கனமானது என்றுதான் சொல்ல வேண்டும். எனவே, இதில் மத்திய அரசு தலையிட்டு மைசூர் அரசின் அங்கீகாரத்தினைப் பெற்றுத் தரவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மின்துறையில் பணிபுரிவோருக்கு ஆண்டுதோறும் போனஸ் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, நான்கு சதவிகிதம் போனஸ்கூட வழங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டில் அத்துறையிலுள்ள ஊழியர்களுக்கு வேறு பல சலுகைகளாக
களையு..ம்பளவிகிதங்களை மாற்றியமைத்த முறையிலும் ஏறத்தாழ
ஆக்கமு ஆண்டில் பத்துகோடி ரூபாய் என்ற அளவிற்கு மின் வாரிய
நிச்சயம..கு அரசும் அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. சொல்லப்
தவற மாட மற்ற மற்ற துறைகளில் உள்ள ஊழியர்கள் கூட
றும் தமிழக ..டும் அளவிற்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்
வித்துக் கொள்கி..தை நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்பு
விக்க விரும்புகிறே



[திரு. மா. வெ. கரிவேங்கடம்]

அடுத்து, தருமபுரியில் இத்துறைக்கான மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கான கட்டடத்திற்கு என்று மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் இருக்கிறது. இக் கட்டடத்தைக் கட்டுவதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தருமபுரி மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில், அது இன்னும் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகிறது. இதை முன்னேற்றம் அடையச் செய்வதற்காக இத்துறை அரும்பாடுபட்டு ஆகவேண்டும். பல பகுதிகளில் இம்மாவட்டத்தில் மின்துறை வேலைகள் விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. அங்கே பல இளநிலை பொறியாளர்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு அங்கே ஆறு இளநிலை பொறியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று இருந்தும், இன்னும் அவர்கள் பதவியில் அமர்த்தப்படவில்லை. எனவே, இது விஷயத்திலும் கவனம் செலுத்தி பத்து அசிஸ்டெண்டு எஞ்சினியர்களையாவது உடனடியாக நியமிக்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே பிக்ளிமலை இருக்கிறது. இதைச்சார்ந்து ஆறு ஏழு கிராமங்கள் இருக்கின்றன. நமது மாநிலத்திலேயே 72-க்குள் அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுத்து விடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. எனவே இந்த பிக்ளி கிராமங்கள் ஆறு ஏழு கிராமங்களுக்கும் மின் இணைப்பு தந்து தெருவிளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தருமபுரி மாவட்டத்திலே பாலக்கோடு தாலுக்கா மிகப் பெரிய வட்டமாகும். இன்றுள்ளபடி மின்துறை அலுவலகங்கள் அனைத்துமே தருமபுரியில் அமைந்திருக்கின்றன. உதாரணமாக ஏ.இ. (கன்ஸ்ட்ராக்ஷன்) தருமபுரியில்தான் இருக்கிறார். பாலக்கோடில் இல்லை. பாலக்கோடு ஏறத்தாழ 20, 25 மைல் சுற்றுப்புறமுள்ள தாலுக்கா. எனவே அங்கே ஏ.இ. (கன்ஸ்ட்ரக்ஷன்) ஓ. அண்டு எம். ஆகியவர்களுடைய அலுவலகங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு வேண்டிய புள்ளிவிவரங்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருக்கின்றன. எனவே பாலக்கோட்டில் இவற்றை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துறை மேலும் மேலும் இதுபோன்று நல்ல முறையில் செயற்பட்டு, நாட்டின் விவசாய தொழில் துறைகள் முன்னேற்றம் அடைவதற்கு உதவியாக இருக்க வேண்டும் என்று கூறி, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம், நன்றி.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் இந்த நேரத்தில், எனது ஒரு சில கருத்துக்களை இச்சபையின் முன்பு வைக்க விழைகிறேன்.

[திரு. எம் ஏ. லத்தீப்]

இந்தியாவிலேயே மின்சாரத்துறையில் நமது தமிழகம் தான் தலைசிறந்து நிற்கின்றது என்ற உண்மையை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லத் தேவையில்லை. இன்றையதினம் நமது மாநிலத்தில் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் மின்சார இணைப்பு முழுமை பெற்று வருகிறது என்பதை இன்றைக்கு நாடும் ஏடும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்சார இணைப்பு முழுமை பெற்றுவிட்டது என்று இன்றைக்கு அறிவிப்பு தரப்பட்டு இருக்கின்றது. இவ்வளவு சீக்கிரத்திலே நமது அரசு எனது மாவட்டத்தில் மின் இணைப்புகளைப் பொறுத்தமட்டில் முழுமையை ஏற்படுத்தித் தந்து இருப்பதுபற்றி நான் எனது மாவட்டத்தின் சார்பிலே இந்த அரசுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

நாம் மின்சாரத்திலே முழுமை பெற்றிருக்கிறோம் என்பது உண்மையிலேயே நாம் நாட்டுக்கு ஒரு ஆக்கபூர்வமான சேவை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஒரு நாட்டினுடைய பாதுகாப்புக்குக்கூட மின்சாரம் பின்னணியாக, அடிப்படையாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

நம் நாட்டிலே பசுமைப் புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த பசுமைப் புரட்சியிலே மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் இந்தப் பசுமைப் புரட்சி இன்னும் மதிக வேகமாக நடைபெற வேண்டுமானால். நம்முடைய விசையேற்றங்களுக்கு—பம்புசெட்டுகளுக்கு—உடனடியாக, பம்பு செட்டுகள் அமைத்தவுடன் மின்சார இணைப்பு கொடுத்திட வேண்டும். இன்று நம்முடைய மாநிலத்தில் எத்தனையோ புதிய விசையேற்றங்களை நம்முடைய விவசாயிகளுக்கு விவசாயத்துறை வாயிலாக செயலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம்; புதிய முறையிலே மிகப் பெரிய எண்ணிக்கையிலே நம்முடைய மாநிலத்திலே நிறுவியிருக்கிறோம். ஆனால் விவசாயிகளுக்குச் சில குறைகள் இருந்து வருகின்றன. அது என்னவென்றால், விவசாயிகள் பம்பு செட்டுகள் அமைத்தவுடன் உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் பம்புசெட்டுகளை அமைத்து விடுகிறார்கள். அப்படி அமைக்கப்பட்ட பம்புசெட்டுகள் பல, மின்சார இணைப்பு கொடுக்கப்படாததால் துருப்பிடித்துக் கெட்டுப் போகின்றன. அந்த முறை மாற்றப்பட வேண்டும்; அகற்றப்பட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை மிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் பாலாறு ஓடுகிறது. பாலாறு பேசின் ரூல்ஸ் என்று ஒரு நியதி வைத்திருக்கிறார்கள். அந்த நியதியின் அடிப்படையிலே அங்கெல்லாம் உடனடியாக மின்சார இணைப்புக் கொடுக்கப்படுவதில்லை. காரணம் என்ன



[திரு. எம் ஏ. லத்தீப்]

வென்றால், பம்புசெட்டுகள் அமைக்கப்பட்டவுடன் அதிகாரிகள் வருகிறார்கள். அவர்கள் வந்து பாலாறு பேசின் ரூல்ஸ்க்கு உட்பட்டிருக்கிறதா என்று பார்க்கிறார்கள். அதற்கு உட்பட்டிருந்தால் தான் மின்சார இணைப்புக் கொடுக்கிறார்கள்; இல்லையென்றால் இணைப்பு கொடுக்க மறுக்கிறார்கள். விவசாயிகள் செலவு செய்து உடனடியாக பம்புசெட்டுகளை அமைத்து விடுகிறார்கள். பாலாறு பேசின் ரூல்ஸ் நியதிக்கு உட்பட்டிருந்தால்தான் மின்சார இணைப்பு கொடுக்கிறார்கள். அந்த நியதி ஒரு மைலுக்கு அல்லது இரண்டு மைலுக்கு உட்பட்டிருந்தால் பரவாயில்லை.

உதாரணமாக, வாணியம்பாடியில் பாலாறு ஓடுகிறது; வாணியம்படியிலிருந்து 12 மைல் தூரத்தில் ஆலங்காயம் இருக்கிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள பம்புசெட்டுகளுக்குக்கூட மின்சார இணைப்பு கொடுக்க மறுக்கப்படுகிறது. காரணம் கேட்டால் பாலாறு பேசின் ரூல்ஸ் மீறப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இதை அரசு உடனடியாக கவனித்து ஆவன செய்ய வேண்டும். பலமுறை இந்த சட்ட மன்றத்திலே நானும், எனது மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களும் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இதுவரையிலே அது கவனிக்கப்படவில்லை. ஆகவே குறைந்த அளவில், 5 எச்.பி. அளவிலான பம்புசெட்டுகளை அமைக்கவாவது இந்த ரூல்ஸ் கொஞ்சம் ரிலாக்ஸ் செய்யப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் பல நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு பாலாறு படுகையில் எல்லாம் நாம் விசையேற்றங்களை உடனடியாக ஏற்படுத்தி, பசுமைப் புரட்சியை மேலும் மேலும் அதிகப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கே அதிகமாக மலைப் பகுதி இருக்கிறது. அங்கே பல கிராமங்கள் இருக்கின்றன. ஜவ்வாது மலை இருக்கிறது. அதில் மூன்று பெரிய பகுதிகள்-மூன்று நாடுகள் இருக்கின்றன. புங்கம் நாடு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு என்பன அவை. புதூர்நாடு பகுதியில் உள்ள கிராமங்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மற்ற பகுதிகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. சென்ற வாரம் கூட நான் அங்கு சென்று பார்த்தேன். கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றன. ஆனால் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. எனவே புதூர் நாடு பகுதிக்கும், மற்ற பகுதிகளுக்கும் உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏலகிரி மலைப் பகுதியில் ஏற்கெனவே மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று ஜவ்வாது மலைப் பகுதிகளுக்கும்—கிராமங்களுக்கும்—மின்சார இணைப்பு கொடுக்கப்பட வேண்டும். ஜவ்வாது மலைப்பகுதி கிராமங்களில் பெரிய வீடுகள் கிடையாது; சிறிய குடிசைகள்தான் உள்ளன. அதை

[திரு. எம் ஏ. லத்தீப்]

கொல்லக்கொட்டாய் என்று நாம் நினைக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் 100 வீடுகள், 200 வீடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமமும் ஒரு மைலுக்குள் அல்லது இரண்டு மைலுக்குள் இருக்கின்றன. அவை எல்லாவற்றிற்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

உதாரணமாக பூங்குளம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைச் சேர்ந்த பல்பநத்தம் என்ற ஊர் பூங்குளத்திலிருந்து இரண்டு மைல் தள்ளி இருக்கிறது. அதற்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. கேட்டால், அது பூங்குளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராமம். அதை தனியாகக் கவனிக்க முடியாது என்று சொல்கிறார்கள். அங்குள்ள மக்களும் விவசாயத்திற்கும் மற்றும் பல காரியங்களுக்கும் மின்சாரத்தை விரும்புகிறார்கள். இவைகளை எல்லாம் கூட அரசு கொஞ்சம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொரு காரியத்தை இந்த அரசுக்கு குறிப்பாக அரிசன நலத்துறை அமைச்சர் டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களுக்கு ஒன்றை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஊராட்சிகளிலே உள்ள கிராமங்களில் ஏழை அரிசனங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அதற்காகும் செலவை ஊராட்சி மன்றங்களே ஏற்கமுடியாத நிலையில் அவை பல சிறிய கிராமங்களைக் கொண்டனவாக இருக்கின்றன. ஏலகிரி மலையில் மலைவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் கல்வி அறிவு இல்லாதவர்கள். வெளியுலக மக்களோடு அதிகத் தொடர்பு இல்லாதவர்கள்; அவர்கள் 3 அணா. முக்கால் ரூபாய்க்கு உழைத்து கூலி வாங்கக்கூடியவர்கள். அவர்களிடமிருந்து வரி பெற்றுத்தான் மின்சார வசதி செய்துகொடுக்க வேண்டும் என்றில்லாமல், நம்முடைய அரிசன் வெல்பேர் பண்டிலிருந்து இந்தச் செலவை ஏற்றுக்கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:** ஊராட்சி மன்றத்தில் அரிசன மக்கள் வாழ்கின்ற அரிசன காலனிகளுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாய் அரசாங்கம் மின்சார வாரியத்திற்குக் கொடுக்கிறது. எனவே அப்படிப்பட்ட கிராமங்களில் எவைகளுக்கு கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இந்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாக் கிராமங்களுக்கும் அரசாங்கச் செலவில் மின்சார இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மலை ஜாதியினர், அரிசன மக்கள் இவர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு, அரிசன காலனிகளுக்கு அரிசன நல நிதியிலிருந்து உதவி செய்தால் போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



[திரு. எம் ஏ. லத்தீப்]

மலைஜாதி மக்கள், ஏழை அரிசன மக்கள் வாழ்கின்ற வீடுகள் மின்சார இணைப்பு கொடுப்பதற்கான அளவிலே அந்த வீடுகள் இல்லை. அவர்களுடைய வீட்டிற்கு உள்ளே சென்று விளக்கு போடாவிட்டாலும், அவர்கள் வாழ்கின்ற தெருக்களிலே பெரிய விளக்குகளைப் போட்டு, அவர்களுக்கும் இந்த உலகத்தின் இருள் மாறி ஒளி கிடைக்க வேண்டுமென்ற வகையில் இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது அரசு. இதை சென்னையிலே பார்க்கிறேன். மற்ற இடங்களிலும் பார்க்கிறேன். அதற்காக இந்த அரசுக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன். இந்த முறையை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற எனது கோரிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பக 1.30

அடுத்து, ஊராட்சி மன்றம், ஸ்தல ஸ்தாபன ஆட்சி மூலமாக விநியோகப்படுத்தப்படுகிற மின்சாரத்திற்கும் மீட்டர்களை அமைக்க வேண்டும். முனிசிபாலிடி, லோகல் பாடிஸ் சபைக்கு மீட்டர்களை அமைக்க வேண்டும். சாதாரணமாக ஒரு கிராமத்திற்கு 500 விளக்குகள் போட்டிருப்பார்கள். சில நாட்களில், சில தெருக்களில் விளக்கு எரியாது. பல இடங்களில் சில பல்புகள் எரியாது. ஆயினும் அந்த ஊரில் எந்த பல்புகள் என்று பார்த்துத்தான் மின்சாரக் கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படியின்றி மீட்டர்களை அமைத்துவிட்டால் எத்தனை மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதோ அத்தனைக்கு சார்ஜ் வசூல் பண்ண முடியும். அப்படி வசூலிப்பதுதான் நியாயமாகவும் இருக்கும். இன்றையதினம் பல உள்ளாட்சி மன்றங்களில் மின்சாரக் கட்டணத்தைக் கூட கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அதைக் கவனித்து அவர்கள் உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் வகையில் மீட்டர்கள் பொருத்தப்பட்டிடல் வேண்டும்.

அதேபோல மின்சாரத் துறையில் டொமெஸ்டிக் பர்பஸ் இண்டஸ்ட்ரியல் பர்பஸ் என்று பிரித்து மின்சாரக் கட்டணம் விதிக்கிறார்கள். சிறுதொழில்கள் வளர்வதற்கு மின்சாரத்துறை எந்த எந்த வகையில் உதவி செய்கிறது என்பதுதான் கேள்வி. தொழில்துறை முன்னேறுவதற்கு, சிறு காட்டேஜ் இண்டஸ்ட்ரி வளர்வதற்குப் போதுமான ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். சில தவறுகள் கூட நடந்துவிடுகின்றன. சிறு தொழில்களுக்கு அளிக்கப்படுகிற மின்சாரத்திற்குக் கூட டொமெஸ்டிக் பர்பஸ் ரேட் போட்டு வருகிறார்கள். இதுபற்றி எல்லாம் பலவிடங்களில் குறை சொல்லப்பட்டு, ஆட்சேபங்கள் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. இதிலும் அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. எம் ஏ. லத்தீப்]

மின்சாரத் துறையில் நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் அடையவில்லை. அதுவும் குறிப்பாக, நமது அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் நாற்பது ஆண்டுகளில் சாதிக்க முடியாத மாபெரும் புரட்சியை மின்சாரத் துறையில் 4 ஆண்டுகளுக்குள்ளே செய்திருப்பதை உண்மையிலேயே பாராட்ட வேண்டும்—உண்மையை ஒப்புகொள்கிற எல்லோரும் அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறார்கள், நானும் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிகின்றன. மீண்டும் பேரவை திங்கட்கிழமை-டிசம்பர் 6-ஆம் தேதி காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

@ 55. Notification issued with G.O. Ms. No. 1676, Education, dated the 26th October 1968, in regard to approval of the list of all the Parks and Play-fields set out in the area within the jurisdiction of the Melapalayam Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Playfields and Open Sapecs (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959)].

@ 56. Notification issued with G.O. Ms. No. 1045, Labour, dated the 31st August 1971 in regard to certain amendments to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [Laid on the table of the House under section 43 (4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

@ 57. Notification issued with G.O. Ms. No. 860, Home, dated the 26th March 1971, in regard to concessional rate of tax in respect of the ambulance van MDL 782, belonging to Victoria Hospital, Manapad, Tirunelveli district. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 58. Notification issued with G.O. Ms. No. 1536, Home, dated the 5th June 1971, in regard to exemption from payment of tax leviable in respect of certain vehicles belonging to the Co-operative for American Relief everywhere, Incorporated, Tamil Nadu. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



@ 59. Notification issued with G.O. Ms. No. 2351, Public (Services-A), dated the 28th July 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, relating to exclusion of the post of Private Secretary to Chief Minister from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

@ 60. Notification issued with Roc. No. 27390/70-P1, dated the 5th March 1970, in regard to amalgamation of T. Agaram in the Pennadam Town Panchayat in South Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 61. Notification issued with G.O. Ms. No. 1775, Home, dated the 30th June 1971, in regard to exemption from payment of tax leviable in respect of a scooter bearing registration number MSQ 2080, belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 62. Notification issued with G.O. Ms. No. 2159, Rural Development and Local Administration, dated the 21st September 1971, in regard to date of coming into force of certain sections of the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Act, 1971. [Laid on the Table of the House under section 41 of the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Act, 1971 (Tamil Nadu Act 22 of 1971).]

@ 63. Notification issued with G.O. Ms. No. 1652, Home, dated the 19th June 1971, in regard to exemption from payment of tax in respect of a tractor and trailer belonging to the Holy Family Hansenorium, Fatima Nagar, Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

@ 64. Notification issued with G.O. Ms. No. 2158, Agriculture, dated the 3rd August 1971, in regard to establishment of regulated Markets in Chingleput district to provide facilities for the purchase and sale of groundnut. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 65. Notification issued with G.O. P. No. 2358, Revenue, dated the 26th August 1971, in regard to exemption from liability to tax on the sale of toddy. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

@ 66. Notification issued with G.O. Ms. No. 70, Excise and Prohibition, dated the 30th September 1971, in regard to appointment of all Police Officers and above the rank of Sub-Inspector of Police to perform the acts and duties mentioned in sections 43 to 56 of the Tamil Nadu Abkari Ordinance, 1971. [Laid on the Table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

& 67. Notification issued with G.O. Ms. No. 1875, Rural Development and Local Administration, dated the 11th August 1971 making rules for the election of Members of the Taxation Appeals Committee of the Municipal Corporation of Madurai. [Laid on the Table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

& 68. Notification issued with G.O. Ms. No. 1194, Rural Development and Local Administration, dated the 15th May 1971 making the Madras Corporation Superior Service Leave Rules, 1969. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

& 69. Notification issued with G.O. Ms. No. 38, Excise and Prohibition, dated the 30th August 1971 making the Tamil Nadu Arrack (Levy of Excise Duty) Rules, 1971 and in regard to the rate of excise duty for arrack for the period from 30th August 1971 to 31st August 1972. [Laid on the Table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

& 70. Notification issued with G.O. Ms. No. 1953, Agriculture, dated the 7th July 1971, in regard to regulation of trade in sugarcane jaggery in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

& 71. Notification issued with G.O. Ms. No. 2438, Home, dated the 4th September 1971, in regard to concessional rate of tax in respect of a tractor and trailer belonging to Sri Parama Kalyani Education Society, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]



& 72. Notification issued with G.O. Ms. No. 1565, Home, dated the 9th June 1971, in regard to exemption from payment of tax in respect of vehicles belonging to the Co-operative for American Relief Everywhere, the United States Technical Co-operation Mission and the United Nations Agencies. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 73. Notification issued with G.O. Ms. No. 2057, Home, dated the 26th July 1971, in regard to exemption from payment of tax in respect of two vehicles belonging to Schieffelin Leprosy Research Sanatorium, Karigiri, North Arcot district. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 74. Notification issued with G.O. Ms. No. 1919, Home, dated the 15th July 1971, in regard to concessional rate of tax in respect of the ambulance MSL 4123, belonging to the Missionaries of Charity, Madurai. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 75. Notification issued with G.O. Ms. No. 1360, Rural Development and Local Administration, dated the 5th June 1971 in regard to certain amendments to rules relating to limit of law charges to be incurred by Panchayats without outside sanction, published at pages 1 to 2 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 31st July 1963. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 76. Notification issued with G.O. Ms. No. 1883, Rural Development and Local Administration, dated the 13th August 1971, in regard to certain amendments to the conduct of Election of Members of Town Panchayats Rules, 1964, Tamil Nadu Panchayats (Conduct of Election of President of Town Panchayats) Rules, 1970 and the Tamil Nadu Panchayats (Election of Vice-President) Rules, 1961. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 77. Notification issued with G.O. Ms. No. 1884, Rural Development and Local Administration, dated the 13th August 1971, in regard to certain amendments to the Tamil Nadu Panchayat Union Councils (Election of Chairmen and Vice-Chairmen) Rules, 1960. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 78. Notification issued with G.O. Ms. No. 942, Rural Development and Local Administration, dated the 17th April 1971, in regard to certain amendments to the rules relating to receipts and expenditure of Panchayat Union Councils published in the *Tamil Nadu Government Gazette*, dated the 14th February 1962, as subsequently amended. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 79. Notification issued with G.O. Rt. No. 1703, Revenue, dated the 21st September 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Principal, St. George's School and Orphanage, Madras on 16th October 1971 at Safire Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Taml Nadu Act X of 1939).]

£ 80. Notification issued with G.O. Ms. No. 1774, Home, dated the 30th June 1971, in regard to exemption from payment of tax in respect of a truck trailer belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

£ 81. Notification issued with G.O. Ms. No. 1606, Rural Development and Local Administration, dated the 22nd August 1970 in regard to an amendment to the rules relating to the proceedings of Panchayats and Committees of Panchayats, published at pages 15 to 16 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette,* dated the 10th May 1961. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 82. Notification issued with G.O. Ms. No. 441, Co-operation dated the 25th September 1971, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. published at pages 1 to 50 of the Supplement to Part V of the *Tamil Nadu Government Gazette,* dated the 4th September 1963, as subsequently amended. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

£ 83. Notification issued with G.O. Ps. No. 2420, Revenue, dated the 1st September 1971, in regard to exemption from sales tax in respect of sale of service books by the Government to its servants. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]



£ 84. Notification issued with G.O. Ms. No. 1527, Agriculture, dated the 19th May 1971, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 85. Notification issued with G.O. Ms. No. 418, Co-operation dated the 8th September 1971, in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970 published at pages 1–3 of Part V of the *Tamil Nadu Government Gazette Extraordinary,* dated the 18th March 1970, [Laid on the Table of the House under section 38-A (2) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).].

£ 86. Notification issued with G.O. Ms. No. 1608, Industries (Special), dated the 1st July 1971, in regard to certain amendments to the Tamil Nadu Silkworm Seed (Production, Supply and Distribution) Rules, 1958. [Laid on the Table of the House under section 19 (4) of the Tamil Nadu Silkworm Seed (Production, Supply and Distribution) Act, 1956 (Tamil Nadu Act XXIII of 1956).]

£ 87. Notification issued with Roc. No. 28361/70-P1, dated the 6th March 1970 in regard to exclusion of certain areas from the existing Chinnababusamudram Panchayat in Villupuram taluk of South Arcot district for constitution of a separate panchayat by name "Thandavamurthikuppam". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 88. Notification issued with G.O. Ms. No. 1118, Home, dated the 23rd April 1971, in regard to an amendment to the Tamil Nadu Rectified Spirit Rules, 1959. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

£ 89. Notification issued with G.O. Ms. No. 1749, Home, dated the 26th June 1971, in regard to collection of reduced rate of tax in respect of the Lorry MDH 2762 belonging to the Lawrence School, Lovedale, Ootacamund. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931)].

£ 90. Notification issued with G.O. Ms. No. 1748, Home, dated the 26th June 1971 in regard to an amendment to Home Department Notification II-1 No. 6052 (a), dated the 9th December 1969, published in Part II—Section I of the Extra-ordinaryissue of the*Tamil Nadu Government Gazette,* dated the 30th December 1969. [Laid on the Table of the House under section 11(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931)].

B. *Reports, Notifications and Other Papers.*

@ 39. Erratum issued with Roc. No. 179515/69-P1, dated the 4th March 1970, to the notification published on pages 92-93 of Part II—Section 2 of *Tamil Nadu Government Gazette,* dated the 25th February 1970 relating to bifurcation of Andhiyur Town Panchayat.

@ 40. Erratum issued with Roc. No. 194675/69-P1, dated the 4th March 1970 to the notification published at page 96 of Part II—Section 2 of *Tamil Nadu Government Gazette,* dated the 25th February 1972, relating to bifurcation of Naduveerappattu Panchayat.

@ 41. Erratum issued with Roc. No. 192653/69-P1, dated the 12th March 1970, to the notification published at pages 450–451 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 31st December 1969, relating to exclusive of certain local areas for constitution of separate Panchayats in Kanyakumari district.

@ 42. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly from 19th June to 30th July 1971. (Fifth Assembly—Second Session).

& 43. Notification issued with G.O. Ms. No. 1848, Revenue, dated the 29th June 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the mortgage deeds to be executed in favour of the Life Insurance Corporation of India.

& 44. Notification issued with G.O. Ms. No: 1825, Home, dated the 5th July 1871, in regard to certain amendments to the Tamil Nadu Opium Rules, 1969.

& 45. Erratum issued with Roc. No. 192674/69-P1, dated the 12th March 1970 to the notification published at pages 458–459 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 31st December 1969, relating to exclusion of local areas for constitution of separate Panchayats in Kanyakumari district.

& 46. Erratum issued with Roc. No. 192657/69–P1, dated the 12th March 1970 to the notification published at pages 467–469 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated 31st December 1969, relating, exclusion of local areas for constitution of separate Panchayat in Kanyakumari District.

47. The Annual Report on the activities of the District Development Councils for the year 1967–68 issued with G.O. Ms. No. 522, Rural Development and Local Administration, dated the 25th March 1970.

† 48. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1971 (with Annexure).

49. Further list of names of Members of the Assembly who have given contribution to Beggar Rehabilitation Fund.

50. Report of the Joint Select Committee on the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971).



† 51. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Financial Statement of the Tamil Nadu Electricty Board for the year 1970-71 (English and Tamil).

@ Depatched to Members on 15th November 1971.

& Depatched to Members on 25th November 1971.

ஃ Despatched to Members on 3rd December 1971.

† Despatched to Members on 2nd December 1971.

*இணைப்பு—1.*

*[10-ம் பக்கத்தில் 71-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்*

*கூடங்கள் தமிழக அரசு அனுமதியுடன் மத்திய ஆய்வுக் குழுவினால்*

*(அ) கீழ்ப்பாக்கத்தில் இருந்த இந்திய மருத்துவ மனையை அரும்பாக்கத்திலுள்ள 100 படுக்கைகள் கொண்ட அறிஞர் அண்ணா அரசாங்க இந்திய மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டு 1970-லிருந்து சித்த, ஆயுர்வேதம், யுனானி முறைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவத்திற்கு 34 படுக்கையும், ஆயுர்வேதத்திற்கு 33-ம், யுனானிக்கு 33-ம் ஆக கொடுக்கப்பட்டுள்ளது.*

*பாளையங்கோட்டையில் இந்திய மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் மட்டும் பி.ஐ.எம்; பட்டதாரிக்கானப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 30 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.*

*முனிசிபாலிடி பஞ்சாயத்து யூனியன்களின் சார்பில் 422 மருத்துவ மனைகள் சித்த, ஆயுர்வேத, யுனானி முறைகளில் மருத்துவம் செய்யப்படுகிறது.*

*திருச்சி, ராமநாதபுரம், தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம் போன்ற தலைமை மருத்துவ அலுவலகங்களில் சித்த முறைப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டு மருத்துவம் செய்யப்படுகிறது.*

*சித்த மருத்துவத்துக்கென சிறப்பாக நான்கு ஆய்வுக் கூடங்கள் தமிகழ அரசு அனுமதியுடன் மத்திய ஆய்வுக் குழுவினால் (டெல்லி) தமிழ் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை—*

*(1) பிணி நீக்கும் பரிகார ஆய்வுக் கூடம், அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனை, சென்னை.*

*(2) சித்த நூல் ஆராய்ச்சிக் கூடம், பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.*

*(3) மூலிகை வளர்ப்பு ஆய்வு கூடம் பாளையங்கோட்டை.*

*(4) மூலிகைகளை தரப்படுத்தும் கூடம், காப்டன் சீனிவாச மூர்த்தி ரிசர்ச் இன்ஸ்டிடியூட், அடையாறு, சென்னை.*

*இவைகள் இன்னும் பூர்வாங்க வேலைகளில் இருக்கின்றன.*

*(இ) இந்திய மருத்துவத் துறைக்கென தனியாக இந்திய மருத்துவ இயக்குநர் நியமிக்கப்பட்டு 1—6—1970-லிருந்து அவருடைய அலுவலகம் இயங்கி வருகிறது.*

(உ)—

| நிதியாண்டு. | அரசு வரவு-செலவுத் திட்டம். | சரியான செலவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1964-65 | 15,06,200 | 17,07,833 |
| 1965-66 | 19,45,600 | 20,56,122 |
| 1966-67 | 19,40,300 | 24,37,415 |
| 1967-68 | 20,80,100 | 24.10,066 |
| 1968-69 | 24,70,100 | 21.73,100 |
| 1969-70 | 26,76,500 | 30,48,200 |
| 1970-71 | 27,28,600 | 32,29,500 |

தெய்வீகப் பேரவை அணையர் ஆலோசனையின்படி (தஞ்சாவூர் மாவட்டத்திலிருக்கும் 14 கோவில்களும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருக்கும் ஒரு கோவிலும் சித்த மருத்துவ மனைகளை ஏற படுத்தியிருக்கின்றன. முனிசிபாலிடிகளும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் புதிதாக மருத்துவமனை ஏற்படுத்தும் போது சித்த மருத்துவத்தை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

## இணைப்பு—2.

[64-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் 1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் விவாவதத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஓ. பி. ராமன் அவர்கள் ஆற்றும் உரை—

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்ட மன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும் இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.



வேளாண்மைத் துறையிலாகட்டும், தொழில் துறையிலாகட்டும், வளர்ச்சி காண்பதற்கு மின்சக்தி இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்து நம்முடைய திட்டங்களில் மின் உற்பத்தித் திட்டங்களுக்கும் மின் பங்கீட்டுத் திட்டங்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் மூன்று நீர் மின்சார நிலையங்களும் இரண்டு அனல் மின்சார நிலையங்களுமே இருந்தன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் 156 மெகாவாட் ஆகும். முதல் திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட திறன் 256 மெகாவாட்டாக உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட திறனின் அளவு இரு மடங்காகப் பெருகி 570 மெகாவாட்டாக ஆகியது. பொதுவாகவே, மின்சக்தி உற்பத்திக் குறைவாக உள்ள நிலை; அத்துடன் மழை மிகக் குறைவாக உள்ள காலங்களில் நீர் மின்சாரத் திட்டங்களால் அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத காலத்தில் மாற்று யோசனை செய்யவேண்டி வந்தது. இந்தக் குறைப்பாட்டைப் போக்கவும். ஏற்றத் தாழ்வினை நீக்கவும், புதிதாக அனல் மின் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டு, அவை செயல்படுத்தப் பட்டன. இதன் விளைவாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 340 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் அனல் மின்சார நிலைய வேலையும் சென்னை பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நான்காவது கட்ட விரிவுத் திட்ட வேலையாக 30 மெகாவாட் உற்பத்திப் பிரிவு வேலையும், குந்தாவில் ஆறு மின் உற்பத்தி சாதனங்களும் (245 மெகாவாட்) மேட்டூர் குடைவழி நீர் திட்ட வேலையும் (200 மெகாவாட்) பெரியாறு மின் நிலையத்தில் நான்காவது பிரிவு வேலையும் (35 மெகாவாட்) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் சர்க்கார் பகுதியில் ஒரு பிரிவு வேலையும் (30 மெகாவாட்) துவக்கப்பட்டன. ஆக, மாநில மின் இணைப்பின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 300 மெகாவாட் அல்லாமல்) 1,070 மெகாவாட்டாக உயர்ந்தது.

வாய்ப்புக்களும், வள ஆதாரங்களும் வரையறுக்கப் பட்டிருப்பதினால், மூன்று ஆண்டுத் திட்டங்களும் (1966-67லிருந்து 1968-69 வரை) உள்ள வேலைத் திட்டங்களையே தொடர்ந்து செயல்படுத்துவதிலேயே பெருவாரியான நோக்கமாகக் கொண்டு இயங்கின. இந்த மூன்றாண்டுகளில், 1,49,129 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. இதனால், நான்காவது திட்டத் தொடக்கத்தில் நான்கு இலட்சம் விசையேற்றங்களுக்கு மேல் மின் தொடர்பு அளிக்கப்பட்டதை நாம் கண்டோம். இந்த மூன்றாண்டுக் காலத்தில், 9,627 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தின் துவக்கத்தில் மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை 31,727 ஆக உயர்ந்தது. 1966-67-ல் இருந்த மந்த நிலையை உதறித் தள்ளி, தொழில் துறையில் மின்சக்தியைப் பயன்படுத்துதலும் பெரும் அளவுக்கு உயர்ந்தது.

தொடர்ந்து செயல்படும் திட்டங்களை முடிவு பெறச் செய்யும் பணிக்கு நான்காவது திட்டத்தில் முதலிடம் அளிக்கப்பட வேண்டியது நியாயமான ஒன்றாகும். இந்தக் கருத்தினை மனத்தில் கொண்டு, மின்சார உற்பத்தி செய்ய தொடர்ந்து செயல்படும் திட்டங்களுக்கு பெருவாரியாக நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின்சாரத்தைக் கொண்டுசெல்வதற்கும் பங்கீடு செய்வதற்கும் கிராமப்புறங்களுக்கு மின்வசதி அளிப்பதற்கும் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின்சாரத் தொழில் நிறுவனங்களை கையகப்படுத்தவும், புதிய திட்டங்களை ஆய்வு செய்யவும் இதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கும். திட்டம் வழிவகை செய்துள்ளது. மொத்தம் ரூ. 1,69.79 கோடி ரூபாய்க்கு திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது (கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளித்தலின்கீழ் உள்ள ரூ. 18.75 கோடி ரூபாய் இதில் சேராது. இந்தத் தொகையானது, நிறுவனக் கடன் நிதியிலிருந்து சரி செய்யப்பட வேண்டும்). இந்தத் தொகையில், 1969—70-ல் ரூ. 3711 கோடி ரூபாயும், 1970—71-ல் . 30.13 கோடி ரூபாயும், செலவிடப்பட்டுள்ளது. 1971—72-க்கான ஆண்டுத் திட்டம், 26.76 கோடி ரூபாய்க்கு வழிவகை செய்துள்ளது. இதில் 9,39.40 இலட்சம் ரூபாய் மின் உற்பத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும். மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், பங்கீடு செய்தல் ஆகிய திட்டங்களுக்கு ரூ. 7,50 இலட்சமும், கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிக்க ரூ. 8,75 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், திட்டத்தில் சேராமல், நிறுவனக் கடன் நிதியிலிருந்து கிராமப்புறங்களுக்கு மின்வசதி அளிக்கும் திட்டத்திற்கு 1,275 இலட்சம் ரூபாய்க்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1970—71-ம் ஆண்டுக் காலத்தில், 85 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கூடுதலாக மின் தொடர் இணைப்புடன் சேர்க்கப்பட்டது. பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின் திட்டத்தின்கீழ் சோலையாறு மின்சக்தி நிலையம் II-ம் 25 மெகாவாட் யூனிட்டு, எண்ணூர் அனல் மின் நிலையத்தின் இரண்டாவது 60 மெகாவாட் யூனிட்டு ஆகியவை இவற்றில் அடங்கும். மின்தொடர் இணைப்பின் தற்போதைய மொத்த நிறுவப்பட்ட திறன் 2,075 மெகாவாட்டாகும். நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் 600 மெகாவாட்டும் இதில் அடங்கும். எண்ணூர் அனல் மின் நிலையத்தின் முதல் 110 மெகாவாட் யூனிட்டை (3-வது பிரிவு) சேர்த்து, 1971—72 இறுதியில் மொத்த நிறுவப்பட்ட திறன் 2,185 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை மாநிலங்களான கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகியவற்றுடன் நமது மாநில மின் தொடர் இணைப்பானது 230 கே. வி. கம்பித் தொடர்களின் மூலமாக தற்சமயம் இணைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களிடையே 230 கே. வி. கம்பித் தொடர்களின் மூலம் உள்ள இந்த இணைப்புடன் மற்றும் பாம்பா-சயத்தாறு, எண்ணூர் நெல்லூர் இடையே 230 கே. வி. கம்பித் தொடர்களின் வேலை



முடிவடையும் பொழுது, நான்காவது திட்டக் காலத்தில் தென் மாநிலங்களிடையே உச்ச நேர மின் சக்தியானது அதிக அளவில் பரிமாறிக் கொள்ளப்படுகின்ற ஒரு நிலை ஏற்படும். ஐந்தாவது திட்டத்தில் தென்னக மின் தொடர் இணைப்பில் உள்ள மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையங்களிடையே ஓர் இணைப்பான ஏற்பாடு செயல்வடிவம் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தென் மாநிலங்கள் அனைத்தும் நற்பலன் அடையக்கூடும்.

கிடைக்கின்ற மின்சக்தி ஆதாரங்களை மேலும் பெருக்கவும், மாநிலம் முழுவதற்கும் குறைந்த கட்டணத்தில் பெருவாரியான அளவில் மின்சக்தி கிடைப்பதற்காகவும், மாநிலம் முழுவதும் சீரான முறையில் மின்சக்தியைக் கொண்டு செல்லும் கம்பித் தொடர் இணைப்பும், மின்பங்கீடு கம்பித்தொடர் இணைப்பும் பின்னிப் பிணையப்பட்ட ஓர் அமைப்பு முறை அமைக்கப்பட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளில் உள்ள நிலவரப்படி, இந்த மின் இணைப்பில் 55,064 கிலோ மீட்டர்கள் மிகை உயர் அழுத்தக்கம்பித் தொடர்களும், உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும் 13-813 கிலோ மீட்டர்கள் குறைந்த அழுத்தக் கம்பித் தொடர்களும் உள்ளன. 1970-71-ல் 5,862 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் தொடர்பு நீட்டிக்கப்பட்டுள்ளது. மின் வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 42,229 ஆகும். 1970--71ல் 59,268 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாளில் உள்ள நிலவரப்படி, மின்தொடர்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 5,30,044 ஆகும். கிராமங்களை ஒட்டியுள்ள அரிசனக் குடியிருப்புக்களுக்கு மின் வசதி அளிப்பதற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. 1970--71-ல் எந்த ஆண்டும் இல்லாத வகையில் 2,029 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளில் உள்ள நிலவரப்படி, மின் வசதி அளிக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புக்களின் மொத்த எண்ணிக்கை 11,905 ஆகும். 1971--72-ல் மேலும் 6,200 அரசனக் குடியிருப்புகளுக்கு மின் தொடர்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மிச்சமுள்ள குடியிருப்புகளுக்கு ஏப்ரல் 72-லிருந்து டிசம்பர் 72-க்குள்ளான காலத்திற்குள் மின் தொடர்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட சிறப்புக் கூறுபாடுகளை முக்கியமாகக் குறிப்பிட நான் விழைகிறேன்.—

### அ- I. மூலதன வரவினங்கள்.

வாரியத்தின் முதலீடு வரவினம் ரூ. 48.24 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில், அரசிடமிருந்து கடன் வடிவில் ரூ. 2.54 கோடி கிடைக்கும் மேலும், இத்துடன் ரூ. 29.68 கோடி ரூபாய் மற்ற வகைகளிலிருந்து பெறக்

கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 13 கோடி ரூபாய் வாரியத்தின் உள் ஆதாரங்களின் தேய்மானக் காப்பிலிருந்தும் பிறகாப்பிலிருந்தும் சரி செய்து கொள்ளப்படும். வைப்புத் தொகையில் ஏற்படும் உயர்விலிருந்து ரூ. 2.98 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1970–71-ம் ஆண்டில் கிராம மின்வசதி இணையம், ( (Rural Electrification Corporation) வாரியத்தின் ரூ. 4.68 கோடி மதிப்புள்ள ஏழு கிராம மின்வசதித் திட்டங்களுக்கு தன்னுடைய ஒப்புதலை அளித்துள்ளது என்பதை இச்சந்தர்ப்பத்தில் மகிழ்வுடன் குறிப்பிட விழைகிறேன். அதற்காக ரூ. 2.11 கோடியினையும் அந் நிறுவனம் வழங்கியுள்ளது. நடப்பாண்டில், மேலும் 1.88 கோடியினை வழங்கும் என எதிர்பாக்கப்படுகிறது. மேலும் கடன் வழங்கவேண்டி, வாரியம் கிராம மின்வசதி இணையத்திற்கு திட்டங்களைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருக்கும்.

கிராம மின்வசதித் திட்டமானது நிறைவுபெற எங்கெங்கு ஆதாரங்கள் உள்ளனவோ, அவற்றையெல்லாம் திரட்டவேண்டியது அவசியமாகிவிட்டது. இந்த இலட்சியத்தைக் கருத்தில் கொண்டு, 7½ சத விகித வட்டியில் ரூ. 375 லட்சம் மதிப்புள்ள கிராம மின்வசதிப் பத்திரங்கள் வெளியீட்டை வாரியம் அறிவித்துள்ளது. நிதி சம்பந்தமான நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற திறந்த சந்தைக் கடன்கள் போல் இல்லாமல், இப்பத்திரங்களை முக்கியமாக தனி நபர்கள் வாங்கலாம். இந்தக் கடன் திட்டத்திற்கு, பொதுமக்களும் குறிப்பாக விவசாயப் பெருங்குடிமக்களும் பெருவாரியான அளவில் ஆதரவு நல்கி கடன் பத்திரங்களை வாங்கி பெருமளவில் எஞ்சியுள்ள விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கும் பணி விரைவாக நடைபெற உறுதுணையாக இருக்க வேண்டுமென விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

### அ. II மூலதனச் செலவினங்கள்.

1971–72-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 39.39 கோடி முதலீட்டுச் செலவினங்களுக்கு வகை செய்துள்ளது. இத் தொகையில் வழக்கமாகச் செலவிடப்படும் கிராம மின்வசதிக்கான ரூ. 8.75 கோடியும், "சிறப்புத் திட்டத்" தின் கீழ் செலவிடப்படும் ரூ. 12.75 கோடியும் அடங்கும்.

விவர அறிக்கைகள் அ. III அ. IV, களில் 1971–72-ம் ஆண்டுக்கான மின்வாரியத்தின் மதிப்பீட்டு வருவாய் வரவினங்களும் செலவினங்களும் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மதிப்பீட்டு வருவாயான 67.02 கோடி ரூபாயில் எரிபொருள் செலவு உட்பட மின்சார உற்பத்திக்காகும் செலவு ரூ. 8.86 கோடியாக ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. நெய்வேலி, மைசூர், கேரளம் ஆகிய இடங்களிலிருந்து மின்சக்தியை வாங்குவதற்காக 16.12 கோடி ரூபாய்க்கு வழிவகை



செய்யப்பட்டுள்ளது. தேய்மான வைப்புகள், மற்ற வைப்புகளுக்காக வேண்டி உள்ள வழக்கமான நிதி ஒதுக்கீடு செய்த பிறகு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி, மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வரிசைக்கிரமத்தில் மற்ற இனங்களுக்கும் வழிவகை செய்த பிறகு, அரசுக்கு வட்டி செலுத்துவதற்காக வேண்டி 6.49 கோடி ரூபாய் மின் வாரியத்திற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக அரசின் வருவாய் வரவினத்திற்கு, வாரியம் 6.49 கோடி ரூபாயினை அளிக்கும்.

செயல்படுத்தப்படும் பல்வேறு மின் திட்டங்கள், செயல்படுத்த இருக்கும் திட்டங்கள் பற்றிய விவரங்களாவன :—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீர் மின்சாரத் திட்டத்தின் வேலைகள் முடிவடைந்தது. 60 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட முதல் மின் நிலையமும் 40 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட இரண்டாவது மின் நிலையமும் இவ்வாண்டில் செயல்படத் தொடங்கிவிட்டன. எண்ணூர் அனல் மின்சாரத் திட்ட வேலை வேகமாக நடைபெற்று வருகிறது. 110 மெகாவாட் திறன் கொண்ட 3-வது மின் உற்பத்திப் பிரிவு 1971–72-ல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது பிரிவு 1972-73-ல் செயலில் இறங்கும்.

மற்ற புதிய திட்டங்களைப் பொறுத்த வரையில், நடு வட்டம் நீர் திருப்புத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப் படுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் நடு வட்டம் நதியின் நீர் திருப்பப்பட்டு நீலகிரியில் இப்பொழுது உள்ள பைக்காரா மின் நிலையத்தில் ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு 69 மில்லியன் யூனிட்டுகள் கூடுதலாக மின் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குந்தா நீர் மின்சாரத் திட்டம் நான்காவது நிலையை மேற்கொள்வதற்கு திட்ட ஆணைக்குழு ஒப்புதல் அளித்துவிட்டது. இப்பொழுதுள்ள குந்தா மின் நிலையம் 3-ல் 60 மெகாவாட் கூடுதல் உற்பத்தியும் குந்தா மின்சார நிலையம் 4-ல் 50 மெகாவாட் கூடுதலும் ஆகும். கனடாவிலிருந்து மின்சார உற்பத்திச் சாதனங்களை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்ட வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1975 மார்ச்சுக்குள் இந்த வேலையை முடிக்கும் வகையில் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

100 மொகாவாட் திறன் கொண்ட பாண்டியாறு-புன்னப்புழா நீர் மின்சாரத் திட்டம், திட்ட ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ள மற்றொரு திட்டமாகும். மின்சக்தி தயாரிக்க உபயோகித்த தண்ணீரை தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துவது குறித்து கேரள அரசுடன் ஒரு முடிவு ஏற்பட்டவுடன், இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

[1971 டிசம்பர் 4

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகாவாட் திறன் கொண்ட 5-வது பிரிவினை நிறுவுதல் சம்பந்தமாக தொடக்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கொதிகலனும், மின் உற்பத்தி இயந்திரங்களும் வழங்குமாறு திருச்சிராப்பள்ளி யிலும், ஹைதராபாத்திலும் உள்ள பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட மின்சார உற்பத்தித் திறன் உயர்வு இருந்தும், பாசனம் இல்லாத காலங்களில் மின் இணைப்பின் உற்பத்தித் திறன் 1,570 மெகாவாட்டாகத்தான் இருக்கும். 1973-74-ல் நாம் எதிர் பார்க்கின்ற தேவையின் அளவோ சுமார் 1,835 மெகாவாட்டாகும். இத் தேவையைப் பூர்த்தி செய்ய 2,200 மெகாவாட் உற்பத்தித் திறன் வேண்டியிருக்கும். ஆகவே 630 மெகாவாட் பற்றுக்குறையாகவே இருக்கும். 1980–81-ல் சுமார் 3,000 மெகாவாட் பற்றுக்குறை இருக்குமென கணக்கிடப்படுகிறது. 235 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள கல்பாக்கம் அணுசக்தி மின் நிலையம் ஐந்தாவது திட்டக் கால ஆரம்பத்தில் செயல்படும். கல்பாக்கத்தில் 235 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள இரண்டாவது பிரிவு ஒன்றினை நிறுவுவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அண்டை மாநிலங்களான கேரளம், மைசூர், ஆகிய மாநிலங்களிலிருந்து இப்பொழுது உபரியாக மின்சக்தி கிடைக்கப் பெற்றாலும், நான்காவது திட்டக் காலத்தில் அந்த மாநிலங்களில் வேகமாக ஏற்படுகின்ற வளர்ச்சிப் பணிகள் காரணமாக, இந்த உபரியாகக் கிடைக்கின்ற மின்சக்தியை நம்பியிருப்பது உசிதமானதல்ல. அத்துடன், ஒரு திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவு பெறுவதற்கு இடையே நீண்டகால இடைவெளி உள்ளது. ஆகவே, நான்காவது திட்ட இறுதியில் எதிர்பார்க்கப் படுகிற அதிகப்படியான பற்றுக்குறையைச் சரிகட்ட, நான்காவது திட்டத்திலேயே தமிழ் நாட்டில் மேலும் கூடுதலான மின் உற்பத்தித் திட்டங்களை உருவாக்குவது மிகவும் அவசியம் ஆகிறது. இதைக் கருத்தில் கொண்டு, நெய்வேலியில் இரண்டா வது சுரங்கம் வெட்டும் பிரிவு ஒன்றினைத் துவக்கவும், நெய்வேலி யில் 600 மெகாவாட் திறனுள்ள மற்றுமொரு மின் உற்பத்தி நிலையம் ஒன்றினை ஏற்படுத்தவும், அத்துடன் தூத்துக் குடியில் 600 மெகாவாட் திறனுள்ள அனல் மின்சார நிலையம் ஒன்றினை நிறுவவும் மாநில அரசானது மத்திய அரசினை வற்புறுத்திக் கொண்டு வருகிறது. மேலும் 1980–81-ல் ஏற்படுகின்ற மின் பற்றுக் குறையைப் போக்க வேண்டுமாகில் குறைந்தது 1,000 மெகாவாட் திறனுள்ள இரண்டாவது அணு மின் நிலையம் மின் வினியோகத்தை உறுதிப்படுத்த (to firm up and stabilise the supply). தென் மாவட்டங்களில் ஒன்றில் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

நான்காவது திட்டக் காலத்திலேயே செயற்படுத்துவதற்காக வேண்டி, கீழ்க்கண்ட நீர்-மின்சாரத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன. இவற்றிற்கான திட்ட அறிக்கைகள்



1971 டிசம்பர் 4]

மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மத்திய நீர்-மின்சக்தி ஆணைக் குழுவின் அனுமதி இன்னும் எதிர் பார்க்கப்படுகிறது :—

| | | | |
|---|---|---|---|
| 1. | மதுரை மாவட்டம்—சுருளியாறு நீர்-மின சாரத் திட்டம். | 35 | மெகாவாட் திறன் |
| 2. | திருநெல்வேலி மாவட்டத்தில் மேல் தாம்பிரவருணி நீர்-மின்சாரத் திட் டத்தின்கீழ் சேர்வலாறு மின் உற் பத்தி நிலையம். | 35 | ஷை |
| 3. | காடம்பாறை விசையேற்ற தேக்க மின் திட்டம். | 400 | மெகாவாட். |
| 4. | கோயமுத்தூர் மாவட்டத்தில் நெல்லித் துறை நீர்-மின்சாரத் திட்டம். | 50 | ஷை |
| 5. | கன்யாகுமரி மாவட்டத்தில் பரளியாறு நீர்-மின்சாரத் திட்டம். | 35 | ஷை |
| 6. | நீலகிரியில் சோழாட்டிப்புழா நீர்-மின் சாரத் திட்டம். | 60 | ஷை |

நான் குறிப்பிட்டுக் காட்டிய மேற்கண்ட திட்டங்களில் காடம் பாறை விசையேற்ற நீர்த்தேக்க மின் திட்டம் தான் மிகப் பெரியது என்பது தெளிவாகிறது. இத் திட்டம் 400 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் திறனுடையது. மேற்சொன்ன திட்டங்களில் இதுதான் பெரியது என்பது மட்டுமல்ல. தென்ன கத்திலே இந்தத் திட்டம் புதுமையானதுடன், இப்பொழுதுதான் முதல் முதலாக நிறைவேற்ற இருக்கும் ஒரு திட்டமாகும். மின் இணைப்புத் தொடரில் இப்பொழுதுள்ள இரவு நேரச் சுமை, பகல் நேரச் சுமையில் 40லிருந்து 50 சத விகித அளவில்தான் உள்ளது. ஆகவே இரவு நேரங்களில் நீர்-மின் நிலையங்களின் முழு அளவு நிறுவப்பட்ட திறனும் பயன்படுத்த முடிவதில்லை. இதனால் மின் உற்பத்தி வகையில் ஆகும் செலவு ஒரு யூனிட்டுக்கு அதிக மாவதுடன், உற்பத்தி செய்வதற்கான திறமையான முயற்சியும் குறைந்துவிட ஏதுவாகிறது. இரவு நேர மின் சுமைகளை அதிகப் படுத்துவதின் மூலம் இக் குறைபாடுகளைப் போக்கிவிட முடியும். இரவு நேரத்தில் இப்படிக் கிடைக்கும் சக்தியானது கீழ் உள்ள ஒரு நீர்த்தேக்கத்திலிருந்து உயரத்தில் உள்ள ஒரு நீர்த்தேக்கத் திற்கு தண்ணீரை குழாய் மூலம் கொண்டு செல்லப் பயன்படுத்தப் படுகிறது. பகல் நேரத்தில் ஏற்படுகின்ற உச்ச மின் சுமையையும் மின் இணைப்புத் தொடரில் பழுது ஏற்படும் நேரங்களில் தேவைப் படும் மின் சக்தியையும் உற்பத்தி செய்ய அதே நீரினைப் பயன் படுத்த முடிகிறது. இப்படிப்பட்ட திட்டம் "விசையேற்ற நீர்த் தேக்க திட்டம்" என்று அழைக்கப்படுகிறது. பின்புறமாக, செய லாற்றுகிற விசையேற்ற டர்பைன் பொருத்தப்பட்டு அங்கு நிறுவப்பட்டுள்ள இயந்திரத்தை இரவில் விசையேற்றமாகவும் பகல் நேரங்களில் மின் உற்பத்திச் சாதனமாகவும் பயன் படுத்த முடிகிறது. அப்படிப்பட்ட திட்டத்தை ஆனைமலைக் குன்றுகளில் காடம்பாறையில் உருவாக்கிச் செயல்படுத்த தமிழ்நாடு மின் வாரியம் சிந்தித்துக் கொண்டு இருக்கிறது. ஆரம்பத்தில் இதன்

உற்பத்தித்திறன் 200 மெகாவாட்டாகவும், இறுதியில் 400 மெகா வாட்டாகவும் இருக்கும். பரம்பிக்குளம்-ஆளியாறு மின் திட்டத்தின்கீழ் தற்பொழுது கட்டப்பட்ட மேல் ஆளியாறு நீர்த்தேக்கம், இந்தத் திட்டத்திற்காக கீழ் நீர்த் தேக்கமாகவும். கடைமடையாகவும் பயன்படுத்தப்படும்.

230 கே.வி, 110 கே.வி, 66 கே-வி, 33 கே.வி, மின் அனுப்புக் கம்பித் தொடர்களை நிறுவவும், துணை நிலையங்கள் அமைக்கவும் வேண்டி மின் அனுப்புதல்-மின் பங்கிடுதல் திட்டத்தில் ரூ. 750 இலட்சத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. துணை மின் நிலையங்களில் மின் மாற்றிகளின் திறனை அதிகப்படுத்துதல், எடுத்துச் செல்லும் சாதனங்களும், மின் அனுப்புக் கம்பித் தொடர்களுக்கும் துணை நிலையங்களுக்கும் வேண்டிய மற்ற பல்வகையான உபகரண வசதிகளும் இந்தத் தலைப்பின்கீழ் செய்யப்பட இருக்கின்றன. 1971–72-ல் 2,600 கிலோ மீட்டர் மிக உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும் உயர் அழுத்த கம்பித் தொடர்களும் கூடுதலாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் பயன்கள் உற்பத்தியினைப் பெருக்க அமைவதாக இருக்க வேண்டுமானால், அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால், கிராமப்புறங்களில், தொழில் நுட்ப இயலின் முக்கியத்துவம், கிராம மக்களால் உணர்ந்து கொள்ளப் பட வேண்டியது மிகவும் அவசியம். மாநிலத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 70 சத விகித மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். ஆகவே, வளர்ச்சிப் பணிகள் மாநில மக்களின் வாழ்க்கையைத் தொடுவதாக அமைய வேண்டுமேயானால், மின்சாரமானது கிராம மக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டியது மிக மிக அவசியமானதொன்றாகிறது. இந்த உண்மையை உணர்ந்த தமிழக அரசு கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளிக்கும் பணிகளுக்கு பெரியதொரு முக்கியத்துவத்தை அளிக்கிறது.

கிராமப்புறங்களுக்கு மின்வசதி அளித்தல் என்பது ஆதாயம் தரக்கூடிய ஒன்றல்ல என்று இருந்தாலும், கிராமப் புறங்களுக்கு மின்வசதி அளிப்பதில் குறிப்பாகத் தெருவிளக்கு வசதிகள், வீடுகளுக்கு மின் வசதி அளித்தலில் பிரம்மாண்டமான முன்னேற்றத்தினை நாம் கண்டு வருகிறோம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி 1972 முடிவுக்குள்ளாக மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் ஒளி அளிக்கப் பட வேண்டும் என்று சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டு, அக்டோபர் 69-ல் அத் திட்டம் துவக்கிவைக்கப்பட்டது. இச் சிறப்புத் திட்டத்தின்கீழ், முன்பே விசையேற்றங்களின் மூலம் மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ள கிராமங்களிலும் சிற்றூர்களிலும் தெருவிளக்குகள் போட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1970–71-ல் வாரியத்தினால் 10,016 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் தெருவிளக்கு





கள் போடப்பட்டுள்ளன. இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத ஒரு சாதனையாகும் இது. 1971-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாள் நிலவரப்படி, இன்னும் 21,035 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் தெருவிளக்குகள் போடப்பட வேண்டியுள்ளது. உரிமைதாரர் பகுதிகளில் உள்ள 697 கிராமங்களும், சிற்றூர்களும் இதில் அடங்கும். வாரியத்தின் பகுதிகளில் உள்ள 20,338 கிராமங்கள், சிற்றூர்களில் 1971–72-ல் 9,000 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளிப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ளவற்றிற்கு 72 ஏப்ரலிலிருந்து டிசம்பர் 72 வரை உள்ள ஒன்பது மாதங்களில் மின்வசதி அளிக்கப்பட்டுவிடும். அத்துடன் விசையேற்றங்களுக்கு மின் தொடர்பு அளிக்கும் பணி இந்தக் காலத்தில் இன்னும் தீவிரப்படுத்தப்படும். தங்களுடைய பகுதிகளில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் 1972 டிசம்பருக்குள்ளாக மின்வசதி அளிக்கின்ற பணியினை முடித்துவிட வேண்டுமென உரிமைதாரர்களும் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

செங்கற்பட்டு, வட ஆற்காடு, நெல்லை, நீலகிரி மாவட்டங்களிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் முழுமையாக மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. மதுரை கோயமுத்தூர், தென் ஆற்காடு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கும் பணி நடப்பாண்டில் செய்து முடிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்கள் போக எஞ்சியுள்ள ஆறு மாவட்டங்களிலும் 1972 டிசம்பருக்குள் முழுமையாக மின்வசதி அளிக்கப்பட்டுவிடும்.

தமிழ் நாட்டில் மிகப் பெரிய அளவில் பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கும் நிறுவனங்களில் மின்சார வாரியமும் ஒன்றாகும். மின்சார வாரியத்தில் 84,000 பேருக்கு மேல் பணி புரிகின்றனர். தொழில் நுட்பமற்ற பணியாளர் முதல் தொழில் நுட்பம் வாய்ந்த வல்லுநர்கள் வரை எழுத்தர்கள் மேற்பார்வையாளர்கள், அநுபவமிக்க பொறியாளர்கள், கணக்காளர் மற்ற பிரிவினர்கள் என இப் பணியாளர்கள் பல்வகைப்பட்டவர்களாவார்கள். இப்படிப் பல்வேறு வகைப்பட்டவர்களாக இருந்தும், வாரியத்தின் பணியாளர்கள் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து பணியாற்றுவதும் பல்வேறு தொழிற்சங்கங்கள் இருந்தும் வாரியத்திற்கும் பணியாளர்களுக்குமிடையே 1970-71-ஆம் ஆண்டில் உறவு மிகவும் சுமுகமாகவும் நெருக்கமாகவும் நிலவி வந்துள்ளது என்பதும் மிகவும் மன நிறைவு அளிக்கக்கூடிய அம்சங்களாகும். ஊதியத்தைத் திருத்தி அமைத்தல், வேலைச்சுமையை நிர்ணயித்தல் மற்ற சலுகைகளை அதிகப்படுத்தல் விடுப்புச் சலுகைகள் போன்றவற்றிற்கு வாரியத்தின் நிலை ஆணைகளுக்கு சில திருத்தங்கள் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுடன் வாரியமானது பேச்சு நடத்தி, உடன்பாடுகளைச் செய்து முடித்தது. ... வாரியத்தின் பணியாளர்களின் எல்லா வகையி...

அளவுக்கும் பயன்பெற்றுள்ளனர். எழுத்தர்கள் தவிர மற்ற வேலையாட்களுக்கான ஆணைகள் 1969 நவம்பர் திங்களில் வாரியத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி அடிப்படையில் தொழில் பணியாளர் நிலை ஆணைகள் சட்டத்தின்கீழ் சான்றளிக்கப்பட்டன. திருத்தங்கள் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் முதல் நடைமுறைக்கு அமுலில் வந்தன. இதனால் திட்டப்பகுதிகளிலும் கட்டுமானப் பகுதிகளிலும் பணியாற்றும் பெரும்பாலான தற்காலிக வேலையாட்கள், தினக்கூலி பெறுவோர் உண்மையான பயனைப் பெற்றனர். அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் மேலும் விரிவாக்கப்பட்டு இயக்குதல்-பராமரிப்புப் பிரிவுகளில் பணியாற்றும் அவருடைய சக ஊழியர்கள் பெறும் அளவிற்குச் சமமான பயனை இந்தப் பிரிவினரும் அடைய முடிந்தது. முன்பு தற்காலிக அடிப்படையில் ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட பெருவாரியான தற்காலிக இளநிலைப் பொறியாளர் பதவிகள், தட்டச்சர்கள், காசாளர்கள் சுமார் 1 950 பேர்களின் பதவிகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வாரியத்தின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு அவர்கள் பதவிகளைத் தொடர்ந்து நீடிக்க அனுமதி வழங்கப்பட்டது. 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் 240 நாட்கள் பணியாற்றியுள்ள இயக்குதல் பராமரிப்புப் பிரிவுகளில் பணியாற்றும் தினக்கூலி வாங்குவோர், பெயர்ப் பட்டியல் வேலையாட்கள், ஆகியோருக்கு உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதியின் பயன் நீடிக்கப்பட்டது.

மின் வாரியம் இலாபத்தில் நடைபெறவில்லை. ஆகவே போனஸ் சட்டப்படி 4 சத விகிதம்தான் போனஸ் கொடுக்க வேண்டுமென்று இருந்தபோதிலும், மின் வாரியப் பணியாளர்களுக்கு 1970-71-ம் ஆண்டிற்குரிய போனசை 5 சதவிகிதமாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அவர்கள் கனிவுடன் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அது மட்டுமல்ல. மின்வாரிய ஊழியர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகளும் மாண்புமிகு முதல்வரால் அளிக்கப்பட்டுள்ளன. 31 ஆயிரம் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு தினசரி 25 காசுகள் விதம் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாள் முதல் கூலி உயர்வு கொடுக்கப்படும். தமிழக அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கும் முறையில் மின் வாரிய ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும். இச் சலுகை 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாள் முதல் கொடுக்கப்படும். 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாள் முதல் மலை வாழ்வுப்படியை சம்பளத்தில் 10 சத விகிதமாக உயர்த்திக் கொடுக்கப்படும். பயணப்படியும் தினப்படியும் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் உயர்த்தப்படும். காசாளர்கள், ஸ்டோர் கீப்பர்கள் இவர்கள் சம்பந்தமாக நிலை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எம
பட
69-ல் அத் து
தின்கீழ், முன்

அளிக்கப்பட்டுள்ள ழும், அதன் பணியாளர்களும் இலட்சிய நோக்
கள் போட வழிவகை பயன், ஏற்படும் செலவு இவற்றைக் கருத்தில்
தினால் 10,016 கிராமங் பணியில் ஏற்படும் பிரச்னைகள் அனைத்தையும்



புரிந்துகொள்கிற மனப்பக்குவத்துடனும் உற்சாகத்துடனும் அணுகி நல்ல முறையில் தீர்த்து வைப்பார்கள் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

மின் தொடர்புகள் ஆண்டுதோறும் அதிகமாகிக் கொண்டே போவதாலும் அதை ஒட்டி அந்த அளவுக்கு மின் சுமை கூடுதலாவதும் ஆட்களை அதிகப்படியாக வேலைக்கு அமர்த்துவதும் அதிகமாகிறது. ஆகவே அடுத்த ஐந்தாண்டுகளில் பல்வேறு வகைப் பணியாளர்கள் என்று மேலும் அதிகமாக 25,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியுமென நம்புகிறேன்.

பயனீட்டாளர்களுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளைத் தவிர்ப்பதை முக்கியமாகக் கருத்தில் கொண்டு மின்சார வாரியத்தின் அலுவலர்களின் செயல்முறை அமைப்பை திருத்தி அமைக்கின்ற தேவை உணரப்பட்டு இக் கருத்து வாரியத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. இந்த நோக்கத்தை அடையும் வகையில், கட்டுமானப் பணிகள் இயக்குதல் பராமரிப்புப் பணிகளுக்காக தனித்தனித் கோட்டங்கள் துணைக் கோட்டங்கள் என்று தற்போதுள்ள அமைப்பு முறையை மாற்றி, ஓர் இயக்குதல் அமைப்பில் ( ("operating system") உள்ள கோட்டப் பொறியாளர்கள்/உதவிப் பொறியாளர்கள் வசம், அவர்களுடைய பகுதிகளில் உள்ள கட்டுமானப் பணிகள், இயக்குதல்-பராமரிப்புப் பணிகள் வணிகத் தொடர்புடைய பணிகள் போன்ற எல்லாப் பணிகளையும் ஒப்படைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. வட்டார அடிப்படையில் இப்படித் திருத்தி அமைக்கப்பட்ட செயல் முறையானது, மதுரை மின் அமைப்பில் இவ் வாண்டு ஜூன் 15-ம் தேதி முதல் செயல்படுத்தப்படுகின்றது. இந்தப் திருத்தியமைக்கப்பட்ட அமைப்பு முறை அந்தந்த அமைப்புகளில் கிராம மின்வசதிச் சிறப்புத் திட்டப் பணி முடிவு பெறும்பொழுது அந்தந்த அமைப்புகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

வாரியத்தின் கட்டண விதி அமைப்பு முறையை முழுமையான வடிவில் ஆய்வு செய்து ஒழுங்கு முறைப்படுத்துகின்ற பிரச்சினையைப் பொருளாதார நிபுணர்கள், அலுவலர்கள் அடங்கிய ஒரு துணைக் குழு ஆராய்ந்துள்ளது. அதன் அறிக்கை இப்பொழுது அரசினால் நியமிக்கப்பட்டுள்ள செயற்குழுவின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

கிராமங்களிலும் சிற்றூர்களிலும் தெரு விளக்குகள் மூலம் வழங்கும் மின்சாரம், மின் அளவைக் கருவிகள் மூலம் கணக்கிடப்படல் வேண்டும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறியுள்ளனர். மின்சார வாரியம் தற்பொழுது எரியாமல் பயனற்றுப் போய் விடுகின்ற மின்சார பல்புகளை ஓராண்டில் மூன்று தடவை கட்டணமில்லாமல் இலவசமாக மாற்றிப் போட்டுக் கொடுக்கிறது.

இப்பொழுதுள்ள எல்லாத் தெரு விளக்குகளுக்கும் மற்றும் எதிர்காலத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் 1972-க்குள் மின்வசதி அளிக்கப்படல் வேண்டும் என்ற சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொண்டும் புதிதாக அமைக்கப்பட இருக்கும் மின் தொடர்புப் பணிகளுக்கும் மின் அளவைக் கருவிகள் பொருத்தும் ஏற்பாடுகளுக்கான சுமார் 90 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என மதிப்பிடப்படுகிறது.

மின்சார வாரியத்தை முன் நோக்கியுள்ள பெரிய பிரச்சினைகளையும் அவற்றைப் போக்கத் தேவைப்படும் ஆதாரங்கள் பற்றியும் நான் இந்த உரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதிநிலை அறிக்கை பற்றி விவாதிக்கும் பொழுது, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அறிவு சால் கருத்துரைகளை வழங்குவதின் மூலம் மின் வாரியம், மக்களுக்கு மேலும் பயனுள்ள முறையில் பணியாற்ற உறுதுணையாக, இருப்பார்கள் என நம்புவதுடன் அவைத் தலைவர் அவர்கட்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## இணைப்பு 2-அ

கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண், விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 எப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | 1971 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| A. உற்பத்தி— | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு மெகவாட்டில். | 1[illegible] | 256 | 571 | 1,070<br>300<br>(நெய்வேலி) | 1,365<br>600<br>(நெய்வேலி) |
| 2. மின்சக்தி பெரும் தேவை மெகவாட்டில். | 110 | 172 | 381 | 717 | 1,155 |
| 3. உற்பத்தி செய்த மின்சாரமும், வாங்கப்பட்ட மின்சாரமும் (பத்து லட்சம் யூனிட்டுகளில்). | 660 | 1,053 | 2,214 | 4,041 | 6,189 |

1971 டிசம்பர் 4] இணைப்புகள் 103

கடந்த திட்டக் காலங்களில் தமிழ்நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண், விவரங்கள். (1) | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). (2) | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). (3) | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). (4) | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). (5) | 1971 மார்ச் 31-ம் நாள் நிலைவரப்படி. (6) |
|---|---|---|---|---|---|
| **B. அனுப்புதலும், வழங்குதலும்—** | | | | | |
| 1. உயர் அழுத்த கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 55,064 |
| 2. குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் கிலோ மீட்டர்களில். | 5,728 | 13,005 | 35,352 | 73,198 | 1,37,813 |
| 3. கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 133 |
| 4. உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 121 |
| 5. பகிர்ந்திட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 27,466 |
| 6 மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (லட்சக் கணக்கில்). | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 21 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 94 | 122 |
| **C. கிராமங்களுக்கு மின்சார வசதி—** | | | | | |
| 1. மின்சார வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 42,229* |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32.440 | 1,17,697 | 2,56,594 | 5,30,044 |
| **D. செலவும், வருவாயும்—** | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூ. கோடிக் கணக்கில்). | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 440·27 |
| 2. மொத்த வருவாய் (ரூ. கோடிக் கணக்கில்). | 3·18 | 5·94 | 15·34 | 34·67 | 61·36 (மத்திய அரசு ஈடு செய்யும் தொகை நீங்கலாக.) |

* எந்த விதமான உபயோகத்துக்கும் மின்சக்தி கொடுக்கப்பட்ட எல்லாப் புது இடங்களையும் சேர்த்து.

## இணைப்பு 2-ஆ

### 1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு

(ரூபாய் லட்சத்தில்)

| எண், திட்டத்தின் பெயர். (1) | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. (2) | 1970-71-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (3) | 1970-71-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு. (4) | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. (5) | 1971-72-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. (6) |
|---|---|---|---|---|---|
| I. உற்பத்தித் திட்டங்கள்— | | | | | |
| A. தொடர்ந்து வரும் திட்டங்கள்— | | | | | |
| 1. குந்தா புனல் மின்சாரத் திட்டம் III-ம் நிலை. | 35·23 | 17·28 | 17·91 | 7·56 | 34·30 |
| 2. பரம்பிக்குளம்—ஆழியாறு புனல் மின்சாரத் திட்டம். | 1,41·29 | 37·67 | 1,91·71 | 1,60·99 | 34·27 |
| 3. கோதையாறு புனல் மின்சாரத் திட்டம். | 2,73·98 | 185·81 | 2,08·63 | 2,03·89 | 83·72 |
| 4. சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் IV-ம் நிலை. | 30·77 | 88·26 | 80·32 | 43·37 | 41·43 |
| 5. எண்ணூர் அனல் மின் நிலையம். | 17,41·99 | 7,04·00 | 4,50·00 | 4,61·01 | 3,10·82 |
| 6. எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவு படுத்துதல். | .. | 50·00 | 1,00·00 | 50·00 | 2,50·00 |
| 7. பாண்டியாறு-புன்னம்புழா புனல் மின் திட்டம். | 44·29 | 1,50·00 | 10·00 | 7·02 | 50·00 |
| 8. குந்தா புனல் மின் திட்டம் VI-ம் நிலை. | .. | 50·00 | 15·00 | .. | 50·00 |
| B. புதிய திட்டங்கள்— | | | | | |
| 1. நடுவட்டம் மாற்றுத் திட்டம். | 5·12 | 50·00 | 31·78 | 13·95 | 49·86 |
| 2. சோழத்திபுழா புனல் மின் திட்டம். | .. | 5·00 | 5·00 | .. | 5·00 |
| 3. மேல் தாமிரவருணி புனல் மின் திட்டத்தின்கீழ் சொவலாறு மின் நிலையம். | .. | 5·00 | 5·00 | 0·95 | 10·00 |
| 4. நெல்லித்துறை புனல் மின் திட்டம். | .. | 5·00 | 5·00 | 2·12 | 10·00 |
| 5. சுருளியாறு புனல் மின் திட்டம். | .. | 5·00 | 5·00 | 0·80 | 10·00 |
| மொத்தம் .. | 22,51·21 | 13,53·02 | 11,25·35 | 9,51·66 | 9,39·40 |
| II. மின்சக்தி அனுப்புதல், பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 7,37·75 | 9,37·75 | 10,98·84 | 7,50·00 |
| III. கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளித்தல். | 8,75·00 | 12,50·00 | 8,75·00 | 8,75·00 | 8,75·0 |
| IV. மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல். | —0·10 | 1,00·00 | 1,01·25 | 74·01 | 1.00·00 |

1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு.

| எண், திட்டத்தின் பெயர். | 1969-70-ல் செலவு. | 1970-71-க்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு. | 1970-71-ம் ஆண்டிற்கான திருத்திய ஒதுக்கீடு. | 1970-71-ல் செலவு. | 1971-72-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| V. புதுத் திட்டங்கள் குறித்த ஆய்வு. | 4·75 | 10·00 | 16·33 | 13·96 | 10·00 |
| VI. மின்சக்தி நிறுவனம்-ஆராய்ச்சிகள். | 0·33 | 2·00 | 0·71 | 0·48 | 2·00 |
| மொத்தம் .. | 37,11·26 | 34,52·77 | 30,56·39 | 30 13·95 | 2,676·40 |
| கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50 | 9,00·00 | 9,25·00 | 10 49·23 | 12,75·00 |
| ஆக மொத்தம் .. | 42,06·76 | 43,52·77 | 39,81·39 | 40,63·18 | 39,51·40 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**திங்கட்கிழமை, 1971 டிசம்பர் 6.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**சிங்கம்புணரிக்கு அருகில் அரிவையூர்.**

* 96 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயைசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரிக்கு அருகில் "அரிவையூர்" என்ற ஊர் டாக்டர் செயபாரதி என்பவரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இதைப் பற்றிய தகவல் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### *Strike by College students*

* 97 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there was any strike by the students of the Kancheepuram Pachiappa's College on or about the 9th August 1971; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரியில் போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்ததாகச் சொல்லப்படுகிறதே; அதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட நாளில் வேலை நிறுத்தம் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால், கல்லூரிப் பேரவைத் தேர்தல் பற்றிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தேர்தல் பற்றிய விதிமுறைகளை மாற்றி புதிய முறையில் கொண்டுவந்தார்கள். ஏற்கெனவே எல்லா மாணவர்களும் சேர்ந்து பேரவையினுடைய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற முறை இருந்தது. அதற்குப் பிறகு வகுப்புவாரியாகப் பிரதிநிதிகள் தேர்ந்

தெடுக்கப்பட்டு, அந்தப் பிரதிநிதிகளிலிருந்து பேரவை நிர்வாகி களைத் தேர்ந்தெடுப்பது என்ற முறையைக் கொண்டுவந்து, அந்தத் தேர்தல் 9–8–1971 அன்று குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று ஒவ்வொரு வகுப்பிலும் தேர்தல் நடத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், எல்லா மாணவர்களும் சேர்ந்துதான் தேர்தல்கள் நடத்தவேண்டுமே தவிர, வகுப்புவாரியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது என்ற அந்த அடிப்படையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்தார்கள். அதன் காரணமாக சில மாணவர்கள் வெளியே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு கல்லூரிக் குழு கூடி தேர்தலை ஒத்திவைப்பது என்று முடிவு செய்தார்கள். அதற்குப் பிறகு மாணவர்கள் கல்லூரிக்கு வராமல் வீட்டுக்குப் போக விரும்பினார்கள். உடனே கல்லூரி முதல்வரவர்கள் அன்று மற்ற வகுப்புகளையும் நிறுத்திவிட்டு கல்லூரிக்கு விடுமுறை அளித்து விட்டார்கள். அதுதான் 9-8-1971 அன்று ஏற்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : இம்மாதிரியான கல்லூரி யூனியன் தேர்தல் சம்பந்தமாக, காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரி மாத்திரம் அல்லாமல், ஆர்.டி.எம். கல்லூரி, சிவகங்கை, அமெரிக்கன் கல்லூரி, மதுரை, ஏ.பி.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் போன்ற இடங்களிலெல்லாம் வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே. இது சம்பந்தமாக இம்மாதிரியான தேர்தல் நடக்கவேண்டும் என்ற தாக்கீதை அரசு அனுப்புமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, பேரவை எப்படி அமையவேண்டும் என்று நாம் வரையறுத்து அந்த முறையைச் சொல்வதற்கில்லை. ஏனென்றால், ஒவ்வொரு கல்லூரியிலும் ஒவ்வொரு விதமாக வைத்திருக்கிறார்கள். சில கல்லூரிகளுக்கு சில முறைகள் ஏற்புடையனவாக இருக்கின்றன. அங்கிருக்கும் முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அத்தனை பேரும் சுமுகமான முறையில் ஏற்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என்ற வகையில்தான் அங்கங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. சில கல்லூரிப் பேரவைகளுக்கு கல்லூரி முதல்வர் அவர்களே தலைவராக இருக்கிறார்கள் ; மாணவர் தலைவர் துணைத் தலைவராக இருக்கிறார் ; சில கல்லூரிப் பேரவைக்கு மாணவர் தலைவரே பேரவைத் தலைவராக இருக்கிறார். சில கல்லூரிகளில் எல்லா மாணவர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கி இருக்கிறார்கள். சில கல்லூரிகளில் வகுப்புவாரியாக பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே, இவற்றை அந்தந்தக் கல்லூரியினுடைய தன்மைக்கு விடுவதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, நாம் இன்ன முறைதான் இருக்க வேண்டும் என்று சொன்னால் அந்த முறை சில கல்லூரிகளுக்கு ஒத்துவராத நிலையும் கஷ்டமும் ஏற்படக்கூடும். சுமுகமான சூழ்நிலையில் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் அந்தந்த கல்லூரியின் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது.



**திரு. மு பழனிவேலன்**: தலைவரவர்களே, கோவை மாவட்டம் கோபிசெட்டிபாளையம் கலைக் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உபகாரச் சம்பளம் பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும், இப்பொழுது இருப்பதுபோல் சாதி அடிப்படையில் அமையக்கூடாது என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, 3-ந் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அரசு அம்மாதிரி செயலில் சிந்தித்துச் செயல்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. எ. சுவாமிதாஸ்** : தலைவர் அவர்களே, பல கல்லூரிகளில் கல்லூரிப் பேரவை வேண்டும் என்று மாணவர்கள் விரும்புகிறார்கள். இன்னும் பல கல்லூரிகளில் பேரவை தொடங்கப் படாமலிருக்கிறது. ஆகவே, மாணவர்களுடைய விருப்பத்திற்கிணங்க எந்த எந்தக் கல்லூரிகளில் பேரவை வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்தந்தக் கல்லூரிகளிலெல்லாம் உடனடியாகப் பேரவைகள் தொடங்கப்பட வேண்டும் என்று கல்லூரிகளுக்குத் தாக்கீது அரசு அனுப்புமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, பேரவை இருப்பது கல்லூரியினுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ற ஒன்றாகும். நீண்ட பெருங்காலமாக இருந்தும் வருவதுமாகும். ஆனால், பல கல்லூரிகளில் பேரவைகள் இருக்கின்றன. பேரவைகள் மாணவர்களுடைய வளர்ச்சிக்குப் பயன்படுவதாக அமையாமல் சில இடங்களில் மாணவர்களிடையே பல குழப்பங்களும் தகராறுகளும் ஏற்பட்டு, அதன் மூலமாக விளைவுகளுக்கும் மற்றவைகளுக்கும் காரணமாக இருக்கின்றன. ஆகவே, சில இடங்களில் பேரவை அமைக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நிறுத்தி வைத்த இடங்களில் பேரவை வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை எழுப்பியிருக்கிறார்கள். சிலபல இடங்களில் கோரிக்கைகள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வேறுசில இடங்களில் குழப்பங்கள், கிளர்ச்சிகள் செய்கிறார்கள். பேரவை அமைப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், மாணவர்களுடைய விருப்பத்தை அறிந்து அதற்கேற்ற முறையில் அமையவேண்டும் என்ற முறையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக முதல்வருக்குக் கூறப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி** : தமிழ்நாட்டில் பொதுவாக எல்லாக் கல்லூரிகளும் அமைதியாக நடைபெறவேண்டும் என்று இருந்தாலும், சில நக்சலைட்கள் மாணவர்களிடையே தொடர்பு கொண்டு, இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களைத் தூண்டுவதாகச் செய்திகள் வருகின்றனவே, அது உண்மையா ? அப்படியானால், அப்படிப்பட்ட நக்சலைட் செயல்களைத் தடுக்க கல்லூரி அளவில் என்ன நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி சில கருத்துக்கள் வருகின்றன என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற செயல்களில் நக்சலைட்கள் ஈடுபடும்போது பெரும்பாலோர் அதற்கு இரையாகாமல் இருக்கலாம். அந்த முறையில் அந்தந்தக் கல்லூரி அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மற்ற மாணவர்களெல்லாம் விழிப்புணர்ச்சியோடு இருந்தால் மிகச் சரியாக இருக்கும். மாணவர்களில் பலபேர் தனித்தனியாகப் பார்க்கும்போது சரியாகத்தான் இருக்கிறார்கள். ஒன்றுகூடுகிறபோது சில சூழ்நிலைகளில் அவர்களை வேறு வேலைக்குத் திருப்பி விடுகிற அந்த நிலை ஏற்படாத அளவுக்கு கல்லூரி முதல்வர், பேராசிரியப் பெருமக்கள், மாணவர்கள் ஆகியோர் அடங்கிய குழு அமைந்து, பிரச்சினைகளை முதலில் ஆராய்ந்து தீர்க்க முயன்று, தீர்க்கப்படாத சூழ்நிலை ஏற்படும்போது, மேலிடத்தினர் தலையிட்டு அதற்கான பரிகாரம் காணலாம் என்று யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. பல கல்லூரிகள் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

* 98 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் அரசினருக்கு சொந்தமான ராஜா கல்லூரியில் 9–7–71, 10–7–71 தேதிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலுள்ள இராஜாக் கல்லூரியிலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. பொதுவாக, கல்லூரி மாணவர்கள் எல்லாம் பரீட்சையை ரத்து செய்ய வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தம் செய்வதாக அறியப்படுகிறது. உண்மையிலேயே பரீட்சையை ரத்து செய்யும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலும் வேலை நிறுத்தம் ஏற்படவில்லை. ஆனால், குறிப்பிட்ட நாட்களில் இந்த ஆண்டு எடுத்த சில முயற்சிகளின் காரணமாக மாணவர்களிடத்தில் சில வேறுபாடுகள் இருந்தன. ஏனென்றால், புதுக்கோட்டை கல்லூரியில் இப்பொழுது ஆங்கிலப் பிரிவுகள் புதிதாகத் துவங்கப்பட்டிருக்கின்றன. இட வசதி இல்லாததால் வகுப்புகளின் நேரத்தை ஓரளவு மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருந்து, காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1½ மணி வரையிலும் சில பிரிவினரும், காலை



10.45-லிருந்து மாலை 4.30 மணி வரையிலும் மற்ற சில பிரிவினரும் வகுப்புக்கு வரவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. காலை 10.45 மணியிலிருந்து பிற்பகல் 4.30 வரை வகுப்புக்கு வருகிற பிரிவினரைச் சார்ந்த மாணவர்கள் தங்களுக்கு காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரையிலும் வைக்க வேண்டும் என்று கேட்டார்கள். பிறகு முதல்வர் மாணவர்களை அழைத்து மாற்றம் ஏற்பட்டதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்து விளக்கியதற்குப் பிறகு மாணவர்கள் சமாதானம் பெற்று சென்றார்கள். ஆனால், வேலை நிறுத்தம் ஒன்றும் ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் செய்ததாகச் செய்தி வெளிவந்தது. ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் 12—7—71-ல் செய்தி வெளிவந்தது. முதல்வர் விளக்கம் தந்ததற்குப் பிறகு, வேலை நிறுத்தம் ஏற்படவில்லை என்ற விளக்கத்தையும் 14—7—71 அன்று அதே பத்திரிகையில் வெளியிட்டார்கள். ஆக, வேலை நிறுத்தம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வேலை நிறுத்தங்கள் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டுவிடுகின்றன. அவற்றிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய, பரீட்சை எழுத வேண்டாத சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்பதும் ஒரு காரணமாக அமைகிறது. ஆகவே, பரீட்சை வேண்டாம் என்ற நிலைமைகள் இன்னும் வரவில்லை. ஆண்டுக்கு மூன்று பரீட்சைகள் நடக்கின்றன. காலாண்டுப் பரீட்சை, அரையாண்டுப் பரீட்சை, முழு ஆண்டுப் பரீட்சை என்று வருகின்றன. முழு ஆண்டுப் பரீட்சை பொதுப் பரீட்சையாக அமைகிறது. ஆண்டுப் பரீட்சை வேண்டாம் என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால், திட்டவட்டமாக பரீட்சை வேண்டாம் என்று சொல்லும் சூழ்நிலை ஏற்படவில்லை. இதற்கான மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில்தான் இந்திய அரசு இதற்கென்று ஒரு குழு அமைத்து, கல்லூரி அளவிலும், பள்ளி அளவிலும் மாணவர்களைத் தேர்ச்சி பெற வைக்க என்ன முறையைக் கையாளலாம் என்று குழு அமைத்து ஆலோசனைகளைக் கேட்டிருக்கிறார்கள். அவைகளெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன. அந்த ஆலோசனைகளின்படி புதிய முறை பரிசீலிக்கப்பட்ட பிறகு மாற்றங்கள் ஏற்படலாம். இப்பொழுது பரீட்சை அறவே வேண்டாம் என்று சொல்லும் சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே வேலைநிறுத்தம் நடைபெறுகின்ற காலங்களில், அந்த வேலைநிறுத்தத்தைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்காக அரசாங்கத்தின் சார்பிலும், பல்கலைக் கழகத்தின் சார்பிலும் சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு குழுவை அமைத்து, அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உள்ளபடியே கூற வேண்டுமானால் அது வேலைநிறுத்தம் என்று சொல்வதற்கில்லை. ' படிப்பு நிறுத்தம் ' என்றுதான் பொருள்படும். ஒருவேளை ஆசிரியர்கள் பள்ளிகளுக்கோ, கல்லூரிகளுக்கோ போகாமல் இருந்தால் அதுதான் வேலைநிறுத்தம் என்பதாகப் பொருள். மாணவர்கள் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் போகாமல் இருப்பது வேலைநிறுத்தம் அல்ல, படிப்பு நிறுத்தம் எனப்படும். ஒவ்வொரு கல்லூரியிலும், கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், மாணவர் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட குழுவானது இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எல்லாவிடங்களிலும் இந்தப் பிரச்சினைகளில் அரசாங்க அதிகாரிகள் தலையிட்டால் அதுவே மாச்சரியத்திற்கு இடம் ஏற்படுகிறது. சில இடங்களில் அதிகாரிகள் தலையிட்டு சமாதானம் செய்து வைக்கிறார்கள். திட்டவட்டமான ஒரு முறையை ஏற்படுத்தி, அதைத்தான் எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று சொல்ல முடியாது. பிரச்சினையானது கட்டுக்கு மீறுகிற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பாடுபட்டு சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். திட்டவட்டமாக இந்த முறையைத்தான் வகுக்க வேண்டுமென்று அரசாங்க சார்புடைய குழுக்கள் அமைப்பது பொருத்தமாக இருக்காது. பிரச்சினைகளை ஆராய்ந்து கல்வித் துறையினருக்கும், அரசாங்கத்திற்கும், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர் பிரதிநிதிகள் கொண்ட குழு நல்ல ஆலோசனைகள் கூறினால், அது பற்றி கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக எடுத்துச்சொல்லப் பட வழி செய்யப்பட்டிருக்கிறது.

*Stipend to students of Technical Institutions.*

* 99 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the stipend given to the student (Low Income Group) of Technical Institutions; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியின் இறுதிநிலையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் ஓர் ஆண்டு, இரண்டு ஆண்டுகள் என்று பயிற்சி பெறுகிறார்கள். ப்ரீ டெக்னிகல் கோர்ஸ் படிக்கும் மாணவர்களுக்குச் சம்பளம் இல்லையென்று சொல்லப்படுகிறது. ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி படிக்கும்



மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவர்களுக்குத்தான் ஸ்டைஃபன்ட் கொடுக்கப்படுகிறது. அதாவது, பின்தங்கிய மாணவர்கள், அரிசனங்கள் போன்ற மாணவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, தொழிற்பயிற்சியில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் ஸ்டைஃபன்ட் கொடுக்கின்ற ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ப்ரீ டெக்னிகல் கோர்ஸில் சேருகிறவர்களுக்கு இப்போது சம்பளம் இல்லை. ஐ.டி.ஐ.-யிலும் சம்பளம் கிடையாது. சம்பளம் இல்லாமல் இருப்பதற்கு மேலாக சிலருக்கு ஸ்டைஃபன்ட் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. எல்லோருக்கும் ஸ்டைஃபன்ட் கொடுக்கப்படுவதில்லை. பின்தங்கிய நிலைமையில் இருப்பவர்களுக்கும், அவர்களை ஊக்குவிப்பதற்கும் ஆக மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு ஸ்டைஃபன்ட் கொடுக்கப்படுகிறது. எல்லோருக்கும் ஸ்டைஃபன்ட் கொடுக்க நிதிநிலைமை இடம் தரவில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ.-யில் பயிற்சி பெற்ற சிறப்பு மாணவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிற வேலைவாய்ப்பு நிறுவனங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு வேலைவாய்ப்புகளைப் பெறுகிறார்கள். ஆனால் ஓசூர் போன்ற எல்லையோரங்களில் இருக்கிற மாணவர்கள் பெங்களூர் போன்ற இடங்களில் தங்களைப் பதிவுசெய்துகொள்ள விரும்பினால், அவர்கள் பதிவுசெய்யத் தயங்குகிறார்கள் என்று புகார் சொல்லப் படுகிறதே, அது பற்றி தக்க பரிகாரம் காணப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. அதுபற்றி தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்போது பிற்பட்ட மாணவர்களுக்கு மட்டும் ஸ்டைஃபன்ட் கொடுக்கும் முறையை மாற்றி, எல்லோருக்கும் ஸ்டைஃபன்ட் கொடுத்து ஊக்குவிக்க இத்திட்டத்தை அரசு புனர்பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஸ்டைஃபன்ட் மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. அதாவது, ஏழைகளுக்கும், பின்தங்கியவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அந்தச் சலுகை எல்லோருக்கும் நீடிக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. அதற்கு நிதிநிலைமை இடம் தரவில்லை. ஆகவே, அதை இப்போது ஏற்றுக்கொள்வதற் கில்லை.

*Milch Cows*

100 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Public Health be pleased to state the steps proposal by the Government to increase the number of milch cows in the State?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இம்மாநிலத்தில் உள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குவதற்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளன :—

(1) சிந்தி, மூர்ரா, தர்பார்கர் போன்ற அதிகப் பால் நடைப்பண்ணைகள் அனைத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.
தரும் கறவை மாடுகள் இம்மாநிலத்தில் உள்ள மாவட்டக் கால்

(2) கால்நடைப் பண்ணைகளில் ஈன்றெடுக்கப்படும் காளைகள் அதிகப்பால் தரும் கறவை மாடுகளைப் பெறும் நோக்குடன் உள்ளூர் கறவை மாடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள கால்நடை மருந்தகங்களுக்கும், கால்நடை மருத்துவ மனைகளுக்கும், துறையின் பிற நிலையங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

(3) அதிகப் பால் தரும் கறவை மாடுகளை மாநிலத்திற்கு வெளியேயிருந்து வாங்குவதற்காக கறவை மாடுகளைத் தனிப்பட்ட முறையில் வளர்ப்பவர்களுக்கு கடனுதவியும், தொழில்நுட்ப உதவியும் அளிக்கப்பட்டது.

(4) 137 கால்நடை மருந்தகம்/மருத்துவமனை—கேந்திரக் கிராம நிலையங்கள் அனைத்திலும் செயற்கை இன விருத்தி முதன்மையாக நடத்தப்படுகிறது.

(5) உழவர்கள் கறவை மாடுகளை வளர்க்க ஊக்கமளிக்கும் பொருட்டு கால்நடைத் தீவன மேம்பாட்டுத் திட்டத்தை மும்முரமாக்கக் கருதப்பட்டுள்ளது.

**திரு. கே. என். பழனிசாமி :** தலைவர் அவர்களே, உலகத்தில் டென்மார்க்கில் இருக்கும் பசுக்கள்தாம் அதிக அளவிற்குப் பால் தருகின்றன. ஆகவே, டென்மார்க் பசுக்களை தமிழகத்தில் கொண்டு வந்து வளர்க்க வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, டென்மார்க் பசுவைப்பற்றி நேரிடையான விவரம் இல்லை. 1963-ல் கொழும்பு திட்டத்தின்படி சில உயர்தர ஜாதி ஜர்ஸி இன வகை 41 காளைகளும், 16 கடேரிகளும் பெறப்பட்டன. மற்றொரு இனமான ப்ரீஷியன் ஜாதிக் காளைகள் 6-ம், கடேரிகள் 6-ம் பெறப்பட்டன. இப்போதும் உயர்ந்த ஜாதி ரக பசுக்களை இன விருத்தி செய்வதற்கு ஜர்ஸி, ப்ரீஷியன் போன்ற இனங்களைக் கொண்டுவர முயற்சிக்கப் பட்டு வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் தரப்பிலே இருக்கிற ஓசூர் பண்ணையில் ஜர்ஸி போன்ற இனங்களை விருத்தி செய்வதற்காக சிறப்புத் திட்டம் அரசாங்கத்திற்கு, அந்த இலாகாவிலிருந்து அனுப்பப்பட்டிருக் கிறதா ? அப்படியென்றால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்போது இந்தக் கேள்வியின் தொடர்பாக விளக்கம் அளிப்பதற் கான குறிப்பு இல்லை. ஆனால் அங்கே, சிறப்பு இனமான ஜர்ஸியின் விந்துவைச் சேகரித்து, மாநிலத்தின் பிற பகுதிகளில் அனுப்பி, அதைப் பயன்படுத்தி, நல்ல ரக கன்றுகள் பிறக்க தக்க முயற்சி நடைபெற்று வருகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, ஒரிஸாவில் கறவை மாடுகள் அதிகமாக பால் தருகின்றன. அவை டெல்லி போன்ற நகரங்களில் தெருவில் அதிகமாகக் காணப்படுகின்றன. முன்பு அந்த இன மாடுகளை நமக்கு இலவசமாக அனுப்பியிருக் கிறார்கள். மீண்டும் அந்த இன மாடுகளைக் குறைந்த அளவிற்கேனும் இங்கே கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் நடைமுறையில் இல்லை. அப்படி கிடைக்கும் என்று சொன்னால் அதைச்செயல் முறையில் கொண்டுவரலாம். ஆனால் அவற்றைக் கொண்டுவரும் முயற்சியில் ட்ரான்ஸ்போர்ட் ஃபெஸிலிட்டி அவ்வளவு எளிதானதாக இல்லை.

THIRU B. VENKITASWAMY : Is it not a fact that we are in deficit of good Jersy and Friesian bulls in our State ? If so, what is the action taken by the Government to import such good breeding bulls?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது அவை போதுமான அளவுக்கு இல்லை என்பது உண்மைதான். ஆகவே மத்திய அரசினுடைய ஒத்துழைப்போடு வெளிநாட்டிலிருந்து வாங்கப்படவேண்டுமென்று கேட்கப்பட்டு இருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள் அனுமதிக்கிறார்களோ அந்த அளவுக்கு வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

**திரு. மு. இரத்தினசபாபதி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல பகுதிகள் வறண்டவையாக இருப்பதாலே அங் கெல்லாம் அதிக தீவனமில்லாத அளவுக்கு நிலைமை இருப்பதால் வேறு இன கறவை மாடுகளைக் கொண்டுவந்து விருத்திசெய்து பால் அதிகமாக உற்பத்தி செய்ய ஏதாவது திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாடுகளை நேரடியாக பிற இன மாடுகளை மக்களிடத்திலே பரவச் செய்வது என்பது இயலுகிற ஒன்று அல்ல. ஆங்காங்கு உள்ள மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு இனவிருத்தி முறையிலும் செயற்கைக் கரு முறையிலும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. தொடர்ந்து அப்படி இரண்டு தலைமுறைகள், மூன்று தலைமுறைகள் நடந்துவந்தால் பால் அபிவிருத்தியிலே குறிப்பிடத் தக்க பலன் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, recently the Hon. Minister for Planning of Union Government visited the Hosur taluk and said in a meeting that he would improve the Dairy farming scheme in the Hosur Cattle Farm by importing cows from England and also spending about Rs. 10 crores. He also said that the amount would be borne entirely by the Central Government. May I know from the Hon. Minister whether the Government had any discussion with the Union Minister or received any proposals in this regard?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கருவிலே உள்ள ஒரு திட்டம். பிறக்கிறபோதுதான் குழந்தையின் வடிவம் தெரியும். அது பிறப்பதிலே எந்தவிதமான தடையும் இருக்காது என்று நினைக்கிறேன்.

### கால்நடை வளர்மானம்

** 101 வினு—திரு. தோப்பூர் திருவேங்கடம் :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா— .

கால்நடைகள் அபிவிருத்திக்காக விழாக்கள் கொண்டாடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கால்நடை வார விழா கொண்டாடுவது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நல்ல மாடுகளை வாங்கக்கூடிய முறையில் ஒவ்வொரு ஊரிலும் மாட்டுச் சந்தைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றிற்கு நல்ல விளம்பரம் கிடையாது. எனவே அவற்றிற்கு நல்ல விளம்பரம் கொடுக்கக்கூடிய முறையில் வேண்டிய உதவிகளை மாட்டுச் சொந்தக்காரர்களுக்குச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது மாட்டுச் சந்தைகளில் 100-க்கு 90 தரம் குறைந்த நம்முடைய இனத்தைச் சேர்ந்தவைதான் வருகின்றன. தரம் குறைந்தவற்றிற்கு விளம்பரம் கொடுப்பது அரசாங்கத்திற்கு உகந்தது அல்ல. தரம் உள்ளவற்றிற்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்பதில் அரசாங்கம் அக்கறை காட்டும்.

### கால்நடைகளுக்குச் சித்தவைத்திய முறை

** 102 வினு—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைகளுக்குச் சித்த வைத்திய மருந்துகளை பயன் படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குச் சித்த வைத்திய மருந்துகளைப் பயன்படுத்தும் உத்தேசம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, பொதுவாக ஆங்கில மருத்துவ முறை ஒரு நோய்க்குத் தற்காலிகமாகத்தான் நிவாரணம் அளிக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அது ஒரு நோயை அழித்து இன்னொரு நோயை உண்டாக்கிவிடுகிறது. ஆனால் சித்த வைத்திய முறை மனிதனின் உடலிலுள்ள நோய்களை அப்புறப் படுத்தி விடக்கூடிய தன்மை பெற்றிருக்கிறது. எனவே அந்தக் கண்ணோட்டத்திலே மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் சித்த வைத்தியத் திட்டத்தை விரிவுபடுத்துகின்ற யோசனையை மறு பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய சில வாகட நூல்களும் மருத்துவ நூல்களும் தஞ்சை சரபோஜி நூல் நிலையத்தில் இருப்பதாகவும் அவற்றிலே சொல்லப் பட்டிருக்கின்ற முறைகளைச் சிலர் கையாள்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். ஆனால் அரசாங்கமே அவற்றை எடுத்து நடத்துவது என்பது உடனடியாக கவனிக்கப்படக்கூடியதல்ல. இப்பொழுது கால்நடைகளுக்கு வரக்கூடிய நோய்களைப் போக்கு வதற்கு தடை முறைகளை பிரிவென்டிவ் மெத்தட்ஸ், கையாண்டு நாம் முயற்சிகள் செய்துவருகிறோம். அதிலே வெற்றி கிடைக்கும் என்று நம்புகிறோம். சித்த மருத்துவ முறை விரிவாக்கப்படுவ தென்பது பின்னர் ஆலோசிக்கப்படும்.

### குறைந்த ஊதிய நிர்ணயம்

** 103 வினு—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யும் வேலைகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் தனித் துணைத் தொழிலாளர் கமிஷனர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் குறைந்த அளவு சம்பளத்தை வரையறுத்தல்/திருத்துதல் ஆகிய தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக ஒரு தொழிலாளர் துணை ஆணையாளர், ஒரு தொழிலாளர் நல அதிகாரி ஆகியோரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு உயர்நிலைக் குழுவின் முன்னிலை யில் பரிந்துரைகளுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் வரப்பெற்றவுடன் அரசு அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்.

[1971 டிசம்பர் 6

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்காக குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யும் குழுக்கள் அமைக்கப்பட்டும் கூலி நிர்ணயம் செய்வதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தனி ஆணையரை நியமித்து குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வதை துரிதப்படுத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இதற்கான பணிகளைக் கவனிப்பதற்காக ஒரு கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவதற்கு அரசு அனுமதியளித்திருக்கிறது. கனம் உறுப்பினர் சொன்னதைப் போல் விரைவில் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Have the Government any proposal to appoint anybody to go into the question of minimum wages for agricultural labourers in this State?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால் விவரம் தருவார்கள். பொதுவாக, எல்லா துறைகளுக்கும் இந்த வசதியைச் செய்வதுதான் அரசினுடைய நோக்கமாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, சமீபத்திலே திருச்சியிலே பீடித் தொழிலாளர்கள் இயக்கத்தின் சார்பாக அமைச்சர் அவர்களிடம் பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்வதற்கு குழு அமைக்கவேண்டும் என்று கேட்டபொழுது அமைச்சர் அவர்கள் குழு அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டுவிட்டதா ? எவ்வளவு காலத்திற்குள்ளாக அதன் சிபாரிசுகள் வெளியிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அந்தக் குழுவை அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் பத்து நாட்களில் நியமிக்கப்படும். ஆறு மாதங்களுக்குள் அறிக்கை தரப்படவேண்டுமென்று சொல்லப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்யாத ஸ்தாபனங்கள் எது எது இருக்கின்றன ? குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாத தொழிலாளர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கின்றார்கள் என்ற சர்வே எடுக்கப்பட்டிருக்கிறதா ? அந்தக் கணக்கு ஏதாவது அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, எத்தனை பேர்கள் என்ற விவரம் இல்லை. தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் 11 இருப்பதாகத் தெரிகிறது. தனிக் கேள்வி கேட்டால் விவரம் தரப்படும்.



1971 டிசம்பர் 6]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்வது அரசாங்கம் நடத்தும் தொழில்களிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் அமல் செய்யப்படுகிறதா ? அல்லது ஊருக்கு மட்டும்தான் உபதேசமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இந்த அரசு எப்பொழுதும் ஊருக்கு மட்டும் உபதேசம் செய்வதில்லை. நடைமுறையிலே கடமைகளைச் செய்து வருகிறது. எனவே எது சாத்தியமோ அவற்றை நிறைவேற்ற அரசு முயற்சி செய்யும்.

**திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் :** பிற்பட்டோர் நலக் கமிஷன் நெசவாளர்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அப்படிப் பட்ட நெசவாளர்கள் ஒரு நாளைக்கு இரண்டரை ரூபாய்தான் கூலிபெறக்கூடிய நிலைமை இருக்கிறது, அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள், அவர்களுக்கு கூலியை உயர்த்தவேண்டுமென்று ஊர்வலம் எல்லாம் நடத்தினார்கள். எனவே அவர்களுக்கும் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இந்தக் குழு நியமித்தவுடனே எல்லாவற்றையும் நாங்கள் பரிசீலனை செய்த பிறகு அந்த விவரங்களை சபைக்கு அறிவிப்போம்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றதா ? கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற பல தொழிற்சாலைகளிலே அவை கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? மு. ப. 9.30.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தனி நோட்டீஸ் கொடுத்தால் அதைப்பற்றிய விவரங்கள் தரலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கத் தரப்பில் உள்ள ரப்பர் தோட்டங்களிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு தனியார் நடத்துகின்ற ரப்பர் தோட்டங்களிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பெறுகின்ற கூலிக்கும் குறைவாகத்தான் தரப் படுகின்றது. எனவே, தனியார் நடத்துகின்ற தோட்டங்களிலே வேலைசெய்யும் தொழிலாளர்கள் பெறுகின்ற கூலியையாவது அரசாங்கத் தரப்பில் வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்கும் கொடுக்க அரசு உத்திரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தமாதிரி இதற்குத் தனிக் கேள்வி கேட்டால் விவரங்கள் அளிக்கப்படும்.

**DR. H. V. HANDE**: Sir, is it not a fact that this matter has been pending sinceo long time and especially since the last two or three years the cost of living index has gone up very high? Recently the cost of living words has been reviewed under a different method and the Central Government are also in touch with the State Government in that regard. I believe Shri Khadilkar has also given instructions to the State Government to see that it is implemented as early as possible. So, will this Government take concrete and expeditious steps to see that minimum wages are revised and the workers in our State get some sort of fundamental wage which would have some bearing on the present cost of living?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: இந்தக் குழுவின் பணியை விரைவிலே நிறைவேற்றுவதற்காகவும், அதற்காகச் சில அதிகாரிகளை நியமிப்பதற்காகவும் ஏற்கனவே அரசு முடிவெடுத்திருக்கிறது. அதைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு கண்காணிப்பாளரை நியமனம் செய்ய இப்பொழுது அரசு அனுமதித்திருக்கிறது. எனவே, உறுப்பினர் சொன்ன கருத்தையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்**: தலைவரவர்களே, நாட்டிலே உள்ள பல்லாயிரக்கணக்கான ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச உதவி கிடைக்காமல் சில ஹோட்டல்களில் இருக்கிறார்கள். ஆகவே, முதலிலே எடுக்கும் முடிவை ஹோட்டல் தொழிலாளர்களுக்கும், சலூன் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தலைவரவர்களே, அரசு நியமிக்க இருக்கும் குழு தனது அறிக்கையை அரசுக்குத் தருவதற்கு இடையிலே தொழிற்சங்கத் தலைவர்கள் தங்கள், தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும். அப்பொழுது அந்தக் கருத்துக்களைத் தெரிவித்தால் அந்தக் குழு தனது அறிக்கையைத் தெரிவிக்க வசதியாக இருக்கும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்**: சார், இந்தக் குழுவின் அறிக்கை எப்பொழுது சமர்ப்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: குழுவே இன்னும் அமைக்கப்படவில்லை.

**DR. H. V. HANDE**: Sir in view of the fact that this matter would cover different trades and categories of workers, may I knew from the Hon. Minister whether the workers employed in the cinema theatres—the one particular category which has always escaped the attention of the Government and there are 50 to 60 cinema theatres in the Madras City—who do not get minimum wages and who do not have any security of service, would also be covered by the proposed Committee?





**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தலைவரவர்களே, நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறேன். அந்தக் குழுவினிடத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படும். தொழிற் சங்கத் தலைவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். கனம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தும் நினைவில் கொள்ளப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: சார், எப்பொழுதுமே ஆணுக்கு ஒரு மாதிரி கூலியும், பெண்ணுக்கு ஒரு மாதிரி குறைந்த கூலியும் பல தொழிற்சாலைகளில் கொடுத்து வருகிறார்கள். இதனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள சமத்துவம் பாதிக்கப்படுகிறது. பெண்கள் அதிகமாக வேலை செய்கிறார்கள். அப்படியிருந்தும் கூலி மாத்திரம் குறைவாகக் கொடுக்கிறார்கள். எனவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகக் கூலி கொடுக்க இந்தக் குழு ஆலோசனை தெரிவிக்கும்படி இந்த அரசாங்கம் கூறுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தலைவரவர்களே, முன் இருந்த அரசாங்கத்தைவிட இன்றைய அரசாங்கத்தில் பெண்களுக்கு அதிகமாகச் சம்பளம் தர ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகச் சம்பளம் தரப்பட வேண்டுமென்பது எங்கள் ஆசையாகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: தலைவரவர்களே, இந்தக் குழு அமைக்க எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: தலைவரவர்களே, இன்னும் 10, 15 நாட்களுக்குள்ளாக இந்தக் குழு அமைக்கப்படும்.

### அரிசனங்களுக்கு தையல் மிஷின்கள் வழங்கல்

*** 104 வினா—திரு. எம். முத்தையா**: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-லிருந்து 1970 வரை எத்தனை தையல் மிஷின்கள் இனமாக அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன ?

(இ) எந்த மாவட்டத்திற்கு அதிகம் வழங்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து**: (அ) 2,533 மிஷின்கள்.

(இ) சென்னை மாவட்டத்திற்கு அதிகம்.

**திரு. எம். முத்தையா**: தலைவரவர்களே, இந்தக் கருவிகள் வழங்குவது அரிசனங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. இதே போல் மதம் மாறி கிறித்தவர்களாக இருக்கப்பட்ட அரிசனங்களுக்கும் இம்மாதிரி கருவிகள் வழங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசாங்கம் தருகிற சலுகைகள் அத்தனையும் மதம் மாறிய கிறித்தவ அரிசனங்களுக்கும் உண்டு. எனவே இது அவர்களுக்கும் பொருந்தும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இனாமாக வழங்கப்படும் தையல் மிஷின்கள் மிகவும் குறைந்தவையாக இருக்கின்றன. இந்த எண்ணிக்கை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே இதை இனிமேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்து எண்ணிக்கையை உயர்த்த முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர்கள் பயிற்சி பெறுகிறார்களோ அத்தனை பேர்களுக்குத்தான், பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் என்ற முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப்படி பயிற்சி பெற்றால் அதிக மிஷின்கள் தரப்படும். அதிலே 10 சதவிகிதம் வரை பணம் வசூலிக்கப்படுகிறது. சிலர் அந்தப் பணத்தை வசூல் செய்ய உடந்தையாக இல்லாததால் பயிற்சி பெற்றிருந்தாலும் கிடைக்காமல் போகலாம். இரண்டும் பூர்த்தியாக்கப்பட்டால் நிறைய மிஷின்கள் தர ஏதுவாக இருக்கும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர்களுக்குத் தையல் மிஷின்களை இனாமாக வழங்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அது பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சரவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்தக் குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாகத் தையல் கருவி அளிப்பது இன்னும் தாராளத் தன்மையோடு மேற்கொள்ளப்படுமா ? மேலும், இம்மாதிரி கொடுக்கப்பட்ட சில மிஷின்களை 5 ரூபாய் தவணை கொடுக்காத காரணத்தால் 25 ரூபாய்க்கு ஏலம் போட்டு என் தொகுதியில் நடந்த கொடுமையைப்போல் நடக்காமல் தடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நிறையக் கொடுப்பதற்கு நிதிநிலை இடம் தரவில்லை. அதைப்பொறுத்துத் தான் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும். வினியோகத்தில் சில கொடுமைகள் ஏற்பட்டால் அதை அரசாங்கம் கவனித்து நீக்க முடியும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு தையல் மிஷின்கள் வழங்கப்பட்ட பிறகு அவைகள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டி



யிருக்கிறது. இவைகளைத் தவிர்க்க ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அல்லது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இவர்கள் மூலமாக வழங்கப்படுகின்றனவா ? அல்லது சரிவர நடவடிக்கை எடுக்க தனி அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நலத்துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக அவை வினியோகிக்கப்படுகின்றன. அவர்கள் மாதாமாதம் சென்று ஒழுங்காக நடத்தப்படுகிறதா, உண்மையிலேயே வழங்கப்பட்ட மிஷின்கள் மூலம் தொழில் செய்கிறார்களா என்பதைக் கண்காணித்துத்தான் வருகிறார்கள்.

*Coaching centres for competitive examinations*

* 105 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to increase the coaching centres for Scheduled Castes and Scheduled Tribes candidates seeking competitive examinations; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, பல மாவட்டங்களிலே போட்டிப் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குச் சலுகை தரப்படாமல் இருப்பதால் மாவட்ட வாரியாக ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது குரூப் 4—ஜூனியர் அசிஸ்டெண்ட்ஸ் என்ற சர்வீசிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டந்தோறும் புதிய பயிற்சி நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது 20 இடங்களில், ஒவ்வொரு நிலையத்திலும் 50 மாணவர்கள் வீதம் 1,000 மாணவர்களுக்கு 1 ஆண்டுக்குப் பயிற்சி தரும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

ஏழை உழவர்களுக்கு நிலம்

* 106 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் விவசாயத்திற்கு அரை ஏக்கர் நிலமும், வீடு கட்ட ஐந்து செண்டு இடமும் இலவசமாக வழங்கிட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

[1971 டிசம்பர் 6

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வியில் ஒவ்வொரு வருக்கும் என்று இருப்பதால் விடை 'இல்லை' என்று சொல்கிறேன். இருந்தாலும் நாட்டில் எவ்வளவு நிலம் இருக்கிறதோ, அரசாங்கத்திற்குத் தேவையற்றது என்று கருதப் படும் நிலங்களை ஒவ்வொரு ஏழை விவசாயிகளின் குடும்பத்திற்குப் பிரித்துக் கொடுக்க அரசாங்கம் ஏற்கனவே திட்டம் வகுத்திருக் கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப்போல் இந்தத் துறையும் சிறப்பாக வெற்றிபெற தனி வாரியம் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, ஏழை விவசாயி களுக்கு என்று சொல்லும்பொழுது நாட்டிலே அரிசனங்கள்தான் நிலமில்லாத மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் வழங்குவதில் முன் உரிமை அளிக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இருந்த அரசாங்கம் போட்டிருந்த உத்தரவை மாற்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிக்க உத்தரவைத் திருத்தி அமைத் திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரையில் கன்னியாகுமரி ஜில்லாவில் யாருக்கும் நிலம் வழங்கப்படவில்லை. ஆகவே இனிமேலாவது கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள ஏழைகளுக்கும் இம்மாதிரி நிலம் வழங்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ரயத்துவாரி முறை அமைக்கப்பட வில்லை. இங்கிருக்கும் நிலங்கள் அடைமானம் செய்து கொடுப்பதற்குப்பதில் குத்தகைக்குக் கொடுக்க அரசாங்கத்தின் ஆணை இருக்கிறது. விரைவில் அடைமானம் செய்யும் முறையில் அமலாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல் : அரசு புறம்போக்கு நிலங்கள் ஏழை களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் எவ்விதப் பட்டாவும் இல்லாமல் போடி



1971 டிசம்பர் 6]

தொகுதியில் அகமலை, முதுக்கொம்பை போன்ற பகுதிகளில் ஒரு நிலப் பரப்பையே, 500 ஏக்கர், 600 ஏக்கர் அளவு நிலங்களை எந்தவிதப் பட்டாவும் இல்லாமல் அனுபவித்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து அந்த நிலங்களை எடுத்து ஏழை மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப் பற்றி அங்கத்தினர் அவர்கள் புகார் எழுதித் தருவார்களேயானால், யாரிடம் நிலங்கள் அவ்வாறு இருந்தாலும் சரி, தயவு தாட்சண்யம் இல்லாமல் அரசாங்கம் அவற்றை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு நிலமாகவும், வீட்டு மனைகளாகவும் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : ஏழை பாட்டாளி மக்களுக்குத் தரிசு நிலங்களுக்குப் பட்டா வழங்குவதில் தமிழக அரசு தலைசிறந்து விளங்குகிறது என்பது உண்மையாக இருந்தாலும் அவற்றை வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்த்து, துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்காகத் தனித் தனிப் பிரிவுகள் ஏற்படுத்தி, தனித் தாசில்தார்கள், தனி ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போட்டு துரிதமாகப் பட்டா செய்து கொடுக்கும்படி கூறப்பட்டிருக் கிறார்கள். மாதந்தோறும் எவ்வளவு பட்டா செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டு மென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : நீலகிரி மாவட்டத்தில் நிலங்களை ஏழைகளுக்குப் பட்டா செய்து கொடுக்க பொதுத் தடை இருக்கிறது. அதன் காரணமாக இதுவரை யாருக்கும் நிலம் வழங்கப்படவில்லை. அந்தத் தடை நீக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தத் தடை இப்போது நீக்கப்பட மாட்டாது. நீலகிரி மாவட்டத்தில் விலை உயர்ந்த நிலமாக இருக்கும் காரணத்தால் இப்போது அந்தத் தடையை நீக்க உத்தேசம் இல்லை. அங்கே கூட யாருக்கும் நிலம் கொடுப்பது என்பது பற்றி நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்தால் அரசு அது பற்றிக் கவனிக்கும்.

திரு. நா. வீராசாமி : இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிகமான அளவுக்கு வீட்டு மனையும், நிலப் பட்டாவும் வழங்கப் பட்டிருக்கிறது. ஆனால் அவை பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வீட்டு மனை இல்லாதவர்களாக இருந்தால் அவர் களுக்கும் வீட்டு மனை வழங்குவதற்கு அதைப் பற்றிய ஒரு சர்வே எடுத்து வீட்டு மனை இல்லாதவர்கள் அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1971 டிசம்பர் 6

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி சர்வே ஒன்றும் எடுக்கப்படவில்லை. புறம்போக்கு நிலம் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் அவை அரசாங்கத்திற்குத் தேவையற்ற நிலையில் அரசாங்கம் பரிசீலித்து வீட்டு மனையாக வழங்கி வருகிறது.

**திரு. கு. அ. பொம்மன் :** நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்குள்ள தடையை நீக்க வேண்டுமென்று அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் ஒப்படை செய்வதில் தடங்கல் ஏற்படுகிறது என்ற காரணத்தால் அந்தத் தடையைத் தளர்த்த வேண்டுமென்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரை குடிசைகளில் வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைக்கட்டுகளைச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது. இருந்த போதிலும் திருவாலம்பொழில் என்ற கிராமத்தில் ஒரு பண்ணைக்குச் சொந்தமானவர் குடிசை போட்டு வசித்து வந்த 22 குடும்பங்களை வெளியேற்றி இருக்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்டால் 2-C பட்டாவிலிருந்து வெளியேற்றலாம் என்று கூறுகிறார்கள். இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதுபற்றி அரசுக்குத் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாட்டின் விடுதலை வீரர்கள் நிலம் இல்லாத ஏழைகளாக பல இடங்களில் புறம்போக்கில் பயிர் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அந்த நிலங்கள் ஒப்படை செய்து கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு ஏற்கனவே நிலம் தரப்பட்டிருக்கிறது. தரப்பட்ட நிலங்களைச் சிலபேர் விற்றுவிட்டிருக்கிறார்கள் என்பதையும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். புறம்போக்கு நிலமாக இருந்து அரசாங்கத்திற்கு ஆட்சேபணை இல்லாத நிலமாக இருந்தால் அதைப் பற்றி அவர்கள் எழுதி அனுப்பினால் அந்த நிலம் அவர்களுக்குத் தரப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சட்டசபை முதல் தொடரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாதிரி 5 சென்ட் நிலம் வீட்டுக்காகவும், அரை எக்கர் நிலம் விவசாயத்திற்காகவும் எல்லோருக்கும் கொடுக்க முயற்சி செய்வோம் என்று சொன்னார்கள். அதுமாதிரியான காக்கீது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுப்பி இருந்தால் அதன்படி நிலம் கொடுக்கும்போது பர்மா அகதிகளுக்கும், சிலோன் அகதிகளுக்கும் முதலிடம் தரப்படுமா ?



1971 டிசம்பர் 6]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டுக்குக் குடிபெயரும் தமிழ் மக்களுக்காக கடனாகப் பணம் தந்து வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. பல இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

### சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு நிலம்

* **107 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம் தூரிஞ்சிப்பட்டியில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் வளர்ச்சிக்காக மானியமாக நிலம் வழங்கக் கோரி அரசுக்கு மனு ஏதேனும் சமீபத்தில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Committee on Sales Tax.*

* 108 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Varthaga Munnetra Kazagam under the Chairmanship of Thiru A. C. Narasimhan, Hon. Member of this House, has requested the Government to appoint an enquiry panel for the sales tax enforcement about the 3rd August 1971;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் விற்பனை வரிச் சட்டத்தை எளிதாக்கி வர்த்தகர்களுக்கு ஏற்படும் தொல்லைகளை அதனால் தவிர்க்க, " விற்பனை வரி விசாரணை ஆணைக் குழு " ஒன்றை நியமிக்குமாறு சென்னை, தமிழ்நாடு வர்த்தகர் முன்னேற்றக் கழகம் அரசைக் கேட்டுள்ளது.

(உ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** விற்பனை வரி செலுத்தாமல் தப்பித்துக் கொள்வதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விற்பனை வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறவர்களைத் தடுக்க அரசாங்கம் பல வழிகளைக் கைக்கொண்டிருக்கிறது. சோதனைச் சாவடிகள் அதிகமாக்கப்பட்டிருக்

இன்றன. பல இடங்களில் விற்பனை வரி அதிகாரிகள் கணக்குகளைப் பறிமுதல் செய்து தணிக்கை செய்கிறார்கள் வேறு பல முறைகளையும் கையாண்டு வருகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வர்த்தகர்கள் இந்தப் பல முனை வரி வேண்டாம், ஒரு முனை வரி போடுங்கள், அரசாங்கத்தின் வருவாய் குறையாமல் பார்த்துக் கொள்ளுகிறோம் என்று கூறுகிறார்கள். அரசாங்கம் உடனடியாக எந்தெந்தப் பொருள்களுக்கு அந்த வகையில் ஒரு முனை வரி போடலாம் என்று ஆராய்ந்து ஆவன செய்வார்களா ? உணவுப் பொருள்களின் மேல் போடப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்யவேண்டுமென்று ஏழை மக்கள் கோருகிறார்கள்.. அதுபற்றி அரசு ஆய்வு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இரண்டு விஷயங்களைப் பற்றி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வியாபாரிகள் கோருகிறபடி பலமுனை விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றினால் அரசாங்கத்திற்கு நிச்சயமாக நஷ்டம் வரும். பல முனை வரி இருப்பதன் காரணமாக ஏதாவது ஒரு முனையில் வரியை ஏமாற்றினால்கூட இன்னொரு முனையில் கண்டு பிடிக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு முனை விற்பனை வரி என்று போட்டால் வரி ஏய்ப்பு நடந்தால் அதைக் கண்டுபிடிக்க முடியாமலே போய்விடும். அடுத்து, உணவுப் பொருளுக்கு விற்பனை வரியைத் தள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கோதுமைக்குப் போடப்பட்ட அரை சதவிகித வரியைப் பற்றிக் கூறுகிறார்களா அல்லது எண்ணெய் போன்றவற்றுக்குப் போடப்பட்டுள்ள வரியைக் குறிப்பிடுகிறார்களா என்று தெரியவில்லை என்பதைப்பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று விவரமாகச் சொன்னால் பதில் சொல்ல முடியும்

**திரு. கே. எ. வகாப் :** புதிய வரிகள் போடும்போது வியாபாரிகளுடைய சிரமங்களையும் பற்றிக் கலந்து ஆலோசிக்கவும், புதிய வரிகள் போடும்போது நிலைமை பற்றி ஆராயவும் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே வியாபாரிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக்கிறதா? அவ்வாறு வியாபாரிகளைச் சேர்க்க அரசுக்கு எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கெனவே சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி என்று இருக்கிறது. அந்தக் குழுவை ஆண்டு தோறும் புதுப்பிக்கும்போது அதிலே வியாபாரக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அங்கம் பெறுகிறார்கள்.

DR. H. V. HANDE : In this particular committee which the Government are going to appoint, will they take into consideration the methods by which the whole process of collection of sales tax could be streamlined? As it is, it is difficult for persons to collect. There is lot of delay between the time the notice is given and the time they pay. Will the Government give an indication how the streamlining is going to take place? The officers, I mean Sales Tax Officers, number of them are not provided with proper buildings for their offices. They should be in a position to take quick decisions. The whole department has to be streamlined, something like income-tax department, where things take place quickly with out any tears on the part of the persons who are assessees?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விற்பனை வரிக் குழு ஒன்று நியமித்ததற்குப் பிறகு இவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்காமல், துன்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்க அதிகாரிகள் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கட்டடங்கள் இல்லை என்று சொன்னார்கள். கட்டடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கட்டடம் கட்டி முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஒரு கட்டடம் கட்ட இருக்கிறார்கள். சென்னையில் கூட விற்பனை வரி அலுவலகதிற்காகத் தனியான கட்டடம் கட்ட அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

## புதிய தொழில்கள் துவக்கம்

* 109 வினா—திரு. கே. எ. வகாப் :<br>
திரு. கே. டி. கே. தங்கமணி : } மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ற ஆகஸ்டு மாதத்தில் தமிழக தொழில் அமைச்சர் வெளிநாடுகளுக்கு சென்றதின் பலனாக என்னென்ன புதிய தொழில்கள் தமிழ்நாட்டில் துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் இரசாயன மற்றும் இயந்திரத் தொழில்களுக்கு தொழில் நுட்ப உடனுழைப்பு தருவதற்கு அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் இசைந்துள்ளன. இதனைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைமையினரும் தொழிற்கழகங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. எ. வகாப் :** தமிழ் நாட்டில் வெளிநாடுகளின் உதவியோடு அல்லது ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்தத் தொழிற்சாலைகள் இது வரையில் தமிழ் நாட்டில் இல்லாத தொழிற்சாலைகள் ஏதாவது இருக்கின்றனவா ? அவற்றின் மூலம் அன்னியச் செலாவணி எந்த அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிதாக வருகிற தொழிற்சாலைகளைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். அன்னியச் செலாவணி பற்றி மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஹங்கேரி போன்ற சோஷலிஸ நாடுகளுக்கு, இன்னும் பல முன்னேற்றகரமான நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் பார்த்த சில விஷயங்களையும்-நம் தமிழ்நாட்டிற்கு எந்த முறையில் பொதுத்துறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பது போன்ற விஷயங்கள் பற்றி ஓர் அறிக்கையை இந்தச் சபைக்கு சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமாக கேள்விகளுக்கு பதில் சொல்ல வாய்ப்பு இக்கிற காரணத்தினால் ஓர் அறிக்கை தேவை இல்லை. ஹங்கேரியில் அந்த நாட்டு தொழில் அமைச்சர் அவர்களுடன் விவாதிக்கப்பட்டது. ரசாயனத் தொழிற்சாலை, குறிப்பாக மருந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கு நம் தமிழ்நாட்டில் வந்து ஆராய்ச்சி செய்து அவற்றைத் தொடங்குவதற்கு விருப்பத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 16 கேள்விகள் இருக்கின்றன. ஆனால் கேள்வி நேரம் இன்னும் எட்டு நிமிடங்கள்தான் இருக்கிறது. இவ்விதம் துணைக்கேள்விகள் கேட்கத் தொடங்கினால் இன்னும் இரண்டு மணி நேரம் கேள்வி நேரத்திற்காக நீட்டிக்க வேண்டிவரும். எனவே, முக்கியமான கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்பது என்ற முறையை அனுசரித்து மூலக் கேள்வி கேட்டவர்களுக்கு மட்டும் ஒன்றிரண்டு துணைக் கேள்விகள் என்ற முறையில் நாம் வேகமாகச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

* 110 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்கள் தொடங்க லைசென்ஸ் முறைகளை ரத்து செய்ய வேண்டி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு இந்த லைசென்ஸிங் முறை பல நேரங்களில் இடையூறாக இருப்பதாக கருதப்படுவதால் அதை நீக்குவதற்காகவாவது அல்லது அதிலுள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவாவது இனி மேலாவது நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முழுவதும் ரத்து செய்ய வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் இல்லை என்று சொன்னேன். நமது அரசு தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக மத்திய அரசு ஒரு புதிய கொள்





கையை அறிவித்து ஒரு கோடி வரையில் லைசென்ஸ் தேவை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இறக்குமதி என்று வெளி நாட்டுச் செலாவணி வந்தால் மத்திய அரசின் அனுமதி தேவை என்றிருக்கிறது. அதையும் அதிகப்படுத்தி 20 லட்சம் வரையில் இறக்குமதிக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்பட்டால் அவைகளுக்கு லைசென்ஸ் தேவை இல்லை என்று அறிவிக்கவேண்டும் என்று நம் அரசு வற்புறுத்தியிருக்கிறது. இன்னும் பல ஆலோசனைகள், தொழிற்சாலைகளை விரைவில் தொடங்க ஊக்கம் தரும் வண்ணம் இந்தக் கொள்கை அமல்படுத்தப்பட வேண்டும். காலதாமதத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் வலியுறுத்தி வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Is this limit of Rs. 1 crore extended to Rs. 5 crores now, if there is no foreign exchange involved? That is, whether the State Government can give licences or permission to start industries with a capital of Rs. 5 crores if foreign exchange is not involved?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு கோடி பொறுத்த வரையில் 10 சதவீதம் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி என்பது இருக்கமுடியாது.

### செங்கல் உற்பத்திச்சாலை துவக்கக் கடன்கள்

* 111 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல் தொழிற்சாலைகள் துவக்குவதற்குக் கொடுத்து வந்த கடன் உதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாட்டு செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் செங்கல் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கடனுதவி பெற தகுதி பெற்றவைகளாயுள்ளன.

திரு. பி. எஸ். மணியன் : நாட்டுச் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது என்பது நிறுத்தப்பட்டு விட்டது. அந்தத் தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படுகிற காரணத்தினால் அதுகுறித்து மறுபரிசீலனை செய்து கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இயந்திரச் சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்தால் நல்ல செங்கல் விரைவாக, ஏராளமாக, செலவைக் குறைத்து உற்பத்தி செய்யப்படும் என்ற காரணத்தினால் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.

### கடையநல்லூர் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

* 112 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூரில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கையாடல், ஊழல் காரணமாக செயல்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இந்தக் கையாடல்களுக்கு யார் காரணம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கடையநல்லூரில் இருந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகஸ்தர்களும் சில சிப்பந்திகளும் காரணமாவர் என்று தெரியவருகிறது.

திரு. கே. எ. வகாப் : நிர்வாகக் குறைபாட்டின் காரணமாக இப்போது பல நூற்றுக்கணக்கான ஏழை நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு அவர்கள் தனித்தனியாக தங்கள் தொழிலை விட்டு விட்டு வயிற்றுப்பாட்டிற்குக் கஷ்டப்படுகிற நேரத்தில் கோர்ட்டுக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய கேஸ் இப்போது, நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து 40, 50 மைல்களுக்கு அப்பாலுள்ள பாளையங்கோட்டை நடத்தப்படுவதால் முன்பு நடத்தப்பட்டு வந்த இடத்திலேயே நடத்துவதற்கு விண்ணப்பம் செய்திருப்பதாக அறிகிறேன். ஆகவே ஏழை நெசவாளர்களின் நலனை உத்தேசித்து உடனடியாக அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏழை நெசவாளர்களாக இருந்தாலும் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

(இச்சமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் பலத்த ஆரவாரம் செய்தார்கள்.)

ஆனால் நீதிமன்றத்தின் அமைப்பைப் பொறுத்து பக்கத்தில் தென்காசிக்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அரசாங்கம் அனுமதி தந்திருக்கிறது.

### *Pre-shrunk handloom cloth.*

* 113 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the co-optex is marketing pre-shrunk cloth and cloth materials; and

(*b*) if so, the details thereof?



THE HON. THIRU S. MADHAVAN :

(*a*) Yes.

(*b*) About 5.50 lakhs sq. metres of handloom cloth has been processed in the Erode plant of co-optex after pre-shrinking and released to various selling units of the co-optex since December 1970 .The sale value of the cloth is of the order of Rs. 20 lakhs.

திரு. என். டென்னிஸ் : இந்த வகை துணி ஆலைகள் மூலம் உற்பத்தி செய்வதற்கும் கைத்தறி மூலம் உற்பத்தி செய்வதற்கும் இடையே ஏற்படும் உற்பத்திச் செலவின் வித்தியாசத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரம் இல்லை.

### *Dhanushkodi Road.*

* 114 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to reconstruct Dhanushkodi road; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை தனுஷ்கோடி பெருஞ்சாலையை திருத்தி அமைக்க ஏற்கனவே சில வேலைகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது அச்சாலையில் பாம்பன் கால்வாயின் குறுக்கே ஒரு சாலைப்பாலம் கட்டும் திட்டத்திற்குத் தான் மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இராமேஸ்வரம், தனுஷ்கோடிக்கு போகக்கூடியவர்கள் இன்னும் பாம்பன் ரயில் பாலம் வழிதான் போகவேண்டியிருக்கிறது. சென்ற சட்டமன்றத் தொடரில் இந்த பாம்பன் பாலம் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த பாம்பன் பாலம் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்படுவதற்கும் தனுஷ்கோடிக்கு நேராக ரோடு போடுவதற்கும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இராமேஸ்வரம் தனுஷ்கோடி சாலைக்கு வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

(1) Forming and metalling the road Rameswaram to Dhanushkodi (via) Rameswaram road R. S. Estimate Rs. 15,58,700.

(2) Construction of 24 Nos. of cross drainage works in the road from Rameswaram to Dhanushkodi Estimate Rs. 5,47,155.

(3) Blacktopping the road from Rameswaram to Dhanushkodi (via) Rameswaram road R.S. Estimate Rs. 2,16,000.

(4) Providing Kankar shoulders to the road from Rameswaram to Dhanushkodi road Estimate Rs. 3,35,000.

(5) Redecking the pier to Dhanushkodi. Estimate Rs. 17,00,000.

இந்த வேலைகள் நடைபெற்றிருக்கின்றன, பாம்பன் பாலத்தைப் பொறுத்தவரையில் 532.87 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவாக அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அனுமதி கிடைத்ததும் வேலைகள் தொடங்கப்படும்.

## மாயூரம்-தஞ்சாவூர் நெடுஞ்சாலை

*115 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-தஞ்சாவூர் அரசினர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் சொற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சாலையின் ஒரு பகுதியை விரிவுபடுத்தும் வேலைக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## வெள்ள பராமரிப்புக்கோட்டப் பணியாளர்கள்

* 116 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— ன்

வெள்ளப் பராமரிப்புக் கோட்டத்தில் பணிபுரிந்த 10 (a) (1) பாட விலக்களிக்கப்பட்டவர்களுக்கு வேறு இடங்களில் வேலை அளிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

*Rain waters flowing into sea from Kanyakumari district.*

* 117 Q.—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have set up any special team to find out the quantum of water emptied into the sea from the various rivers and channels in Kanyakumari district during the two seasonal rainy periods every year?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. டி. கணபதி : குமரி மாவட்டத்தில் மழைக்காலங்களில் அங்குள்ள அணைகள் எல்லாம் பெருகி ஜூன், ஜூலை, அக்டோபர், நவம்பர் மாதங்களில் கடலில் வீணாகத் தண்ணீர் போவதை அண்டையிலுள்ள வறட்சிப் பகுதியான நாங்குனேரி வட்டத்திற்குத் திருப்புவதற்கு ஒரு குழு அமைத்து வேண்டியதைச் செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மு.ப.
கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு, பரளியாறு ஆகிய 10.00.
ஆறுகளின் குறுக்கே ஏற்கெனவே அணைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. மின்சார வாரியத்தால் ஏற்கெனவே அணைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. தற்போது பாசன வசதிக்குப் போதுமான தண்ணீர் இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆகவே, தனிக் குழு அமைத்துப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் மழை காலத்தில் ஏராளமான தண்ணீர் கடலில் பாழாகிப் போகிறது. ஆகவே, மாம்பழத்தாறு அணை, இன்னும் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன, அந்தத் திட்டங்களை அமல் நடத்தினால் இந்த வீணாகிப்போகும் தண்ணீரைப் பாதுகாத்து இன்னும் அதிகமாகப் பாசன வசதி ஏற்படுத்தலாம். இதை அரசாங்கம் சிந்தித்து பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொறியாளர்கள் கொடுத்து இருக்கும் விவரத்தின்படி அதிகமான தண்ணீர் கடலுக்குப் போவதாக இல்லை. ஏற்கெனவே சில அணைகள் கட்டத் திட்டமிட்டு இருக்கிறோம். அந்த அணைகள் சம்பந்தமான வேலைகள் முடிந்த பிறகு, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கோதையாறு புத்தகம் என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அதிலே 7 அணைகள் கன்னியாகுமரி மாவட்டத்திலே கட்ட வாய்ப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 5 அணைகள்தான் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் 2 அணைகள் கட்ட வாய்ப்பு இருக்கிறது. மழை காலத்தில் ஏராளமான தண்ணீர் பாழாகி கடலில் போய் விழுகிறது. இந்தத் தண்ணீரை திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாங்குநேரிப் பகுதிக்குத் திருப்பி விட்டால், அந்தப் பகுதியில் இருக்கும் கண்மாய்கள் நிரம்பும். அந்தப் பகுதியில் இருக்கும் கிணறுகளில் தண்ணீர் இல்லை. இந்தக் கண்மாய்கள் நிரம்பினால் அங்கிருக்கும் கிணறுகளுக்கும் தண்ணீர் வரும். அதற்காக வேண்டியேனும் அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பொறியாளர்கள் கொடுத்து இருக்கும் தகவல்படி இப்போது அதிகமான தண்ணீர் எதுவும் வீணாகவில்லை. அங்கிருக்கும் தண்ணீர் நிலைமைக்கேற்ப ஏற்கெனவே அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, அதைப்பற்றி தற்போது பரிசீலிப்பதற்கு இல்லை என்று பொறியாளர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம் முடிவடைகிறது. இன்னும் 8 விளுக்கள் இருக்கின்றன. அவைகளை அச்சடித்து உறுப்பினர்களுக்கு வழங்கிவிடலாமா? ஏறத்தாழ 400-500 கேள்விகள் இருக்கின்றன. 30 விளுக்கள் என்று வைத்துக் கொண்டால் அது முடிவதில்லை. ஒரு நாளைக்கு 20 கேள்வி தான் என்று வரம்பு வைத்துக்கொண்டாக வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கேள்வி நேரத்தை எக்ஸ்டெண்ட் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே தலைவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : We can extend the question hour by 10 minutes.

### " சுஜாதா " வகைப் பருத்தி சாகுபடி

*** 118 விளு—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சுஜாதா என்கிற ஒரு வகை பருத்தி பயிரிட வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் பிரச்சாரம் செய்யப்பட்டதா ?

**(இ) ஆம் என்ருல், அதன் விவரம் என்ன ?**

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) சுஜாதா என்ற ரகப்பருத்தி 1969–70-ம் ஆண்டில் 25 ஏக்கரில் மட்டும் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ரகப்பருத்தி 90-100-ம் எண் நூற்புத்திறன் உடையதால் சிறந்த மிகு இழையுள்ள பருத்தியாகும். இதனை அதிக அளவு பரப்பளவில் பயிரிட விவசாயிகளுக்கு போதிய ஊக்கம் அளிக்க மத்திய அரசு ஒரு திட்டத்தை மேற்கொண்டு நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி சுஜாதா ரகப்பருத்தி பயிரிட பூச்சி கொல்லி மருந்துக்கு 50 சதவீதம் மான்யம் அளிக்கப்படுகிறது. 1970–71-ல் தமிழ்நாட்டில் கோவை. பொள்ளாச்சி, மற்றும் அவிஞசிப்பகுதியில் 1,000 ஏக்கர் பரப்பளவில் இப்பருத்தி பயிர் செய்யப்பட்டது. 1971–72-ல் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் இப்பருத்தியை பயிர்செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. அகில இந்திய வாெஞெலிமூலமும், முன்னேற்ற பருத்தி விவசாயிகளின் நிலங்களில் இப்பருத்தி பயிர் செய்யப் பட்டதால் ஏற்பட்ட முன்னேற்றங்கள், தன்மைகள் ஆகியவை பற்றி விவாதம் நிகழ்த்துவதன் வாயிலாகவும் இப்பருத்தியின் சாகுபடி பரப்பளவை மேலும் அதிகமாக்க விரிவாக விளம்பரம் செய்யப்பட்டது.





**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்த சுஜாதா பருத்தி அதிகமான மகசூலைத் தருகிறது என்ற காரணத்தால் விவசாயிகள் சுஜாதா பருத்தியை மிக அதிகமாகப்போடுகிருர்கள். ஆனல் குறைந்தது பூச்சி கொல்லி மருந்துக்காக 50 சதவீதம் சப்சிடி கொடுப்பதாக சொன்னர்கள். ஆனல் 33 சதவீதம் கூட கொடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் அதிகப்படியான விலை கொடுத்து அதை வாங்கவேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் பருத்தியின் விலையும் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பரிசீலனை செய்து, அரசாங்கம் அதற்கு அதிகப்படியான விலையைக் கொடுப்பதற்கும், பெர்டிலைசருக்காக 33 சதவீதம் சப்சிடி கொடுப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, செவின் கோயம்புத்தூர் மாவட்டத்திற்குத் தேவைப்படுகிறது. உள்நாட்டு செவின்தான் கொடுக்கமுடியும். வெளிநாட்டு செவின் கொடுக்கமுடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டு விட்டுச்சென்று இருக்கிருர்கள். மறுபடியும் அவர்கள் வந்ததற்குப்பிறகு இதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நாட்டுக்கு பருத்தி பற்ருக்குறை இருக்கிறது. அதைத் தீர்க்கும் முறையில் இந்த சுஜாதா பருத்தியை பயிரிட்டால் நன்ருக இருக்கும். இதற்குத் தேவைப்படும் செவின், மற்றும் காம்போனென்ட்ஸ் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் தேவைப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா, ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** முதல்வர் அவர்கள் வந்ததற்குப் பிறகு சொல்லலாம் என்று சொன்னேன். முதல்வர் அவர்கள் வந்துவிட்டார்கள். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

### *Cold Storage Unit for Hosur Taluk.*

* 119 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a cold storage unit for storing potatoes and vegetables in Hosur Taluk in Dharmapuri district; and

(*b*) if so, when it will be constructed?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, we are importing potatoes from Simla to the tune of three to four lakhs of rupees per year by paying abnormal rates. If we construct a cold storage

unit at Hosur, we can save money and also stop the import of potatoes from Simla. So, will the Government come forward to start a cold storage unit in the Hosur taluk?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஏற்கெனவே இப்போது நீலகிரியில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. சென்னையில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

### விமான மூலம் பூச்சி மருந்து தெளித்தல்

* 120 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சி மருந்து தெளிக்கும் விமானப் பிரிவு ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) பூச்சி மருந்து தெளிக்கும் பணிக்காக இரண்டு ஹெலிகாப்டர்கள் வாங்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. செலவினங்கள் மற்றும் இதர விவரங்கள் வேளாண்மைத்துறை இயக்குநரால் ஆராயப் பட்டு வருகின்றன.

**திரு. எ. சுவாமிதாஸ் :** சார், இந்த பூச்சி மருந்து தெளிப்பதற்குத் தற்போது நாம் வாடகை விமானங்களை அமர்த்து கிறோம். ஒரு ஏக்கருக்கு தெளிப்பதற்கு எவ்வளவு வாடகை கொடுக்கிறோம் என்பதை அரசு தெரிவிக்குமா ? அது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் மருந்து தெளிப்பதற்கு என்று ஹெலிகாப்டர் வரவழைக்கப்பட்டது. அது பழுதாகிவிட்ட காரணத்தால் அதை அங்கே உபயோகப்படுத்த முடியவில்லை. அது பற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அந்த ஹெலிகாப்டர் பழுதாகிவிட்ட காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மீண்டும் மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. எ. சுவாமிதாஸ் :** ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்றும் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ. 11.30 காசுகள்.

**திரு ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டர் பழுது அடைந்துபோய் மருந்து தெளிக்கப்படவில்லை. அதே நேரத்தில் விவசாயிகளிடமிருந்து



கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து தெளிக்காததால் பயிர் சேதம் அடைந்திருக்கிறதோடு, பணமும் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மருந்து தெளிக்கப் படும்.

### ஜவ்வாது மலையிலுள்ள வனவிலங்குகள் புகலிடம்

* 121 வினு—**திரு. தொ. ப. சீனிவாசன் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைத் தொடரில் அம்மாதி தங்கும் விடுதி அருகில் சிறிய அளவில் உள்ள வன விலங்குகளின் கண்காட்சியை பெரிய அளவில் மிருகக் காட்சி சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இப்பொழுது தனியார் துறையில் மிருகக் காட்சி சாலை நடைபெறுகிறது. பஸ் போக்குவரத்தும் இருக்கிறது. ஆனால், அந்த சாலை அங்கே சரியாக இல்லாத காரணத்தால், பஸ் போக்கு வரத்தும் நல்ல முறையில் இல்லை. ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, தனியாக இதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம்.

### தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலிருந்து முறையீடு

* 122 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் திருப்பூரில் இருந்து மின் வாரியத் தலைவருக்கு 1971 ஏப்ரல் மாதத்தில் கோரிக்கைகள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) மூன்று முதல் நான்கு ஆண்டுவரை ஊழியஞ் செய்து உள்ள தற்காலிக நாட்கூலித் தொழிலாளர் பலர் இருக்கையில் 1970 ஆகஸ்டில் தற்காலிக நாட்கூலித் தொழிலாளராக நியமிக்கப் பட்டிருந்த திரு. எம். செல்வராஜு என்பவர் 7 நாள் ஊழியம் செய்ததற்குள்ளாகவே, செய்தியாளாக நியமிக்கப்பட்டார் என்னும் குற்றச்சாட்டு முறையீட்டில் அடங்கியிருந்தது.

(உ) இது குறித்து (மின்சார) தலைமைப் பொறியாளர் விசாரணை நடத்தினர். சில்லறைச் செலவின் நிதியிலிருந்து ஊதியம் பெறும் செய்தியாள் திரு. எம். செல்வராஜு 21—6—71-ம் நாள் பிற்பகலிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

### *Cinchona Plantations in Denkanikota taluk*

* 123 *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce cinchona plantations in the hilly parts of the Denkanikota taluk in Dharmapuri district ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### *Appointment of Conductors in State Transport Nagercoil Branch.*

* 124 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether ninety candidates were selected for the post of conductors in December 1967 by the Nagercoil Branch of the State Transport Department;

(*b*) whether all of them have been appointed; **and**

(*c*) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம். பயணிகள் பணியாளர்கள் பதவிக்கு 1967 நவம்பரில் 90 ஆட்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர் ;

(இ) 90 பேர்களில், 83 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ) எஞ்சிய எழுவரில், அறுவர் வேலை காலி ஏற்பட்ட பொழுது உரிய வயதைத் தாண்டிவிட்டனர். எனவே, அரசு அவர்களுக்கு வயது விதியிலிருந்து விதிவிலக்கு அளித்தது. மற்றும் ஒருவர் உரிய வயதை அடைந்திருக்கவில்லை. இப்போது அவர் உரிய வயது அடைந்துவிட்டார். இந்த எழு பேர்களும் துறையில் வேலை காலி ஏற்படும்போது நியமிக்கப்படுவர்.



**திரு. என். டென்னிஸ்:** சார், தேர்ந்தெடுக்கப்பட்டும், அமர்த்துவதில் காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தேர்ந்தெடுத்தபிறகும், வேலை காலி ஏற்பட்டால்தான் ஏற்றுக் கொள்ளப்படும். கண்டக்டருக்கு 18 வயது என்று இருந்ததை, அது போதாது என்று மாற்றி 25 வயது குறைந்தபட்சம் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை 1968-ல் போடப்பட்டது. அந்த வயதுக்கு உட்பட்டவர்கள் நியமிக்கப்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டவர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நியமிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். தகுதி அடிப்படையில் அரசாங்கத் துறையில் நியமிக்கப் படவேண்டியிருப்பதால், கல்வித் தகுதி மற்ற தகுதிகள் இல்லாதவர்கள் உடனடியாக நியமிக்கப்படுவதில்லை. தகுதியோடு இருந்து யாராவது நியமிக்கப்படவில்லை என்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது கவனிக்கப்படும்.

### *Time table for State Transport buses.*

* 125 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state whether a booklet containing the latest time table of the State Transport will be published early indicating old and proposed new routes?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னை மாநகரிலும், மாவட்ட வழித் தடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் கால அட்டவணைகள், கட்டண அட்டவணைகள் அடங்கிய பேருந்து வழிகாட்டிப் புத்தகம் ஒன்றை வெளியிட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை கருதியுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், தமிழகம் பூராவும் துரித பஸ்கள் போகின்றன. சில மாவட்டங்களில் டூரிஸத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று செய்யப்படுகிறது. இப்பொழுதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களும் துரித பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள். ஆறு வருஷத்திற்கு முன் ஒரு கையேடு வந்தது. ஆகவே, இப்பொழுது ஒரு கையேட்டை, இந்த மாதத்திற்குள்ளாவது வெளியிட முடியுமா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதன் அவசர அவசியத்தை அரசு உணருகிறது. அதே நேரத்தில், பல்வேறு பேருந்து வழித்தடங்கள் மாற்றி அமைக்கப்பட்டுவருகின்றன. நீண்ட தூரப் பேருந்துகளைச் சீர்திருத்தி அமைக்கப்படுவதால் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கிருந்து சேலம்

சென்றால், அங்கிருந்து பங்களூர் போவதற்கு வசதியாக கால மாற்றங்கள் செய்து திருத்தி அமைக்கப்படுகின்றன. திருச்சியிலும், கோவையிலும், சேலத்திலும், மதுரையிலும் ஏற்கனவே இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னையிலே செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் காலதாமதம் சற்று ஏற்படுகிறது. ஆனாலும், எப்படியும் சரியான முறையில் தயாரிக்க வேண்டியுள்ள காரணத்தால், இப்பொழுது அவசரப்பட்டுக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், இரவு நேரத்தில் ஓடும் நீண்டதூர பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் இரவிலே சாப்பிடுவதற்கு வசதியாக பஸ்கள் நிறுத்தப்படுவதில்லை. ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அந்த அந்த வழித்தடங்களில், சாப்பிட வசதியாக நிறுத்தப்படுகிறதா என்பதையும் ஆலோசித்து அதற்கு வேண்டிய வகையில் ஆராய்ந்து செய்யவேண்டும். அதோடு, இரவு நேரத்தில் 400, 500 மைல் பிரயாணம் செய்யும்போது இப்பொழுது அமைத்திருக்கும் சீட்டுக்கள் வசதியாக இல்லை. அதையும் மாற்றி அமைக்க முடியுமா என்பதையும் அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சா. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பயணிகள் பட்டினியாகப் போகவேண்டும் என்று இல்லை. எங்கேயாவது குறைகள் இருக்கலாம். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இரவில் வசதியாகப் பிரயாணம் செய்வதற்காக சொகுசு, 'குஷன்ட் ஸீட்ஸ்' அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அது இன்னும் ஒரு மாதத்திற்குள் எல்லாப் பேருந்துகளிலும் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அறிவிப்பு. 4—12—1971 அன்று அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் எடுத்த முடிவுகள் படி இந்தக் கூட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். அது ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி நடைபெறும்.

Now, the Hon. Member Thiru K. T. K. Thangamani will call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance.



THIRU K. T. K. THANGAMANI : There are two things. I have also given notice of a privilege motion in my name. I request that it may be given preference.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவேயே நான் சொன்னேன், கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது என்று. இன்றைய அளவில் பாகிஸ்தான் படையெடுப்பைப்பற்றி ஒரு தீர்மானம் வரவிருக்கிறது. அதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு அவசரத் தீர்மானம் இன்றைக்கு அனுமதிக்கலாமா வேண்டாமா என்று ஆலோசிக்கப்பட்டது என்றும் கூறினேன். இன்றைக்கு அவற்றையெல்லாம் ஒத்திவைத்து விட்டு, பாகிஸ்தான் படையெடுப்பு பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தில், முதல்வருடையவும், மற்ற கட்சித் தலைவர்களுடையவும் கருத்துக்களைக் கூறி இன்றைய நிகழ்ச்சியை நடத்தலாம் என்றும் சொன்னேன். என்னுடைய பரிசீலனை முடிந்தவுடன் உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம்.

## 3. கவன ஈர்ப்பு.

நெய்வேலி லிக்னைட்டில் அதிக அளவு கந்தகம் இருப்பதாகச் சொல்லப்படுவதால் சேலம் உருக்காலை சம்பந்தமான வேலையில் தாமதம் ஏற்படக்கூடிய நிலை குறித்து.

MR. SPEAKER : Besides Mr. K. T. K. Thangamani, Mr. Latheef and Dr. H. V. Hande have also given call attention notices.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the reported presence of higher content of sulpher in Neyveli Lignite and doubts expressed as to its suitability for the production of steel and the apprehended delay in the progress of the work connected with the Salem Steel Plant.

THIRU M.A. LATHEEF : The reported statement of the Hon. Minister for State Steels Government of India has caused great apprehension in the minds of the people of Tamil Nadu and as such I call the attention of the Hon. Minister for Industries....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசக்கூடாது. அறிவிப்பில் இருப்பதை அப்படியே படியுங்கள்.

THIRU M.A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the reported presence of higher content of sulphur in Neyveli Lignite and doubts expressed as to its suitability for the production of steel and the apprehended delay in the progress of the work connected with the Salem Steel Plant.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the reported presence of higher content of sulphur in Neyveli Lignite and doubts expressed as to its suitability for the production of steel and the apprehended delay in the progress of the work connected with the Salem Steel Plant.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I place the following statement: There is no basis for the apprehension that the Central Government is reluctant to go ahead expeditiously with the Salem Steel Plant. The Detailed Project Report prepared by the Consultants in 1964 contemplated the use of Kanjamalai Iron Ore, known for its low alumina and low phosphorus contents and Neyveli Lignite char, as a reductant. The sulphur content of Neyveli char, as revealed by tests carried out till 1964, was ranging from 0.5 to 0.8 per cent.

The Consultants recently came to know that sulphur content of Lignite char samples tested during the years 1969-71 has been showing a substantial increase ranging from 0.77 to 1.72 per cent with an average of 1.26 per cent. Therefore the suitability of lignite char for making special steels with Salem Ore has to be examined further. The increase in the percentage of sulphur content may be due to a change in the area of mining of lignite at Neyveli, earlier low sulphur area having been exhausted.

If Lignite char is finally ruled out by the Consultants as a reductant, it is expected that they will propose the use of coke based on coal from outside the State. There is however, no question of the Kanjamalai Ore not being utilised for the Salem Steel Plant and it has been made very clear that this ore will be utilised, both by the Union Minister for Steel and Mines and the Consultants.

The Techno-economic Feasibility Report, due from the Consultants early in December 1971, will show the various alternative product mixes recommended and the relative economics of each product-mix.

The Central Government have already sanctioned the acquisition of 1,473 acres in the first stage for the plant area and this work is in full swing. The Hindustan Steel Construction Works Limited, a Government of India undertaking, has already established a local unit at Salem and is attending to preliminary work including soil investigations.



[Thiru S. Madhavan]

It is expected that the Detailed Project Report will be available towards the end of 1972, and that the plant will be commissioned in about five years' time thereafter.

This Government will continue to keep an effective watch on the progress of the Project and press the Government of India to expedite the work at every stage and to avoid delays.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கஞ்சமலையில் இருக்கக் கூடிய மூலப்பொருளும், நெய்வேலியில் இருக்கக்கூடிய மூலப் பொருளும் உபயோகப்படுத்தப்பட்டால்தான் சேலம் ஸ்டீல் பிளான்ட் பற்றிய முழு அம்சம் பூர்த்தியாகும் என்ற முறையிலே நெய்வேலியைப் பொறுத்தவரையில் இரண்டாவது சுரங்கம் வெட்டி, அதில் லிக்னைட் எடுக்கவேண்டிய அவசியத்தை மத்திய அரசாங்கத்திற்கு நம் அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலி லிக்னைட் கரியைக் கொண்டுதான் சேலம் உருக்காலை நடைபெறவேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வெளி மாநிலங்களிலிருந்து கோல் கொண்டுவந்தாவது அதை நடத்த வேண்டியது நியாயம் என்று நம்முடைய அரசு மத்திய அரசாங்கத் தோடு வாதிட்டுக் கொண்டிருக்கிறது. அதோடு நெய்வேலியில் இரண்டாவது கட்டமாக சுரங்கம் வெட்டவேண்டுமென்றும் நம் அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

DR. H. V. HANDE : From the answer given by the Hon. Minister, it is not clear whether it is possible to utilise the Neyveli Lignite without any difficulty and whether it is absolutely necessary to import coal from other places because of the higher sulphur content and whether any new fact has been brought into the question. The purpose of giving the Call Attention Notice is to find out from the Hon. Minister whether any extraneous facts or new facts which have been missed all along all these last 10 years have been brought to the attention of the Government—Central or State or Techno-economists and whether because of these new facts being brought in, the circumstances have been changed, whether it is necessary to bring coal from outside the State and whether the cost may go up? The House is anxious and many of us and those who have given the call attention notices are anxious to know the details, whether because of the extra sulphur content there is any extra expenditure or extra cost of production per tonne, whether there is going to be any delay at some stage or other or some difficulty or other, whether the Hon. Minister can assure this House categorically with fortified facts—it is not enough if he simply says there is not going to be any delay—whether it is possible for him to supply facts and figures

and tell us clearly? What is the stage of the matter and all these details which have not been found in the answer. I want these things to be clarified by the Hon. Minister.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிய செய்தி சல்ஃபர் அதிகம் கிடைக்கிறது என்பதுதான். அதன் அடிப்படையிலே பிளான்ட் அமைத்தால் சேலம் உருக்காலை லாபகரமாக நடக்குமா என்பதை தஸ்தூர் கம்பெனிதான் ஆராய்ந்து வருகிறார்கள். 1964-ம் ஆண்டில் எடுக்கப்பட்டதிலிருந்து கிடைத்த சல்பரை விட இப்போது எடுக்கப்படும் லிக்னேட்டில் சல்பர் அதிகமாகக் கிடைக்கிறது என்று அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு சொல்லியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் சேலம் உருக்காலை வந்தே தீருமென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் பாராளுமன்றத்தில் உறுதியளித்திருப்பது இதற்குச் சான்றாகும்.

THIRU M. A. LATHEEF : The Reported statement of the Hon. Minister for Steel, Government of India, has created doubts in the minds of the people of Tamil Nadu. I want to know whether this Government have asked for further clarification about the implications of the statement of the Hon. Minister for Steel, Government of India with regard to this?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு டீட்டெயில்டு பிராஜெக்ட் ரிப்போர்ட் தயாரிக்க வேண்டும். அந்த முறையில்தான் தஸ்தூர் கம்பெனியை டி.பி.ஆர். தயாரிக்கும்படி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் தயாரித்த அறிக்கையிலேதான் சல்பர் அதிகமாக இருக்கிறது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சேலம் உருக்காலை வந்தேதீரும் என்பதில் சந்தேகம் வேண்டாம். அதை உறுதிப்படுத்தும் வகையிலே பாராளுமன்றத்திலே சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுதியளித்திருக்கிறார்கள்.

## 4. அமைச்சர் அறிக்கை

### துணை வினாவிற்கான விடையைத் திருத்தி உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 21—10—1971 அன்று சட்ட மன்றப் பேரவையில் திரு. என். டென்னிஸ், எம்.எல்.ஏ. அவர்களின் 77-ம் எண்ணிட்ட வினாவுக்கு, திரு. பொன்னப்ப நாடார் எழுப்பிய உப வினாவிற்கான திருத்த விடையை இப்போது மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 21—10—1971 அன்று சட்டமன்றப் பேரவையில், திரு. என். டென்னிஸ், எம்.எல்.ஏ. அவர்களின் 77-ம் எண் (உடுக்குறியிட்டது) நட்சத்திரக் குறியிட்ட வினாவுக்கு விடையளிக்கும்போது, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பிய உபவினாவிற்கு நான்—

"மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியதற்குத் தான் அதுபோல தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கமுடியாது. வேண்டுமென்றால் ஏலத்தில் அரசாங்கமே எடுத்து விநியோகிக்கலாம் என்றார்கள். அரசாங்கம் ஏலம் எடுப்பதாக இல்லை" எனக் கூறினேன்.

இவ்விடைக்கு கீழ்க்கண்ட மாற்றம் தேவைப்படுகிறது.

மாநில அரசிற்கு காப்பிக்கொட்டை ஒதுக்கீடு அளவினை வழங்குமாறு மத்திய அரசிற்கு எழுதிய கடிதத்திற்கு இன்னும் பதில் வரவில்லை. பெங்களூரிலுள்ள காப்பி வாரியத்திற்கு எழுதியதற்கு, அதுபோன்று மாநில அரசிற்கு காப்பிக்கொட்டை வழங்குவதற்கில்லை எனப் பதில் வந்தது. மேலும் காப்பி வாரியத்தை சென்னை ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு நேரிடையாக காப்பிக்கொட்டை வழங்குமாறு கேட்கப்பட்டது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு நேரிடையாக காப்பிக்கொட்டை வழங்கத் தம்மால் இயலாது என்று வாரியம் தெரிவித்ததோடு, வாரியம் குறிப்பிட்டுள்ளபடி ஓட்டல் அதிபர்கள் சங்கம் தொகுதி அனுமதிகளைப் பெற்று, ஒவ்வொரு திங்களிலும் பெங்களூர், விஜயவாடா, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடைபெறும் தொகுதி ஏலத்தில் கலந்து, தங்களுக்குத் தேவைப்படும் அளவுக்கு காப்பிக்கொட்டை நேரடியாக வாங்கிக் கொள்ளலாம் எனக் கூறியது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு நிலைமை விளக்கப்பட்டது.

## 5. அரசினர் தீர்மானம்.

### இந்தியாமீது பாகிஸ்தானின் படையெடுப்பைக்குறித்து கண்டனத் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியா மீது பாகிஸ்தான் படையெடுப்பு கண்டனத் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்தப் பேரவையின் ஒப்புதலுக்கு வைக்க முன்வருகிறேன்.

"கிழக்கு வங்கத்தின் ஜனநாயகக் குரலை மதிக்க மறுத்து, அதன் காரணமாக அந்த மக்கள் கொதித்தெழுந்து சுதந்திரப் பங்களாதேஷ் முழக்கத்தைச் செய்ய முன் வந்தபோது அவர்கள்

மீது ஈவு இரக்கமின்றி ராணுவ நடவடிக்கை மேற்கொண்டு பல லட்சக்கணக்கானவரைக் கொன்று குவித்ததோடு அல்லாமல், ஒரு கோடி அகதிகளை இந்தியா மீது சுமத்தியதின் மூலம் இந்திய நாட்டின் மீது மறைமுகத் தாக்குதலைத் தொடங்கிவிட்ட பாகிஸ்தான் சர்வாதிகாரி, இறுதியாக இந்திய மண்ணின் மீது படையெடுக்கவே துணிந்துவிட்ட செயலை தமிழக மக்கள் அனைவரின் சார்பில் இப்பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, எதிரிகளை முறியடித்து இந்தியா பெரு வெற்றி பெறுவதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் மத்திய அரசுக்கு தருமென்கிற உறுதியை மேற்கொள்கிறது.

நாடு காக்கப் போர்க்களம் புகுந்துள்ள வீரமறவர்களை வாழ்த்துவதிலும், அவர்தம் அருந்தியாகச் செயல்களைப் போற்று வதிலும் இப்பேரவை பெருமை கொள்கிறது.

வெளிப்பகையை விரட்டியடிக்கப் போதுமான ஆற்றலை, உட்பகை எதுவும் உருவாகாத சூழ்நிலைதான் தோற்றுவிக்கும் என்பதை உணர்ந்து சாதிமத பேதங்கள், அரசியல் மாறுபாடுகள் அனைத்தையும் மறந்து மக்களின் பேரணி ஓரணியாகத் திரண்டு நின்று எதிரியை வென்றிடவேண்டிய அவசியத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது.

சர்வாதிகாரக் கொள்கை, மக்களாட்சித் தத்துவத்தின் மீது நடத்தத் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்தில் இறுதி வெற்றி இந்தியா போற்றி வருகிற ஜனநாயகத்திற்கே என்ற நம்பிக்கையை இப்பேரவை பிரகடனம் செய்கிறது.

தொடக்க காலத்திலிருந்தே பாகிஸ்தானின் மனிதாபிமானமற்ற போக்கை இந்திய அரசு உலக நாடுகள் அனைத்துக்கும் தெளிவாக்கி யிருப்பதோடு, நியாயமுணர்ந்து நடக்கும் நாடுகள் பலவற்றின் ஆதரவையும் பெற்றுள்ளது. அவ்வண்ணம் ஆதரவு தர முன் வந்துள்ள நாடுகளுக்கு இப்பேரவை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

பகைப்புலம் மாய்த்து வாகை சூடும் வண்ணம் இந்தியப் படையினர் ஊக்கமும் உறுதியும் கொண்டிட, போருக்கு தேவை யான ஆள், பொருள், கருவி அனைத்தையும் வழங்கிடவும், இந்தியப் பிரதமர் எடுக்கும் முடிவுகளை ஏற்று உறுதுணையாக இருக்கவும் தமிழ்நாட்டு அரசுக்குத் தமிழ் மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று இப்பேரவை கேட்டுக் கொள்கிறது.”

மு.ப. 10–30 தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை இந்தப் பேரவை யிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒரேமனதாக ஏற்றுக்கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவிப் பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது ஒரு உணர்ச்சிமயமான கட்டத்தில், நாட்டின் எழுச்சி பொங்கி வழிந்து காணப்படுகிற நேரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறை வேற்றப்படுகிற மிக முக்கியமான தீர்மானமாகும்.





பாகிஸ்தான் இந்தியா மீது இன்றைக்குத் தொடுத்திருக்கின்ற இந்தப் போர் ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது தொடுத்திருக்கிற போர் என்று கருதுவதைக் காட்டிலும் ஒரு தத்துவம் இன்னொரு தத்துவத்தின் மீது தொடுத்திருக்கிற போர் என்று சொன்னால் அது மிகையாகாது. தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதுபோல சர்வாதிகார மனப்பான்மையோடு சர்வாதிகாரக் கொள்கையில் வெறி பிடித்து அலைந்துகொண்டிருக்கிற பாகிஸ்தானுடைய சர்வாதிகாரி இந்தியாவில் நாம் கட்டிக் காத்து வருகிற ஜனநாயகத் தத்துவத்தின் மீதும், நம்முடைய வாழ்க்கை முறையின் மீதும், நம்முடைய மதச் சார்பற்ற கொள்கையின் மீதும் இன்றைக்குப் படை எடுத்திருக்கிறார் என்று நாம் திட்டவட்டமாகக் கூற வேண்டும்.

அமெரிக்க நாட்டுக்கு நான் சென்றிருந்த நேரத்தில் அங்கே ஒரு தவறான பிரச்சாரம் இப்போது பாகிஸ்தான் தொடுத்திருக்கிற போர் பற்றி பத்திரிகைகளில் கட்டுரைவாயிலாகச் செய்யப் படுவதை நேரில் காண்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கிற இந்தத் தகராறு இன்று நேற்று அல்ல. பல நூற்றாண்டுகாலமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்து வருகிற தகராறினுடைய மற்றொரு கட்டம்தான் இந்தப் போராட்டம் என்று அந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகள் வருணித்திருப்பதை நான் கண்டேன்.

சில நிருபர்களைச் சந்தித்த நேரத்தில் அது தவறு என்பதற்கான விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது இந்து-முஸ்லிம் தகராறு அல்ல. இந்தியாவில் இன்றைக்கு முஸ்லிம்களே இல்லாமல் இல்லை, குறிப்பாகச் சொல்லப்போனால் இந்தியாவிலே இருக்கிற முஸ்லீம்களுடைய தொகை இன்றைக்கு பாகிஸ்தானில் இருக்கிற முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட அதிகமானது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது. அந்த அளவுக்கு பாகிஸ்தானைவிட இன்றைக்கு இந்தியாவில் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உரிமைகள் இங்கே மதிக்கப்படுகின்றன. அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் அனைவருமே இந்து முஸ்லிம்கள் என்கிற அளவில் இல்லாமல் இந்தியர்கள் என்ற அளவில் ஒன்றுபட்டு இந்த நாட்டினுடைய சுதந்திரத்தைக் காப்பாற்று வதிலும் இந்த நாட்டுக்கு வருகிற ஆபத்துக்களைத் தவிர்ப்பதிலும் முன்னிற்கிற காட்சியினை நாம் காண்கிறோம். ஆகவே, இப்போது நடைபெறுகிற இந்தப் போராட்டம் இந்துக்களுக்கும், முஸ்லிம் களுக்கும், இந்துக்களுடைய நாட்டுக்கும் முஸ்லிம்களுடைய நாட்டுக்கும் நடைபெறுகிற போராட்டம் என்று யாரும் கற்பனை கூடச் செய்துகொள்ளத் தேவையில்லை என்று அந்த நிருபர் களிடையே சொன்னேன். இந்தத் தெளிவான விளக்கத்தை இந்தப் பேரவையிலும் நாம் அனைவரும் கொள்வதோடு, வெளியிலும் வற்புறுத்திக் கூறுவது நெடுங்காலமாக நாம் ஏற்படுத்தியிருக்கிற வகுப்பு ஒற்றுமையை இந்த நேரத்திலும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1971 டிசம்பர் 6

பாகிஸ்தான் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன. இன்றைய கணக்குப்படி பார்த்தால், பாகிஸ்தானின் 47 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்திய விமானங்கள் 17 தான் சுட்டு வீழ்த்தப்பட்டன. பாகிஸ்தான் 47 விமானங்களை இந்தப் போரினால் இழந்திருக்கிறது.

மேற்குப் பாகிஸ்தானிலும், 61 டாங்கிகளை பாகிஸ்தான் இழந்திருக்கின்றது என்கிற புள்ளிவிவரம் நமக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் 3 கப்பல்களை பாகிஸ்தான் இழந்திருக்கிறது. சப்மரின் ஒன்றை பாகிஸ்தான் இழந்திருக்கிறது. இவை எல்லாம் பாகிஸ்தானின் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்கும்? ஒருவேளை பாகிஸ்தானாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவின் பலம் பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல அகில உலகத்திற்கும் காட்டப்படுகிற அளவில் உயர்ந்திருக்கிறது என்பதில் பெருமைப்பட வேண்டும்.

நமது போர் வீரர்களுக்கு உற்சாகத்தை அளிக்கவும், அவர்கள் போர்க்களத்தில் உத்வேகத்துடன் போராடவும் அவர்களுக்குப் பின்னால் நாம் அனைவரும் இருக்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும்படிச் செய்ய வேண்டும். இன்றைய காலைப் பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்தியானது மேலும் நமக்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. சோவியத் நாட்டின் பிரதம மந்திரி கோசிஜின் அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 'இந்தத் தகராறில் உலக நாடுகளில் எந்த நாடாவது தலையிட்டால் அது தவறு' என்று அவர் கூறியிருப்பது போற்றத் தக்கதாகும். அதாவது இந்தப் போரில் வேறு எந்த நாடாவது தலையிட்டால், நாங்களும் தலையிடுவோம் என்று கூறுவதாகத்தான் நாம் கொள்ளுகின்ற பொருள் இருக்கும். அப்படிப்பட்ட நல்லெண்ணத்தோடு இந்தியாவை அணுகுகின்ற நாடுகளுக்கெல்லாம் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியை போர் வீரர்கள் மட்டும் சமாளித்துவிடுவார்கள் என்று நாம் கைகட்டி, வாளா இருத்தல் கூடாது; அப்படி இருக்கவும் முடியாது. இந்திய நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புகளை உணர்ந்தாக வேண்டும். போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும், போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும். அதை அட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் தயாராக இருக்க வேண்டும். அதில் தயக்கம் காட்டக்கூடாது. அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்றும், தமிழ் நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்கள் மீதும் நம்பிக்கை



1971 டிசம்பர் 6] [டாக்டர் மு. கருணாநிதி]

வைத்து, இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். போருக்கான நிதியைத் திரட்டுகின்ற பணி ஆரம்பமாக வேண்டும்.

தமிழகத்தில், பொதுப் பணியாளர்கள், பொது நோக்குடையவர்கள் போர்வீரர்களுக்குத் தேவைப்படுகிற மருந்துகளை வாங்கி போர்முனைகளுக்கு அனுப்புதல், தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல். மேலும் போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபட வேண்டும். இப்போது நாம் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம். இந்த நெருக்கடி இந்தியாவுக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கே நெருக்கடியானது.

'இந்தப் போர்தான் கடைசிப் போர், கடைசி யுத்தம்' என்கிறார் பாகிஸ்தானின் சர்வாதிகாரி, அவர்களுடைய முடிவை முன்கூட்டியே அவர் சொன்னதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். 'பாகிஸ்தான் இனி இந்தியாவின்மீது மட்டுமல்ல, வேறு எந்த நாட்டின்மீது போர் தொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழாமல் இருக்க வேண்டும்' என்பதைச் செய்ய வேண்டுமென்கிற கடமையுணர்வு இந்திய நாட்டுக்கு இருக்கிறது. நாம் அதை, தமிழ் நாட்டின் சார்பிலே தர வேண்டும், தரவும் வேண்டும், தருவோம் என்பதையும் சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் முழு மனதோடு ஆதரித்து, தமிழ்நாடு அரசாங்கத்தோடும், இந்திய அரசாங்கத்தோடும் முழு மனதோடு ஒத்துழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை முதன்முதலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பெரும் பேராபத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். நானும் ஓரிரு கருத்துக்களை இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் ஏற்பட்டிருக்கும் முதல் போர் இது என்று சொன்னால், அது மிகையாகாது. ஜனநாயகக் கொள்கைக்காக இந்தியா இருக்கிறது. அதைப் பேணிப் பாதுகாப்பதற்காக நாம் உழைக்கத் தயாராக இருக்கிறோம். சர்வாதிகார ஆட்சி ராவல்பிண்டியில் உருவாகியிருக்கிறது. கொடுங்கோன்மை ஆட்சி கிழக்கு வங்கத்தில் அவிழ்த்துவிடப்பட்டு, மக்களைக் கொன்று குவிப்பது, மக்கள் பிணங்களை மலைபோலக் குவித்து அட்டகாசம் செய்வது அவர்கள் வேலையாக இருக்கிறது என்பதைக் காண்கின்றபோது அந்த நாட்டில் ஜனநாயகம் நடக்கிறதா, சர்வாதிகாரம் நடக்கிறதா, ஒழுங்கு

இருக்கிறதா, சட்டம் இருக்கிறதா என்கிற எண்ணம்தான் ஏற்படுகிறது. 'பத்து நாட்களுக்குள் போர்' என்று பாகிஸ்தானின் சர்வாதிகாரி யாஹ்யாகான் சொன்னார். டிசம்பர் 3-ம் தேதி யன்றே போர் மூண்டுவிட்டது. இப்போது போரை நடத்திக் கொண்டிருக்கிறோம். ராணுவ வீரர்கள் எல்லா இடங்களிலும் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். கப்பற்படை, காலாட்படைகள் முன்னேறுகின்றன. அதேபோல் விமானப் படைகளும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நமது படைகள் வெற்றி வாகை சூடும் தறுவாயில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஏனென்றால் நியாயத்திற்கும், தர்மத்திற்கும், அஹிம்சைக்கும் உறைவிடமாக இருக்கும் இந்தியா இந்தப் போரிலே இறங்கியிருக்கிறது. இதிலே யார், 'அக்ரசர்' என்ற கொள்கையிலே கருத்து வேற்றுமை இல்லையென்பது பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. பாகிஸ்தான் வேண்டுமென்றே வலுக்கட்டாயமாக போருக்கு அழைத்திருக்கிறது. பதன்கோட், அமிர்தசரஸ், ஜலந்தர், ஆக்ரா போன்ற நகரங்களின்மீது விமானத் தாக்குதலை பல முறை நடத்தியிருக்கிறார்கள். போர்நடவடிக்கைகளைப்பற்றி விவாதிக்க எல்லாக் கட்சித் தலைவர்களின் மாநாடு டெல்லியிலே ஆரம்பமாகியிருக்கிறது. அதை நம்முடைய மாண்புமிகு இந்திய ஜனாதிபதி அவர்கள் துவக்கிவைத்துக் கொண்டிருந்தார்கள். மாலை சுமார் 6 மணிக்கு ஏர் ரெய்ட் சைரன் திடீரென்று பார்லிமெண்ட் ஹவுஸுக்குப் பக்கத்திலே கேட்டது. விளக்குகள் அணைக்கப்பட்டன. நாங்கள் எல்லாம் திடுக்கிட்டோம். கேண்டில் விளக்கு வெளிச்சத்திலே ஜனாதிபதி அவர்களை காரில் ஏற்றிச் சென்று அவர்களுடைய மாளிகைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. டில்லியிலே ஒரு பதட்டமான நிலை இருக்கிறது. ஆனால் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். பாராளுமன்றத்திலே நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அதை எல்லாக் கட்சித் தரப்பினரும் முழுமனதுடன் ஆதரித்தார்கள். அங்கே பலவிதமான கருத்துக்கள் எடுத்துத் தெரிவிக்கப்பட்டன. பாகிஸ்தான் மக்களை கொன்று குவித்து ஜெனோசைட் செய்து கொண்டிருக்கிறது. இஸ்லாமாபாத்தில் உள்ள யாஹ்யாகானை இஸ்லாமாபாத் புச்சர் என்று அங்கே பிராங்க் அந்தோனி அவர்கள் குறிப்பிட்டார்கள். வி. கே. கிருஷ்ணமேனன் அவர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். பாகிஸ்தான் ஒரு ஸ்டேட் ஆப் வார்தான் டெக்ளேர் செய்து இருக்கிறது. முழுமூச்சோடு யுத்தம் பிரகடனப் படுத்தவில்லை என்று சொன்னார்கள். இனிமேல் சீஸ்-பையர் இருக்காது. ஏனென்றால் முதன்முதலாக பாகிஸ்தான் நம்மீது தாக்குதல் தொடுத்திருக்கிறது. எனவே நாம் அவர்களைத் தாக்குவதற்கு பரிபூரண உரிமை இருக்கிறது. பாராளுமன்றத்திலே உள்ள எல்லாக் கட்சியினரும் ஒரேமுகமாக பிரதம அமைச்சரோடு ஒத்துழைப்பதாக வாக்குறுதியளித்திருக்கிறார்கள். அதேமாதிரியாக நாமும்





கட்சி மாச்சரியங்களை விட்டு விட்டு தேசத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே உட்பூசல் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. "ஆயிரம் உண்டிங்கு ஜாதி, அந்நியர் புகல் இங்கென்ன நீதி" என்ற வாக்குப்படி ஜாதி வேற்றுமைகளை மறந்து, மத மாச்சரியங்களை மறந்து ஒரே பாரத சமுதாயமாக இருக்க வேண்டும். நாம் எல்லோரும் ஒரே குரலாக, ஒரே முகமாக இந்திய அரசுக்கு உறுதுணையாக நிற்கவேண்டும்.

பொதுவாக போர்முனைக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ அதேமாதிரி ஏர்முனைக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். போரிட்டுக் கொண்டிருக்கும் இராணுவ வீரர்களுக்கு வேண்டிய உணவு, உடை போன்றவற்றை இன்னும் தேவையான பற்பல வசதிகளைச் செய்துகொடுப்பதற்கு நாம் முயற்சிகள் எடுக்க வேண்டும். தொழிலாளர்களும் தொழில் நிறுவனத் தலைவர்களும் நல்லமுறையிலே ஒத்துழைக்கவேண்டும். பதுக்கலை ஒழித்தாக வேண்டும். பூட்டிக் கிடக்கின்ற ஆலைகளைத் திறந்து பாதுகாப்புக்கு வேண்டிய அத்தனை பண்டங்களையும் உற்பத்தி செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே தொழிலதிபர்கள் தயக்கம் காட்டினால் டிபென்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸ்படி அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துத் தொழிற் துறையிலே இருக்கின்ற தேக்கத்தைப் போக்கவேண்டும்.

யார் அக்ரஸர், யார் பாதுகாப்புக்காகப் போரிடுகிறார்கள் என்று சிந்தித்துக்கொண்டிருக்கின்ற தருணம் இதுவல்ல. நம்முடைய படைவீரர்கள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கிராமத்திலிருந்தும் படைவீரர்கள் போயிருப்பார்கள். எனவே நாம் அவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். நம்மைப்பற்றி நாம் குறைவாகப் பேசாமல் இருப்பதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் எப்பொழுதும் பெருமையாகப் பேசிக்கொள்ள வேண்டும்.

இந்த முக்கியமான தீர்மானத்திலே நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவும், கட்சி மாச்சரியங்களை மறந்து இந்தியா ஒன்று, அதற்கு ஏற்பட்டிருக்கின்ற பேராபத்தினைப் போக்கி, ஜனநாயகம் தழைத்தோங்கவும், சர்வாதிகாரம் ஒழிந்துபடவும் யாஹ்யாகான் இஸ்லாமாபாத்தில் இல்லாமல் இருப்பதற்கும் நாம் எல்லோரும் முயற்சி செய்யவேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கின்ற வீரர்கள் படைகளிலே சேரக்கூடிய வகையில் அவர்களுக்கு வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளிக்கவேண்டும். அவர்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லவேண்டும். பொருளுதவி, மற்ற உதவிகளையும் செய்யவேண்டும். எல்லா வகைகளிலும் அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதற்கு நாம் எல்லோரும் சித்தமாக இருக்கவேண்டும் என்பதைக்கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க இருக்கிறேன். இன்றைய தினம் நாடாளுமன்றத்திலே பங்களா தேசத்தை அங்கீகரித்துத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆதரிப்பதற்காக நான் நிற்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின் பிரதான அம்சங்களைப் பொறுத்தவரையிலும் நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்களாகும். அதே நேரத்திலே இம்மாதிரியான நெருக்கடியான நேரத்திலே தான் நாம் நம் நாட்டிற்கு யார் எதிரிகள், யார் நண்பர்கள் என்பதைப் பார்க்கமுடியும். கஷ்டப்படக்கூடிய நேரத்தில் உதவக் கூடியவர்கள்தான் சிறந்த நண்பர்கள் என்று பல பெரியோர்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே சொல்லிவைத்திருக்கிறார்கள். பங்களா தேசப் போராட்டம் நடந்த காலத்திலே அப்பொழுது யாஹ்யாகான் இந்தியாவையும் தாக்குவோம் என்று எச்சரிக்கை செய்துகொண்டிருந்தார்.

நம்முடைய நாட்டைப் பரிபூரணமாக ஆதரிப்பதற்கு ஏதாவது நாடுகள் கிடைக்குமா என்று ஏங்கிய சமயத்தில் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியன்று இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் நட்புறவு ஒப்பந்தம் ஏற்பட்டது. சோவியத் யூனியன் போன்ற நாடுகள், இந்தியாவை யாராவது தாக்கினால் தங்களுடைய முழுபலமும்கொண்டு இந்தியாவுக்கு உதவிசெய்யகூடிய நிலைமை ஏற்படும் என்று கொண்டுவந்த ஒப்பந்தம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமாகும் அதை இந்திய மக்கள் எல்லோரும் பாராட்டினார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தாங்களே ஒரு பொதுக்கூட்டத்திலே வந்திருக்கும் பொழுது பாராட்டினீர்கள். இனிமேல் தாக்குதல் ஏற்பட்டால் உறுதியான விரிவான அரசின் ஆதரவு நமக்கு இருக்கிறது.

நம்முடைய தீர்மானத்திலே நாம் குறிப்பிட்டு ஒரு தேசத்தை வாழ்த்தியோ, குறிப்பிட்டு ஒரு தேசத்தை எதிர்த்தோ கொடுப்பது சரியல்ல என்ற காரணத்தினாலே நான் திருத்தம் கொடுக்கவில்லை. பாகிஸ்தான் முன்பு நம்மைத் தாக்கிய நேரத்திலே நம்மைத் தாக்க அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் எல்லாம் அமெரிக்காவிலே செய்யப்பட்டவை என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு அப்பட்டமாக, பகிரங்கமாக இந்தியாவை எப்படியாவது அடக்குவது என்று யாஹ்யாகான் மட்டுமல்ல, யாஹ்யாகான் பின்னால் அமெரிக்க அரசும் கருதுகிறது. இன்றைக்கு அங்குள்ள தலைவர்கள், நிக்ஸன் போன்ற தலைவர்கள் இந்தியா





ஓரளவுக்குப் புதிய புதிய திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கின்ற சூழ்நிலையில் எங்கே அது சோஷலிஸப் பாதையில் போய்விடுமோ என்ற அச்சத்தினால்தான் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் படித்தேன். கம்யூனிஸ்ட்டுகள் கூட அப்படி எழுதமாட்டார்கள் அமெரிக்காவைத் தாக்கி சோவியத் யூனியனைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இப்படி உயிருக்கே இன்றையதினம் நம் நாடு நிலைத்திருப்பதா என்று உள்ள இந்தப் போராட்டக் காலத்திலே, எப்படியாவது யாகியாகான் பாதுகாக்கப் பட வேண்டுமென்பதற்காக செக்யூரிட்டி கவுன்சிலில் அமெரிக்கா எடுத்த நிலை எவ்வளவு துரோகமானது, அந்த நேரத்திலே ரத்து அதிகாரத்தை சோவியத் யூனியன் பயன்படுத்தியது எவ்வளவு பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தை ஏன் சொல்லுகிறேன் என்றால் இது ஒரு கடுமையான போராட்டமாக இருக்கப் போகிறது. நம்முடைய ஒற்றுமையினால் பின்னாலே வரும் அம்சங்களை நாம் சமாளிக்கவேண்டுமென்ற அடிப்படையில் நான் இந்த விவரங்களையெல்லாம் கூறினேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்தத் தீர்மானத்தின் முதற் பகுதியிலே தெளிவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த யுத்தத்திற்கே காரணம் என்ன? சென்ற டிசம்பர் மாதம் நடந்த பொதுத் தேர்தலில், எப்படித் தமிழகத்திலே முன்னேற்றக் கழகம் தனிப்பெரும் கட்சியாக வந்ததோ, எப்படி அகில இந்திய ரீதியிலே இந்திரா காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக வந்ததோ அதுமாதிரி தனிப்பெரும் கட்சியாக முஜிபூர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சி வந்தது. சாதாரணமாக ரஹ்மான்தான் இன்றைக்குப் பிரதம மந்திரியாக இருந்திருக்க வேண்டும். அதற்கு மாறாக ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையில் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள். வெற்றிபெற்ற மாபெரும் தலைவர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அதை ஆதரித்து நின்றவர்கள் அவர்கள் கணக்குப்படியே பார்த்தால்கூட, 10 இலட்சம் பேர்கள் கொல்லப்பட்டார்கள். ஒரு கோடிப் பேர் இந்தியாவிற்குள்ளே தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலும்கூட ஆதரவுக்குப் பல நாடுகள் நின்றன. அனுதாபம் காட்டப் பல நாடுகள் நின்றன. ஆனால் மக்களைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் கூறியதைப் போல் அதிக ஆதரவு தந்திருக்க முடியும். ஆனால் மக்களுக்கு அப்பாற்பட்டு அதிகாரத்திற்கு வந்தவர்களிடத்தில் இன்றைக்கு ஐயப்பாடு இருக்கிறது. அதனால்தான் பாராளுமன்றத்தில் அஞ்சலா தேவிஸ் பேசும்பொழுது உள்பூசலை அடுத்து இப்பொழுது இந்நிலையைப் பார்க்கிறோம் என்றார்கள். ஆகவே அதுதான் அடிப்படைக் காரணம். பங்களாதேஷ் விடுதலை அடையப் போகிறது என்பதில் சந்தேகம் கிடையாது. அவர்களுக்குப் பயிற்சி அதிகமாக இல்லை என்றாலும்கூட ஆயிரக்கணக்கான வாலிபர்கள், மாணவர்கள், போலீசார் எல்லாம் இன்றைக்குக் கொரில்லாப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 6

படையிலே சேர்ந்து மிகப் பெரும் தாக்குதலை அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற முதல் விஷயத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பகிரங்கமாக மூன்றும் தேதியன்று நம்மைத் தாக்கியதற்குப் பிறகு பகிரங்கமாகப் பிரகடனமே செய்து விட்டார் யாஹ்யாகான் அவர்கள். இதுவரையிலும் பங்களா தேஷில் நடத்திவந்த யுத்தத்தை இந்தியாவின் மேல் நடத்தி யிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே எல்லாக் கட்சித் தலைவர்களும் பிரதம மந்திரி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பில் பேசிய இந்திரஜித் குப்தா அவர்கள் "எங்கள் கட்சியைப் பொறுத்த வரையிலே இந்த யுத்தத்திலே, தேசப் பாதுகாப்புக்காக இருக்கும் யுத்தத்திலே, முழுமூச்சுடன் நாங்கள் ஆதரவோடு நிற்போம்" என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்திலே, இந்த யுத்தமானது ஒரு சரித்திரக் கடமையை நம்மீது சுமத்தி இருக்கிறது. நமக்கு வேறு நாடுகள்பேரில் ஆக்கிரமிக்க வேண்டுமென்ற ஆசை கிடையாது. அதேநேரத்தில் எந்தத் தேசமாக இருந்தாலும் சரி, அது பாகிஸ்தானாகயிருந்தாலும் சரி, அது சைனாவாகயிருந்தாலும் சரி நமது தேசத்தின் எல்லையிலே வந்து நம் தேசத்தின் நிலத்தை ஏதாவது பிடிப்பதாக இருந்தால் கண்டிப்பாக இந்திய மக்கள் அதற்குக் கொஞ்சங்கூட இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதையும் தெளிவாகக் கூறியிருக் கிறார்கள்.

இன்னொன்று, பங்களா தேஷ் மக்களின் இந்த வீரப் போராட்டத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் நமக்குப் பாகிஸ்தான் மக்கள்பேரில் எந்தவிதமான வெறுப்பும் கிடையாது. பாகிஸ்தான் மக்கள் இன்றைக்கு எப்படியாவது இதற்குப் பிறகாவது ஜனநாயக ரீதியிலே இந்தியாவுடன் நட்புறவு கொள்ளும் அளவிற்கு அவர்கள் வருவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்தப் பாதுகாப்புப் போராட்டத்திலே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நிற்பார்கள் என்ற இந்தக் கருத்தை எங்கள் தலைவர் நாடாளுமன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையே தான் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த யுத்த காலத்திலே, ஏற்கெனவே நான் அமெரிக்காவைப் பற்றிச் சொன்னேன். அதேபோல் பகிரங்கமாக நம்மை எதிர்த்து இருக்கும் ஒரு நாட்டிற்கு சைனா இன்றைக்கு ஆதரவு தருவதாக அறிகிறோம். அந்த நாட்டிற்கு சைனா நேரடியாக ஆயுதங்களைத் தரப்போகிறதா அல்லது துருப்புக்களை அனுப்பப் போகிறதா என்று எங்களுக்கு நிச்சய மாகத் தெரியவில்லை. வியட்நாமிற்கே ஆட்களை அனுப்பாத சைனா இந்தியாவைப் பொறுத்தவரையில் மிரட்டலை அதிகமாகச் செய்து கொண்டிருப்பார்கள். அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை.



1971 டிசம்பர் 6] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய கடமை என்ன என்று தெரிந்து கொள்ளவேண்டும். அநேகமாக எல்லாக் கட்சித் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் தங்கள் கருத்துக்களைச் சொல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. என்னைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தை இந்தத் தடவை அழுத்தந் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். 1945-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்பொழுது நாட்டுப் பாடகர்கள் ஒரு பாட்டைப் பாடுவார்கள், நான் ரேடியோவில்கூடச் சொன்னேன்.

பதுக்கல்காரன் பாசக்கயிற்றை வீசினான் வீசினான்
பாரத நாட்டைப் பஞ்ச நாடாய் ஆக்கினான் ஆக்கினான்
சரித்திரம் உன்னை கூவி அழைக்குது தோழனே தோழனே
தரித்திரம் போக்கும் கடமை உனது தமிழா தமிழா
சிங்கம் எனவே நீ எழுவாய் செஞ்சேனை நிகராய் ஜோராய்
பாட்டாளி ராஜா ராஜா பாட்டாளி ராஜா

என்று தெருப்பாடகர்கள் பாடினார்கள். இது ஒரு ஆழமான கருத்து. இந்த நேரத்திலே பதுக்கக் கூடியவர்கள், இந்த நேரத்திலே விலைவாசிகளை உயர்த்தக் கூடியவர்கள், தேசத்திற்கு விரோதிகள் என்பதைப் பிரகடனப்படுத்த வேண்டும். அந்த முறையிலே இருக்கக்கூடிய தேசத் துரோகிகள் கைது செய்யப் பட்டார்கள், தமிழகத்திலே இவ்வளவு பேர்கள்மீது அரசினர் கடுமையான நடவடிக்கை எடுத்தார்கள், அப்படி நடவடிக்கை எடுக்கும் காலத்திலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவர்களுக்கு வக்காலத்து வாங்கவில்லை என்ற நிலை ஏற்பட வேண்டுமென்று தாழ்மையோடு வற்புறுத்திச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே இன்னொன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கி றேன். தொழிலாளர்களைப் பொறுத்த வரையிலும் சீன ஆக்கிரமிப்புக் காலத்திலாகட்டும், அல்லது பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காலத்திலாகட்டும் இந்தக் காலங்களில் தமிழகத் திலுள்ள தொழிலாளர்களும் சரி, இந்தியாவிலுள்ள தொழிலா ளர்களும் சரி, உற்பத்திக்கு ஆணி விளைவிக்கின்ற முறையிலேயோ அல்லது யுத்த முயற்சிக்கு ஆணி விளைவிக்கின்ற முறையிலேயோ எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. இன்றைக்கு மதுரையில் மில் தொழிலாளர்கள் 2,000 பேர்களும் ஒரு நாள் சம்பளத்தை நாளைக்கேகூடக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அம்மாதிரி சேக்ரிஃபைஸ் செய்ய முதலாளிகள் தயாரா? இன்றைக்கு ஒரு மில்லிலேயாவது 500 பிரேமும், 1,000 தறியும் வைத்திருந்தால் முதலில் 500-க்குப் பதில் 450 மட்டும் ஒப்புக் கொண்டு ரேட்டட் கெபாசிட்டியில் ஈடுபட்டால் தேசத் துரோகம். இந்தக் கணக்கிலே பார்த்தால் தமிழகத்திலே பல முதலாளிகள் இருப்பார்கள். ஆகவே ஃபுல் ப்ரொடக்ஷன் என்ற கருத்தை வலியுறுத்த வேண்டும். இப்படி வரும்பொழுது ஏற்படக்கூடிய பல சிக்கல்கள்—நான் இப்பொழுது சொல்லக்கூடாது என்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 6

நினைத்தேன், ஆனாலும் சொல்கிறேன்—சிம்சன் பூசல் எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டது. மிகக் கேந்திரமாக இருக்கும் எஞ்ஜினியரிங் தொழிற்சாலை என்ற அளவில் இருக்கிறது. அதற்கு முதலமைச்சர் போன்றவர்கள் முன் கை எடுத்து நடந்தவைகளைக் கொஞ்சமும் கவனிக்காமல், தேசத்திலிருக்கும் நிலைமையை மனத்தில் வைத்து செட்டில்மெண்ட் பண்ணும் வகையில் அவர்கள் வாக்குறுதியின் பேரில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கிறார்கள், அவாகள் எந்தவிதமான சேக்ரிஃபைஸுக்கும், தியாகத்திற்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இறுதியாக, விவசாயத்தைப் பொறுத்தவரையில் இந்த நேரத்திலே நம்முடைய விவசாய சீர்திருத்தத்தைச் செய்வது ரொம்ப ரொம்ப உதவியாக இருக்குமென்று கருதுகிறேன். இந்த நேரத்தில் சாதாரண சட்டங்களை அமல் நடத்தக் கூடாது என்பதுகூட சரியாக இருக்கும். நிலத்தைப் பண் செய்து சாகுபடி செய்திருக்கலாம். ஆனல் சட்ட விரோதமாகக் கூட இருக்கலாம். மதுரை மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் 900 ஏக்கர் நிலத்தில் இன்றைக்குக் கேப்பை சாகுபடி செய்திருக்கிறார்கள். இன்றைக்கோ நாளைக்கோ 10,000 மூட்டை அளவில் அதிலிருந்து அறுவடையாக தயாராக இருக்கிறது. சட்டப்படி பார்த்தால் ஃபாரஸ்ட் லேண்டில் நுழைந்திருப்பதாகத் தெரியும். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து அந்தக் கேப்பையை நம் மக்களுக்குக் கிடைக்க உதவச் செய்யும் முறையிலே நாம் செய்ய வேண்டும். இம்மாதிரி நேரத்திலே சாதாரண சட்டங்கள் யாருக்குச் சாதகமாக அமைய வேண்டுமென்றால் விவசாயிகளுக்குச் சாதகமான முறையிலே அமைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் பல மட்டத்திலே அரசியல் கட்சித் தலைவர்கள், பொது ஜனங்களின் பிரதிநிதிகள் இவர்களை வைத்து பாதுகாப்புக்கு உதவுகின்ற முறையிலே செய்ய வேண்டும். நாளைக்கு வெறி பிடித்துப் போயிருந்தால், இதே சென்னைக்கு இரண்டு மணி நேரத்தில் வர முடியும். முதல் யுத்தத்தின்போது சென்னை தாக்கப்படவில்லையா, இரண்டாவது யுத்தத்தின்போது தாக்கப்படவில்லையா ? ஆகவே இம்மாதிரி யுத்த அபாயம் ஏதோ வடக்கிலே தான் இருக்கிறது, எல்லையில் மட்டும்தான் இருக்கிறது என்று இல்லாமல் நாம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசு சுணங்கியிருந்தாலும் எவ்வளவு பேர் தயாராக இருக்கிறார்கள் என்ற அந்த விவரங்களைச் சொல்ல வேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய யுத்தத்திற்குத் தேவையான பொருள்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் உற்பத்திக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு செய்ய வேண்டும். ஆவடி டாங்க் பாக்டரி போன்றவற்றில் உண்மையிலேயே உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணமுடைய மானேஜர்களைப் போட வேண்டும். இதிலே எல்லாம் அதிகமான கவனம் செலுத்த வேண்டும்.



1971 டிசம்பர் 6] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூராவும் தமிழ் மக்கள் சார்பில் இந்த யுத்தத்திலே இந்திராவின் பின்னல், இந்தியப் பிரதமரின் பின்னல் நின்று அவர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தருவோம் என்ற வகையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற முதல்வரின் தீர்மானத்தின் அடிப்படையை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். பெருமாள்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன் மொழிந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பாகிஸ்தான் இந்தியா மீது போர் தொடுத்திருக்கிறது என்பது இப்போதுதான் முதல்முறை அல்ல, பாகிஸ்தான் எப்போது தோன்றியதோ அப்போதே அது இந்தியாவுக்குப் பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாகத் தொல்லை கொடுக்கும் நாடு என்பது முடிவான விஷயம். எங்கள் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பாகிஸ்தான் தோன்றிய காலத்திலேயே சொன்னார்கள்—'பாகிஸ்தான் என்பது அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பல்' என்று அந்த நாட்டையே அப்படி வருணித்தார்கள். பாகிஸ்தான் என்ற நாடு இந்தியா பொருளாதார ரீதியில், அரசியல் ரீதியில் முன்னேற்றம் அடையக் கூடாது என்பதற்காகவே உண்டாக்கப்பட்ட ஒரு நாடு. அந்த நாடு நம் மீது போர் தொடுக்கும் என்பது எங்களைப் பொருத்த வரை ஆச்சரியமான ஒன்றல்ல. நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள்—அதனுடைய இழப்பு முடிவில் பாகிஸ்தானுகவே இருக்கும் என்று. அதுதான் சரியான கருத்தாகும்.

நம்முடைய மக்கள் அமைதியாக முன்னேற்றப் பாதையில் அடி மேல் அடி வைத்துச் செல்லும் நிலையில் கடந்த 25 ஆண்டு காலமாக நாம் முன்னேற முடியாமல் தடையாக இருந்தது பாகிஸ்தான். பெரும்பகுதியான பொருளாதாரத்தை இராணுவ வலிமையைப் பெருக்கவே நாம் செலவிட்டு வரவேண்டிய நிலையில் இருந்து வந்திருக்கிறோம். காஷ்மீர் பகுதியிலும், கிழக்கு வங்கப் பகுதியிலும் எல்லைகளைக் கண்காணிக்கவே பெரும்படையை வைத்திருக்க வேண்டிய நிலை இருந்து வந்திருக்கிறது. நான் 1957-ம் ஆண்டு காஷ்மீருக்குச் சென்றபோதே எல்லை நெடுக பீரங்கிகளை வைத்துக் கொண்டு படைகளை நிறுத்தி வைத்திருந்ததைப் பார்த்தேன். அப்போது பாகிஸ்தான் இந்தியா மீது போர் தொடுக்கும் என்ற நிலை இல்லை. எந்த நேரத்திலும் பாகிஸ்தான் தொல்லை கொடுக்கும் என்ற காரணத்தாலே எல்லையிலே படைகளை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வந்திருக்கிறது. நமக்கு இன்னொரு நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை,

அந்த நாட்டினுடைய அமைதியைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அந்த நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட வேண்டுமென்ற எண்ணம் நமக்குத் துளிக்கூட இல்லை.

இப்போது நாம் யுத்தத்தில் வலுக்கட்டாயமாக இழுக்கப்பட்டிருக்கிறோம். யாகியாகான் அரசு அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்க முடியாத நிலையிலே, அங்குள்ள மக்களுக்கு உண்மையான வாழ்க்கை வழியைக் காட்ட முடியாத நிலையிலே, யுத்தத்தில் மக்களைச் சிக்க வைத்து போர்த் தத்துவத்தை அங்குள்ள மக்களுக்கு ஊட்டி இந்தியா மீது போர் தொடுத்திருக்கிறார். இன்றையதினம் கிழக்கு வங்க மக்களுக்கு, நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் அங்குள்ள அவாமி லீக் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றதும் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது. அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன, நீ யார் அதைக் கேட்க என்று அவர்கள் கேட்கலாம். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் நடக்கும் அக்கிரமங்களையும் அநியாயங்களையும் பற்றி மற்ற நாடுகள் கேட்டுத்தான் ஆகவேண்டும். அந்த அக்கிரமங்களைப்பற்றி எல்லையில் உள்ள நாடுகள் கேட்காமற் போனால் அவர்கள் எல்லையிலுள்ள நாட்டிலே ஊடுருவமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? போர் என்பது நம்முடைய நாட்டுக்குப் புதிது அல்ல.

தியாகம் புரிவது என்பது நமக்குப் பரம்பரையாக வந்தது. நாட்டைப் பாதுகாக்கும் பணியில் இன வேறுபாடு இல்லாமல், நிற வேறுபாடு இல்லாமல், மொழி வேறுபாடு இல்லாமல் இன்றைய தினம் நாம் இன்று ஒன்றுபட்டு இருக்கிறோம். அன்றையதினம் பாரதியார் பாடினார் 'முப்பது கோடி ஜனங்கள் சங்கம்' என்று அன்று அவ்வாறு ஒரே அணியில் நிற்கச் சொன்னதுபோல் இன்று ஐம்பது கோடி மக்கள் ஒரே அணியில் நிற்கிறோம். இன வித்தியாசம் இல்லாமல், சமய வித்தியாசமில்லாமல், மொழி வித்தியாசம் இல்லாமல், கட்சி வித்தியாசம் இல்லாமல் ஒரே அணியில் திரண்டு நிற்கிறோம். பாகிஸ்தானோடு இதுதான் இறுதிப்போர், இதற்குப் பின்னால் நமக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போரே கிடையாது என்ற நிலைக்குத் தயாராகி ஒன்று திரண்டு நிற்கிறோம். இந்தியா இந்தப் போரில் வலுக்கட்டாயமாக இழுத்து விடப்பட்டிருக்கிறது. அநியாயமாக இழுத்து விடப்பட்டிருக்கிறது. தர்மத்தின் பெயரால், நியாயத்தின் பெயரால், ஜனநாயகத்தின் பெயரால் நாம் போரில் இறங்கி உள்ளோம். இந்த நாடு வாழக்கூடாது என்பதற்காகவே உருவாக்கப்பட்டது பாகிஸ்தான். இந்த நாட்டை அழிக்க வேண்டுமென்பதற்காகவே நீண்ட காலமாகவே அமெரிக்க ஏகாதிபத்தியம் பாகிஸ்தானுக்குத் துணை புரிந்து



வந்திருக்கிறது. பக்கத்தில் இருக்கும் சீனா பற்றிக் குறிப்பிடும் போது திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சீன நாடு நேரடியாகப் போரில் குதிக்காது என்று சொன்னார்கள். பகிரங்கமாக சீனா குதிக்காவிட்டாலும் பாகிஸ்தானுக்கு மறைமுகமாகச் செய்ய வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து வந்திருக்கிறது, செய்தே தீரும் என்ற நிலைதான் இருக்கிறது.

பாகிஸ்தானில் கிழக்கு வங்கத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் ராணுவமும், தேக்கி வைக்கப்பட்டிருக்கும் கப்பல்களும் தொடர்ந்து 15 நாட்கள் நம்முடைய இராணுவம் போராடினால் அழிக்கப்பட்டுவிடும். விமானப் படை அழிக்கப்பட்டு விடும், கப்பற்படை அழிக்கப்பட்டுவிடும். அப்போது இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து இராணுவத்தைக் கொண்டுவர முடியாது, இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து கப்பல்களைக் கொண்டு வரமுடியாது, ஆயுதங்களைக் கொண்டுவர முடியாது, வெடி குண்டுகளைக் கொண்டு வரமுடியாது. இராணுவக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் 20 நாட்களில் கிழக்கு வங்காளத்தைப் பிடித்து பங்களா தேசத்தை அங்குள்ள மக்கள் கையில் அதன் அரசாட்சியை ஒப்படைத்தே தீரும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மறைமுகமாக சீனாக்காரன் ஆயுதங்களை அனுப்பாமல் இருப்பானா? அமெரிக்க ஏகாதிபத்தியம் யுத்தகால செப்பிடு வித்தைகளைச் செய்யாமல் இருக்குமா ? அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் நாம் நீண்டகால யுத்தத்திற்குத் தயாராக இருக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'இப்போது நடைபெறுகிற யுத்தம் 10 நாட்களில், 15 நாட்களில் முடிவடைந்து விடுமென்று சொல்ல முடியாது. ஒரு மாதம், இரண்டு மாதம் கூட ஆகலாம். நீண்ட கால யுத்தத்திற்கு ஆயத்தமாக இருங்கள்' என்று சொன்னார்கள். நீண்ட கால யுத்தம் என்று சொல்லும்போது அது ஓராண்டாக இருக்கலாம். இரண்டு ஆண்டுகளாக இருக்கலாம், ஐந்து ஆண்டுகளாக இருக்கலாம். பத்து ஆண்டுகளாக இருக்கலாம். 100 ஆண்டுகளாகக் கூட இருக்கலாம். இதுதான் இறுதிப் போர். ஆகவே, ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் இந்த நாட்டைக் காப்பதற்காக எதையெதைத் தியாகம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் தியாகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதல்வர் அவர்கள் இடுகின்ற கட்டளைகளை எப்படி தமிழ் நாட்டு மக்கள் கேட்டு நடக்கக் காத்திருக்கிறார்களோ அந்த வகையில் நானும் நான் சார்ந்துள்ள பார்வர்டு பிளாக் கட்சியும் இந்த நாட்டைப் பாதுகாக்கும் பணியில் தன்னை அர்பணித்துக் கொண்டிருக்கிறது என்று கூறி, முதல்வர் அவர்கள் கொணர்ந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமருகிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இத்தீர்மானத்தை முஸ்லிம் லீக்கின் சார்பில் மனப்

பூர்வமாக ஆதரிக்கும் முகத்தான் இந்த அவையின்முன்பு நின்று பேசுகிறேன். தலைவர் அவர்களுடைய அனுமதியோடு என்னுடைய உள்ளக்கிடக்கையிலுள்ள ஒரு நன்றியுணர்ச்சியை முதல் முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய மதிப்புமிக்க முதல்வர் அவர்கள் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசும்போது. இந்தப் போர் இந்து-முஸ்லிம் போர் அல்ல; இரு நாடுகளுக்கு இடையில் நடக்கும் போர்' என்று குறிப்பிட்டதற்காக நான் அவருக்கு என் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்கிரமிக்கிறது என்று சொன்னால் அது ஜாதியின் அடிப்படையில் அல்ல; ஜாதியின் அடிப்படையில் உலகத்தில் போர் நடந்ததில்லை ; நடக்காது. அவ்வாறான போராட்டங்கள் நடந்ததாகச் சரித்திரத்தில் இல்லை.

நான் கடந்த கால சரித்திரத்தைக் குறிப்பிடவில்லை. இரு முறை பாகிஸ்தான் இந்த நாட்டின் மீது படை எடுத்தபோது முஸ்லிம்கள் நடந்துகொண்ட கட்டுப்பாட்டை இங்கு எடுத்துரைப்பதோடு நின்று விடவில்லை. பாண்டிய நாடு இருந்த காலத்தில் நடந்த சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாண்டியன் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் பாண்டிய நாட்டின் மீது மாலிக்காபூர் என்பவர் வட நாட்டிலிருந்து படையெடுத்து வந்தார். அவர் படையெடுத்துவந்த போது பாண்டிய நாட்டு எல்லையில் தளம் அமைத்திருந்தார். பாண்டியப் படையும் எல்லையில் தளம் அமைத்திருந்தது.

ஆனால் இரவு நேரத்தில் மாறுவேடத்தில் 25,000 முஸ்லிம் வீரர்களின் தளபதியாக இருந்த ஒரு முஸ்லீம் வீரரை மாறு வேடத்தில் வட நாட்டிலிருந்து வந்த ஒரு படைத் தலைவன் சந்தித்தது உங்களுக்குத் தெரியும், சரித்திரத்தில் அது இருக்கிறது. அவர் கேட்டார், நீர் எங்கே வந்தீர் என்று. அவர் ஒரு முஸ்லிம் என்பதால் மற்றொரு முஸ்லிமிற்குக் கூறும் முகமன்படி 'அஸ்லாம் அலைக்கும்' இறைவன் உங்களுக்கு எல்லா நலன்களையும் உண்டாக்கட்டும் என்று சொன்னதற்கு பாண்டிய நாட்டுத் தளபதி அதற்குப் பதில் சொல்லாமல், நீர் வந்த விஷயத்தைச் சொல்லும் என்றார். அப்போது அவர் சொன்னார். நாம் முஸ்லிம்கள், வட நாட்டிலிருந்து படை எடுத்து இந்த நாட்டைக் கைப்பற்ற நாங்கள் வந்திருக்கிறோம். அன்புகூர்ந்து நீ மாத்திரம் இன்று சண்டையில் பங்கு பெறாமல் உன் படையோடு ஒதுங்கி நின்றாயானால் நிச்சயமாக இந்த நாட்டை நாங்கள் கைப்பற்ற முடியும், அப்படி வெற்றி பெற்று தளபதியாகிய உன்னிடமே இந்தப் பாண்டிய நாட்டின் அரசுரிமையை ஒப்படைத்து விட்டுப் போகிறோம் என்று சொன்னார். அதற்கு அந்தத் தளபதி சொன்னார் முஸ்லிம் என்ற முறையில் இறைவனின் அன்பு உண்டாகவேண்டும் என்று சொன்ன உனக்குச் சொல்கிறேன். நான் இந்த நாட்டின் பிரஜை. நான் முஸ்லிம் என்பதற்காக அல்லது வேறு காரணங்களுக்காக என்





நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டேன், அப்படி காட்டிக் கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை என்று சொன்னான், முஸ்லிம்கள் நம்புகிற 'ஈமான்' படி சொல்கிறேன். மானங்கெட்டவனே சொல்கிறேன் கேள் . . . (ஆரவாரம்) நான் பாண்டிய நாட்டுத் தளபதியாகவே மாறி விட்டேன்' இந்த அவையிலே பேசுகிறேன் என்ற உணர்வையே மறந்து விட்டு (ஆரவாரம்) எனக்குத் தளபதி என்ற ஒரு பெயரும் உண்டு, பாண்டிய நாட்டுத் தளபதி எப்படிப் பேசியிருப்பாரோ அதே பாணியில் நானும் பேசத் தொடங்கி விட்டேன். அதற்காக அவை என்னை மன்னிக்கவேண்டும்.

அன்புக்குரியவர்களே, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்தியா மீது பாகிஸ்தான் படை எடுத்தது இது முதல் தடவை அல்ல. இது மூன்றாவது தடவையாகும். எங்களது மதிப்பு மிக்க, மரியாதைக்குரிய தலைவர் காயிதே மில்லத் அவர்கள் டெல்லி பாராளுமன்றத்தில் மிகத் தெளிவாக முஸ்லீம்களின் ஆதரவு இருக்கிறது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இன்று ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டு படுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இந்திய உப கண்டத்தில் வாழக் கூடிய பத்துக் கோடி முஸ்லிம்களும் இந்தப் போராட்டத்தில் பங்கு பெற்று, இந்திராவின் கரத்தைப் பலப் படுத்தி, இந்தியாவின் மானத்தைக் காப்பாற்ற முஸ்லிம்கள் எல்லாவித முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்று நோய்வாய்ப் பட்டிருக்கக்கூடிய சமயத்திலும்கூட அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கு எடுத்துக் கூற நான் பெருமைப்படுகிறேன்.

தலைவர் அவர்களே, நான் இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு வயது 64. போர்க்களத்திற்குப் போகக்கூடிய வயது எனக்கில்லை. போரில் என்னை எடுக்கமாட்டார்கள். தயவுசெய்து ஒரு பணிக்காவது என்னைத் தமிழ்நாட்டின் சார்பில் அனுப்பினால் நான் அதைச் செய்யவேண்டுமென்று கருதுகிறேன். அது என்னவென்றால், நம் வீரர்கள் போர்க் களத்தில் போர் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். போர்க்களத்தில், அவர்கள் போர் நடத்திக்கொண்டிருக்கும் போர் முனைக்குச் சென்று தமிழ்நாடு சார்பில் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காக என்னை நீங்கள் அங்கு அனுப்பி வைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மிகவும் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். நம்புகிறேன். அந்தப் பணியையேனும் நான் செய்ய விரும்புகிறேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் நிச்சயமாக இந்த நாட்டின் மானத்தைக்காக்க முன்னணியில் நிற்பார்கள். இந்த நாட்டின் மானத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு. இந்த நாட்டின்

மானத்திலும் அவமானத்திலும் அவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. நான் ஒன்று சொல்லிக்கொள்வேன். முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இது இந்து-முஸ்லிம் போராட்டம் அல்ல. களத்தில் சிந்தப்படும் ரத்தத்தில் இங்குள்ள மெஜாரிட்டி மக்களின் ரத்தத்தோடு எங்கள் ரத்தத்தையும் சிந்தி இந்த நாட்டைக் காப்பாற்றச் சித்தமாக இருக்கிறோம் என்று எங்கள் கட்சியின் தலைவன் என்ற முறையில் நான் உறுதி கூறுகிறேன்.

நாம் கட்சியை, ஜாதியை மறந்துவிடவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மை. அதை நமது மதிப்புமிக்க காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். அதற்காக நான் அவர்களுக்கு சபாநாயகர் அவர்கள் மூலம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே அணியில் நிற்கிறோம் என்பதை யாவரும் உணரட்டும். நாம் இந்திரா அம்மையாரின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும்.

இனிமேல் பாகிஸ்தான் பாகிஸ்தானாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. பாகிஸ்தானில் மொத்தம் பத்து கோடி மக்கள் இருக்கிறார்கள். அதில் கிட்டத்தட்ட ஏழு கோடி மக்கள் இன்று இந்தியாவால் பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு தனி நாட்டில் இருக்கிறார்கள். அங்கு நம் படைகள் உள்ளே நுழைந்து நொறுக்கிக் கொண்டிருக்கின்றன. அது நிச்சயமாகப் பிரிந்துபோனதுதான். அப்படிப் பிரிந்துவிட்ட பிறகு மிஞ்சியுள்ள பாகிஸ்தான் தேய்ந்து போன பாகிஸ்தானாகத்தான், தேய் பிறை பாகிஸ்தானாகத்தான் இருக்க முடியும். மதிப்புவாய்ந்த முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல் நிச்சயமாக அது இனிமேல் போரைத் தொடங்காது. போரைத் தொடங்கும் வன்மை, அந்த எண்ணம், அந்த மிருக உணர்ச்சியைச் செயல்படுத்தும் தன்மை, மண்ணோடு மண்ணாகி விடும், நம் ஜனநாயகப் போராட்டத்தின் மூலம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பார்வேர்ட் ப்ளாக் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சீனா ஆயுதங்கள் கொடுக்கும் என்று சொன்னார்கள். அது கொடுக்குமா கொடுக்காதா என்ற வாதத்தில் இறங்க நான் வரவில்லை. நிச்சயமாக அது கொடுக்கட்டும். அவர்கள் அதைப் பெறட்டும். அவர்கள் பெற்று நம்மோடு போராடட்டும். அதனால் ஒரு பெரிய நஷ்டத்தை இந்த நாட்டுக்கு விளைவிக்கட்டும். நிச்சயமாக இந்த நாடு அந்த நஷ்டத்தை ஏற்று நாட்டின் மானத்தைக் காப்பாற்றியது என்ற உறுதியோடு நாம் போராடவேண்டும். நாம் அதற்காகத் தளரவேண்டியதில்லை. சீனா என்ன செய்துவிடும்?

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்கா நாடு உதவுகிறது என்று குறிப்பிட்டார்கள். அது அதைத்தான் செய்யும். காரணம். எப்படியாவது பிரித்து அவர்கள் தொழில்





நடத்த விரும்புகிறவர்கள். எங்கேயாவது ஏதாவது நிகழ்ந்தால் ஒருபக்கம் சாய்வது அவர்கள் வழக்கம். எதிலும் அவர்கள் அவர்களது தொழில்களில்தான் கவனமாக இருப்பார்கள். இம் மாதிரியான போராட்டங்கள் அவர்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது என்று அவர்கள் அதைத்தான் விரும்புகிறார்கள். அந்தக் காரணத்தினால் அவர்கள் அப்படிச் செய்யலாம் அவர்கள் செய்யட்டும். இவர்களும் செய்யட்டும். மூன்று பேர்களும் சேர்ந்து அடித்தபோதிலும் கிட்டத்தட்ட ஐம்பது கோடி மக்களாகிய நாம் தேசீய உணர்ச்சியோடு, சுதந்திர உணர்ச்சியோடு ஜனநாயக உணர்ச்சியோடு நிச்சயமாக இந்தப்போராட்டத்தில் ஒருமுகமாக நின்று போராடி வெற்றி பெறுவோம் என்ற துணிவு மட்டும் நமக்கு இருந்தால் போதுமானது என்று கூறி இந்த மகத்தான தீர்மானத்தை முஸ்லிம் லீகின் சார்பில் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்திற்கு சுதந்திராக் கட்சி சார்பாக நான் முழு மனதோடு எங்கள் ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் அமெரிக்காவில், அமெரிக்க மக்கள் எந்த அளவிற்கு ஆதரவைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற விளக்கத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், அது எப்படியிருந்தாலும் நேற்று ஐ. நா. செக்யூரிட்டி கவுன்ஸிலில் நடைபெற்ற தீர்மானத்தைப் பார்க்கும்போது விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல் பாகிஸ்தானுக்கும் நமக்கும் இடையே நடைபெறுகிற இந்தப் போராட்டத்திலுள்ள பல்வேறு பிரச்னைகளைச் சரியான வகையில் சற்றுக்கூடக் கவனிக்காமல் செக்யூரிட்டி கவுன்ஸிலில் தங்களது ஆதரவு பாகிஸ்தானுக்கு என்று பகிரங்கமாகத் தெரிவித்தது வேதனைக்குரிய காட்சியாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், நம் நாட்டில் மிகத் தெளிவாக இது நியாயத்திற்கு அப்பாற்பட்டதொரு செயல் என்று பகிரங்கப்படுத்துவதோடு, பாகிஸ்தான் இந்தியா இரண்டு நாடுகளையும் ஒன்றாக ஈக்கேட் செய்திருப்பது எந்த அளவிற்கு தவறு என்பதையும் நாம் சுட்டிக்காட்டுவது மிகமிகத் தேவை என்று நான் கருதுகிறேன்.

இப்போது பல நாடுகள், அமெரிக்கா உள்பட, சைனா உள்பட,
ஏதோ இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சரிசமமான 10.11
மோதுதல் இருந்ததாகவும், அந்த நேரம் பார்த்து நீங்கள் உங்கள் 11-30.
போராட்டத்தை நிறுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்வது நியாயம் இல்லை என்பதைப் பல நாடுகளுக்கும் விளக்கி எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். குறிப்பாக, இப்போதுள்ள போராட்டத்திற்கு முன்பாக நம்முடைய வரலாறு எப்படி இருந்திருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1971 டிசம்பர் 6

முதலிலே காஷ்மீர் விஷயத்தில், நம்முடைய நாடு பாகிஸ்தான் நாட்டைத் தாக்கியது என்று கூறிய நேரத்தில், மிகத் தெளிவாக அன்று பொறுப்பேற்று இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், பாகிஸ்தான் காஷ்மீரில் பங்கு கோருவது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்று சொன்னார்கள். காஷ்மீரின் ஒரு பகுதி ஆசாத் காஷ்மீர் என்ற பகுதியைப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்தது. அப்படி ஆக்கிரமிப்பு செய்த நேரத்தில், " காஷ்மீர் பகுதி எங்களுக்குத்தான் சொந்தம், மீண்டும் அதை எங்களுக்குத் தந்து விடவேண்டுமென்ற " நிலைமை இருந்தாலும் கூட, அதை ஒரு போராட்டமாக நடத்தினார்கள். அதன் விளைவாக அந்தக் காஷ்மீர் பகுதியை இந்திய அரசாங்கம் காஷ்மீர் பகுதிக்கே விட்டுக் கொடுத்தது. இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். We were generous we were liberal நாம் ஏற்றுக்கொண்ட போராட்டத்தின் விளைவாக, அந்தக் காஷ்மீர் பகுதியை நாம் எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். மாறாக, நாம் அதை விரும்ப வில்லை. அந்தப் போராட்டத்தின் விளைவாக, ஏராளமான மக்கள் சேதம் அடைந்தவர்கள். துன்பத்திற்குள்ளானார்கள். அப்படி இருந்தபோதிலும், நாம் விட்டுக்கொடுத்து இருக்கிறோம்.

இரண்டாவதாக, 1965-ஆம் ஆண்டிலே ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். எந்தவிதமான காரணமும் இன்றி ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அவர்களாகவே அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். 1965-லே பாகிஸ்தான் பேடன் டாங்குகளை கொண்டு வந்து வைத்தார்கள். அந்தப் பேடன் டாங்குகளை வைத்துக்கொண்டு எந்த விதமான முன்அறிவிப்பும் இல்லாமல் தாக்கினார்கள். We were able to recover only a little late அந்தப் போராட்டத்தில் நாம் ஓரளவுக்கு வெற்றி பெற்ற பிறகு, லாகூரைப் பிடிக்கப்போகிறோம் என்ற நிலைமை வந்ததற்குப் பிறகு, பாகிஸ்தான் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்தது. அதன் விளைவாக டாஷ்கெண்ட் பிரகடனம் வந்தது. அதைக் கூட அமெரிக்க நாடு புரிந்து கொள்ளவில்லை என்று நான் வருத்தப் படுகிறேன்.

மூன்றாம் தரமாக, இப்போது வந்திருக்கும் இந்தப் போராட்டத்திற்குக் காரணம் என்ன? நீண்டகாலமாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம், பாகிஸ்தான் நம் நாட்டிற்கு அகதிகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. 1947-ம் ஆண்டு முதற்கொண்டே இந்தியா சுதந்திரம் அடைந்தது முதற்கொண்டே ஏதேனும் ஒரு விஷயத்தின் அடிப்படையில் பாகிஸ்தான், அகதிகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. இப்போது பங்களா தேஷிலிருந்து அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். நாம் இதையெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்தோம். நம்முடைய பண்பாடு வந்தவர்களையும் நம் நாட்டு மக்களெனக்கருதி ஆதரவு தந்து வருகிறோம். நம்முடைய நாட்டின் தலைவர்களும் இப்படி அகதிகளை



1971 டிசம்பர் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அனுப்பிக்கொண்டிருப்பது உகந்தது அல்ல என்பதைத் திட்ட வட்டமாக எடுத்துச்சொல்லி வந்திருக்கிறார்கள். பங்களா தேஷ் மக்களின் ஜனநாயக விழிப்புணர்ச்சியின் காரணமாக அங்கே ஒரு முஜ்பீர் ரஹ்மான் வந்தார். அவர்களுடைய ஜனநாயகக் கோரிக்கையைக் கேளாமல், அங்கே இருந்து மக்கள் இங்கே அனுப்பி வைக்கப்பட்டார்கள். அப்படி அங்கேயிருந்து ஆட்களை அனுப்பி வைக்கிற நேரத்தில் நம்முடைய பண்பாடு காரணமாக அவர்களை நாம் பரிதவிக்க விட்டு விடாமல், ஆதரவு தந்தோம். அப்படி உதவி செய்கிறபோது தெளிவாகச்சொன்னோம். You take back the refugees. Before taking then back, you prepare a proper climate in that country. "
ஆகவே, நாம் நம்முடைய தார்மீகப் போராட்டத்தை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமைக்குட்பட்டு இருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் குறிப்பாக அமெரிக்காவில் இருந்தபோது இது பற்றி எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருந்தவர்களுக்கு உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது. We have never been in the wrong. We have always been liberal.
நாம் ஒவ்வொரு கட்டத்திலும் விட்டுக்கொடுத்திருக்கிறோம். இதை செக்யூரிடி கவுன்சிலாக இருந்தாலும், யூ.என்.-ஆக இருந்தாலும் புரிந்துகொள்ளவேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் பார்க்க வேண்டும். பாகிஸ்தான் எப்பொழுதெல்லாம் நம் மீது ஆக்கிரமிப்பு நடத்துகிறது என்று பார்த்தால், அங்கே ' இன்டர்னல் டிரபிள் ' இருக்கிற போதுதான். அவர்களுடைய ஜனநாயகம் ஆபத்தில் இருக்கிறபோதுதான் இப்படிப்பட்ட தாக்குதல்களை நம்முடைய நாட்டின்மீது நடத்துகிறார்கள். யாஹ்யாகானுக்கு அங்கே ஆள வாய்ப்பில்லை. அங்கே, அவர்கள் ஏதோ ஆட்சி செய்யவேண்டுமென்று செய்து வருகிறார்கள். எத்தனை நாட்களுக்கு அவர்கள் நீடிப்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர் மனிதராக இருக்க முடியாத அளவுக்கு அங்கே அவருக்கு எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே, வெளியே இப்படி ஒரு நாடகத்தை நடத்தி, இந்தியா பாகிஸ்தான்மீது போர் தொடுக்கிறது என்று சொல்லி, அந்த நாட்டு மக்களை, அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பி விடுவதற்காக இதைச் செய்திருக்கிறார்கள். அந்தக் கோணத்திலிருந்து இதைப் பார்த்தால் நல்லது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் நாம் என்ன செய்ய இருக்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கெனவே திரு. மொய்தீன் அவர்கள் சொன்னது போல், மற்றும் பெருமக்கள் சொன்னது போல், இந்தப் போராட்டம் சுருக்கமாக ஒரு 10 நாளைக்குள்ளோ ஒரு மாதத்

திற்குள்ளோ முடியும் என்று நான் கருதவில்லை. அதை ஒரு பெரிய போராட்டமாக ஆக்குவதற்குத்தான் அவர்கள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்காவிலிருந்தும், சைனாவிலிருந்தும் ஆயுதங்களைப் பெற்று இருக்கிறார்கள். அந்த ஆயுதத்திற்கு வேலை கொடுத்தாகவேண்டுமென்பதற்காக இப்படி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீண்டகாலப் போராட்டமாக மாறினாலும் கூட அதை நாம் எதிர்க்கத் தயாராக இருக்க வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாம் ஒரு ரிசர்வ் லிஸ்ட் தயாரிக்க வேண்டும். ஏற்கெனவே ஒரு ரிசர்வ் லிஸ்ட் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ரிசர்வ் லிஸ்ட் என்றால், ஒரு கம்பெனியிலிருந்து வேலை செய்யக்கூடிய ஒரு தொழிலாளி இருப்பான், அரசாங்கத்தில் பணிபுரியும் ஒரு கிளார்க்காக இருக்கலாம், அவன் ரிசர்வ் லிஸ்ட்டிலே இடம் பெற்று, அந்தப் போராட்டத்திற்குச் சென்றால், அவன் திரும்பி வருகிற நேரத்தில் அவனுக்கு இங்கே ஒரு பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று அரசாங்கம் பிரகடனம் செய்வது மிகமிகத் தேவை. இது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் செய்யவேண்டும். இதை நம்முடைய மாநிலம் முதலில் செய்து விட்டால், நாளைக்கு மற்ற மாநிலங்களும் இந்தச் செயலைப் பின்பற்றும். அதோடு, அவர்கள் ஒரு ஆண்டோ, இரண்டாண்டோ, எமர்ஜன்ஸி கேடராகப் பணிபுரிந்து விட்டு இங்கே திரும்பி வந்தால், அவர்கள் இரண்டாண்டு இங்கே பணிபுரிந்திருந்தால் என்ன பிரமோஷன், சம்பள உயர்வு பெற்று இருப்பார்களோ, அதை அவர்கள் பெறும் வகையில் செய்யவேண்டுமென்று அரசாங்கம் ஒரு உத்தரவு போடவேண்டும். அப்படிப்பட்ட சரியான பாதுகாப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டால்தான் அவர்கள் அங்கே போய் பணியாற்ற உற்சாகம் பிறக்கும். அவர்கள் ராணுவத்திற்கோ அல்லது வேறு படையிலோ சென்று பணியாற்றுகிற நேரத்தில், அவர்களுடைய குடும்பங்களை பாதுகாக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதை அரசாங்கப் பணத்திலிருந்துதான் செய்யவேண்டுமென்பதில்லை. அவர்கள் எந்தெந்த ஸ்தாபனத்திலிருந்து செய்கிறார்களோ, அந்தந்த ஸ்தாபனங்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போடவேண்டும். அவர்கள் அங்கே பணிபுரிகிறபோது இறந்து விட்டால், அவர்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிற பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். 1965-ம் ஆண்டு போராட்டத்திலே என்னுடைய பிரதர்-இன்-லா ஈடுபட்டிருந்த நேரத்தில், அவர் இறந்து விட்டார். அவர்கள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. அந்த நிலையில் நாங்கள் 2-3 பேர் சேர்ந்து அந்தக் குடும்பத்தை இப்போது பார்த்துக்கொண்டு வருகிறோம். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், நாம் சிவிலியன்களாக இருப்பவர்களும் பல வகையில் ராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு உதவ முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.





We can held them from the places where we are now situated நாம் பலவகையில் அவர்களுக்கு உதவ முடியும். அவர்களை ஊக்குவிக்கிற முறையில் பல காரியங்களைச் செய்ய முடியும். அங்கே போர்க்களத்திலே பணிபுரிந்து கொண்டிருக்கும் சிப்பாய்களின் குடும்பங்கள் எப்படி இங்கே நிம்மதியாக வாழ முடியும்? அவர்களுடைய தேவைகளை இங்கே இருக்கும் சிவிலியன்ஸ் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு குடும்பத்தையும் அந்தப் பகுதியைச் சார்ந்த ஒருவர் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

நேற்று மாலையிலே கிட்டத்தட்ட பலபேர்கள், நண்பர்கள் பாகிஸ்தானுக்குப் போய்ப் போராடச் சென்றுகொண்டிருந்தார்கள். அதில் என்னுடைய தம்பியும் இருந்தார். அங்கேயிருந்த எல்லோரும், அண்ணன் தம்பிபோல் பழகிக்கொண்டிருந்தார்கள். எனக்கு அப்பொழுது ஒன்று தோன்றியது. இந்த அளவுக்கு ஒற்றுமையை எல்லாவிடங்களிலும் வளர்க்க வேண்டும். வெவ்வேறு மொழிகளைப் பேசலாம், ஆனால் அவர்கள் சாதி, மத பேதமின்றி இருப்பதுபோல், ஒரே நாடு, ஒரே மனிதன், எல்லோரும் ஒரே குடும்பம் என்ற வகையில் இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவர்கள் ஒரு குடும்பம்போல் செல்கிறார்கள்.

இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். நம்முடைய தமிழக அரசு செய்ய வேண்டும். இப்பொழுது ஸ்டேட் ஆப் எமர்ஜன்ஸி இருக்கிறது. நம்முடைய சர்க்கார் ஒரு உத்தரவு போட்டு, ராணுவத்திற்குச் செல்கிறவர்களுக்கு ராணுவத்தில் பாதுகாப்புகள் தருவதுபோல், ரிசர்வ் லிஸ்டில் உள்ளவர்களுக்கு, இன்னின்ன சலுகைகள் கொடுப்போம் என்று ஒரு வாக்குறுதியைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வது நன்றாக இருக்கும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். An army marches on its belly என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். பின்பாகத்தில் சப்ளைகள் செய்ய வேண்டும். ஆர்மியில் உள்ளவர்கள் போராடுகிறார்கள் ; ஆர்மி பேஸில், ஏர்-போர்ஸ் பேஸில் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். வின்ஸ்டன் சர்ச்சில் சொன்னார், பயங்கரமான யுத்தம் நடந்துகொண்டிருக்கும் காலத்தில், ராணுவத்தை ராணுவத்தில் ஈடுபட்டவர்கள் போல், நாட்டில் தாய்மார்கள் ஈடுபட்டு நடத்துகிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதுபோல், தாய்மார்களும், டிபன்ஸ்க்கு சப்ளை செய்யப்படும் மெடீரியல்ஸ், பொருள்கள், மருந்துவகைகள், துணிகள், இன்னும் ராணுவத்திற்குத் தேவையானவற்றை காப்பாற்றிக் கொடுக்கவேண்டும் என்று ஒரு அவசரச் சட்டமோ அல்லது ஒரு ஜி.ஓ. மூலமோ, அதிகாரிகளைக் கலந்து எப்படிச் செய்ய வேண்டுமோ அந்த வகையில் ஏற்பாடு செய்து அதற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தங்கமணி அவர்கள் சொன்ன கருத்தையும் நான் ஆதரிக்கிறேன். பல அன்பர்கள் உயிரை இழந்து விடுகிறார்கள். ஆனால் இங்கே நாட்டிலே உள்ளவர்களில் சிலர், சௌகரியமாக இருந்துகொண்டு, மருந்து போன்றவற்றைப் பதுக்கல் செய்து லாபத்தைச் சம்பாதிக்கலாம் என்று இருப்பவர்களை அவர்களின் போக்கைக் கண்டிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். வெளிப்படையாக இதற்கான பப்ளிக் ஒபினியனை மொபிலைஸ் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எல்லா எபிள் பாடீட் பீபிளும், பிட்வின் 20 அண்ட் 40 அல்லது 45 கூட உடல் நலம் சௌகரியப்பட்டவர்களாக இருந்தால், அவர்களையெல்லாம் சேர்க்கும் முயற்சியில் டெரிடோரியல் ஆர்மியை விரிவுபடுத்தி அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பஞ்சாபில் ஆர்மிக்குச் செல்கிறவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு 'ஆர்மி கான்ஷன்ஸ்' இங்கே வரவில்லை. எங்கே இங்குவரை பாகிஸ்தான் ஏரோப்ளேனுக்கு பெட்ரோல் போட்டு பாம்களைக் கொண்டு வந்து போடப் போகிறார்கள் என்று இருக்கிறார்கள். இன்றைக்கு பங்களா தேசமாக இருப்பதிலிருந்தும், மேற்கு பாகிஸ்தானத்திலிருந்தும், 2,000 மைல்களுக்கு அப்பால் இங்கே எங்கே வரப்போகிறார்கள் என்று அமைதியாக உட்கார்ந்து கொண்டிருப்பது ஆபத்து. குமரி முதல் காஷ்மீர் வரையில் எந்த இடத்தில் ஆபத்துவரும் என்று சொல்வதற்கில்லை. ஆகவே, எங்கும் மிலிடரி, ஆர்மி கான்ஷஸ்னஸ் உண்டுபண்ணப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கனம் முதல் அமைச்சரவர்கள் சொன்னார்கள், ப்ளட் பாங்க் பற்றி. நாம் தயாராக இருக்க வேண்டும், ரத்த தானம் செய்ய. அதற்கு ப்ராக்டிகல் மெஷராக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இங்கே, நம் சட்ட சபையின் பக்கத்திலேயே, ஒரு ப்ளட் பாங்கை ஏற்படுத்தினால், நம்மைப் பரிசோதித்து, 'ஏ', 'பி', 'ஓ' என்று எந்த வகையைச் சேர்ந்தது நம்முடைய ரத்தம் என்பதைச் சோதித்துப் பார்த்து விடலாம். நம்முடைய ப்ளட்டினாலேயே எல்லாம் ஆகிவிடும் என்று சொல்லவில்லை. ஆனால் எம்.எல்.ஏ.-க்கள் கொடுக்கிறார்கள் என்று ஒரு 'ஸைகாலஜி இஸ் க்ரியேடட்'; அதனால் எல்லோரும் முன்வருவார்கள். அதில் ஒரு பெரிய கஷ்டம் எதுவும் இல்லை. இலாகாவில் சொல்லி விட்டால், அப்பாரடஸ் எல்லாம் கொண்டுவந்துவிடுவார்கள். யார் யாருக்கு உடல் நலம் சரியாக இருக்கிறதோ, உடல் ப்ரஷரைப் பார்த்து, சரியாக இருக்கிறதா என்று பார்த்து, ப்ளட் எடுக்கலாம். இதை அறிந்த மக்களுக்கும் ஆர்வம் ஏற்படும். ஒரு ஸைகாலஜி க்ரியேட் ஆகிவிடும். பெரிய ஆபத்துக்கள் ரத்தமில்லாததாலேயே ஏற்படுகிறது. அம்பாலாவில் மிலிடரி ஆஸ்பத்திரியில், ப்ளட் சரியான வகையில் இல்லாததால், பலருக்கு சிகிச்சை கொடுக்க முடியாத நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், இதிலே கட்சி என்று கூட சொல்லக் கூடாது, எல்லோரும் சேர்ந்து, கட்சியையெல்லாம் மறந்துவிட்டு, ஈடுபட வேண்டும். 'இட் இஸ் ஆடோமேடிக்'. நம்முடைய உயிர்போல் இதைப் பாவிக்க வேண்டும். கட்சி விஷயங்களை மறந்து விட வேண்டும். அரசியலில் இருக்கக் கூடிய கசப்பு மனப்பான்மையெல்லாம் மறந்து விட்டு, சகோதர சகோதரிகள் என்ற எண்ணத்தில், ஒரு நாடாக, ஒரு மனிதனாக, ஒரு உருவமாகி, கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரையில் எல்லோரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுச் செயல்பட வேண்டும். இனிமேல் பாகிஸ்தானுக்கு இந்த ஆசை வராமல், எப்பொழுதெல்லாம் அவர்களுக்கு உள்ளே தகராறு ஏற்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் இந்திய நாட்டிலே கவனம் செலுத்தி, நமக்குத் தொல்லை கொடுக்கும் அவர்களுடைய மனப்பான்மையை, போக்கைக் கைவிடச் செய்யும் வகையில் நாம் அவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டும். இதற்கு முன்பு அயூப்கான் காலத்தில் இப்படிச் செய்தார்கள். அதையே இப்பொழுதும் தொடர்ந்து செய்கிறார்கள். "'மென் மே கம் அண்ட் மென் மே கோ' ஆனால் நமக்கு ஒரே பாதை, அந்தப் பாதையையே நாம் பார்ப்போம்" என்பதை ஒழிக்க வேண்டும். நல்ல வகையிலே அடிகொடுத்து பாடம் கற்பித்தால்தான் அவர்கள் சும்மா இருப்பார்கள். அந்த வகையில் நாம் ஈடுபடவேண்டும் என்று கூறி, இந்தத் தீர்மானத்திற்கு முழு ஆதரவையும் கொடுத்து விட்டு, முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் இந்த சபைமுன் வைத்திருக்கும் தீர்மானத்தை, இந்த நாட்டின் பிரஜை என்ற வகையிலும், ஒரு பகுதி மக்களின் பிரதிநிதி என்ற முறையிலும், அதற்கும் மேலாக, ஜனநாயகம், சோஷலிசம் இவற்றில் உறுதியான நம்பிக்கை கொண்ட கட்சியின் உறுப்பினன் என்ற முறையிலும், முழு மனதுடன் இதற்கு ஆதரவு கொடுக்கிறேன்.

இன்று தேசத்தில் ஏற்பட்டிருக்கும் நிலை திடீரென்று ஏற்பட்டதாகக் கருதுவதற்கில்லை. சிறுகச் சிறுக உருவாகி, இந்த நிலைக்கு இன்று வந்திருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். காரணம், உலக நாடுகளில் ரஷ்யாவும், அமெரிக்காவும் வல்லரசுகளாக இருந்தன. இப்பொழுது சைனாவும் வல்லரசாக மாறியிருக்கும் நிலையில் இருக்கிறது. ஆசியாக் கண்டத்தில் பெரிய நாடான இந்தியா ஒரு வல்லரசாக மாறும் தன்மைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அது சில உலக நாடுகளுக்கு ஏற்புள்ளதாக இருக்கவில்லை. ஆகவே, நம்முடைய வளர்ச்சியைத் தடைசெய்யப் பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த, பாகிஸ்தானோடு உறவாடி, நட்புக்கொண்டு, இந்த தேசத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கும் காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த காலச் சரித்திரத்தைப் பார்த்தால் அது நன்றாகத் தெரிகிறது:

[திரு. எம். சுரேந்திரன்] [1971 டிசம்பர் 6

ஆகவே, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலை, ஏற்கனவே உலக நாடுகளுக்கு இருக்கின்ற, பல அரசுகளின் எண்ணங்கள் காரணமாக இந்த அளவுக்கு வந்திருக்கிறது. நம்முடைய நாட்டு மக்களுக்கு, எப்படி ஒரு நாட்டில் சுதந்திரத்தைத் தேடுவது என்பது அனுபவப்பட்ட ஒன்று. ஆகவே, இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாக்க, எந்த விதமான இடைஞ்சல் ஏற்பட்டாலும், அதைச் சமாளித்து நிற்கின்ற அளவில் பழக்கப்பட்ட நிலைகளும், அனுபவமும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. 1965-ல் நாட்டின்மீது பாகிஸ்தான் படையெடுப்பின் காரணமாக, அப்பொழுது நாம் எப்படிச் செயல்பட்டு, சமாளித்து முன்னேறினோம், எவ்வளவு இடங்களைப் பிடித்தோம் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதே நேரத்தில் சமரசத்திற்கும் வந்திருந்ததால் நிலைமைகள் வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆனால், இன்றைக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பார்க்கும்போது, பாகிஸ்தான்-இந்தியா பிரிவினையே ஒரு இயற்கையானது இல்லை என்று இப்பொழுது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. சமீபத்தில் அமிர்தசரசுக்குச் சென்றிருந்தபோது பார்த்தோம். எல்லைப் பிரதேசங்களைப் பார்த்தோம். அங்கே பார்த்தால், ஒரே சமவெளியாக இருக்கும் இடத்தில் இரண்டு கதவுகளைத் தடையாகப் போட்டு, ராணுவத்தை வைத்து, ஏதோ நதி, மலை என்றில்லாமல், இயற்கையான எல்லைகளே இல்லாமல், ஆயிரக்கணக்கான ராணுவத்தினரை வைத்து பாதுகாத்து வைத்துக் கொண்டிருப்பது, எல்லாக் காலங்களிலும் நடப்பது என்பது சாத்தியம் இல்லை.

தகராறு வரும்; தகராறு வரவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் எல்லையைப் பிரித்தார்கள் என்பது நன்கு உணரப்பட்ட ஒன்றாகும். அதை அவ்வாறு உணர்ந்ததால்தான் மகாத்மா காந்தியடிகள் ' பாகிஸ்தான்-இந்தியா ' என்று பிரிக்க வேண்டாமென்று எவ்வளவோ வாதாடினார்கள்; எதிர்த்தார்கள். இதர தலைவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. காந்தியடிகளின் மொழிகளை நாம் அன்று ஏற்றுக் கொள்ளாததால், அதன் பலன்களை இன்றைக்கு அனுபவிக்கிறோம். நிலைமைகளை நினைத்து வருந்துகிறோம். காந்தியடிகள் கூறியதின் உண்மையை உணருகிறோம்.

இப்பொழுது நாம் உண்மை நிலையை உணர்ந்து கொண்டோம். எனவே, நாம் இனி நம் அறிவினாலேயே, நம் செயல் முறைகளினாலேயே நாம் முன்னேற வேண்டும். உலக நாடுகள் நம்மை மதிக்கும் வகையிலே, உலக நாடுகளின் முன்னால் நாம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். நம் நிலை அந்த அளவுக்கு வளர வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒற்றுமையோடு உழைத்து முன்னேற வேண்டும். அந்த உறுதிமொழியை இந்தச் சந்தர்ப்பத்திலே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலையை இந்த பாகிஸ்தான்-இந்தியா யுத்தம் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.



1971 டிசம்பர் 6] [திரு. எம். சுரேந்திரன்]

பாகிஸ்தானின் கொடிய செயலால், தகாத முறையினால் லட்சக் கணக்கான அகதிகள் நம் நாட்டிற்குள் நுழைந்திருக்கிறார்கள். உயிருக்குப் பயந்து உடைமைகளைத் துறந்து ஓடி வந்திருக்கும் அந்த அகதிகளை நாம் துரத்த முடியாது. ஆனால் அதே சமயத்தில் அவர்களை நிரந்தரமாக நம் நாட்டிலே வைத்துப் பாதுகாத்து வருவது என்பதும் நம்மால் முடியாதது. அது முடியக் கூடிய காரியமாக இருந்தாலும் வளர்ந்து வரும் ஒரு நாட்டின் முன்னேற்றம் அதனால் பெரிதும் பாதிக்கப்படும். அந்நிலையை இப்போது நாம் கண்கூடாகக் காண்கிறோம். எனவே, அகதிகளைப் பாதுகாக்கும் பணியை நாம் தொடர்ந்து செய்ய முடியாது. எனவே அதற்கொரு மாற்று ஏற்பட வேண்டும்; மாற்று ஏற்பட்டேயாக வேண்டும்.

பங்களா தேசத்தை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்பதன் மூலம் அந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று யோசனை சொன்னோம். பங்களா தேசத்தை ஏற்க வேண்டிய அவசியத்தைப் பற்றி அரசியல் கட்சிகள் எல்லாம் சொல்லி வந்தார்கள். ஆனால் எந்த நாடும் அதற்கொரு பரிகாரம் காண முன்வரவில்லை. இந்த நெருக்கடியான நேரத்திலே நாம் அதை அங்கீகரித்திருக்கிறோம் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

பங்களா தேசத்தை நாம் அங்கீகரித்துள்ளபடியால் நம்முடைய பொறுப்பு மிகவும் அதிகமாகிவிட்டது. நம்முடைய நாட்டிலே உள்ள பொறுப்புகளை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது இப்போது புதிதாக பங்களாதேசிலே ஏற்படக் கூடிய சகல நிகழ்ச்சிகளுக்கும் நாம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உலக நாடுகள் இதுவரையிலும் நம்மை ஒன்றாகவே பார்க்கவில்லை. இனி முன்னைவிட அதிகமாக நம்மை வேறுபடுத்திப் பார்ப்பார்கள். நம்மையும் ஒன்றாகக் கருதக்கூடிய அளவுக்கு நம் நிலையை உயர்த்திக்கொள்ளும் அந்த பெரிய பொறுப்பும் புதிதாக நமக்கு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை இந்த அவையிலே வைக்கின்ற நேரத்தில், நாம் ஆயுதம் தாங்க வேண்டியதில்லை; ஆயுதம் தாங்கும் நம் வீரர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை முழுமனதாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்து, நம் படைவீரர்களுக்குப் பின்னணியாக நிற்க வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றிபெற முடியும். இந்த நாட்டிலுள்ள ஒருசிலர் மட்டும்தான் நம் வீரர்களுக்கு—நாட்டின் பாதுகாப்புக்கு உதவ வேண்டும் என்பதல்ல. இந்த நாட்டிலேயுள்ள அத்தனை ஆண்களும், பெண்களும் போட்டிபோட்டு, உதவ முன்வர வேண்டும்.

1939-ல் யுத்தம் தொடங்கிய நேரத்தில், நாட்டிலே உள்ள எல்லா பொருள்களுக்கும் விலையேற்றம் ஏற்பட்டது. வேளாண்மை உற்பத்திப் பொருள்களும் விலையேற்றம் அடைந்தன. வேளாண்மையில்

வேலை சரிவர நடைபெறவில்லை. அதேபோல் இந்த யுத்தமானது மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும் பொருள்கள் விலையேற்றம் ஏற்படக்கூடும். பொருள்களின் விலையேற்றத்தை நாம் தடுக்க வேண்டும். விலையேற்றத்திற்கு முக்கிய காரணம், உணவுப் பொருள்களும், உற்பத்திப் பொருள்களும் யுத்த முனைக்கு அனுப்பப்படும். அதனால் இங்கே இருக்கின்ற பொருள்களுக்கு இங்குள்ள வியாபாரிகள் அதிக விலை வைத்து விற்க முற்படுவார்கள். இப்பொழுது நாம் நினைத்தால் அவர்கள் முயற்சியைத் தடுத்துவிட லாம். ஆகையால், இந்த விஷயத்தில் அரசாங்கம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

விலையேற்றத்தைத் தடுக்க மற்றொரு வழி, உணவுப் பொருள் களையும், உற்பத்திப் பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு அக்கறை யுடன் கவனம் செலுத்த வேண்டும்.

யுத்த காலத்திலே, யுத்தத்திற்கு விரோதமாகப் பேசுபவர்கள் இருப்பார்கள்; எழுதுபவர்கள் இருப்பார்கள். அம்மாதிரிச் செயல்களில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்க வேண்டும். ஆனால் அந்த நேரத்தில் அம்மாதிரி ஒரு நிலை தமிழ் நாட்டிலே இருக்காது என்று எண்ணுகிறேன். நமக்கு இந்த அனுபவம் புதிதல்ல. சென்ற யுத்தங்களிலே நடைபெற்றுள்ள விளைவுகளை நாம் நன்கறிந்துள்ளோம்.

சுதந்திரம் அடைந்த பின், ஏற்பட்ட துன்பங்களை ஒவ்வொன் றாகச் செம்மைப்படுத்தி வந்த நாம், இப்போது மீண்டும் ஒரு பெரும் துன்பத்தை எதிர்நோக்கியிருக்கிறோம். இந்தத் துன்பத்தை —இந்தத் துயரத்தை நாம் உறுதியுடன் சமாளித்து, வெற்றி பெற வேண்டும். அதன் மூலம் நம் நிலைமை என்ன என்பதை நாம் உலகுக்கு உணர்த்த வேண்டும். ரஷ்யா நம் நிலையை ஆதரிக்கிறது. உலகின் சில நாடுகள் நம்மை எதிர்க்கின்றன, நம்மீது வீண் பழி சுமத்துகின்றன.

உலக நாடுகளிடையே நம்மீது உள்ள தாழ்வு மனப்பான்மை நீங்க வேண்டும். நாம் உண்மைக்காக, சத்தியத்திற்காகப் போராடு கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். உலக சமுதாயத்தில் நாமும் உயர்ந்தவர்கள்தான் என்பதை உலக நாடு நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த நிலையை உருவாக்கும் ஒரு வாய்ப்பு, ஒரு வசதி, ஒரு சந்தர்ப்பம் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்று நாம் எல்லோரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். நான் சார்ந்துள்ள சோஷலிஸ்ட் கட்சி முழு மனதாக இந்தச் சபதத்தை ஏற்றுக்கொள்கிறது என்று கூறி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறோம் என்று கூறி அமர்கிறேன், வணக்கம்.



* திரு. இ. எஸ். தியாகராஜன் : கனம் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். தமிழரசு கழகம் அதை முழு மனதுடன் ஏற்றுக் கொள்கின்றது. இந்தியாவின் வெற்றிக்கு அனைவரும் பாடுபட வேண்டும். அதற்காக தமிழ் நாடு அரசாங்கம் எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் தமிழரசு தன் முழு ஒத்துழைப்பையும் தரும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் பேச விழைகிறேன். சுதந்திரம் அடைந்த நாம் திட்டமிட்டு உழைத்து, நல்ல முறையில் முன்னேறி வருவதைப் பார்த்து, சில நாடுகள் நம்மீது பொறாமை கொண்டு, பலமுறையிலே நம்மைச் சீண்டி மீண்டும் போர்மூள்வதற்கான பூசல்களை மூட்டி விடுகின்றன. இப்போது நம்மீது போர் தொடுத்துள்ள பாகிஸ்தான், இதுதான் கடைசி யுத்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல, இது அவர்களுக்குக் கடைசி யுத்தமாக இருக்க வேண்டும். மீண்டும் அவர்கள் போர் தொடுக்கும் முயற்சியில் ஈடுபடாதவாறு செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி—அவர்கள் எடுக்கும் எல்லாவிதமான முயற்சிகளுக்கும் தமிழ் நாட்டு மக்கள் எந்த விதத்திலும் தாழாமல், முழு மனதுடன் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நிச்சயமாக நாம் நம்பலாம். இந்த போரின் மூலம் பாகிஸ்தானுக்கு ஒரு சரியான பாடம் புகட்டி, இனி எந்த நாட்டின் மீதும் படை யெடுக்கும் எண்ணமே அவர்களுக்கு ஏற்படாதவாறு நமது சகோதர படைவீரர்கள் அவர்களுக்கு புத்தி புகட்டுவார்கள். அவர்களுக்குப் பக்க பலமாக இருந்து முழு ஆதரவையும் கொடுப்போம் என்பதைக் கூறி, இந்தச் சமயத்திலே அரசு எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் ஒத்துழைப்பையும் நல்குவோம் என்று கூறி முடித்துக் கொள் கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் நி. ப. 12-00
தலைவர் அவர்களே, இன்று நான் முன்மொழிந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வழிமொழிந்தும்— அதிலும் தமிழ் நாட்டு மக்கள் இந்தப் போராட்டத்தில் தங்களு டைய கடமையினை கட்சி, மதம் இப்படிப்பட்ட பல்வேறு வேறு பாடுகளைக் கடந்து நிச்சயமாக வழங்குவார்கள் என்பதனை திட்ட வட்டமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தீர்மானத்தை வழி மொழிந்து பேசிய அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும், தீர்மானத்தை முன்மொழிந்தவன் என்ற முறையில் என்னுடைய அன்பான நன்றியை மிகுந்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1971 டிசம்பர் 6

தீர்மானம் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்படுகிற நேரத்தில், இந்தத் தீர்மானத்தை வலுப்படுத்துகிற அளவுக்கு டெல்லி நாடாளு மன்றத்தில் இருந்து நமக்குக் கிடைத்த செய்தி பங்களா தேஷ், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்பதாகும். பங்களா தேஷ் அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றால், கிட்டத்தட்ட ஐந்து கோடி மக்களைக் கொண்ட ஒரு புதிய நாடு இன்றைக்கு முளைத்திருக்கிறது என்று பொருளாகும். நான் ஏன் முளைத்து இருக்கிறது என்று சொன்னேன் என்றால், அது துளிர் விட்டு செடியாகி, அரும்பு வைத்து காயும், கனியும் குலுங்குகிற அளவுக்கு வெகு விரைவில் அகில உலக நாடுகளில் ஒன்றாக அமைய இருக்கிறது என்பதைத்தான் முளைத்து இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன்.

அமெரிக்க அரசு பாகிஸ்தானுடைய போக்கை ஆதரித்து இருக்கிறது என்பதை இங்கே பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் குறிப்பாக என்னுடைய நண்பர் திரு. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், இங்கே சொன்னார்கள். நான் குறிப்பிட்டது அமெரிக்க நாட்டு மக்களுடைய ஆதரவு இந்தியாவுக்கு இருக்கிறது என்று தான். அமெரிக்க அரசினுடைய ஆதரவு இந்தியாவுக்குச் சரியான அளவில் இல்லை. அவர்கள் அதிலே மழுப்புகிறார்கள் அல்லது மறைக்கிறார்கள். அல்லது மறைமுகமாக சர்வாதிகார பாகிஸ்தான் பக்கம் சாய்கிறார்கள் என்ற அந்தக் கருத்தில் நான் எந்தவிதமான மாறுபாடும் கொண்டிடவில்லை. ஒரு நாட்டின் மக்களுடைய எண்ணம் மதிக்கப்படுகின்ற எண்ணமாகும். ஏனென்றால் அமெரிக்க நாடு ஜனநாயக நாடு. அங்கே மக்கள் அரசை மாற்றுவதற்கு வல்லவர்கள். அந்த சூசகத்தை நான் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அடிக்கடி நான் சொல்கிறேன்—அமெரிக்க நாட்டு மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேனே அல்லாது, வேறு அல்ல. ஒரு சர்வாதிகார நாடாக இருந்தால் அந்த சர்வாதிகாரி வாழ்கிற வரையில்—ஆள்கிற வரையில் அந்த நாட்டு அரசின் கொள்கை மாறாதிருக்கலாம். அங்கே மக்கள் கருத்துக்கு மதிப்பு இல்லாத காரணத்தினால், ஜனநாயக நாட்டில்—மக்கள் நினைத்தால் அது மகேசன் குரலாக மாறி—இருக்கிற ஆட்சியை மாற்ற முடியும். அப்படி மாறியிருக்கிற நிலையையும் ஜனநாயக நாடுகளில் நாம் பார்க்கிறோம். அதன் காரணமாகத்தான் அமெரிக்க நாட்டு மக்களின் எழுச்சி நம் பக்கம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறன்.

நான் முன்பு உதவி ஜனாதிபதியாக இருந்தவர்—இப்போது செனடராக உள்ள திரு. ஹம்ரே அவர்களைச் சந்தித்து ½ மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்: அப்போது அவர் என்னிடம், “உங்கள் பிரதமரிடத்தில் சொல்லுங்கள், அமெரிக்க நாட்டு மக்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள். நான் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறேன், என்போல பல செனடர்கள் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டார்கள்.



1971 டிசம்பர் 6] [டாக்டர் மு. கருணாநிதி]

செனடர்கள் என்கிறபோது அங்கே நூறு செனடர்கள் இருக்கிறார்கள். ஐம்பது மாநிலங்கள்—மாநிலத்திற்கு 2 செனடர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த செனடர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அறையைப் பார்த்தால் மூன்று முதல் மந்திரியின் அறைக்குச் சமானமான இடமாக இருக்கிறது. அந்த இடமே போதவில்லை என்று அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இவ்வளவு பெரிய பணக்கார நாட்டில் எனக்கு இருக்கிற சிறிய அறையைப் பாருங்கள் என்றால், இதை இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுப் பொறுமைப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. அந்த அளவுக்கு நாள்தோறும் 500 கடிதங்களுக்குப் பதில் எழுத வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு செனடருக்கும் 15 அலுவலர்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு, அங்கே பணி புரிந்து வருகிறார்கள். அவர்களது கருத்துக்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. அதற்காகச் சொன்னேன்.

அமெரிக்க நாட்டில் நிக்சன் கட்சியைச் சேர்ந்த திரு. கூப்பர் அவர்களையும் சந்தித்தேன். மிகப் பெரியவர்—வயதானவர்—இந்திய நாட்டில் தூதுவராக இருந்தவர்—இந்திய மக்களுடைய அன்பு உள்ளத்தை நன்கு தெரிந்து வைத்திருக்கக்கூடிய மிக வயது வாய்ந்தவர் ஆவர். அவர் நிக்சன் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், முழு அன்பும், முழு ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான். இதை இந்திய மக்களிடத்தில் மிகத் தெளிவாகச் சொல்லலாம் என்று என்னிடத்தில் அறிவித்தார்கள். இவைகளை எல்லாம் சொல்வதற்குக் காரணம், அங்கே தேர்தலுக்கு ஓராண்டுக் காலமே இருக்கிறது. மக்கள் மனோநிலைக்கேற்ப அங்கே ஆட்சி மாறக் கூடும். இன்றைக்கு இருக்கிற அரசு நம்முடைய நியாயத்தை உணர மறுத்தாலும், இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பங்களா தேஷை அங்கீகரிக்க மறுத்தாலும், நாளை என்ன ஆகும் என்று சொல்ல முடியாது.

முன்பு சீனாவை அங்கீகரித்தார்களா? யாரை அங்கீகரித்தார்கள்? தைவானை அங்கீகரித்தார்கள். ஒரு தீவில் வசித்து வந்த சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள். பாகிஸ்தானைத்தான் நாங்கள் அங்கீகரிப்போம் என்று சொல்வது போல அன்றைக்கு சியாங்கே ஷேக்கை ஆதரித்தார்கள், தைவானை ஆதரித்து ஐ. நா. சபையில் உட்காருவதற்கு இடம் ஒதுக்கினார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? சியாங்கே ஷேக் தூதுவர் உட்கார்ந்த இடத்தில் மாசே துங்—சூயென்லாய் அரசாங்கத்தின் தூதுவர் உட்காருவதை நாம் காண்கிறோம். சீனாவை ஒப்பிட்டுப் பேச விரும்பவில்லை, நிலைமையைத் தான் ஒப்பிட்டுப் பேச விரும்புகிறேன். அதைப்போல ஒரு காலத்தில் நிச்சயமாக பாகிஸ்தான் சர்வாதிகாரியின் பிரதிநிதியை விட்டு, பங்களா தேஷ் பிரதிநிதியை ஏற்கிற காலம் வரும், பங்களா தேஷை அங்கீகரிக்கிற காலம் வரும்.

ஆகவேதான், இன்றைக்கு அமெரிக்க அரசு எப்படி நடந்து கொள்கிறது என்பதைவிட அமெரிக்க மக்களின் அன்பும், போதரவும் நமக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதுபோல அகில,

உலக நாடுகளுடைய அன்பும், ஆதரவும் இந்தியாவின் பக்கம்தான் இருக்கிறது, மதிப்பிற்குரிய நமது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அரிய பெரிய உலகப் பயணத்தின் மூலம் வெகு விரிவான விளக்கத்தை உலக நாட்டு மக்களிடத்திலே அளித்து விட்டார்கள். டெலிவிஷன் பேட்டிகள் மூலம் பல நாட்டு மக்களுடைய ஆதரவை, அன்பை இந்தியா பக்கம் திருப்பி விட்டார்கள். ஆகவேதான் இன்றைக்கு பங்களா தேஷை இந்திய அரசின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான செய்தி வந்திருக்கிறது. இன்னும் இருவார காலத்திற்கு பங்களா தேஷ் முழுவதும் பாகிஸ்தான் கையில் இருந்து விடுவிக்கப்பட்டு, விடுதலை வீரர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிற செய்தி நிச்சயமாக வர இருக்கிறது என்பதனை நாம் எல்லாம் எதிர்பார்க்கலாம்.

இந்த நேரத்திலே நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் குறிப்பாக, இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் எடுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை எல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள், வணிகக் கோமான்கள்—இவர்கள் போரைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை, இருட்டு வியாபாரம் இவைகளிலே தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள முனையக் கூடாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். சென்ற உலக மகா யுத்தத்தின் போது சாதாரணமாக ஏழையாக இருந்த ஒருவர், பெரும் பணக்காரராகி 'எப்படி வசதி' என்றால் 'யுத்தத்தில் நன்றாகச் சம்பாதித்து விட்டார்' என்பதாக இப்படி ஒரு அடைமொழியைச் சேர்த்துச் சொல்லப்பட்டதை எல்லாம். இந்தத் தடவை அத்தகைய அடைமொழியைப் பெறக் கூடாது. இந்தத் தடவை யுத்தத்தில் நிறையத் தியாகம் செய்தார் என்கிற புகழை ஈட்டிக்கொள்ள வேண்டுமேயல்லாது, யுத்தத்தில் சம்பாதித்து விட்டார் என்கிற அடைமொழியைப் பெறுகிற அளவுக்கு அந்தஸ்து தோன்றுவதற்கு இடமளித்தல் ஆகாது. அதில் தமிழ்நாட்டு அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்து, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் இன்றைக்கு குறிப்பாக போர்க் களத்திற்குச் செல்கிற வீரர்களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றார்கள். சாவில் இருந்து போர் வீரர்களை காத்துக் கொள்ள பாதுகாப்பு இல்லை. போர்க்களத்திற்குச் செல்கிறவர்களே ஓரளவு திரும்பி வரமாட்டோம் என்கிற உறுதியோடு செல்கிறார்கள். வெற்றி பெற்றே திரும்பி வருவோம் என்கிற அளவில் செல்கிறார்கள். போர்க்களத்திற்குச் சென்றவர்களை நாம் பார்த்



திருக்கிறோம், கேள்விப்பட்டிருக்கிறோம். போர்க்களத்திற்குச் சென்றவனின் உடை திரும்பி வந்து மாதாவின் கண்ணீரால் நனைந்தது என்பதாக. அவன் திரும்பவில்லை, அவன் அணிந்திருந்த உடைதான் வந்தது என்று. இன்னும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம் எத்தனையோ அண்ணன்மார்களை போர்க்களத்தில் இழந்த தம்பிமார்கள் கண்ணீர் விட்டு நின்றதாக, ஏன் இதுவும் கூடக் கேள்விப்பட்டிருக்கிறோம், காதலிமார்கள், போர்க்களத்தில் தங்கள் தங்கள் காதலனை இழக்க, பூ இழந்து, பொட்டு இழந்து, பொலிவிழந்து சோகச் சித்திரமாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதை.

ஆகவே, எந்தச் சூழ்நிலையில் சென்றான், யுத்தத்தில் மாண்டான் என்பது வேறு, இப்பொழுது சாவதற்காகவே செல்கிறான். போர் முனைக்குச் செல்லும் வீரர்கள் சாவதற்காகவே செல்கிறவர்கள். தங்களைப் பிணமாக ஆக்கிக் கொள்வதன் மூலம், இந்த நாட்டு மண்ணின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும், இந்த நாட்டு சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டும், இந்த நாட்டு மண்ணின் உரிமை காப்பாற்றப்பட வேண்டுமென்று செல்கின்ற போர்வீரர்களின் குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ரிசர்வ் லிஸ்டிலிருந்து அனுப்புகின்ற நிறுவனங்கள் வீரர்களின் குடும்பத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த பேரவையின் சார்பாக வேண்டுகோளாக விடுக்கிறேன்.

நான் ஏற்கெனவே என்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, போர்வீரர்களுக்கு வேண்டிய அளவில் நாம் எல்லோரும் ரத்த தானம் செய்ய வேண்டும் என்று டாக்டர் அவர்கள் குறிப்பிட்டார்கள். யார் யாருடைய ரத்தம் என்ன என்ன குரூப் என்பதைக் கண்டறிந்து ரத்த தானம் அளிக்கும் பணியிலே பணியினை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் இதை இப்போதே ஏற்றுக் கொள்கிறேன். ரத்த தானம் செய்வதற்குத் தகுதி படைத்த உறுப்பினர்கள், இதை வெகு வேகமாகவும் துரிதமாகவும் இந்தப் பணியினை நடத்தி வைப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நான் இன்னொரு தானமும் கேட்கிறேன். நாங்களெல்லாம், அமைச்சர்கள் தங்களுடைய ஊதியத்திலே 500 ரூபாய் யுத்த நிதிக்காக தருவதாகத் தீர்மானித்திருக்கிறோம். அதேபோல சட்ட மன்ற உறுப்பினர்களும் 100 ரூபாய்க்குக் குறையாமல்—அதிகமாகக் கொடுக்கிற தாராள மனம் படைத்தவர்களைப் பாராட்டுகிறேன்—தர வேண்டும். அதற்கான ஒப்புதலை உங்களுடைய கர ஒலி மூலம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (அனைத்து உறுப்பினர்களும் ஒப்புதலுக்கான கர ஒலி எழுப்பினார்கள்).

[டாக்டர் மு. கருணாநிதி] [1971 டிசம்பர் 6

அடுத்தபடியாக "இதிலிருக்கும் வேறுபாடுகள், சிக்கல்கள் களையப்பட வேண்டும்" என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சிம்சன் விவகாரத்தைப் பற்றிச் சொல்லி, அதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். சிம்சன் விவகாரம் யார் தொழிற் சங்கத் தலைவராக இருப்பது என்பதில் ஆரம்பமாகியிருக்கிறது. தொழிற் சங்கத்திற்கு வெளியார் ஒருவர் தலைவராக இருப்பது என்பது சரியல்ல என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறது. எந்த ஒரு தொழிற்சாலையிலும் தொழிலாளர் யூனியனுக்கு வெளியார் தலைவராக இருக்கக் கூடாது, அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களிடையே உள்ள ஒருவரே தலைவராக இருக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். எந்தத் தொழிற் சங்கத்திலும் வெளியார் தலைவராக இருக்கக் கூடாது, தொழிலாளர்களிடையே உள்ள தொழிலாளிதான் அதன் தலைவராக இருக்க வேண்டும் என்கிற முடிவை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டால் இப்படிப்பட்ட பிரச்சினைகளே தோன்றா. இன்னார்தான் தலைவராக இருக்க வேண்டுமென்பது அந்தத் தொழிலாளர்களுடைய முடிவாக இருக்க வேண்டும். அந்தத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர் ஒருவரேதான் அந்தச் சங்கத்திற்கு தலைமை வகிக்க வேண்டும். இதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற வெளியார்களை அந்தந்தக் கட்சிகள் திரும்பப் பெற்றுக் கொண்டு, தொழிலாளர் ஒருவரே தொழிற் சங்கத்தின் தலைவராக இருக்க வேண்டும் என்கிற தீர்மானத்தை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுவோம். திராவிட முன்னேற்றக் கழகம் இதை நீண்ட நாள் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறது. இதை நாம் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றுவோம். இப்பொழுதே அல்ல, அதை யோசித்து, தங்கள் கட்சியில் கேட்டுப் பதில் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். (டாக்டர் எச். வி. ஹாண்டே குறுக்கீடு) டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஒத்துக்கொண்டார்கள். நிறைய தொழிற் சங்கங்களை வைத்திருப்பவர்கள் இதை ஒத்துக் கொள்ளவேண்டும். (பலத்த சிரிப்பு).

(திரு. கே. டி. கே. தங்கமணி குறுக்கீடு) நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற எல்லாக் கட்சிகளும் ஒத்துக் கொண்டால், இன்றைக்கே சிம்சன் தகராறுக்கு ஒரு தீர்வு ஏற்பட்டு விட்டதாக நான் கருதுகிறேன்.

நாம் எல்லா வேறுபாடுகளையும் களைந்து விட்டு, தமிழ் நாட்டின் நலன்களுக்கு உகந்த வகையில், அனைவரும் இந்த உணர்ச்சிமயமான தீர்மானத்தை வழி மொழிந்து, தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருவதாகக் கூறி, நல்ல ஆலோசனைகளைத் தந்ததற்கு என்னுடைய நன்றியைக் கூறிக் கொண்டு, இந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.



1971 டிசம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்து, எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு, பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளை இணைத்துக் கொள்ள விழைகிறேன்.

இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது என்பதைத் தெரிவிக்கும் வகையில் நீங்கள் எல்லாம் கர ஒலி எழுப்பி, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(எல்லா உறுப்பினர்களும் கர ஒலி எழுப்பினர்)

தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 6. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது திரு. ஏ. பாலையா அவர்கள் பேசுவார்கள்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

**திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தோடு இந்தக் கூட்டத்தை ஒற்றி வைக்கலாம் என்று விரும்புகிறேன். ஏனென்றால், அப்போதுதான் அந்த உணர்ச்சியோடு வெளிக் கிளம்ப முடியும். ஆகவே மற்ற பிரச்சினைகளை நாளைக்கு வைத்துக் கொள்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** உறுப்பினர் திரு. திருப்பூர் மொய்தீன் அவர்கள் வேண்டுகோள்படி, பேரவையின் பிற அலுவல்கள் ஒற்றி வைக்கப்படுகின்றன.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

### 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders.*

@ 91. 13th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1969--70. [Laid on the Table of the House under section 75 (1A) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

92. Notification issued with G.O. Ms. No. 817, Home, dated the 22nd March 1971, in regard to an amendment to the Tamil Nadu Neera or Padani Rules, 1939. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

93. Notification issued with G.O. Ms. No. 2442, Rural Development and Local Administration, dated the 5th November 1971, making rules for co-option as Councillors of persons belonging to the Scheduled Castes or the Scheduled Tribes and for co-option of Women by elected members of the Council under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corportion Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

94. Notification issued with G.O. Ms. No. 2443, Rural Development and Local Administration, dated the 5th November 1971, making rules for the election of Chairman of Standing Committees under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919)).]

95. Notification issued with G.O. Ms. No. 2444, Rural Development and Local Administration, dated the 5th November 1971 making rules for the election of a member to the appointment Committee under the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919). [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 52. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity initiating the discussions on the Annual Financial Statement for 1971-72 and the Supplementary Financial Statement for 1970-71 of the Tamil Nadu Electricity Board (English and Tamil).

53. Report of Thiru N. Ananthapadmanabhan, I.A.S., Commissioner of Land Revenue, Prohibition and Excise, Madras, on the Police Firing incident which took place at Silvarpatti village, Madurai district on the 12th July 1970 (English and Tamil).

54. Report of Thiru P. Ramakrishnan, I.C.S., (Retired) Retired Judge, High Court, Madras, on the Police firing incident which took place at Perumanallur, Coimbatore district, on the 19th June 1970 (English and Tamil).

---

@ Laid on the Table of the House 4-12-1971.

## தமிழ் நாடு சட்டப்பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1971 டிசம்பர் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### *Adult literacy in Chingleput District.*

* 126. Q.—THIRU A. SWAMIDOSS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a pilot scheme for adult literacy in Chingleput district is to be sponsored by the Christian Agency for Social Action ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, முதியோர் கல்விக்காகப் பாடுபட்டு வருகின்ற தனிப்பட்ட சங்கங்களுக்கு உதவி செய்ய அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றித் தனிக் கேள்வி போடவும். அதற்கென்று வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவா என்பதற்கு விளக்கக் குறிப்புகள் தற்போது இல்லை.

#### *Alagaradi Senior Basic School, Madurai*

* 127. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the closure of the Alagaradi Senior Basic School of Madurai has been ordered recently;

(b) if so, the reasons thereof;

(c) whether the salaries due to all the teachers have been disbursed to them; and

(d) if not, the action this Government proposes to take against the management ?

மக்களுக்குப் பயன்படக் கூடிய அளவுக்கு கோவில் நிலத்தில் இந்தக் கிணறு வெட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு அங்கே இருக்கிறவர்களிடமிருந்து தகராறு ஏற்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவரும் கூட்டாட்சித் தலைவரும் தலையிட்டு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முடியும். ஆனால், இந்தப் பிரச்சினை கோர்ட்டுக்குப் போயிருப்பதன் காரணத்தாலும், கோர்ட் 'ஸ்டே ஆர்டர்' கொடுத்திருப்பதாலும், அதனுடைய தீர்ப்பு வருகிற வரையிலும் மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது. அந்தத் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தத் தீர்ப்பு வந்தவுடனே மேற்கொண்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

### கல்லூரிகளுக்கானப் பாடத்திட்டம்

*129 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளைப்போல கல்லூரிகளிலும் பாடத் திட்டத்தை அரசே தயாரித்து வெளியிடுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை. இவ்வாறு அரசுசெய்ய இயலாது. இது பல்கலைக் கழகங்களுக்குரிய பொறுப்பாகும்.

**திரு. பி. எஸ். மணியன்:** ஒரே சீரான கல்வித்தரம் அமைவதற்கும், புத்தகங்கள் வெளியிடுவோர் அவரவாது சொந்தக் கருத்துக்களைக் கூறி மாணவர்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் புகுத்துவதைத் தடுப்பதற்கும் அரசே நேரடியாகக் கல்லூரிப் பாடப் புத்தகங்களை வெளியிடுவதற்கும் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்லூரிப் பாடத் திட்டங்களை வகுக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகங்களைத்தான் சார்ந்ததாக இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகமும் மதுரைப் பல்கலைக் கழகமும் சென்ற ஆண்டு பாடத் திட்டங்களை புதிய வகைக்கேற்ப மாற்றியமைக்கத் திட்டம போட்டு இந்த ஆண்டிலிருந்து அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பாடத் திட்டங்களின் (சிலபஸ்) அடிப்படையில் புத்தகங்கள் வெளியிட நமக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் தமிழ் வெளியீட்டுக் கழகம் தமிழ் புத்தகங்களை வெளியிட்டு வருகிறது. எல்லாப் புத்தகங்களைப் பொறுத்தும், எல்லா வகுப்புகளுக்கும் அரசாங்கமே பொறுப் பேற்று வெளியிடுவதற்கில்லை. பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களைத் தேசியமாக்கியதைப் போன்று கல்லூரிகளைப் பொறுத்தும் தேசியமாக்குகின்ற சூழ்நிலை வர இயலாது. ஆனால், முக்கியமாகத் தமிழில் வெளிவரும் வெளியீடுகளையெல்லாம் வெளியிடுகின்ற பொறுப்பை



மட்டும் தமிழ் வெளியீட்டுக் கழகம் மேற்கொண்டிருக்கிறது. ஆனால், பாடத் திட்டங்களை மதுரைப் பல்கலைக் கழகமும் சென்னைப் பல்கலைக் கழகமும் இந்த ஆண்டிலிருந்து ஓரளவுக்கு காலத்திற்கேற்ற வகையில் மாற்றியமைத்திருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பாடத் திட்டங்களை நம்முடைய பல்கலைக் கழகங்கள்தான் மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னாலும், வட மாநிலங்களிலிருக்கும் பல பல்கலைக் கழகங்கள் காலத்திற்கேற்றாற்போல் புதிய நவீன முறையில் பாடங்களைத் திருத்தி அமைத்திருக்கிறார்கள். ஆனால், நாம் 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் எந்தப் பொருளாதாரப் புத்தகங்களை வைத்துக்கொண்டிருந்தோமோ அதே புத்தகங்களை இன்னும் வைத்துக்கொண்டு பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதனால் பல்வேறு மாநிலங்களைப்போல் நாமும் வேகமாக முன்னேற முடியவில்லை. ஆகவே, அதை மனதிற்கொண்டு, மற்ற மாநிலங்களில் வைத்துக்கொண்டிருக்கிற நவீனப் பாடப் புத்தகங்களை நம்முடைய கல்லூரிகளிலும் புகுத்துவதற்குப் பல்கலைக் கழகங்களை நம்முடைய அரசாங்கம் கேட்டுக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த பாடப் புத்தகங்களில் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 9—3—1971-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அகடெமிக் கவுன்சில் புதிய பாடத் திட்டங்களை அங்கீகரித்து, 31—5—1971-இல் செனட் அவை அதை ஏற்றுக்கொண்டது. 1971-72 கல்வி ஆண்டில் அந்தப் பாடத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருகிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகக் கவுன்சில் 29—3—1971-இல் கூடிப் புதிய பாடத் திட்டங்களை ஏற்றுக் கொண்டது. அதற்கென்று தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களால் ஆராயப்பட்டு, அகடெமிக் கவுன்சில் முன் வைக்கப்பட்டது. அதை அகடெமிக் கவுன்சில் 29—3—1971-இல் ஏற்றுக் கொண்டது. செனட் அவையும் அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். இதில் ஏதாவது குறைபாடுகள் இருந்து அவற்றை எடுத்துச் சொன்னால் அகடெமிக் கவுன்சிலும், செனட் அவையும் பார்த்துத் தகுந்த முடிவுகளை எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, யாக இருந்தாலும், அரசு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்தில் அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தையும் சூழ்நிலையையும் அரசு இனியாவது உருவாக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதைப் பார்த்துக்கொள்வதற்கு அரசுப் பிரதிநிதிகள் அதிலே இருக்கிறார்கள். கல்லூரிக் கல்வி இயக்குநரும், கல்வித் துறைச் செயலாளரும் அதில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்

பெறமுடியாத நிலைமை இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் அவர்கள் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. சென்னை நகரம் 'ஏ' கிரேட் நகரமாக மாற்றப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே 100 ரூபாய் வருமானம் என்றால் பரவாயில்லை. ஆனால் சென்னை போன்ற நகரங்களிலே சாதாரண ரிக்ஷா தொழிலாளிகூட ஒரு நாளைக்கு 4 ரூபாய் 5 ரூபாய் சம்பாதிக்கக்கூடிய நிலைமை இருப்பதால் 100 ரூபாய் என்று இருப்பதை 150 ரூபாய் அல்லது 200 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இந்த வரம்பை 300 ரூபாயாக உயர்த்தமுடியுமா என்பது, ஆனால் துணைக் கேள்வி 100 ரூபாய்க்கு மேல் உயர்த்தமுடியுமா என்பது. ஏற்கனவே 100 ரூபாய்க்கு மேல் 200 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டு 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30-ஆம் தேதி சபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 300 ரூபாய் அளவுக்கு உயர்த்துவதற்கு இப்பொழுது செயற்குறிப்பு இல்லை என்று தெரிவித்தார்கள். 300 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தாவிட்டாலும் 250 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் பிரச்னையை விளக்கு வதற்கு இந்தக் கேள்வி ஒரு வாய்ப்பு என்று கருதுகிறேன். இந்த வரம்பை நாம் 200 என்று வைத்திருக்கும்பொழுதே 300 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றவர்கள் கூட 150 ரூபாய்தான் வருமானம் என்று தருகிறார்கள். சமுதாயத்திலே தவறான பழக்க வழக்கங்கள் இருப்பதன் காரணமாக, உண்மையான ஊதியம் அதிகமாக இருந்தாலும் குறைவாகக் காட்டுவதும், உண்மை நிலைமை மறைக்கப்படக் கூடியதுமான காரணங்களினால் இலவச வைத்தியம் என்ற நிலைமையிலே ஏழைகள் அல்லாத மற்றவர்களும் அதனைப் பயன்படுத்திக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடு கின்றது. எனவே ஏழைகள் போதுமான அளவுக்கு மருத்துவ வசதிகள் இலவசமாகப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக் கின்றது. இலவசம் என்பது ஓரளவுக்குத்தான் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அதற்கு மதிப்பு இருக்கும். எனவே 200 என்பது போதுமான அளவு என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, சென்னை, மதுரை போன்ற மாநகராட்சி நகரங்களிலும், மற்ற நகரசபை உள்ள நகரங்களிலும் மட்டுமாவது 300 ரூபாயாக அந்த அளவை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் எல்லா மருத்துவ வசதிகளையும் அளிக்கின்றன. கேள்வி கேட்ட தலைவருக்கு அது திருப்தியாக



இருக்கும் என்று நினைக்கிறேன். இதைத் தவிர என்.ஜி.ஓ.க்களுக்கு மருத்துவ வசதிகள் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதிகள் பெற வாய்ப்பு இருக்கிறது. யார் அரசாங்கத் திலேயும் நகராட்சிகளிலேயும் வேலைசெய்யாமல் மற்ற வேலைகள் செய்வதன் மூலம் அந்த அளவிற்கு மேலே ஊதியம் பெறுகின்றார் களோ அவர்கள்தான் இதிலே வருவார்கள். அவர்களுடைய உண்மையான வருமானம் இதிலே பெரும்பாலும் வருவதில்லை.

### 1970-ஆம் ஆண்டில் தொழிற்சாலை கதவடைப்புகள்.

*133 வினா—திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-ல் தமிழ்நாட்டில் நிர்வாகங்களால் எத்தனை கதவடைப்புகள் செய்யப்பட்டன ?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எவ்வளவு ?

(உ) நஷ்டமான வேலை நாட்கள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) 1970-ல் தமிழ் நாட்டில் நிர்வாகங்களால் செய்யப்பட்ட கதவடைப்புகள்—46.

(இ) இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள்—9,507.

(உ) நஷ்டமான வேலைநாட்கள்—2,13,991.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், பொதுவாக தொழிலாளர் கள் வேலைநிறுத்தம் செய்வதைப்பற்றித்தான் செய்திகள் வருகின் றதே தவிர கதவடைப்புச் செய்யக்கூடிய முதலாளிகளைப்பற்றிய விவரங்கள் வருவதில்லை. வேலை நிறுத்தம் காரணமாகக் கதவ டைப்புச் செய்யப்பட்டவைகளும் இதிலே சேர்க்கப்பட்டிருக் கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 1970-ஆம் ஆண்டு வேலைநிறுத்தமும் கதவடைப்பும் சேர்த்து மொத்தம் 277 ஆகும்.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கதவடைப்புச் செய்த மில் முதலாளிகள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு செய்தார்களா ? அரசாங்கத்தின் உத்திரவின்பேரில் கதவடைப்புச் செய்தார்களா ? இல்லையென்றால் அரசாங்கம் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** வேலைநிறுத்தங்களை யொட்டித்தான் கதவடைப்புகள் நடைபெறுகின்றன.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கதவடைப்பு நேரிடுகின்ற நேரத்திலே நிர்வாகத்தின் சார்பிலே கதவடைப்புச் செய்வதாக இருந்தால் அந்த நேரத்திலே தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடைக்கச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதைப்பற்றித் தனியாக கேள்வி கேட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, வேலைநிறுத்தம் இல்லாமலே கதவடைப்புச் செய்யக்கூடிய நேரத்தில் அந்த மில் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஏற்கனவே எல்லாக் கட்சியினரும் கொண்ட மாநாட்டிலே விவாதிக்கப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டுவருகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கதவடைப்புச் செய்ததில் டெக்ஸ்டைல் மில் தொழிற்சாலைகள் எத்தனை? மற்றத் தொழிற்சாலைகள் எத்தனை என்ற விவரம் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இது விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சட்டவிரோதமான கதவடைப்புகள் செய்யும்பொழுது அம்மாதிரிச் செய்த முதலாளிகள் சட்டவிரோதமாகக் கதவடைப்புச் செய்திருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை என்ன? அந்தத் தண்டனை போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறதா? அதை மாற்றி அமைக்க அரசாங்கத்திடம் யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் குறிப்பிடும் தொழிற்சாலை எது என்று எடுத்துக் காட்டினால் அவர்கள் கூறும்படியான கருத்து ஆலோசிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நஷ்டமான வேலைநாட்கள் 2 இலட்சத்துக்கும் அதிகம் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு கதவடைப்பின்மூலம் வேலைநிறுத்தத்தின்மூலம் நஷ்டமான நாட்கள் என்ன என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1970-இல் நஷ்டமான வேலைநாட்கள் 2,13,991.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 134.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த அமைச்சர் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போஸ்ட்போன் பண்ணும்படி சொல்லவில்லையே. அடுத்து வினா எண். 136.

*Exemptions under Land Ceiling Act*

* 136. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Committee on Exemptions to Land Ceiling has submitted its report;

(*b*) if so, the steps taken to implement the same; and

(*c*) if not, the probable date by which the report will be submitted?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கீழ்க் காணும் நிலங்கள் குறித்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் உச்ச வரம்புச் சட்டத்தில் கண்டுள்ள விலக்குகள் ரத்து செய்யப்படவேண்டுமென, குழு, தன்னுடைய இடைக்கால அறிக்கையில் பரிவுரை செய்தது.

(1) மேய்ச்சலுக்காகவே பயன்படுத்தப்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1.25-ம் அதற்குக் குறைந்தும் நிலவரி விதிக்கப்படும் நிலங்கள்;

(2) கரும்பு பயிரிடப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு மேற்படி சட்டத்தின் 40 அல்லது 43-வது பிரிவின்கீழ் சர்க்கரை ஆலை வாரியம் அனுமதி வழங்கியுள்ள நிலங்கள்.

(3) பால் பண்ணை அல்லது கால்நடை வளர்ப்புக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்கள்.

சட்டமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு) திருத்த மசோதா, மேற்சொன்ன (1), (2) இனங்களில் கண்டுள்ள சலுகைகளை நீக்குவதற்கு வகை செய்கிறது. இது தொடர்பாக இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மேய்ச்சல் நிலங்களுக்கும், கரும்புப் பண்ணைகளுக்கும் விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டதாக இந்தச் சபையிலே நாம் சட்டம்போட்டபிறகு எவ்வளவு மேய்ச்சல் நிலங்கள், எவ்வளவு கரும்புப் பண்ணைகள் இப்பொழுது அரசு எடுத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, சட்டம் நிறைவேற்றப்பட்டபிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் இசைவு வரவில்லை. வந்தபிறகு தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இந்தக் குழு கோவில், மடம், தனியார் டிரஸ்ட் போன்ற நிலங்களுக்காக அளித்த விதி விலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று சிபாரிசு செய்தார்களா ? அதை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதா அல்லது அவைகளை நிராகரித்ததா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஏற்கனவே இருந்த குழு இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தது. புதிதாகக் குழு நியமித்திருக்கிறோம். அந்தக் குழுவை இந்தக் கூட்டத் தொடரின் கடைசிநாளில் கூட்டலாமா என்று யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த உச்சவரம்புச் சட்டத்தை 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகச் செய்து வெகுநாட்களாகி விட்டது. இன்றைக்கிருக்கும் நிலைமையில் இந்தச்சட்டத்தை வெகுவிரைவில் அமலாக்க வேண்டுமென்ற அவசியம் நாட்டில் ஏற்பட்டிருப்பதை அரசு அறியுமா ? எவ்வளவு நாட்களில் அமலுக்கு வரும் என்று சொல்ல முடியுமா ? உச்சவரம்பு சட்டத்தை நாம் நிறைவேற்றிவிட்டோம். அது சம்பந்தப்பட்ட மற்ற அம்சங்களை ஆராயக் குழு அமைத்திருக்கிறோம். மேய்ச்சல் துறை மற்றவைகளை எடுக்க முடிவு செய்து விட்டோம். இப்படி இன்றைக்குச் செய்திருந்தாலும்கூட இவை அமலுக்கு வர எவ்வளவு நாட்களாகும் ? எவ்வளவு நாளைக்குள் இது கொண்டு வரப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஏற்கனவே குறிப்பிட்டேன், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டு இருக்கிறது என்று. இசைவு வந்தவுடன் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் கொண்டுவரப் படாததன் காரணம் என்ன? இனிமேலாவது கொண்டுவரப் படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, காப்பிக் கொட்டை, தேயிலை பிளாண்டேஷன் இவைகளை நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ்க் கொண்டு வராததற்குக் காரணம் அவைகளெல்லாம் பதன்படுத்தப்படும்பொழுது பெரிய தொழிற்சாலைகள் வைக்க வேண்டியிருக்கும். சிறிய தொழிற்சாலைகளால் இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இதுகுறித்துச் சமீபத்தில் டெல்லியில் நடந்த நிலச் சீர்திருத்த மாநாட்டில் விவாதிக்கப் பட்டது. இந்தியா முழுவதுமுள்ள முதலமைச்சர்கள் மாநாடு நடக்கும்பொழுது முடிவெடுக்கப்படும் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.



**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், காப்பி, தேயிலைத் தோட்டங்கள் போன்றவைகளை இந்த உச்சவரம்புச் சட்டம் கட்டுப்படுத்தாது போனாலும், அவைகளையெல்லாம் சில அரசுகள் எடுத்து விவசாயிகளுக்கு பொதுச் சொத்தாக ஆக்கியிருக்கிறார்களே, அம்மாதிரி ஆக்கும் நோக்கம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். நிலச் சீர்திருத்தம்பற்றி மத்திய அரசாங்கத்தின் குழுவில் தமிழக முதலமைச்சர் இடம் பெற்றிருக்கிறார். அவர் சார்பாக நான் கலந்துகொண்டபொழுது இதுபற்றி விவாதிக்கப்பட்டது. காப்பி, தேயிலை இவைகளில் வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்பட்டிருக்கிறது. எல்லா முதலமைச்சர்களையும் சேர்த்து நடைபெறும் மாநாட்டில் விவாதித்து, வெளி நாட்டுச் செலாவணியை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு முடிவெடுக்கப்படும் என்று முடிவு செய்யப் பட்டது.

## தாசில்தார் பதவிகள்

*137 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாசில்தார்களை (Gazetted Officers) அரசு பதிவு அதிகாரிகளாகப் பதவி உயர்வு அளிப்பதற்கான செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, வட்ட ரீதியில் இருக்கும் நெடுஞ்சாலை உதவிப் பொறியாளர்கள், பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளர்கள் கெஜட்டெட் ஆபீசர்களாக இருக்கும் இந்த நேரத்தில், ஒரு வட்டத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று வட்டத்தின் தலைவராக அன்றாடம் ஏழை எளியவர்களோடு பழகிப் பணியாற்றும் தலைவர்களுக்கு அத்தகைய பொறுப்பை ஏற்படுத்த நமது அரசு கருணையோடு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தற்போது இல்லை என்று நான் சொன்னேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த கெஜட்டெட் ஆபீசர் நான்-கெஜட்டெட் ஆபீசர் என்பது ரொம்ப காலமாகயிருக்கும் ஒரு விஷயம். இன்றைக்கு அவரவர்கள் கடமையைச் செய்ய மட்டும் ஒரு அமைப்பை ஏற்படுத்திவிட்டு, இந்த கெஜட்டெட், நான்-கெஜட்டெட் ஆபீசர்கள் என்பது அவசியமா என்பதை அறிய விரும்புகிறேன். இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டாமா? செய்யக்கூடிய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது ஒரு கொள்கை. அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பி.டபிள்யூ.டி.யிலே உள்ள ஜூனியர் என்ஜினியர்கள், பி.ஈ. படித்தவர்களைக் கெஜட்டெட் ஆக்கி இருக்கிறோம். ஏழைகள் அடிக்கடி கெஜட்டெட் ஆபீசர்களிடம் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டியிருப்பதால், தாசில்தார்களை இப்பொழுது இல்லை என்றாலும், விரைவில் அவர்களை கெஜட்டெட்டாக ஆக்க முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கனவே நான் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறேன்.

## *Appointment of Telugu Clerks in Hosur Revenue Division*

* 138. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal with the Government to appoint atleast two clerks knowing Telugu in the Sub-Collectors' Office at Hosur and in the Taluk Offices at Hosur and Denkanikottah?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, for all practical purposes Telugu has been permitted in this State for official use and the Linguistic Minorities Commission has also recognised it and recommended it. There are 20 Telugu local areas in the State, in addition to Hosur Taluk; but as there are no clerks knowing Telugu in the Sub-Collector's and Taluk Offices, considerable difficulties have been experienced by the Telugu people there, with regard to understanding Government orders, etc. and replying. So, will the Government consider their decision and the difficulties of the Telugu people and appoint clerks knowing Telugu in these Offices and see that Telugu speaking people are happy in this regard?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் அது குறித்துத் தனியாக எழுதி அனுப்பினால் அதைக் குறித்துப் பரிசீலிக்கலாம்.



## பெண்களுக்குத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள்

*139 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— முற்பகல் 9–30

பெண்களுக்கான தொழிற் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

## மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்

* 140. வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பொன்னேரியில் மாவட்ட முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** பொன்னேரி வட்டத்தில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறோம். இதைப்பற்றி நீதிமன்ற எல்லைக் குழுவிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். இப்போது முன்சீப் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால் 30 மைல் தூரம் உள்ள திருவள்ளூருக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, பொனேரியில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நீண்டகாலக் கோரிக்கை என்பது உண்மை. நீண்ட நாளாக உயர்நீதி மன்றம் வேண்டாமென்று சொல்லி வருவதும் உண்மை. இப்போது அதுபற்றி எல்லைச் சீரமைப்புக் குழு பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. எ. வகாப் :** இப்போது மதுவிலக்கை ஒத்தி வைத்துவிட்டதால் சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் கேஸ்கள் குறைவாக இருக்கின்றன. ஆகவே, சப்-மாஜிஸ்ட்ரேட்-கம்-முன்சீப் என்ற அடிப்படையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ய திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாடு முழுவதும் இப்படி ஒரு புதிய அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற யோசனை உயர்நீதிமன்றத்தோடு கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

[1971 டிசம்பர் 7

* 141 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the number of District Munsifs Courts in Kanyakumari District has been increased; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** குழித்துறையில் அடிஷனல் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தத் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி ஒரு கோரிக்கையை உயர்நீதிமன்றம் அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*Manufacture of tele-communication equipments.*

* 142 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any firm for the manufacture of tele-communication equipments is to be started in this State in public sector; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

'டெலிவிஷன்' தொழிற்சாலை

*** 143. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழ்நாட்டில் 'டெலிவிஷன்' தொழிற்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அம்மாதிரி டெலிவிஷன் மூலமாகத் தமிழகத்தில் செய்திகளைப் பார்க்க எவ்வளவு நாட்கள் ஆகும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக டெலிவிஷன் தமிழகத்தில் அமைக்கப்படும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. ஆகவே, அதற்கான தொழிற்சாலைக்கு உடனே அனுமதி வழங்க வேண்டுமென்று அரசு கேட்டிருக்கிறது.



1971 டிசம்பர் 7]

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister what are the positive steps taken by this Government in that regard ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு அந்தத் தொழிற்சாலையைக் கூட்டுத் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, when there is every need for starting industries to manufacture essential commodities for meeting the demands of the poorer classes, is it the contention of this Government that television is an important matter and our resources could be diverted to manufacture television sets when people are starving and without houses, etc.?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உலகம் முழுவதும் டெலிவிஷன் துறையில் ஏராளமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டுக்கு வேண்டாமென்று கனம் அங்கத்தினர் வாதாடுவது சரியல்ல.

**திரு. நா. வீராசாமி :** ஜாயின்ட் செக்டாரில் நம்முடைய அரசாங்கம் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் மூலதனத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறார்கள் ? அதன்மூலம் எவ்வளவு பேருக்கு இந்த நாட்டில் வேலை கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவையிலிருக்கும் பிரபலத் தொழிலதிபர் ஜி.டி. நாயுடு அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் டெலிவிஷன் தொழிற்சாலையை ஆரம்பிக்க விண்ணப்பித்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உண்மைதான்.

**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகையில் இந்தத் தொழிற்சாலை கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இதை ஏன் அரசு பொதுத்துறையில் ஆரம்பிக்கக் கூடாது ? பொதுத்துறையில் ஆரம்பிப்பதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் பலர் இந்தத் தொழிலை ஆரம்பிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களோடு சேர்ந்து செய்தால் உடனடியாக அனுமதி கிடைக்கும் என்ற நிலையில் மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இதைப் பொதுத் துறையில் ஆரம்பிக்க

வேண்டுமென்று சொன்னால் நம்முடைய மாநில அரசு அதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது முதலில் ஜனங்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற தொழிற்சாலைகளுக்கு முதலிடம் அளித்து மற்றத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை எந்த நேரத்தில் தேவையானது என்று ஆராய்ந்து துவங்க வேண்டும். அந்த வகையில் டெலிவிஷன் எந்த நேரத்தில் தேவை என்று ஆராய்ந்து அதைப் பயன்படுத்தும் ஜனங்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அதற்குப் பிறகு ஆரம்பிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூன்று ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் டெலிவிஷன் வைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் முடிவு எடுத்தவுடன் உடனடியாக அத்தகைய தொழிற்சாலை தேவை என்ற முறையில் அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையில்லை என்று வாதிடுவது சரியல்ல.

THIRU K. M. SUBRAMANIAM : Is this Government aware that Joint Sector is only a sector with public men's finances and private man's management and it is always encouraging indirectly private people to come into the picture with public funds ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தனியார் துறையே இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

### கஞ்சம்பட்டிக் கால்வாய்த் திட்டம்.

*** 144 வினு.—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிவகங்கைக் கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், கஞ்சம் பட்டிக் கால்வாய்த் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா :** (அ) முதுகுளத்தூர் வட்டம் எஸ். தரைக்குடி குளத்திற்கு வரத்துக் கால்வாயை ரூபாய் 2 லட்சம் செலவில் தோண்ட (கஞ்சம்பட்டிக் கால்வாய்த் திட்டம்) ஒரு செயற்குறிப்பு உள்ளூர் பொதுப்பணித் துறை (பாசனம்) அலுவலர்களின் ஆய்வில் உள்ளது.

(இ) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரின் இசைவு பெற்றதும் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுத் தகுதியின்பேரில் அரசினர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அதன் பின்னர் திட்டம் செயல்படுத்தப்படும்.



**திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** இந்தக் கஞ்சம் பட்டிக் கால்வாயால் பயனடையக்கூடிய கண்மாய்கள் எத்தனை? இது எந்த ஆண்டு நடைமுறைக்கு வரும் என்று அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 57,500 அடிக்கு ஒரு வரத்துக் கால்வாய் வெட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 271 ஏக்கர் புஞ்சை—நஞ்சையாகும். ஏற்கனவே உள்ள ஆயக்கட்டு 511 ஏக்கர் பாசனம் பெறும். எத்தனை கண்மாய்கள் என்ற விவரம் இல்லை.

### *Irrigation tank in Pallipet Sub-taluk*

* 145 Q.—THIRU E. S. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal for construction of new irrigation tank near Thirumalrajpet–Kumararajupet village limits in Pallipet Sub-taluk of Chingleput district;

(*b*) if so the value of estimates; and

(*c*) when the work will be taken up for execution ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(ஆ) & (இ) இத்திட்டத்திற்கான ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகள்

***146. வினு—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் புதிதாகத் திறக்கப்பட்ட நிலவள வங்கிகள் எத்தனை ?

(இ) இதன்மூலம் பயன் பெற்றுள்ள விவசாயிகள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** (அ) தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் 16 புதிய பிரதம நிலவள வங்கிகள் திறக்கப்பட்டுள்ளன.

(இ) 419 விவசாயிகள் இதன்மூலம் பயனடைந்துள்ளனர்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** வட்டாரத்திற்கு ஒரு நிலவள வங்கி வீதம் ஆரம்பிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. அதன்பிரகாரம் ஏன் வட்டாரத்திற்கு ஒன்று ஆரம்பிக்கவில்லை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தகுந்த தருணத்தில் தொடங்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது தகுந்த தருணத்தில் தொடங்கப்படும் என்று சொன்னார்கள். தகுந்த தருணம் எப்போது என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தகுந்த தருணம் என்பது, ரிசர்வ் வங்கி எப்போது அதற்கு வேண்டிய அளவு பணம் கொடுக்கிறதோ அந்தத் தருணம் என்று பொருள்.

**திரு. என். மருதாசலம் :** கோவையில் பேரூர், தொண்டாமுத்தூர் போன்ற பகுதிகளில் இருந்து மேற்குப் பகுதி நிலவள வங்கியில்தான் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பேரூரிலும், மதுக்கரை பிர்க்காவிலும் நிலவள வங்கி ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

***147. வினா—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டையில் கூட்டுறவு நிலவள வங்கி திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) தேவைப்படும் நேரத்தில் அம்மாப்பேட்டை—பாபநாசம் நிலவள வங்கிகளை ஒன்றைத் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. ந. சோமசுந்தரம் :** விவசாயிகள் நலன் கருதி அந்த வங்கியை விரைவில் ஆரம்பிக்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதைத் தொடங்குகிற நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

*Demands of employees of Central Co-operative Banks.*

*148 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the organisation for the employees of the Central Co-operative Banks in the State have sent a charter of demands; and

(b) If so, the action taken thereon ?



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) வங்கிகளின் நிர்வாகிகளும் ஊழியர்களும் நேரடியாகப் பேசி உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரையில் இருக்கக்கூடிய ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தார்கள். இப்போது சர்க்கார் எடுத்திருக்கக்கூடிய வங்கிகளில் எல்லாம் அவர்களுடைய ஊதியங்களிலும் வேலைமுறைகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவே, இதைக் கவனித்து இம்மாதிரியாக அதிருப்தி இல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய வங்கிகளின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அந்தந்த மாவட்டத்தில் உள்ள மத்திய வங்கிகளும் அந்தந்த மாவட்ட ஊழியர்களும் நேரடியாகப் பேசிச் சுமுகமான ஏற்பாடு உண்டாகியிருக்கிறது. மதுரையில் உள்ள மத்திய வங்கிபற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி மதுரையில் உள்ள மத்திய வங்கித் தலைவரும் ஊழியர்களும் பேசித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஊழியர்களும் நிர்வாகிகளும் பேசி உடன்பாடு கண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரிக் கண்டுள்ள உடன்பாடுகளினால் எவ்வளவு பேர்கள் நன்மை அடைகிறார்கள் ? என்னென்ன மாதிரியான உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தைக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உடன்பாடுகளின் முழு விவரமும் என்னிடம் இல்லை. பொதுவாக அவர்களுக்கு ஊதியம் உயர்ந்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** கூட்டுறவு வங்கிகளில் மாவட்ட அடிப்படையில் பேசி கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள் என்றாலும் மாநில அடிப்படையில் லேவாதேவிக்கு ஏற்றாற்போல் வங்கிகள் இருக்கின்றன. சில வங்கிகள் ஒவ்வொரு மாவட்டத்தில் ஆறு கோடி ரூபாய் அளவிற்கு லேவாதேவி செய்கின்றன, சில வங்கிகள், அதாவது சின்ன வங்கிகள் மூன்று கோடி ரூபாய் அளவிற்கு லேவாதேவி செய்கின்றன. ஆகவே, எல்லோருக்கும் ஒரே அடிப்படைச் சம்பளம் கொடுக்கமுடியாது. எனவே, வங்கிகளை 'ஏ' கிரேட், 'பி' கிரேட் என்று பிரித்து அதற்கேற்றாற்போல் சம்பள விகிதங்களை ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் முடிவு செய்யக்கூடிய விதத்தில் அறிவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில்கொண்டு, வங்கிகளின் தாராதரத்தைப்

பொறுத்து, அந்தந்த வங்கிகளின் நிர்வாகமும் ஊழியர்களும் நேரடியாகப் பேசிக்கொண்டு, அவர்கள் விவகாரங்களை சுமுகமாகத் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள கூட்டுறவு சங்கங்களில் 'ஃபுல் டைம்' காரியதரிசிகள் இருக்கிறார்கள். அவர்கள் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட காரியதரிசிகள். ஆனால் இப்போது புதிதாக வந்திருக்கிற மத்திய வங்கித் தலைவர் அவர் நியமிக்கிற காரியதரிசிகளை ஏற்றுக்கொண்டாலொழிய கடன் வழங்க முடியாது என்ற நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் நோக்கமா அல்லது அன்னாரின் நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த வினா மத்திய வங்கி ஊழியர்களுக்கும் மத்திய வங்கிகளுக்குமிடையே ஏற்பட்ட ஊதியத் தகராறு பற்றியது. கிராம நாணயச் சங்கங்களின் செயலாளர்களைப் பற்றியதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 149-ம், 150-ம் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

### பாம்பன் கால்வாய் நீரிலிருந்து மின்விசை உற்பத்தி

* 151 வினா—**திரு. க. சுப்பு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாம்பன் கால்வாய் நீரோட்டத்தைப் பயன்படுத்தி நீர் மின் திட்டத்தை உருவாக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய வாய்ப்புக்களைப் பற்றி முன்னாள் மத்திய ரெயில்வே துணையமைச்சர் அவர்கள் கருத்து வெளியிட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Timber Corporation*

* 152 *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to start State Timber Corporation; and

(*b*) if so, when it will be started ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



Thiru B. VENKATASWAMY : Sir, now we are auctioning the timber in the forest through departmental auction by which we are getting lower price by the value of our auction in the area. So many malpractices are also taking place at the time of auction. So as to avoid loss to the Government, will this Government come forward to open a Timber Corporation to get fair prices?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்த அரசாங்கத்தினால் மூன்று மர டிப்போக்கள் நடத்தப்படுகின்றன. அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்கு அரசாங்கத்திற்குப் பயன்படக்கூடிய மரங்களைக் கொடுக்கிறோம். தனியார்களுக்கு இப்போது ஏலம் மூலம் கொடுக்கப்படுகிறது. எந்தவிதமான குறைபாடும் கிடையாது.

Thiru K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Electricity whether there is any proposal to start such a Corporation in Denkanikoda where there is a big forest having an extent of 2 lakhs of acres ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கனவே சொன்னேன், கார்ப்பரேஷன் அமைக்கிற ப்ரப்போசல் கிடையாது என்று.

### *Battery re-conditioning units in Transport Department*

* 153 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state whether battery re-conditioning units have been functioning in the Transport Department workshops in this State ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** இந்த இலாகாவிற்குத் தேவையான இப்படிப்பட்ட பாட்டரி செய்யும் நிறுவனங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இப்போதே ஒவ்வொரு பணிமனையிலும் மின் இயல் பிரிவு வைத்து இந்த மின்கலப் பெட்டி பேணுதல் முறைகள் நல்லமுறையில் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, மின்கலப்பெட்டிகளைப் புதிதாக ரீகண்டிஷன் செய்கிற ஒரு தொழிலை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** போக்குவரத்துத் துறை தேசீயமயமாக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அந்தத் தொழிலுக்குத் தேவையான இதர உப தொழில்களும் அதே ஸ்தாபனத்திலேயே ஆரம்பித்து நடத்துவது நல்லதல்லவா ? அப்படி ஆரம்பித்து

நடத்துவதில் இப்படிப்பட்ட பாட்டரிகள் தயாரிப்பது மிக அத்தியாவசியமானது என்பதால் அதைச் செய்வதற்கு அரசு இனிமேலாவது யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒரு தொழிலை நடத்துவது என்பது அத்தொழிலுக்குத் தேவையான திறமையாளர்களைக் கொண்டுவருதல், அதைத் திறமையாக நடத்துவது, லாபமாக நடத்துவது, அதே நேரத்தில் தரமாக நடத்துவது என்கிற அத்தனையும் அதில் அமைந்துள்ளது. நாம் போக்குவரத்துத் துறையை நடத்துவதற்குப் பதிலாக இதைத் தொழில் துறையாக மாற்றி விடக் கூடாது என்பதால் அரசு இதை மேற்கொள்ளவில்லை.

**திரு. எ. சுவாமிதாஸ் :** டெல்லி, பம்பாய் போன்ற நகரங்களில் நடத்தப்படுகிற போக்குவரத்துத் துறையினர் தங்களுக்குத் தேவையான கருவிகளை, தேய்ந்து போன மோட்டார் பாகங்களை தங்கள் தொழிற்சாலைகளில் வைத்தே அவற்றை ரீ-கண்டிஷன் செய்து புதியனவாக ஆக்கிக்கொள்கிறார்கள். அதேபோல் நம்முடைய போக்குவரத்துத் துறையினரும் அம்மாதிரி ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தால் மிகவும் லாபகரமாக இருக்கும். அதோடு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதற்கும் ஏதுவாக இருக்கும். ஆகவே, அம்மாதிரி ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒரு தடவை பயன்படுத்தப்பட்ட பொருளை மறுபடியும் பயன்படுத்துகிற வகையில் மீட்பு சக்தியோடு இயங்கும் வகையில் ஒரு தொழிற்சாலை, எப்படி பம்பாய் மாநகரத்தில் ஆரம்பித்து நடத்துகிறார்களோ, அதேபோல், நம் போக்குவரத்துத் துறையில் நாம் நடத்த இருக்கிறோம். அதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் சென்னை போக்குவரத்துத் துறையில் சென்னையில் அதுபோன்று ஒரு ரீ-கண்டிஷனிங் யூனிட், மோட்டார் பாகங்களை மறுபடியும் பயன்படுத்துகிற வகையில் ஒரு நல்ல தொழிற்சாலையை நடத்த ஏற்கனவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

### அறங்காவலர் வட்டாரக் குழுக்கள் கலைப்பு

* 154 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறங்காவலர் நியமனத்துக்காக, மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டிருந்த (Area Committees) எந்த ஆண்டு கலைக்கப்பட்டன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 16—10—1968 முதல் வட்டாரக் குழுக்கள் (Area Committees) கலைக்கப்பட்டன.





**திரு. பி. எஸ். மணியன் :** மறுபடியும் இப்படிப்பட்ட குழுக்களை அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அந்தக் குழுக்கள் எந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்டனவோ அவற்றின் வேலைகள் சரிவர நடைபெறவில்லை என்ற காரணத்தினால் அவை கலைக்கப்பட்டன. ஆகவே மீண்டும் அமைக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அறங்காவலர்களை நியமிக்க மாவட்டந்தோறும் ஏரியா கமிட்டீஸ் இல்லாவிட்டாலும் மாநில அளவில் யார் யாரை அறங்காவலர்களாக நியமிப்பது என்பதில் அதற்குத் தகுதியுள்ள, சமயப் பற்றுள்ளவர்களைக் கொண்ட ஒரு தனிக் குழு அமைக்க இந்த அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பொதுவாக ஆலயங்களில் நியமிக்கப்படுகிறவர்கள், தகுதி உள்ளவர்களைத்தான் நியமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் அந்தக் குழு கலைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்போது அந்தக் குழுவின் பணி யார் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இப்போது அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற துணை ஆணையர்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்கள் எந்தெந்தக் கோவில்களில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? எந்தெந்தக் கோவில்களுக்கு தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கலாம் என்ற விதி ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை பல கோவில்களில் அறங்காவலர்களாக நியமித்து இருக்கிறோம். இன்னின்ன கோவில்களில் தான் தாழ்த்தப்பட்டவர்கள் நியமனம் செய்யவேண்டுமென்ற விதி இல்லை. ஆனால், பரவலாக பல ஆலயங்களில் தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர்களாக நியமித்து இருக்கிறோம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, may I know the names of the members who have been functioning in these Area Committees ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஏரியாக் கமிட்டிகளை நாம் கலைத்து விட்டோம். ஆகவே, அதிலே உறுப்பினர்கள் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்தக் கமிட்டியில் இருந்த உறுப்பினர்களின் பெயர்களை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஏரியாக் கமிட்டிகள் என்று பல கமிட்டிகள் அமைக்கப்பட்டு இருந்தன. மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டிருந்தது. அது இப்போது கலைக்கப்பட்டுவிட்டதால், அவர்களுடைய பெயரை இப்போது அறிவிக்க இயலாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, சில பேர் 7, 8 கோவில்களுக்கு அறங்காவலர்களாக இருக்கிறார்கள். ஒருவர் ஒரு கோவிலுக்கு மேல் அறங்காவலராக இருக்கக்கூடாது என்று அரசு உச்சவரம்பு நிர்ணயம் செய்தால்தான், அவர்கள் ஒரு கோவிலிலாவது ஒழுங்காக வேலை செய்ய முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஒழுங்காக வேலை செய்கிறவர்களைப் பார்த்துத்தான் சில பேரை பல கோவில்களுக்கு அறங்காவலர்களாக நியமித்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிரம்ப பக்திமான்களாக இருந்தால் என்ன செய்வது ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பக்திமான்களாக இருந்தாலும் அவர்களுக்கு நேரம், காலம் வேண்டாமா ? பல கோவில்களில் இடத்தை நெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ? சமதர்மம், சமத்துவம் பேசுபவர்கள், இந்த விஷயத்திலாவது சமதர்மத்தைக் கொண்டு வருகிற வகையில் ஒருவர் ஒரு கோயிலுக்குத்தான் அறங்காவலராக இருக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அறங்காவலர்களாக இருப்பவர்கள் கோவிலில் இடத்தை நெருக்கிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை கோவிலின் நிர்வாகத்தைத்தான் அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறப்பாக நிர்வாகம் புரிகிறவர்களைத்தான் பல கோவில்களுக்கு அறஙகாவலர்களாக நியமித்து இருக்கிறோம். அவர்களுடைய பணி பல இடங்களுக்கு பரவலாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இப்படிப் பட்ட நியமனங்கள் செய்கிறோம்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, இப்படி அறநிலையப் பொறுப்புகளில் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டும் என்ற மரபோ அல்லது கட்டாயமோ உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட கட்டாயமோ அல்லது மரபோ கிடையாது.





**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்போது தமிழகத்தில் அறங்காவலர்களாக பெண்கள் யாராவது நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, நியமிக்கப் பட்டு இருக்கிறார்கள்.

*Kanyakumari Devaswom Board*

* 155 *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) The number of members in Kanyakumari Devaswom Board;

(*b*) whether there has been any Harijan member in the said board at any time from 1957 onwards; and

(*c*) if not, the steps taken to nominate a Harijan Member ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) மூன்று.

(இ) இல்லை.

(உ) அரிசன உறுப்பினரை நியமிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கன்னியா குமரி தேவஸ்வம் போர்டில் உறுப்பினர்களாக இருக்கும் மூவரில், ஒருவர் திருவிதாங்கூர் ராஜாவின் பிரதிநிதியாக இருக்கிறார்கள். அதை மேலும் தொடர்ந்து அவர் நியமனம் செய்வதற்கு உரிமை இருக்கிறதா ? அப்படி இருந்தாலும், அரசாங்கம் அதை ரத்து செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இனிமேல் உரிமை இருக்குமா இல்லையா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இப்போது திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் ஒரு உறுப்பினரை நியமனம் செய்கிறார்கள். அவர் தேவஸ்வம் போர்டில் உறுப்பினராக பணியாற்றுகிறார்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோவில்களில் ஹரிஜனங்களை அறங் காவலர்களாக நியமிப்பதற்கு முன்னால், அந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் புகழ்பெற்ற, சிறப்புச் சிறப்பு பெற்ற சுசீந்திரம் கோவிலுக்குள் மற்ற நாட்டவர்கள் சட்டையை கழற்றி விட்டுத்தான் உள்ளே செல்லவேண்டுமென்று இருக்கிறதே, அதற்கு பரிகாரம் ஏதாவது தேடி, மற்ற நாட்டவரும் அந்தச் சிறப்புச் சிறப்பைக் கண்டு களிக்கும் வகையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள

பல கோவில்களில் பல விதிமுறைகள் பழைய காலந்தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. அவைகளிலே தலையிடுவதற்கு அரசு தயாராக இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, தமிழகம் தனியாகப் பிரிந்து வந்தபிறகும், அந்த கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டில் அந்த மன்னருடைய ஒரு பிரதிநிதியை நீடித்து இருக்கச் செய்வது அவசியம் தானா, அதை நிறுத்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு—கேரள நாடுகளின் பிரிவினையின்போது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது செய்யப் படுகிறது. ஆகவே, அதைப்பற்றி நாம் இப்போது யோசிப்பதற்கு இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, புதிதாக இப்போது அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. மன்னர்களுடைய எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலாலே இதை ரத்து செய்வதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவைகளைப்பற்றி உரிய நேரத்தில் அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, கடவுள் பக்தி இல்லாதவர்கள், ஆனால் கோவிலை நல்ல முறையில் சிறப்பாக இருக்க வேண்டுமென்று எண்ணுபவர்களை, வருமானம் அதிகமாகத் தேட வேண்டுமென்று கருதுபவர்களை இந்த அரசு அறங்காவலர் களாக நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, கோவிலி னுடைய நிர்வாகத்தை நடத்துவதற்கு யார் யார் சிறந்தவர்கள், கை தேர்ந்தவர்கள் என்று பார்த்துத்தான் அரசு நியமனம் செய்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வருமானம் அதிகமாகத் தேடவேண்டுமென்று விரும்புகிறவர்களை அறங்காவலர்களாக நியமிக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் கோவிலுக்கு அதிகமாக வருமானம் தேடவேண்டுமென்று விரும்புகிறவர்களை அரசு நியமிக்க எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டைச் சார்ந்த பல கோவில்களில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் டிரஸ்டிகளாக நியமனம் செய்யப்பட்டிருக்கிற



போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இன்னும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமனம் செய்யாததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கன்னியாகுமரி பகுதியில் உள்ள கோவில்களுக்கு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களை அறங் காவலர்களாக நியமனம் செய்யாததற்குக் காரணம் எதுவும் கிடையாது. நியமனங்கள் செய்யப்படுகிறபோது, பொதுமக்கள் மத்தியிலிருந்து விண்ணப்பங்கள் கேட்கிறோம். வருகின்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்து நியமனங்கள் செய்கிறோம். ஆகவே, நியமிக்காததற்கான தனிக்காரணம் எதுவும் கிடையாது.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அறங்காவலர் நியமனம் கேட்டு யாரும் விண்ணப்பிக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அதுபற்றிய விவரம் இல்லை, தனிக்கேள்வி போடவும்.

**திருப்பூர் நகரசுத்தித் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள்.**

*** 134. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு பல்லடம் பாதைக்கு அருகில் (காட்டு வலவு) வீடு கட்டித்தரும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு இவ்வாண்டிற்காக ஒதுக்கப் பட்ட ரூ. 3,00,000 முழுவதும் மற்ற நகராட்சிகளுக்கு மானியமாக தரப்பட்டு விட்டதால், திருப்பூர் நகராட்சி நகரசுத்தித் தொழிலாளர்களின் வீடு கட்டும் திட்டத்திற்கு மானியத் தொகை வழங்குதல் பற்றிய கோரிக்கை அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே ஒதுக்க இயலவில்லை என்று சொல்லி விட்டார்கள். அடுத்த ஆண்டிலாவது ஒதுக்கித்தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அடுத்த ஆண்டிலாவது ஒதுக்கித்தருவார்களா என்று கேட்டார்கள். அடுத்த ஆண்டு ஒதுக்கித்தரவேண்டுமென்று கேட்டு திருப்பூர் நகராட்சியிட மிருந்து செயற்குறிப்பு வரவேண்டும். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்து தந்தால், ஒதுக்கித் தரப்படும்.

[1971 டிசம்பர் 7

## கும்மிடிப்பூண்டித் தொகுதியில் அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர்

*135. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் தொகுதியில் அரிசனங்கள் மிகுந்துள்ள மூக்கரம்பாக்கம், தொளவேடு அரிசனக் காலனிகளில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து குடிநீர் வசதி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூக்கரம்பாக்கம்.—இக்கிராமத்தில் உள்ள அரிசனக் காலனிக்கு குடி-தண்ணீர் வழங்கும் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தொளவேடு.—இக்கிராமத்தைப் பொறுத்தளவில் அம்மாதிரி திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மேற்கண்ட இரண்டு கிராமங்களில் உள்ள ஹரிஜன் காலனிகளில் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. கிணறு வெட்டி அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தர முடியவில்லை. மேல்நிலை குடிதண்ணீர் தொட்டிகள் மூலமாகத்தான் குடி-தண்ணீர் வசதி செய்து தரமுடியும். மூக்கரம் பாக்கத்தில் அந்தத் திட்டம் இன்னும் அமுல்படுத்த முடியவில்லை. தொளவேடு கிராமத்தில் அதை நிறைவேற்றித் தருவதற்கு உடனடியாக தனி நிதி ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மூக்கரம்பாக்கத்தில் இத்திட்டம் முடிவடைகிற தருவாயில் இருக்கிறது. தொளவேடு கிராமத்தில் ஏற்கெனவே கிணறு வெட்டப்பட்டு, மின்சார பம்பு செட்டு அமைக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு மேலும் குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ரூ. 10,000 ஒதுக்கியிருக்கிறார்கள். விரைவில் அது செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1971 டிசம்பர் 7]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) சிம்சன் கூட்டு நிறுவனங்களில் ஏற்பட்டிருக்கும் தொழிலாளர் சச்சரவையொட்டிய நெருக்கடி நிலைமை குறித்து

MR. SPEAKER : The hon. Member Thiru K. T. K. Thangamani has given a notice under Rule 42 to adjourn the business of the House to discuss the following definite matter of urgent public importance viz., the serious situation arising out of the labour trouble prevailing in the Simpson Group of companies affecting about 15,000 workers majority of whom are on strike from 22nd November 1970 and the consequent suffering of the 15,000 families. Thiruvalargal Dr. H. V. Hande, Thiru N. K. Palaniswamy, Thiru M. A. Latheef, Thirumathi T. N. Anandanayaki, Thiru J. James and Thiru K. N. Kumaraswami have also given noticed of similar motions. I call Thiru K. T. K. Thangamani to briefly explain how it comes under an adjournment motion ?

முற்பக 10-0

திரு. கே. டி. கே. தங்கமணி : ஸார், நேற்று நான் இந்த நெருக்கடியான நிலை பற்றி, அரசின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய நேரத்தில், சிம்சன் கம்பெனி பற்றியும் குறிப்பிட்டேன். அப்படிக் குறிப்பிட்டதன் காரணம், அது எவ்வளவு அவசரமானது, அவ்வளவு அவசரமானதாக இருப்பதோடு, அரசு அதை இன்னமும் ஒத்திப் போட்டுக்கொண்டு இருப்பது அரசு தன்னுடைய கடமையைச் செம்மையாக, முறையாகச் செய்ததாக இருக்காது எனபதால் வலியுறுத்தினேன். அதையே இப்பொழுதும் வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்த சிம்சன் கம்பெனி சம்பந்தமாக ஏற்கனவே ஒரு முறை வேலைநிறுத்தம் செய்து, தொழிலாளர்கள் சார்பில் எல்லாச் சங்கத் தலைவர்களும் தொழிலாளர் நல அமைச்சரைப் பார்த்ததன் பேரில், அவர்கள் கொடுத்த உத்தரவாதத்தின் பேரில், வாபஸ் வாங்கினார்கள். உத்தரவாதம், அன்று தொழிற்சாலையிலும், வெளியிலேயும் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு போதுமான பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்பதும், அதே நேரத்தில் எந்தத் தொழிலாளரும் பழி வாங்கப்பட மாட்டார் என்பதுமாகும். அதைத் தெளிவாகச் சொன்னார்கள். இருந்தும், அதற்கு இரண்டு தினங்களுக்கு பின்பு, ஒரு முக்கியமான ஊழியர் பழி வாங்கப்பட்டிருக்கிறார். அரசு தான் கொடுத்த வாக்குறுதியை இன்னும் கொஞ்சம் அழுத்தமாக நிறைவேற்ற நிர்வாகத்தை வற்புறுத்தியிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்தச் சம்பவங்களின் முழுக் காரணங்களுக்கும் நான் போகவில்லை. விவரங்கள் தேவை என்றால் சொல்லுவதற்கு எவ்வளவோ விவரங்கள் இருக்கின்றன.

நவம்பர் மாதம் ஒன்றும் தேதி மவுண்ட் ரோட்டில் நடந்த சம்பவம் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும், பொதுவாக நாட்டில் உள்ள எல்லோருக்கும் கவலை தரும் விஷயமாகும். தொழிலாளர்களை வெளியிலிருந்து தாக்கியும், தாக்கப்பட்டவர்களுக்கு போலீசார் பாதுகாப்புக் கொடுக்கப்படாமலும், அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. அது தொழிலாளர்களுக்கு மிகப் பெரிய

[1971 டிசம்பர் 7

[திரு. கே. டி. கே. தங்கமணி]

ஆத்திரத்தை உண்டாக்கி எல்லோரும் தலையிட வேண்டும் என்கிற சூழ்நிலை ஏற்பட்டது. இன்றைக்கு தொழிற்சங்கம் பொறுத்த வரையில், ஜனநாயக ரீதியில் செயல்படவேண்டும் என்பதும், தொழிலாளர்கள் தங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் முறையான தலைமையைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதும், அதே நேரத்தில் தங்கள் சார்பாக நிறைவேற்றப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் தங்களைப் பாதிக்கக்கூடாது என்றும் உறுதியாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தம் பொறுத்த வரையில், அது தொழிலாளர்களுக்குக் கவலை தரக்கூடியதாக இருக்கிறது. ஏற்கனவே பெற்ற உரிமைகள் பறிபோய் இருக்கின்றன. நினைத்தால் நிர்வாகத்தைப் பார்க்கலாம் என்பதில், வாரம் ஒரு முறை பார்க்கலாம் என்றும், முதலாளி நினைத்தால்தான் பிரமோஷன் கொடுக்கலாம் என்றும், இப்படி ஏற்கெனவே பெற்ற சலுகைகள் பறிக்கப்பட்டிருக்கும் நிலை இருக்கிறது. 1969-ம் வருஷத்தில் மாத லாபம் எவ்வளவு கிடைத்ததோ அப்பொழுது கொடுக்கப்பட்ட போனசை விட அதே லாபம் கிடைத்தும் இப்பொழுது பாதிதான் போனஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக வேலைப் பளுவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பரிசீலிக்கலாம்.

இதில் அவர்கள் விரும்பும் அளவுக்கு, தலைமையென்றால், தலைவர் மட்டுமல்லாமல், எல்லோரையும் தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும், ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், அதை ஒரு கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல் பரிசீலனை செய்தால் உள்ள கஷ்டங்கள் தீர்க்கப்படும். அதில் 15,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நேற்று நான் குறிப்பிட்டதுபோல் இது ஒரு கேந்திரமான தொழில். ஒரு சில தொழிற்சாலைகளோடு நேரிடையாக ஒட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக இருக்கிறது. இது மிக முக்கியமான விஷயம். சாதாரணமானதாக இருந்தால் அரசின் மீது குற்றம் சாட்டியிருக்கமாட்டேன். அரசு இதற்கான முறையில் வழி காண ஒரு சீரான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மிக முக்கியமான விஷயத்தை மீண்டும் ஒரு முறை வற்புறுத்தி, அமர்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I request that the House be adjourned to discuss a matter of urgent public importance viz. the serious situation arising out of the inter-union rivalry in the Simpson Group of companies. In view of the fact that this has created insecurity among the employees I request that the House be adjourned to discuss the matter today itself. I request the Hon. Speaker, the Hon. Chief Minister and the Hon. Leader of the House to accede to our request and see that the House is adjourned for an hour or two to discuss this subject so that we can discuss the various aspects and come to a useful decision.



1971 டிசம்பர் 7]

[Dr. H. V. Hande]

For the following reasons I reiterate that we should adjourn the House. Yesterday when the subject had been touched upon amidst an important discussion by the hon. Member Thiru K. T. K. Thangamani, the Hon. Chief Minister got up and said that he would prefer to have a union in every company which is run by a person who is an employee there. It is in fact a suggestion which we have been urging all along. That is our stand. I have brought leaflets on this and I will respectfully give it to the Hon. Chief Minister afterwards so that he will know my point of view and our party's point of view. Of course th eChief Minister may say that I may not have many unions and so that I may not talk much on that. But as leader of a party, I may say that our party's stand on this had been very clear.

My submission to the Hon. Chief Minister is let us discuss this subject dispassionately. In the Simpson group of companies already there was a union run by one of the employees. He was the leader for a long time. Later on, a situation arose when there was certain amount of violence and rivalry between groups of employees and some employees were beaten. Last time we have mentioned in this House that a number of persons had been beaten. It was said then that several D.M.K. people also had been beaten. I know that INTUC people (an independent group) were also beaten. Unfortunately violence was unleashed in the beginning. I had mentioned it in time and brought it to the attention of the Government but it was not prevented by the Government initially for reasons not known to me.

I was really happy when the Hon. Chief Minister said that he would be happy if one of the employee was the leader of the trade union. Why did not this Government think of this before ? Was not Mr. Gurumurthy, an employee, the leader of the union for the past 15 years ? After Mr. R. Venkataraman, he became president and during Mr. R. Venkataraman's regime as Minister, Mr. Gurumurthy continued as President of the Union. When such a union, run by an employee, has been there, why did not the Chief Minister who now thinks of a union run by employee, support the union then ? Of course, he has now given out his view and asked the political parties to think over it. I know there are many unions run by political parties. If we keep quiet, other parties start the union. This is what I had said and discussed within my party meetings. I had said that we should also start a union and I was dubbed a trade-unionist within my party. Of couse, that is one aspect of the matter.

Another aspect of the matter is this. I would like to discuss the whole thing in a dispassionate and calm manner. The Hon. Chief Minister yesterday made a statement that there is a possibility of his not standing on a pedestal of self-dignity or false prestige and he may come down and an objective decision may be taken in the interest of the Simpson workers and in the interest of the country.

[Dr. H. V. Hande]

because we are now in peril. As Mr. K. T. K. Thangamani has said, there is no point in importing any heat in the discussion. But the point is, why should there have been such violences unleashed?

I respectfully told my distinguished friend, and Minister Thiru N. V. Natarajan that this violence could have been in fact prevented. I do not want to particularly mention any of the persons. On 1st November 1971 there was violence as Thiru K. T. K. Thangamani put it, when a car came. I have got the number of the car. Facts and figures are there. I have made out a long list of persons who have been beaten. On 4th November 1971 persons were beaten when they were passing through Children's Theatre. Persons were attacked in the noon by some groups. When persons are beaten, they are not able to come and tackle the persons who beat. At the same time police are watching it. This particular thing was properly mentioned and brought to the attention of the Commissioner of Police. I think if the Hon. Chief Minister gives his personal attention and finds out the mistake, something can be done.

On 17th November 1971 a complaint was registered. Near the canteen some persons were beaten. I have got the names, but for decency sake I am not mentioning names. Again on the same day persons working in TAFE were beaten near the bus stand. A person was dragged from the bus and was beaten. A complaint was given to K-1 Police Station on 17th November 1971. On 17th November 1971 itself a gentleman beat another person at 6 p.m. Again at 10 a.m. on the same day one gentleman was beatan. A complaint was also lodged at K-1 Police Station. On 18th November 1971 lot of violence took place. On 23rd November 1971 persons who are living in R.V. Nagar—I think the hon. Member Thirumathi T. N. Anandanayaki mentioned this in a particular place—ladies who are living in R.V. Nagar—the windows in their houses were damaged on 23rd November 1971. A complaint was lodged at K-1 Police Station, but no action has been taken. Persons working in Plant-3 were seriously beaten. Then the School in R.V. Nagar was also damaged. At about 10 p.m. workers who were returning from the Moolakadai public meeting were beaten. A transport bus was damaged. Bus No. 38-E was attacked with deadly weapons at Lakshmi Koil, Sembiam, Perambur. A Government bus was damaged.

Mr. SPEAKER : Is the Hon. Member speaking on the adjournment motion itself or on the admissibility of the motion?

Dr. H. V. HANDE : Sir, a little amount of laxity may be allowed so that I may refer to certain facts because probably the Hon. Chief Minister is going to give a long statement. I have got a long list of persons. But I would respectfully submit to the wishes of the Hon. Speaker.



[Dr. H. V. Hande]

With regard to the main question, firstly one person who belongs to the ruling party is now heading the Union. My submission is this. There is unrest among the workers. The workers are not happy with the terms of the agreement. That is the most important point. Last time there was a profit of Rs. 3,84 lakhs, but the amount of bonus was only Rs. 1,04 lakhs.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* தீர்மானம் வந்த பிறகு விவா மாகப் பேசலாம். இப்போது அரசாங்கத்தின் தவறு என்ன, பொறுப்புகள் என்ன என்பதை மட்டும் சொன்னால் போதும். எனவே சீக்கிரம் முடித்து விடுங்கள்.

Dr. H. V. HANDE : My only request is, we may be given a little relaxaion.

Mr. SPEAKER : Other members have also given notices of similar adjournment motions. They will have to explain their points of view. So, the hon. Member alone cannot take much of the time.

Dr. H. V. HANDE : I will take just two minutes, so that the Hon. Chief Minister may tell us what the picture is. This is an exceptional circumstance. After the Chief Minister's statement, a decision may be taken. It is left to the Hon. Speaker. My only submission is, let us be allowed a little laxity. I will briefly explain one or two points. Then I will resume my seat.

Mr. SPEAKER: The hon. Member may please confine his remarks as to how the Government is involved, how the Government is responsible, how the matter comes under an adjournment motion.

Dr. H. V. HANDE : The situation is fairly acute and in the process of explaining how the situation is actue, I may try to give some facts. It may be argued on bahalf of the Ministry that they are helpless because it is a union matter. There is a vast amount of restlessness outside, the seriousness of which I want to bring to the notice of the House. My submission is, there is a lot of unrest in the minds of the public. The Union Leader did not consult the workers with regard to the terms of the agreement. On a particular day he told a public meeting among the workers that he would discuss with them. But he had not told the workers what were the terms of agreement. The workers are now feeling that if they had been told about the terms of agreement previously, it would have been better. That is one of the most important points............

(Mr. Speaker then called Thiru K. N. Kumaraswamy.)

*திரு. கே. என். குமாரசாமி :* தலைவரவர்களே, இந்த சிம்சன் க்ரூப்பில் ஏற்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமாக ஏற்பட்ட விவகாரம் பற்றிய விஷயத்தில், எற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய ஒப்புதலைப் பெற்று,

[திரு. கே. என். குமாரசாமி]

அதற்கான காரணங்களை விளக்கி, தொழிலாளர்களிடம் சொல்லி சரியான முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமானால் இப்படிப் பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. இரு தரப்புத் தொழிலாளர்களையும் கலந்து, அவர்கள் இணக்கத்தோடு இதைச் செய்திருக்குமானால், தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்கிற ஒரு ஒப்பந்தம் செய்யபட்டிருக்குமானால் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்காமல் தடுத்திருக்க முடியும். ஒரு ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்றால், அது தொழிலாளர்களுக்கு நலன் பயப்பதாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் விரும்பாத ஒரு ஒப்பந்தத்தை மெஜாரிட்டி தொழிலாளர்கள் மீது நிர்ப்பந்தமாகத் திணிப்பது என்பது நமது ஜனநாயகத்திற்கு ஒப்பான மரபு அல்ல.

ஆகவே, அந்த அடிப்படையில், சென்னை மாநகரத்தில், பெரிய மோதல்கள் நடக்கின்ற அளவுக்கு, தொழில் தகராறுகள், தொழில் அமைதியின்மை ஏற்பட்ட காரணத்தால், இன்னும் பரபரப்பு அடங்காத சூழ்நிலையில், சிலர் தொழிற்சாலையில் வேலை செய்வதும், சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதும் என்பது வருந்தத்தக்கது. அதுவும், இன்றைய சூழ்நிலையில், நாடு ஒரு ஆபத்தான கட்டத்தில் இருக்கின்ற நிலையில் இது மிகவும் வருந்தத் தக்கது. எனவே அரசாங்கம் இதுசம்பந்தமாகத் தலையிட வேண்டும். மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற உரிமைகளும் பறி போகின்ற நிலையில் தொழிலாளர்கள் மன திருப்தியற்ற நிலையில் இருப்பதாக காணப்படுகிறது. அவர்களுக்கு மனத் திருப்தியை உண்டாக்குகின்ற அடிப்படையிலே ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்திருக்கின்ற உரிமைகள் மீண்டும் கிடைக்கின்ற வாய்ப்பை உண்டாக்குவதற்காகவும் அரசாங்கம் முயற்சிகள் எடுத்திருக்குமானால், நிச்சயமாக இப்படிப்பட்ட மோதல்கள் நடைபெற்றிருக்காது. ஆகவே, அரசாங்கம், இந்த சிம்சன் க்ரூப் சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய, தொழிலாளர்களுடைய முழுமனதான ஒப்புதலைப் பெற்று அதனை உருவாக்கும்படியான சூழ்நிலையை உருவாக்க, அரசு தலையிட்டு, இதற்கான ஒரு பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக இந்த மன்றத்தை ஒத்திவைக்க வேண்டும்.

நிச்சயமாக, இது ஒரு ஜனநாயகப் பிரச்னை என்ற அடிப்படையில், தொழிலாளர்கள் பெற்றிருக்கின்ற உரிமைகள் பறி போகாமல் இருக்கும் வகையில் அரசாங்கம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதுவும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தான சூழ்நிலையில், அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மேலும், மாநகரத்தில் பரப்பரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால், இதுசம்பந்தமாக அரசு தலையிட்டு ஒரு முடிவு காண்பதற்கு வழி வகைகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, இதை ஒரு ஜனநாயக முறையில் முடிவு காண்பதற்கு, அவையை ஒத்தி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



THIRU M. A. LATHEEF .: Mr. Speaker, Sir, I have given notice of the following motion :—

'That the business of the House stands adjourned to discuss a matter of very urgent public importance, namely, the serious situation arising out of the prolonged strike by a group of the workers of the Simpson Group of Companies which has adverse effect upon the industrial peace of the State and the consequent reduction in the production level and the need to change the same in these days of grave national emergency. '

Mr. Speaker, Sir, I have moved this motion to discuss this matter as I feel that it is of very urgent public importance which has affected the level of production, the production that provides more or less wherewithal to run the machine of the warfare that we are now carrying on against a foreign aggressor. Now I stand to speak neither on behalf of industrialists nor on behalf of workers. I am here only to safeguard the interest of the Nation particularly at this critical juncture.

So far as the trouble that has given rise to the problem about which I seek to discuss in this House is concerned, the Hon. Chief Minister has put forth a very happy, suggestion indeed yesterday namely that all political parties should agree that the leadership of a particular union should emerge from that union itself. If that suggestion is accepted by all the parties concerned, there will be a good trend in the industrial activity. But what has happened in the Simpson Group of Companies and the trade unions connected with these companies is rather very very unfortunate. There are inter-union rivalries and political factions there. I do not want to go into the merits or demerits of the question and the political motivation behind it but I want to point out that at this juncture in order to achieve production level and to maintain production level to meet the requirements of the defence commitments of this country on account of the war situation, one would have expected that without being any compromise talk at all, all the people concerned would have come forward to settle the dispute. The industrialists and entrepreneurs should have immediately settled the dispute and the workers should have immediately returned to work as soon as the war was declared. That is what all sections of the community expect of them at this particular juncture. But in spite of the declaration of the war and in spite of the national emergency still the workers have not returned to work and the entrepreneurs have not come forward to have a talk with the workers and only in this way the responsibility of the Government is involved in this matter. In order to discuss the implications of this prolonged strike and its adverse effect upon the production level and the presence of the various inter-union rivalries, I request that the House should stand adjourned to discuss the serious situation arising out of that. Thank you very much.

• •

[திரு. கே. என். குமாரசாமி]

அதற்கான காரணங்களை விளக்கி, தொழிலாளர்களிடம் சொல்லி சரியான முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமானால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. இரு தரப்புத் தொழிலாளர்களையும் கலந்து, அவர்கள் இணக்கத்தோடு இதைச் செய்திருக்குமானால், தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்கிற ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்குமானால் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்காமல் தடுத்திருக்க முடியும். ஒரு ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்றால் அது தொழிலாளர்களுக்கு நலன் பயப்பதாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் விரும்பாத ஒரு ஒப்பந்தத்தை மெஜாரிட்டி தொழிலாளர்கள் மீது நிர்ப்பந்தமாகத் திணிப்பது என்பது நமது ஜனநாயகத்திற்கு ஒப்பான மரபு அல்ல.

ஆகவே, அந்த அடிப்படையில், சென்னை மாநகரத்தில், பெரிய மோதல்கள் நடக்கின்ற அளவுக்கு, தொழில் தகராறுகள், தொழில் அமைதியின்மை ஏற்பட்ட காரணத்தால், இன்னும் பரபரப்பு அடங்காத சூழ்நிலையில், சிலர் தொழிற்சாலையில் வேலை செய்வதும், சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதும் என்பது வருந்தத்தக்கது. அதுவும், இன்றைய சூழ்நிலையில், நாடு ஒரு ஆபத்தான கட்டத்தில் இருக்கின்ற நிலையில் இது மிகவும் வருந்தத் தக்கது. எனவே அரசாங்கம் இதுசம்பந்தமாகத் தலையிட வேண்டும். மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற உரிமைகளும் பறி போகின்ற நிலையில் தொழிலாளர்கள் மனதிருப்தியற்ற நிலையில் இருப்பதாக காணப்படுகிறது. அவர்களுக்கு மனத் திருப்தியை உண்டாக்குகின்ற அடிப்படையிலே ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்திருக்கின்ற உரிமைகள் மீண்டும் கிடைக்கின்ற வாய்ப்பை உண்டாக்குவதற்காகவும் அரசாங்கம் முயற்சிகள் எடுத்திருக்குமானால், நிச்சயமாக இப்படிப்பட்ட மோதல்கள் நடைபெற்றிருக்காது. ஆகவே, அரசாங்கம், இந்த சிம்சன் க்ரூப் சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய, தொழிலாளர்களுடைய முழுமனதான ஒப்புதலைப் பெற்று அதனை உருவாக்கும்படியான சூழ்நிலையை உருவாக்க, அரசு தலையிட்டு, இதற்கான ஒரு பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக இந்த மன்றத்தை ஒத்திவைக்க வேண்டும்.

நிச்சயமாக, இது ஒரு ஜனநாயகப் பிரச்னை என்ற அடிப்படையில், தொழிலாளர்கள் பெற்றிருக்கின்ற உரிமைகள் பறி போகாமல் இருக்கும் வகையில் அரசாங்கம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதுவும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தான சூழ்நிலையில், அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மேலும், மாநகரத்தில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால், இதுசம்பந்தமாக அரசு தலையிட்டு ஒரு முடிவு காண்பதற்கு வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, இதை ஒரு ஜனநாயக முறையில் முடிவு காண்பதற்கு, அவையை ஒத்தி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, I have given notice of the following motion :—

'That the business of the House stands adjourned to discuss a matter of very urgent public importance, namely, the serious situation arising out of the prolonged strike by a group of the workers of the Simpson Group of Companies which has adverse effect upon the industrial peace of the State and the consequent reduction in the production level and the need to change the same in these days of grave national emergency.'

Mr. Speaker, Sir, I have moved this motion to discuss this matter as I feel that it is of very urgent public importance which has affected the level of production, the production that provides more or less wherewithal to run the machine of the warfare that we are now carrying on against a foreign aggressor. Now I stand to speak neither on behalf of industrialists nor on behalf of workers. I am here only to safeguard the interest of the Nation particularly at this critical juncture.

So far as the trouble that has given rise to the problem about which I seek to discuss in this House is concerned, the Hon. Chief Minister has put forth a very happy, suggestion indeed yesterday namely that all political parties should agree that the leadership of a particular union should emerge from that union itself. If that suggestion is accepted by all the parties concerned, there will be a good trend in the industrial activity. But what has happened in the Simpson Group of Companies and the trade unions connected with these companies is rather very very unfortunate. There are inter-union rivalries and political factions there. I do not want to go into the merits or demerits of the question and the political motivation behind it but I want to point out that at this juncture in order to achieve production level and to maintain production level to meet the requirements of the defence commitments of this country on account of the war situation, one would have expected that without being any compromise talk at all, all the people concerned would have come forward to settle the dispute. The industrialists and entrepreneurs should have immediately settled the dispute and the workers should have immediately returned to work as soon as the war was declared. That is what all sections of the community expect of them at this particular juncture. But in spite of the declaration of the war and in spite of the national emergency still the workers have not returned to work and the entrepreneurs have not come forward to have a talk with the workers and only in this way the responsibility of the Government is involved in this matter. In order to discuss the implications of this prolonged strike and its adverse effect upon the production level and the presence of the various inter-union rivalries, I request that the House should stand adjourned to discuss the serious situation arising out of that. Thank you very much.

[Dr. H. V. Hande]

because we are now in peril. As Mr. K. T. K. Thangamani has said, there is no point in importing any heat in the discussion. But the point is, why should there have been such violences unleashed?

I respectfully told my distinguished friend, and Minister Thiru N. V. Natarajan that this violence could have been in fact prevented. I do not want to particularly mention any of the persons. On 1st November 1971 there was violence as Thiru K. T. K. Thangamani put it, when a car came. I have got the number of the car. Facts and figures are there. I have made out a long list of persons who have been beaten. On 4th November 1971 persons were beaten when they were passing through Children's Theatre. Persons were attacked in the noon by some groups. When persons are beaten, they are not able to come and tackle the persons who beat. At the same time police are watching it. This particular thing was properly mentioned and brought to the attention of the Commissioner of Police. I think if the Hon. Chief Minister gives his personal attention and finds out the mistake, something can be done.

On 17th November 1971 a complaint was registered. Near the canteen some persons were beaten. I have got the names, but for decency sake I am not mentioning names. Again on the same day persons working in TAFE were beaten near the bus stand. A person was dragged from the bus and was beaten. A complaint was given to K-1 Police Station on 17th November 1971. On 17th November 1971 itself a gentleman beat another person at 6 p.m. Again at 10 a.m. on the same day one gentleman was beatan. A complaint was also lodged at K-1 Police Station. On 18th November 1971 lot of violence took place. On 23rd November 1971 persons who are living in R.V. Nagar—I think the hon. Member Thirumathi T. N. Anandanayaki mentioned this in a particular place—ladies who are living in R.V. Nagar—the windows in their houses were damaged on 23rd November 1971. A complaint was lodged at K-1 Police Station, but no action has been taken. Persons working in Plant-3 were seriously beaten. Then the School in R.V. Nagar was also damaged. At about 10 p.m. workers who were returning from the Moolakadai public meeting were beaten. A transport bus was damaged. Bus No. 38-E was attacked with deadly weapons at Lakshmi Koil, Sembiam, Perambur. A Government bus was damaged.

Mr. SPEAKER : Is the Hon. Member speaking on the adjournment motion itself or on the admissibility of the motion?

Dr. H. V. HANDE : Sir, a little amount of laxity may be allowed so that I may refer to certain facts because probably the Hon. Chief Minister is going to give a long statement. I have got a long list of persons. But I would respectifully submit to the wishes of the Hon. Speaker.



[Dr. H. V. Hande]

With regard to the main question, firstly one person who belongs to the ruling party is now heading the Union. My submission is this. There is unrest among the workers. The workers are not happy with the terms of the agreement. That is the most important point. Last time there was a profit of Rs. 3,84 lakhs, but the amount of bonus was only Rs. 1,04 lakhs.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் வந்த பிறகு விவரமாகப் பேசலாம். இப்போது அரசாங்கத்தின் தவறு என்ன, பொறுப்புகள் என்ன என்பதை மட்டும் சொன்னால் போதும். எனவே சீக்கிரம் முடித்து விடுங்கள்.

Dr. H. V. HANDE : My only request is, we may be given a little relaxaion.

Mr. SPEAKER : Other members have also given notices of similar adjournment motions. They will have to explain their points of view. So, the hon. Member alone cannot take much of the time.

Dr. H. V. HANDE : I will take just two minutes, so that the Hon. Chief Minister may tell us what the picture is. This is an exceptional circumstance. After the Chief Minister's statement, a decision may be taken. It is left to the Hon. Speaker. My only submission is, let us be allowed a little laxity. I will briefly explain one or two points. Then I will resume my seat.

Mr. SPEAKER : The hon. Member may please confine his remarks as to how the Government is involved, how the Government is responsible, how the matter comes under an adjournment motion.

Dr. H. V. HANDE : The situation is fairly acute and in the process of explaining how the situation is actue, I may try to give some facts. It may be argued on bahalf of the Ministry that they are helpless because it is a union matter. There is a vast amount of restlessness outside, the seriousness of which I want to bring to the notice of the House. My submission is, there is a lot of unrest in the minds of the public. The Union Leader did not consult the workers with regard to the terms of the agreement. On a particular day he told a public meeting among the workers that he would discuss with them. But he had not told the workers what were the terms of agreement. The workers are now feeling that if they had been told about the terms of agreement previously, it would have been better. That is one of the most important points............

(Mr. Speaker then called Thiru K. N. Kumaraswamy.)

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த சிம்சன் க்ரூப்பில் ஏற்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமாக ஏற்பட்ட விவகாரம் பற்றிய விஷயத்தில், எற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தாலும் மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய ஒப்புதலைப் பெற்று,

[திரு. கே. என். குமாரசாமி]

அதற்கான காரணங்களை விளக்கி, தொழிலாளர்களிடம் சொல்லி சரியான முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமானால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. இரு தரப்புத் தொழிலாளர்களையும் கலந்து, அவர்கள் இணக்கத்தோடு இதைச் செய்திருக்குமானால், தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்கிற ஒரு ஒப்பந்தம் செய்யபட்டிருக்குமானால் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்காமல் தடுத்திருக்க முடியும். ஒரு ஒப்பந்தம் செய்யப்படுகிறது என்றால், அது தொழிலாளர்களுக்கு நலன் பயப்பதாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் விரும்பாத ஒரு ஒப்பந்தத்தை மெஜாரிட்டி தொழிலாளர்கள் மீது நிர்ப்பந்தமாகத் திணிப்பது என்பது நமது ஜனநாயகத்திற்கு ஒப்பான மரபு அல்ல.

ஆகவே, அந்த அடிப்படையில், சென்னை மாநகரத்தில், பெரிய மோதல்கள் நடக்கின்ற அளவுக்கு, தொழில் தகராறுகள், தொழில் அமைதியின்மை ஏற்பட்ட காரணத்தால், இன்னும் பரபரப்பு அடங்காத சூழ்நிலையில், சிலர் தொழிற்சாலையில் வேலை செய்வதும், சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதும் என்பது வருந்தத்தக்கது. அதுவும், இன்றைய சூழ்நிலையில், நாடு ஒரு ஆபத்தான கட்டத்தில் இருக்கின்ற நிலையில் இது மிகவும் வருந்தத் தக்கது. **எனவே அர**சாங்கம் இதுசம்பந்தமாகத் தலையிட வேண்டும். மெஜாரிட்டி தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கின்ற உரிமைகளும் பறி போகின்ற நிலையில் தொழிலாளர்கள் மன திருப்தியற்ற நிலையில் இருப்பதாக காணப்படுகிறது. அவர்களுக்கு மனத் திருப்தியை உண்டாக்குகின்ற அடிப்படையிலே ஏற்கெனவே அவர்கள் பெற்று வந்திருக்கின்ற உரிமைகள் மீண்டும் கிடைக்கின்ற வாய்ப்பை உண்டாக்குவதற்காகவும் அரசாங்கம் முயற்சிகள் எடுத்திருக்குமானால், நிச்சயமாக இப்படிப்பட்ட மோதல்கள் நடைபெற்றிருக்காது. ஆகவே, அரசாங்கம், இந்த சிம்சன் க்ரூப் சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய, தொழிலாளர்களுடைய முழுமனதான ஒப்புதலைப் பெற்று அதனை உருவாக்கும்படியான சூழ்நிலையை உருவாக்க, அரசு தலையிட்டு, இதற்கான ஒரு பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக இந்த மன்றத்தை ஒத்திவைக்க வேண்டும்.

நிச்சயமாக, இது ஒரு ஜனநாயகப் பிரச்னை என்ற அடிப்படையில், தொழிலாளர்கள் பெற்றிருக்கின்ற உரிமைகள் பறி போகாமல் இருக்கும் வகையில் அரசாங்கம் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதுவும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தான சூழ்நிலையில், அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, மேலும், மாநகரத்தில் பரப்பரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால், இதுசம்பந்தமாக அரசு தலையிட்டு ஒரு முடிவு காண்பதற்கு வழி வகைகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, இதை ஒரு ஜனநாயக முறையில் முடிவு காண்பதற்கு, அவையை ஒத்தி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, I have given notice of the following motion :—

'That the business of the House stands adjourned to discuss a matter of very urgent public importance, namely, the serious situation arising out of the prolonged strike by a group of the workers of the Simpson Group of Companies which has adverse effect upon the industrial peace of the State and the consequent reduction in the production level and the need to change the same in these days of grave national emergency.'

Mr. Speaker, Sir, I have moved this motion to discuss this matter as I feel that it is of very urgent public importance which has affected the level of production, the production that provides more or less wherewithal to run the machine of the warfare that we are now carrying on against a foreign aggressor. Now I stand to speak neither on behalf of industrialists nor on behalf of workers. I am here only to safeguard the interest of the Nation particularly at this critical juncture.

So far as the trouble that has given rise to the problem about which I seek to discuss in this House is concerned, the Hon. Chief Minister has put forth a very happy, suggestion indeed yesterday namely that all political parties should agree that the leadership of a particular union should emerge from that union itself. If that suggestion is accepted by all the parties concerned, there will be a good trend in the industrial activity. But what has happened in the Simpson Group of Companies and the trade unions connected with these companies is rather very very unfortunate. There are inter-union rivalries and political factions there. I do not want to go into the merits or demerits of the question and the political motivation behind it but I want to point out that at this juncture in order to achieve production level and to maintain production level to meet the requirements of the defence commitments of this country on account of the war situation, one would have expected that without being any compromise talk at all, all the people concerned would have come forward to settle the dispute. The industrialists and entrepreneurs should have immediately settled the dispute and the workers should have immediately returned to work as soon as the war was declared. That is what all sections of the community expect of them at this particular juncture. But in spite of the declaration of the war and in spite of the national emergency still the workers have not returned to work and the entrepreneurs have not come forward to have a talk with the workers and only in this way the responsibility of the Government is involved in this matter. In order to discuss the implications of this prolonged strike and its adverse effect upon the production level and the presence of the various inter-union rivalries, I request that the House should stand adjourned to discuss the serious situation arising out of that. Thank you very much.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, சிம்சன் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நெருக்கடியான ஒரு நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் இந்தியா மீது போர் தொடுத்திருக்கிறது. இந்த நெருக்கடியான நேரத்தில் உற்பத்திப் பொருள்கள் பெருக வேண்டும். ஆனால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்த சிம்சன் ஸ்தாபனம் இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. இதிலே அரசாங்கம் அவசரம் காட்டாமல் ஏதோ அறிக்கைகள், ஒன்றன் பின்னால் ஒன்றாக அறிக்கைகள், வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அறிக்கைகள் வெளியிடுவதில் பயனில்லை. அரசாங்கம் கட்டாயம் இதில் தலையிட்டு சுமுகமான முடிவு ஏற்படுத்த வேண்டும். அதை விட்டுவிட்டு இந்த அரசாங்கம்—குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் இதிலே அரசியல் இருக்கின்றது, அரசியல் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிம்சன் தொழிலாளர் தகராறில் ஈடுபட்டிருப்பவர்களெல்லாம் அரசியல்வாதிகள் அல்ல. அவர்கள் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவர்கள். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள மாற்றுக் கட்சியினரும் சில கம்பெனிகளும் இதிலே நல்ல முடிவு ஏற்பட வேண்டுமென்று முயற்சிப்பதனால் ஒரு வேளை அமைச்சர் அவர்கள் இதிலே அரசியல்வாதிகள் தலையீடு இருக்கிறது என்று கூறுகிறார் போலும். இம்மாதிரியான எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நல்ல முடிவுக்கு யார் முயற்சி செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நேற்று இந்த மன்றத்திலே கனம் முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்தார்கள். தொழிலாளர் மத்தியிலே செல்வாக்குள்ள ஒரு தொழிலாளியை அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும், எல்லா அரசியல் கட்சிகளும் அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல யோசனைதான். வரவேற்கிறேன். ஆனால் தொழிலாளர்கள் அந்த அளவுக்குப் பக்குவப்பட்டிருக்கிறார்களா ? அல்லது அரசியல்வாதிகள்தான் அந்த அளவுக்குப் பக்குவப்பட்டிருக்கிறார்களா என்றால் இல்லையே.

தொழிலாளர் மத்தியிலே அவர்கள் செல்வாக்கைப் பெற்ற ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தால் முதலிலே அந்தத் தலைவர் பழிவாங்கப்படுகிறார்கள், பின் அந்தத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். இம்மாதிரி முறைகளிலே இன்று என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால் பழி வாங்கும் படலம் வளர்ந்து வருகிறது. அவ்வளவுதான்.

சிம்சன் தொழிலாளர் பிரச்சினையில் உடனடியாக ஒரு நல்ல முடிவு ஏற்படவில்லையானால், அது இந்தத் தேசத்திற்கும் ஒரு பெரிய கேடாக முடியும். சிம்சன் தொழிலாளர்கள் 18 ஆயிரம்







பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் "இப்போது இருக்கின்ற தலைவரை மாற்றுங்கள். வேறு தலைவரைத் தேர்ந்தெடுக்க எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்" என்று சொல்கிறார்கள். அதற்கு அமைச்சரவர்கள் "சட்டம் இருக்கிறது, விதி இருக்கிறது, நியதி இருக்கிறது, அதை மீறி எப்படி மறு தேர்தல் நடத்துவது என்று சொல்கிறார்கள்.

நமது அரசியல் சட்டத்தையே நினைத்தபோது மாற்றும்போது இந்த சாதாரண தொழிலாளர் நலச் சட்டத்தை மாற்றுவதா கடினம்? உண்மையிலேயே தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்ட அரசாக இருந்தால் இந்த அரசு ஏன் அதைச் செய்யக் கூடாது? மார்ச்சு மாதத்திலே நடத்தக்கூடிய தேர்தலை டிசம்பரிலே நடத்தினால் என்ன கெட்டுப்போய் விடும்?

இந்த மன்றத்திலே நீங்கள் 130 பேர் இருந்தும் ஃபுல் மெஜாரிட்டி இருந்தும், 1972-ல் நடக்க வேண்டிய தேர்தலை 71லே நடத்தவில்லையா? ஃபுல் மெஜாரிட்டி இருந்தும் சட்ட சபையைக் கலைத்து விட்டு, மறு தேர்தல் நடத்தினார்கள். ஆனால் 18 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கின்ற சிம்சன் தொழிலாளர் தலைவர் தேர்தலை அந்த 18 ஆயிரம் தொழிலாளர்கள் விரும்பாத தலைவரை மாற்றி புதுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க தொழிலாளர் சட்டத்தைத் திருத்த முடியாதா? இப்போது அரசாங்கத்தின் அறிக்கைப்படி பார்த்தாலும் அந்தத் தொழிற்சாலையில் இரண்டாயிரம் பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். மீதியுள்ள 16 ஆயிரம் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. இதனால் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியாதா? தெரிந்திருந்தும் ஏன் காலதாமதம் செய்ய வேண்டும்? இந்தக் காரணங்களால் தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கு சுறுசுறுப்பு போதாது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

விரும்பத்தகாத தலைவராக இருந்தால் ஏன் மாற்றக்கூடாது? தொழிலாளர்களே தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுத்தால் என்ன? தொழிலாளர் தலைவரை ஏன் சில பிரதிநிதிகளைக்கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும்? அந்த வகையில்தானே காட்டூர் கோபால் வந்திருக்கிறார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவரைத் தேர்ந்தெடுத்த மெம்பர்களைக் கொண்ட கவுன்சிலைக் கலைத்துவிட்டார். அந்தக் கவுன்சிலிலே புதிய மெம்பர்களை நியமித்துக்கொண்டார். அதற்குப் பின்னால் வந்ததுதான் இந்த ஒப்பந்தம். தொழிலாளர்களுக்குத் தெரியாமலே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இது. அதனால்தான் சொல்கிறேன், இங்கே ஜனநாயகம் மீறப்பட்டிருக்கிறது என்று. ஜனநாயகத்தைக் காப்பாற்றத்தான் சிம்சன் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அம்மையார் அவர்கள் ஒப்பந்தம், ஒப்பந்தம் என்று சொன்னார்கள். எந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது? எந்த ஒப்பந்தம் மீறப்பட்டது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** திரு. காட்டூர் கோபால் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார். சென்ற ஆண்டு 23 நாட்கள் குறைவாக வேலை செய்யப்பட்டிருக்கிறது. அதை ஈடு செய்ய ஒவ்வொரு சனிக்கிழமையும் வேலை செய்ய வேண்டும். அப்படி சனிக்கிழமையில் செய்வதற்கு ஓவர் டைம் அலவன்ஸ் கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஓவர் டைம் கிடையாது என்பது தவறு. ஓவர் டைம் உண்டு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஓவர் டைம் கிடையாது என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அது எனக்கு நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அம்மையார் அவர்களுக்கு அந்த ஒப்பந்தம் எப்படித் தெரிய வந்தது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 'சங்கநாதம்' என்ற பத்திரிகையிலே அந்த ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையைப் படித்துவிட்டுத்தான் சொல்கிறேன். அது காட்டூர் கோபால் அவர்களே வெளியிடும் பத்திரிகை. அந்தப் பத்திரிகை வேண்டுமென்றால் கொடுக்கிறேன்.

எனவேதான் சிம்ப்ஸன் தொழிலாளர்கள் இந்தத் தலைவரை மாற்றவேண்டும் என்று போராடுகிறார்கள். இந்தத் தலைவரை மாற்றினால் வேலைக்குப் போவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது? ஒருவர் காதைப் பிய்த்துவிட்டார்கள். ஆர்.வி. நகருக்குச் சென்று நாளைக்கு வேலைக்கு வராவிட்டால் குத்தி விடுவோம் என்று பெண்டு பிள்ளைகளை மிரட்டுகிறார்கள். கம்பெனி வாசலிலேயே ஒருவர் குத்திக் கொல்லப்படுகிறார். இதை எல்லாம் போலீஸ் பார்த்துக்கொண்டிருக்கிறது. மாணவர்கள் கிளர்ச்சியை அடக்க மிகத் துரிதமாக வேலை செய்த போலீஸ் இப்போது ஏன் இந்தக் கொலைகளைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறது என்று தெரியவில்லை. ஒரு பெரிய தொழிற்சாலையில் வேலை செய்கிற தொழிலாளர்களில் பெரும்பாலோர் தங்களுடைய தலைவரை மாற்றி அமைத்துக் கொண்டாக வேண்டும் என்றால் அமைத்துக் கொள்ள ஏன் அனுமதிக்கக் கூடாது ? இதைவிட அவசரப் பிரச்சினை, அத்தியாவசியப் பிரச்சினை என்ன இருக்கிறது? வேலைக்குப் போகாமல் இருந்தாலும் பயமாக இருக்கிறது, போவதற்கும் பயமாக இருக்கிறது. குத்திக் கொல்லப்படுகிறார்கள், என்ன செய்வது என்று தெரியாமல் தெருவில் அல்லாடிக் கொண்டிருக்கிற நிலையில் அரசு இதில் அரசியல் இருக்கிறது, இதில் அரசியல் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை



[திருமதி த. ந. அனந்தநாயகி]

இன்றைக்கு நாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஒரு ஆபத்தான, அவசர நிலையில்—அரசாங்கம் உடனடியாக சிம்ப்சன் க்ரூப் தொழிற் சங்கத் தலைவரை மாற்றி—வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து—உடனடியாக தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி வேலை செய்யக்கூடிய நிலையைத்தான் உருவாக்க வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையில் அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கு நலம் அளிக்க வேண்டுமென்று சொல்லி தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அவைத் தலைவர் அவர்களே, சிம்ப்சன் க்ரூப் கம்பெனி பிரச்சினைபற்றி பல தலைவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துக்களை நோக்கும்போது—நான் சொல்வதற்கு அவர்கள் வருத்தப்படக் கூடாது—சென்னையில் சில இடங்களில் யாராவது ஒருவர் தெருக் கோடியில் குனிந்து கொண்டு எதையோ பார்ப்பார். தெரு வழியாக போகிறவர்கள் ஒவ்வொருவராக அங்கே நின்று பார்க்க ஆரம்பிப்பார்கள். பெரிய கூட்டம் சேர்ந்து விடும்—முதலில் தரையைப் பார்த்தவர் ஒன்றும் இல்லை என்று நழுவி விடுவார். ஒவ்வொருவராக மற்றவர்களும் அங்கே ஒன்றுமில்லை என்று சொல்லி ஏமாற்றம் அடைந்து திரும்பிவிடுவார்கள். இப்படி வேடிக்கை நடப்பதை சென்னையில் பார்க்கலாம். அதுபோல சிம்சன் கம்பெனி விஷயம் என்னவென்று தெரியாமல் சிலர் அரசாங்கத்தின் மீது குறை சொல்வதற்கு முன்வந்தது கண்டு நான் வருந்துகிறேன். தேசிய பாதுகாப்புப் பிரச்சினை பற்றி அரசாங்கத்தைச் சார்ந்துள்ள கட்சிக்கும் எவ்வளவு பொறுப்புள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இங்கே நமது அம்மையார் பேசும்போது பதினெட்டாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த விவரமே அடிப்படையில் கோளாறு. சிம்சன் கம்பெனியில் சென்னைக்கு அடுத்த ஊர்களிலும்—அடுத்த மாநிலங்களிலும் இருப்பவர்களையும், சென்னையில் இருப்பவர்களையும் சேர்த்தே 15,757 தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். (திருமதி த. ந. அனந்தநாயகி குறுக்கீடு) போர்க் காலத்தில் செய்தியைத் தவறாகக் கூறினால் அதுவே பெரிய குற்றமாகலாம் என்பதை திருமதி அனந்தநாயகி அவர்களுக்குக் கூறுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிம்சன் கம்பெனியில் 15,757 பேர் வேலை செய்கிறார்கள் என்பதாக குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சரால் சொல்ல முடியும். எங்களைப் பொறுத்தவரை—குத்து மதிப்பாக 18 ஆயிரம் பேர்கள் என்றால் அதில் என்ன குற்றம் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீட்டி முழக்கிப் பேசுவது நல்லதல்ல. அப்படி நடித்துப் பேசுவதற்கு எல்லோருக்கும் தெரியும். அவர்கள் சொன்னது வெளியில் உள்ளவர்களையும்

[டாக்டர் மு. கருணாநிதி]

சேர்த்து பதினைந்தாயிரம் சொச்சம்தான். சென்னையில் மட்டும் பத்தாயிரம் பேர்கள் இருக்கலாம். எட்டாயிரம் குட்டி போட வேண்டாம் என்று அவர் குறிப்பிட்டார்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏதோ சொன்னார்கள். நான் ஒரு உதாரணம் சொல்வது பொருத்தமாக இருக்கும். இறந்தவர்கள் வீட்டுக்கு துக்கம் விசாரிக்க சிலர் போவார்கள். இறந்தவர்கள் வீட்டில் உள்ளவர்கள் அழுவதைவிட துக்கம் விசாரிக்கப் போனவர்கள் அதிகமாக அழுது கொண்டே இருப்பார்கள். இறந்தவர்களை எண்ணி அல்ல—அவர்களுடைய பழைய இழப்பைப்பற்றி எண்ணி ஓயாமல் அழுவார்கள்—அப்படி இந்தப் பிரச்சினையில் பேச வேண்டியவர்கள் பேசுவதைவிட அம்மையார் போன்றவர்கள் அதிகமாகப் பேசுகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படி அரசாங்கமும் அழுது கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அழ வேண்டிய பஞ்ச நிலையில் நாங்கள் இல்லை. இது தொழிலாளர் அரசு என்பதை எதிர்க் கட்சித் தலைவருக்கு நான் உறுதியாகக் கூறுகிறேன்.

**திரு. எம்., ஏ. லத்தீப் :** இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவர் என்று இல்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** காங்கிரஸ் கட்சித் தலைவருக்குத்தான் சொன்னேன். மொத்தம் 15.757 பேர்களில் சென்னைக்கு வெளியில் வேலை செய்கிறவர்கள் 3,004 பேர்கள். செம்பியத்தில் வேலை செய்கிறவர்கள் 7,875 பேர்கள்—மவுண்டு ரோடு நிறுவனத்தில் வேலை செய்கிறவர்கள் நாலாயிரம் சொச்சம் பேர்கள் தான். ஆக 18 ஆயிரம் பேர் வேலை நிறுத்தம் என்பதற்கு இடமே இல்லை.

அதைப்பற்றிக் கூடக் கவலையில்லை. அரசாங்கம் தன் கடமையைச் செய்யவில்லை என்பதாக பழுத்த தொழிற்சங்கத் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி சொல்லும்போதுதான் மனது சங்கடமாக இருந்தது. அரசாங்கம் இதில் எவ்வளவு அக்கறை காட்ட வேண்டுமோ அவ்வளவு அக்கறை காட்டி வருகிறது. இப் பிரச்சினையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று அடிசன் கம்பெனியைப் பற்றியது. மற்றொன்று இராம விலாஸ் சர்வீஸ் பற்றியது. மூன்றாவது சிம்ப்சன் க்ரூப் பற்றியது. மூன்றிலும் தனித்தனிப் பிரச்சினை. அடிசன் கம்பெனியைப் பொறுத்தவரை போனஸ், பஞ்சப்படி சம்பந்தமானது. இராம விலாஸ் சர்வீசில் 98 பேர்களை ஆட்குறைப்புச் செய்தார்கள் என்பதுதான் பிரச்சினை. செம்பியத்திலுள்ள சிம்சன் குரூப்பில் தான் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்; தொழிற்சங்கத் தலைவரை மாற்ற வேண்டும் என்பதாகும்.





[திரு. என். வி. நடராசன்]

தொழிற்சங்கத் தலைவரை மாற்றுவது அரசாங்கத்தின் வேலையா என்பதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். நான் ஒரு தொழிற்சங்கவாதி. தொழிற் சங்கத் தலைவரை மாற்றுகிற உரிமையை அரசாங்கத்தினிடத்தில் கொண்டு போய் தொழிலாளர், தலைவர்கள் கொடுத்துவிடக் கூடாது என்பதாக நான் ஆளும் கட்சியில் இருந்தாலும் தொழிலாளர்களின் நலனை எண்ணி அவர்களுக்குச் சொல்லி வருகிறேன்.

அதுவும் சிம்சன் கம்பெனி ஒப்பந்தம் கூட 23–8–71, 26–8–71 ஆகிய நாட்களில் ஏற்பட்டது. அதுபற்றி எப்போது கேள்வி எழுந்தது ? நவம்பர் மாதத்தில் 2 மாதம் இடையே இந்தக் கேள்வி இல்லை. அதற்குப் பதிலாக அக்டோபரில் எப்போதும் செய்யாத அளவுக்கு உற்பத்தியைத் தொழிலாளர்கள் அதிகப்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஒப்பந்தத்திலே கோளாறு என்றால் இந்த 2 மாதம் என்ன செய்தார்கள் ?

மேலும் லாபம் இன்னது என்றே விரிவாக அறிய முயற்சிக்காமல் பேசுகிறார்கள். இந்த அரசு முதலாளி அரசு அல்ல—முதலாளித்துவத்தைச் சிறுகச் சிறுகக் குறைத்து சமதர்ம வாழ்க்கை முறை அமைய வேண்டும் என்று விரும்புகிற ஒன்றாகும்.

ஆகவே சென்ற ஆண்டு கிடைத்த லாபம் என்ன, போனஸ் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். 1969-70-ல் சிம்சன் கம்பெனிக்கு லாபம் 103 லட்சம். போனசாகக் கொடுத்தது 27 லட்சம். 1970-71-ல் கிடைத்த லாபம் 56 லட்சம். போனஸ் 16 லட்சம். அடிசன் கம்பெனிக்கு 1969–70-ல் கிடைத்த லாபம் 23 லட்சம். போனசாகக் கொடுத்தது 7.8 லட்சம். அதேபோல் 1970-71ல் கிடைத்த லாபம் 18 லட்சம். போனஸ் 6.3 லட்சம். இப்படிச் சென்ற ஆண்டைப் பார்க்கும்போது 3 கோடி 61 லட்ச ரூபாய் லாபத்திற்குக் கொடுத்த போனசோடு, இந்த ஆண்டு கிடைத்த 226 இலட்ச ரூபாய் லாபத்திற்குக் கொடுத்த போனஸ் ஓரளவு அதிகமாகத்தான் இருக்கிறது—இதை சிம்சன் கம்பெனி தொழிற்சங்கத் தலைவர் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டிருக்கிறார். இதை மற்றவர்களும் கூர்ந்து பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். எனவே போனஸ் அக்ரிமெண்டில் குறை கூறுவதற்கு வேறு என்ன காரணம் என்பது தெரியவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 1968–69-ல் கிடைத்த மொத்த லாபம் என்ன, கொடுத்த போனஸ் எவ்வளவு, 1969-70-ல் கிடைத்த மொத்த லாபம் என்ன, கொடுத்த போனஸ் எவ்வளவு, அதேபோல 1970-71-க்கான கணக்கையும் சொல்லும்படியாக நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்த விவரம்தான் உங்களுக்குத் தவறாகத் தரப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 3 கோடி ரூபாய் லாபம். இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய் லாபம். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு பத்து பர்சென்ட் அதிகமாக போனஸ் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விபரங்களை

[திரு. என். வி. நடராசன்]

எடுத்துச் சொன்னவுடனே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களோடு வந்த குழுவினர், 'போனஸ் பிரச்சினை இருக்கட்டும், தலைவரை மாற்றுங்கள்' என்றார்கள். தலைவரை எப்படி நாம் மாற்ற முடியும்? நான் உடனே, "தேர்தலுக்கு நீங்கள் தயாராக இருங்கள், எப்போது சங்கத்தின் தேர்தல் வருகிறதோ அப்போது தலைவரை மாற்றிக் கொள்ளுங்கள். மார்ச் மாதம் தேர்தல் வருகிறது. அதுவரை சற்று பொறுத்திருங்கள்" என்று கூறினேன். தலைவரை மாற்ற வேண்டுமென்றால் தேர்தல் மூலம் மாற்றலாம், இல்லாவிட்டால் தலைவரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து தலைவரை விலக்க வேண்டும். அப்படிச் செய்வது தான் முறையாக இருக்கும். இதில் அரசியல் கலந்திருக்கிறது, ஆகையால்தான் அரசாங்கம் முன்வந்து தலைவரை மாற்ற வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள் வேலைக்குப் போனால் அவர்களைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்களே இதில்தான் அரசியல் கலந்திருக்கிறது. எனவே முறைப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு தொழிற் சங்கத்தின் தலைவரை அரசாங்கம் நீக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அடிசன் பிரச்சினை. சிம்சன் கம்பெனியைப் போல 11.6 சதவிதம் என்ற அளவில் போனஸ் தர மானேஜ்மெண்டார் முன்வந்தார்கள். ஆனால் தொழிற்சங்கத் தலைவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கணக்குப்படி தரவேண்டியது 4 பர்செண்ட் போனஸ்தான் என்றும், ஆனால் 11.6 சதவீத போனஸை தர மானேஜ்மெண்ட் தயாராயிருப்பதாகக் கூறினார்கள். வன்செயலில் ஈடுபட்ட 103 பேர் மீது நடவடிக்கை எடுப்போட என்று நிர்வாகிகள் வலியுறுத்தினர். ஆனால் தொழிற்சங்கத் தலைவர் தொழிலாளர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்கிறார். 1½ மாதச் சம்பளம் தொழிலாளர்களுக்குத் தந்து விடுகிறோம். மற்றவைகளை கோர்ட் முடிவின்படி செய்கிறோம் என்கிறது மானேஜ்மெண்ட். 103 பேர் மீது நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் நிர்வாகிகளைக் கலந்து பேசி ஆவன செய்ய முயற்சிக்கிறோம் என்று அரசாங்கச் சார்பில் தெரிவிக்கப்பட்டது. நாங்கள் சொன்ன ஏற்பாடுகளை ஐ.என்.டி.யு.சி. தலைவர் திரு. ரங்கசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டார். ஆனால் முடிவாக அடுத்த நாள் வந்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார். அடுத்த நாள் அவர் வந்து, 'இது நியாயமான ஏற்பாடு என்றுதான் எனக்குத் தெரிகிறது. ஆனால் தொழிலாளர்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை' என்று சொன்னார்.

நேற்றைய தினம் வேறொரு நண்பரை அணுகி ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று தொழிற்சங்கத் தலைவர் கூறியதாகத் தெரிய வருகிறது. நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், தொழிலாளர்கள் நாளைக்கே வேலைக்குப் போகட்டும், 103 பேர் மீது நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில்



[திரு. என். வி. நடராசன்]

நல்ல முறையிலே தீர்வு காணப்படும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே அடிசன் கம்பெனித் தொழிலாளர்கள் நாளைய தினமே வேலைக்குப் போகத் தயாரா?

எஸ்.ஆர்.வி.எஸ். ஐப் பொறுத்தவரையில் மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி, திரு. அந்தோணிப் பிள்ளை, திரு. குசேலர், திரு. மணிவர்மா, திரு. நாராயணன், ஆகிய எல்லோரும் இந்தப் பிரச்சினைப் பற்றி என்னிடம் பேசினார்கள். நிறுத்தப்பட்ட 123 பேருக்கும் ஒரே நாளில் வேலை தர முடியாது. சிம்சன் குரூப்பில் எங்கெங்கு வேலை வாய்ப்பு வருகிறதோ அங்கெல்லாம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அவ்வப்போது அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் முயற்சியை மேற்கொள்ளும் என்று கூறினேன். நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்று தொழிற்சங்கத் தலைவர்கள் கூறினார்கள். தொழிலாளர்கள் நாளைக்கே வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறார்களா என்று நான் அவர்களிடம் கேட்டேன். வந்த தலைவர்கள் இரண்டு நாட்கள் தவணை கேட்டார்கள். திரு. கே. டி. கே. தஙகமணி அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் எதுவும் செய்யவில்லை என்கிறார்களே, அரசாங்கம் செய்ததற்கு நன்றி காட்டுவது இல்லையென்றாலும், செய்ததை மறந்து விடுகிறீர்களே என்பதை வருத்தத்துடன் அவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இப்போதும் கூறுகிறேன். தொழிலாளர்கள் நாளைக்கே வேலைக்குப் போகட்டும், பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்பதை அரசின் சார்பில் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த மூன்று பிரச்சினைகளிலே அரசாங்கம் திட்டவட்டமாகவும் அக்கறையுடனும் நடந்து கொண்டிருக்கிறது. தொழில் தகராறுகள் என்னிடத்தில் வருகிறபோது நான் அமைச்சர் என்ற முறையில் மட்டும் அணுகுவதில்லை. நான் ஒரு தொழிற்சங்கவாதி என்ற முறையில்தான் அணுகுகிறேன். நான் சுற்றுப் பிரயாணம் செய்யும்போதுகூட, சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, சில பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கிறேன். இதில் அரசுக்கு வரட்டு கௌரவம் ஒன்றும் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, யார் வரட்டு கௌரவத்தில் இருக்கிறார்கள்? அமைச்சர் அவர்கள் 'வரட்டு கௌரவத்தில் இருக்கிறார்கள்' என்று சொல்கிறார்களே, யார் அப்படி இருக்கிறார்கள்? இது எப்படி பார்லிமெண்டரி வார்த்தையாகும்?

**திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் ஆத்திரப்படுவதன் மர்மம் புரியவில்லை. (ஆளும் கட்சித் தரப்பில் கர ஒலி).

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சொல்லியவர்கள் சும்மா இருக்கிறார்கள். அம்மையார் அவர்களுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம் வருகிறது? ஒருவேளை குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுப்பாக இருக்கும் என்று சொல்வார்களே அது போல. . .

THIRU R. PONNAPPA NADAR : Is it not an insinuation, with due respect to the Hon. Minister?

THIRUMATHI T. ANANDANAYAKI : There should not be any insinuation against anybody. Let the Hon. Minister say things openly, if he wants to talk. Why should he be afraid of it?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, யாரையும் மனம் புண்படுத்தும் பேச்சே அல்ல. வார்த்தைகளைக் கொட்டிவிட்டு, வாங்கிக் கட்டிக்கொள்ளுவது எங்களுடைய வழக்கமும் அல்ல. உண்மைகளை உள்ளத்தில் நினைத்துப் பார்க்கவில்லையென்றால் என்ன பொருள்? இந்தப் பிரச்சினைகளில் உங்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருக்குமானால் விவரங்களைக் கேட்டறிந்திருக்கலாம் அல்லவா? அல்லது என்னையே கேட்டிருக்கலாம் அல்லவா? விவரங்களை அறிந்து கொள்ளாமல் பேசுவது எந்த வகையில் நியாயம்?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, யாரையும் கேட்காமல், விவரம் அறியாமல் பேசுகிறார்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்களை பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டுவது நல்லது அல்ல. நீங்கள் எப்படி விவரம் கேட்டீர்களோ அப்படியேதான் நாங்களும் கேட்டோம். எதிர்க் கட்சி சொல்வதால், எதிர்க் கட்சி என்பதால், உண்மை இருக்காதா? எதிர்க் கட்சியினர் ஒன்றும் புரியாமல் பேசுகிறார்கள் என்று சொல்வது சரியா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஏதோ நாமும் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள். இதில் உங்களுக்கு அக்கறை இல்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I strongly protest against the statement.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுக்களைக் கூறுவது பொருத்தமல்ல என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சிக்கு எந்தவிதமான அக்கறையும் இல்லையென்றும், அக்கறை என்பது ஆளும் கட்சிக்குத்தான் குத்தகையாக வந்திருக்கிறது போலவும் பேசுவதைக் கண்டு நாங்கள் வியப்படைகிறோம். இந்தமாதிரியான வார்த்தைகளை அமைச்சர் அவர்கள் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கு நிறைய அக்கறை இல்லாவிட்டால் சத்தியமூர்த்தி பவனத்தில் இந்தக் கூட்டங்கள் எல்லாம் நடைபெறுமா? இந்தக் கிளர்ச்சிகள் நடைபெற வேண்டுமென்பதில் காங்கிரஸ் கட்சிக்கு நிச்சயமாக அக்கறை இருக்கிறது. இடதுசாரி கட்சியினர்



கூட்டம் போட்டு அரசைத் தாக்கிப் பேச சத்தியமூர்த்தி பவனத்தில் இடம் அளித்திருக்கிறார்கள் அல்லவா? இதில் காங்கிரஸ் கட்சிக்கு அக்கறை இல்லையென்று சொல்ல முடியுமா? மாண்புமிகு திரு. என்.வி.என். அவர்களுக்குப் பதிலாக நான் அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெறுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இடதுசாரி கம்யூனிஸ்டுகள் சத்தியமூர்த்தி பவனில் ரகசியக் கூட்டம் எதையும் நடத்தவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். அவர்கள் ரகசியமாகக் கூட்டம் போடவில்லை, பகிரங்கமாகவே கூட்டம் போட்டுப் பேசி இருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இடதுசாரி கம்யூனிஸ்டுகள் முன்பு உங்களோடு உறவு கொண்டாடினார்கள். ஒருவேளை இப்போது உறவு முறிந்துவிட்ட காரணத்தினால் அவர்கள் மீது இந்தக் கோபாவேசம் ஏற்பட்டிருக்கலாம். கூட்டம் போடுவதிலோ, அவர்களுக்கு இடம் தரப்பட்டதிலோ எந்தவிதமான தவறும் இருக்க முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நானும் அதைத்தான் சொல்கிறேன். உங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டேன்.

தலைவர் அவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய அனைவருமே நாட்டின் நெருக்கடியை மறவாமல் அதை எடுத்துச் சொல்லி, இந்த நேரத்திலே இப்படியொரு சம்பவம், ஒரு நிகழ்ச்சி நடைபெறாமல் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கட்சிக்காரர்கள் எல்லோருமே அரசை ஒரு நெருக்கடியான நிலைக்கு ஆளாக்க வேண்டுமென்று கருதினார்கள் என்று கூற முடியாது. பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு பேசுவது என்பது வேறு; பிரச்னைகளைப் புரிந்து கொள்ளாமல் பேசுவது என்பது வேறு. புரிந்து கொண்டு வேண்டுமென்றே மறைத்துப் பேசுவது வேறு. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு இந்த அவையிலே பேசிய யாரும் உட்படுகிறார்கள் என்று நான் கருதவில்லை.

சிம்சன் தொழிலாளர் தகராறைப் பொறுத்த அளவிலே கடந்த சில நாட்களாகவே மிக முக்கியமான முறையீடாக வைக்கப்படுவதும், நிறைவேற்றித்தான் தீரவேண்டுமென்று கூறப்படுவதுமான

பிரச்னை அந்த யூனியனுடைய தலைவர் மாற்றப்பட வேண்டுமென்பதாகும். யூனியன் தலைவரை மாற்றுவது என்பது அரசாங்கத்தினுடைய வேலையல்ல என்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். யூனியன் தலைவரை மாற்ற வேண்டும், ஏற்கெனவே இருக்கின்ற தேர்தல் முறைகளை மாற்ற வேண்டுமென்றால் அனைவரும் கூடி யோசித்து மாற்ற வேண்டும். இதற்காக நேற்றைய தினம் நான் ஒரு யோசனையை வெளியிட்டேன். அதை இங்கேயிருக்கின்ற எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அம்மையார் பேசுகின்ற நேரத்திலே அவர்கள் அதை ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

வெளியார் தலைவராக இருக்கின்ற காரணத்தினால்தான்—அது எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சரி—ஒன்றை நாம் கவனிக்க மறந்துவிடக் கூடாது, வெளியார் ஒருவர் தலைவராக இருக்கும்பொழுது அதே இடத்திலே இன்னொரு வெளியார் தான் எப்படியாவது அந்த இடத்தைப் பெற வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடுகிறார். சற்று நேரத்திற்கு நாம் சிம்சன் விவகாரத்தை மறந்துவிடுவோம். பொதுவாக நாட்டிலேயுள்ள எந்த யூனியனாக இருந்தாலும் எந்தத் தொழிற்சாலையிலுள்ள யூனியனாக இருந்தாலும், தொழிற் கிளர்ச்சிகள் எப்படி ஏற்படுகின்றன என்றால்—உள்ளபடியே முதலாளிகளின் ஆதிக்கத்தால், முதலாளிகள் தரவேண்டிய, நியாயமானவற்றைத் தராத காரணத்தினாலே ஏற்படுகின்றன—சில பல இடங்களிலே கிளர்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணம் ஒரு யூனியன் தலைவர் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்கிறார் என்றால், இதை இன்னொரு யூனியன் தலைவர் செல்வாக்குப் பெறுவதற்குக் பயன்படுத்திக்கொள்கின்ற முறையிலே, அந்த யூனியன் தலைவர் செய்து கொண்ட ஒப்பந்தம் சரியானதல்ல, நீங்கள் எல்லாம் என் தலைமையிலே கூடினால் அவர் பத்து வாங்கிக் கொடுத்தால், நான் பதினைந்து வாங்கிக் கொடுப்பேன் என்று சொல்வார்.

தொழிலாளர்களுக்கு எவ்வளவு அதிகமாக லாபம் கிடைக்கிறதோ அவ்வளவும் லாபம். நான் தொழிலாளர்களைக் குறைத்துப் பேசவில்லை. தொழிலாளர்கள் வியர்வை சொட்டச் சொட்ட, இரத்தம் சுண்டச் சுண்ட, எலும்பு ஒடிய ஒடியப் பாடுபட்டுப் பெறுகின்ற மாதாந்திர ஊதியம் எவ்வளவு என்று பார்த்தால் நம்முடைய நாட்டு நிலைமைக்கு, நாடு இருக்கின்ற பொருளாதாரச் சூழ்நிலையில் அது மிக மிகக் குறைவுதான். பத்து ரூபாய் அதிகமாகக் கிடைக்குமென்று ஒப்பந்தம் செய்துவிட்டால், தொழிலாளர்களை வெகு சுலபமாக இன்னொரு தலைவர் தன் பக்கம் இழுக்கின்ற தன்மையில் நான் 15 ரூபாய் வாங்கித் தருவேன் என்று சொல்லும்பொழுது தொழிலாளர்கள் அவர் பக்கம் போகிற அளவுக்கும் இருக்கிறது.

ஒரு தொழிற்சாலை என்றால் அதிலே ஒரே யூனியன்தான் இருக்க வேண்டும். அந்த யூனியனுக்கு ஒரு தலைவர்தான் வரவேண்டும். தலைவர் வெளியிலிருந்து வருவோராக இருக்கக் கூடாது. அந்தத்



தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் பெரும்பான்மையாக யாரைத் தேர்ந்தெடுக்கின்றார்களோ அவர்தான் தலைவராக வர வேண்டும், அந்தத் தலைவர்தான், அந்தத் தலைவரின் கீழே இருக்கின்ற அமைப்புத்தான், அந்த யூனியன்தான் அந்தத் தொழிற்சாலையிலே பணி புரிகின்ற தொழிலாளர்களுக்குத் தேவையான உரிமைகளை எடுத்துச் சொல்லவும், முறையீடுகளை எடுத்துச் சொல்லவும் ஒப்பந்தம் ஏற்படுத்தவும் உரிமை படைத்ததாக இருக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால், தொழில் தகராறுகள், தொழில் இடர்ப்பாடுகள் ஏற்படும்பொழுது எந்தக் கட்சியாக இருந்தாலும் இடையிலே புகுந்து தங்களுடைய லாபத்தைக் கருதுகிற தன்மை ஒழிக்கப்பட்டுவிடும் என்ற பரந்த நோக்கத்தோடு நான் சொன்னேன்.

ஏன் ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமே யூனியன் வைத்திருக்கிறது என்று கேட்கலாம். டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல்—திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட பல நாட்களாகத் தொழிற் சங்கங்களிலே வெளியார் தலையீடு இருக்கக் கூடாது, அந்தந்தத் தொழிற்சாலைகளிலே உள்ளவர்கள்தான் தலைவராக வரவேண்டுமென்று எடுத்துச் சொன்னது. தொழிற் சங்கங்கள் எவையும் அதைக் கேட்காத காரணத்தினால், அரசியல் கட்சிகள் அந்தக் கொள்கைக்குச் செவி மடுக்காத காரணத்தினாலேதான்—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கமும் நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நான் அண்மையிலே பார்த்தேன்—டாக்டர் ஹாண்டே அவர்கள் சிம்சன் விஷயமாக அறிக்கை தந்தார்கள், அதிலே இரண்டறக் கலந்து மேடையிலே பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தேன், தனியாக சுதந்திராக் கட்சியின் சார்பாக ஆரம்பிக்க இருப்பதாகப் பார்த்தேன். சொல்லச் சொல்லக் கேட்காத காரணத்தினால் மற்றவர்களும் ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்கவும் தொழிற்சாலைகளிலே நிம்மதியான நிலைமை ஏற்படவும் நல்லதொரு முடிவை எடுத்துக் கொள்ளலாம். இதை சிம்சன் தகராறோடு குழப்ப வேண்டாம் என்று சொன்னார்கள், நானும் குழப்பவில்லை. இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை மறுநாள் அரசியல் கட்சித் தலைவர்கள் அமர்ந்து ஆலோசித்து முடிவுக்கு வந்துவிட்டால் அதைச் சட்டமாகச் செய்து மத்திய அரசின் ஒப்புதலோடு சட்டமாக்கிவிட்டால் தொழிற்சாலைகளிலே வெளியார் தலையீடு இருக்காது. எனவே இதை எனது வேண்டுகோளாக எடுத்துக் கொண்டு நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்று மீண்டும், மீண்டும் கட்சித் தலைவர்களை மிகுந்த பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிம்சன் விவகாரத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற 18 நிறுவனங்களில் ஒப்பந்தப்படி போனஸிலே என்ன குறைந்துவிட்டது என்று பார்த்தால், அடிஸன் பெயின்ட்ஸில் 4 சதவீதம்

[டாக்டர் மு. கருணாநிதி]

என்ற விதத்தில் 1,21,318 ரூபாய் பெறவேண்டிய நிலையில் 8.6 சதவீதம் என்ற அளவில் 2,37,288 ரூபாய் அங்கே பெறுகிறார்கள். அம்கோ பேட்டரியில் 20 சதவிகிதம் என்ற அளவில் 7,48,147 ரூபாய் பெறவேண்டியிருக்கிறது. ஆனால் 28 சதவிதம் என்ற வீதத்தில் 9,86,926 ரூபாய் போனஸ் பெறுகிறார்கள். மைமெட்டல் பேரிங்சில் 2,48,488 ரூபாய் பெறவேண்டியிருக்கிறது, ஆனால் 3,27,677 ரூபாய் பெறுகிறார்கள். இப்படி 18 இடங்களிலும் பெற வேண்டியதற்கும் அதிகமாக போனஸ் பெற்றிருக்கிறார்கள். 1969–70-ம் ஆண்டில் சிம்ஸனில் லாபம் 103 லட்சம் ரூபாய் என்றால் போனஸ் 27 லட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள்.

முற்பகல் 11-00 1970-71-ல் இந்த ஆண்டு லாபம் 56 லட்சம் ரூபாய் என்றால் போனஸ் 16 லட்சம் என்று பெற்றிருக்கிறார்கள். அடிசனில் 23 லட்சம் 69-70-ல் என்றால் 7.8 லட்சம் ரூபாய் போனஸாகப் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 16 லட்சம்தான் என்றால் 6.3 லட்சம் போனஸாகப் பெற்றிருக்கிறார்கள்.

ஆகவே, ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும், ஒப்பந்தத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னால் இதைவிட அவர்கள் பெறுகிற போனஸைக் குறைவாகப் பெறுவதற்காக மாற்றுவதா அல்லது அதிகமாக ஆக்கு என்று நிறுவனத்திடம் சொல்லி தொழிற்சாலையையே மூடிவிடும் அளவில் மாற்றுவதா என்று அறிய விரும்புகிறேன்.

நெருக்கடியான காலத்தில் அரசு இப்படிச் செய்யலாமா, அரசு இப்படிச் செய்யலாமா என்று கேட்கிறார்கள். நெருக்கடியான இப்படிப்பட்ட ஒரு நேரத்தில் கிளர்ச்சி நடைபெறலாமா என்பதை கிளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். நெருக்கடியான இந்த நேரத்தில் நான் இந்த விவாதத்தைச் சூடாக்க விரும்பவில்லை. 1969-70-லே வந்த லாபத்திற்குப் போனஸ் வாங்கிக் கொடுத்தவர் அப்பொழுது தொழிற்சங்கத்தின் தலைவராயிருந்த குருமூர்த்தி அவர்கள். அவர் வாங்கித் தந்ததைவிட அதிக சதவிகிதம், இந்த ஆண்டு கிடைத்த லாபத்தில் அதிக போனஸைத்தான் வாங்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு தலைவராகயிருந்த குருமூர்த்தி இந்த ஆண்டு காட்டூர் கோபால் செய்த ஒப்பந்தம் தவறு என்று சொல்வாரேயானால் அதில் அரசியல் நோக்கம் இருக்கிறதா இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் குருமூர்த்தி அரசியல்வாதி இல்லை என்று சொல்ல முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்த்து தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியிலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர். ஆகவே இதில் அரசியல் நோக்கம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், ஒருவருக்கொருவர் அதிகமாகப் பேசி மிக நெருக்கடியான நேரத்தில் நாடு இருக்கும்பொழுது இந்தப் பிரச்சினையைச் சூடாக்க நான் விரும்பவில்லை. நான் இப்பொழுதும் இந்தப் பேரவையின் சார்பாகக் கேட்டுக்கொள்வது, எந்தப் பிரச்னையாக இருந்தாலும் நாம் ஒரு மாதத்திற்குள்ளாகக் கூடி எடுக்கும்



[டாக்டர் மு. கருணாநிதி]

முடிவுப்படி தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றால் அந்தப் பிரச்னைக்கே வழியில்லாமல் போகிறது. இன்றைக்குத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் வேலைக்குச் செல்கிறார்கள் மற்றத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றரை மாதம் வரையில் சரி என்று ஒப்புக் கொண்டவர்கள் சிலரின் துணையோடு ஒப்பந்தம் சரியல்ல என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் அதை ஏற்றுக்கொள்ளவில்லையா? அதற்குப் பிறகு திட்டவட்டமாக எந்தெந்தப் பணிகள் ஆற்றப் பட்டன? எங்கெங்கு எந்தெந்த யோசனைகள் செய்யப் பட்டன? அப்படிக் கூடியவர்களிடையேயும் ஒற்றுமை இருக்கிறதா? இவர் தலைவராகி விடுவாரோ, அவர் தலைவராகி விடுவாரோ என்ற எண்ணத்திலே, நாம் கூட்டம் போட்டால் இவர் வந்து பேசிவிட்டுத் தலைவர் ஆகிவிடப் போகிறாரே என்று எண்ணிய செய்திகள் எல்லாம் நான் அறிந்திருக்கிறேன். இவ்வளவையும் நான் அறியாமல் இல்லை.

நான் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கேட்டுக் கொள்கிறேன், நாட்டின் நெருக்கடி நிலையை உணர்ந்து அவர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும். தலைவர்களை மாற்றுவதா இல்லையா என்பது சிம்சனில் மட்டும் அல்ல, இதேபோல் வேறு சில தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் தலைவரை மாற்றவேண்டுமென்று சொல்லக்கூடும். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தலைவராக இருக்கிறார் என்றால் ஆயிரம் தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டால் அங்கேயும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். இது முடியாதது அல்ல, யாருக்கும் செய்யத் தெரியாத வித்தை அல்ல.

ஆகவே தொடர்ந்து செய்யலாம், ஆனால் அப்படித் தொடர்கதையாகப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் கூறுகிறேன். ஏற்கனவே குருமூர்த்தி எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ அதே தேர்தல் முறைப்படி காட்டூர் கோபாலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். காட்டூர் கோபால் தேர்ந்தெடுக்கப்பட்டது சரியல்ல, எல்லாத் தொழிலாளர்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அமைப்புகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது தவறு என்று யார் யார் பேசுகிறார்களோ அவர்களே டிரான்ஸ்போர்ட்டிலே அமைப்புக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் அறிவேன். ஆகவே, இப்பொழுதிருக்கும் தேர்தல் முறையைத் திடீரென்று மாற்றி காட்டூர் கோபாலை நீக்குவதற்கு அரசாங்கத்திடம் எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. எனவே அனைவரும் அமர்ந்து வெளியார் தலையீடு இருக்கக் கூடாது என்று ஒப்புக் கொண்டு சட்டமாக ஆக்கினால் சிம்சனில் மட்டும் அல்ல தமிழகம் பூராவும் நல்ல தொழில் அமைதி ஏற்படும், உண்மையாகவே தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து மாநிலம் முழுவதும் கிளர்ச்சி நடத்தப் போகிறோம், சும்மா விடுவதாக இல்லை, கருணாநிதிக்குக் காட்டமான தாக்கு என்றெல்லாம் இப்படியே மறுபடியும் போய்ச்

[டாக்டர் மு. கருணாநிதி]

கொண்டிருந்தால் நாட்டின் நெருக்கடி நிலையை உணர்ந்து அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தயங்காது (கைத்தட்டல்) என்று எச்சரிக்கையாகச் சொல்லவில்லை, யாரும் கைத்தட்டத் தேவையில்லை, எச்சரிக்கையாகச் சொல்லவில்லை, இதைத் தவிர வேறு வழி அரசுக்கு இல்லாமல் போகக்கூடும். ஆகவே, அதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அரசுக்கு நாட்டு நெருக்கடி தெரியவில்லையா, நாட்டு நெருக்கடி தெரியவில்லையா என்று கேட்கிறார்கள். கிளர்ச்சியிலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு நாட்டு நெருக்கடி தெரியவில்லையா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கிருக்கும் ஒப்பந்தத்தின் படி என்ன குறைவாக வாங்குகிறார்கள்? குருமூர்த்தி செய்து கொண்ட ஒப்பந்தத்தைவிட என்ன குறைவாக வாங்குகிறார்கள் என்பதற்கு விளக்கம் இல்லை. ஏனென்றால் வேண்டுமென்றே, இருக்கின்ற ஒரு தலைவரை மாற்ற வேண்டுமென்பதற்காகச் சிலர் நடத்திய கிளர்ச்சியில் சில அரசியல் கட்சித் தலைவர்களும் தாங்களே அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

போலீசார் மீது குற்றம் சாட்டப்பட்டது. எனக்கு நன்றாகத் தெரியும். நான் அமெரிக்கா புறப்படுவதற்கு முன்பே கிளர்ச்சி இருந்தது. முதலிலே வேலைக்குச் சென்ற 10, 20 பேர்கள் உள்ளே இருந்தபொழுது அவர்கள் வெளியே வருவதற்குப் போலீஸ் பாதுகாப்பை நாடினார்கள். வெளியிலே கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதற்காக உள்ளேயிருந்தவர்களைப் பாதுகாப்போடு அழைத்து வந்தார்கள். ஆனால் போலீசார் முன்னாலேயே வெளியிலே கிளர்ச்சி நடத்தியவர்கள் அந்தப் பத்துப் பேர் தலைகளையும் காயமடையச் செய்திருக்கிறார்கள். வன்முறை வன்முறை என்று பொதுவாகச் சொல்கிறார்களே, அதிலே மற்றத் தொழிலாளர்கள் மீது கத்தியால் குத்தப்பட்டு, அவர்கள் அடிபட்டு, உதைபட்டு ஆஸ்பத்திரியில் இருந்தார்களே. பத்திரிகைகளில் புகைப்படம் வந்ததே, அவர்களைப்பற்றி ஏன் பேசவில்லை?. நான் இரண்டு சாராரிலும் வன்முறைக்கு ஆளானவர்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வன்முறை கூடாது என்பது இந்த அரசு கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை மட்டும் அல்ல, தொழிலாளர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லக்கூடியது அரசு. எனவே, மேலும் மேலும் வன்முறை தேவையில்லை, நாட்டு நெருக்கடியை உணர வேண்டும். இன்றைக்கு நாடு எவ்வளவு பெரிய ஆபத்தில் இருக்கிறது என்பதை உணர வேண்டும். அதை உணர்ந்ததாகச் சில அரசியல் கட்சிக்காரர்கள் இல்லை.

அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். கடந்த பாகிஸ்தான் யுத்தத்தின்பொழுதும், சீன யுத்தத்தின்பொழுதும் இந்த நாட்டிலே எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் அன்றைக்கு அரசுக்கு எவ்வளவு



[டாக்டர் மு. கருணாநிதி]

ஒத்துழைப்பைக் கொடுத்தோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் அந்த அளவிற்கு ஒத்துழைக்கிறார்களா என்றால்—நான் காங்கிரஸ் என்று கூறுவது காமராஜர் கட்சியைச் சொல்லுகிறேன்—ஒத்துழைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கருணாநிதி அமெரிக்கதாசன் என்று பத்திரிகையில் போடுகிறார்கள். நான் என்றைக்கும் அமெரிக்கதாசன் ஆகமாட்டேன். அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டு வந்ததாலேயே அமெரிக்கதாசன் என்றால் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பல தாசன்கள் ஆக வேண்டும், ஏனென்றால் அவர் பல முறை போய் இருக்கிறார். நான் அமெரிக்கதாசன் ஆகிவிடமாட்டேன். இன்றைக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் டெல்லிப் பட்டணத்திலே அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தின் முன்னாலே ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள். நண்பர் செழியன் அவர்கள் கேட்டார், கழகத் தலைவன் என்ற முறையில் என்னிடத்திலேயும், பொதுச் செயலாளரிடத்திலேயும் கேட்டார், நாங்கள் கலந்து கொள்ளலாமா என்று. நிச்சயமாகக் கலந்து கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டிருக்கிறோம். எனவே அமெரிக்கதாசன் ஆகவில்லை. இன்றுள்ள நிலையில் அமெரிக்கதாசன் என்றால் அவன் "ஐந்தாம்படை" என்று அர்த்தம். அந்த அளவிற்கு பாகிஸ்தான் பக்கத்திலே தன் மறைமுகமான ஆதரவைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. அது வெளிப்படையாகவும் தெரிவித்திருக்கிறது. ஆகவே அமெரிக்கதாசன்" என்று சொல்லிவிட்ட பிறகு, இன்றைக்கு முதலமைச்சரின் கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் ஐந்தாம்படைகள் என்று சொன்னதாகத்தான் அர்த்தம். ஆகவே, நெருக்கடி நிலையை உணர வேண்டும்.

நெருக்கடி நிலையை யாராவது பயன்படுத்திக் கொண்டு வன்முறைகளில் ஈடுபட்டால், அவர்கள் யாராகயிருந்தாலும் நெருக்கடி நேரத்திலே அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கத் தயங்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளப் பெருமக்களை, தொழிலாளத் தோழர்களை நான் மிகவும் பணிவன்போடு வேண்டிக்கொள்வதெல்லாம், பிரச்னைகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், முதலில் வேலைக்குத் திரும்பிச் செல்லுங்கள். தலைவர் யார் என்பது சிம்சனில் மட்டும் அல்ல, தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகளில் யார் தலைவராக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் யோசிக்கட்டும் என்று கூறிக் கொண்டு இந்த விளக்கங்களுக்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று தலைவரவர்களே, தங்களுக்கு நான் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, we appreciate the sprit with which the Hon. Chief Minister replied. I want to seek only one clarification.

[Dr. H. V. Hande]

There is a lot of dissatisfaction outside. I forget my party and I forget that I am a politician In the interest of peace and amity, I would like the Hon. Chief Minister, as a special case, to convene a meeting of a few leaders of all parties who are interested in the Trade Union as a last resort and as an expression of goodwill. I want to know whether it is possible for the Hon. Chief Minister to convene such a meeting and try to convince everybody. If he can allot about half an hour or one hour of his precious time, for this, I think it is possible to solve this problem. May I beseech the Hon. Chief Minister to see that the meeting is convened this evening itself if he is able to find some time so that he may try to sort out this problem and settle it peacefully in the interest of defence of India?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, நான் பேசிக் கொண்டிருந்தபொழுது சனிக்கிழமைகளிலே தொழிலாளர்கள் வேலை செய்யச் சொல்லப்படுகிறார்கள். அவர்களுக்கு டபிள் வேஜஸ் கொடுக்கப்படுவது கிடையாது என்று சொன்னபொழுது கனம் தொழிலாளர் அமைச்சர் அவர்களும், முதலமைச்சரவர்களும் சரி அல்ல என்று சொன்னார்கள். ஆனால் ஒப்பந்தத்திலே, " The Management agrees to pay and the Union of the Workmen agrees to accept single wages for these compensatory working days " என்று காட்டூர் கோபால் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதைத் தொழிலாளர்கள் வன்மையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சொன்னபோது அமைச்சர் தவறு என்று சொன்னார். பதினைந்தாயிரத்தை பதினெட்டாயிரம் என்று சொன்னதற்காக வியாக்கியானம் செய்தவர்கள் ஷரத்தில் இருக்கும் முக்கியமான கருத்தைப் புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார். " 24 compensatory days to be worked on saturdays on single wages " என்று இருக்கிறது. அந்த ஒப்பந்தம் என்னுடைய கையில் இருக்கிறது. ஷரத்தைப் படித்துப் பார்க்கும்படி தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஒப்பந்தத்தைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு உடனடியாகப் பதில் சொல்லப்பட்டது. இந்தச் சந்தேகம் எழுப்பப்பட்டவுடன் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துக் கலந்து பேசியதோடு நிர்வாகத்தில் இருப்பவர்களையும் தொழிலாளர் தலைவர்களையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். ஸ்டாச்சுடரி என்று சட்டத்தில் போடப்பட்டிருப்பதால் 48 மணி நேரம் என்பது ஐந்து நாட்களுக்கு இத்தனை மணி நேரம் என்று குறிப்பாக இல்லை. ஒவ்வொரு தொழிற்சாலையும் ஒவ்வொரு மாதிரியாக வேலை செய்கிறார்கள். இங்கே 48 மணி நேரம் வேலை செய்த பிறகு ஆறாவது நாள் வேலை செய்தால் டபிள் வேஜஸ் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கக் கருத்து வற்புறுத்தப்பட்டு நிர்வாகமும் ஒப்



[திரு. செ. மாதவன்]

பந்தம் செய்து கொண்டது. தொழிலாளர் தலைவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கச் சார்பில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது என்ற உண்மையை எடுத்துக் காட்டும் வகையில் ஒப்பந்தம் செய்ததற்குப் பின்னால் அதே தொழிற்சாலையில் சனிக்கிழமை வேலை செய்து டபிள் வேஜஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் உணர வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்போது கூடத் தொழிலாளர்களைச் சந்தித்துக் கேட்டேன். அது சரியல்ல என்றுதான் இப்போதும் கூறுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காட்டூர் கோபால் நடத்துகிற பத்திரிகையிலே படித்தேன் என்று சொன்னார்கள். அதிலேயே இருக்கிறது. வேலைக்குப் போன தொழிலாளர்கள் ஒப்பந்தப்படி இரட்டிப்புச் சம்பளம் பெற்றார்கள் என்று இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக இந்த ஒத்திவைப்புத் தீர்மான விவாதத்தின்போது விவரங்கள் வந்த காரணத்தால் சிலவற்றை உடனே தலையிட்டு மறுக்க வேண்டியதை மறுக்க முடியவில்லை. ஒப்பந்தம் என்று பார்க்கிறபோது அந்த ஒப்பந்தத்தைத் தனியாக வைத்துப் பரிசிலனை செய்தால்தான் எது சாதகமானது, எது பாதகமானது என்று சொல்ல முடியும். எனக்கும் தொழிற் சங்கங்களில் பல கால அனுபவம் இருக்கிறது. எந்த ஒப்பந்தத்திலும் குறை சொல்ல வேண்டுமென்றால் குறை சொல்ல முடியும். இப்போது செய்யப்பட்ட ஒப்பந்தத்திலும் குறைகளாக 25 பாயிண்ட்கள் வைத்திருக்கிறோம். அது அல்ல விஷயம். இதிலே பாயிண்ட் ஸ்கோர் பண்ணக்கூடிய விஷயமாக எதையும் எடுத்துக் கொள்ளக் கூடாது. கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் நான் சொல்லுவதை எல்லாத் தொழிலாளர்களும் ஏற்றுக்கொள்வார்கள். கட்சி மாச்சரியம் இல்லாது, கட்சிக்கு அப்பாற்பட்டு பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்ற முறையில் அமைச்சரவையும், முதல்வர் அவர்களும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** டாக்டர் ஹாண்டே அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் என்று சொல்லும்போது அநேகமாக இங்கே எல்லாக் கட்சித் தலைவர்களையும் வைத்துக் கொண்டுதான் பேசியிருக்கிறோம். தொழிற்சங்கத் தலைவர்கள் என்று எடுத்துக் கொண்டாலும் இன்று தொழிற்சங்கத்தில் சம்பந்தப்படாதவர்களும் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கூட்டி வைத்துப் பேசுவது இயலாத காரியம். தொழிற்சங்கத் தலைவராக இருக்கும் யாரையும் அழைத்து வைத்துப் பேசுவதிலே ஆட்சேபணை இல்லை. வெளியே இருப்பவர்கள் எல்லாம் இதிலே தலையிட்டு கொடி பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள். சம்பந்தம் இல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசுவது இயலாது. யாரை அழைத்துப்

[டாக்டர் மு. கருணாநிதி]

பேசுவதாக இருந்தாலும் முதலில் தொழிலாளர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்று வேலைக்குத் திரும்புவார்களானால் திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட ஒப்பந்தத்தைப்பற்றிப் பரிசீலிப்பதிலே கூட ஆட்சேபணை இல்லை. எந்த ஒப்பந்தம் வந்தாலும் அந்த ஒப்பந்தத்தில் குறைபாடு இருக்கிறது என்று இன்னொருவரால் நிச்சயமாகத் தூண்டிவிட முடியும். அந்த அடிப்படையில் ஒப்பந்தங்களை ஆராயக் கூடாது. அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசுவதிலே எந்தவிதமான ஆட்சேபணையுமில்லை. முதலிலே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குச் சென்றால்தான் நான் அவர்களுடன் பேசத் தயாராக இருக்கிறேன். நான் ஏற்கனவே கூறியபடி இந்தப் பிரச்சினை விரிவாக விவாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி அமர்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிந்து விட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கூறி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கூறுவதற்கு இங்கே இடமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** ஏற்கனவே விளக்கம் கூற அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நானும் ஒரே ஒரு விளக்கத்தைக் கூறிவிடுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது இங்குள்ள எல்லாக் கட்சிகளும் தொழிலாளர்களையே தலைவர்களாகக் கொண்டு சங்கங்களை அமைக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை அதுபற்றி இன்னும் யோசிக்கப்படவில்லை, அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மிகவும் நன்றி. நோக்கம் புரிகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, என்னுடைய தீர்மானம் தேசத்தினுடைய நெருக்கடியைப் பொறுத்து பிரச்சினையை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்பதுதான். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது இந்த விதிமுறையில் வரவில்லை. இப்படி விளக்கம் கூறுவதால் முறைகள் மாற்றப்பட்டு விடும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அவர்கள் விளக்கம் கொடுக்கும்போது நான் விளக்கம் கொடுக்கக்கூடாதா ? ஏற்கனவே முறைகள் மாற்றப்பட்டு விட்டன.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டு மென்றால் குறைந்த பட்சம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தலைவர்களை அழைத்து இன்று மாலையோ, நாளையோ பேச வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அழைத்துப் பேசிய பிறகுதான் அவர்கள் வேலைக்குச் செல்வார்கள் என்றால் அவர்களுடைய தேச பக்தியில் நாம் சந்தேகம் கொள்ளுகிறோம் என்றுதான் பொருள். ஆகவே, இந்தத் தீர்மானத்தின் அடிப்படையாக, உடனடியாக பிரச்சினைகளை மறந்து சிம்சனில் மட்டுமல்லாது எல்லாத் தொழிற்சாலைகளிலும் வேலைக்குச் செல்ல வேண்டுமென்பதுதான் நோக்கம். இதை விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** யாருடைய தேசபக்தியைப் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை. நான் சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். தொழிலாளர்களுடைய தேச பக்தியிலே குற்றம் சொன்னார்கள். அப்படி அவர்கள் வேலைக்குச் செல்லவில்லை என்று சொன்னால் தொழிலாளர்களுடைய தேச பக்தியிலே அவருக்குச் சந்தேகம் இருப்பதாக மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும் என்றுதான் கூறுகிறேன். ஷரத்தைக் கூட வைக்கவில்லை. இதிலே அரசியல் நிலை கூட இல்லை. முதலமைச்சர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

As a sort of sporting spirit on all sides, it must be done. I am not in the least bothered about my political career or politics. I am leas' interested in it.

என்னைப் பொறுத்தவரையில் இதற்கு எப்படியாவது உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்றுதான் சொன்னேன். தேச பக்தியைப் பொறுத்தவரை யாருடைய தேசபக்தியிலும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் முதலமைச்சர் அவர்கள் தேசபக்தியுடன் தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லுகின்ற நிலையில் அவர்கள் வேலைக்குச் சென்றால்தான் நான் பேசுவேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு தேசபக்தி யாருக்கு அதிகம் என்ற பிரச்சினையில் இறங்கி மீண்டும் நெருக்கடி-

ஏற்பட்டுவிடக் கூடாது. முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் கருணையோடு கவனம் செலுத்தி இரண்டு பேருக்கும் தேசத்தின்மீது கடமை இருக்கிறது என்ற எண்ணத்தோடு பிரச்சினையைத் தீர்க்க வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தொழிலாளர்களுடைய தேசபக்தியைப் பற்றி நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கற்பனை செய்து கொண்டு அவர்களுடைய பத்திரிகையில் செய்தி வருவதற்காகப் பேசினார்கள் என்று கருதுகிறேன். நான் அப்படிச் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதை லத்தீப் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள். திரு. லத்தீப் அவர்களும் தொழிலாளர்களைத் தேசபக்தி அற்றவர்கள் என்று சொல்லவில்லை. தேசபக்தி அற்றவர்கள் யாராக இருப்பார்கள் ? இந்த நேரத்தில் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு நாட்டில் வன்முறையை அவிழ்த்துவிட வேண்டுமென்று நினைப்பவர்கள்தான் தேசபக்தியற்றவர்கள். நாட்டில் அவசரப் பிரகடனம் செய்யப் பட்டிருக்கின்ற நிலையில் இப்போது அது தேவையில்லை என்று அறிக்கை விட்ட அந்தக் கட்சியால் இயக்கப்படுபவர்கள் மறைமுகமாக இன்றையதினம் இந்தப் போராட்டத்தில் பிரதான கதாநாயகர்களாக இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

அந்தக் கதாநாயகர்களினால் யாரும் கவரப்பட்டு விடக் கூடாது என்பதுதான் என் கவலை. நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். நெருக்கடியான நேரத்தில் ஒரு வேலைநிறுத்தம் ஏற்படுத் தலைவர்கள் கூடிப் பேசுவது என்ற நிபந்தனை வைக்கப்பட்டு பேசிய பிறகுதான் வேலைக்குச் செல்வது என்பதை ஒத்துக் கொண்டால் நாட்டில் ஏற்படுகிற ஒவ்வொரு நெருக்கடியான நேரத்திலும் இப்படிப்பட்டதொரு சிக்கலை யாரும் தோற்றுவிக்கத் தொடங்கி விடுவார்கள். ஆகவே, இதற்கு முன்மாதிரியாக இருக்கக் கூடாது என்பதற்காக திரு. ஹாண்டே அவர்களின் முறையீட்டிற்கு ஒரு திருத்தமாக, தலைவர்களைச் சந்தித்துப் பேச தயக்கம் காட்டப் போவதில்லை, முதலில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லட்டும், பிறகு பேசி, இருக்கிற பிரச்னைகள் பொறுத்து, திரு. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல், ஆராயத் தயாராகயிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு மீண்டும் அந்த வேண்டுகோளை இந்தப் பேரவையின் சார்பாக தொழிலாளர்களுக்கு வைக்க விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகும், மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் விளக்கமாகப் பேசிவிட்ட காரணத்தினாலும் இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமே இல்லை என்று நான் கருதுவதினால் இத்தீர்மானத்திற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



(ஆ) சேலம் கிளை ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் நடத்தவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து.

MR. SPEAKER : Dr. H. V. Hande has given notice of an adjournment motion regarding the proposed hunger strike by the Salem branch of the Elementary School Teachers' Association on 4th December 1971 and 5th December 1971 in Salem District protesting against the hardships, to which the teachers are subjected in connection with the Family Planning Campaign.

என்று கொடுத்திருக்கிறார்கள். இது 'ப்ரப்போஸ்ட் ஹங்கர் ஸ்ட்ரைக்' பற்றியது. நடந்தாலும் நடக்கலாம். நடக்காமலும் இருக்கலாம். It is not a definite matter. அந்த வகையில் இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

**(இ) கோவையில் சில ஆலைகள் உறுதி மொழிப்படி திறக்கப்படாமையும் தொழிலாளரின் நேரடி நடவடிக்கை அறிவிப்பும் குறித்து.**

MR. SPEAKER : Thiru N. Marudachalam has given a notice of an adjournment motion, namely, failure to implement the assurance given to reopen certain Mills at Coimbatore, and the announcement made by the workers to resort to direct action.

இது எப்படி அவசரத் தீர்மானத்திற்கு உகந்தது என்பதை திரு. மருதாசலம் அவர்கள் கூற வேண்டும்.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் ஆலைகள் மூடப்பட்ட விஷயம் சம்பந்தமாக, சோமசுந்தரா மில், ஸ்டேன்ஸ் மில், காளீஸ்வரா மில், ஸி.எஸ். அன்ட் டப்ளியூ மில், பங்கஜா மில் போன்ற மில்கள் மூடப்பட்ட விஷயமாக சென்ற மூன்று மாதங்களுக்கு முன்னால் அமைச்சர்களும், தொழிற்சங்கத் தலைவரும் கூடி அவற்றை கார்ப்பரேஷன் மூலம் எடுத்து நடத்தலாம் என்று உறுதி கொடுத்தும் இதுவரையிலும் எடுத்து நடத்தப்படவில்லை. ஆகவே தொழிலாளர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதால் அவர்கள் போராட்டம் நடத்த முன் வந்திருப்பதால், தொழில் கோர்ட் விவாதித்து முடிவு எடுக்க சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்கள் தலைவரோடு பேசியபோது ஆறு ஆலைகளை எடுத்து நடத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும் என்ற கருத்தைத் தெரிவித்தது. அக் கருத்தின் அடிப்படையில் சோமசுந்தரா, காளீஸ்வரா. பங்கஜா, ஸி. எஸ். அன்ட் டப்ளியூ. இந்த ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு அனுமதி தரவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு போட்டுள்ள புதிய சட்டத்தின்

படி அவர்கள் அனுமதி பெற்றாக வேண்டும். அந்த அனுமதியைப் பெற்றவுடன் எடுத்து நடத்துவதற்குத் தயாராகயிருக்கிறோம் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனார்த்தனா ஆலையைப் பொறுத்த அளவிற்கு அவர்களே நடத்துவது, உரியவர்களே எடுத்து நடத்துவது என்று முன்வந்த காரணத்தினால் அது விடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்த அளவிற்கு நாம் எந்தவிதமான முயற்சிக்கும் தடை இல்லாமல் உதவி அளிக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொண்டு, அவசரப் பிரேரணைக்குத் தேவை இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

**(ஈ) சுவாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் திடீரென 40 பேருந்துகளை நிறுத்தியதும் தொழிலாளர் வேலையின்மையும்.**

MR. SPEAKER : Thiru A. K. Subbiah has given notice of an adjournment motion, namely, sudden stoppage of 40 buses of Swamy Motor Transport Private, Limited and the consequent unemployment of about 400 workers.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சுவாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட்டில் 40 பஸ்களுக்கு மேல் திடீரென்று நிறுத்திவிட்டார்கள். அதன் காரணமாக 400 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல. தலைநகரிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் பஸ்கள் ஓடிக் கொண்டிருந்ததனால் இப்போது பஸ்களில் பிரயாணம் செய்து வரும் பொதுமக்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கம்பனியைச் சேர்ந்தவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி மட்டும் பல லட்சம் ரூபாய்களாகும். அவற்றைச் செலுத்தாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சம்பளக் கமிஷன் சிபார்சுப் பிரகாரம் 3½ லட்சம் ரூபாய் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. லேபர் கோர்ட் 48 தொழிலாளர்களுக்கு 25,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டும் அதுவும் நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள தேச நெருக்கடி காரணமாக



இன்றையதினம் 400 தொழிலாளர் குடும்பங்கள் பட்டினி கிடக்க வேண்டியதொரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த சுவாமி மோட்டார் டிரான்ஸ்போர்ட் ஓடுவதற்கு வகை செய்யக் கூடிய அளவில் அதில் வேலை செய்யக்கூடிய 400 தொழிலாளர்களுக்கும் அதில் வேலை செய்யக்கூடிய உத்தரவாதம் அளிக்கும் முறையிலும் அரசு நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலாளர் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலுள்ள எஸ்.எம்.டி. பஸ் சர்வீஸ் பொறுத்தவரையில், 47 பேருந்துகள் வழித்தடங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். கடந்த சில மாதங்களாகவே நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகவும் அவை சரியாக ஓடாததன் விளைவாகவும் அதற்குப் பின்னர் 28—11—71-ம் நாள் அன்றிலிருந்து அவைகள் அத்தனையும் நின்று விட்டன. இருந்தாலும். பொதுமக்களின் நன்மையைக் கருதி 35 வழித்தடங்களில் ஏற்கனவே அதே நேரத்திற்கு அதே வழித் தடங்களில் பேருந்துகள் ஓடுவதற்கான நடவடிக்கைகள் அரசினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீது 12 வழித்தடங்களுக்கும் ஏற்கெனவே நடத்தப்படுகிற பேருந்து உரிமையாளர்கள் வழித்தடங்களை நீட்டிக்கவும் அந்தக் குறிப்பிட்ட தூரத்திற்கு அந்த வசதியை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே பொது மக்களைப் பொறுத்தவரையில், பொது மக்களுக்கான போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரையில், இந்த 47 வழித் தடங்களுக்கும் அரசினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் சரியாக பஸ்களை ஓட்டாத காரணத்தினால் மோட்டார் வாகனங்கள் சட்டம் 60-வது பிரிவின்படி 12 வழித் தடங்கள் ஏற்கனவே ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு வழித்தடங்கள் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இருபத்திரண்டு வழித்தடங்கள் இன்றையதினம் 7—12—71 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முன் விசாரணைக்கு வர இருக்கின்றன.

இதிலே ஈடுபட்டிருக்கிற 400 தொழிலாளர்கள் பிரச்னையைப் பொறுத்த வரையில் அவர்களின் வேலைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற முறையில் அங்கு ஒரு போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தினுடைய வரி பாக்கிக்காக 6 பஸ்களையும், அதேபோல் ப்ராவிடன்ட் பண்ட்க்காக 3 பஸ்களையும் ஆக 9 பஸ்களை அரசாங்கத்தினுடைய கணக்கிற்காக ஏற்கனவே கையகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்தவிதமான இழப்பும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குரிய ப்ராவிடன்ட் பண்ட் தொகைக்காக மூன்று பஸ்களைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

[திரு. ச. இராமச்சந்திரன்]

[1971 டிசம்பர் 7

இனி தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சம்பள நிலுவை, இதர தொகைகளை முறைப்படி தொழிலாளர் நல சட்டங்கள் மூலம் பெற்றுக் கொள்ள, தொழிற்சங்க ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தொழிற்சங்க ரீதியில் அவர்கள் வேண்டிய காரியங்களை மேற்கொள்வார்களேயானால் அதற்குரிய நடவடிக்கைகளை தொழிலாளர் நலத் துறை மேற்கொள்ள ஏதுவாகயிருக்கும். ஆனால் இன்றைய நிலையில் நிர்வாக சீர்கேட்டின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதன் விளைவாக அந்தத் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை. ஏனென்றால் 50 வழித்தடங்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களைத்தான் அரசு மேற்கொண்டு அவைகளை நடத்த முடியும். 47 வழித்தடங்கள்தான் இந்த நிறுவனம் பெற்றிருக்கிறது. ஆகவேதான் இதை அரசு ஏற்று நடத்த இயலாது. கடந்த மூன்று நான்கு மாதங்களாக இந்தப் பிரச்னை இருப்பதால் இது அண்மையில் நடந்த நிகழ்ச்சியல்ல. எனவே, சட்டவிதிகளுக்கு அப்பாற்பட்டு இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. அதற்காக சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமும் இல்லை.

பகல் 30 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்னை குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### (3) கவன ஈர்ப்பு

### சாதாரண வருமான வரியை வேளாண்மை வருமான வரியுடன் இணைப்பதற்கான மத்திய அரசின் செயற்குறிப்பு.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the situation arising as a result of the Central Government suggesting to the State Governments to merge ordinary Income-tax with Farm Income-tax and bring the latter under the jurisdiction of the Centre and the decision of the Central Government in appointing a committee to examine this matter.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, புதுடில்லியில் 12—10—1971-ஆம் நாளன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பொருள்களில் ஒன்று, வேளாண்மை வருமான வரியை வேளாண்மை வருமானமில்லாத பிற வருமானத்தின் மீதான வருமான வரியுடன் இணைக்கும் செயற்குறிப்பு பற்றியதாகும். மாநில அரசுகளின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் பொருட்டு, இந்திய அரசு இச் செயற்குறிப்பிற்கெதிரான நிலையை மேற்கொண்டுள்ளது.



[திரு. ப. உ. சண்முகம்]

1971 டிசம்பர் 7]

வேளாண்மை வருமான வரி விதங்களை வரையறுக்கவும், சட்டத்தைச் செயற்படுத்தவும் வேளாண்மை வருமான வரியினை மாநிலத்தின் பொறுப்பிலேயே வைத்திருக்கவேண்டும் என்று நமது அரசு விருப்பம் தெரிவித்தது. நமது அரசு ஏற்கெனவே மேற்கொண்ட நிலையினைக் கருதிப் பார்க்குமிடத்து, இப்பொருள் குறித்துத் தற்போது இப்பேரவையில் விவாதிக்க வேண்டிய அவசியமேதுமில்லை. இது தான் விளக்கம். மேற்கொண்டு எதுவும் இல்லை.

### (4) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971–72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம்.

MR. SPEAKER : Now the hon. Member, Thiru Pauliah will speak.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, what about my motion?

MR. SPEAKER : It will be examined.

The hon. Member, Thiru Pauliah, is not present. Does the hon. Member, Thiru K. M. Subramaniam want to speak ?

THIRU K. M. SUBRAMANIAM : Yes, Sir.

MR. SPEAKER : Yes, the hon. Member can speak.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I am very happy that the present Government are continuing the activities that have been sponsored and almost executed by the previous Congress Government. So far as the generation of electricity is concerned, most of the main works were carried out during the first three Five-Year Plans. I am surprised to see that after the end of the Third Five-Year Plan, there is no major proposal for increasing the generation of electricity. Sir, we know that electricity is called power and it is the most powerful thing that the Government need to improve the living conditions of the people in India and particularly the people of Tamil Nadu. We can take pride that what we have done so far is very good and yet it is not so good.

So far as agriculture is concerned, Tamil Nadu has to depend entirely or at least entirely on pumpsets, unlike other States where irrigation and natural river facilities are available. Here, agriculture has to compulsorily submit to pumpsets for water-supply. So it is very necessary that electricity should be supplied to every village which the previous Congress Government planned before. Now I am finding that that this object would take some more time and there is also shortage in the production of electricity.

[Thiru K. M. Subramaniam]



When a country develops, there is need for extra supply of electricity and that has not been achieved since the end of the Third Fve-Year Plan. I have seen some small schemes here and there but ultimately production is not going to increase very much even after the implementation of these schemes.

Secondly, if we want to bring down the price of commodities, particularly food commodities, I think the electricity charge should also go down. It is a curious phenomenon to find that the cost of electricity is increasing instead of decreasing in spite of the fact that there is bulk production. Even in the case of domestic supplies, the cost of electricity is going up and it is time that the Electricity Board considers whether the rates could not be reduced.

Now I find that we are borrowing money from L.I.C. and other banks. I understand that the Government of India and the Reserve Bank of India are charging selective rate of interest for schemes relating to production of essential goods. Is there any greater essential thing than electricity? So I would like to know from the Hon. Minister, what is the rate of interest we are paying to the banks and whether it is not possible to get overdrafts from the Reserve Bank at the rate at which the Bank lends money to the Scheduled Bank and other banks or half a per cent more so that the cost of production will come down.

Then, coming to my constituency, Madras City, it is the experience of most people that we get occasional black-outs even when there are no official black-outs. Cables are at fault and new cables are not available and it takes time. In spite of the good intentions of the Electricity Board, they are lagging behind in having the stock of the materials necessary to keep the continus supply of electricity for both domestic and industrial purposes in the City of Madras.

Now I come to a very important point. So far as the consumption of electricity in the City is concerned, the Madras Corporation is one of the biggest consumers of electricity. I think it is No. 1 or No. 2 in the consumption of electricity. I do not know whether Railways is No. 1 or Corporation is No. 1. But for the last 10 years the Electricity Board is continuing to charge them at the same rate of 16 paise per unit.

So far as the Corporation is concerned, everybody knows that a High Power Committee has been appointed to go into the question of improving the finances of the Corporation. Now the Corporation is serving slums, Harijan colonies and housing of industrial labour. It is serving not only the artistocrats of Adyar but also many other people including poor people. In the City of Madras the consumption of electricity is going up very rapidly during the last 10 years and the money that the Corporation has to



[Thiru K. M. Subramaniam]

pay to the Electricity Board is also mounting. I throw a suggestion that the Electricity Board should consider the reduction of electricity charges to the Corporation of Madras because they are doing an essential service to the people, particularly 9 lakhs of slum dwellers in the Madras City.

Also so far as the City is concerned, the Electricity Board should pay greater attention to the maintenance work. I also request that my suggestions may be considered by the Government. Thank you.

(திரு. நா. வீராசாமி தலைமை)

* **திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை பற்றிய விவாதத்தில் என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தீவிரத் திட்டத்தின் காரணமாக, தமிழகத்தில் நான்கு மாவட்டங்கள் மின்சாரம் அடைவதில் முழுமை அடைந்திருக்கின்றன. இன்னும் இரண்டு மாதங்களில் இன்னும் நான்கு மாவட்டங்கள் பூர்த்தி அடையப்போகின்றன. 1972-க்குள்ளாக தமிழகம் பூராவும் மின்சார வசதி யில்லாத இடமே இல்லை என்கிற அளவில் நிலையை உருவாக்க இருக்கிறார்கள். அந்த முறையில் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடும் பாராட்டுகிறது. மின்சார வாரியத்தையும் பாராட்டுகிறோம்.

மற்றொன்று, மின்சார வாரியத்தில் இன்று ஏறக்குறைய 84,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கைகளை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, கோவை, சென்னை, மதுரை போன்ற நகரங்களிலும் புறநகர்களிலும் நகர ஈட்டுப்படியைக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு தினப்பயணப் படியையும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். போனஸ் 4 சதவிகிதம் என்று இருந்ததை 5 சதவிகிதம் என்றும் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். தினக் கூலித் தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் ஆண்டு உயர்வு அளித்திருக்கிறார்கள். நீண்ட நாட்களாக மின்சார வாரியத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளாக இவை இருந்தன. இந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் தலையிட்டு, நல்ல முறையில் தீர்த்துக் கொடுத்து இருப்பதற்காக, தொழிலாளர்கள் சார்பிலும், எங்கள் சார்பிலும் அவர்களுக்கு பாராட்டுதலைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மின்சார வாரியத்தில், 1960-ல் 40,000-ஆக இருந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை இப்பொழுது 84,000 என்ற அளவுக்கு உயர்ந்

[திரு. ஏ. எம். இராஜா]

மின்சார வாரியம், அந்தச் சம்மேளனத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்துவிட்டு, தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை பரிசீலனை செய்து, முன்னேற்றச் சங்கத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்றைமட்டும் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதி பவானித் தொகுதி. அது பிற்பட்ட தொகுதியாக இருக்கிறது. இப்பொழுதுதான் நம்முடைய முதல் அமைச்சருடைய கருணையின் காரணமாக 'ஈரோடு ஸிஸ்டம்' உருவாகியிருக்கிறது. இந்த ஈரோடு ஸிஸ்டம் ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம் என்ற நான்கு தாலுகாக்களைக் கொண்டது. இந்தப் பகுதியில் ஒரு லட்சம் கிணறுகள் இருக்கின்றன. இப்பொழுது 20,000 கிணறுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேகத்தில் போனால் இன்னும் 15, 20 ஆண்டுகள் கூட ஆகும் எல்லாக் கிணறுகளுக்கும் இணைப்புக் கொடுக்க. ஆகவே, குறைந்தது. ஈரோடு ஸிஸ்டத்தில் ஆண்டொன்றுக்கு 10,000 கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது என்று ஒரு உத்தரவைப் போடவேண்டும். உத்தரவைப் பிறப்பித்தால் மட்டும் போதாது, அதற்கான அத்தனை கருவிகளையும், கண்டக்டர், ஆர்.ஸி.ஸி. போல், இன்னும் மற்ற மற்ற மெட்டீரியல்ஸ் போன்றவைகளைக் கொடுத்து உதவியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** பதினெட்டு உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் 5 நிமிடத்திற்குள் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டு மின்சார துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது உரையை துவக்குகின்றேன்.

புதுமைக் கவிஞன் பாரதி "ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா—உறுதி கொண்ட நெஞ்சினாய் வா, வா, வா" என்று கூறியிருக்கிறார். ஒரு மனிதனுக்கு கண்ணிற்கு ஒளி எவ்வளவு அவசியமோ, அதைப்போலவே ஒரு நாட்டிற்கு ஒளியாகிய விளக்கும், வெளிச்சமும் அவசியம் என்பதை உணரவேண்டிய கட்டத்தில் தமிழக அரசு தான் எடுத்துக்கொண்ட நல்ல முயற்சிகளிலே நல்ல வெற்றி அடைந்து, 1972-ம் ஆண்டு இந்த நாட்டில் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற அளவுக்கு செய்திருக்கின்ற பணியினை பாராட்டத் தான் வேண்டும். இந்தத் துணைக்கண்டத்தில், தமிழ்நாடு செய்திருக்கின்ற இந்தச் சாதனையைக் கண்டு பெருமைப்படத்தான் வேண்டும்.

அப்படிப் பெருமைப் படக்கூடிய நேரத்தில் ஒருசில குறைபாடுகளும் களையப்பட வேண்டியுள்ளது. அவற்றை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக, இந்த



[திரு. கே. ஏ. வகாப்]

தமிழகத்தில் விவசாயிகளின் தேவையை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களிடமிருந்து, மின்சார மீட்டர்களுக்கு, மினிமம் சார்ஜ் என்று சொல்லப்படுகிற அளவிலே ஒரு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இணைப்புக் கொடுக்கப்பட்ட பிறகு, 10, 15, 20 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. ஒரு ஆண்டுக்கு இவ்வளவு ஓட்ட வேண்டும் என்று ஒரு அளவு குறிப்பிடப்பட்டு, அதற்குப் பிறகும் கூட இந்தக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். தானியங்கள் இன்றைக்கு இருக்கிற நிலவரத்தில், விவசாயிகளுக்கு எத்தனையோ துன்பங்கள் இருக்கின்றன. எனவே, இந்த மினிமம் சார்ஜ் என்று சொல்லப்படுகிற கட்டணத்தை குறைந்த பட்சம் 5 ஆண்டுகளுக்கு என்ற நிலையை ஏற்படுத்தி, 15, 20 ஆண்டுகள் வசூலிக்கின்ற தன்மையை விலக்க வேண்டும் அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடுகளுக்கு அளிக்கப்படுகின்ற மின்சார மீட்டர்கள் சரியாக வேலை செய்வதில்லை. அதன் காரணமாக, சாதாரணமாக, மாதம் ரூ. 5, 6 என்ற அளவில் ஆகின்ற சில வீடுகளில், ரூ. 150, ரூ. 70, ரூ. 80 என்று வந்து விடுகிறது. உடனடியாக தக்க அதிகாரிகளிடத்தில் தெரிவித்தாலும் கூட காலதாமதமாக பதில் வருகிறது. அதற்குள், அந்த அதிகப்படியான தொகையை சம்பந்தப்பட்டவர்கள் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிறார்கள். கட்டாயமாக அந்தப் பணம் வசூல் செய்யப்படுகிறது. டிஃபெக்டிவ் மீட்டர்கள் இருப்பதால் தான் இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அப்படிப்பட்ட அதிகப்படியான கட்டணம் வரும்போது, அதை நல்ல முறையில் பரிசீலித்து, அதைக் கட்டுவதற்கு வேண்டிய குறைந்த கால அளவு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் இருக்கின்ற தெரு விளக்குகளைப் பற்றி இங்கே நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட குறைபாடுகளைத் தொடர்ச்சியாக பலர் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில், மின்சார வாரியத்தை பாராட்ட வேண்டிய கட்டமும் இருக்கின்றது. 1970–71-இல் அங்கத்தினர்கள் தெரிவித்த குறைபாடுகள் பலவின் பேரிலும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நடவடிக்கைகளைப் பார்க்கும்போதும், இந்தத் தெரு விளக்குகள் பற்றிய குறைபாடுகள் இன்னமும் இருந்துகொண்டு தான் இருக்கின்றன. பேரூராட்சித் தலைவன் என்ற முறையில் இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பேரூராட்சியைச் சேர்ந்த 300 விளக்குகளில் 100 விளக்குகள் கூட நிரந்தரமாக எரிவதில்லை. அது சம்பந்தமாக உள்ளூர் அதிகாரிகளிடம் சொன்னால் தகுந்த நடவடிக்கை எடுக்க

[திரு. கே. ஏ. வகாப்]

வில்லை என்று மேலதிகாரிகளிடம் குறைகளைச் சொல்கிறோம். அப்படிச் செய்தும் கூட 300 விளக்குகளில் 100-க்கு மேல் எரியாத நிலை இன்றும் இருக்கிறது. அது சம்பந்தமாக அதிகாரிகளிடம் கேட்கும்போது, அவர்கள் சொல்கிறார்கள், கொடுக்கப்படுகிற சோக்குகள் எல்லாம் அலுமினியத்தால் ஆனவை, அவை சீக்கிரம் பழுதடைந்து விடுகின்றன என்று. எனவே, காப்பர் சோக்குகள் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். அதன் மூலம் இந்தக் குறையை போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் காணப்படுகின்ற ஒரு பொதுவான குறையை பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டினார்கள். கிராமங்களுக்கு பொது மீட்டர் வைப்பதற்கான ஒரு முறையைக் கொண்டு வந்தால் அந்தக் குறையை போக்கலாம். அது மட்டுமல்ல. எரியாத விளக்குகளுக்கு பணம் கட்டுகின்ற நிலையில்லாமல் எரிகின்ற விளக்குகளுக்கு மட்டும் மீட்டர் அளவில் பணம் கட்டுகின்ற திட்டம் நல்ல திட்டம். அதை உடனடியாக அமுல் செய்யும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இப்போது, பிளாக் அளவில், பெரிய மின்சார அலுவலகங்களில் கூட தொலைபேசி வசதிகள் இல்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், வந்தவாசியிலும், இராணிப் பேட்டையிலும் கூட தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி இல்லை. மிகத் தொலைவில் உள்ள விவசாயிகள் இத்தகைய அலுவலகங்களோடு தொடர்பு கொள்ள வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இன்னும் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பல குறைபாடுகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்கள் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில், மின்சார வசதி பெருவாரியாக எல்லாக் கிராமங்களுக்கும் செய்யப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தினை வேளாண்மை வளர்ச்சிக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற குறிப்பினை நிதிநிலை அறிக்கையிலேயே காண முடிகின்றது. ஏராளமான வேளாண்மை விசைத் திட்டங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட மின் விசைத் திட்டங்கள் மிக மிகக் குறைவு. அப்படி இருந்தும் கூட வேளாண்மை விசைத் திட்டங்களுக்கு, மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது.



[திரு. ஏ. பாலையா]

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், குறுந்தங்கோடு வட்டாரத்தில் 20-க்கும் அதிகமான விவசாய விசைத் திட்டங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கின்றன. மூன்று ஆண்டுகள், 4 ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. இதைப் போலவே, சடையால்புதூரில் ஏராளமான விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல். விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகளைக் கண்டு நேரில் சொல்லியும் நிலைமையை எடுத்துச் சொல்லி விளக்கிய போதிலும் கூட அதிகாரிகள் தட்டிக் கழிக்கின்ற முறையிலேயே பதில் சொல்கிறார்களே தவிர, வேலையை முடித்துக் கொடுக்க வேண்டுமென்ற அவாவோ, ஆர்வமோ, அவர்கள் உள்ளத்திலே இல்லை. அவர்கள் சொல்வதெல்லாம், சரியான மெடீரியல்ஸ் இல்லை என்று சொல்லிக் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மின்வாரியம் இதில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின் உறுப்புகளை மின்சார இலாக்காவிற்கு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கட்டுமானப் பிரிவு என்ற ஒரு இலாகா குமரி மாவட்டத்தில் இருக்கிறது. தமிழக அரசின் திட்டத்தின்படி 1972-ம் ஆண்டிற்குள் குமரி மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அந்த அடிப்படையில்தான் கட்டுமானப் பிரிவு கிராமங்களில் வேலை செய்து கொண்டிருக்கின்றது. இந்தப் பிரிவு திருப்திகரமான முறையில் மின் இணைப்பு வேலையைச் செய்யவில்லை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தபோதிலும் அவை நல்லமுறையில் இன்றையதினம் நடைபெறவில்லை. கிராமங்களிலே மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றன. ஆனால் மின் இணைப்பு உள்ளபடியே கிராமங்களுக்கு இதுவரை கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதிலே மின்சார வாரியம் கவனம் செலுத்தி கட்டுமான பிரிவினர் கேட்கும் தேவையான மெட்டீரியல்ஸ் கொடுத்து, அதைத் திறம்படச் செயல்படச் செய்யவேண்டும். நண்பகல் 12.00

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்திலே ஒரு டைட்டேனியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலையை நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் சுமார் 20 கோடி ரூபாய் அளவிலே திட்டம் வகுத்திருப்பதாக அறியப்படுகிறது. அந்தத் திட்டத்தை அமல் படுத்த வேண்டுமென்றால் சலுகை நிரக்கில் மின்சார வாரியம் அந்தத் திட்டத்திற்கு மின்சாரம் சப்ளை செய்வதாக இருந்தால், அந்தத் திட்டம் அமுலாக்கப்படலாம் என்று சொல்லியிருக்கிறது. அதன் அடிப்படையிலானக் குறிப்பை தமிழ்நாடு அரசாங்கத்திடம் மத்திய அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே மின்சார இலாகா இதைப் பரிசீலனை செய்து சலுகை நிரக்கில் மின்சாரம் அந்தத் தொழிற்சாலைக்கு விநியோகம் செய்தால்,

[திரு. ஏ. பாலையா]

நிச்சயமாக குமரி மாவட்டத்திலே மணவாளக்குறிச்சியில் 20 கோடி ரூபாய் அளவில் டைட்டேனியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை அமையக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, தமிழ்நாடு அரசாங்கம் இதிலே மிகுந்த அக்கறை செலுத்தி, எல்லாவித ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குமரி மாவட்டத்திலே தனியாக ஒரு மின்திட்ட அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. தனி மின்திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்றால், சுமார் 60 ஆயிரம் மின் இணைப்புகள் இருந்தால் போதுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் குமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மின் இணைப்புகள் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் இதுவரையிலும் அந்த நீண்ட நாள் கோரிக்கை கவனிக்கப்படாமல் இருக்கிறது. விரைவிலே இந்தக் கோரிக்கை நிறைவேற ஆவனச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதையாறு நீர் மின்சாரத் திட்டத்தின் ஒன்றும் பகுதியும், இரண்டாம் பகுதியும் முடிந்துவிட்டன. எனவே அந்தத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்ற ஒரு மேற்பார்வைப் பொறியாளர் (சூப்பரின்டென்டிங் எஞ்சினியர்) அலுவலகம் திறக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் நன்மையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றையெல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்து, மக்களுடைய வசதிக்கும், நிர்வாக வசதிக்கும் ஏற்ற வகையில் குமரி மாவட்டத்தில் இந்தத் திட்டங்களை விரைவிலே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். நல்லசாமி :** தலைவர்அவர்களே, மின்சாரத் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்று ஒருசில விபரங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மின்சார இலாகாவினால் தமிழகம் பூராவுக்கும் மின்சார விளக்குகள் அமைகின்ற நிலை உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும். அந்த முறையிலே மின்சார இலாகாவும் தீவிரம் காட்டி வருகிறது. நான்கு ஜில்லாக்களில் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற சாதனையை மின்சார இலாகா ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் சில ஜில்லாக்களில் அந்த நிலையை உருவாக்க மின்சார இலாக்கா தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. எல்லா ஜில்லாக்களிலும் மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை விரைவிலே உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. எஸ். நல்லசாமி]

இந்த நேரத்திலே இந்த மின்சார இலாகாவிலே இருக்கக்கூடிய ஒருசில குறைபாடுகளையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் கிராமம் விவசாயிகள் வசிக்கக்கூடிய ஒரு கிராமம். அந்த கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் சிறிய விவசாயிகள். அதாவது அவர்கள் கூலிக்காரர்களாகவும் இல்லாமல் நிலச்சுவாந்தார்களாகவும் இல்லாமல், இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள்.

அவர்கள் விவசாயம் செய்வதற்காக தங்கள் நிலத்திலே மோட்டார் வைக்கவேண்டுமென்று மின்சார இலாகாவுக்கு மனு போடுகிறார்கள். ஆனால் மாதக்கணக்கானாலும் அதற்கு பதில் வருவதில்லை. இந்த இலாகாவிலே இருக்கக்கூடிய சூப்பர்வைசர்கள் அதிலே காலதாமதம் செய்கிறார்கள். காலதாமதம் செய்கிறார்கள் என்றால் பொறுக்கமுடியாத அளவுக்குக் காலதாமதம் செய்கிறார்கள்.

கடந்த ஆறு, ஏழு மாதங்களாக நான் விவசாயிகளைச் சந்தித்து அவர்களுடைய குறைகளை விசாரித்திருக்கிறேன். அவர்கள் குறிப்பாக என்னிடம் சொல்லிய குறைபாடுகள் மின்சாரம் கிடைப்பதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைப் பற்றித்தான். ஒரு விவசாயி மனு போட்டால் அது முடியும் அல்லது முடியாது என்று சொன்னால் அவர்கள் அது சம்பந்தமாக முயற்சி செய்ய மாட்டார்கள். மனு போடும்போது “ நீங்கள் எழுதிக்கொடுங்கள் ; உடனடியாக வேண்டியதைச் செய்கிறோம் ” என்று சொல்கிறார்கள். மனுவைப் போட்டுவிட்டு, எஸ்.ஓ.-விலிருந்து ஏ.இ. வரையில் அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் காரியம் நடைபெற வழியில்லை.

மோட்டார் வைப்பதற்காகக் கிணறு வெட்டுகிறார்கள். கிணறு வெட்டுகிறார்களென்றால் சாதாரண விவசாயிகள் கையில் பணம் வைத்துக்கொண்டா செய்கிறார்கள் ? இல்லை. கிணறு வெட்டுவதற்காக கடன் வாங்குகிறார்கள். எங்கள் ஊரிலே ரூபாய்க்கு 7 பைசா என்ற விதத்தில்தான் கடன் கொடுக்கிறார்கள். இப்படி கடன் வாங்கி கிணறு வெட்டினாலும், காலாகாலத்தில் மோட்டார் வைத்து, மின் இணைப்பும் கிடைக்காவிட்டால் அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி கொடுப்பதற்கே தாங்கமாட்டார்கள்.

பரமக்குடி மின் திட்டப் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு விவசாயி கஷ்டப்பட்டு மோட்டார் வாங்கி வைத்துவிட்டார். அதற்கு மின் இணைப்பு கேட்டு, மனு போட்டு, அதிகாரிகளை அணுகினால் ஆகட்டும் பார்க்கலாம், ஆகட்டும் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். ‘ ஆகட்டும் பார்க்கலாம் ’ என்ற சொல் இப்போது அதிகாரிகளையும் பற்றிக்கொண்டிருக்கிறது. இந்தக் குறைபாடுகள் மாறவேண்டும்.

[திரு. எஸ். நல்லசாமி]

இம்மாதிரி குறைபாடுகளைப் போக்குவதற்கு அந்தந்த வட்டாரத்திலே ஒரு அட்வைசரி கமிட்டியை நியமிக்கவேண்டும். அந்தக் கமிட்டியில் எம்.எல்.ஏ.-க்களை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும். எம்.எல்.ஏ.-க்களுக்கு மக்களுடைய குறைகள் தெரியும். அவர்கள் மக்களோடு நெருங்கிப் பழகக்கூடியவர்கள்; அவர்கள் மக்களை அடிக்கடிச் சந்திக்கக் கூடியவர்கள். விவசாயிகளுடைய கஷ்டங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள். விவசாயிகளிலும் ஒரு சிலரை அந்த அட்வைசரி கமிட்டியில் உறுப்பினர்களாக நியமிக்கலாம். அந்த கமிட்டி சூப்பர்வைசர்களுக்குத் தக்க யோசனைகளைக் கூறி, உதவிசெய்யும் வகையில் அமைக்கப்பட்டால் குறைபாடுகள் எல்லாம் நீங்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பூராவுக்கும் மின் ஒளி கிடைக்க, மின்சார விளக்குகள் போட எப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதோ. அதேபோல் உணவு உற்பத்தியிலே ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கும் மோட்டார்கள் வைத்து, மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU B. VENKATASWAMY : Sir, I thank the temporary Chairman for giving me this opportunity to speak on the budget of the Electricity Board for 1971–72.

Regarding the decision of Government to electrify all the villages within December 1972, it is a welcome feature. So far, in India only Haryana had electrified all the villages. We come next to Haryana. Of course there are some defects in electrification even in our State. Our Government has taken a decision to electrify all villages before December 1972 but in certain areas they are laying two-phased lines. There is no use of simply laying two-phased lines because we cannot give connection to pumpsets afterwards. Simply giving electric connection to streetlights is of no use. So I request this Government to lay three-phased lines in the entire Tamil Nadu State.

Some friends had mentioned that street-lights are not burning properly. That is a general complaint throughout the State. I request the Government to install meters so that the Panchayat or Corporation will be happy to pay for whatever current it had consumed. That may be immediately introduced so as to avoid the present confusion. We are paying heavy light charges at present. Out of the common fund, we are paying it. So, the meter system may be introduced.

We are also getting current from Mysore, Kerala, and Andhra Pradesh. I think there are some proposals to augment production of electricity in our State. Kalpakoam atomic project is one such thing. There is also the Hogenekal Project to produce 800 MW. I think regarding that there are some differences of opinion between



[Thiru B. Venkataswamy]

Mysore and our State. I find from the annual administration of the Electricity Board for 1969–70 that that project can produce 800 MW. If we produce that, our State can be self-sufficient. Let us talk with Mysore Government and take up this matter seriously and start the Hogenakkal Project at the early late.

At the same time I want to stress a few points about the Hosur and Denkanikota taluks which are hilly areas. Government says that there must be some percentage of income so as to give connections to the pumpsets. It is highly impossible to get this percentage of income for the Government because it is a hilly area and villages are also having a distance of 3 or 4 miles. So, that kind of yardstick may be avoided in respect of such areas like Hosur and Denkanikota taluks. As it is a hilly area 3,000 feet above the sea level, I request the Government to see that hill allowance is given to the people who are working in the Electricity Department there. So many people posted there are coming away because it is a chilly place. So, I request the Government to grant hill allowance and also some warm clothing to those who are working in the Electricity Department in those taluks.

As regards rural electrification, only 30 per cent of the villages in Hosur and Denkanikota taluks have been electrified. Whenever I met the Hon. Minister I used to tell him that it would take at least five years to electrify all the villages. Now they have posted one Special Assistant Engineer. But I request the Government to see that a special division is established there. Otherwise, I do not think that our area-Hosur and Denkanikota taluks-situated at the end of Tamil Nadu State in the border of Mysore will get electricity in all the villages soon. If we want to complete the provision of electricity in the Tamil Nadu State, as regards rural electrification. I think we will be the last to get it because we are in the last. So, I request the Hon. Minister to establish a special Division and appoint one Divisional Engineer in that area and complete the provision of electricity in the villages there as early as possible. Thank you, Sir.

திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1971–72-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் ஒருசில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலஞ்சென்ற—அமரர்—அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் 1972-க்குள்ளாக இருக்கின்ற கிராமப் பகுதிகள் எல்லாம் ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு, ஒளிமயமான வாழ்வு கிராம மக்களுக்கு உருவாக்கித்தரப்படவேண்டும் என்ற ஒரு அறிவிப்பினை நாட்டுக்குத் தந்தார். அந்த அறிவிப்பு நிலைபெறுவதற்கு முன்பாக இயற்கை அண்ணா அவர்களை நம்மிடம் இருந்து பிரித்துவிட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நனவாக்குகின்ற வகையில் இன்றையதினம் நம்முடைய கலைஞர் அவர்கள் மின்சாரவாரியத்தின் பொறுப்பை திரு. ஓ.பி.ஆர். அவர்களிடம் கொடுத்து, அவர்கள் செய்து வருகின்ற

[திரு. வை. பாலசுந்தரம்]

சேவை இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம்முடைய மாநிலம் வழிகாட்டியாக இருக்கிற அளவுக்கு ஒரு சிறப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

1969-லே ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, அந்தச் சிறப்புத் திட்டத்தின் மூலம் தமிழகம் பூராவும் ஒளிவிளக்குகள் ஏற்றித்தரப் படவேண்டும் என்பதாக நமது கலைஞர் அவர்கள் நமது மின்சார வாரியத்தில் உள்ளவர்களை ஈடுபடுத்தி வருகிற வேகத்தைப் பார்க்கிறபோது 72-க்குள்ளாக விளக்குகளே இல்லாத பகுதி இருக்காது என்ற மகிழ்ச்சி நமக்குத் தருகிறது. மின்சார விளக்கில்லாத கிராமமே நமது தமிழகத்தில் இருக்காது. நாட்டு மக்கள் ஒரு மகிழ்ச்சியான, ஒளிமயமான வாழ்வைப் பெறுவார்கள் என்கிற மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது. அதன் அடிப்படையில் தான் இன்றைக்குப் பல மாவட்டங்களிலே மின் விளக்கு அமைப்பு முழுமை விழாவைக் கொண்டாடி வருகிறோம். 72-ஆம் ஆண்டு இறுதிக்குள் மின்சார சப்ளை பூர்ணத் தன்மைபெறும் என்கிற அறிவிப்பு நம் காதுகளில் இனிமையாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையை உணர்ந்து 1967 வரை இருபதாயிரம் சொச்சம் கிராமங்களுக்கே மின் இணைப்புத் தரப் பட்டிருந்தது என்றால் ஏறத்தாழ இதுவரை 43 ஆயிரம் கிராமப் பகுதிகளுக்கு அரசாங்கம் மின் இணைப்பைத் தந்திருப்பதைப் பார்க்கிறோம். இன்று எனக்கு முன்பு பேசியவர்களும், நேற்றைய முன்தினத்திற்கு முன்தினம் பேசியவர்களும் பலயிடங்களில் மின் விளக்குகள் எரியவில்லை என்று கூறிய புகார்களை எண்ணிப் பார்த்தால் ஒளி புகாத ஊர்களுக்கு எல்லாம் மின் விளக்குகள் வந்துவிட்டனவே, இதன் காரணமாக இந்த அரசுக்கு மக்கள் மத்தியில் பெருமை உண்டாகிறதே என்கிற எரிச்சல் காரணமாக—விளக்குகளே எரியவில்லை, எரியவில்லை என்று சொன்னார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 43 ஆயிரம் கிராமங்களுக்கு ஒளி விளக்குகளை ஈட்டித் தந்திருக்கிறோம், போட்டுத் தந்திருக்கிறோம் என்றால் பல்லாயிரக்கணக்கான பல்புகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஒருசில எரியாமல் இருக்கலாம். அது அரசினர் குற்றமல்ல—ஆங்காங்கு வாழ்கிற மக்களின் குற்றமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா இடங்களுக்கும் விளக்குகளைப் போட்டுத் தர அரசு முயற்சிக்கின்ற அதே நேரத்தில் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், பொது மக்களாக இருந்தாலும் அரசுக்குக் கைகொடுக்கின்ற முறையில் அந்த விளக்குகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுடையதாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒளிவிளக்குகளை அமைத்துத் தருவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் இரண்டாவதாக இருக்கிறது, முதலாக இருப்பது ஹரியானா என்று சொன்னால் அந்த ஹரியானா தமிழகத்தில் 3-இல் ஒரு பங்குதான். ஆகவே இந்தியாவுக்கே தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லலாம்.



[திரு. வை. பாலசுந்தரம்]

அடுத்து, மொத்த மின் இணைப்பு 16 லட்சம் என்று குறிப்புகள் தருகிறது. 16 லட்சம் மின் இணைப்புகளில் ஏறத்தாழ 5½ லட்சம்—ஐந்தாண்டுகளுக்குமுன் 3 லட்சம் என்று இருந்த நிலைமைமாறி—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்நாள்வரை நான்காண்டுகளுக்குள் 2 லட்சத்திற்கு மேல் இணைப்புக்கொடுத்திருப்பது மகிழ்ச்சி தரத்தக்கது.

உற்பத்தி செய்கின்ற மின்சாரம் கேரளம், மைசூரில் உள்ளதைப் போல இங்கும் அதிகப்படுத்த முயற்சிக்க வேண்டும். மைசூர், கேரளத்தில் இருந்து கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு இல்லாமல்—தூத்துக்குடி, நெய்வேலி, கல்பாக்கம் போன்ற இடங்களில் அனல் மின்சக்தியை அதிகமாக உற்பத்தி செய்ய மத்திய சர்க்காரை வற்புறுத்தி—நம் மாநிலம் இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழவேண்டுமென்ற விஷயத்தைத் தெரிவித்து, பேச இந்தச் சந்தர்ப்பம் நல்கிய மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வீ. இராசகோபால்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடந்துகொண்டிருக்கிற விவாதத்தில் நான் கலந்துகொண்டு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் உள்ளபூர்வமாக வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் மின்சார வளர்ச்சி நிரம்பி முழுமை பெறக்கூடிய அளவுக்கு நெருங்கும் தன்மையைப் பார்க்கிறபோது மகிழ்ச்சி அடையவேண்டும். ஆங்காங்கே மின்சார முழுமை விழா நடந்துகொண்டிருக்கிறது. அடுத்த 1972-ஆம் ஆண்டுக்குள்ளாக மின்சாரம் முழுமைபெற்றுவிடும் என்ற நிலை கண்டு பெருமைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். மின்சாரம் இன்றையதினம் தொழில் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, விவசாய வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. மனிதர்களுடைய ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் அத்தியாவசியமாக இருந்துகொண்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆயினும் ஒருசில குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஒரு கிராமத்தின் ஊராட்சி மன்றத்தின் தலைவர் என்ற முறையில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கிராமத்தின் தெருவிலுள்ள விளக்குகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒருசில கிராமங்களில் குறைபாடுகள் இருக்கத் தான் செய்கின்றன. தெருவிளக்குகளில் முதலில் சாதாரண லைட் போட்டார்கள். இப்போது அதை மாற்றிவிட்டு ட்யூப் லைட்டுகள் போட்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று மாதங்கள் கழிந்ததும் ட்யூப் லைட்டை எடுத்துவிட்டு, பழையபடியே சாதாரண லைட் போட்டு

[திரு. வீ. இராசகோபால்]

விடுகிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சாதாரண லைட்டுக்கும் முன்பு ட்யூப் லைட் இருந்த காரணத்தினால் அந்த பழைய சார்ஜையே வசூல் செய்கிறார்கள். ஆகவே, இந்தக் குறையைப் போக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் தனியாக மீட்டர் அமைத்து மின்கட்டணம் வசூலிக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எஸ்.இ. அவர்களிடத்தில் ட்யூப் லைட்டுகள் எரியவில்லை என்றேன். அதற்கு அவர், ட்யூப் லைட்டுகள் ஏராளமாக இருக்கின்றனவே, ஏன் எரியவில்லை என்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றிக் கூறியபிறகுதான் வேறு ட்யூப் லைட் போட்டார்கள்.

இன்னொரு குறைபாட்டை எடுத்துக் கூற விரும்புகிறேன். விவசாய வளர்ச்சிக்கு மின்சாரம் இன்றியமையாதது. முன்பெல்லாம் பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக் கேட்டவர்கள் பத்துப் பதினைந்து பேர்கள்தான் இருந்தார்கள். இன்றையதினம் நூற்றுக்கணக்கானவர்கள் போட்டி போட்டுக்கொண்டு மின் இணைப்பு தங்களுக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். விவசாயி பம்பு செட்டுக்காக பாங்கியில் கடன்வாங்கி, மின் இணைப்புத் தர வேண்டுமென்று கேட்கும்போது, வீணாக காலம் கடத்துகிறார்கள். விவசாயி தான் வாங்கிய கடனுக்காக பல இன்ஸ்டால்மென்ட்டுகள் கட்டியபிறகும் மின் இணைப்புக் கிடைப்பதில்லை. அதனால், எந்த நோக்கத்திற்காக கடன் வாங்கினாரோ அந்த நோக்கம் எளிதில் ஈடேறுவதில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இம்மாதிரியான குறைகள் அனைத்தையும் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய முஸ்லீம் லீக் நண்பர் திரு. வகாப் அவர்கள் 'டிஃபெக்டிவ் மீட்டர்' பொருத்தப்பட்டிருக்கிறது என்றார்கள். அது முற்றிலும் உண்மை. பல இடங்களில் மீட்டர் சரியாக இயங்கவில்லை. சரியான அளவைக் காட்டுவதற்குப் பதிலாக அதிக அளவை மீட்டர் காட்டுவதினால், அதிகப்படியான தொகையைக் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, மீட்டரில் உள்ள குறைபாடுகளைப் போக்கவேண்டும் என்று கூறி, மின்சாரத் துறை நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஆதரித்து, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. கந்தசாமி** : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற நிலையில் எழுந்து நிற்கிறேன்.

தமிழகமானது இந்தியாவின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் மின் துறையில் அதிகமான சாதனைகளைச் சாதித்திருக்கிறது என்பதை உணருகிறபோது நம் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது. பசுமைப் புரட்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும்



[திரு. கே. கந்தசாமி]

பெருந்துணையாக இருப்பது மின்சாரம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

1971 டிசம்பர் இறுதிக்குள் எல்லாக் கிராமங்களிலும் மின்சார விளக்குகள் பொருத்தப்பட வேண்டும், நிறைவு விழா கொண்டாடப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டு காரியங்கள் வேகமாக செயல்பட்டு வருவதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்த நேரத்தில் எதிர்பாராவிதமாக அவசர ஆபத்தான நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் எல்லாத் தொழிற்சாலைகளிலும், நாடு பூராவும் 'பிளாக் அவுட்' செய்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மின்சார தெரு விளக்குகள் கிராமப் புறங்களில் போடுவதைத் தற்போது நிறுத்தி—அது நல்ல திட்டம் தான் என்றாலும்—ஆக்கவேலைகளுக்கான முயற்சிகள் அத்தனையிலும் அதாவது, பசுமைப்புரட்சி, தொழில் வளர்ச்சி ஆகியவைகளில் நாம் பெருமளவில் ஈடுபடவேண்டும். போருக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மின்சக்தியை பயன் படுத்தினால் மிக்க உதவியாக இருக்கும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலுள்ள குறைபாடுகளையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். ஒன்றிரண்டு குறைபாடுகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பல கிராமங்களிலே மீட்டர்களே கிடையாது. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அப்படி மீட்டர் பொருத்தினால் அந்தக் கிராமத்தில் பயன்படுத்தக் கூடிய மின்சாரத்திற்கு மட்டும் கட்டணம் வசூலிக்க வசதியாக இருக்கும். இப்பொழுது ஒரு கிராமத்தில் 20 விளக்குகள் எரிகின்றன என்று வைத்துக்கொள்வோம். மின்சாரப் பொறியாளர் ஆண்டு ஒன்றுக்கு ஒரு விளக்குக் கம்பத்திற்கு மூன்று பல்புகள் என்று கணக்குப் போடுகிறார்கள். ஒரு பல்ப் உபயோகம் 1,000 மணி நேரம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு விளக்குக் கம்பத்திற்கு வருடத்திற்கு 2½ பல்புகள் ஆகின்றன. அதை முழுமையாக 3 என்று கணக்கெடுத்து சப்ளை செய்கிறார்கள். கிராமத்திலுள்ள 20 விளக்குகளில் நான்கைந்து கம்பங்களிலுள்ள பல்புகள் 3-க்கு மேல் 4-வது தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு மேற்பட்ட 4-வது பல்புக்கு சார்ஜ் செய்யப்படுகிறது. அதே நிலையில் 3 பல்புகள் எரிக்காத 2 பல்புகள் எரிந்து மீதம் வைத்திருக்கிற பல்புகளைக் கணக்கெடுத்து 3-க்கு மேல் எரிந்த பல்புகளை அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும். கிராமத்தின் மின்விளக்குக் கட்டணம் வருகிற போது எல்லா விளக்குகளுக்கும் என்று கணக்குப் போட்டு

[திரு. கே. கந்தசாமி]

கட்டணம் வசூல் செய்துவிடுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக மீட்டர் வைத்தால் எவ்வளவு மின்சாரம் பயன்பட்டது, எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று விவரங்களை அறிந்துகொள்ள முடியும். ஆகவே, தனி மீட்டர் பொருத்தப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு பத்து பைசா என்று சார்ஜ் செய்கிறார்கள். இன்றைக்கு பசுமைப் புரட்சியில் நாம் ஈடுபட்டிருப்பதால், உணவு உற்பத்தியைப் பெருக்கி, நெருக்கடியை சமாளிக்க வேண்டியிருப்பதால், இதைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து பரிசீலனைசெய்து, கொஞ்சம் குறைக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசினர் இதைக் கருத்திற் கொள்ளவேண்டுமென்று கூறி, மின்சார வாரியம் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்று என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. கு. இராசமாணிக்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டின் மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் இங்கே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972-க்குள் தமிழகத்தில் எல்லாக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சாரம் அளிக்கப்படும் என்றும், வேளாண்மையில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு வேண்டிய மின்வசதி அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சிறப்புத் திட்டம் அளித்து, அத்திட்டம் வேகமாகவும் சிறப்பாகவும் நடந்தேறி வருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

என்னுடைய ஆடுதுறை தொகுதியிலுள்ள சில பகுதி மின்சார வாரியத்தைக் காணாத பகுதியாகும். கும்பகோணம் தனியார் நிறுவனத்தைக்கொண்ட இடமாகும். மின்சார வாரியம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிறப்பாகப் பணியாற்றினாலும் கூட, அந்தப் பயனைப்பெற முடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம். நான்காண்டு, ஐந்தாண்டுக் காலமாக பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டாலும், அந்தத் தனியார் நிறுவனமானது இரண்டாயிரம் ரூபாய், நான்காயிரம் ரூபாய் என்ற அளவில் கடன் கேட்கிறார்கள். இவர்கள் பம்புசெட் அரசாங்கத்தினுடைய சலுகையில் கடன்பெற்று அமைத்திருக்கிறார்கள். அவர்களையே பார்த்து 2 ஆயிரம் கொண்டுவா, 5 ஆயிரம் கொடு என்றால் எங்கிருந்து கொடுப்பது என்று தெரியாமல் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு எந்தவிதமான வளர்ச்சிக்கும் இடம் இல்லாமல் இருக்கிறது. தனியார் நிறுவனங்கள் உடனடியாக மின்சார இணைப்பு அமைத்துத் தரவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருந்தாலும்கூட அவர்கள் செயல்படாமல் இருக்கிறார்கள்.





[திரு. கு. இராசமாணிக்கம்]

கிராமங்களிலே மின்விளக்குகள் வேண்டுமென்று கேட்டு 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள் ஆகியும்கூட—கம்பங்கள் வருகின்றன, கம்பிகள் வருகின்றன—அவ்வளவுதான்—வேறு எந்தவிதமான காரியமும் நடக்காமல் மின் இணைப்புக் கிடைக்காமல் இருக்கிறது. அரசாங்கம் தனியார் நிறுவனங்களை எடுத்துக் கொள்ளலாம் என்றால் வழக்கு உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கமும் அவற்றை உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. எங்களுடைய கஷ்டங்களையும் தெரிவிக்க வேண்டுமென்ற முறையிலேதான் நான் இதைச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே உள்ள பகுதிகள் முழுமையும் விவசாயப் பகுதிகள். அங்கேயுள்ளவர்கள் கடன்வாங்கி மின்சார பம்பு செட்டுகள் அமைத்துக்கொண்டு இருந்தும், இன்னும் மின் இணைப்புக் கிடைக்கவில்லையென்பதால் அவர்கள் வங்கிகளில் வாங்கிய கடனுக்கு வட்டியைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த நிலைமைகளையெல்லாம் போக்க அந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் போன்றவைகளுக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே குத்தகை சாகுபடி வைத்து இருப்பவர்களுக்குச் சொந்தமாக பம்பு செட்டு வைத்துக்கொள்வதற்கு வசதிகள் இல்லை, மின் இணைப்பும் கிடைக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் ஊராட்சி ஒன்றியம் அல்லது ஊராட்சி இவற்றின் பொறுப்பிலே பம்புசெட்டுகள் அமைத்துக் கொடுத்து நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்தால் அங்கே உள்ள விவசாயிகள் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற ரக நெல்லைப் போட்டு கோடை காலத்தில் சாகுபடி செய்யமுடியும். மேலும், கரும்பு, கேழ்வரகு, பருத்தி போன்ற கோடை காலப்பயிர்களையும், சாகுபடி செய்வதற்கு வசதிகள் ஏற்படும். அங்கேயுள்ள விவசாயிகள் அரை ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று துண்டு துண்டாகத் தான் நிலங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாக பம்புசெட்டுகள் அமைக்கமுடியாது. எனவே ஊராட்சிகளின் சார்பிலே பம்புசெட்டுகளை ஏற்படுத்திக் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

நம்முடைய அரசாங்கம் விவசாய மேம்பாட்டிற்கான பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தனியார் மின்சார நிறுவனங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் மனிதனுடைய வாழ்க்கைக்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் மின்சாரத்தைத் தட்டுப்பாடின்றி அமைத்து வேளாண்மையை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: அன்புசார்ந்த மாற்றுத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தினுடைய துணை நிதி நிலை அறிக்கையின் பேரிலே பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வாரியம் பல வருடங்களுக்கு முன்னால் இருந்ததைக் காட்டிலும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இயங்குகிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், பாசனத்திற்கு மின்சாரம் கொடுப்பதைப் பொறுத்தவரையில் முன்னால் இருந்த பழைய நிலைமை மீண்டும் தென்படுகிறது. இதை உன்னிப்பாகக் கவனித்து அரசாங்கம் இதிலே தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

மின்சார இணைப்புக் கோரி அக்ரிமெண்ட் பார்ம் கையெழுத்துப் போடும்பொழுது 100 கையெழுத்துக்கள், 150 கையெழுத்துக்கள் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. இது அவசியந்தானா? கடன் வாங்குகின்ற பொழுது இரண்டு கையெழுத்துப் போட்டால் போதும். ஆனால் மின்சார இணைப்பிற்காக 100 கையெழுத்துப் போடவேண்டுமென்று சொன்னால் அது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்த்து அதை ரத்து செய்யவேண்டும்.

மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மின்சார வாரியமும், அரசாங்கமும் புதிய திட்டங்களை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தைப்பற்றிக் கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி இதை ஒரு மின்சாரத் திட்டமாகவும், நீர்ப் பாசனத் திட்டமாகவும் மாற்ற திட்ட ஆணைக் குழு அனுமதி அளித்திருக்கிறது என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது தொடங்கி பல ஆண்டுகள் ஆகி விட்டன. கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக பேசிப்பேசியும் எந்த அளவுக்குப் பயன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் சொல்ல முடியவில்லை. அரசாங்கத்தோடு பேசி சீக்கிரமாக முடிவுக்கு வரவேண்டிய வாய்ப்பை நாம் உருவாக்க வேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் கோவை மாவட்டத்திற்குப் பாசனத்திற்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

மொய்யாறு எலக்ட்ரிசிடி ஸ்கீம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அது சம்பந்தமாக அரசாங்கத்தினுடைய பேச்சுவார்த்தைகள் முடியாமல் இருக்கிறது. அதையும் சீக்கிரமாகச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மின்சார இலாகாவிலே 35 ஆயிரம் பேர்கள் தாற்காலிகமாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, தினசரிக் கூலிகளாக இருக்கின்ற அவர்களுக்கு, 1971-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து 4 அணா சம்பள உயர்வு கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே ஒன்று கேட்க விரும்புகிறேன். மின்சார இலாகாவில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் தினக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களைப் பெர்மனன்ட் செய்யாமல் வைத்திருப்பது சரிதானா?



[திரு. கே. என். குமாரசாமி]

அரசாங்க நிறுவனங்களில் கூட சட்ட ரீதியாகக் கொடுக்க வேண்டிய உரிமைகள் கொடுக்கப்படவில்லையென்று தனியார் நிறுவனங்கள் சுட்டிக் காட்டக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவே மின்சார இலாகாவிலே தற்காலிகமாக அவ்வளவு தொழிலாளர்களை வைத்திருப்பது நியாயந்தானா? நம்முடைய தொழிற் தகராறு சட்டங்களிலும், ஸ்டாண்டிங் ஆர்டர்களிலும் 240 நாட்கள் வேலை செய்துவிட்டால் பெர்மனன்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது இவர்களை நிரந்தரமாக்காமல் தினக்கூலிகளாக வைத்திருப்பது எந்த விதத்தில் பொருத்தமாக இருக்கிறது என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே அவர்களுக்குச் சட்ட ரீதியாகக் கிடைக்க வேண்டிய கூலியையும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் வசூல் செய்கிறார்கள். இது அநியாயமானது. ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் மினிமம் சார்ஜ் வசூலிப்பதோடு நின்றுவிடுகிறார்கள். ஆனால் விவசாயிகளிடத்திலே அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட் என்று சொல்லி மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்கு பார்த்து ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு என்று வசூலிப்பது என்பது நியாயமல்ல. ஓட்டுகின்ற அளவுக்கு சார்ஜ் கட்டுவதற்கே அவர்கள் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த மினிமம் அக்ரிமெண்ட் சார்ஜ் என்பதை ரத்து செய்யவேண்டும்.

தொழிற்சாலைகளுக்குக் கரண்ட் குறைவான வீதத்தில் கொடுக்கிறார்கள். ஆனால் விவசாயிகளிடத்திலிருந்து அதிகமாக வசூல் செய்கிறார்கள். தஞ்சாவூரிலே இருக்கின்ற ஒரு விவசாயி ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய பாசன வசதிகள் செய்துகொடுப்பதன் மூலம் ஆகின்ற செலவு 30 ரூபாய். ஆனால் கோயம்புத்தூரில் கிணறு வெட்டி, நீரெடுத்து பாசனம் செய்ய ஆகின்ற செலவு ஒரு ஏக்கருக்கு 270 ரூபாய். ஆனால் தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளும், கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளும் ஒரு மார்க்கெட்டில் தான் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை விற்கிறார்கள், இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள். தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகிற பொருள்களை மார்க்கெட்டிலே அதிகமான விலைக்கு விற்று அதிகமான லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு ஆகின்ற உற்பத்திச் செலவைக் குறைக்கமுடியாத அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. எனவே மின்சாரச் செலவை அவர்களுக்கு குறைக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அந்த அடிப்படையிலே விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கின்ற வகையிலே செக்யூரிட்டி, மினிமம் கியாரண்டி போன்றவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் மின் இணைப்பைப்பற்றி சில பிரச்னைகள் இருக்கின்றன. என் தொகுதியில் பல்லடத்தில் மின் பூரணத்துவ ஆண்டு விழா வேறு கொண்டாடி விட்டோம். ஆனால் பல்வேறு

கிராமங்களில் மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. அதைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சார இலாக்கா விரைவாகச் செயல்பட்டால், நிர்வாகத் திறமையில் மந்தமான சூழ்நிலை ஏற்படுவதைப் போக்கினால் அதற்குப் பூரண முயற்சி எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டிலேயும் ஹரியானாவைவிட அதிக முன்னேற்றம் கிடைக்கும். இப்பொழுது நாடு முழுவதும் சிறு தொழில் உற்பத்தியிலே முன்னேற வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும் நேரம். ஹரியானாவைவிட இந்த நாட்டில் சிறுதொழிலில் ஊக்கம் பிறக்கும் அளவிலே மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். ஆகவே சிறுதொழில்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்காகப் புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும். கேரள அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தீர்த்துக்கொண்டு உடனடியாக நாம் மின்சாரம் கிடைக்கக் கூடிய வாய்ப்பை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும். சிறுதொழில் உற்பத்திக்கு மின்சாரம் கிடைப்பதிலே காலதாமதம் அதிகமாக இருக்கிறது. ஹரியானா ஸ்டேட்டிலே மின்சார இணைப்பிற்கு ஒரு இடத்தைக் காட்டினால் அனுமதியை உடனே கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே வீட்டு ரசீது அல்லது அதன்பேரிலே சரியான கட்டடம்தானா என்பதற்கான சர்ட்டிபிகேட் போன்றவைகளைக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில்லாமல் சிறு தொழில் என்று சொல்லும்பொழுது உடனே அவர்களுக்கு மின்சார இணைப்புக் கொடுக்க, காலதாமதம் இல்லாமல் கொடுக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். பெரிய தர்ம சங்கடம் என்னவென்றால் அங்கேயிருக்கும் பூரண நிலைமைகளையும் விளக்கினால்தான் மின்சார இணைப்பை மின்சார இலாக்காவினர் கொடுக்கிறார்கள். அந்தக் கஷ்டம் இல்லாமல் பூரணமாக உடனடியாகக் கிடைக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மே. சி. தாயமணி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1971–72-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின்மீது நானும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நல்கிய வாய்ப்பிற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முகிலைக் கிழித்துக்கொண்டு வெளிவரும் முழுமதியைப்போல் தமிழகத்து இருளை விரட்டி ஒளிமயமான மின்சார முழுமை விழா நாடுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நல்லவேளையில் நமது திறமைமிகு மின்துறை அமைச்சர் இந்த நிதி நிலை அறிக்கையை சக்தி வாய்ந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த இனிய நோக்கில் நான் எடுத்துச் சொல்வதெல்லாம் 1969-ம் ஆண்டு சனவரித் திங்களிலே துவக்கப்பட்ட பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் நில வர்ஜிதம் செய்வதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவும், தமிழ்நாடு, கேரள அரசுகளுக்கிடையிலே நீரைப் பங்கிட்டுக் கொள்வதிலே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாகவும் இத்திட்டம் துவக்கிய ஆறுமாத







காலத்திற்குள் நிறுத்தப்பட்டு விட்டது. இத் திட்டத்தின்படி பணியைத் துவக்குகிறபோது அத் திட்டத் தண்ணீர் முழுவதும் கேரளா சென்றடைகிறது. இதனாலே எங்கள் கோவை மாவட்டத்திற்கும் நான் சார்ந்துள்ள அவினாசி வட்டத்திற்கும் கடுகளவும் பயன்படுவதில்லை என்கிற தாழ்மையான கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1965-ம் ஆண்டில் காங்கிரஸ் அரசு, கேரள அரசோடு செய்து கொண்ட இத்திட்ட ஒப்பந்தப்படி நாம் மின்சாரம் தயாரித்த பின்னர் மீதமுள்ள தண்ணீர் முழுவதும் கேரள நாட்டிற்குக் கொடுத்துவிட வேண்டும். இதனால் கேரள அரசு ஒரே ஒரு மின் நிலையம் அமைத்து மின்சாரம் தயார் செய்துவிட்டு அனைத்து நீரையும் அரபிக் கடலுக்கு அனுப்பி வைத்து விடுகிறது. ஆனால் இந்த நீரைக் கோவைக்குக் கொண்டு வருவதால் அவர்களுக்கு ஏற்படுகிற இழப்பு வெறும் 50 மெகாவாட் மின்சாரம் மட்டுமே. ஆனால் கேரளா ஏற்கனவே போதுமான மின்சாரத்தைப் பெற்றுள்ளது. இது தவிர இடுக்கி போன்ற பெரும் மின்திட்டங்களையும் நடத்திக் கொண்டு வருகிறது. அத் திட்டத்தால் அதிகப்படியான மின்சாரம் அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்புள்ளது. ஆனால் கோவை மாவட்டத்திற்கு நீரைக் கொண்டுவருவதினால் அவர்களுடைய விவசாயமோ அல்லது மின்துறையோ, தொழிற்சாலைகளோ இம்மியளவும் பாதிக்கப்படுவதில்லை என்பதனை நாம் உணர வேண்டும். அது மட்டிலுமல்ல, பாண்டியாறு புன்னம்புழாவில் இருக்கிற ஆறுகள் அனைத்தும் தமிழகத்திற்குள்ளேயே உற்பத்தியாவதால் அத் தண்ணீரைக் கோவைக்குக் கொண்டுவர தமிழக அரசு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியாறு-புன்னம்புழா என்ற திட்டத்தைப் பாண்டியாறு-மோயாறு திட்டம் என்று மாற்றி ஏற்கனவே அளவை வேலைகள் நடந்து வருகிறது. இத் திட்டத்தின்படி பாண்டியாற்றில் ஓர் அணையும் புன்னம்புழாவில் ஓர் அணையும் அதற்கு உறுதுணையாக திருப்பு அணை ஒன்றையும் கட்டி தேக்கப்படும் நீரை வாய்க்கால் வழியாக மோயார் பள்ளத்தாக்கில் சேர்த்து அங்கிருந்து மேல் மோயார் என்ற இடத்தில் அணையைக் கட்டி மின்சாரம் தயாரித்த பின்னர் அந்நீரைக் கோவைக்குக் கொண்டுவர திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக அறிகிறேன். எனவே, இத் திட்டத்தை விரைவில் செயல்படுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களும் மின்துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு உடனடித் தொடர்பு கொண்டு தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண்டுமென என் தொகுதி வாழ் மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். தமிழக மின் வாரியத்தில் 71,000 தொழிலாளர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அதில் 31,000 பேர் தமிழ்நாடு மின்

[திரு. மே. சி. தூயமணி]

கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறார்கள். இப்படி ஒரு பெரும் சங்கமாகத் திகழும் இந்த அமைப்பு இதுவரை அங்கீகாரம் பெறாத வருந்தத்தக்க நிலையிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரையில் நடைபெற்ற இச்சங்கத்தின் பாண்டிமண்டல மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போது நான் பச்சைக்கொடி காட்டிவிட்டேன் ரயில்தான் புறப்படவில்லை என்று கூறினார்கள். ஆனால் அந்த ரயில் இன்னும் புறப்படாத நிலையிலே இருக்கிறது என்பதை மீண்டும் நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பணிபுரிந்துவரும் தினக்கூலி தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தி மாத ஊதியத் தொழிலாளர்களாக நியமித்து அவர்தம் மங்கிய வாழ்வை மலரச் செய்ய வேண்டுகிறேன்.

நீர்மின் ஆய்வுப் பகுதியில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆய்வு நடத்துகிறபோது அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிற இன்னல்களுக்கு அளவே இல்லை. எனவே அதனை மனதிற்கொண்டு கட்டுமான திட்டப் பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கும் சிறப்பு ஊதியமும் சொந்த ஊருக்குச் சென்றுவர பயணப்படியும் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

கடைசியாக நெல்லித்துறை நீர்மின் திட்டம் துவங்கி வேலைகள் வேகத்திலே நடந்து வருகின்றன என்றாலும் அதன் ஆக்க வேலைகள் ஆமை வேகத்திலேதான் நகர்ந்து கொண்டு வருகிறது. எனவே, அதனை முயல் வேகத்திலே முடுக்கிவிட தமிழக அரசு முழுக்கவனம் செலுத்த வேண்டுமென்பதை இந்த இனிய நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பாண்டியாறு-புன்னம்புழா சுருளியாறு, சேருவலாறு ஆகிய நீர்மின் திட்டங்களையும் விரைவுபடுத்த எல்லாவகை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று எடுத்துச் சொல்லி அமர்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Chairman, Sir, I wish to say a few words on the Annual Financial Statement 1971-72 and also on the Supplementary Financial Statement for 1970-71 on Electricity. In that Statement, the Hon. Minister for Electricity has stated—

'Recognising that Power is indispensable for development in agriculture and industry, programmes for generation and distribution of power have been assigned greater importance in our



[Thiru K. S. Kothandaramiah]

Further, in the statement it is also stated that the total number of villages already electrified is 42,229 and the total number of pumpsets energised 5,30,044 and also electricity has been extended to a number of Harijan colonies. It clearly shows that this Government are interested in extending electricity and are seized of the matter. We know that the biggest planet, Sun which is shining in the sky gives light and sends its rays for dispelling darkness during day-time. But it does not dispel darkness during nights. But, by extending electricity to the entire State, this Government are dispelling darkness not only during day-times but also during night-times. In this way they are taking a lot of interest in this matter. As a representative of my constituency, I have to bring to the attention of the Hon. Minister that the Dharmapuri district is a very backward district and it is really hilly and the distance between one village and another is very great, say four or five miles. There are a number of hamlets under a revenue village. In Hosur and Denkanikotta taluks, there are about 200 revenue villages. In some panchayats there are about 10 to 11 hamlets. But unfortunately, the panchayats are not able to get the number of lights required for it since the lights are sanctioned on the strength of financial stability of panchayat. Many panchayats are very poor and are not able to give solvency certificate for the number of lights it requires. The result is they are not able to provide lights, adequate lights or at least the minimum required number of lights for its hamlets. Unless the strict rules of solvency are relaxed, panchayats will not be able to provide sufficient lights for all the hamlets. For example if a panchayat has got 10 to 11 hamlets, they require at least 50 lights; but they get only 20 to 25 lights. Only that much is sanctioned. Therefore I say, relax the rules of solvency and see that more lights are provided for each panchayat.

Moreover, Dharmapuri district is very backward. It has to develop economically. We have stated this on many occasion. A number of people are going away from Dharmapuri district to Bangalore and Salem each year for getting employments. Unless we develop Dharmapuri district industrially, it is not possible to check this migration and every year it means great loss to Government. Therefore it is imperative that electricity is extended to all hamlets in Dharmapuri district. Otherwise we cannot check the present migration.

In the recent special district development council meeting at K.R.P. Dam it was decided to introduce dry farming scheme in Dharmapuri district. For this also we require electricity for our villages. Therefore I request the Hon. Minister for Electricity to be kind enough to tour our district. All other Hon'ble Ministers have toured in the Dharmapuri district, and they have visited every taluk in that district number of times and they are in possession of details about the backwardness of the district. They know the backwardness of the district in every aspect. So I request

the Hon. Minister for Electricity also to our district, allotting a number of days and thus find out the reasons for the backwardness. Let him see to it that electricity which is the most essential need for development of any area, anywhere in the world, is given properly to our district.

The entire prosperity of humanity, the entire economic development of the modern world depends on electricity. Without electricity, modern world cannot itself exist even for a few minutes. When such is the case of the world, what about our State? That is why I say unless rural electrification is carried out successfully and quickly, there is no salvation for economic backwardness of our State. No doubt the Government is doing a lot in this matter and I request the Hon. Minister to take note of the backwardness of Dharmapuri district and kindly see that electricity is extended to all hamlets there.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு-செலவுத் திட்டம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1971-ம் ஆண்டு முடிவதற்குள்ளாக தமிழகத்தில் இருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதையொட்டி இன்றையதினம் மின்சார இலாக்கா வெகு வேகமாகச் செயல்பட்டு வருவதை யாரும் மறுக்கமுடியாது. இன்றைய தினம் 42,000 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் மொத்தம் 70 சதவிகிதம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிராமப்புற மக்களுக்குத்தான் அதிக மின்சார வசதி செய்து கொடுப்பது அவசியம். மின்சாரம் தெருக்களுக்கு மாத்திரமல்லாமல், வீடுகளுக்கு மாத்திரமல்லாமல் சிறு தொழில்களுக்குக் கொடுப்பது இன்றைய தினம் மனிதர்கள் வாழ்வதற்கு அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது.

அவ்வாறு பார்க்கும்போது தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் மிகப் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. மற்ற மாவட்டங்களில் எல்லாம் மின்சார விஸ்தரிப்பு வேலை வேகமாக நடைபெற்று வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தடை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த மாவட்டம் முழுவதும் விவசாய நிலங்களாக இருக்கும் காரணத்தால் குறிப்பிட்ட காலத்தில்தான் அந்த மாவட்டத்தில் வேலைசெய்ய முடிகிறது. ஆகவே, அந்த மாவட்டத்திலே பிப்ரவரி மாதத்திலே வேலையை ஆரம்பித்து ஜூன் மாதத்திற்குள்ளாக முடிக்கின்றவகையில் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். அதற்குரிய முறையில் அந்த மாவட்டத்திற்குத் தேவையான மின் பெட்டிகள், கம்பங்கள், இதர பொருள்கள் அனைத்தையும் சேர்த்து





வைத்துக்கொள்ள வேண்டும். அங்கு தனியார் துறையில் இருந்தாலும் ஜூன் மாதத்திற்குள் வேலையை முடிக்க வேண்டுமென்று கூறவேண்டும்.

இன்றைய தினம் மின்சாரம் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் அணு மின் நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது பற்றி ஆலோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அணுமின் நிலையத்தை உடனடியாக ஆரம்பிக் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள குடந்தை, நாகை மற்றும், திருச்சி, தூத்துக்குடி, நெல்லை போன்ற இடங்களில் உள்ள தனியார் மின்சாரக் கார்ப்பரேஷனை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இதுபோன்று அரசாங்கம் எடுத்துக்கொள்ளாது இருக்கும் எல்லா மின்சார கார்ப்பரேஷன்களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். கும்பகோணம் கார்ப்பரேஷன் செப்புக் கம்பிகளை எல்லாம் மாற்றி வேறுகம்பிகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்கின்ற வகையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பெரிய அளவுக்கு நஷ்டத்திற்கு ஆளாகக் கூடிய நிலைமை ஏற்படும்.

முதல்வர் அவர்கள் அண்மையில் கூறிய திட்டப் பிரகாரம் ஐந்து ஆண்டு மின்சார வாரியத்தில் வேலை செய்த தொழிலாளர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்பது எப்படி நடைமுறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று தெரியவில்லை. இன்றைய தினம் நம்முடைய மின்சார வாரியத்தில் 31,000 பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். இவர்களிலே சரிபாதிப் பேரையாவது நிரந்தரமாக்க வேண்டும். அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே ஐந்து ஆண்டு காலத்திற்கு 25,000 பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கனவே தாற்காலிகமாக வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களிலே சரி பாதிப் பேரையாவது நிரந்தரமாக்குவதன் மூலம் அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய நிலை ஏற்பட முடியும். அதோடு மட்டுமல்லாமல் மின்சார வாரியத்தில் வேலை செய்யக்கூடியவர்களில் 80 சதவிகிதம் பேர் ஏழை அரிசனங்களாகவும், பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்தவர்களாகவும்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிக்கின்ற முறையில் அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் மின்சார வாரியமானது ஐந்து நகரசபைகளின் மேற்பார்வையில் இருந்த மின்சார கார்ப்பரேஷன்களை மேற்கொண்டிருக்கிறது. அதேபோன்று மற்ற மற்ற கார்ப்பரேஷன்களையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.

கோவையில் இருக்கும் மின்வாரிய ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மிகவும் பாராட்டுகிறேன். அங்கீகாரம் அல்லாத சிறுபான்மையோர்கள் சேர்ந்து அமைத்

[1971 டிசம்பர் 7

[திரு. ஆ. கு. சுப்பையா]

இருக்கும் சங்கங்களுக்கு அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்காத முறையில் நமது முதல்வர் அவர்களும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் அவர்கள் அழைத்த நிகழ்ச்சியில் பங்குகொள்ளாமல் இருந்தார்கள். அது பெரிய அளவுக்குத் தொழிலாளர்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது.

மின்சாரம் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கும் காரணத்தால் இதிலே மிகப் பொறுப்போடு பணியாற்ற வேண்டும். அந்த முறையில் பொறுப்போடு செம்மையாகக் காரியங்களை நிறைவேற்றி வருவதற்காக நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரியச் சேர்மன் அவர்களுக்கும் தலைமைப் பொறியாளர் அவர்களுக்கும் மற்றப் பொறியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எல்லாம் மிக வேகமாக இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். 1972 ஜூன் மாதத்திற்குள் வேலையை முடித்துவிட வேண்டும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை நான் கூறிய யோசனைகளை அமைச்சரவை ஏற்று ஜூன் மாதத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவதாக இன்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் பிறந்த இந்த நன்னாளில் அவர்களுக்கு தங்கள் மூலம் என் தொகுதி மக்கள் சார்பாகவும் என் சொந்த சார்பிலும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கடைசி மாவட்டத்தைச் சார்ந்தவன், கடைசித் தொகுதியைச் சார்ந்தவன் என்ற முறையிலும் இந்தக் கடைசிக் கோடியில் இருக்கிறமையினாலும், எனது மாவட்டத்தைச் சார்ந்த மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்தை ஈர்த்து கேள்விகளும் உப கேள்விகளும் கேட்பதற்கு வாய்ப்பிருக்கிற நிலையில் நான் பல முறை முயற்சி செய்தும்—இப்போதல்ல—சாதாரணமாக கையை உயர்த்தியும் அவர்களது கவனத்தை ஈர்க்க முடியாததால் இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு தலைவரவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீது பேசுங்கள்.

**திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை :** இதில், இந்த அறிக்கையில், எல்லாவற்றையும் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அதுபற்றித் திரும்பக் கூறுவதற்கு நான் விரும்பவில்லை. என் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒருசில தேவைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சாரம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல்



1971 டிசம்பர் 7]

[திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை]

பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் கொடுப்பதும், வேளாண்மையைப் பெருக்குவதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும் என்று நான் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். உதாரணமாக, நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருக்கிற யூனியனில் வீரநாராயணமங்கலம் என்ற கிராமத்தில் பஞ்சாயத்து யூனியனிலிருந்து சுமார் ரூ. 30,000 செலவில் ஒரு மேல் நீர் நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அந்த மேல் நீர் நிலைத் தொட்டிக்கு மின்சார இணைப்பு கொடுக்கும் விஷயத்தில் அதில் லாப நஷ்டக் கணக்குகளைப் பார்த்து அந்தக் கிராமத்திலிருந்து சுமார் ரூ. 7,000 கட்டினால்தான் அந்த மேல் நீர் நிலைத் தொட்டிக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஏன் என்றால் இப்போது இருப்பது சிங்கிள் ஃபேஸ்ட் லைன். அதைத் த்ரீஃபேஸ்ட் லைனாக இழுக்க அதற்குரிய செலவில் ரூ. 7,000 வரையில் அந்த மக்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் அரசு எந்த இலட்சியத்தோடு செயல்படுகிறதோ அந்த இலட்சியத்தை நம்மால் நிறைவேற்ற முடியாது என்ற நிலை உருவாகி விடும். அதுபோலவே வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

குறிப்பாக இந்த யுத்த நெருக்கடி சமயத்தில் அது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் கூறத் தேவையில்லை. சமீபத்தில் டெல்லியில் கூடிய யுனைட்டெட் நேஷன்ஸ் இண்டர்ரீஜனல் கான்பரன்ஸ் ஆன் எலெக்ட்ரிசிட்டி மாநாட்டில் நம் குடியரசுத் தலைவர் அவர்கள்கூடக் கூறியிருக்கிறார்கள். கடந்த ஆறு ஆண்டுக் காலத்தை எடுத்துக்கொண்டால் முன்னேறுகின்ற நாடுகளில் உணவு உற்பத்தி 0.1 சதவிகிதம் குறைந்திருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். இந்த நிலைமையில் போகுமானால் மக்கள் பசியால் பட்டினியால் சில ஆண்டுகளில் மாண்டு மடிந்து போவார்கள் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கூறியிருப்பது கூடுமானவரையில் மின்சார இணைப்பு வேளாண்மை உற்பத்திக்காக எங்கெல்லாம் கொடுக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அந்த முறையில் என் தொகுதியில் மருங்கூர் போன்ற பகுதிகளில் நிறையத் தென்னந்தோப்புகள் இருக்கின்றன. அங்கு ஏக்கர் ஒன்றுக்கு 400 தேங்காய்கள், 500 தேங்காய்கள் காய்க்கும் என்றால் தண்ணீர் வசதி இருந்தால் 1,500 காய்கள் காய்ப்பதற்கு வசதி இருக்கிறது. அங்கும் நாம் மின்சார இணைப்பு கொடுக்கும்போது ஐந்தாறு பம்ப் செட்கள் இருந்தால் 20, 25 பம்ப் செட்ஸ் வைத்தால் தான் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதுவும் லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து சொல்லப்படுகிறது. ஐந்தாறு பம்ப் செட்கள் இருந்தாலும் மின் இணைப்பு கொடுக்கப்படுமானால் அதிகமான பம்ப் செட்ஸ் வர வாய்ப்பிருக்கிறது. ஆகவே பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கானாலும் சரி

[1971 டிசம்பர் 7

[திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை]

அல்லது வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கானாலும் சரி, மின்சாரம் மிக முக்கிய அம்சத்தை வகிக்கிறது. ஆகவே லாப நஷ்டக் கணக்குப் பாராமல் அவைகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

கடைசியாக தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான் பார்க்கிறேன். வருடத்திற்கு ஒன்றிரண்டு பேர்களாவது மின்சாரக் கம்பங்களில் ஏறும்போது தொழிலாளர்கள் இறந்து விடுகிறார்கள். அது கவனக் குறைவினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ, தெரியாது. கவனக்குறைவினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மின்சாரக் கம்பங்களில் ஏறும்போது தொழிலாளிகள் இறப்பது என்பது மிகவும் தவறு. ஆகவே, அதைக் கவனத்தில் கொண்டு அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அப்படிக் கம்பங்களில் ஏறும்போது தொழிலாளர்கள் இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு தகுந்த நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது பேசுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றால் ஒரு வெற்றி விழாவில் பேசுவதைப் போன்ற ஒரு உணர்வைப் பெறுகிறேன். நம் நாடு சுதந்திரம் அடையும் போது 156 மெகாவாட் சக்தியைப் பெற்றிருந்த இந்த மாநிலம் இன்று 2,075 மெகாவாட் சக்தியைப் பெற்றிருக்கிறது என்பதை நினைக்கும்போது எத்துணை தூரம் நம் மாநிலம் மின்சாரத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதைக் கண்டு உண்மையில் நான் பெருமையடைகிறேன்.

அப்படிப் பெருமையடையும்போது ஒரு முக்கிய அம்சத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம் மாநிலத்தில் வேலையற்றிருப்போருக்கு வேலை தருவதில் மின்சார வாரியம் இன்று ஒரு முக்கிய பங்கைப் பெற்றிருக்கிறது. அமைச்சர் அவர்களின் அறிக்கையில், வரக்கூடிய ஐந்தாண்டுகளில், 25,000 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கான ஒரு குறிப்பினைக் காண்கிறேன். அது உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. அப்படி 25,000 பேர்களுக்கு வேலை அளிக்கும்போது நான் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அப்படி 25,000 பேர்களுக்கு வேலை கொடுக்கும்போது நான் சார்ந்துள்ள சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும், ஏனைய சிறுபான்மை சமுதாயத்தினருக்கும் உரிய பங்கு அதில் கிடைக்க தாங்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். எரியாத விளக்குகள் பற்றிப் பேசப்பட்டது. அது



1971 டிசம்பர் 7]

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பற்றி மீட்டர் முறை வைக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். என் அனுபவத்தில் அம்மாதிரி மீட்டர் முறை வேண்டாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நூறு விளக்குகளில் இருபது விளக்குகள் எரியாமல் எண்பது மட்டுந்தான் எரிகிறது என்றாலும் இந்த மீட்டர் முறை வேண்டாம்.

பேரூராட்சிகளில் 200 மணி நேரம் எரித்துக் கொள்ளலாம் என்ற ஒப்பந்தப் பிரகாரம் எரிக்கும்போது விளக்குகள் 8. 9, 10 மணிக்கு என்று வரிசைக் கிரமமாக அணைக்கப்படுவதில்லை. சில விடியற்காலை வரை கூட எரிந்து கொண்டிருக்கின்றன. சில எரியாவிட்டாலும் சில விடியற்காலை வரை எரிந்து கொண்டிருக்கின்றன. அது ஒரு நன்மையாகக் கூட இருக்கிறது. மீட்டர் முறை வந்தால் இப்போது செலுத்தக்கூடிய கட்டணத்தை விட அதிகப்படியான கட்டணம் செலுத்தும்படியான ஒரு நிலை ஏற்படும். முன்னர் ஒரு பேரூராட்சி மன்றத் தலைவனாக இருந்த அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நாடு முழுவதும் ஒளிமயமாக ஆகிக்கொண்டிருக்கும்போது குடிசைவாழ் மக்களுக்கு இன்னும் அந்த இன்பம் கிடைக்கவில்லை. அவர்கள் வீட்டுப் பள்ளிப் பிள்ளைகள் மின் விளக்கின் அடியில் உட்கார்ந்துகொண்டு படிக்கும் தன்மை ஏற்படவில்லை. ஆகவே நான் ஒரு திட்டத்தைக் கூற விரும்புகிறேன். ரூ. 500 க்கு மேற்படாத குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுத்துவிட்டு மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கட்டணம் ஒரு பல்புக்காக என்று எவ்வளவு எரித்தாலும் நெட் ரேட் ஒரு ரூபாய் என்று—ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இப்படிப்பட்டதொரு திட்டம் குடிசை வாழ் மக்களுக்கு நல்லதொரு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

நான் ஒரு வணிகன். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்ற ஒரு பழமொழி சொல்வார்கள். கசாப்புக் கடைக்காரனுக்கு கொழுத்த ஆட்டைப் பார்க்கிறபோது அதன் மீது ஒரு ஆசை. இந்த மின்சாரத் துறையும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதைப் பார்க்கிறோம். இன்று மின்சாரத் துறை மின் விசையை வீட்டு உபயோகத்திற்காகவும், வியாபாரத்திற்காகவும் உபயோகப்பவர்களிடமிருந்து தான் கூடுதலான கட்டணத்தை வசூலிக்கிறது. பெரும்பான்மையாக மின்சாரத்தை உபயோகிப்பவர்களிடமிருந்து தான் மிகக்குறைந்த தொகை வசூலிக்கப்படுகிறது. அந்தச் சலுகையை ஏன் இந்தக் குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகிப்பவர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ காலங்களில் விளக்கு அலங்காரங்கள் வீடுகளின் முன்பு, கடைகளின் முன்பு செய்தால் ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் அபராதக் கட்டணம் விதிக்க வேண்டுமென்று சட்டம் இயற்றி இருப்பதாகக் கேட்டு வருத்தப்படுகிறேன். வணிக வர்க்கத்தின் மீது அனுதாபம்

[1971 டிசம்பர் 7

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

கொண்டு இந்தக் கட்டணத்தை மாறுதல் செய்து, வணிகர்களுக்கு அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று வணிகர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு நாடு தொழில்துறையில் முன்னேற வேண்டுமானால், மின்சாரம் எந்த வகையில் அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிறதோ அந்த வகையில்தான் நாடு முன்னேற முடியும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை மத்திய அரசிடம் மிக ஆழமாக வற்புறுத்தி அதைப் பெற்று, மேலும் 500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யத் தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்விசை அத்தனையையும் தமிழகத்திற்கே கிடைக்கிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின்சாரத்துறை நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மின்சார வாரியம் கடந்த 4 ஆண்டு காலமாக ஆற்றுகிற பணி உள்ளபடியே இந்த நாடு போற்றக்கூடியதாகும். மின்சார வாரியம் 1972-ம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தருவதில் ஆர்வம் காட்டி வருவதையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நல்ல திட்டத்திற்கு. மின்சாரத் துறையில் பணியாற்றுகிற அதிகாரிகள், ஊழியர்கள் அத்தனை பேரும் நல்ல ஒத்துழைப்பைத் தந்து, விரைவில் அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் நாம் அத்தனை பேரும், இந்த மாமன்றமும் பாராட்டுவதில் நானும் பங்கு கொள்கிறேன். நாம் பாராட்டுகிற நேரத்தில், தேன் உண்ட வண்டுபோல் அதில் இருக்கும் சில அதிகாரிகள் மயங்கி சிலபல தவறான காரியங்களைச் செய்கிறார்கள். அந்த நேரத்தில் குளவி கொட்டுவதுபோல் கொட்டவேண்டிய பொறுப்பும் நம்மிடம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் இதை நான் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து சில தவறான தகவல்கள் இங்கே அனுப்பப் பட்டிருக்கிறது என்பதால்தான் அதைச் சுட்டிக் காட்டுவதால் நான் செய்தவறைக் கருதுகிறேன். ஆகவே தான் அதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.



1971 டிசம்பர் 7]

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

இந்த 1969-70-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையின் புத்தகத்தின் 125 வது பக்கத்திலே என்னுடைய தொகுதியைச் சார்ந்த, தொண்டமாங்கிணம், மத்தகிரி பஞ்சாயத்தில் நாய்க்கனூர், நாய்க்கம்பட்டி, வரகூர், வேலாம்பட்டி, கருங்கல்பட்டி, ஆத்துப்பட்டி, வடக்குக் கல்லுப்பட்டி, தெற்குக் கல்லுப்பட்டி. தொட்டியப்பட்டி, தாராபுரத்தனூர் போன்ற பகுதிகளுக்கு டிசம்பர் மாதம் 4-ம் தேதி வரை மின் இணைப்பு தரப்படவில்லை. ஆனால் இந்தப் புத்தகத்தில் தந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அது திருச்சி மாவட்டத்திலிருந்து வந்த தகவல் என்பதை அறிந்து உள்ளபடியே நான் மிகுந்த வருத்தப்படுகிறேன். மின்சாரத் துறையில் சென்ற 2 மாதத்திற்கு முன்பு ஒரு உதவிப் பொறியாளருக்கும் அவருக்கும் கீழ் பணியாற்றுகிற ஒரு நபருக்கும் ஏதோ ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. பொறியாளர் குடித்து விட்டுத் தகராறு செய்தார் என்றும், சமீபத்தில் கடந்த வாரம் ஆண்டிமடத்தில் ஒரு இளம் பொறியாளர் ஒருவரை, அவருக்குக் கீழ் பணியாற்றும் ஒருவர் அடித்து விட்டார். அடிபட்ட இளம் பொறியாளர் குடித்து இருந்தார், ஆகவே அடிபட்டார் என்றும் தவறான தகவல் திருச்சி மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறது. இதை எண்ணுகிறபோது உள்ளபடியே நான் மெத்த வருத்தப்படுகிறேன். ஏன் என்றால் நாம் பாராட்டுகிற இந்த நேரத்தில் அதிகாரிகள் இதுபோன்ற தவறுகளைத் தருகிறார்களே, தவறான தகவல்களை அனுப்புகிற நிலையில் இருக்கிறார்களே என்ற நிலைமையைச் சுட்டி இனிமேலாவது இப்படிப்பட்ட தவறுகளை நீடிக்க விட வேண்டாம் என்று இந்த மன்றத்தின் மூலமாக விரும்பி வேண்டிக் கேட்டு கொள்கிறேன்.

இன்னொரு பெரிய தவறையும் இந்த அட்மினிஸ்டிரேஷன் ரிபோர்டிலே இருப்பதை நான் காண்கிறேன். சென்ற 5-ம் தேதி அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அமெரிக்கா பயணம் சென்று திரும்பி வரும்போது சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே நம்முடைய அரசு வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. ஹரிபாஸ்கர் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். ஆனால் இன்று இந்தப் புத்தகத்தைப் பார்க்கிறபோது, இதிலே அவர் சாகடிக்கப் பட்டிருக்கிறார் என்று பார்க்கிறபோது உள்ளபடியே மிகுந்த வேதனையோடு நான் இதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாடு எலெக்டிரிசிடி போர்ட் 13-வது ஆண்டு அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்டின் (1969-70) புத்தகத்தின் 55-வது பக்கத்தின் கடைசி 4 வரியை தயவுசெய்து புரட்டிப் பார்க்குமாறு அழைக்கிறேன்.

"Thiru P. Sivalingam, B.E. (Hons.), M.S. (California) was appointed with effect from 6th August 1969 in the place of Thiru T. Muthian, deceased Thiru N. Haribaskar, I.A.S., Director of Agriculture was appointed with effect from 13th May 1969 in the place of Thiru E. C. P. Prabhakar, I.A.S."

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

அது எத்தகைய பாதகத்தை ஏற்படுத்துகிறது என்பதை நம்முடைய மின்சார வாரியம் உணர்ந்து நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நம்முடைய அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியில் மின்சார வாரியம் எந்த அளவுக்குக் கவனம் செலுத்தி இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக 1970-71-ஆம் ஆண்டு ஏறத்தாழ 2.029 ஹரிஜன் குடியிருப்பு காலனிகளுக்கு மின்சார வசதி செய்து தந்து இருக்கிறது. நான் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தேன். இப்படிப்பட்ட சாதனையை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மின்சார வாரியம் எந்த ஆண்டும் செய்யவில்லை. இதற்காக மின்சார வாரியத்தை எந்த அளவுக்குப் பாராட்டினாலும் தகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசின் இந்தச் சாதனையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் பாராட்டி வரவேற்று இருக்கிறார்கள்.

நம்முடைய மின்சார வாரியம்போல் தனியார் துறை மின்சார வாரியங்களும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இயங்கி வருகின்றன. இதை அனைவரும் அறிவோம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே தென் மதராஸ் மின்சார கார்ப்பரேஷன் ஒன்று இயங்கி வருகிறது என்பது இந்த மாமன்றத்திலுள்ள எல்லோரும் நன்கு அறிவார்கள். இந்தத் தனியார் கார்ப்பரேஷனை அணுகி தெருவிளக்கு போடுவதற்கோ, அல்லது பம்ப்செட் போடுவதற்கோ கேட்டால் அந்த விவசாயிகளிடம் நீங்கள் 30,000 ரூபாய் 40,000 ரூபாய் கடன் தருகிறீர்களா, தந்தால் விரைவில் போட்டுத் தருகிறோம் என்று கேட்கிற காட்சியை நான்கூட நேரில் கண்டேன்.

ஆகவே, இந்த சௌத் மெட்ராஸ் எலெக்டிரிக் கார்ப்பரேஷனை நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, விரைவில் பொது மக்களுக்குச் செய்யவேண்டிய பணியைச் செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். கடந்த மாதம் கூட அந்தக் கார்ப்பரேஷனின் உரிமையாளர்களுக்கும். மின்சார வாரியத்திற்கும் பேச்சு வார்த்தைகள் நடந்ததாகவும், சில பல கிராமங்களை விட்டுக்கொடுப்பதாகவும், மீதியைத் தாங்களே செய்து கொடுப்பதாகவும் பேசப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள். இந்த மன்றத்தின் கவனத்திற்கும், மின்சார வாரியத்தின் அதிகாரிகளின் கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன் செய்யும் அத்தனை பணிகளையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லையென்றால், அரசாங்கத்தின் குறிக்கோளான 1972 டிசம்பருக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கிற திட்டம் எனது பகுதியைப் பொறுத்த வரையில் நிச்சயமாக நிறைவேற முடியாது. ஆகவே, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பணி முழுவதையும், மின்சார வாரியமே ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும்.



[திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

என்னுடைய தொகுதியில் பெரும்பான்மையான இடங்களில் பம்பு செட்டுக்கு இணைப்புக் கொடுத்திருக்கும் வாரியத்தையும், தமிழக அரசையும் பாராட்டி, மேலும் மேலும் தமிழகத்தை ஒளி வீசச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாரியத்தில் இருக்கும் குறைபாடினைச் சுட்டிக் காட்டினேன் என்றால், நான் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற அளவில், நான் ஆற்றவேண்டிய கடமையை செவ்வனே ஆற்றினேன் என்பதற்காக என்று சொல்லி, நிர்வாகம் நல்ல முறையில் நடந்து மேலும் மேலும் நல்ல முறையில் பணி செய்வதற்கு என் வாழ்த்தினைத் தெரிவித்து, பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. தொ. ப. சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1970–71-ம் ஆண்டு, துணை நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொண்டு பேச முற்படுகிறேன்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் பல புரட்சிகளைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. அதிலே பசுமைப் புரட்சி, தொழில் புரட்சி செய்து, விவசாயத்தில் அக்கறையோடு இருக்கவேண்டும் என்கிற நிலையை உண்டாக்கி, திட்டங்களைத் தீட்டி செயல் பட்டு வருகிறது. மின்சாரத் துறை மிக மிக முக்கியமான அளவில் செயல்படுவதைப் பார்க்கின்ற போது, அகில இந்தியாவிலும் உள்ள மற்ற மற்ற மாநிலத்தவர்கள் தென்னகத்தைப் பார்க்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம், காந்தியார் கிராம மக்கள் சிறப்பாக வாழ வேண்டும், நகரத்தில் கிடைக்கும் வசதிகள் கிராம மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணினார்கள். தென்னாட்டு காந்தியாக விளங்கிய அறிஞர் அண்ணா அவர்களும் தமிழகத்தில் கிராம மக்கள் வாழ்க்கை உயர வேண்டும் என்று எண்ணியபோது, கிராம மக்கள் வாழும் இடமெல்லாம் ஒளிமயமாக்கப் படவேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள். இன்றைக்கு எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதைத் தொடர்ந்து வாக்குறுதி கொடுத்து, மின்சாரத் துறையில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள். அரசு எண்ணியபடியே வாரியத்தின் அதிகாரிகளும் உற்சாகத்தோடு பணியாற்றுகிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் முழுமை விழா நடைபெறவிருக்கிறது. மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராமப் புறங்களில் நடக்கும் வேலைகளைப் பார்க்கும் அத்தனை மக்களும், கலைஞரை மனமாரப் பாராட்டுகிறார்கள்.

என் தொகுதியில் ஜவ்வாது மலை இருக்கிறது. அது மலைப்பகுதி. அங்கே என்னைப் பொறுத்தவரையில் 10,000 ஓட்டர்கள் வாழ்கிறார்கள். அவர்களெல்லாம் காடுகளில் வாழ்கிறவர்கள். இங்கே இரண்டு வீடு, அங்கே மூன்று வீடு, பத்து வீடு என்றும் பெரிய நகரம் என்றால் 100 வீடுகளும் உள்ள பகுதி.. அங்கு

[திரு. தொ. ப. சீனிவாசன்]

வகையில்தான் ஊர்கள் அங்கேயிருக்கின்றன. அந்த வீடுகளுக்கெல்லாம் மின் விளக்குகள் இருக்கவேண்டும் என்று, நடமாட முடியாத பகுதியாக இருந்தாலும், அதிகாரிகளும், தொழிலாளிகளும், எஞ்ஜினியர்களும், நடந்து சென்றும், மின்சாரக் கம்பங்களைச் சுமந்து சென்றும் பணியாற்றுகிறார்கள். வாகன வசதியற்ற அந்தப் பகுதியில், கம்பங்களைத் தோளிலே சுமந்து செல்கிறார்கள். மூன்று வீடு இருக்கும் இடத்திற்கும் சென்று மின் இணைப்புக் கொடுக்கிறார்கள். கிராம மக்கள் கூட, எங்களுக்கு எதற்கு மின் விளக்கு என்று கேட்டுக் கொண்டிருக்கும் அளவில் செயல்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தமிழக அரசு இன்றைக்கு எங்கெங்கு மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் மின் விளக்கு ஏற்றிவருகிறார்கள் என்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எங்கு வாழ்ந்தாலும், காட்டிலே வாழ்ந்தாலும், புற்றிலே வாழ்ந்தாலும், தமிழக அரசு அங்கே மின் விளக்குத் தருகிறது என்பதை அவர்கள் உணருகிறார்கள். அந்த வகையில் முழுமை பெற்று வடாற்காடு மாவட்டம் விழா நடத்த இருக்கிறது. இதையெல்லாம் தமிழ் நாட்டில் எதிர்க் கட்சிகள் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மிக மிக அத்தியாவசியமான நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கையில் பணம் இல்லாவிட்டாலும், மாட்டை வாங்கி, தீவனம் போட்டு, பயிர் செய்ய சங்கடமான நிலை இருப்பதால், அவர்களெல்லாம் மின் இணைப்பை எதிர்பார்க்கிறார்கள். இந்த அரசு துரித நடவடிக்கையாக, கூட்டுறவுத் துறையில் அவர்களுக்குக் கடன் கொடுத்து வருகிறார்கள், பம்புசெட்டுகள் அமைக்க. அப்படிச் செய்யும்போது, மின்சார அதிகாரிகள், தலைமை எஞ்சினியர் போன்ற உயர்மட்ட அதிகாரிகளை அணுகும்போது, நாம் சொல்லும் குறைகளைக் கேட்டு, உடனடியாகக் கேட்டு நிவர்த்திக்க வழிகாணுகிறார்கள். போகிற சட்டமன்ற உறுப்பினர்களை மரியாதையோடு நடத்திக் குறைகளைக் கேட்டுக் கொள்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் செயல் படும்போது, தாமதம் இருக்கும் நிலையைப் பார்க்கிறோம். வேதனை அடைகிறோம்.

இன்றைக்கு வாரியம் மூன்று அமைப்பாக இருக்கிறது—கமர்ஷியல் என்றும், கன்ஸ்ட்ரக்ஷன் என்றும், ஓ. அண்ட் எம். என்றும் மூன்று அமைப்பாக இருக்கிறது. மின்சாரம் கோரிப் போடுகின்ற மனு, பொதுவாக கமர்ஷியலுக்கு அனுப்புகிறோம். கமர்ஷியலுக்குப் பின்னால், நாம் கேட்கும்போது, கன்ஸ்ட்ரக்ஷனுக்கு அனுப்புவோம் என்கிறார்கள். அதிலெல்லாம் பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதை மாற்றி, இரண்டே அமைப்பாகச் செய்து, கமர்ஷியலையும், கன்ஸ்ட்ரக்ஷனையும் இணைத்துச் செயல் படவேண்டும் என்கிற என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.



[திரு. தொ. ப. சீனிவாசன்]

அடுத்தபடியாக, வீடுகளிலும், மற்றவிடங்களிலும், மின்சாரக் கணக்கு எடுக்கும்போது, ஓ. அண்ட் எம். பகுதியிலிருந்து ஊழியர்கள், லஸ்கர் போன்றவர்கள் வந்து வேகமாக மீட்டரில் கணக்கு எடுத்துப் போகிறார்கள். அதன் பிறகு வருவாய்த் துறையில், ரெவின்யூ யூனிட்டில், பட்டியலாகப் போட்டு விடுகிறார்கள். அங்கே குறைபாடுகளைக் கேட்டு நிவர்த்திக்க முடியவில்லை. மீட்டர் கணக்கு எடுக்கும்போது, ஏதாவது ஃப்யூஸ் ஆனாலும், வேறு ஆபத்து ஏற்பட்டாலும், அதைத் துரிதமான வகையில் நிவர்த்திக்க முடிவதில்லை. ஆகவே, ரெவின்யூ யூனிட்டிலிருந்தே ஊழியர்களை நியமனம் செய்து, கணக்கெடுத்துச் செய்யும் அளவில் தனிப் பிரிவாக இருந்தால் வசதியாக இருக்கும் என்கிற கருத்தையும் தெரிவிக்கிறேன்.

கிராமப் புறங்களில், இப்பொழுது ஊராட்சி மன்றங்களில் பணம் கொடுக்கிறோம். விளக்குகள் போடுகிறார்கள். சாதாரண விளக்குகள் போடுகிறார்கள். இரண்டு மூன்று ட்யூப் லைட்டுகள் போடுகிறார்கள். அதற்குப் பதிலாக ஒரே ட்யூப் லைட்டாக இருந்தால், மூன்று ரூபாய்தான் கட்டுமானம் ஆகிறது. கிராமப் பஞ்சாயத்துக்கும் எளிதாக இருக்கும். ஆகவே அந்த வகையில் செய்யவேண்டும் என்கிற கருத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, சாதாரண விளக்குகளைப் போடுவதற்குப் பதிலாக, ‘ சிங்கிள் ட்யூப் லைட் ’ என்ற அளவில் மாற்றியமைத்தால், ஊராட்சி மன்றத்திற்கும் நன்மையாக இருக்கும். இதனையும் ஏற்றுச் செய்ய வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக தனியார் துறையில் இருக்கும் பகுதிகளும், அரசின் கண்காணிப்பில் வந்தால், அரசுக்கும் வருவாய் வரும், மக்களுக்கும் நன்மையாக இருக்கும். உதாரணத்திற்கு, வேலூரை எடுத்துக் கொண்டால், அங்கே தனியார் துறையில் கார்ப்பொரேஷனாக நடக்கிறது. வருவாய் அத்தனையும் தனியார் துறைக்குச் செல்கிறது. அரசோ, நகராட்சியோ ஏற்றுக் கொண்டால், அது நல்ல முறையில் நடக்க முடியும், அதைப் பரிசீலனை செய்து, தேசியம் என்ற அளவில், அரசோ, நகராட்சியோ எடுக்கும் நிலையை உருவாக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, வடாற்காடு மாவட்டத்திலும் முழுமை விழா நடக்கவிருக்கிறது. பொதுவாக, எல்லா மாவட்டங்களிலும் எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி கொடுப்பதைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் வடாற்காடு மாவட்டத்தில், காட்டிலும், மலையிலும் வாழும் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மற்றவிடங்களில் இல்லாத அதிசயம் இது. ஜவ்வாது மலை உச்சியில் எல்லாவசதிகளும் இருக்கின்றன. ஆகவே, அங்கு இருக்கும் ஜம்னுபத்து என்றவிடத்தில் முழுமை விழாவை நடத்தவேண்டும் என்று மாண்புமிகு மின்சார அமைச்சரையும், மற்றவர்களையும் கேட்டுக் கொண்டு இன்னும் ஒன்றை மட்டும் சொல்லவிரும்புகிறேன்.

[1971 டிசம்பர் 7

[திரு. தொ. ப. சீனிவாசன்]

அடுத்தபடியாக, நாங்கள் அதிகாரிகளை குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று சொல்லி அணுகினால் அவர்கள் சரிவரக் கவனிப்பதில்லை. குறிப்பாக, திருவண்ணாமலையைச் சேர்ந்த ஓ. அண்ட் எம். அதிகாரியைச் சந்தித்து குறைகளைச் சொல்கிறோம். ஆனால் அந்த அதிகாரி குறைகளைச் சரிவரக் கேட்பதில்லை. அத்தகைய அதிகாரிகளை மேலிடத்திலிருக்கின்ற அதிகாரிகள் கண்டிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த அவைத் தலைவருக்கு நன்றி கூறி
பிற்பகல் 1-33 விடை பெறுகிறேன், வணக்கம்.

(5) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

MR. SPEAKER : I have to announce to the House the programme of business for the meeting of the Legislative Assembly as decided by the Business Advisory Committee at its meting held on 7th December 1971.

| | |
|---|---|
| 8th December 1971 (Wednesday) | Consideration and passing of the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1971 (L.A. Bill No. 25 of 1971)—(As amended by the Joint Select Committee). |
| 9th December 1971 (Thursday) | Non-official Business. |
| 10th December 1971 (Friday) 11th December 1971 (Saturday) | Discussion on the Annual Financial Statement for 1971–72 and Supplementary Financial Statement for 1970–71 of the Tamil Nadu Electricity Board. |
| 12th December 1971 (Sunday) | Holiday. |
| 13th December 1971 (Monday) | Subject to fixation of date by the Governor—Presentation of the First Supplementary Statement of Expenditure for the year 1971–72, and the Demands for Grants for Excess Expenditure in the year 1967–68. Discussion on the Annual Financial Statement for 1971–72 and Supplementary Financial Statement for 1970–71 of the Tamil Nadu Electricity Board (Last Day). |
| 14th December 1971 (Tuesday) 15th December 1971 (Wednesday) | 1. Official Bills; 2. Official Resolution; and 3. Discussion on the Rules relating to the Election of Members of Standing Committees of the Municipal Corporation of Madras. |
| 16th December 1971 (Thursday) | Non-official Business. |
| 17th December 1971 (Friday) | (i) Discussion and Voting of Demands for First Supplementary Statement of Expenditure for the year 1971–72; and Demands for Grants for Excess Expenditure for the year 1967–68. (ii) Introduction of Appropriation Bills. |
| 18th December 1971 (Saturday) | Consideration and passing of Appropriation Bills and other Official Bills, if any. |



[பேரவைத் தலைவர்]

Now the House will adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned. பிற்பகல் 1-35

*A. Statutory Rules and Orders.*

@ 96. Notification issued with G.O. Ms. No. 2655, Rural Development and Local Administration, dated the 4th December 1971, making rules relating to election of Members of Standing Committees of the Municipal Corporation of Madras. [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

97. Notification issued with G.O. Ps. No. 2842, Revenue, dated the 25th September 1971 in regard to exemption from liability to sales tax on the sales of Computed Cattle feed by the Co-operative Milk Supply Societies to their members. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

98. Notification issued with G.O. P. No. 2156, Revenue, dated the 1st August 1971, in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959). [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959.]

99. Notification issued with G.O. Ms. No. 1316, Rural Development and Local Administration, dated the 29th May 1971, in regard to an amendment to the Rules relating to the qualifications and recruitment of inferior servants under Municipal Councils, published at pages 158 to 165 of the Rules Supplement to Part I-A of the Tamil Nadu Government Gazette, dated the 7th November 1950. [Laid on the Table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

100. Notification issued with G.O. Ms. No. 1938, Rural Development and Local Administration, dated the 21st August 1971, in regard to date of coming into force of section 3 of the Tamil Nadu Panchayats (Second Amendment and Validation), Act, 1970 (Tamil Nadu Act 12 of 1971). [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*B. Reports, Notifications and Other Papers.*

55. Notification issued with G.O. Ms. No. 2058, Rural Development and Local Administration, dated the 8th September 1971, in regard to an amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and conditions) Rules, 1960.

@ Laid on the Table of the House on 6th December 1971.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1971 டிசம்பர் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பள்ளிகளில் தையற்கலை ஆசிரியர்கள் நியமனம்

*156 வினா—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்களும், ஆண்களும் சேர்ந்து படிக்கும் பள்ளிகளில் தையற்கலை ஆசிரியர் நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இல்லை. ஆனால் பெண்களும் ஆண்களும் சேர்ந்து படிக்கும் பள்ளிகளிலிருந்து இத்தகைய கோரிக்கைகள் வந்தால், அப்பள்ளிகளில் விதி முறைகளுக்கு உட்பட்டு துணைக் கைத்தொழிலாக தையற்கலை கற்பிக்க தையற் கலை ஆசிரியர் நியமிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, என்னுடைய செஞ்சி வட்டத்திலுள்ள அவலூர்பேட்டை, தேவனூர் ஆகிய இடங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். அங்கிருந்து பல கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்தும், இன்னும் தையற்கலை ஆசிரியர்கள் நியமிக்கப் படாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் தையற்கலை ஆசிரியர்களை நியமிக்கும்படி நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கைகள் வந்திருந்தாலும், 6-வது முதல் 9-வது வகுப்பு வரையில் அந்தத் துணைக் கைத்தொழிலை எடுத்துக்கொள்வதற்குப் போதுமான மாணவிகள் இருக்கவேண்டும். ஆசிரியர் நியமிக்கும் வகையில் வாரத்திற்கு 17 மணி நேரமாவது வேலை இருக்க வேண்டும். அதற்கான வசதி வாய்ப்புகளும், கட்டடம், மற்றவைகளும் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டு, இயக்குநர் அவர்களுக்கு எழுதியனுப்பினால், அவர்கள் அனுமதி அளிப்பார்கள். நிபந்தனைகளில் எது ஒன்று

குறைந்தாலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. நிபந்தனைகளை நிறைவேற்ற அவர்கள் தயாராக இருந்தால் அனுமதி வழங்குவதில் ஒன்றும் இடையூறு இருக்காது.

**மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலம் படிப்பு வசதி**

*157 வினா—**திரு. கா. காளிமுத்து**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் மூலம் படிக்கும் வசதி பட்டப்படிப்புக்கு இருப்பது போல புகுமுக வகுப்புக்கும் ஏற்படுத்த அரசு பரிந்துரை செய்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: ஆம். அடுத்த ஆண்டு இதைப் பரிசீலிப்பதாகப் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

**திரு. கா. காளிமுத்து**: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும், பணிகளில் அமர்ந்திருக்கக் கூடியவர்கள் கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்கும் வெகு விரைவில் இது பற்றி முடிவு எடுக்க மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு பரிந்துரை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் இந்த ஆண்டு (1971–72-ம் ஆண்டில்) பி.ஏ. வகுப்பில் இந்த அஞ்சல் மூலம் கல்வி கற்பிக்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்து இருக்கிறது. அதில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டையும் பயிற்று மொழிகளாகக் கொண்டு பாடம் கற்பிக்கின்ற முறை வந்திருக்கிறது. ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், வணிகம், அரசியல், வரலாறு ஆகியவற்றில்லே பி.ஏ. பட்டப் படிப்புக்கான அஞ்சல் வழிப் பாடங்கள் அனுப்பும் முறை நல்ல முறையில் வரவேற்கப்படுகின்றது என்றும், இதைப் பலர் விரும்பிக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

புகுமுக வகுப்புக்கும் அஞ்சல் வழிப் பாடம் கற்பிக்கின்ற முறையை ஏற்படுத்தவேண்டும் என்று பலரும் கோரியுள்ளார்கள். பல்கலைக் கழகம் இந்த ஆண்டு துவங்கமுடியவில்லை. காலம் கடந்து விட்டது. 1972-73-ல் புகுமுக வகுப்புக்கும் அஞ்சல் வழியில் பாடம் கற்பிக்கின்ற முறையை மேற்கொள்ளலாம் என்று மதுரைப் பல்கலை கழகம் கூறியிருக்கிறது. எனவே, 1972–73-இல் புகுமுக வகுப்புக்கும் அங்கு துவக்கப்படலாம்.

**இரும்பூதிப்பட்டி, கொசூர் சந்தைகள்**

*158 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்**: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இரும்பூதிப்பட்டி, கொசூர் ஆகிய சந்தைகள் 1970–71-ஆம் ஆண்டில் எவ்வளவு தொகைக்கு ஏலம் விடப்பட்டன?



(இ) ஏலக்கெடுவின் காலம் முடிந்தவரை செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு? செலுத்தப்படவேண்டிய தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: (அ) இரும்பூதிப்பட்டியிலுள்ள சந்தை ரூ. 32,101-க்கும், கொசூரிலுள்ள சந்தை ரூ. 13,001-க்கும் ஏலம் விடப்பட்டன.

(இ) இரும்பூதிப்பட்டி சந்தைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 8,036. ஆகவே, இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 24,065. கொசூர் சந்தைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 3,254. ஆகவே இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 9,747.

பாக்கித் தொகைகளை குத்தகைதாரிடமிருந்து நீதி மன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்**: தலைவர் அவர்களே, இரும்பூதிப்பட்டி, கொசூர் ஆகிய இந்த இரண்டு சந்தைகளின் குத்தகையை அந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் இன்னொருவர் பெயரில் எடுத்து வசூல் செய்துகொண்ட காரணத்தால்தான் அந்தத் தொகையைக் கட்டுவதற்குத் தாமதம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றத்திற்கு வேண்டுமென்றே சென்றிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட அலுவலர்கள். ஆகவே, இவ்வளவு பெரிய தொகைக்கு வட்டி ஏதும் இல்லாமல் நீதி மன்றத்தில் போட்டு காலம் தாழ்த்துவது முறையா? ஏன் இதை அலுவலர்களே உடனடியாக நடவடிக்கை எடுத்து வசூலிக்கவில்லை என்பதற்குத் தகுந்த விளக்கம் கேட்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே இந்தத் தொகையைக் கட்டியிருக்கவேண்டும். ஆனால், காலத் தாழ்வு பெருமளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் சொல்கிறபோது, அந்தக் குத்தகைதாரர் வேலூர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்ததால் தொகையைக் கட்ட முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்தக் காரணம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. புகாரில் அவருடைய பெயரால் யூனியன் தலைவர் அவர்கள் எடுத்து இருப்பதாக இருந்தாலும் அதை ஆராய்ந்து பார்த்ததில் அதற்கு ஆதாரம் இல்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. ஆனால், உடனடியாகத் தொகையை வசூலித்தே தீரவேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் காலத் தாழ்வுக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து விசாரணை செய்யும்படியாக உதவி மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு யார் யார் காரணமோ அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிடையில், செலுத்தவேண்டிய தொகையை குறிப்பிட்ட

காலத்தில் அவர்கள் செலுத்தாத காரணத்தினால் வழக்குமன்றத்தில் அவர்கள்மீது வழக்குத் தொடுத்து அந்தத் தொகையை வசூலிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, இரண்டு செயல்களும் ஒருசேர நடைபெறுகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் கொடுக்க வேண்டியது குறைந்த தொகையாக இருந்தாலும் உடனடியாக கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யும்போது, சொத்து மதிப்பின்மீது ஜப்தி செய்யும் நிலைமை நாட்டில் இருக்கிறது. ஏறத்தாழ ரூ. 33,815 பாக்கியிருக்கும் நேரத்தில் ஏன் அந்த சொத்துக்களை ஜப்தி செய்யவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விளக்கக்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வரவில்லை. ஆகவே, அதை வசூலிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருப்பதாகவும் அறிக்கை வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இந்த விளக்கத்திற்குத் தக்க கேள்வி போட்டால் கேட்டறிந்து விடை அளிக்கலாம்.

### கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்

* 159 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தினை, கூடலூர் ஊராட்சி ஒன்றியம், பந்தலூர் ஊராட்சி ஒன்றியம், ஆக இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நிர்வாகத்தின் திறமையையொட்டி அந்த ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது 375 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனால் 374 ஊராட்சி ஒன்றியங்களே இயங்கி வருகின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியம் கல்ராயன் மலைவட்டம் ஜாகீர் பகுதியாக இருப்பதினால் பல தகராறுகளுக்கு உட்பட்டு இயங்க முடியாமல் இருக்கிறது. இதுபோல் பல ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கை வந்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு 375 ஊராட்சி ஒன்றியங்களுக்குமேல் போகக் கூடாதென்று சொல்லியிருக்கிறது. ஏனெனில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மத்திய அரசு உதவி செய்கிறது. எனவே மேற்கொண்டு ஊராட்சிகளின் எண்ணிக்கையைப் பெருக்கவேண்டுமானால் மத்திய அரசின் அனுமதியைப் பெற்ற பிறகுதான் முடியும்.



நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அதிகமான ஊராட்சிகளைக் கொண்டிருப்பதினால் அதை இரண்டாகப் பிரிக்கலாம் என்ற கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே இந்திய அரசாங்கம் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கின்ற உதவியின் காலம் முடிந்து நாமே நிர்வாகத்தின் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளும் காலத்தில் ஊராட்சிகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொள்ளலாம். அப்போது கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்கும் யோசனையை அரசு முதலில் கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியத்தை, உதகை ஊராட்சி ஒன்றியம், குந்தா ஊராட்சி ஒன்றியம் என இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்துள்ளதா ? அப்படி கோரிக்கை வந்திருந்தால் பிரிக்கும் எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பிரிக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. ஆனால் பிரிக்கும் எண்ணம் இப்போது ஏற்படவில்லை. அதேபோல வேறு பல ஊராட்சி ஒன்றியங்களையும் பிரிக்கவேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. சில ஊராட்சி ஒன்றியங்கள் 70-க்கு மேற்பட்ட ஊராட்சிகளையும், சில ஊராட்சி ஒன்றியங்கள் 50-க்கு மேற்பட்ட ஊராட்சிகளையும், கொண்டவையாக இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைத்து வருவதால் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையை 375-க்கு மேல் பெருக்கக் கூடாதென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்றால் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றபின்தான் முடியும். வேறு ஊராட்சி ஒன்றியங்களையும் பிரிக்கும் சந்தர்ப்பத்தில் இதையும் பரிசீலனை செய்யலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, 375 ஊராட்சி ஒன்றியங்களுக்குமேல் போகக்கூடாது என்றுதானே மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது? எனவே இருக்கின்ற 375 ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளேயே சில மாற்றங்கள் செய்யலாம் அல்லவா ? ஏனென்றால் சில ஊராட்சி ஒன்றியங்களில் 56, 58 ஊராட்சிகள் இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களில் 16 ஊராட்சிகள் தான் இருக்கின்றன. எனவே இவைகளை ஒரே சீராக மாற்றி அமைக்கும் கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற 375 ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ளேயே சில மாற்றங்கள் செய்யலாம். ஒரு ஊராட்சியை இரண்டாகப் பிரிப்பதானால் இரண்டு தலைவர்கள், இரண்டு துணைத் தலைவர்கள் வருவார்கள். அவர்களுக்கு அது மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால்

[1971 டிசம்பர் 8

ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பகுதிகளை மற்றொரு ஊராட்சி ஒன்றியத்தோடு சேர்க்கும்போது, அதனால் ஏற்படுகின்ற சங்கடங்களை சமாளிப்பது கடினம். ஏனென்றால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

சில ஊராட்சி ஒன்றியங்கள் வெகுதூரம் நீண்டு, வளைந்து செல்கின்றன. அந்த வளைவுக்குள்ளே இன்னொரு ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. இப்படிப்பட்ட பகுதிகளைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் சிறு சிறு மாற்றங்கள் செய்யலாம். இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, பிறகு தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப் பட்டனவா அல்லது ஊராட்சிகளின் எண்ணிக்கையின் அடிப் படையில் பிரிக்கப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1958–59-ல் ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும்போது மக்கள் தொகையின் அடிப்படையில்தான் அமைத்திருக்கிறார்கள். ஒரு லட்சம் மக்கள் தொகைக்குக் குறையாமல் உள்ள பகுதியை ஊராட்சி ஒன்றியமாக அமைத்திருக்கிறார்கள். ஊராட்சிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்குத்தானே மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும். நம்முடைய அரசாங்கம் சில ஊராட்சிகளிலே இரண்டு, மூன்று ரெவின்யூ வில்லேஜ்களை இணைத்திருக்கிறார்கள். சில ஊராட்சிகளில் நான்கு, ஐந்து ரெவின்யூ வில்லேஜ்களை இணைத் திருக்கிறார்கள். இதை மாற்றி, எல்லா ஊராட்சிகளிலும் ஒரே சீரான ரெவின்யூ வில்லேஜ்களை இணைக்கும் முயற்சியை 1971–72-ல் ஆவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைத்தான் நான் முதலிலே கூறினேன், பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று. தகராறு ஏற்படாதவாறு, மாச்சரியங்கள் ஏற்படாதவாறு பிரிக்கவேண்டும். கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஊராட்சியை நகராட்சியாக மாற்றிய போது அதன் எண்ணிக்கை 41-லிருந்து 40-ஆகக் குறைந்தது. அப்போது கோவை மாவட்டத்தில் பொள்ளாட்சி ஊராட்சியை தெற்கு, வடக்கு என்று பிரிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதிலே பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து, சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யலாம்.



1971 டிசம்பர் 8]

### வால்பாறை நகரியம்

*160 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை நகரியத்தை நகராட்சியாக மாற்ற அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. இ. ராமசாமி :** பேரவைத் தலைவரவர்களே, வால்பாறை நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டுமென்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ? அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சில குறிப்பிட்ட பகுதிகளின் வளர்ச்சியைக் கருதி, அவை நகரியங்களாக மாற்றப்படுகின்றன. நகரியங்களின் வளர்ச்சிப் பொறுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுக்கொள்கிறார். அவருக்குக் கீழ், உதவியாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நகரியமாக அமையும்போது மக்கள் தொகையையோ அல்லது வருமானத்தையோ கருத்தில் கொள்வதில்லை. ஆனால் நகரியத்தை நகராட்சியாக மாற்றும்போது மக்கள்தொகை, வருமானம் இவைகள் மட்டுமல்லாமல் அது விருத்தி அடைகிற பகுதியாகவும், வளர்ச்சியடைகிற பகுதியாகவும் இருக்கவேண்டும். ஆனால் வளர்ச்சியடையக்கூடிய பகுதிகளை நகரியமாக அமைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். மக்கள் தொகையோ வருமானக் கணக்கோ கவனிக்கப்படுவதில்லை. இந்த முறையில்தான் அந்தப் பகுதி நகரியமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அதை நகராட்சியாக மாற்றும் கோரிக்கை எதுவும் அரசாங்கத்தில் இல்லை.

**திரு கே. டி. கே. தங்கமணி :** சார், உதகை, கூனூருக்கு அடுத்தாற்போல் மலைவாசஸ்தலமாக இருக்கும் பெரிய நகரம் இந்த வால்பாறை ஆகும். அங்கு 40 ஆயிரம் ஏக்கர் வரையிலும் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. 40 ஆயிரம், 50 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பகுதி வால்பாறை. எனவே வால்பாறையை நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வால்பாறையை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. அப்படி கோரிக்கை வந்தால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம். இப்போது கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1971 டிசம்பர் 8

**திரு. எம். சுரேந்திரன் :** நகரியங்களை அமைத்து உதவி அளிக்கிறோம். அதில் ஜனங்களுடைய பிரதிநிதிகள் இல்லாமல் நிர்வாகம் செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது. நாம் ஜனநாயக பாணியில் சிறுசிறு பகுதிகளாக ஆக்கி—பஞ்சாயத்து ராஜ்யம் அமைய வேண்டும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அப்படியிருக்கையில் நகரியங்களுக்குப் பதிலாக ஜனங்களுடைய பிரதிநிதிகள் நிர்வாகம் செய்கின்ற அமைப்பை ஏற்படுத்தி இப்போது அளிக்கப்படுவதுபோல ஸ்பெஷல் உதவிகளோ மற்றவைகளோ அளிக்க முடியாதா? அப்படிச் செய்வது ஜனநாயகத்திற்குச் சரிதானே. இதை அரசாங்கம் யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலில் கூறியபடி நகராட்சி இல்லாத பகுதிகளை நேரிடையாக விரைவாக வளர்ச்சி அடையச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நகரியங்களாக அமைத்து சில விசேஷ உதவிகள் அளிக்கப்படுகிறது. இவற்றையும் மக்கள் பிரதிநிதிகள் வரக்கூடிய நகராட்சி அமைப்பாக ஏற்படுத்த உதவி செய்யக்கூடாதா என்றால் உதவி செய்யலாம். ஆனால் நகராட்சி அமைப்பாக உள்ள மற்றவைகளும் இதற்கு அளிக்கப்படுகிற உதவிகள் போல தங்கள் தங்களுக்கும் அளிக்கவேண்டும் என்று கோரக்கூடும். ஆகவேதான் நகரியம் என்கிற தனி அமைப்பாக வைத்து விரைவில் வளர்ச்சி அடைந்தாகவேண்டும் என்கிற பகுதிகள் தனியாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஒரு பகுதியை நகரியமாக மாற்றுவதோ, நகரியத்தை நகராட்சியாக மாற்றுவதோ அங்கிருக்கிற பிரச்சினைகளை ஆராய்ந்து செய்யப்பட வேண்டிய ஒன்று. வால்பாறையை மாற்றுவது பற்றிய யோசனை இப்போது பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன்.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, has this Government received any representation from the Panchayats which have recently been upgraded as municipalities, that there have been heavy increases in property tax?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய தகவல்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

*Mobile hospitals*

* 161 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of mobile hospitals in this State as on this date; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இரண்டு.

(இ) சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட சித்தரஞ்சன் நடமாடும் மருத்துவமனையும் மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட நடமாடும் பயிற்சி மற்றும் பணி நிலையமும்.



1971 டிசம்பர் 8]

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, பெரும்பான்மையான கிராமங்களில் மருத்துவ வசதியே இல்லாது இருக்கிற காரணத்தினால் பெரிய நகரங்களில் இருக்கிற தலைமை மருத்துவ மனைகளை ஒட்டியாவது நடமாடும் மருத்துவ மனைகளை அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் மருத்துவ மனையில் ஒன்று சித்தரஞ்சன் நூற்றாண்டு விழாவை ஒட்டி ஒவ்வொரு மாநிலமும் நடமாடும் ஆஸ்பிடல் ஒன்றை ஏற்படுத்துவது என்பதாகும். அதைத் தமிழக அரசு ஏற்று ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியுடன் இணைத்து இருக்கிறது. மற்றொன்று, மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள நடமாடும் ஆஸ்பிடல் ஆகும். இது கிராம மக்கள் வாழ்கிற நிலை, நோயினால் பாதிக்கப்படுகிற தன்மை இவற்றை மருத்துவக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் ஆராய்ந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படக்கூடிய நிலையில் அமைந்துள்ளதாகும். கூடவே கிராம மக்களின் வசதி பெருக வைத்தியம் அளிப்பதுமாகும். இது மத்திய அரசாங்கத்தின் உதவியோடு அமைக்கப்பட்டதாகும். சித்தரஞ்சன் மருத்துவ மனையின் செலவைத் தமிழக அரசே ஏற்றுக்கொள்கிறது. அப்படிச் செய்கிற இந்தத் திட்டத்தை விரிவாக்குவது என்றாலும் மருத்துவக் கல்லூரியின் எண்ணிக்கை அடிப்படையில்தான் மருத்துவக் கல்லூரி மாணவர்கள்—பயிற்சியாளர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அமைப்பதாக ஆகும். கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் நோக்கத்திற்காக மட்டும் இது ஏற்பட்டது அல்ல. மருத்துவக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் கிராம மக்களின் உடல் நலத்தைப்பற்றி ஆராய்ந்துகொள்வதையே முக்கியமாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்துவது இயலக்கூடிய ஒன்றல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மருத்துவக் கல்லூரிகள் இருக்கக்கூடிய இடங்களிலாவது இந்த நடமாடும் ஆஸ்பத்திரிகள் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அந்த ஆலோசனை மத்திய சர்க்காருக்கு நம் அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் மருத்துவ ஆலோசனைத் துறைத் தலைவர் டாக்டர் துரைசாமி அவர்களும் எல்லா மருத்துவக் கல்லூரிகளுடனும் இணைந்து ஒவ்வொரு நடமாடும் ஆஸ்பிடல் ஏற்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டார்கள். இன்றுள்ள நிலைமையில் அது எந்த அளவு நிறைவேறும் என்று நாம் கூறுவதற்கில்லை.

**திரு. மு. பழனிவேலன் :** நடமாடும் மருத்துவ மனையில் பொது மருத்துவம்—ஸ்பெஷாலிடி—சிறப்பு மருத்துவம் செய்யப்படுகிறதா ?

[1971 டிசம்பர் 8

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த நடமாடும் மருத்துவ மனை உண்மையாக நடமாடுவதில்லை. நகரத்திற்கு வெளியே ஏதாவது ஒரு பகுதியில் பதினைந்து, இருபது மைல் தள்ளி நின்று நிலையாகச் செயல்படுகிறது. சென்னை நகரை எடுத்துக்கொண்டால் காட்டாங்குளத்தூரில் பணியாற்றுகிறது. ஒரு இடத்தில் பணியாற்ற ஆரம்பித்தால் சுற்றிச் சூழ பதினைந்து இருபது மைல்களில் இருந்து எல்லாம் மக்கள் வர ஆரம்பித்துவிடுகிறார்கள். இரண்டு மாதங்களுக்குமேல் அங்கே தங்க நேரிடுகிறது. ஆகவே இதை நடமாடும் ஆஸ்பத்திரி என்று சொல்லாமல் ஷிப்டிங் ஆஸ்பிடல் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். இதில் வாரத்தில் ஒரு நாள் இ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட், டி.பி. ஸ்பெஷலிஸ்ட், வி.டி. ஸ்பெஷலிஸ்ட் ஆகியோர்கள் வந்து, அந்த அந்தத் துறை நோயாளிகளுக்குத் தகுந்த மருத்துவம் செய்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** நடமாடும் மருத்துவ மனையின் தேவை நகரங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற இடங்களுக்கு என்பது சரியானது அல்ல. ஆங்காங்கே உள்ள பலப்பல குக்கிராமங்களில் மருத்துவ வசதியே இல்லை. அங்குள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிற முறையில் இது பயன்படக்கூடியதாக இருப்பது நல்லதல்லவா ? பலவித தொத்துநோய்களுக்கு தடுப்பு நடவடிக்கை எடுத்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதுபோன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் விரிவுபடுத்தும் ஆலோசனை வருங்காலத்திலாவது பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த மருத்துவ மனை பற்றிய ஒரு கருத்து, நோக்கம் தெளிவாக்கப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன். கடையில் வாசனை பார்க்க—பரிட்சித்துப் பார்க்கக் கொடுக்கப்படுகிற நெய்யைக் கண்டவுடன் இனமாகக் கிடைக்கிற அந்த நெய்யைக்கொண்டே கல்யாணம் செய்துவிடலாம் என்பதாக யாரும் நினைக்கமாட்டார்கள். இந்த நடமாடும் மருத்துவ மனை—கிராமத்திற்கு டாக்டர்கள் போகிறபோது அங்குள்ள நிலைமைகளை நேரில் அறிந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக—பயிற்சிக்காலத்திலேயே மருத்துவக் கல்லூரியோடு இணைந்துள்ள இந்த நடமாடும் ஆஸ்பிடல் மூலம் கிராம மக்களின் உடல் நலத்தைத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட ஒன்றாகும். இரண்டாவது நோக்கம்தான் ஓரளவு கிராம மக்களுக்கும் அப்போது வசதியை ஏற்படுத்துவதாகும். இதை விரிவாக நடத்தவேண்டுமானால் கோடிக் கணக்காக செலவாகும். இப்போதே ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்பதாக 375 பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் ஏற்படுத்தி பரவலாக ஒவ்வொரு கிராமத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய காரியங்களைச் செய்து வருகிறோம். நோய் தடுப்பு முறையில் காச நோயாக இருந்தாலும், லெப்ரசியாக இருந்தாலும், அம்மை, காலரா போன்றவையாக இருந்தாலும் தடுப்பு நடவடிக்கைகளில் பல்வேறு முறைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.



1971 டிசம்பர் 8]

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** நடமாடும் மருந்தகம் கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் பணி புரிந்துகொண்டு வருகிறதா இல்லையா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் மொபைல் டிஸ்பென்சரி பற்றி கேட்கிறார்கள். இப்போதே கூட மொபைல் டிஸ்பென்சரி பணியாற்றி வருகிறது. இது மொபைல் ஆஸ்படல் பற்றியதாகும்.

### கோவை தலைமை மருத்துவ மனை.

* 162 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தலைமை மருத்துவமனைக்கு காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ( **T.B.** ) அதிகம் வருவதால் தற்போது உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஏராளமான பஞ்சாலைகள் இருப்பதால் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அதிகமாகக் காச நோய் ஏற்படுகிறது. கோவையில் போதுமான படுக்கை வசதி இல்லாததால் 15 நாள் தங்க வைப்பதற்குள் வெளியே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே இதுபோல் இல்லாதிருக்க கோயம்புத்தூரில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆஸ்பத்திரியில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது குறைபாடு இல்லை. அது ஒரு நிறைபாடு. இப்போது காச நோய்க்கு மருத்துவ மனையில் தங்கித்தான் சிகிச்சை பெற்றாக வேண்டும் என்கிற நிலை இல்லை. மிக முதிர்ந்த நிலையில் நோயுடையவர்களாக வருகிறவர்கள் மட்டும் சில நாட்கள் தங்கி சிகிச்சை பெறவும் மற்றவர்கள் வீடுகளில் இருந்தே இதற்கான மருந்துகளைப் பெற்று சிகிச்சை பெற்றுக்கொள்ளவும்—நல்ல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் இந்த நோய்பற்றிய அபாயம் நீக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ மனையில்தான் தங்கி சிகிச்சைபெறவேண்டும் என்ற நிலையில்லை. இரண்டாவது, காச நோய்க்குத் தனிப் படுக்கை வைக்கவேண்டுமென்ற கொள்கை அண்மைக்காலத்தில் பொதுவாக மருத்துவ உலகத்தினால் கைவிடப்பட்டு வருகிறது .

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் உள்ள ஆசாரிப்பள்ளத்தில் அமைந்திருக்கும் காசநோய் மருத்துவமனையில் காசநோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கும், நோய் விரைவில் தீருவதற்கான பருவநிலைகளும் அமைந்திருப்பதால், தமிழ்நாட்டில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான நோயாளிகள் அங்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் அங்கு தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, போதுமான அளவில் இடவசதியை அமைத்துக் கொடுத்து, நோயாளிகள் நல்ல முறையில் சிகிச்சை பெறுவதற்கு ஏற்ற முறையில் மருத்துவ மனையை விரிவுபடுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு இரண்டு பதில்கள். ஒன்று, இந்தக் கேள்வி தனியாகக் கேட்கப்பட வேண்டும். இரண்டு, ஆங்காங்குள்ள மருத்துவ மனைகளை பிரிவு படுத்த சட்டசபை உறுப்பினர்கள் நிதி சேகரித்து நன்கொடையாக வழங்க அவர்களுக்கு உதவ வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, காச நோயுள்ள வர்களை தனிப்படுக்கையில் படுக்க வைக்க வேண்டுமென்கிற கொள்கை மாறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இரண்டு விடைகள் சொன்னேன். அவற்றில் ஒன்று, காசநோயாளிகளைப் படுக்க வைத்துத்தான் மருத்துவம் செய்ய வேண்டுமென்கிற முறை கைவிடப்பட்டுவருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, படுக்கைகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்த வேண்டுமென்கிற நோக்கமும், காசநோய் கடுமையாக உள்ளவர்கள் தங்கி சிகிச்சை செய்ய வேண்டுமென்ற நோக்கமும் ஆஸ்பத்திரியில் உள்ளவர்களுக்கு உண்டு. அதற்காகத் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள் கிறார்கள். இரண்டு மாதம், மூன்று மாதம் என்று நூற்றுக்கணக் கானவர்கள் பதிவு செய்தும், இடம் கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆகவே, படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு இன்னும் விரிவாகப் பதில் சொல்லியாக வேண்டும். இட வசதியின்மை, படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்த வேண்டுமென்பது எல்லா மருத்துவமனைகளுக்கும் உள்ள நிலைமை. கோவையில் மட்டும் இந்த நிலைமை அல்ல. தமிழ்நாட்டில் தாம்பரத்திலும் சரி, பெருந்துறையிலும் சரி, செங்கிப்பட்டியாக இருந்தாலும் சரி—எந்த இடமாக இருந்தாலும் படுக்கை தேவை



என்கிற நிலைமை இருக்கிறது. எந்த அளவிற்கு அரசாங்கத்தின் பொருளாதார வசதி இடம் தருகிறதோ அந்த அளவிற்கு வசதிகள் செய்து தரப்படும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவர் அவர்களே, காசநோய்க் கான மருந்துகள் பெரிய ஆஸ்பத்திரிகளில்தான் தரப்படுகின்றன. கிராமங்களிலுள்ள மருத்துவமனைகளில் தரப்படுவதில்லை. கிராமங்களிலுள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்கள் மூலமாகவும் அந்த மருந்துகளைக் கொடுக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே கூட இதற்காகவுள்ள காசநோய்த் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று, மக்களுக்குக் காசநோய் இருக்கிறதா என்று பரிசீலனை செய்யவும், அப்படி காசநோய் வருவதற்கான அடையாளம் காணப் பட்டாலும் அவர்களுக்கு மருந்துகள் வழங்கி பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அதற்கான மருந்துகளை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இதில் எங்கேயாவது குறைபாடுகள் இருந்தால், அதைப்பற்றி கனம் அங்கத்தினர் தெரிவித்தால் அதுபற்றி அந்த இலாகாவுக்குத் தெரிவிக்கப்படும்.

*Primary Health Centre in Killiyur Panchayat*

* 163 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to convert Karungal Primary Health Centre in Killiyur Panchayat in Kanyakumari district into a dispensary; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (ஆ) இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, கருங்கல்லிலிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் அரசாங்க மருத்துவமனை இருக்கிறது. கருங்கல்லில் இருக்கும் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மருந்தகமாக உயர்த்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியை டிஸ்பென்சரி என்ற பொருளில் கேட்டிருந்தாலும், ஆஸ்பத்திரி என்றுதான் நினைத்துக் கொண்டு கேட்டிருப்பார். அங்குள்ள பிரைமரி ஹெல்த் சென்டர் டிஸ்பென்சரியாக செயல்பட்டு வருகிறது. அதை ஆஸ்பத்திரி யாக உயர்த்த வேண்டுமென்றால் அதற்காக நிதிவசதி தேவை. பெரும்பாலான இடங்களிலும் இப்படி ஆஸ்பத்திரி தேவை என்று

கேட்டு வருகிறார்கள். ஆகவே, நான் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஒரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறேன். அதாவது, பொதுமக்களின் பிரதிநிதிகளான சட்டசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பொதுமக்களுடன் தொடர்புகொண்டு மருத்துவ மனைக்காக நிதி சேர்க்கப்படுமானால், எவ்வளவு நிதி சேர்க்கப்படுகிறதோ அந்த அளவிற்கு அரசாங்கம் உதவி செய்யும், மருந்துவமனை அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம் என்ற வகையில் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: The Karungal Health Centre is not at all well equipped. Will the Government take effective steps to improve it at least as a Primary Health Centre with all equipments?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கென்று சில வழிமுறைகள், ஏற்பாடுகள் இருக்கின்றன. அதில் ஏதேனும் குறை இருந்தால், அந்த இலாகா அதைக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தலைமை மருத்துவமனைக்கு விரைவு உதவி வண்டி

***164. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரில் உள்ள மருத்துவமனைகளிலும் (Ambulance) அவசர உதவிக்கான வாகனங்கள் ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) நீலகிரி மாவட்ட மருத்துவமனை தவிர மற்ற எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் விரைவு உதவி வண்டி (Ambulance Van) உள்ளது.

(இ) உதகையில் உள்ள நீலகிரி மாவட்ட மருத்துவ மனைக்கு விரைவு உதவி வண்டி ஒன்று 1972-73ம் ஆண்டில் வாங்கும் திட்டம் மருத்துவத்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the increasing accidents in the City of Madras and the long time taken for ambulance vans to reach the place and after reaching the place the ambulance vans do not even start, will the Government consider the question of increasing the number of vans and also make the vans available up to date so that there will not be delay in taking the people who had met with accidents to the hospitals?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆம்புலன்ஸ் வேன்களில் பல ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலம், பத்தாண்டுக் காலம் என்ற அளவில் ஓடிய நிலையில் உள்ளவை.





அவைகளில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். புதிய வேன்கள் தேவையான வகையில், பெருமளவில் பெறுவது தற்போது கடினமாக இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, சின்னஞ்சிறு ஆஸ்பத்திரிகள்–நோயாளிகளின் ஆபத்தான நிலையில், அல்லது பிரசவ சமயங்களில் தலைமை மருத்துவமனையிடம் ஆம்புலன்ஸ் வேன்களைக் கேட்டால் அனுப்புகிறார்களா ? அதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இவையெல்லாம் பெரும்பாலும் ஓரளவுக்கு பற்றாக்குறையோடு பணியாற்றிக்கொண்டிருப்பவை. பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் காலையில் ஒருவர் 8 மணிக்கு வேன் கேட்டால் அந்தச் சமயத்தில் வேன் வேறு எங்காவது போயிருக்கும். திரும்பி வர 9 மணியாகும், சில வேளைகளில் 12 மணிகூட ஆகலாம். பகல் 1 மணி என்றுகூட ஆகலாம். இருப்பதோ ஒரே ஒரு வேன் என்ற நிலையில் இப்படிப்பட்ட நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். ஆகவே, நெருக்கடியைத் தவிர்க்கும்பொருட்டுச் சில முறைகளை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் முறையான கட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டணத்தைச் செலுத்தித்தான் ஆக வேண்டும்.

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவ மனைகளில் இறந்தவர்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கோ, அல்லது வீட்டிற்கோ கொண்டு செல்ல வேண்டுமென்றால், வேண்டிய வசதி கிடையாது. டாக்சியைக் கூப்பிட்டால் நிறையப் பணம் கேட்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் ஒரு வாகனம் அமர்த்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது பற்றி ஆலோசிக்கப்படும்.

### வடபொன்பரப்பிக்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

*** 165 வினா—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, வட பொன்பரப்பியில் உதவிப் பதிவாளர் அலுவலகம் (சப்-ரிஜிஸ்தார் ஆபீஸ்) திறப்பதற்கு உண்டான செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) 1972-73ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 166 பிறகு எடுத்து கொள்ளப்படும்.

நெல் விலை

*167 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லின் விலையை உயர்த்த வேண்டுமென அரசுக்கு அண்மையில் கோரிக்கை ஏதேனும் விடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. ஆயினும் உழவர்களின் துன்பத்தை உணர்ந்து நெல்லின் விலையை சமீபத்தில்தான் அரசு மாற்றி அமைத்துள்ளது.

Thiru R. PONNAPPA NADAR : Is there any proposal to control the prices of foodgrains in view of soaving prices and national emergency?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழ் நாட்டு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், சங்கப் பிரதிநிதிகள் ஒரு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். விவசாயச் செலவு அதிகரித்திருக்கிறது. ஆகவே, நெல்விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் பரிசிலனை செய்ததா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நெல் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று யாரும் அரசாங்கத்திற்கு மனுச் செய்யவில்லை. அரசாங்கமே மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டும், உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே இது குறித்து முடிவு எடுத்தும் இருக்கிறார்கள். எந்த ஒரு மாநிலமும் விலையை உயர்த்தாத நிலைமையில், இந்த மாநிலத்திற்கு மட்டும் தனியாக நெல் விலையை உயர்த்தி விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். 15—10—1971-ம் தேதியன்று இதை மாற்றியமைத்திருக்கிறோம். இந்த விலைக்குக் கீழே யாரும் நெல் விற்க வேண்டாமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை நெல் அறுவடையானபோது இந்த விலைக்கு நெல் விற்பனைக்கு வரவில்லை.

*Board of Revenue*

* 168 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) the steps taken for abolition of the Revenue Board; and

(b) when the abolition will be completed?



The Hon. Thiru P. U. SHANMUGAM : (a) and (b) : The Government have taken a decision that the Board of Revenue in its present form should be abolished. The Administrative Reforms Commission has been asked to suggest the consequential arrangements to be made to discharge the functions now entrusted to the Board of Revenue.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ரெவின்யூ போர்டைப் பொறுத்த வரையிலும் ஏற்கனவே நான்கு உறுப்பினர்கள் ஆக இருந்தவர்கள் இப்பொழுது ஆறு உறுப்பினர்களாக ஆக்கப்பட்டும் சீனியர் மெம்பர் என்ற முறையிலே அங்கே உறுப்பினர்கள் இருக்கின்ற நிலையில் அந்த ரெவின்யூ போர்டுக்கு மேலாக ரெவின்யூ செகரட்டரி தலைமையாக இருந்து நிர்வாகத்தை நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. சீனியர் உறுப்பினராக இருக்கக்கூடியவர் நேரடியாக இலாக்கா செயலாளராக வருவதற்கான வகையில் இடைக்கால ஏற்பாடுகள் அரசாங்கம் ஏதாவது செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, செயலாளர் யார் இருக்க வேண்டுமென்பது அரசாங்கம் செய்ய வேண்டிய முடிவு ஆகும். நல்ல பழுத்த அனுபவமுள்ளவர்கள் ரெவின்யூ போர்டு மெம்பர்களாக இருக்கிறார்கள். ஆறு பேர்கள் ஆன காரணத்தினாலேயே ரெவின்யூ போர்டு ஊர்ஜிதமாகும் என்று சொல்ல முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சர்க்கார் அலுவலகத்தில் உள்ள செயலாளர்கள் திட்டமிட்டு ஊருக்கு ஊர் பயணம் செய்யக் கூடிய நிலைமை இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையிலே ரெவின்யூ போர்டு உறுப்பினர்கள் மட்டும் அமைச்சர்களைப்போல் எல்லா மாவட்டங்களுக்கும் அடிக்கடி சுற்றுப் பயணம் செய்வது தடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு உறுப்பினர்கள் சுற்றுப் பயணம் மாதத்திற்கு இவ்வளவு நாட்கள் செல்ல வேண்டுமென்று விதித்து இருக்கிறோம். ஆனால் அவர்கள் இப்பொழுது செல்லவில்லை. செல்ல வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ரெவின்யூ போர்டு மெம்பர்கள் சுற்றுப் பயணம் செய்வதால் மாவட்ட நிர்வாகம் இன்னும் நல்லமுறையிலே இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், ரெவின்யூ போர்டை எடுத்து விடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா அல்லது திருத்தியமைப்பது என்று முடிவு செய்திருக்கிறதா ? ரெவின்யூ போர்டு இருக்கக் கூடாது என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதே நேரத்திலே அதை எடுத்துவிட்டால் அதற்கு ஒரு மாற்று அமைப்பு வேண்டுமே என்ற முறையிலே சிந்திக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறதே, ரெவின்யூ போர்டை எடுத்து

விடுவது என்று அரசாங்கம் கருதுகிறதா அல்லது அதை மாற்றியமைத்து பெயரை மட்டும் மாற்றுவது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டுக்கு சட்டவாம்பிறகுட்பட்டுச் சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம். திருத்தியமைத்தால் யார் அதைச் செய்வது என்பது குறித்து பழுத்த அனுபவம் உள்ள வர்கீஸ் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அவர்களை வைத்து ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். அப்படி ஆலோசனை செய்த பிறகுதான் அரசாங்கம் அதைப்பற்றி முடிவு எடுக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, . . .

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், திரு. ஜேம்ஸ் அவர்கள் என் அருகில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வேறு இடத்திலிருந்து கேள்வி கேட்கிறார்களே, இடம்மாறி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இடம் மாறவில்லை, அவர்களுக்கு உரிய இடத்திலிருந்துதான் கேட்கிறார்கள், அது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவதாகக் கொள்கையளவிலே ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் இந்த மன்றத்திலே முன்பு அறிக்கை விட்டிருந்தது. அந்தக் கொள்கையிலே ஏதாவது மாற்றம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த அட்மினிஸ்டிரேடிவ் ரிஃபார்ம்ஸ் கமிட்டி ஏதாவது அறிக்கை தந்திருக்கிறதா ? அதன்மீது ஆலோசனை செய்து அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அறிக்கை இன்னும் வரவில்லை. வந்ததற்குப் பிறகு அரசாங்கம் அதைப் பரிசீலிக்குமென்று சொன்னேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு மூலமாக அரசாங்கத்திற்கு வீணான செலவுகள், நிர்வாகத் துறைக்கு மந்தமான நிலைமை இவையெல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ரெவின்யூ போர்டை எடுத்துவிட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் தரப்பிலிருந்து பல வருடங்களுக்கு முன்னாலேயே சொல்லப்பட்டது. பரிசீலனை செய்வதாகப் போன சட்ட மன்றக் கூட்டங்களிலும் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை என்ன ஆயிற்று ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அந்தக் கொள்கையிலே அரசாங்கம் பின்வாங்கவில்லை. எப்படி மாற்றியமைப்பது என்று நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டில் அதிகமான அப்பீல்கள் டிஸ்போஸ் ஆகாமல் இருந்து கொண்டிருக்கின்றன, அவற்றை எல்லாம் சீக்கிரமாக டிஸ்போஸ் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே நான் ரெவின்யூ போர்டுக்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள மெம்பர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இவை பற்றி துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொன்னேன். எடுப்பதாகவும் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு உறுப்பினர்கள் சுற்றுப் பயணம் செய்யாவிட்டால் மாவட்ட நிர்வாகத்தில் சீர்கேடுகள் ஏற்பட்டுவிடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுற்றுப்பயணம் செய்யாத காரணத்தினாலேயே நிர்வாகச் சீர்கேடுகள் வரும் என்று சொன்னால் ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவது என்று சொன்னால் நிர்வாகச் சீர்கேடுகள் மிகுந்த அளவிற்குப் போய்விடும் என்பதை அரசாங்கம் அறியுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ரெவின்யூ போர்டை எடுத்துவிட்டால் நிர்வாகச் சீர்கேடுகள் வரும் என்று நான் சொல்லவில்லை. நிர்வாகம் சீர்திருந்துவதற்கு ரெவின்யூ போர்டு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதுதான் நோக்கம். அதை மாற்றியமைக்கும்பொழுது செம்மையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அரசாங்கம் ஆலோசனை கேட்டிருக்கின்றது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to provide more efficient administration and also bring the people closer to the Government, it is better to divide the entire State into three zones and appoint Revenue Board Members over each, so that they may attend to the people's needs, in a better and active manner. May I know whether my suggestion will also be considered by the Hon. Minister for Revenue?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, உறுப்பினரிடத்தில் இருக்கின்ற நல்ல யோசனைகளை நிர்வாகச் சீர்திருத்தக் குழுவுக்கு எழுதியனுப்பலாம்.

[1971 டிசம்பர் 8

## ஊராட்சி ஒன்றியத்தை தனிவட்டமாக்கல்

* 169 வினா—திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றையும் ஒரு தனி வட்டமாகக் கருதும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The Administrative Reforms Commission has been asked to examine the issue relating to reorganisation of District Revenue Administration in general including the proposal to treat each Panchayat Union area as a separate taluk and to forward its recommendations to the Government in the matter.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இப்படி உருவாக்கப் பட இருக்கின்ற வட்டங்களில் இருக்கின்ற அலுவலர்களை வைத்தே காரியங்களை ஆற்றுவதா அல்லது வேறு வேலைவாய்ப்பு உருவாக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பின்னர் செய்ய வேண்டிய முடிவாகும்.

## ஆலங்குளம் சிமிட்டி ஆலை

* 170 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் சிமிண்டு ஆலைக்குக் கம்பம் கீழ்க்கரைப் பகுதி கடலிலிருந்து நுறைக்கல் எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கீழக்கரை, கம்பம் போன்ற பகுதிகளிலே இருந்து ஆலங்குளம் சிமிண்ட் ஆலைக்கு நுறைக்கல்லை ஆலை அதிபர்கள் எடுக்கிறார்கள். அதன் மூலமாகக் கடல் அலை வேகமாக அடிக்கின்ற காரணத்தினாலே பூமி அரிக்கப்பட்டுவிடுகின்ற காரணத்திலே அந்தக் கல்லை எடுக்கா மலிருந்தால்தான் அரிப்பைத் தடுக்க முடியும். இதைப்பற்றி பொது மக்கள் விண்ணப்பம் கொடுத்திருந்தும் அது கவனிக்காமல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலங்குளத்தைப்பற்றித்தான் நான் சொன்னேன். கம்பம் பக்கத்திலே என்றால் கம்பம் மதுரை மாவட்டத்திலே இருக்கிறது என்று நினைக்கிறேன்.



1971 டிசம்பர் 8]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஆலங்குளம் சிமிண்ட் உற்பத்தியைப் பொறுத்த வரையில் முழு உற்பத்தி நடை பெறுகிறதா, அதை மேற்கொண்டு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா அரசிடத்திலே, மேலும் எக்ஸ்பேன்ஷன் செய்வதற்கு ஏதாவது பிரப்போஸல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு பிரிவுகளிலும் உற்பத்தி தொடங்கியிருக்கிறது. மேலும் எக்ஸ்பேன்ஷன் செய்வதற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

## *Ban on production of colour cloth by powerlooms*

* 171 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have recently imposed a ban on the adoption of specific colours by powerlooms; and

(*b*) if so, whether this Government has taken any follow-up action to implement the ban order strictly in this State, and the details thereof?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) and (*b*) There is no blanket or whosale ban one the adoption of specific colous by powerlooms. But there is a restriction with regard to the use of coloured cotton yarn in the body of a saree except in a border or heading thereof. However, a producer owning less than 5 powerlooms can produce a dhoti with borders not exceeding 6.35 millimetre in width containing coloured yarn.

DR. H. V. HANDE : In view of the fact that this Government wants to promote the opportunities for the handloom department and also for the handloom workers and the handloom section, and in view of the fact that even some years ago when this was a combined State at that time the Assembly had passed a resolution that these borders should be earmarked only for handloom, may I know whether the Government is coming forward to give any categorical order, especially in view of the fact that the Central Government has also now come forward with the order for reserving production of coloured sarees to the handloom sector which was issued in 1967? Is it not a fact that the enforcement of reservation was entrusted to the Inspectorate of the Textile Commissioner's Office in respect of mills and to the State Governments in respect of the decentralised powerlooms? May I know whether that particular order is being implemented by the State Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் உத்தரவை அவர்களுடைய டெக்ஸ்டைல் கமிஷனர் அமல் நடத்தி வருகிறார்கள். இந்த உத்தரவிலே சில விதிவிலக்குகள் கொடுத்திருப் பதால்தான் இது சரியாக அமல் நடத்தப்படாத சூழ்நிலை

இருக்கிறது. இதுபற்றி நம்முடைய அரசாங்கம், தெளிவாக ஆணை பிறப்பிக்கும்படி அணுகியிருக்கிறது. உதாரணமாக, வேட்டியைப் பொறுத்த வரையில்

'No producer shall produce a dhoti with borders not exceeding 6.35 millimetre in width containing coloured yarn'

என்று இருக்கிறது. இப்படி அளவு பார்ப்பது எப்படி, இதிலிருந்து தப்பித்துக் கொள்வது எப்படி, அதைத் தடுப்பது எப்படி என்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் சட்டவிரோதமான முறையில் இல்லாமல் கவனித்துக் கொண்டு இருக்கிறோம். மற்ற மாநிலங்களிலிருந்து சேலைகளை, வேட்டிகளை நம்முடைய மாநிலத்தில் வராமல் தடுக்க நம்மிடத்திலே அதிகாரம் இல்லை. இதுபோன்ற சங்கடங்களை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** சார், கரைபோட்ட வேட்டிகளை மில்கள் உற்பத்தி செய்யக் கூடாது, அவைகளைக் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறதே. அப்படியிருக்கும்பொழுது பவர்லூம்களுக்கு ஒதுக்காமல், கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டுமென்ற அளவில் கட்டுப்பாடு கொண்டு வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது நல்ல யோசனை. மத்திய அரசாங்கம் ஏற்க வேண்டும்.

### கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாகம்

* 172 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பு மில்களில் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் யாரேனும் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் மூன்று தொழிலாளர் பிரதிநிதிகள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலையிலும், ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையிலும் ஒரு தொழிலாளர் பிரதிநிதி வீதம் இயக்குநராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) மீதியுள்ள 9 கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஒரு தொழிலாளர் பிரதிநிதி வீதம் நியமிப்பதற்கு அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள், அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். விரைவிலே அந்த நூற்பாலைகளிலே தொழிலாளர்கள் பிரதிநிதிகளை நியமிக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்கள் பிரதிநிதிகளெல்லாம் அந்தந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலே ஓரே தொழிற் சங்கமாக, தங்களுடைய ஏகப்பிரதிநிதியாக நியமிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னால் அரசாங்கத்திற்கு எளிதாக இருக்கும். பல தொழிற்சங்கங்கள் இருந்தால் பரிசீலிப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

### கூடலூர் வட்டத்தில் சிறு தொழில்கள்

* 173 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலம் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலூக்காவில் சிறு தொழில்கள் ஆரம்பிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், என்னென்ன தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையிலுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, கூடலூர் வட்டத்திலே காகிதத் தொழிற்சாலை, ஜவ்வரிசித் தொழிற்சாலை, மற்றும் மைகா போன்றவைகள் அந்தந்தச் சிறு தொழில்களுக்கான மூலப்பொருட்கள் போதிய அளவில் கிடைப்பதால் அரசு இந்த ஆலோசனையை ஏற்றுச் செயல்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காகிதத் தொழிற்சாலை, பொதுவாக காட்டிலாக்காவிடத்தில் எங்கெங்கே இதற்கு மூலப் பொருட்கள் கிடைக்க முடியும் என்று கேட்டிருக்கிறோம். முடிவுகள் தெரிந்தவுடன் பரிசீலிக்கப்படும்.

### *Coastal roads*

* 174 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have addressed the Centre to allot more funds for the improvement of Coastal roads in the State?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்,

## சின்னவேடம்பட்டிக்குப் பாசன வசதி

*** 175 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் பிர்க்காவிலுள்ள சின்னவேடம்பட்டி கிராமத்தில் பாசன வசதிக்காக குட்டையொன்று கட்ட வேண்டுமென்று அண்மையில் அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ)** ஆம். கோவை மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் பிர்க்காவிலுள்ள சின்னவேடம்பட்டி கிராமத்தில், 70 ஏக்கர் நிலத்திற்குப் பயன்படக் கூடிய ஒரு குட்டை கட்டும் திட்டத்திற்கு 20—5—69-ம் தேதியன்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஒப்புதல் அளித்துள்ளார். ஆனால் இதற்கிடையே அதே கிராமத்தில் ஒரு ஏரி ஏற்படுத்தும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருவதால் இந்தக் குட்டைகட்டும் திட்டத்தை செயல்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த ஏரி கட்டும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவுறும் ? வெகுகாலமாக இருக்கும் அந்த வட்டார மக்களின் கோரிக்கை என்றைக்கு நிறைவேறும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் குட்டை கட்டும் திட்டத்திற்கு 35,000 ரூபாய் செலவில் தலைமைப் பொறியாளர் ஒப்புதல் அளித்தார். ஆனால் அங்கிருக்கும் விவசாயிகள் ஒரு பெரிய குளம் அமைக்கும் திட்டம் வேண்டுமென்று கூறினார்கள். அவர்கள் கணிசமான தொகை செலவிடுவதாகச் சொல்லி அதைப்பற்றி பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியும், விவசாயிகளின் கருத்தும் தெரிந்த பிறகு தலைமைப் பொறியாளரை அறிக்கை அனுப்புமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அறிக்கை விரைவில் கோரப்பட்டிருக் கிறது. அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

## கடுக்காம்பாளையம் பள்ளத்தின் குறுக்கே அணை

*** 176 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி வாய்க்கால் கழிவு ஓடையான கடுக்காம் பாளையம் பள்ளத்தில் அணைகட்ட வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?



(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ)** அவ்வித கோரிக்கை ஒன்றும் வரவில்லை. ஆனால் கோபிச்செட்டிப் பாளையம் வட்டம் கடுக்காம்பாளையம் கிராமத்தில் சர்வே எண். 94-ல் ஓடும் கழிவு ஓடையின் குறுக்கே ரூ. 1.88 லட்சம் செலவில் அணை ஒன்று கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தக் கடுக்காம் பாளையம் பள்ளத்திலே 1967-க்கு முன்னர் ஒரு தனி நபருக்கு ஒரு சிறிய திட்டம் போட்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் திட்டத்தின் காரணமாக ஒரு பெரிய நிலச்சுவான்தார் மட்டும் முக்கால்வாசிப் பயனைப் பெறுகிறார். ஆகவே அங்கேயிருந்து கழிவு நீர் வேறு வருகிறது. அமைச்சரவர்கள்கூட ஒருமுறை பார்வையிட்டிருக்கிறார்கள். இந்தக் கழிவு நீரை இரண்டு இடங்களில் அணைகட்டி அதை வாய்க்கால் மூலம் பயன்படுத்தினால் கூகலூர் கால்வாயின் கடைப் பகுதியில் இருப்பவர்களுக்கு இருக்கும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க முடியும். ஆகவே அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்துப்படி தலைமைப் பொறியாளர் அவர்களை இந்தப் பிரச்சினையைக் கவனிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அறிக்கை கோரி இருக்கிறோம். உரிய நடவடிக்கை தலைமைப் பொறியாளர்களின் அறிக்கையின் பேரில் எடுக்கப்படும்.

## கூவம் சீரமைப்புத் திட்டம்

*** 177 வினா—திரு. மணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூவம் நதி சீரமைப்பிற்கு இதுவரை எவ்வளவு பணம் செலவிடப்பட்டிருக்கிறது ?

(இ) அதன் வேலை முடிய இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ)** கூவம் நதி சீரமைப்பிற்கு 15—9—71 ஆம் தேதி வரை ரூபாய் 152.82 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டம் 1972-ம் ஆண்டு ஜுன் திங்களுக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், கூவத்திலே இப்பொழுது ஒரு முதலை இருப்பதாகச் செய்தி வந்ததே, அதைப் பிடித்து விட்டார்களா ? இல்லையென்றால் அதைப் பிடிக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* முதலையைப் பிடித்ததாகத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE : Sir, as far as the crocodile is concerned, the Commissioner of the Corporation or some official has made a statement that there is a crocodile there. As many persons are afraid about it, will the Hon. Minister inform the House as to what has happened to that? In addition to that, I would like to know why there was so much delay as far as the construction of the Cooum Improvement Works is concerned and what is the exact problem? Will the Hon. Minister take this House into his confidence and inform it, why there is an inordinate delay in regard to this matter. Even during the monsoon season there is a set-back in the completion of the work. Also, whether it is not a fact that the sewage water is being obstructed in view of the construction of these works and whether the Corporation has not taken up this matter and whether it is not possible to divert the sewage water and then attend to that work?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* நான் ஏற்கனவே சொல்லிய பதிலிலே கூவம் வேலைகள் ஜூன் மாதத்திற்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லி இருக்கிறேன். ஆனால் தலைமைப் பொறியாளர் இவ்வாண்டு இறுதிக்குள்ளாக கூவம் சம்பந்தமான எல்லாவிதமான வேலைகளும் முடிந்துவிடும் என்று தெரிவித்தார்கள். இந்தக் கழிவு நீரைப் பொறுத்த வரையில் மாநகராட்சி ஆணையாளரைக் கலந்து பேசியிருக்கிறோம். மாநகராட்சி மூலம், அந்தக் கழிவு நீர் கூவம் ஆற்றிலே வந்து சேராமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னோம். அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். தொடர்ந்து இந்த மாதமும் அதிகாரிகளைக் கலந்து பேசிக் கொண்டு இருக்கிறோம். உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். இது ஒரு பெரிய திட்டம். கிட்டத்தட்ட 189 இலட்சம் ரூபாய் செலவு பிடிக்கக்கூடிய திட்டம். 152.82 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் பாக்கி வேலைகளை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். விரைவில் நிறைவேற்றப்படும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. மணலி சி. கந்தசாமி :* சார், இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றிய பிறகு தொடர்ந்து அந்த கரைகளை அழகுபடுத்தும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* கரைகளை அழகு படுத்துகிற திட்டமும் இருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்:* சார், சட்டசபை விடுதிக்கு அருகாமையிலே இந்தக் கூவத்தின் வாடையானது மிகவும் கஷ்டமான நிலையிலே இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாகத் தவிர்க்க ஏதாவது துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா?





*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* கூவம் ஆற்றுச் சீரமைப்பின்மூலம் சட்டசபை விடுதிக்கு முன் மட்டுமல்ல, கூவம் ஆறு வருகின்ற இடங்களிலே துர்நாற்றத்தைப்போக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தையும் மனத்திலே கொண்டு அதிகாரிகளிடத்திலே சொல்லி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know the original estimate for improvement of Cooum and the actual expenditure that has been incurred up to now an dwhat will be the total expenditure when it is completed and also the reasons for the increase in expenditure?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The original estimate was Rs. 118.50 lakhs. The revised estimate was Rs. 189.97 lakhs. Up to 15th September 1971, we have spent Rs. 152.82 lakhs.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply was saying that the revised estimate was about Rs. 180 lakhs and up to 15th September 1971 they had spent about Rs. 152 lakhs, that means they had spent more than 3/4th of the amount. May I know whether 3/4th of the work has been completed? That is the question I put and I want to elicit an answer for that. When the department put up the original estimate, they ought to have provided for outlet of sewage water. How is it that forethought was not there in the beginning and how is it that sewage problem has become a new problem suddenly to be tackled after consultation with Corporation. Now there is difficulty because provision was not made originally for sewage water outlet. Since that forethought was not there in the beginning, it is now said that discussion is going on between the two, the P.W.D. and Corporation. The discussion may go on but because of rains the storm water drainage gets filled up and there is no proper outlet for sewage water due to this Cooum improvement scheme. When they had spent 3/4th of the amount, they ought to have completed 3/4th of the work. But that is not the case and not even 1/2 the work had been completed. What is the reason for all these?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* இந்தக் கழிவு நீர்ப் பிரச்சினை இப்போதுதான் கவனத்திற்கு வந்தது என்பது சரியல்ல. கூவம் திட்டம் மேற்கொள்ளப்படும்போதே இவை எல்லாம் கவனிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதிகாரிகள் எல்லாம் கலந்து பேசி ஏற்கனவே மாநகராட்சி ஆணையர் திட்டம் தீட்டியிருக்கிறார். 1971-ம் ஆண்டு முடிவதற்குள்ளாக நிறைவேற்றித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கூவம் திட்டத்தைப் பொறுத்தவரை 75 சதவிகிதத்திற்கு மேற்பட்ட வேலைகள் முடிவடைந்து விட்டன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மூன்று பகுதிகளாக இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

The first stage works have almost been completed except for the commissioning of the Sand Pump which will be done shortly. In the II stage about 70 per cent of the channelisation works have been completed. The balance of works will be taken up after the present monsoon period is over and completed before the end of June 1972 as indicated by the Special Chief Engineer. In the III stage, about 941 fire proof tenements have been constructed for rehabilitation of the encroachers. The reasons for the increase in the cost of revised estimate is due to the excess in tender rates for the first stage works and due to taking up of certain additional works such as construction of dhobi-khanas, swimming and diving pools, boat club building, etc., as also the increased quantum of work to be tackled.

THIRU K. M. SUBRAMANIAM : Now that Government has said that there would be overflow of drainage water because of closure of Cooum for drainage, may I know whether proposals for disposal of drainage water have been submitted to Government? According to the Hon. Minister for Public Works, the Commissioner is supposed to make certain suggestions before 1972. What is important is what is the definite proposal for rectifying the overflow of drainage water because of Cooum improvement and if proposals had been submitted what is the estimate of those proposals?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பிரச்சினை எல்லாம் நன்றாகத் தெரியும். (திரு. கே. எம். சுப்பிரமணியம்: இப்போது உறுப்பினர் இல்லை) இந்தத் கழிவுநீர்க் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற மாநகராட்சி பொறுப்பேற்றிருக்கிறது.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* ஏற்கனவே முதலைகள் இருந்ததா என்பது பற்றி இப்போது ஒன்றும் தெரியவில்லை. படம் எடுத்த பாம்புகள், படத்தைக் கீழே போடாமலே இருக்கின்ற பாம்புகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* படம் எடுத்து கீழே போடாத பாம்பால் யாரையும் தீண்ட முடியாது.

*திருமதி. த. ந. அனந்தநாயகி:* முதலையினால் வேலை தாமதப் பட்டது என்று சொல்லப்பட்டது. இப்போது எமர்ஜென்சியினால் வேலை தாமதப்படலாம். முதலையைப் பிடித்தார்களா இல்லையா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. இப்போது சொல்லுவார்களா ? இந்த நிலைமைகளால் தாமதம் ஏற்படாது இருக்குமா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* முதலை இருப்பதாக ஒரு வதந்தி வந்தது. ஆனால் முதலையின் காரணமாகவோ, எமர்ஜன்சி காரணமாகவோ வேலைத் தவக்கம் ஏற்படவில்லை. முதலை விஷயமாகத் தனியாகக் கேள்வி போட்டால் முதலை பற்றிய முழு விவரங்களையும் சேகரித்துத் தருகிறேன்.





*திரு. எம். ஏ. லத்தீப் :* கூவம் ஆற்றில் முதலை இருப்பதாக செய்தி வந்ததும் கூவம் ஆற்றுக்குப் பல காரியங்களாகப் போகக் கூடியவர்கள் இப்போது கூவம் ஆற்றை நெருங்காமலே இருக்கிறார்கள். ஆகவே, அங்கு அசுத்தம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. இந்த வேலை முடிந்தவுடன் அரசாங்கமே கூவம் ஆற்றில் முதலைவிடுவது பற்றி ஆலோசிக்குமா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* எற்கனவே அரசாங்கம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ' முதலை ' கூவம் ஆற்றில் போட்டிருக்கிறது. (சிரிப்பு).

*திரு. ஏ. சி. நரசிம்மன்:* கூவம் ஆற்றில் உல்லாசப் படகுகளை விடுவதாகச் சொல்லியிருந்தார்கள். கூவம் ஆற்றில் கரை ஓரங்களை அழகுபடுத்தவும், இரவு நேரங்களில் மின் விளக்குகள் போடவும் மற்றும் வியாபாரம் செய்யக்கூடிய கடைகள் அமைக்கும் ஏற்பாடுகளைச் செய்யவும் திட்டமிட்டிருந்தார்கள். இந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* படகுகள் தயாராகின்றன. அங்கத்தினரைப் போன்றவர்கள் அதில் ஏறி சவாரி செய்ய கொஞ்சம் உடம்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். (சிரிப்பு).

*திருமதி ஜோதி வெங்கடாசலம் :* கூவம் ஸ்கீம் ஆரம்பித்த பிறகு எத்தனை முறை எஸ்டிமேட்ஸ் ரிவைஸ் செய்யப்பட்டது?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* ஒரே ஒரு முறைதான் ரிவைஸ் செய்யப்பட்டது. அப்போது கூட அதைப் பரிசீலனை செய்து காரணங்கள் எல்லாம் நியாயம் என்பதைக் கருத்தில் கொண்டுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* கனம் முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒரு கோடி ரூபாய் முதலைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த 'முதலை' இந்த முதலையைப் போல் ஆகாமல் பாதுகாக்கப்படுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* இந்த அரசு அப்படிப் பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தக்க முறையில் எடுக்க வருகிறது.

*திரு. நா. வீராசாமி :* கூவம் திட்டத்தைப் பற்றி இப்போது சிலர் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். கூவம் திட்டத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளாமல் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில் கூவம் என்றால் எப்படி இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளும் வகையில் உண்மையான கூவத்தை எதாவது ஒரு பகுதியில் விட்டு வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில கூவங்கள் விடப்பட்டிருக்கின்றன மனித உருவில்.

*Tractors received from East Germany*

* 178 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the tractors supplied by German Democratic Republic in 1970 were found to be defective in their construction and if so, the details thereof;

(b) whether the State Agro Industries Corporation has reported to the Centre that it is finding it difficult to sell these tractors to the farmers;

(c) the number of complaints received from the farmers and the details thereof; and

(d) the action taken by the Government to substitute these defective tractors by good ones?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) — (எ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE: May I know from the Hon. Minister whether steps have been taken by this Government to increase the supply of tractors from German Democratic Republic or any other place? May I know whether it is possible for Government to see that this is correlated with the new agricultural policy of having small landholdings. Land holdings are increasing and we are going to have small and smaller landholdings. Will the Government try to see that tractors are fully utilised when Government is having a policy whereby land is being reduced to small and smaller pieces?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே இதற்கு விடை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆர். எஸ். 09 டிராக்டர்கள் 20 பரிதிறன் கொண்டவை தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டன. இதை விவசாயிகள் விரும்பாத காரணத்தால், அது இப்போது சேர்க்கப் படவில்லை. ஆனால் மீண்டும் அவற்றை எடுத்துக் கொள்ள வழிவகை இல்லை. மூன்று பேர் அந்த டிராக்டருக்கு மாறாகப் பணத்தைத் திருப்பிக் கேட்டிருக்கிறார்கள். ஆனாலும் வேளாண்மைத் துறை அபிவிருத்தியை முன்னிட்டு இப்போது 25 டிராக்டர்கள் 200 வரவழைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 200 டிராக்டர்களைச் சமீபத்தில் வரவழைப்பதற்கு மத்திய அரசு வேளாண்மை தொழில் கழகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது நம்முடைய நாட்டில் மிகச் சிறந்த டிராக்டர்கள் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப் படுகிறது. இதை விட்டு விட்டு ஏன் இன்னும் வெளிநாட்டிலிருந்து 200 டிராக்டர்கள் அளவுக்கு வாங்க வேண்டும். மத்திய அரசாங்கம் அனுமதித்தாலும் நம்முடைய அரசாங்கம் அது தேவையில்லை.

@ 97-104-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



உள்நாட்டிலே தயாரித்த டிராக்டர்களே போதும் என்று ஏன் கூறக்கூடாது? வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட டிராக்டர்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ்களுக்கும், ரிப்பேர் செய்யவும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மத்திய அரசு இப்போது அதற்கு அனுமதி வழங்கி வருகிறது. மாநில அரசுக்கு தற்போது அதற்கு உரிமை இல்லை. உரிமை கிடைக்கப்படுமானால் அவைகளைச் செய்வதற்குத் தயாராயிருக்கிறது. அதோடு இப்போதே ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைப்பதற்கு வேளாண்மை தொழில் கழகம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, இந்த ட்ராக்டர்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். மத்திய அரசிடமிருந்து ஏதாவது மறுமொழி வந்திருக்கிறதா? தொடர்ந்து ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எழுதப்பட்டிருக்கிறது. எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

தீவிர வேளாண்மைத் திட்டம்

* 179 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்டு வரும் தீவிர விவசாயத் திட்டத்தை மற்றைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. துரை கோவிந்தராசன்: தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலங்களுக்கு தீவிர சாகுபடித் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அதேபோல் புன்செய் நிலங்களுக்கும் தீவிர சாகுபடித் திட்டத்தை அமல்படுத்தும் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா? அப்படி ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: புன்செய் நில மேம்பாடுத் திட்டம் இன்னும் தஞ்சை மாவட்டத்தில் செயல் படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

## தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்

*** 180 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களுக்கு வீட்டு மானியம் அளிக்க உத்தேசம் ஏதாவது அரசிடம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கூட்டுறவு முறையில் பிற்பட்ட இன மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் இல்லாவிட்டாலும் மிக பிற்பட்டோர் அதிகமாக வாழக்கூடிய சில பிற்பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன. அங்கு வீட்டுவாரியம் மூலம் சென்னையில் கட்டித்தருவது மாதிரி வீடுகளைப் பிற்பட்ட சமூகத்தினருக்குக் கட்டித் தருவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ? அல்லது திட்டத்தை உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** திட்டம் மானியத்தைப் பற்றியது. பிற்பட்டோர் நலனைப் பற்றியதல்ல.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Is it not question No. 180, namely, "will the Hon. Minister for Backward Classes be pleased to state:

Whether there is any proposal with the Government to sanction grant for the Co-operative House Building Societies for Labourers. ?"

I am only asking whether the State Government has any scheme directly to construct houses for the backward classes people in the backward districts.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தற்போது அப்படிப்பட்ட திட்டங்கள் எதுவும் இல்லை.

## ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் மூலம் வீடுகள்

*** 181 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு, ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக தமிழ்நாட்டில் வீடு கட்டித் தருமாறு ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனை கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) இல்லை. தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டில் வீடுகள் கட்டித்தருமாறு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை கேட்கவில்லை, எனினும் தமிழ்நாட்டில் வீட்டு வசதி நடவடிக்கைகளுக்கென இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து கடனுதவி பெறப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி :** பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருந்தது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருவதாக. அப்படிக் கட்டித் தருவதாகயிருந்தால் நம் அரசு மூலம் நாம் ஏன் கேட்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீடுகள் கட்டித் தருவதற்கு வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் இவை இருக்கின்றன. ஆகவே. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வந்து இங்கு கட்டவேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

## அம்பாசமுத்திரம் காடுகளில் மரங்கள் களவு

*** 182 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970–71–72-ல் அம்பாசமுத்திரம், நாங்குநேரி மலைப் பிரதேசங்களில் காட்டு இலாகாவிடம் இருந்து காண்ட்டிராக்ட்டுகள் வாங்கியவர்கள், காண்ட்டிராக்ட் நிலத்தினை ஒட்டியுள்ள மரங்களை வெட்டி எடுத்து செல்லுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) 1970–71-ல் திருநெல்வேலி தெற்கு பிரிவிலுள்ள நாங்குநேரி வனச் சரகத்தில் உள்ள விறகு கூப்புகளிலிருந்து இரண்டு குத்தகைதாரர்கள் (எம். பி. வி. அய்யனார் ராஜா, எஸ். எஸ். ராஜலிங்க ராஜா) குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை ஒட்டியுள்ள சில மரங்களை வெட்டினார்கள். அவ்விரண்டு குத்தகைதாரர்கள் மீது, ஒப்பந்த விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுத்து ரூ. 265 அபராதமாக வசூலிக்கப்பட்டது. 1971–72-ல் மேற்படி சரகத்தில் குத்தகை விடப்பட்ட நிலங்களை ஒட்டியுள்ள மரங்களை எந்த குத்தகைதாரரும் வெட்டவில்லை. அம்பாசமுத்திர சரகத்தில் மேற்சொன்ன இரு ஆண்டுகளிலும் ஒரு சம்பவமும் நடைபெறவில்லை.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இதுமாதிரி காடுகள் ஏலத்தில் விடும்போது பக்கத்து காடுகள் செழிப்பாக இருந்தால்தான், அப்படிப்பட்ட அந்தப் பக்கத்துக் காடுகளை கவனித்துத்தான், ஏலத்தில் எடுக்கிறார்கள். ஆனால் பக்கத்து காடுகள் செழிப்பாக இல்லை என்றால் ஏலத்தில் விடும் காடுகளை சரியாக ஏலத்தில் எடுப்பதில்லை. ஆகவே, காண்ட்ராக்டர்கள் இப்படி பக்கத்து

காடுகளில் தவறுகள் பல செய்வதால் அதன்பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? அப்படி தவறு செய்யும் காண்ட்ராக்டர்களுக்கு மீண்டும் காண்ட்ராக்ட் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** காண்ட்ராக்டர்களில் தவறு செய்பவர்கள் இரண்டாகப் பிரிக்கப்படலாம். இவ்வளவு ஏக்கர் என்று காண்ட்ராக்ட் எடுத்துவிட்டு பார்டர் லைனில் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் ஏதாவது மாறி வெட்டிவிட்டால் அதைக் கண்டு பிடித்தால் அபராதம் விதிக்கப்படுகிறது. வேண்டுமென்றே வெட்டியதாக இருந்தால் காண்ட்ராக்டை ரத்து செய்கிறோம்.

### பவுஞ்சிப்பட்டு காட்டு நிலங்கள் ஒப்படை

*** 183 வினா—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், லக்கிநாய்க்கன்பட்டு கிராமத்தில் உள்ள ஏழை நிலமில்லாத விவசாயிகள் 67–68-ம் ஆண்டு காலத்திலிருந்து 70-ம் ஆண்டு வரை பவுஞ்சிப்பட்டு ஒதுக்க காட்டில் நிலம் அடமானம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்களா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) அந்தக் காடுகளைச் சுற்றியுள்ள கிராமங்களின் ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் நிலமாக விளங்குவதாலும், தென்னாற்காடு மாவட்டத்தில், ஒதுக்கக் காட்டின் பரப்பளவு மிகக் குறைவாக இருப்பதாலும் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவராலும் பரிந்துரைக்கப்படவில்லை.

### வாலாஜாபேட்டையில் நகரப் பேருந்துகள்

*** 184 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, வாலாஜா பேட்டையில் ஓடுகின்ற டவுன் பஸ்கள், ஊருக்கு அருகில் உள்ள அண்ணா பெண்கள் கலைக்கல்லூரி வரை சென்று வர பர்மிட் இருந்தும் செல்லுவது இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த பஸ்கள் கல்லூரி வரை செல்ல அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. கே. ஏ. வகாப் :** சில தனியார் பஸ்கள் அப்படிச் செல்லாமல் இருப்பது உண்மை. வட ஆர்க்காடு மாவட்டத்திலே சில தனியார் பஸ்கள் தடம் மாறிச் செல்லும் நிலையும், அதுவும் குறிப்பாக நம் அரசுப் போக்குவரத்து செல்கிற வழியே செல்கிற நிலையும் இருக்கிறது. இது சம்பந்தமாக அதிகாரிகளின் கவனத் திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இனியாவது இதுபற்றி நல்லமுறையில் பரிசீலித்து அப்படியெல்லாம் ஏற்படாமல் செய்வதற்கும் மக்களின் வசதிக்கு ஏற்பாடுகள் செய்வதற்கும் அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனியார் பேருந்துகள் அந்தப் பெண்கள் கல்லூரிக்கு ஒழுங்காகச் சென்று வருகின்றன என்று கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அக்கல்லூரிக்கு ஒரு தனி பஸ் ஏற்கனவே இருந்து வருகிறது. ஆகவே, உறுப்பினர் அவர்களுக்கு வேறு ஏதாவது புகார்கள் இருக்குமானால், அரசாங்கப் போக்குவரத்துத் துறை நடத்துகிற வழித்தடங்களில் தனியார் துறை போக்குவரத்து இயங்குகிறது என்ற புகார்கள் இருக்குமானால் அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தனியாகத் தெரிவித்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** வாலாஜாவில் பஸ் ஸ்டாண்ட் இருக்கிற இடம் மிகச் சிறியதாக இருக்கிறது. இரண்டு பஸ்களே நிற்கக்கூடிய இடமாக இருப்பதால் பஸ்கள் சில நேரங்களில் அங்கு நிற்க முடியாத நிலை ஏற்படுகிறது. பெண்கள் கல்லூரிக்குப் பக்கத்தில் தீனபந்து ஆசிரமம் இருக்கிறது. அது பெரிய இடமாக இருக்கிறது. ஆகவே அந்த இடத்திலிருந்து பஸ்கள் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்தால் இந்தப் பிரச்னையே வராது. எனவே இப்போது உள்ள பஸ் ஸ்டாண்டை அந்த இடத்திற்கு ஷிஃப்ட் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கவனத்தில் கொள்ளப்படும்.

### திருவள்ளூர் வீரராகவசுவாமி கோயில்

***185 வினா—திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வீரராகவசுவாமி கோயிலின் நிர்வாகத்தைக் கவனிக்க அறங்காவலர் வாரியம் ஒன்றையும், நிர்வாக அதிகாரி ஒருவரையும் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

*திரு. ஆ. பரந்தாமன் :* திருவள்ளூரிலுள்ள வீரராகவசுவாமி கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மேல் இன்றையதினம் பொது மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், ஐம்பதுக்கு மேற்பட்ட அந்தக் கோயிலுக்குச் சொந்தமான சத்திரங்களை அவர்கள் சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையை இன்றையதினம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே கணிசமான அளவில் ஆண்டு வருமானம் பெறுகிற அந்தக் கோயிலின் நிர்வாகப் பொறுப்பை அறங்காவலரிடம் கொடுப்பதற்கு விரைவாக அரசு ஏற்பாடு செய்யுமா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* திருவள்ளூர் திரு. வீரராகவசுவாமி கோயிலிற்கு அகோபில மடம் ஜீயர் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கிறார்கள். அங்கு அறங்காவலர் வாரியம், அல்லது ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கிற செயற்குறிப்பு இதுவரையில் இல்லை. ஆனால் அதன் நிர்வாகத்தில் ஏதாவது கோளாறுகள் இருக்குமானால் தனியாக அதிகாரிகள் மூலம் பரிசீலனை செய்யலாம்.

### மகளிர் பிற்காப்பு இல்லம், வேலூர்

** 166 வினா—திரு. மா. பா. சாரதி :* மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மகளிர் பிற்காப்பு இல்லத்தில் (After Care Home) சென்ற ஆண்டு எத்தனை பேர் சேர்க்கப் பட்டுள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு மறுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளது ?

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* (அ) (1970) கடந்த ஆண்டில், வேலூரிலுள்ள மகளிர் பிற்காப்பு இல்லத்தில், வயது வந்தவர்கள் 54 பேரும், சிறுமியர் 2 பேரும் அனுமதிக்கப்பட்டனர்.

(இ) இவர்களுள், வயது வந்தவர்கள் 26 பேருக்கும், ஒரு சிறுமிக்கும் புதுவாழ்வளிக்கப்பட்டது.

*திரு. மா. பா. சாரதி :* தலைவரவர்களே, அந்த இல்லத்தில் இருக்கும் அந்தப் பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்க முற்படுவது போலவே, அரசுத் துறையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* மறுவாழ்வு அளிப்பது என்பது சில வழிகள் மூலமாக தரப்படுகிறது. அதிலே, முக்கியமாக அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறது. வேறு சிலருக்கு குறுகிய கால பயிற்சிகள், தையல் பயிற்சி





போன்றவை அளிக்கப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக தையல் மிஷின்களும் அளிக்கப்படுகிறது. மேலும், அதிலே இருக்கும் ஒரு பெண் பாரதிதாசன் நினைவு தமிழ்க் கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படிப்பு படித்து வருவதாக குறிப்பு இருக்கிறது. எனவே பல வகைகளில் அவர்களுக்கு வசதியும், தொழிற் பயிற்சியும் கொடுத்து புதுவாழ்வு அளிக்கப்படுகிறது.

*திரு. ஏ. சி. நரசிம்மன் :* தலைவரவர்களே, எத்தனைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :* கடந்த ஆண்டில் ஏழு பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

### (2) நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கும்படிக் கோரல்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, before you go to the next item, with your permission, I would like to draw the attention of the Hon. Speaker to Rule 235.

நேற்று எனக்கு பதிலளிக்கக் கூடிய வேகத்தில் கனம் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கும் நீட்டி, முழக்கி பேசி நடிக்கத் தெரியும் என்று சொன்னார்கள். அது சட்டசபையின் கௌரவத்தை வெகுவாகப் பாதிக்கும் என்று நினைக்கிறேன். என்னைப் பற்றிச் சொன்னால் நான் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டேன். ஆனால் சட்டசபையில் மக்கள் பிரதிநிதியாக வந்திருக்கும் நாங்கள் மக்களுக்காக நடித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்வது அவர்களையும் பாதிக்கும், எங்களையும் பாதிக்கும். நடிப்புத் துறையில், நடிப்பில் அவர்களுக்குச் சமமாக நாங்கள் இருக்க முடியாது என்று ஒப்புக்கொள்கிறோம். ஆனால், சட்ட சபையில் வந்துள்ள மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து நடிக்கிறார்கள் என்று சொல்வது உண்மையிலேயே சட்டசபையின் கௌரவத்தையும், மரபையும் பாதிப்பதாகும். மக்கள் மன்றத்தில் சட்டசபையின் மதிப்பு குறைந்து விடும். ஆகவே அந்த வார்த்தைகளை நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து கனம் சபாநாயகர் அவர்கள் சட்டசபையின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக நீக்கவேண்டுமென்று உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், நேற்றைய தினமே இந்த விஷயத்தைப்பற்றி உடனடியாக எழுப்புவதற்கு நாங்கள் மறந்து விட்டோம். (சிரிப்பு.) ஆதலாலே இந்தச் சந்தர்ப்பத்திலே இது அவசர முக்கியமான விஷயம் என்ற காரணத்தாலே உங்களுடைய அனுமதியோடு எழுப்புகிறேன். அந்த வார்த்தைகளை நீக்கம் செய்யவேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சாதாரணமாக இந்த மாதிரி 'இன்சினியூவேஷன்' 'ரிஃப்லெக்ஷன்' இது எல்லாம் கூடாது என்று விதிமுறைகளிலே இருக்கிறது. ஆதலால், இந்த 'நடிக்கிறோம்' அல்லது 'நடிப்புக்கு நாங்களும் ஆளாகி இருக்கிறோம்' என்று 'ரிஃப்ளெக்ஷன்' என்று சொல்லக்கூடிய அளவிலே வரக்கூடிய அந்த மாதிரியான விஷயங்களை நீக்குவது பொருத்தமாக இருக்கும், சிறந்ததாக இருக்கும், இந்த அவையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அது ஒரு சிறந்த மரபாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, அந்த மாதிரியான 'நடிக்கிறோம்' அல்லது 'நடிக்கிறார்கள்' என்று சொல்லக்கூடிய வார்த்தைகளை நீக்குவதற்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வார்த்தைகள் எழுதுவது என்பது ஒன்று. அதைச் சொல்கிற பாணி என்பது ஒன்று. நேற்றைய தினம் அம்மையார் அவர்கள் பேசும்போது தாங்கள் சொல்லவேண்டிய வார்த்தைகளை ஒரு தனி பாணி வகுத்துக்கொண்டு, தாங்கள் பேசி வந்ததற்கு முற்றிலும் புறம்பாக திடீரென்று தொனியை மாற்றிக்கொண்டு, குரலை நீட்டிப் பேசினார்கள். அவர் பேசியதை இந்த அவை நன்றாகக் கவனித்தது. அதை அவை முழுவதும் அறிந்த அந்தக் காரணத்தினாலே தான் நான் பதில் சொல்கிற நேரத்தில் 'எங்களுக்கும் நீட்டி, முழக்கி, நடிக்கத் தெரியும்' என்று சொன்னேனே அல்லாமல், இந்தச் சபையில் இருக்கும் அம்மையாரையோ, மற்ற உறுப்பினரையோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எங்களுக்குத் தெரியும் என்று சொன்னேன். உங்களுக்குத் தெரியும் என்று அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். இதிலே எந்தத் தவறும் இல்லை என்று நினைக்கிறேன். நான் முதலிலே சொன்ன மாதிரி, வார்த்தைகளை எழுதுவது என்பது ஒன்று, அதைச் சொல்கிற பாணி என்பது ஒன்று. ஒருவரைப் பார்த்து 'நல்லவர்' என்று சொல்லலாம். ஒருவரைப் பார்த்து 'ஆஹா, ரொம்ப நல்லவர்' என்றும் சொல்லலாம். அப்படிச் சொல்கிறபோது 'ரொம்ப நல்லவர்' என்பதை அப்படியே எழுதிப் பார்த்தால் 'ரொம்ப நல்லவர்' என்று அப்படியே இருக்கும். பேசுகிற பாணியைப் பார்த்தால் 'ரொம்ப நல்லவர்' என்பது 'ரொம்ப கெட்டவர்' என்று பொருள்படுகிற வகையில் இருக்கும். அம்மையார் அவர்கள் அந்தப் பாணியைப் பின்பற்றிய காரணத்தால், அதே முறையில் பதில் சொன்னேன். யாரையும் புண்படுத்தவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. இப்போது ஆளும் கட்சியாக இருக்கிறோம் என்கிறபோது மட்டுமல்ல, கடந்த 1957-ம் ஆண்டிலிருந்து இந்த அவையின்





உறுப்பினராக இருக்கும் நான் எப்போதும் அவை உறுப்பினர்கள் யாரையும் புண்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு பேசியது கிடையாது. அவையின் உரிமையைப் பறிக்கவேண்டும், அவையின் உரிமைகளைக் குலைக்கவேண்டுமென்று நான் இருந்தது கிடையாது என்று தெரிவித்துக்கொண்டு, இதில் நீக்கப்படவேண்டியது ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. நா. வீராசாமி : இதைப்பற்றிய ஒரு விளக்கம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, நேற்றையதினம் எழுப்ப மறந்துவிட்டோம் என்று சொன்னார்கள். மறந்து விட்டதற்கு மறு பரிகாரம் அளிப்பதற்கு சட்டவிதிகளில் இடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் சட்டம் ஒன்று தான். தாங்களும் சில வேளைகளில் மறந்து விடுகிறீர்கள். காலையில் திரு. ஜேம்ஸ் இடத்தில் மாறி உட்கார்ந்ததை நீங்கள் மறந்து விடவில்லையா ?

அம்மையார் அவர்கள் எழுப்பியுள்ள ஒழுங்குப்பிரச்னை ஒன்றும் ஒழுங்குப்பிரச்னை அல்ல. அம்மையார் அவர்களுக்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஒரு சட்டவிதியைப் படித்துக் காட்டினார்கள். விதி 235-ஐ படித்துக் காட்டினார்கள். முதலமைச்சர் சொன்ன விளக்கம் அம்மையார் அவர்கள் காட்டிய விதியின் கீழ்தான். அவர்கள் ஆங்கிலத்திலே சொன்னதைத்தான் தமிழிலே சொன்னார்கள், முதல் அமைச்சர வர்கள் நேற்றையதினம். அந்த 235-வது விதியில்'

'If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report . . .'

என்று இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னதும் அது தான் இந்தச் சபைக்கு ஒரு மரபு இருக்கிறது. மரியாதை இருக்கிறது. கண்ணியம் இருக்கிறது. அதை நாம் நாடக பாணியில் மாற்றிச் சில வேளைகளில் பேசக்கூடாது, நடித்துக் காட்டுவதாக இருக்கக்கூடாது என்று தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்களை அவமதிப்பதற்காகச் சொன்னார்கள் என்று நான் கருதவில்லை.

இன்னொன்று, நடிப்பது என்பது ஒன்றும் பாவம் அல்ல. எல்லோரும் நடிகர்களாகிவிட முடியாது. போலியாக நடிக்கக் கூடாது என்பது வேண்டுமானால் தவறாகக் கருதலாம். (குறுக்கீடு) நடிப்பது என்பது ஒரு பெரிய கலை. உலகத்தில் இருக்கும் உன்னதமான பல கலைகளில் நடிப்பதும் ஒரு கலை. ஆயிரத்தில் ஒருவர், லட்சத்தில் ஒருவர்தான் நடிகராக இருக்க முடியும். நடிப்புக் கலையை நாம் பாராட்டுகிறோம். நடிப்புக் கலையைக் கேவலமாகக் கருதக்கூடாது. சட்டசபையில், 'ஜெஸ்டிகுலேஷன்', வேறு மாதிரி தொனியில் மாற்றிப் பேசக்கூடாது. நடிப்பது மாதிரி இருக்கக் கூடாது. அம்மையார் அவர்கள் எந்த விதியைக் காட்டிப் பேசினார்களோ, அதே விதியைத்தான் முதலமைச்சர் அவர்களும் விளக்கிச் சொன்னார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே சொன்னார்கள், சட்டசபையின் கௌரவம், அதனுடைய உயர்ந்த விதித்தன்மை, நல்ல நிலையில் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். இது அத்தனை பேருக்கும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவைகளை நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை. அம்மையார் அவர்களைப் புண்படுத்துவதற்காக சொல்லப்பட்டது என்று யாருமே கருதத் தேவையில்லை, என்று என்னுடைய தீர்ப்பை நான் சொல்கிறேன்.

THIRU A. PARANTHAMAN : Sir, on a point of clarification...

MR. SPEAKER : No point of clarification.

Thirumathi T. N. Anandanayaki rose.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றிய தீர்ப்பு முடிந்து விட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நடிப்பை யாரும் பாவம் என்று சொல்லவில்லை. சட்டசபையில் நடிக்கிறார்கள் என்று சொன்னதைத் தான் குற்றம் என்று சொன்னேன். நடிப்புத் துறையை, அந்தக் கலையை யாரும் குறைத்துப் பேசவில்லை.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, இயல், இசை, நாடகம் என்பது தமிழர்களின் மரபு. பேசுகிறபோது 'இதோ' என்று கையைத் தூக்கிக் காட்டுவது நடிப்புத்தான். தலையை அசைத்து 'இப்படித்தான் செய்வேன்' என்று சொல்வதும் நடிப்புத்தான். நடிப்பு கலவாத பேச்சோ, நடிப்பு கலவாத செய்கையோ இல்லை. நடிப்பும் சிறந்தது தான். மனிதனுடைய செய்கைகளில் இயல், இசை, நாடகமும் சேர்ந்தது தான் என்று சொன்னார்கள். அதனாலே சாதாரணமாக பேசுவது அத்தனையுமே நடிப்பு அல்ல. நடிப்பாகக் கருத முடியாது. நேற்று கூட நான் பேசுகிறபோது கையை இப்படி எங்கோ தூக்கி விட்டேன். அப்படித் தூக்கிவிட்ட கை எங்கோ திசை மாறி விட்டது என்பதற்காக நீங்கள் எல்லோரும் சிரித்து விட்டீர்கள்.





அதனாலே அதுவும் நடிப்புத்தான். இப்போது நான் கையைத் தூக்கி 'இப்படி' என்று சொல்கிறேன். இதுவும் நடிப்புதான். ஆகவே, இங்கே பேசப்படுவதை நடிப்பாகக் கொள்ளாமல் நாணயமாகக்கொண்டு, அதை சாதாரண முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று இந்த சபையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாகவே நான் கேட்டுக் பி.ப. 10-30
கொள்வது ஒரு தீர்ப்பு அளித்தபிறகு, விளக்கங்கள், விஸ்தாரங்கள் கொடுப்பது மன்றத்தின் மரபுக்கு உகந்தது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். விவாதத்திற்குப் பிறகுதான் தீர்ப்புக்கு வருகிறோம். அதற்கும் பிறகு விளக்குவது சரியாக இருக்காது, அதற்கு மேல் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## (3) அவையுரிமைக் கேள்விகள்.

*பேரவைத் தலைவர் குறிப்பிட்ட நாளில் கூடவிருந்த பேரவைக் கூட்டம் தள்ளி வைக்கப்படலாம் என முதலமைச்சர் பத்திரிகைகளுக்கு அளித்த செய்தி குறித்து.*

MR. SPEAKER : Under Rule 184 of the Assembly Rules, the hon. Member Thiru K. T. K. Thangamani has given notice to raise a matter of privilege. The matter is as follows :—

"The Hon. Speaker was pleased to adjourn the House on 25th October 1971 to meet again on 15th November 1971. Before the Hon. Speaker's summons for a later date (4th December 1971) by way of intimation by the Secretary to each member was communicated and received, a statement by the Executive through the Chief Minister in the press announced such postponement. This constitutes a breach of privilege impinging upon the sovereignty of the House and encroachment upon the power of the Speaker".

THIRU K. T. K. THANGAMANI : Sir, in my notice I have clearly stated what is provided under Rule 84. Under Rule 3 the Secretary will intimate to each Member the date and place appointed for the meeting. Under Rule 14, the Hon. Speaker may summon for an earlier or later period. When such is the case, as you know, the House was adjourned on 25th October 1971 and you were pleased to inform us that the House will reassemble on 15th November 1971. So we were all expecting under Rule 2, the summons of the Hon. Speaker through the Secretary. As I said already, Rule 17 provides more powers to the Speaker inasmuch as he is at liberty to alter the date 15th November 1971 to any date prior or after 15th November 1971. Such an issue was raised in this House as early as 1958 and again in 1963, as reported in 1963 Volume XIII, pages 34, 152 and 153.

[Thiru K. T. K. Thangamani] [1971 டிசம்பர் 8

I will not take the time of the House to read the entire thing but in that particular case the House was adjourned to a particular date by the order of the Hon. Speaker. After the announcement was made by the Hon. Speaker, the Governor was pleased to prorogue the House. Mr. Kalyanasundaram, a member of the House, then raised a matter of privilege. The Hon. Speaker took some time to give his ruling and later on when he gave the ruling, he has clearly stated that although the Governor has got powers under the Constitution to prorogue the House, the Governor acts only on the advice of the Council of Ministers. At the same time the Hon. Speaker also when he fixes the date consults the Council of Ministers. How can there be two different views in a matter of 7 days or 10 days ? That was the point raised. The Hon. Speaker was pleased to say that there might have been suddenness for the Governor to bring about an Ordinance or similar legislation. In this particular case there was no such suddenness because after the House was prorogued nearly a month elapsed before the Ordinance was promulgated. Even the Speaker was pleased to say that such things could have been avoided, although there is no precedent of this sort.

Another reason I want to bring to your notice, Sir. There are two wings of this Government. One is the Executive and the other is the Legislature. We do not want to interfere with the work of the Executive. In the same way I do not want, in your name, the Executive to interfere in the affairs of this Legislature. In one sense the Legislature is supreme; although the Executive through the Council of Ministers takes decisions, those decisions have only to be referred to the Legislature. In many cases the Legislature had got to act. Unwittingly some statements are made by the Executive. I have carefully drafted my privilege motion. I have not cast aspersion on any one Minister. I want to say that the Executive must be restrained. They should not interfere with the work of the Legislature.

I shall read a statement from the press.

'இந்த மாதம் 15-ம் தேதி நடைபெறுவதாக உள்ள சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்படுமா' என்று நிருபர் கேட்டார்.

This was the reply given by the Chief Minister :

"ரம்ஜான் பண்டிகை வருவதால் சட்டமன்றக் கூட்டத் தேதியை மாற்றிவைக்க வேண்டும் என்று முஸ்லீம் லீக் கட்சி எம்.எல்.ஏ.-க்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகையால், தேதியை மாற்றிவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. துணை மானியக் கோரிக்கைகள், மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை ஆகியவையும் இந்தக் கூட்டத்திலே வரவேண்டியிருக்கின்றன. சட்டசபைக் கூட்டத்தை நவம்பர் கடைசியிலோ அல்லது டிசம்பர் முதலாவது வாரத்திலோ கூட்டலாம் என்பது பற்றி பரிசீலித்து வருகிறோம். விரைவில் இது பற்றி தேதி அறிவிக்கப்படும்."



1971 டிசம்பர் 8] [Thiru K. T. K. Thangamani]

So, there is a clear indication that in view of the Ramzan the House is likely to be adjourned to a particular date. He has specially mentioned that it may be the end of November or first week of December. I can mention in passing that on the day when we were expected to meet viz., on 15th November 1971 the Lok Sabha had met. It met on 15th November 1971.

ஆகவே, இந்த ரம்சான் என்கிற காரணம் பொருத்தமில்லாத காரணமாக இருக்கிறது. விவரத்திற்குள் நான் போகவில்லை. சட்டமன்றம் பற்றிய முழு அதிகாரமும் சபாநாயகருக்குத்தான் இருக்கிறது. அவர்கள் மூலம்தான் செயல்படுகிறது. சபாநாயகர் தான் ஒத்திவைக்கும் அதிகாரத்தை, அரசியல் சட்டத்தின்படி கவர்னருக்குக் கொடுக்கும்போது, கவர்னர் மூலம் அங்கத்தினர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கமுடியுமே ஒழிய, சபாநாயகர் ஒத்திவைத்த தேதியை நிச்சயித்தபிறகு, தேதி மாற்றப்படும், இந்தத் தேதியில் கூட்டம் வரும் என்று சொல்வதற்கு முழு அதிகாரமும் சபாநாயகருக்கு இருக்கிறதேயல்லாமல், நிர்வாகத்திற்கு இல்லவேயில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, 184-வது பிரிவின்படி நான் இந்த பிரிவிலேஜ் மோஷனை மூவ் பண்ணியிருக்கிறேன். தாங்கள் இதற்கு அனுமதி தருவீர்கள் என்று நினைக்கிறேன். அம்மாதிரிக் கொடுக்கும்போது இந்தச் சபையின் ரிகார்டில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், தங்களுடைய கவுரவம் பாதிக்கப்படும் காலத்தில், சபை தங்களுடைய நிலையை உறுதிப்படுத்தியிருக்கிறது என்பது தெரியவேண்டும். ஆகவே, இதில் இருக்கும் பிரச்சினைகள், சபாநாயகர் அதிகாரத்தில் தலையிட்டது ஒன்று, இரண்டாவது, உஸர்ப்பிங் தி பவர்ஸ் ஆப் தி ஸ்பீக்கர். ஆக, இந்த இரண்டு கவுண்டிலும் என்னுடைய பிரிவிலேஜ் மோஷன் 'இன் ஆர்டர்' என்று இருப்பதால், அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி முக்கியமான விஷயங்களில், இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி பரிசீலிப்பது பொருத்தமாக இருக்கும். இந்த மன்றமானது, 15—11—71 அன்று கூடும் என்று சபாநாயகர் அறிவித்தார்கள். இதற்குப் பிற்பாடு பத்திரிகையில் இந்தச் சபையானது நவம்பர் கடைசியில் அல்லது டிசம்பர் முதலிலே கூடும் என்று அரசாங்கத் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டதாக வந்திருந்தது. அவையின் உரிமைகளைப் பாதிக்கக் கூடியது அது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக பத்திரிகைகளில் இந்த மாதிரி காரியங்களைப் பிரசுரிப்பது பொருத்தமானது அல்ல. ஏனென்றால், அங்கத்தினர்கள் அறிவதற்கு முன்னதாகவே பத்திரிகைகளில் பிரசுரமாவது சிறந்த ஜனநாயக மரபாக இருக்காது. ஆகவே, இந்தச் சட்டசபை அவமதிக்கப்பட்டிருக்கும் தன்மை இருக்கிறது என்கிற காரணத்தால் இதை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பிப் பரிசீலிக்கவேண்டும் என்று

கேட்டுக் கொள்கிறேன். எக்சிக்யூடிவ், லெஜிஸ்லேசர் ஆகியவைகளின் அதிகாரங்கள்பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக, ஜனநாயக மரபின்படி நமது சட்டசபைக்குப் பரிபூர்ண உரிமை இருக்கிறது. இந்த மாதிரியான விஷயங்களை நிர்ணயம் செய்வதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதிகள் இருக்கின்றன. ஆனால், அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள விதிகளை இதற்குப் பயன்படுத்துவதில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தை ஸ்பீக்கர் அவர்கள் எங்களுக்குத் தெரிவித்திருக்க வேண்டும். அல்லாமல், பத்திரிக்கையில் அறிக்கை விடுவது என்பது பொருத்தமானதல்ல என்பதையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். அதனால், இந்தச் சபையின் உரிமையைப் பாதிக்கின்ற தன்மையதாக அது இருக்கிறது என்ற காரணத்தால் அவையின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE :** May I also say a few words to help the Hon. Speaker to arrive at a decision which will be useful for this House in respect of what the hon. Member Thiru K. T. K. Thangamani has brought in? In respect of that privilege motion, I would like to briefly to refer to one or two points.

First of all, on the day on which we met in connection with the Business Advisory Committee meeting the Hon. Chief Minister was there and the other members were also there. The Hon. Speaker himself was also there. The Hon. Speaker himself gave us an indication that it would be 15th November. Even at that time itself you knew that the Ramzan holidays were round the corner. The hon. Member Thiru K. T. K. Thangamani had stated that this was a matter that was common to Parliament also. Suddenly we got the communication that this sitting had been postponed.

My submission is that this practice is going on not only in this Ministry, but previously also. For a number of years we have been saying about this very system of informing the Press about the date of the meeting of the Legislature. Sometime ago, some years ago, we had raised it in the Legislative Council also. We do not know about it till the Press announces it. It is a peculiar anomalous situation. I checked it up with the Members............

**MR. SPEAKER :** Please confine yourself as to whether a breach of privilege has occurred and whether a *prima facie* case exists. I will be happy if you can do that. That is the point.

**DR. H. V. HANDE :** I have spoken only just for about two minutes. I am trying to confine myself to the point of privilege. I am only particularly, specifically saying that this practice has been going on and this has snowballed into this crisis. Exactly we have allowed this practice to go on for a long time. We have



now found ourselves in a very peculiar situation. In the previous occasions we were informed suddenly through the Press as to when the Council or Assembly is going to sit. But now in this particular case we were informed positively that it would be 15th November and then through the Press that it would be 4th of December. I specifically say that this is a matter of serious privilege because the House itself has taken a decision, a decision has been taken in the Business Advisory Committee. That is my point. I am very specifically saying that it is a privilege issue. In the Business Advisory Committee we had decided and a decision had been taken by the Business Advisory Committee. (Without consulting the Business Advisory Committee and the members it has again been refuted and another order has been passed by the Executive. Therefore, I say that it is a serious matter of privilege and the Hon. Speaker must allow this to go to the Privilege Committee so that all aspects of this matter may be properly discussed and a decision arrived at.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அரசியல் அமைப்புச் சட்டப்படி சட்டமன்றத்திற்கும், நிர்வாகத்திற்கும், நீதித் துறைக்கும் கொடுத்திருக்கின்ற அதிகாரத்தை மீறவேண்டும் என்றோ, சட்டமன்றத்திற்குள்ள உரிமையை மதிக்கக் கூடாது என்றோ, மன்றத் தலைவருக்குக் கொடுத்திருக்கிற அதிகாரங்களை மீறவேண்டும் என்றோ ஒரு துளி கூட ஆசையோ, எண்ணமோ எங்களுக்கு இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எடுக்கப்பட்டுள்ள பிரச்னை அவசியம் இல்லாதது. காரணம், இந்த அவைக்கோ, தலைவருக்கோ உள்ள அதிகாரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற வாதம் பொருத்தம் இல்லாத வாதம். இன்றைய தினம் எழுப்பப்பட்டுள்ள பிரச்னை என்னவென்றால், தலைவரவர்கள், இந்தத் தேதி இந்தச் சட்ட மன்றம் கூடும் என்று அறிவித்ததற்குப் பின்னால், தேதி மாற்றப்பட்டது என்று அமைச்சரோ, முதலமைச்சரோ அறிவித்தார் என்று. அப்படிச் சொல்லியிருந்தால் உரிமைப் பிரச்னைக்கு வரும்.

நான் இதை விவாதிப்பதற்கு முன்னால், ஒன்று கூற விரும்புகிறேன். உறுப்பினர்கள் 1963-ஆம் ஆண்டிலே நடைபெற்றதைக் குறிப்பிட்டார்கள். 1963-ஆம் ஆண்டிலே இந்த மன்றத்திலே இப்போது எங்கள் கட்சியின் கொறடாவாக இருக்கக் கூடிய திரு. அழகமுத்து அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பினார்கள். அன்று எழுப்பப்பட்ட பிரச்னை தெளிவாக இருந்தது. அன்றைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபை இன்றைக்குக் கூடும் என்று அறிவித்தார். ஆனால், இப்போது, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படவில்லை. அன்று அது உரிமைப் பிரச்னைக்கு வருமா, வராதா என்று தெளிவாகத் தீர்ப்பு தந்திருக்கிறார்கள். அது தெளிவாக இருக்கிறது. அது உரிமைப்

பிரச்சினை ஆகாது என்று கூறி தீர்ப்பு இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இப்போதுள்ள பிரச்சினையெல்லாம், இங்கே ஒரு தேதி அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் முதலமைச்சரவர்களிடத்தில் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் தேதியை மாற்றுவதற்கு பரிசீலிக்கப்படுகிறது, மாற்றலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது என்பதைத்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிக்கையில் வந்திருப்பதும் தெளிவாக இருக்கிறது.

" It is likely to meet again on ....................."

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். He said that the postponement of the Legislature meeting was being considered in view of the intervening Ramzan festival and Muslim members' representation.

என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தெரிவிக்கப்பட்ட கருத்தின் அடிப்படையில் மாற்றலாம், மாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது என்பதுதான் இங்கே சொல்லப்பட்டிருக்கிற கருத்தே தவிர, 1963-ஆம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சியைப் போல அல்ல. மாற்றப்பட்டிருக்கிறது என்றுகூட அறிவிக்கப்படவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்ட நுணுக்கங்களுக்குள் சென்று இது உரிமைப் பிரச்சினைக்கு வருமா, வராதா என்று கூற நான் விரும்பவில்லை. நான் அரசின் தரப்பில் தெரிவிப்பதெல்லாம், மன்றத்தின் உரிமையையோ, தலைவரின் அதிகாரத்தையோ, நாங்கள் மீற விரும்பவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் துளிக்கூட எங்களுக்கு இல்லை. ஒரு செய்தி, அரசாங்கம் பரிசீலிக்கக்கூடிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னால் அளிக்கப்பட்ட தீர்ப்பில் சட்டப் பிரச்சினை ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. 1958-ஆம் ஆண்டிலும் சரி, 1963-ஆம் ஆண்டிலும் சரி, சட்டசபை கூடிக்கொண்டிருக்கும்போது விதிமுறைகள் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. ஒரு உத்தரவு போடப்படும்போது, அமைச்சரின் ஆலோசனை கேட்கப்படுகிறது. கேட்க வேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. அது போலவே, இப்பிரச்னையிலும் அமைச்சரின் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் முடிவு எடுக்கிறார்கள் என்பதே தவிர, மன்றத்தின் உரிமையையோ தலைவரின் அதிகாரத்தையோ மாற்ற வேண்டும் என்றோ, குலைக்க வேண்டும் என்றோ எண்ணம் துளிக் கூட எங்களுக்கில்லை. அப்படிப்பட்ட எண்ணம் அங்கத்தினர்களுக்கு ஏற்பட்டிருக்குமானால் அவர்கள் அதைத் தவிர்க்க வேண்டும், மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, உரிமைப் பிரச்சினை என்ற அளவிற்கு இது வரவில்லை, ஆகவே, ப்ரைமாஃபேசி





கேஸ் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்க உரிமைக் குழுவிற்கு இதை அனுப்ப வேண்டிய, பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் என்ன சொல்கிறாரோ, அதை ஏற்க எங்கள் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : My ruling is this :

The hon. Member Thiru K. T. K. Thangamani has contended that inasmuch as on 25th October 1971 the Speaker adjourned the House to meet again on 15th November 1971, it is for the Speaker to convene the meeting of the House on a later date and that the announcement of the Hon. Chief Minister about the postponement of the date of the meeting of the House is a breach of privilege, as it impinges on the sovereignty of the House and encroaches on the powers of the Speaker.

On 25th October 1971 I adjourned the House to meet again on 15th November 1971. The power to adjourn the Assembly from time to time within a Session is vested in the Speaker under Rule 16 of the Tamil Nadu Legislative Assembly Rules. And Rule 17 provides that when the Assembly has been adjourned to a particular date, the Speaker may summon the Assembly for an earlier or later date. Therefore, there can be no dispute or doubt as to the position that it is the Speaker who is to summon the House to meet on a date earlier or later than 15th November 1971.

The hon. Member Thiru K. T. K. Thangamani's complaint is about the advance announcement made to the Press by the Hon. Chief Minister about the postponement. In point of fact, as has been pointed out by the Hon. Minister for Industries, the Hon. Chief Minister has announced to the Press only about the likelihood of the postponement on account of Ramzan and the representation made by the Muslim Members in this behalf.

The Hon. Chief Minister has not made any mention about any definite date on which the Assembly would meet. Further, as a matter of fact, it is the Speaker who has summoned the Legislative Assembly to meet on December 4, 1971, instead of on November 15, 1971, as already announced. This is sufficient compliance with Rule 17 of the Tamil Nadu Legislative Assembly Rules.

There is no precedent in support of the view that the advance announcement of the likelihood of postponement impinges on the sovereignty of the House or the powers of the Speaker, much less that such an advance announcement of a probable date of meeting or likelihood of postponement constitutes a breach of privilege. It may also be stated here that though the power to summon the Assembly from time to time is vested in the Speaker, the Speaker exercises his power on the advice of the Cabinet and the need for transaction of business.

In this connection, it may be mentioned here that on a previous occasion, when Thiru T. P. Alagamuthu raised a privilege issue on 3rd August 1966 in respect of the announcement of the date of the meeting of the Assembly by the then Chief Minister before the publication of Governor's Notification, the then Speaker ruled that no matter of privilege was involved. Even in the matter of privilege raised by Thiru M. Kalyanasundaram on 6th August 1963 in respect of the prorogation of the Assembly by the Governor after the communication of the Speaker's summons for the meeting of the Assembly on July 24, 1963, the then Speaker ruled that there was no breach of privilege.

For the reasons stated above, I hold that *prima facie* there is no breach of privilege.

### 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

#### (அ) கரிவலம்வந்தநல்லூரில் நடந்த காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு குறித்து.

MR. SPEAKER: The hon. Members, Thiru S. Alagarswamy, Dr. H. V. Hande and Thiru A. K. Subbiah have given notice of adjournment motions in respect of the Police firing at Karivalamvandanallur village in Sankarankoil taluk on the 19th November 1971. Since an enquiry has been ordered into the matter, I withhold my consent to this motion.

#### (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் சில இடங்களில் காவல் துறையினர் அத்துமீறி நடந்து கொண்டதாகக் கூறப்படுவது குறித்து.

MR. SPEAKER: The hon. Member Thiru K. Suppu has given notice of an adjournment motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the tense situation prevailing in Srivilliputhur taluk due to the police excesses at certain places at the instance of the Superintendent of Police, Ramanathapuram at Madurai.

* திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் இப்போது பதட்டமான ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்கள், விவசாயச் சங்கத் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஆகியோர் மீது வேண்டுமென்றே பல வழக்குகள் போடப்படுகின்றன. என்னைப் போன்ற சில குறிப்பிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட கைது செய்யப்படும் நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்த விஷயத்திலே சில அரசியல் கட்சித் தலைவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் என்னைப்போன்றவர்கள் மீதுகூட





வழக்குப்போடுவோம்; கைது செய்வோம் என்று பேசி வருகிறார்கள். இந்த நிலையைத் தொடர்ந்து அங்கே ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, வத்திராயிருப்புப் பகுதியிலே கூட்டுறவு பால் பண்ணைத் தலைவர், மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், ஆகியோர் மீது பொய் வழக்குப்போட்டு, கைது செய்திருக்கிறார்கள். கொலை செய்வோம் என்றெல்லாம் கூட மேடைகளிலே பகிரங்கமாகப் பேசுகிறார்கள். தி.மு.க-வைத்தவிர வேறு யாரும் அந்த இடத்திலே தலைகாட்டக்கூடாது என்று பேசிவருகிறார்கள். அவர்கள் வேறு யாருமல்ல. தி.மு.க.-விலே உள்ள முக்கியமானவர்களும் வட்டச் செயலாளரும் தான்.

இராஜபாளையம் பகுதியில் தி.மு.க. கொடியைத் தவிர மற்ற கொடிகளையெல்லாம் வட்டச் செயலாளரே இருந்து கிழித்தெறிந்தார். அங்கே எங்களைப் போன்றவர்கள் பொதுக்கூட்டமோ, ஊர்வலங்களோ நடத்தக் கூடாதென்று சொல்கிறார்கள். மீறி ஊர்வலம் நடத்தினால் 'கல்லெறிவோம், கத்தியால் குத்துவோம்' என்று பகிரங்கமாகவே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். இராஜபாளையத்தில் சர்வகட்சி ஊர்வலத்தில் சென்றவர்கள் குத்தப்பட்டார்கள்.

இதைப்பற்றியெல்லாம் போலீசிலே புகார் செய்தோம். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலிடத்திற்குப் புகார் செய்தோம். எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. இவைகளுக்கெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற கூட்டங்களிலே கூட "கொலை செய்யப்படுவீர்கள்" என்று பேசப்படுகிறது. கட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் கூட எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களையே மிரட்டி வருகிறார்கள். இங்கே இருக்கின்ற சட்டத்துறை அமைச்சர் அவர்கள் பேசிய கூட்டத்தில் கூட, அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே பேசினார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் முன்னைவிட ஊக்கமாகப் பேசிவருகிறார்கள்.

ஆளும் கட்சியைப் பற்றி ஏதாவது பேசினால் "நீங்கள் சட்டமன்றத்திற்குள்ளே எப்படிப் போகிறீர்கள் என்று பார்ப்போம்; உங்களை அங்கே நுழைய விடமாட்டோம். கொலை செய்வோம்" என்றெல்லாம் மிரட்டித்திரிகிறார்கள். என்னை நக்சல்பாரி என்று சொல்கிறார்கள். நக்சல்பாரிகள் எல்லாம் பெண்களை அவமானப்படுத்துகிறவர்கள் என்று கூறி, அதைப் போல் எங்கள் வீட்டுப் பெண்களை அவமானப்படுத்தினால் எப்படி இருக்கும் என்று கேட்கிறார்கள். அதனால் இவர்களைச் சும்மா விடக்கூடாது என்று சொல்கிறார்கள். ஒரு தி.மு.க. பேச்சாளர் ஸ்ரீவில்லிபுத்தூரில்

பேசும்போது வட்டச் செயலாளர் ஆணையிட்டால் என் மனைவியை மேடைக்கு தூக்கிக் கொண்டு வந்துவிடுவதாகக் கூறியிருக்கிறார். இதை எதிர்த்து கூட்டத்தில் யாராவது கூச்சல் போட்டால், எங்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மீது எல்லாம் வழக்குப் போடுகிறார்கள். சில அமைச்சர்களும் அரசியல் கட்சித் தலைவர்களும் கூட அதற்கு ஊக்கமளிக்கின்றனர். மாவட்டப் போலீஸ் அதிகாரியிடத்திலே இத்தகைய செயல்களைப்பற்றிப் புகார் செய்தால் அவர் அதைப்பற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. காரணம், அந்த அதிகாரியின் சகோதரர் ஒரு தி.மு.க. எம். எல்.ஏ.-வாக இருக்கிறார். இப்படியெல்லாம் அங்கே நடைபெற்றுக்கொண்டிருப்பதால் ஒரு பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் விபரமாக பேசவேண்டுமென்றால், அதற்கு பரிகாரம் காணவேண்டுமென்றால் இந்த சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இந்த தீர்மானத்தை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே நம்முடைய நண்பர் திரு. சுப்பு, எம்.எல்.ஏ. அவர்கள் இருக்கின்ற பகுதியில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் வைத்து, அதன் தொடர்பாக சில விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். அநேகமாக இப்போது பேசிய அதே பாணியில் தான் திரு. சுப்பு அவர்கள் மேடையிலும் பேசுகிறார்கள். அவர்கள் ஏதோ அமைச்சர்கள் இப்படிப் பேசுகிறார்கள், கட்சித் தலைவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி தோழமைக் கட்சியாக இருந்தாலும் கூட, திராவிட முன்னேற்றக் கழகத் தோழமையிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்துவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நல்ல காரியத்தை நண்பர் திரு. சுப்பு போன்றவர்கள் செய்தார்கள் என்பதை இந்த உலகம் அறியும். அந்த அளவுக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மேடைகளிலும் பேசுகிறார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய பேச்சுக் குறிப்புகள் அவ்வப்போது தொகுத்து வரப்பெற்று, அதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கிருக்கிறது என்பதை இந்த அவையும் அறியும் ; நாமும் அறிவோம்.

திரு. சுப்பு அவர்கள் யாரோ ஒருவர் அவரைப்பற்றிப் பேசியதாக, குறிப்பாகச் சொன்னார்கள். அவர்கள் அமைச்சர்களைப் பற்றியும், தி. மு. க. கழக மாவட்டச் செயலாளர்களைப் பற்றியும், அவர்களுடைய ஜாதியைப் பற்றியும், குறிப்பாக என்னைப் பற்றியும், என் ஜாதியைப் பற்றியும் எந்த அளவுக்குக் கீழ்த்



தரமாகப் பேசிவருகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனாலும் இங்கே குறிப்பிடப்பட்ட கருத்துக்களைப் பற்றி காவல் துறையினர் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை, அவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பியுள்ள காரணத்தால் இங்கே வைப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

சென்னை மேயர் கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கல் வீசியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்று நான் சொல்லும்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள அத்தனைபேரையும் குறிப்பிடுவதாகத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. திரு. சுப்பு போன்ற கம்யூனிஸ்ட் கட்சியினரைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சுப்பு கட்சி என்று தனியாக ஒரு கட்சி கிடையாது. எல்லாம் ஒரே கட்சிதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சேர்ந்துக்கொள்வதாக இருந்தால் நான் வருத்தப்படவில்லை. கூட்டத்திலே கலவரம் செய்து, கல்வீசி, சென்னை மேயரின் மீது கல் வீசியதன் தொடர்பாக 27 கம்யூனிஸ்ட் கட்சியினர் அங்கே கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

22—10—71-ல் சத்திரப்பட்டியில் நடைபெற்ற கலவரத்தின் காரணமாக 6 கம்யூனிஸ்ட் கட்சியினரும், 9 தி.மு.க.-வினரும் காயமடைந்தார்கள். இதுபற்றி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் அதே பகுதியில் 17 கம்யூனிஸ்ட் கட்சியினரும், 14 தி.மு.க.-வினரும் கைது செய்யப்பட்டு, கோர்ட்டிலே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

12—11—71 அன்று ஊத்துப்பட்டி கிராமத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 7 கம்யூனிஸ்ட் கட்சியினர் மீதும், 5 தி.மு.க. வினர் மீதும் குற்றப்பத்திரிகைகள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. இதை வைத்துக்கொண்டு பார்த்தால் இருதரப்பிலும் கலவரங்களில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் கட்சிவேறுபாடு இல்லாமல் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இதில் தி.மு.க.-வை விட்டுவிட்டு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்வது எவ்வளவு தவறானது என்பதற்கு நான் தெரிவித்த புள்ளி விவரங்களே போதுமான சான்றாகும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னதைப்போல அந்தக் காலத்து முதுகுளத்தூர் ஏதுவும் அந்தப் பகுதியில் நடந்துவிடவில்லை. ஏதோ ஆங்காங்கு திரு. சுப்பு அவர்களின் பேச்சின் தொடர்பாக சில சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிறுசிறு கலவரங்கள் ஏற்பட்டன என்றாலும் காவல்துறையினர் அவ்வப்போது கண்காணிப்புடன் இருந்து

நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கட்சிவேறுபாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (இ) தஞ்சாவூரில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்படாதது குறித்து.

MR. SPEAKER: The hon. Member N. Marudhachalam has given notice of an adjournment motion to discuss the serious situation arising out of the non-release of 80 students who were arrested at Thanjavur in connection with the token strike launched for franchise at the age of 18 and increased employment opportunities.

I learn that the students have since been released and so the necessity is not felt now. Therefore, I withhold consent to that adjournment motion.

Next the hon. Member Thiru Manali Kandasami has given notice of an adjournment motion to discuss the increase in the prices of essential commodities.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் அத்தனை பேர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்ட காரணத்தினால் உங்கள் தீர்மானம் உயிரிழந்துவிட்டது. அதற்கு உயிரில்லாத காரணத்தினால் அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (ஈ) இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றம் குறித்து

**திரு. மணலி சி. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றம் என்பது பொதுவாக எல்லோருக்கும் கவலை அளிக்கும் விஷயம் என்பதை நான் வலியுறுத்திக் கூறவேண்டியதில்லை. அவசர நிலைப் பிரகடனத்திற்கு முன்பே விலைவாசி ஏறுமுகமாக இருந்தது. அதற்குப் பிறகு அந்த ஆபத்து அதிகமாகி இருக்கிறது என்பதை எல்லோரும் உணரவேண்டும். இந்த விஷயத்தில் விலைவாசிகளை கட்டுப்படுத்த சட்டபூர்வமாக என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பரிசீலிக்கத்தான் இந்தத் தீர்மானம் கொடுத்தேன். அரசு உடனடியாக இது விஷயத்தில் கவனம் செலுத்துவது அவசியம்





என்ற எண்ணத்தோடு நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்திருப்பதால் இதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have given a call attention notice under Rule 41 on the since subject. If this is answered, my Rule 41 motion would be ruled out.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்களும் கொடுத்திருப்பதைச் சொல்லிக் கொண்டீர்கள். தாங்கள் கொடுத்திருப்பது ரூல் 41-இன் கீழ். இது 42-வது விதியின் கீழ் ஆகும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே விலைவாசிகள் கட்டுப்படுத்தப் படவேண்டும் என்பதில் அரசு அதிகக் கவனம் இப்போதே எடுத்துக்கொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணமாக, சர்க்கரை விலை திடீரென்று ஏறியது. உடனே அரசு ஆலை அதிபர்களை எல்லாம் அழைத்து வைத்துப்பேசியது. சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு மொத்தமாக வருகிற சரக்கில் எக்சைஸ் வரி 10 சதவிகிதம் இல்லாமல் 152 ரூபாய்க்குத் தருவதாகச் சொன்னார்கள். எக்ஸ்மில் ரேட் 192 ஆக இருக்கும். டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ், டீலர்ஸ் ப்ராபிட் எல்லாம் சேர்த்து பொதுமக்களுக்கு கிலோ 2 ரூபாய்க்குக் கொடுக்கலாம் என்று அரசு ஏற்பாடு செய்து அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரில் அரிசி கார்டு வைத்திருப்பவர்களுக்கு கார்டுக்கு 2 கிலோ கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளிலும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, அரிசி விலையும் ஏறியது. அதை உணர்ந்தவுடன் லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் சிடி பால் டெப்போக்கள் மூலம் அரிசி விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். முன்பு டி.யு.சி.எஸ். மூலமாகத்தான் கொடுத்து வந்தோம். அதை வாங்குவார் இல்லை. என்று கூட்டுறவு ஸ்தாபனத்தார் சொல்லிவந்தார்கள். உண்மை நிலை என்ன என்பதைக் கண்டுபிடிக்கத்தான் பால்டெப்போ மூலம் விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். நாள் ஒன்றுக்கு மூந்நூறு, நானூறு மூட்டைகள் விநியோகம் செய்யப்படுகிறது. இன்னும் அரசு விரிவாக மின்ட், நந்தனம் போன்ற இடங்களில் உள்ள நம் கோடவுன்களிலேயே விநியோகம் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. மாவட்டங்களிலும் கூட நியாயவிலைக் கடைகள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் அரிசி விநியோகிக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் துறைக்குக் கொடுக்கக் கூடாது என்பது உத்தரவு. ஆக, இப்படி விலைகளைக்

[திரு. ப. உ. சண்முகம்] [1971 டிசம்பர் 8

கட்டுப்படுத்த அரசு மிகவும் கண்காணிப்பாக இருந்து வருகிறது என்கிற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். அதனால் இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### (5) கவன ஈர்ப்பு.

### (அ) திருப்பூரில் எலிகள் செத்து விழுவதும் பிளேக் நோய் பரவுதலைத் தடுப்பதன் அவசியமும் குறித்து.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the incidence of a few cases of plague and rat falls at Tiruppur in particular and Coimbatore district in general and the need to take effective steps to prevent the spread of plague.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் நகராட்சியின் சில பகுதிகளில் 22—10—71-ஆம் நாளன்றும், அதற்கடுத்த சில நாட்களிலும் " எலி விழுந்ததாகத் " தெரிவிக்கப்பட்டது. எடுத்த " எச்சங்களை " (Smears) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆய்வுக் கூடத்திலும், குன்னூர் பாஸ்டர் நிறுவனத்திலும், நுண்ணுயிரியல் சோதனை செய்து பார்த்ததில் பிளேக் கிருமிகள் போன்றவை இருக்கக் காணப்பட்டன.

திருப்பூரில் எலி விழுந்ததைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தின் கீழ்க்கண்ட நகரங்களிலும் எலி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது :—

1. ஈரோடு
2. பொள்ளாச்சி
3. கோயம்புத்தூர்
4. மேட்டுப்பாளையம்
5. உடுமலைப்பேட்டை
6. கோபிசெட்டிப்பாளையம்.

23—11—1971 வரை இம்மாநிலம் எங்கணும் மொத்தம் 320 எலிகள் விழுந்தன.

செத்து விழுந்த எலிகளின் எச்சங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவை தவிர ஏனையவற்றில் ' பிளேக் கிருமி இருப்பதற்கான அறிகுறி ஏதுமில்லை ' என்று கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் இயக்குநர் அனுப்பிய நுண்ணுயிரியல் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.



1971 டிசம்பர் 8] [திரு. க. அன்பழகன்]

கீழ்க்கண்ட நகரங்களில் விழுந்த எலிகளின் எச்சங்களைச் சோதித்துப் பார்த்ததில் பிளேக் கிருமி இருக்குமெனத் தெரிய வந்தது :—

கோயம்புத்தூர்—1

திருப்பூர்—2

மேட்டுப்பாளையம்—1

சேலம் மாவட்டம், பள்ளிப்பாளையம்—1.

எச்சம் தடவப்பட்ட ஏனைய கண்ணாடித் தகடுகளைச் சோதித்துப் பார்த்ததில் பிளேக் கிருமி இருப்பதாகத் தெரியவில்லை. இதுவரை கிடைத்துள்ள பகுப்பாய்வு முடிவுகளும் பிளேக் கிருமி இருப்பதாகக் காட்டவில்லை.

கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் பிளேக் தோன்றக் கூடிய அபாயப்பகுதி என அறிவித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கிண்டி கிங் நிறுவனத்தில் அப்போது கையிருப்பிலிருந்த பிளேக் அம்மைப்பாலைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,105 பேருக்கு பிளேக் தடுப்பு அம்மைப்பால் குத்தப்பட்டது.

பம்பாய், ஆஃப்கின் நிறுவனத்திடமுள்ள பிளேக் தடுப்பு அம்மைப்பாலை அனுப்பி வைக்குமாறும், 1 இலட்சம் சி.சி. பிளேக் தடுப்பு அம்மைப்பால் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் வேண்டப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் தன் கைவசமிருந்த 3,000 சி.சி. அம்மைப்பாலை அனுப்பி வைத்து, தேவைப்படுகிற 1 இலட்சம் சி.சி. வழங்க காலம் ஆகுமென்றும் தெரிவித்துள்ளது. ஆகவே இந்தியாவின் ஏனையப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய பிளேக் தடுப்பு அம்மைப்பாலை விரைந்து அனுப்பி வைக்குமாறு இந்திய அரசு வேண்டப்பட்டது. பிளேக் தடுப்பு அம்மைப்பாலை வழங்குமாறு இலண்டனிலுள்ள லிஸ்டர் நோய்த் தடுப்பு மருந்து நிறுவனத்தை வேண்டியிருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த நிறுவனத்திடமிருந்து 15,000 டோஸ், 35,000 டோஸ் என இரு ஒப்படைகள் பெறப்பட்டு பல்வேறு வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் பாரிசிலிருந்தும், டெஹ்ரானில் இருந்தும் பிளேக் தடுப்பு அம்மைப்பால் பெறுவதற்காக இந்திய அரசு உலகச் சுகாதார நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

பிளேக் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக, இரசாயனப் பொருள்கள், மருந்துப்பொருள்கள், சாதனங்கள் முதலியவற்றை வாங்கும் பொருட்டு, ரூ. 1,82,600-க்கு மேற்படாமல் செலவு செய்ய ஒப்பளிப்பு வழங்கி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவசியமான போது 100 தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாவட்ட சுகாதார அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருந்து முதலியவற்றை அனுப்புவதற்காக சரக்குக்கூலி போன்ற

எதிர்பாராதச் செலவுகளைச் செய்வதற்காக சுகாதாரப் பணிகள்—குடும்பநலத்திட்ட இணை இயக்குநருக்கு ரூ. 3,000 தற்காலிக முன்பணம் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிளேக் நோயின் அறிகுறிகள் யாவை, எலி விழுந்தவுடன் மக்கள் என்ன செய்யவேண்டும், மருத்துவமுறையில் அவர்கள் எப்படித் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்பதைத் தமிழில் அச்சிட்டு சுகாதாரப்பணிகள்—குடும்பநலத்திட்ட இயக்குநர் மக்களுக்கு வழங்கியுள்ளார்.

சுகாதாரப்பணிகள்-குடும்பநலத்திட்ட இணை இயக்குநர் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப்பார்த்து பிளேக் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் செய்யவேண்டியவற்றை எடுத்துக் கூறியுள்ளார். கொள்ளைநோய்ச் சம்பந்தமாய் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு வகிக்கின்ற சுகாதாரப் பணிகள்-குடும்பநலத்திட்ட இயக்குநர் அலுவலகத்தைச் பகுதியைச் சுற்றிப்பார்த்து, மேற்கொள்ளப்பட்டு வரும் பிளேக் தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார்.

புதுடில்லி தொற்றுநோய் தேசீய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எலிகள் சோதிக்கப்பட்டு வருகின்றன.

பிளேக் தடுப்பு மருந்து குத்தும் பணியைப் பெருவாரியாக நிறைவேற்றுவதற்காக, ஜெட் துப்பாக்கியைப் பயன்படுத்துவதில் பயிற்சி பெறுவதற்காக சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவர் டில்லியிலுள்ள தொற்றுநோய் தேசீய நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இம்மாநிலத்தில் பயன்படுத்த ஜெட் துப்பாக்கி ஒன்றைக் கடனாக வழங்கும்படி அந்த நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் அத்துப்பாக்கியை 27—11—71-ல் வழங்கியதன்பேரில், சுகாதாரப் பணிகள் குடும்பநலத்திட்ட இயக்குநர் அதைத் திருப்பூருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

எலி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும், இம்மாநிலத்தில் இதுவரை எவருக்கும் பிளேக் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவசியமான இடங்களில் எல்லாம் கூடுதல் பணியாளர் ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதாரப்பணிகள்-குடும்பநலத்திட்ட உதவி இயக்குநர் இப் சேர்ந்த அதிகாரிகள் முறையாகப் பார்வையிட்டு வருகின்றனர். அன்றியும், சுகாதார-குடும்பநலத்துறையின் அரசுச் செயலாளர் நிலைமையைச் சீர்தூக்கிப்பார்ப்பதற்காக, அவ்வப்போது மற்றவர்களுடன் கலந்தாலோசனை செய்து வருகிறார்.





அமைச்சர் என்ற முறையில் நானும் திருப்பூருக்குச் சென்றிருந்தேன். எல்லா நடவடிக்கைகளும் இந்தத் துறையின் அதிகாரிகளால் மேற்பார்வையிடப்பட்டு, காரியங்கள் செம்மையாக நடைபெற்று வருகின்றன.

DR. H. V. HANDE : May I know how many people have been inoculated and has the Government got the statistics? Now that plague has come down, I want to know whether at least in future it is possible for the Government to avoid the scare more than the disease. The scare has snowballed and when it is published in the papers it actually prevents number of people coming to the district and even the tourists who want to come to Tamil Nadu are prevented when they see the headlines in the Press that there is plague in Tamil Nadu. To avoid these things in the interest of the State, we would like to know (1) how many have been inoculated and (2) whether at least in future the Government will take immediate steps to see that the scare is avoided, more than the disease.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முதல் சட்டத்தில் 2,105 பேருக்கு பிளேக் நோய்த் தடுப்புக்கான அம்மைப்பால் குத்தப்பட்டது. அதுமட்டுமல்ல, மேலும் பல இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. யாருக்கேனும் காய்ச்சல் கண்டாலும், நோய் வருவதற்கான சிறு அடையாளம் தோன்றினாலும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு அதற்கான மருந்து சல்பனு மாத்திரைகளை தினம் நான்கு மாத்திரைகளாகச் சாப்பிட்டால் நல்லது என்று தெரிவிக்கப்பட்டு, மாத்திரைகள் வழங்கப்பட்டு வந்தன. பிளேக் தடுப்பு மருந்துகள் நிறைய கைவசம் இருக்கின்றன. பிளேக் தடுப்பு மருந்து கைவசமிருப்பதால் பிளேக் நோய் தோன்றும் என்ற அச்சம் தேவையில்லை. ஆனால் எச்சரிக்கை தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) மதுரை மீனாட்சி ஆலைகள் கூட்டு நிறுவனத்தைச் சார்ந்த சில ஆலைகளில் வேலைநிறுத்தமும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும் குறித்து.**

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike in Meenakshi Mills Group in Madurai, namely Thenur Sivakamu Mills and Kappalur Meenakshi Mills and the consequent unrest thereon.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே,

1. சிவகாமி ஆலை, தேனூர்.—

மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் யூனியன், திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், அதிகாரம் பெற்ற தொழிலாளர் பிரதிநிதிகள் ஐவர் ஆகியோர். 1970-ஆம் ஆண்டுக்குப் பூரிப்பூதிய

உயர்வு கோரியும், பணிக் கொடையைத் தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்று கோரியும், 8—10—1971-லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். நிர்வாகத்தினர் 9—10—1971-லிருந்து கதவடைப்பு செய்தனர்.

**2. மீனாட்சி ஆலை, பரவை :** 1970-ஆம் ஆண்டுக்குப் பூரிப்பூதிய உயர்வு கோரியும் பணிக் கொடையைத் தாராளமாக வழங்குமாறு கோரியும், 27-101971-லிருந்து மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

**3. தியாகராஜர் ஆலை, கப்பலூர்.—**

இந்த ஆலையின் சரியான பெயர் தியாகராஜர் ஆலை, கப்பலூர் என்பதாகும். மீனாட்சி ஆலை என்பதல்ல. மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் யூனியனும், அதிகாரம் பெற்ற தொழிலாளர் பிரதிநிதிகள் ஐவரும், 1970-ஆம் ஆண்டுக்கான பூரிப்பூதிய உயர்வு கோரியும், பணிக்கொடையைத் தாராளமாக வழங்குமாறு கேட்டும் 21—10—1971-லிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

மதுரை I-வது தொழிலாளர் நல அதிகாரியுடன் தொடர்ந்து பல நாள் விவாதங்கள் நடத்திய பிறகு, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி இரு தரப்பினருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டதன் பேரில் மேற்சொன்ன மூன்று ஆலைகளிலும் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. உடன்பாடு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தேனூர், சிவகாமி ஆலை குறித்து 1970-ஆம் நிதி ஆண்டுக்கான பூரிப்பூதியம் கொடுத்தலும், 1971 சித்திரைத் திருவிழாவுக்கு முன்பு கொடுக்கப்பட்ட பூரிப்பூதிய - முன்பணத்தொகையைத் திருப்பி வசூலித்தலும், மதுரை, -வது தொழிலாளர் நல அதிகாரியின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக இரு தரப்பினரும் ஒப்புக் கொள்கின்றனர்.

**தேனூர், சிவகாமி ஆலை ;** பறவை.—ஸ்ரீமீனாட்சி ஆலை.கப்பலூர், தியாகராஜர் ஆலை ஆகிய ஆலைகளைப் பொறுத்தவரையில் மூன்றாண்டுகளும் அதற்கும் மேற்பட்டு பணிபுரிந்துள்ளவர்களும் பணிவகை ஊதியங்களை ! (Category Wages) பெறுதவர்களுமாகிய பதிலித் தொழிலாளர்களுக்கும், தற்காலிகத் தொழிலாளர்களுக்கும், இப்போது வாங்குகின்ற ஊதியங்களுக்கும், மேற்சொன்ன பணிவகை ஊதியங்களுக்கும், உள்ள வேறுபாட்டுத் தொகை கீழே சொல்லியவாறு இரு தவணைகளில் கொடுக்கப்படும் .—

**(a)** வேறுபாட்டுத்தொகையில் 50 சதவிகிதம் 1—1—1972 முதற்கொண்டும்,



(b) எஞ்சிய தொகை 1—7—1972 முதற்கொண்டும் கொடுக்கப்படும்.

மேற்சொன்ன தொழிலாளர்கள் பணிகுறித்துத் தகராறு ஏதேனும் எழுமாயின், மதுரை I-வது தொழிலாளர் நல அதிகாரியுடன் கலந்து கொண்டு அந்தத் தகராறு தீர்த்துவைக்கப் படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, மதுரையைச் சார்ந்திருக்கக்கூடிய 3 பெரிய மில்களில் உள்ள தொழிலாளர்கள் கட்சிப் பாகுபாடின்றி, தொழிற்சங்கப் பாகுபாடு இல்லாமல் ஏ.ஐ.டி.யு.சி., ஐ. என். டி.யு.சி தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இன்னும் சில கோரிக்கைகள் சேர்ந்திருப்பதை அங்குள்ள டெபுடி லேபர் கமிஷனர் அவர்களுடன் பேசி, துர்நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு அரசு ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்து பரிசீலிக்கப்படும்.

## (6) அமைச்சர் அறிக்கை

**போரிலே பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டுப் போர் வீரர்களுக்கு அளிக்கவிருக்கும் சலுகைகளும். மானியங்களும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப் பேரவையின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அறிக்கை மேலவையிலே வைக்கப் பட்டிருக்கிறது. நேற்று கொடிநாளை ஒட்டியும், நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் நெருக்கடி நிலை இவைகளைப்பற்றி வானொலியில் பேசுகின்ற நேரத்திலே வானொலி மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சில முக்கியமான செய்திகளைச் சொல்ல வேண்டியிருந்தது. வானொலியில் அந்த அறிவிப்பைச் செய்வதற்கு—அவை நடக்கிற நேரத்திலே—அதை இந்த அவையிலே சொல்ல வேண்டுமென்ற அடிப்படையிலே அந்தக் கருத்துக்கள் மேலவையிலே நேற்றையதினம் எடுத்துச் சொல்லப்பட்டது. மேலவையிலே எடுத்துச்சொல்லப்பட்ட அந்தக் கருத்துக்களைப் பேரவையிலும் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு இதை அளிக்கிறேன்.

போர்க்களத்தில் தமிழ்நாட்டு வீரர்கள் பெரும்பாலோர் நாடு காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் போரில் பாதிக்கப்பட்டோர், கால், கை இழந்தோர், உயிர் தந்தோர் ஆகியோர் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து களம் சென்று போரில் இறந்தோர் குடும்பங்களுக்கும், அங்கஹீனமாகிப் பணியாற்றிட தகுதியிழந்தவர் குடும்பங்களுக்கும், ஐயாயிரம் ரூபாயும், மூன்று ஏக்கராப் புஞ்சை அல்லது 1½ ஏக்கரா நஞ்சையும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும். அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும், உடைகளுக்கும் உதவி அளிக்கப்படும்.

வீர விருதுகள் பெறுவோர்க்குத் தமிழக அரசு பொற்கிழி அளிக்கிறது. பரம வீர சக்கர விருது பெற்றவர்க்குப் பத்தாயிர ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை பதினைந்தாயிரமாக இனிமேல் உயர்த்தி வழங்கப்படும். மகாவீரச் சக்கர விருது பெற்றவர்க்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபாய் என்று இதுவரையில் இருந்ததை இனிமேல் பத்தாயிரமாக உயர்த்தித் தரப்படும். வீரச்சக்கர விருது மூவாயிரம் என்று இருந்ததை ஐயாயிரம் ரூபாயாக இனிமேல் உயர்த்தித் தரப்படும். சேனா விருதுக்கு முதல் தடவையாக நமது தமிழக அரசின் சார்பில் மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிப்பதோடு, நாட்டுப் பாதுகாப்புக்கும், போர்முனையில் உள்ள வீரர்களுக்கு உதவுவதற்கும் அவ்வப்போது ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கூறவும், உடனடிச் செயல்களில் ஈடுபடவும், அனைத்துக் கட்சித் தலைவர்கள், சமூகப் பொதுப் பணியாளர்களைக் கொண்ட பாதுகாப்புக் குழு, மாநில அளவிலும், மாவட்டங்கள் அளவிலும் அமைக்கப்பட்டு அதன் பணிகள் விரைவிலே தொடர்ந்திடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, போர்முனையில் ஈடுபட்டு இறந்தோர், பணியாற்றிடத் தகுதியிழந்தோர் குடும்பங்களுக்கு 3 ஏக்கராப் புஞ்சை அல்லது 1½ ஏக்கரா நஞ்சை தர இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் குடும்பங்களுக்கு 5 ஏக்கரா நஞ்சை அல்லது 10 ஏக்கராப் புஞ்சை என்ற அளவில் மாற்றித் தர அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏதோ ஒன்றைச் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்வது நல்லது இல்லை. நான் ஐந்து ஏக்கரா என்று சொல்லியிருந்தால் நீங்கள் 7 ஏக்கரா என்று சொல்லியிருப்பீர்கள். இதற்குக் கூட நிலம் கிடைக்குமா என்பது சந்தேகம். எங்கெங்கு அந்த வீரர்களின் குடும்பங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் நிலங்கள் கிடைக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்காகத் தான் முன்பு கொடுத்த விருதுகள் பத்தாயிரம் ரூபாய் என்றிருந்ததை பதினைந்தாயிரம் ரூபாய் என்றும், ஏழாயிரத்து ஐநூறை பத்தாயிரம் ரூபாய் என்றும், மூவாயிரமாக இருந்ததை ஐயாயிரமாகவும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இதுவரையில் எதுவுமே கொடுக்காத சேனா விருதுக்கு இப்போது முதல் தடவையாக மூவா



யிரம் ரூபாய் நாம் தருகிறோம். இப்போது 3 ஏக்கரா புஞ்சை அல்லது 1½ ஏக்கரா நஞ்சை என்ற அளவுக்கு இருக்கிறது. போர்க் களத்தில் இருக்கும் வீரர்களில் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் பெரும்பான்மையானவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் ஆற்றும் தியாகத்தைத் தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களும் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களாக இந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. போர் வீரர்களை மேலும் ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறபடி பாதுகாப்புக் குழு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் அமைக்க இருக்கின்றோம். தாங்கள் தெரிவிக்க விரும்புகின்ற கருத்துக்களை அந்தந்தக் கட்சிகளின் சார்பிலும், சமூகப் பொதுப்பணியாளர்கள் சார்பிலும் அறிவிக்கலாம். அந்தக் கருத்துக்களையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து, செய்ய வேண்டியதைச் செம்மையாகச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of clarification.

MR. SPEAKER : No point of clarification.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I move for leave to introduce the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1971.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (ஆ) 1971-ஆம் ஆண்டு ஹோமியோபதி மருந்துமுறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, " இணை ஆய்வுக் குழுவால் திருத்தப்பட்டவாறுள்ள தமிழ்

நாடு 1971-ஆம் ஆண்டு மருந்துமுறை-ஹோமியோபதி. ஹோமியோபதி மருந்துவர்கள் சட்ட முன்வடிவை * இந்த அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடையேயிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 13 உறுப்பினர்களும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களிடையே இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களும் அடங்கிய இணை ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

3. அதன்மீது அளிக்கப்பட்ட ஆலோசனைகளும் கருத்துக்களும் இணை ஆய்வுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. இக்குழு ஐந்து முறைகள் கூடி மசோதாவைப் பகுதி பகுதியாகப் பரிசீலனை செய்தது. குழுவின் அறிக்கையும், இணை ஆய்வுக் குழுவினால் திருத்தப்பட்ட மசோதாவும் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மசோதாவில் குழு செய்துள்ள மாற்றங்களில் சில பின்வருமாறு :

(1) மசோதாவின் தலைப்பு: ஏற்கெனவே இருந்த பெயர் மசோதாவின் முழு நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வடிவத்தில் இல்லை என்ற காரணத்தினாலே தற்பொழுது "தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஹோமியோபதி மருந்துமுறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம்" என்று மாற்றப்பட்டுள்ளது.

(2) 15-வது பகுதி 1 உட்பகுதியில் (b) (c) இனங்களின் கீழ் பதிவு செய்துகொண்ட மருத்துவர்களால் அவர்களிடையேயிருந்து மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட விதித்துறை செய்யப்பட்டுள்ளது.

(3) மாவட்ட மருத்துவ அதிகாரியை மன்றத்தின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வதற்கான விதித்துறை விட்டுவிடப்பட்டுள்ளது.

(4) மன்றத்தின் துணைத் தலைவர் பதவிக்கான விதித்துறை கைவிடப்பட்டுள்ளது.

(5) தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, பதிவுபெற்ற மருத்துவர்களாயுள்ள உறுப்பினர்களிடையே இருந்து தலைவர் அரசால் நியமிக்கப்படுவதற்கு விதித்துறை செய்யப்பட்டுள்ளது.

(6) மன்ற உறுப்பினர்களுக்கும், நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் நாட்படியும், பயணப்படியும் வழங்க விதித்துறை செய்யப்பட்டுள்ளது.

---

* ...ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



(7) மசோதாவின் 15(1) (b) பகுதியில் "பத்தாண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்கு அவர் தொடர்ந்து மருத்துவராகச் செயலாற்றி வந்துள்ளார் என்றும் அம்மருத்துவத் தொழிலே அவரது பிழைப்புக்கான தொழிலாக இருந்து வந்துள்ளது என்றும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "பத்தாண்டுகளுக்குக் குறையாத கால அளவுக்கு அவர் தொடர்ந்து மருத்துவராகச் செயலாற்றி வந்துள்ளார் என்று" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(8) பின்வருவனபோன்ற பல்வேறு அதிகாரங்கள் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன : ஹோமியோபதி மருத்துவ முறையைப் பயிற்றுவிக்க நிறுவனங்களை நிறுவுதல். அந்நிறுவனங்களுக்கு ஏற்பளித்தல், அளிக்கப்பட்ட ஏற்பை நிறுத்திவிடுதல், தேர்வுகள் நடத்துதல், பாடமுறைகளுக்கான விதிமுறைகளுக்கு வகை செய்தல், பட்டங்களை வழங்குதல், சான்றிதழ்களும், தகுதிப் பட்டயங்களும் வழங்குதல்.

(9) 15 (b) (ii) பகுதியில் "அத் தேதிக்கு முன்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக. "விண்ணப்ப நாளன்று" என்றும் சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகள் தொழில் நடத்தியவர்கள் என்று குறிப்பிடுகின்ற பொழுது ஒரு ஆண்டிலே, ஒன்றரை ஆண்டிலே முடிக்கக் கூடிய பலர் அந்த வாய்ப்பைப் பெற முடியாமல் போய்விடும். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றிரண்டு ஆண்டுகள் நீட்டிக்கக்கூடிய வகையிலே விண்ணப்ப நாளன்று என்று மாற்றப்பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றது.

(10) முதல் குற்றத்துக்கான அபராதத் தொகை ரூபாய் 300-லிருந்து ரூபாய் 500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(11) இரண்டாவது முறை அல்லது அதற்கடுத்த முறை செய்யப்படும் குற்றத்துக்குரிய சிறைத் தண்டனை அளவு ஆறு மாதத்திலிருந்து ஓராண்டாக உயர்த்தப்பட்டுள்ளது.

(12) இந்திய அரசின் மாதிரி மசோதாவின் இரண்டாவது விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகளைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் விவர அட்டவணை (ஷெட்யூல்) விரிவாக்கப்பட்டுள்ளது.

(13) ஹைதராபாத்திலுள்ள இந்திய மருந்து வாரியத்தால் வழங்கப்படும், ஜி.டி.ஐ.எம். (ஹோமியோபதி) தகுதிப் பட்டயம் விவர அட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**மசோதாவின் முக்கியமான கூறுகள் :** இந்த மசோதா இணை ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டபொழுது, மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு ஏற்கனவே விளக்கிக் கூறப்பட்டுள்ளன என்பதை இங்கு குறிப்பிடலாம். ஹோமியோபதி மருத்துவர்களைப் பதிவு செய்வது குறித்து முறைப்படுத்தக்கூடிய சட்டம் தற்போது எதுமில்லை. ஹோமியோபதி முறைக்கு ஏற்பளிக்கவும்

[திரு. க. அன்பழகன்] [1971 டிசம்பர் 8

ஹோமியோபதி மருந்து முறையின் கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் பொருந்தவும் ஹோமியோபதி மருந்து முறை வளர்ச்சிக்கும் வகை செய்யவும் ஒரு சட்டத்தை இயற்றுவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. இவை கூறி இணை ஆய்வுக் குழுவால் திருத்தப்பட்டுள்ள மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு இப்போது இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இணை ஆய்வுக்குழு மசோதாவினுடைய, பல்வேறு விதிகளையும் முறைகளையும் சிறந்த முறையிலே ஆலோசனைசெய்து நல்ல ஒத்துழைப்பை நல்கி நல்ல வடிவத்திலே இதனைக் கொண்டு வந்திருக்கிறது என்பதனை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருந்துமுறை ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவினை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாநிலத்தில் உள்ள ஹோமியோபதி மருத்துவர்களுக்கு ஹோமியோபதி அமைப்பொன்று இல்லாத நிலையில் நம்முடைய அரசு அதனை ஒரு அமைப்பின்கீழ் கொண்டு வந்து இந்த நாட்டிற்கு அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற நல்ல மனப்பான்மையுடன் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறது. இந்த அரசு எந்த மருத்துவ முறையானாலும் நல்ல பல அம்சங்களை ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அலோபதி முறை, சித்த முறை, ஹோமியோபதி முறைகளில் அரசினுடைய கவனம் சிறப்பாக இருக்கிறது என்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழகத்திலே பரந்துகிடக்கின்ற ஹோமியோபதி மருத்துவர்கள் முறையாகப் படித்துப் பயிற்சிபெற்று விட்டால் யார் வேண்டுமானாலும் மக்கள் மத்தியிலே பயன்படுத்தலாம், சில நாட்கள் மட்டும் போஸ்டல் டியூஷனில் படித்துவிட்டு ஹோமியோபதி மருத்துவத் தொழில் நடத்துகின்ற நிலைமை இருக்காது என்ற அளவிலே இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது என்று நினைக்கிறேன். மக்கள் மத்தியிலே நல்ல முறையிலே ஒரு மருத்துவரிடம் தாங்கள் வைத்தியம் செய்துகொள்கிறோம் என்ற நம்பிக்கை பிறக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. அரசாங்கமே முன்வந்து ஹோமியோபதி மருத்துவத்திற்கென்று ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்திப் பாடத் திட்டத்தை ஏற்படுத்திச் சிறப்பாக அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்.



1971 டிசம்பர் 8] [திரு. ச. மு. பழனியப்பன்]

ஏதோ ஒருசில நாட்கள் மட்டும் தபால் மூலம் இந்த மருத்துவத்தைக் கற்றுக் கொள்வதால் மட்டும் சிறந்த முறையில் பணியாற்ற முடியுமா என்பது சந்தேகம். எனவே அதற்காக ஒரு தனி நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும். புகுமுக வகுப்புவரையில் படித்திருக்க வேண்டுமென்ற கல்வித் திறனை வைத்து அவர்களை ஹோமியோபதி பள்ளியிலே சேர்ந்து முறைப்படி அவர்கள் இந்த மருத்துவத்தைக் கற்றுக்கொண்டு அதற்குப் பிறகு இந்தத் தொழிலை நடத்த அனுமதித்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நோயாளிகளை நேரடியாகப் பார்த்து அவர்களது உடலிலேயிருக்கும் நோயின் தன்மைகளை அறிந்துகொண்டு அதற்குப் பிறகு மருத்துவத்தை நாட்டு மக்களிடையே பரப்பினால்தான் சிறப்பாக இருக்கும். தபால் மூலம் கற்றுக்கொண்டு மட்டும் நாட்டு மக்களிடத்தில் பரப்புவது நல்லதாக இருக்காது என்று கூறிக்கொண்டு, இந்த அரசு அதற்காக ஒரு நிறுவனத்தை நிறுவி, அதில் கற்றுத்தேர்ந்த ஆசிரியர்களை நியமித்து அந்த நிறுவனத்தின்மூலம் ஹோமியோபதி வைத்தியர்கள் வெளியிலே வந்து பயிற்சியைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இன்று அவர்களுக்காக மினிமம் குவாலிபிகேஷன் என்று வைத்திருப்பதை புகுமுக வகுப்பு என்றுகூட வைத்துக் கொள்ளலாம். இந்த ஹோமியோபதி வைத்தியத்தைக் கற்றுக்கொள்ள ஏராளமான பேர்கள் முன்வருவார்கள். முறையாக ஏற்படுத்தி ஸ்கூல் என்றோ கல்லூரி என்றோ ஏற்படுத்தினால், அங்கே வசதி செய்து கொடுத்தால் ஏராளமானவர்கள் மனுபோடும் நிலையைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆகவே, அதற்கான தகுதியாக புகுமுக வகுப்பிலே தேறியவர்கள்தான் அந்தக் கல்லூரிக்கு மனுபோட வேண்டுமென்ற விதிமுறையைக் கொண்டுவந்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும் முறையிலே சிறப்பாக இருக்க வேண்டும். அந்த ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும் நேரத்தில் அவர்கள் அந்த முறைப்படி சான்றிதழ்கள் பெற்றிருக்கிறார்களா என்பதைப் பார்த்து, எந்தத் தவறும் நடக்காமல் பார்த்து, சரியான முறையில்தான் பயிற்சி செய்கிறார்கள் என்ற அளவிற்குக் கண்காணிக்கும் அளவிற்கு இந்த அரசாங்கம் செயலாற்றும். செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்த மசோதாவின்பேரில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAN : Mr. Deputy Speaker, Sir, I congratulate the Government for having brought forward the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill which is very

necessary in this State and in the country. There are thousands of people who practise Homoepathy but people do not know whether they are real Homoeopathics and whether they have got the requisite qualifications. So the Government have done the right thing in going into the question of Homoeopathic Practice.

The main difficulty in Homoeopathy, as seen by observers is the lack of diagnostic centres. In this Bill there is definitely no mention about the diagnostic centres. I want to know what facilities the Government are going to give for diagnosis of diseases. No disease can be treated without a proper diagnosis. This is one point.

The second point is that there are certain small defects in the Bill. For example, according to the Bill only those who have got a practice of 10 years to their credit can register themselves as Homoepathic practitioners. By the time they have put in a practice of 10 years, they would have completed 40 or 50 years and they would find that they would not vigorously practise for a long time. After all, five years' practice is a good practice and it is enough. I do not want to dilate on that as I will have an opportunity to speak when I move an amendment in that regard.

Sir, I am glad that the Tamil Nadu Government has at least come forward to regularise the practice of Homoeopathy and I congratulate the Government on bringing forward this Bill and I support the Bill.

THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, while supporting the Practitioners of Homeopathy Bill, I would like to voice a few remarks on behalf of so many in the Homeopathic Science. There are two camps, believers and doubters. I believe doubters have a good point in their favour. This science has gained popularity and has grown and is taught and practised from New Delhi to Trivandrum and yet some of the people hold it in ridicule. There seems to be some reason for that. In Germany which I understand is the home of Homeopathy, there is scope for research and for proper study. Therefore, the science is held in high esteem. In our State, the Government should see that it is a respected study and if that is to be done, we should make such courses of study possible for the practitioners.

Too often the practitioner has a stock and trade book called 'guide to health'. Perhaps he has other books as well but that book is a well-known one. If somebody wants to tick his watch, he should set it right. He has to open it and see how it works and then put it right. So too, the practitioners who are dealing with the human body should study anatomy and the other subjects which go to make him a properly qualified doctor. It is not enough to have a formula or a specific or little drops or little pills. If we are to trust a homeopathi, then he must be a respected practitioner.



I also feel that too many of our practitioners have hung up their boards perhaps without a right of doing so. I feel very strongly that no one could call himself a doctor in Homoeopathy unless he is licensed and firstly, the licence must be given and only then he should be permitted to hang up his board.

One thought held previously was that the poor was always benefited by that. To-day there is a boon in the Homeopathic medicine. Sir, I feel very strongly that this should be watched. It should not become an industry by which the people make fortunes. I feel that the price should be watched very carefully and that there should be no boon in the buying and selling of homeopathic medicines. To achieve that, the Government should take necessary steps.

I also feel that this is a good step forward that many of our poor and our sick shall be catered to easily and effectively. But I do think that the dangers involved should be carefully watched and remedied. Thank you, Sir.

*திரு. பி. பொன்சொக்கலிங்கம்:* மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவத்தைப் பற்றிய மசோதாவின் மீது என்னுடைய கருத்தைக் கூற வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓமியோபதி மருத்துவம் கிராமப்புற மக்களுக்குச் சிறந்த வைத்தியமாக விளங்கி வருகின்ற ஒன்று. கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய மக்கள், படிக்காதவர்கள்கூட அந்த வைத்திய முறையை ஓரளவு கற்று தங்கள் குடும்பத்திலுள்ளவர்களை வியாதியிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் சிறந்த முறையாகக் கொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவத் துறையில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்களாக இருக்க வேண்டுமென்று சட்ட விதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கிராமங்களில் ஓமியோபதி படித்தவர்கள் டாக்டர்கள் என்று பெயர்ப் பலகை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ்., படித்த பட்டதாரிகளைப்போல் போர்டு போடுகின்ற நிலையை மாற்றி ஓமியோபதி டாக்டர் என்று பெயர்ப் பலகையில் பொறிக்க வேண்டுமென்ற முறை இருந்தால் மக்களுக்கும் ஓமியோபதி முறையில் சிறந்த மதிப்பு ஏற்பட வழிவகை பிறக்கும். ஓமியோபதி மருந்துகள் சிறிய அளவில் இருந்தாலும் நல்லமுறையில் மக்களை வியாதிகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. சில ஓமியோபதி டாக்டர்கள் ஆங்கிலத்தில் படித்தவர்கள் செய்கிற முறைப்படி அந்த மருந்துகளைக் கலந்து வைத்தியம் செய்கிற காரணத்தால் ஓமியோபதியில் சில இடங்களில் கிராமப்புற மக்களுக்கு பலன் அற்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிற காரணத்தால் ஓமியோபதி

வைத்தியர்களிடத்தில் இருக்கக்கூடிய மதிப்பு நாளாவட்டத்தில் குறைந்து வருகிறது. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓமியோபதி வைத்தியம் பழைய கால சித்த வைத்தியம், நாட்டு வைத்தியம் போல் சிறப்பாக இருந்தது. அந்த ஓமியோபதி வைத்தியத்தைப் படிக்க சிறப்பாக கல்லூரிபோல் அமைத்து பிரின்சிபால், வைத்திய நிபுணர்கள் எல்லாம் போட்டு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்கள் ஓமியோபதி வைத்தியம் படிக்க வழி செய்ய வேண்டும்.

அதேசமயத்தில் ஓமியோபதி வைத்தியம் செய்யக்கூடியவர்கள் கிராமப் புறங்களில் சிறப்பாக வைத்தியம் செய்கிறார்களா என்பதைப் பரிசீலிக்க எப்படி எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் பொறுத்த வரை கண்காணிக்க ஆங்காங்கு பெரிய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோமோ அதேபோன்ற ஒரு சிறப்பு அதிகாரியை அரசாங்கமே நியமனம் செய்து ஆங்காங்கு தவறுகள் ஏதும் இல்லாமல் வைத்தியம் செய்கிறார்களா என்று பரிசோதிக்க வேண்டும்.

ஓமியோபதி டாக்டர்களுக்கு நல்ல முறையில் மதிப்புத் தரும் வகையில் அதற்கான மசோதா நிறைவேற்றப்பட இருக்கிறது. கிராமப் புறங்களில் நாட்டு வைத்தியர்கள் குடும்பத்தில் பிறந்தவர்கள் கூட ஓமியோபதி முறையைப் படித்திருப்பதோடு கூட ஆங்கில படிப்பு வைத்தியத்தைப் போல் ஊசி போடுகிற முறையையும் கையாள்கிறார்கள். அந்த முறையைத் தடுப்பதற்கான முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1952-ம் வருஷத்திலிருந்தே தமிழக சட்டசபையில் இந்த ஓமியோபதி முறை வைத்தியத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று தொடர்ந்து வாதாடியும் கூட, பல மாநிலங்களில் வங்காளம். ஆந்திரம், கேரளம் போன்ற மாநிலங்களில் அந்தந்த அரசாங்கங்கள் அதை அங்கீகரித்து விரிவுபடுத்தி வந்த நேரத்திலும் கூட முன்னால் இருந்த அரசாங்கமானது இங்கு இந்தப் பிரச்சினையை ஒத்தி வைத்துக் கொண்டே இருந்தது. ஆனால் இப்போது எல்லோரும் போற்றக்கூடிய முறையில் ஓமியோபதி மசோதாவை கொண்டு வந்திருப்பதற்காக இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

டாக்டர் ஹனிமானின் ஓமியோபதி முறை அலோபதி முறைக்கு நேர்மாறான முறை. அலோபதி முறை நோய்க்கு என்ன மருந்து என்று தெரிவிப்பது. ஆனால் ஓமியோபதி முறையோ அந்தந்த சிட்டத்திற்கு குறிகளை அனுசரித்து வைத்தியம் செய்வது. அலோபதி முறையில் தீராத வியாதிகள் கூட ஓமியோபதி முறையில் தீர்ந்திருக்கிறது. உதாரணமாக. கான்சர். ஆஸ்துமா, வாதம் போன்ற நோய்களுக்கு எல்லாம் அலோபதி முறையில்



அவற்றை குணப்படுத்த மருந்து இருக்கிறது. வெங்காயத்தில் அல்லபல்லிபா என்ற மருந்து இருக்கிறது. சளி பிடித்துக் கொண்டால் அந்த மருந்தைக் கொடுத்தால் ஒரு செகண்டில் வியாதி தீரும். எரிச்சல் அதிகமாக இருந்தால் அது சல்பர் குறையைக் காட்டுகிறது. எந்த வியாதிக்கும் வைத்தியம் செய்வதில் இதிலே அதிகச் செலவாகாது. அந்த டாக்டர்களுக்கும் அதிகமான வருமானம் கிடையாது. பேஷண்டுகளுக்கும் அதிகச் செலவாகாது. அந்த டாக்டர்களுக்கும் அதிகமான வருமானம் கிடையாது. பேஷண்டுகளுக்கும் அதிகச் செலவாகாது.

ஏறத்தாழ 30,000 பேர்களுக்கு மேல் ஓமியோபதி டிப்ளமா வாங்கி இருக்கிறார்கள் என்றால் அதிலே பதினைந்தாயிரம் பேர் ஹாபியாகப் படித்து அவர்கள் சௌகரியத்திற்காக வைத்தியம் செய்கிறார்கள். பாக்கி பதினைந்தாயிரம் பேர்கள் இதனைத் தொழிலாக நடத்தி பிழைப்பு நடத்தி வருகிறார்கள். ஆகவே, இந்த முறை இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். கோடிக்கணக்கான மக்கள் ஓமியோபதி மூலமாக அதிகப் பயனடைகிறார்கள். ஐந்து ரூபாய் செலவில் வியாதி சரியாகிவிடும். கிரானிகல் டிஸீஸஸ் அலோபதி மூலமாகத் தீருவதில்லை, ஓமியோபதி வைத்திய முறை மூலமாகத் தீர்ந்து விடுகிறது. இப்படிப்பட்ட ஒருமுறையை அங்கீகரித்ததற்காக மீண்டும் ஒருமுறை சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

ரிஜிஸ்டர் செய்வதற்கு 10 வருஷம் அனுபவம் இருந்தால் மறுபடியும் பரிட்சை எழுதாமல் டாக்டர்களாக அனுமதிக்கப்படுவார்கள் என்று இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை. பின்னால் வரக்கூடிய கிளாசில் ஐந்து வருஷ காலம் அந்த வைத்திய முறையினைச் சரியான முறையில் படித்து பரிட்சை எழுதலாம் என்ற நிலை இருக்கிறது. மூன்று முறை எழுதலாம், நான்காம் முறை கூட எழுதலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, பத்து வருஷத்தை ஐந்து வருஷமாகக் குறைக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

கவுன்சிலின் பிரசிடன்ட் சர்க்காரால் நியமனம் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. சர்க்கார் கவனத்தோடு நாமினேஷன் செய்யவேண்டும். பலபேர் அலோபதி படித்தவர்கள், எப்.ஆர்.சி.எஸ். படித்தவர்கள் கூட ஓமியோபதி முறையைக் கையாளுகிறார்கள். அலோபதி, ஓமியோபதி இரண்டையும் சேர்த்து பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நபர்களை பிரசிடென்டாகச் செய்யாமல் முழுக்க முழுக்க ஓமியோபதி முறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கக்கூடியவர்களை பிரசிடென்டாகப் போட வேண்டும். திருவாரூர் ஓமியோபதி இன்ஸ்டியூட்டை எடுத்துக் கொண்டால் 20 வருஷ காலமாக ஓமியோபதியை அங்கீகரிக்க வேண்டுமென்று தொடர்ந்து போராடி வந்த டாக்டர் சீனிவாசன் போன்றவர்கள்

[திரு. என். கே. பழனிசாமி] [1971 டிசம்பர் 8

இருக்கிறார்கள். அவர்கள் வெளிநாட்டு க்வாலிபிகேஷன் கூட பெற்றிருக்கிறார்கள். அம்மாதிரி ஆட்களை பிரசிடென்டாகப் போடவேண்டும்.

அடுத்து சர்டிபிகேட் வழங்கும் நிலை பற்றிப் பார்க்கும்போது அலோபதி டாக்டர்களிடமும், சித்த வைத்தியர்களிடமும் வைத்தியம் செய்து கொள்ளுகிறவர்கள் அந்த டாக்டர்களிடமிருந்து சர்டிபிகேட் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஓமியோபதி டாக்டர்களிடம் வைத்தியம் செய்து கொண்டவர்கள் அந்த டாக்டர்களிடம் சர்டிபிகேட் பெற முடியாது. வைத்தியம் இங்கு செய்து கொண்டாலும் அலோபதி டாக்டர்களிடமிருந்துதான் சர்டிபிகேட் வாங்க வேண்டும். ஆகவே இந்த அனுமலியை நீக்கி ஹோமியோபதி டாக்டர்கள் சர்ட்டிபிக்கேட்ஸ் இஷ்யூ செய்யும் அதிகாரத்தை அவசியம் கொடுக்கவேண்டும்.

சென்னையில் ஒரு பெரிய ஹோமியோபதி ஆஸ்பத்திரி ஏற்பட கண்டிப்பாக சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். ஜில்லா தலை நகரங்களில் ஒவ்வொரு ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட் ஏற்பாடு செய்து அவை சரிவர நடைபெறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் ஏழை மக்களுக்கு அதிக வசதிகள் ஏற்படும். ஹோமியோபதி வைத்தியர்களுக்கு, அவர்களுக்கு மூன்று நான்கு ஆண்டுகள் அனுபவம் இருந்தால் அவர்களுக்கு 'ஏ' சர்டிபிக்கேட் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்யவேண்டும். இன்று பல பஞ்சாயத்து யூனியன்கள், பல மேஜர் பஞ்சாயத்துக்கள் இவைகளில் டாக்டர்கள் இல்லாமல் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து யூனியனிலும், இந்தமாதிரியான ஹோமியோபதி டாக்டர்களை எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி இந்த மசோதாவிலேயே கொண்டுவந்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும்.

கடைசி ஷெட்யூலில் F.F. Hom. (Lond.) M.F.Hom, (Lond.) (3) D.F. Hom. (Lond.) என்றிருக்கிறது. 'எஃப்.எம்' டிக்ரி பாரீஸ். இதற்கு ஆறு மாதங்கள் படித்தால் போதும். இதை ஏன் விதிவிலக்கு செய்தார்கள் என்று தெரியவில்லை. நான் நான்கு திருத்தங்கள் கொடுத்துள்ளேன். ரெஜிஸ்ட்ரேஷன் சார்ஜ் ரூ. 100 என்றிருக்கிறது. இது மிகவும் அதிகம். கேரளாவிலும், ஆந்திராவிலும் ரூ. 21 தான் வசூலிக்கப்படுகிறது. அங்கு அவர்கள் அப்படி வசூலிக்கும்போது நாம் மட்டும் ஏன் ரூ 100 வசூலிக்க வேண்டும் ? ஆகவே, அந்த ரூ. 100 என்பதை ரூ. 21 ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மணலி சி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த மசோதா ஹோமியோபதி வைத்திய முறையைப் பாலலாக்கவும், இன்றைக்கு இருப்பதை ஒழுங்குபடுத்தவும் பின்னால் அதை வளர்ப்பதற்கும்,



1971 டிசம்பர் 8] [திரு. மணலி சி. கந்தசாமி]

இதை நல்லதொரு வைத்தியமுறையாக உருவாக்கும் விதத்திலும் இந்த மசோதா அதற்கான ஆரம்பமாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்காக நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டவேண்டும். பல கிராமங்களில், ஆயிரக்கணக்கான பேர்கள் போர்டை தொங்கப் போட்டுக்கொண்டு வைத்தியம் செய்யக்கூடிய ஒரு முறை, இந்த நாட்டிலுள்ள பல லட்சக்கணக்கான மக்கள் வைத்திய வசதி பெற்றுவரும் ஒரு வைத்தியமுறை இதுவரையில் கவனிக்கப்படாததொரு நிலையில் இருந்து வந்தது. அப்படிப்பட்ட ஒரு நல்ல வைத்தியமுறையை ஒழுங்குப்படுத்தி அதை வளர்ப்பதற்கும், ஒழுங்கான முறையில் அந்த வைத்தியக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கும், அதற்கேற்ற மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும், இவைகளில் இதுவரை கவனம் செலுத்தப்படாமல் இருந்து வந்தது என்பதை நாம் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில் இந்த மசோதா ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கிறது.

இன்று நம் நாட்டில் அலோபதி முறை, மேனாட்டு வைத்திய முறை, ஏகபோகம் செலுத்த விரும்புகிறது. பல அலோபதி டாக்டர்கள் இந்த மசோதாவைக் கொண்டுவருவதைக் கூட விரும்பவில்லை என்பதை என் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறேன். இந்த மசோதாவைப் பற்றிச் சொன்னால் கூட முகத்தைச் சுளிக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள கோடானுகோடி மக்கள் அதிகச் செலவில்லாமல் வைத்தியம் செய்து கொள்ளக்கூடிய ஒரு முறையாகும் இந்த ஹோமியோபதி முறை.

இது விஞ்ஞான ரீதியில் கட்டப்பட்ட ஒரு வைத்தியமுறையு மாகும். பெரும்பாலான வைத்தியமுறைகள் பல்லாண்டுக்கால அனுபவத்தினால்தான் உருவாகி வளருகின்றன. விஞ்ஞான முறையில் வளர்ந்திருக்கக்கூடிய இந்த ஹோமியோபதி வைத்திய முறை நம் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் நோய் நொடியைத் தீர்க்கமுடியும். இன்று ஆயிரக்கணக் கானவர்கள், பல கல்லூரிகளில் படித்து அல்லது இன்ஸ்டிட்யூட் களில் படித்து பட்டம் வாங்கிக்கொண்டு போர்டுகளை தொங்க விட்டுக்கொண்டு வைத்தியம் செய்பவர்களை ஒழுங்குபடுத்தி, வருங்காலத்தில் இந்தக் கல்வி முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் ஒரு கவுன்சிலை ஏற்படுத்த இந்த மசோதா வழிவகை செய்கிறது. அரசாங்கம் சில அதிகாரங்களை குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் மேற்கொண்டிருப்பது நியாயம்தான். இந்தமாதிரியான ஒரு வைத்தியமுறை ஒரு அமைப்புக்கு வருகிற வரையில் அது ஒரு உரு எடுக்கிற வரையில் தவறுகள் ஏற்படுவதற்கு இடம் கொடுக்காமல், தவறான விதத்தில் பயன்படுத்தாமல் இருப்பதற்காக அரசாங்கம் தன் கையில் சில அதிகாரங்களை வைத்துக்கொள்வது அவசியமே என்றளவில் ஐந்தாண்டுகளுக்கு முதல் கவுன்சிலில் நாமினேட் செய்யும் அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1971 டிசம்பர் 8

ஒவ்வொரு பகுதியிலும் அரசாங்கம் ஓரளவு அதிகாரங்களை தன் கையில் வைத்துக்கொண்டுள்ளது என்பதை ஒத்துக்கொண்டுதானாக வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதைப் போல் இந்த வைத்தியமுறையில் உள்ள மிக விசேஷமான தன்மை என்னவென்றால் இதில் ஆபத்து இடையாது. ஒரு வைத்தியர் தவறான மருந்தைக் கொடுத்துவிட்டால் அல்லது ஒருவர் சரியாக வைத்தியம் செய்யாவிட்டால்கூட வைத்தியம் செய்து கொள்ளும் பேஷன்ட்க்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது. இந்த வைத்தியமுறை ஆதரிக்கப்படவேண்டியதொரு வைத்தியமுறையாகும். இது முதல் சட்டம் என்ற அளவில் இதை ஏற்றுக்கொண்டு கொஞ்சகாலமாக இத்துறையில் அதிகக் கவனம் செலுத்தி இந்தச் சட்டத்திற்கு பல திருத்தச்சட்டங்கள் கொண்டுவருவதன் மூலம், இதற்கான தகுந்த கல்லூரிகள் நிறுவி தகுந்த வைத்தியர்களைக் கொண்டுவருதல் வேண்டும்.

தமிழ் நாட்டில் ஹோமியோபதி வைத்தியமுறை சிறந்ததொரு வைத்தியமுறையாக வருவதற்கு இந்த மசோதா அஸ்திவாரம் அமைக்கிறது. இந்த மசோதாவில் உள்ள ஷரத்துக்கள் எல்லாம் ஆய்ந்து ஆய்ந்து பார்த்துத்தான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதிகப்படியான அதிகாரங்கள் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அதிகப்பணம் கட்டச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நாம் அவஸ்தைப்படவேண்டியதில்லை. முதலில் இப்படியெல்லாம் இருந்தாலும் பின்னர் நல்லதொரு முறையில் இது உருவாக்கப்படும் என்பதை உணர்ந்து இதை நிறைவேற்றுவதன் மூலம் இம்முறை செழிப்படையவும், வருங்காலத்தில் இந்த ஹோமியோபதி முறைக்கு நல்ல வருங்காலம் உண்டு என்று சொல்லும்விதத்திலும் இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று நம்பிக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். வணக்கம்.

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, let me at the outset congratulate our resourceful Minister for Public Health for having brought this Bill to regularise, to rationalise and to modernise the medical practitioners of indigenous character. The necessity for such a Bill was long felt and I am happy that at last this Bill has seen the dawn of existence. In our country where the majority of the people hail from the poorer sections and are suffering from penury, one would not expect that these people would have sufficient medical treatment in the circumstances. We have got a number of indigenous medical practitioners who are not sufficiently qualified to practise medicine. But this Bill paves the way to weed out the unqualified, inefficient and untrained medical practitioners from the field of medical practice. So, to that extent this Bill has to be welcomed by one and all.



1971 டிசம்பர் 8] [Thiru M. A. Latheef]

The period for the training or the period fixed for the qualification of a particular homoeopathic practitioner to enrol himself as a medical practitioner, I think, is rather a very very long period. That should be reduced, as it has been suggested by one or two hon. Members from 10 years to 5 years because within 5 years I think if a man practises medicine, he should be allowed to enrol himself as a registered member under this Bill.

Now in this connection I would respectfully submit that there should be a minimum educational qualification also. For example, a person has to deal with Chemistry, Physics and many other medical subjects. However crude may be the method of treatment, one is expected to deal with the various aspects of medical treatment in one way or the other. So, an amendment has been given notice of to fix at least S.S.L.C. or Matriculation as the minimum qualification. I would submit that it should be fixed at least as P.U.C. because a P.U.C. student deals with some of the aspects of physical science and also some aspects of chemistry.

In this field a medical practitioner is expected to deal with not only Bio-Chemistry but also physical science. So, there should be at least an elementary training for the person who seeks to be a medical practitioner. Therefore, this Bill should provide that a person who seeks to become a medical practitioner should possess at least P.U.C. qualification. It does not matter if he has failed in the P.U.C. examination but at least he should have had some training in physical science. Therefore, my suggestion is that the Government should seriously consider this aspect of the matter.

Now I am happy to note that the Siddha system of medicine has got due recognition from the Government and they are popularising and encouraging this system. The Siddha system has got effective medicines, which are not found even in the Allopathic system of medicine.

At the same time I would submit to the Hon. Minister that he should give due recognition to the Unani system also. The Unani system has got a long heritage and it has been proved to be an effective system of medicine. Somehow or other, it is rather unfortunate that the Unani system has not got as much recognition as it should get. So I would respectfully submit to the Hon. Minister that he should take steps to popularise, encourage and educate the people about the Unani system also along with the Siddha system.

It may also be fruitful and useful if the Homoeopathic doctors are also given some knowledge in both Siddha and Unani systems as well as some forms of allopathic system also. It has been stated that there are unscrupulous doctors who do not know how to inject medicines and how to administer internal medicines and sometimes they are responsible for many deaths and that is because they are

untrained doctors. But this Bill will bring about co-ordination and central control upon the activities of the medical practitioners, and so this should be welcomed by one and all.

This has met the long felt need of the people and the aspirations of the common masses of this State. From this point of view, I wholeheartedly support the Bill and congratulate the Hon. Minister for having brought forward this Bill in time.

DR. H. V. HANDE: Sir, while welcoming this Bill I would like to briefly stress upon one or two points, because certain points have already been made by other distinguished speakers who spoke before me.

The need for the Bill has been long felt. In 1965 or 1966 this Bill was unfortunately clubbed along with the Indigenous and Modern Medicines Bill which was referred to a Select Committee and the Member on this side of the House who was then the Minister for Health was the Chairman of the Committee and the present Minister for Health was a distinguished Member of that Committee. When the Committee sat for the first time, the then Hon. Minister announced to the Committee that that Bill could not be proceeded with due to objection from the Government of India and the All India Medical Council. Then a comprehensive Bill was brought forward but it could not see the light of the day and then came the elections.

Now it is for the third time that this Bill has been brought forward and my submission is that it is very advantageous and very good also to regularise certain things which might have been irregular before. At the same time we have to take particular care to see that the provisions of this Bill are faithfully and properly implemented and that is very important.

The idea of the Bill is two-fold. Firstly, it is intended to prevent quackery which has been indulged on a large scale now. Secondaly, it is intended to give to the persons having knowledge of homeopathy the statutory authority to practise homeopathy with the full backing of the Governmental agency.

In this connection, I would make an appeal to Homeopaths in particular and other categories of doctors in general, that they should not think that a particular medicine prescribed by them under their own system is the only medicine which could cure a particular disease. A propaganda is made on those lines and a particular medicine has also been advertised in that way. This sort of wild and sweeping claims should be put an end. Every medicine has got its own limitations and that has to be properly borne in mind. For instance, take cold and whatever may be the medicines we take, cold could not be stopped immediately, Any amount of anti-allergic medicines could not stop it altogether. But in certain cases a medicine prescribed by a homeopathic doctor has stopped



the cold. In this connection, I want to point out that the origin of the Homeopathic system of medicine could be traced to a German doctor.

Dr. Hahnemann himself was a modern medical practitioner and he discovered this Homeopathy system with this very idea, if I understand properly. If you make the doses smaller and smaller, then it becomes more powerful. But the most important thing is, they claim that almost all the diseases of constitutional bearing can be cured. If a man suffers from chronic cold, the argument is why should he particularly suffer. When two persons are particularly exposed to danger, why one man suffers and another man does not? The fundamental claim is that there is some constitutional malady or constitutional change or constitutional deficiency which is made good by homeopathy. That is the argument.

When there is an accident and if there is a fracture of the leg, how can a homeopathy practitioner claim 'I can make it all right'. The case has got to go to the Orthopaedic department (interruption). Puthur treatment is again different. Setting right the bone is an art. I am answering the ex-Health Minister.

The most important point is, we cannot make a wild claim. I was trying to show instances. For instance, suppose a homeopathic practitioner comes forward and says 'I can cure whooping cough or diphtheria without giving treple injections, once a month, three times in a year and so on. That is an untenable claim. I did mention this in a number of Homeopathy Practitioners' Conferences. If I remember right, once myself and the Hon. Chief Minister—he was then Public Works Department Minister—we both addressed a meeting at Mylapore. At that time I mentioned the same thing. Let us not make a wild claim, so that the very quality, the very good name of homeopathy system itself will be brought into question. That is an important point. So, if the homeopathy department or the Council clearly says that we take certain items and cure or give relief, it would be better. In other words, what I am trying to drive at is this. We should try to earmark certain areas. All persons cannot go to obstetrics because there are males also who cannot go to obstetrics. Obstetrics is a speciality. Similarly surgery is a speciality. Abdominal surgery is another speciality. My argument is homopathy is also a speciality with which a number of other doctors also can make themselves familiar and can try to master it. They can try to get a course on homeopathy and that will be doing very well. There are surgeons who are very good homeopaths, that is surgeons in modern medicine. It would be very nice if a provision can be made in this Bill to give opportunities to other doctors also to practise or study homoeopathy.

[Dr. H. V. Hande] [1971 டிசம்பர் 8

I will deal with one or two points only and then I am done. Conferring, granting or issuing colourable imitation of degrees, diplomas, etc. to be an offence—it is a very good Clause. This matter was discussed at length in the Select Committee. The Hon. Minister for Health was good enough to amend it properly. I would be very happy if this is particularly followed. Because I know that there are certain cases where one man simply calls himself as a homeopathy college and he gives a Degree. Somebody else takes the Degree. The giver is not competent and the taker of the Degree is not competent. That Degree will be a match for some other Degree. That sort of thing is a very serious offence. I am glad that Government is taking steps to see that such things are prevented by appointing a certain number of Inspectors for inspecting the institutions.

The quality of teaching which we give in an institution must be very very perfect. I would even mention that there are certain colleges even in Tamil Nadu—so called colleges—what is the training that is given there? I would endorse the view expressed by the hon. Member Thiru Latheef. Basic knowledge is absolutely essential. A basic knowledge of anatomy and a basic knowledge of physiology is essential. That is why human physiology is taught in P.U.C. They give training in physiology in P.U.C. A basic knowledge of physiology and anatomy would be given. But I know the difficulty also. That is, if we inspect all these institutions, half of these people will have to go. I also appreciate the difficulties of Government in this matter. But as a compromise measure I would say this.

Whoever has come in according to the provisions in the Bill, let them come in. But hereafterwards when we recruit such persons, we must be strict and careful. Now we cannot do anything, when we are going to recruit further doctors, the sentiment expressed in this House with regard to the quality of the doctors must be maintained properly. That should be borne in mind, so that the doctors who are turned out later on in the Homeopathy department would know very well the dangers of applying certain medicines, the danger of giving penicillin the danger of certain allergies. All these must be taken into consideration. A sort of sound knowledge or working knowledge in the basic sciences must also be given.

I think a number of suggestions have been made in the Select Committee. I hope all these suggestions which we have given will also be taken into consideration when the rules are framed and that the Government will properly implement the provisions of this enactment. With these words, I welcome the measure.



1971 டிசம்பர் 8]

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த இணை ஆய்வுக் குழுவின் அறிக்கை மீது பல்வேறு அங்கத்தினர்களும் தங்களுடைய சிறந்த ஆய்வுரைகளை வழங்கியதற்காக, அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் அவசியமானது என்பதும், நீண்ட காலத் தவணைக்குப் பிறகு வந்திருக்கிறது என்பதும், இந்தத் துறை செம்மையாக நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்பதும் எல்லா அங்கத்தினர்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்காகவும் நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிற முறையில் என்னென்ன விதமான சிறப்புப் பலன்களை அளிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, திரு. பழனியப்பன் அவர்கள் பேசும்போது, இங்கே சேருவதற்கான. சேர்ந்து பயிலுவதற்கான கல்லூரியில் அடிப்படைத் தகுதி எஸ்.எஸ்.எல்.ஸி. இன்னும் சொல்லப்போனால், பி.யு.ஸி. ஆக இருக்கவேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். கல்லூரி ஏற்படுத்துவது பற்றியும், அதில் சேர்ந்து பயிலுவதற்கு அடிப்படைத் தகுதி பற்றியும் தீர்மானிக்க, அகடமிக் க்வாலிபிகேஷன் பற்றித் தீர்மானிக்க அதற்குத் தேவையான நுணுக்கத் துறை, திறன் உடையவர்களைக் கொண்ட குழு என்று ஹோமியோபதி கவுன்சில் அமைக்கப்படவிருக்கிறது. அந்தக் கவுன்சில் அடிப்படைக் கல்வித் தேவை என்ன என்பதைத் தீர்மானிக்கவேண்டும். அதை நாமே தீர்மானிப்பது என்பது பொருத்தமாக இருக்காது. குறிப்பாக, சித்த வைத்தியம்,பி.ஐ.எம். பட்டம் பெறுவதற்காக மாணவர்கள் தேர்ந்தெடுக்கும்போது, எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு பெற்றவர்கள் என்றிருந்தாலும், அதற்குத் தமிழ்ப் பகுதியில் ஒரு தேர்ச்சி வேண்டும், அல்லது பி.யு.ஸி. தேறவேண்டும் என்கிற முறையிருக்கிறது. அதை ஒப்ப, இதற்கும் ஒரு திட்டத்தை வகுக்க முடியும் என்று எதிர்பார்க்கிறேன். அதேபோல இன்றைக்கு ஏராளமான டாக்டர்கள் ஹோமியோபதி மருத்துவர்கள் நாட்டில் இருக்கிறார்கள் என்கிற கருத்தை திரு. கே. எம். சுப்பிரமணியம் எடுத்துச் சொன்னார்கள். ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். சிறந்த முறையில் மருத்துவமும் செய்கிறார்கள். அதையே ஒரு தொழிலாக நடத்துகிறார்கள். அவர்களைத் தனித்தனியாகப் பிரித்து நாமாக ஒரு முடிவுக்கு வரமுடியாது. இதில் இரண்டு விதமான பயிற்சியை ஒத்துக்கொள்ள முடியும். நான்கு ஆண்டு முறைப்படி படித்து, பட்டம் பெறுகிற பட்டமோ, அல்லது சிறப்புக் குறிப்போ, அந்தத் தகுதியைப் பெறுகிற டிப்ளமா, இவற்றைப் பெறுகிற ஒரு வகையான ஹோமியோபதி கல்வி; இன்னொரு வகை நீண்ட காலம் ஒரு துறையில் இருந்து ஓரளவு அடிப்படை உண்மைகளைத் தெரிந்துக் கொண்டு, ஆனால் சாதாரணத் தேர்ச்சியோடு 10 ஆண்டுக் காலம் அனுபவம் உள்ளவர்கள்; இப்படிப் பட்டவர்கள் பல நோயாளிகளை பல்வேறு நிலைகளில் சந்தித்து, மருத்துவம் செய்து

சிறந்த அனுபவத் தேர்ச்சி பெற்றவர்கள். அனுபவத் தேர்ச்சி, படித்துப் பெறும் தேர்ச்சியைவிடச் சிறப்பானது என்று கருத முடியாது. ஆகையால் தான் படித்துத் தேறியபிறகும், 4 ஆண்டு காலப் படிப்பின் பிறகு, ஆறு மாதகாலம் ஹவுஸ் ஸர்ஜன் தேர்வு என்ற முறையில் பயிற்சியில் அடிப்படை முறைகள் இருக்கின்றன. அதற்கு ஈடு செய்ய, 10 ஆண்டு அனுபவத் தேர்ச்சி, வைத்தியம் செய்து இருக்க வேண்டும் என்கிற கருத்து ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த பத்து ஆண்டுகள் என்று வைத்தால் 30 ஆயிரம் ஹோமியோபதி டாக்டர்களில் 8 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் பேர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். இல்லை யென்றால், ஏறத்தாழ சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டாண்டு காலம் வரை, முதலாண்டு முடிகிற வரை, தாராளமாக யாரும் பதிவு செய்து கொள்ளலாம். அடுத்து, மேலும் ஒரு ஆண்டு நீடிக்கவும் அனுமதி வழங்க இருக்கிறோம். அப்படி நீடிக்கின்றபோது 8 ஆண்டுகாலம் ஆகிறவர்களுக்கும் 10 ஆண்டு காலம் நிறைவாகிவிட்டது என்ற அடிப்படையில் அவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

அடுத்து, 4 ஆண்டு காலம் அனுபவம் உள்ளவர்களாக இருந்து, எப்படியாவது பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால், அந்த 4 ஆண்டு காலம் அனுபவம் உள்ளவர்களுக்கும் இன்னும் 5 ஆண்டுகாலத்திற்கு இந்தக் கவுன்சில் பயிற்சி அளித்து தேர்வு நடத்த முடியும். நாளைக்கு ஒருவர், நான் ஒரு சாதாரணமான, ஒரு சிறிய மருத்துவ நிலையத்தில் அனுபவம் பெற்றிருக்கிறேன் என்று ஒரு சான்றிதழ் கொண்டு வந்தால் நான்காண்டுகளுக்குள்ளாக தேர்விற்குப் பின் அனுமதி பெற்று ஐந்தாண்டுகளுக்குள்ளாக டாக்டராக நாளைக்கு வரும் வாய்ப்பும் இருக்கிறது. இதற்கிடையில் கல்லூரியில் வேறு விதமாக பயிற்சி பெற்று டாக்டர்களாக வரும் வாய்ப்பும் இருக்கிறது. இந்த முறையில் எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி., படித்தவர்களும் டாக்டர்களாக வரும் வாய்ப்பும் ஏற்படும். ஆக, அனுபவம் இருந்து வைத்தியர் களாக உள்ளவர்கள் பதிவு செய்யவும் வழி பிறக்கும். குறைந்த கால அனுபவம் உள்ளவர்கள் ஒரு தேர்வு எழுதி அதன் மூலமாக வைத்தியர்களாக பதிவு செய்து கொள்ளவும், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகளுக்குள் டாக்டர்களாக ஆகவும் வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. எனவே, எல்லா வாயில்களும் திறந்திருக்கின்றன. ஆனால் முறையோடு தான் நுழையவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வாயில்களை மூடிவிட்டு, மருத்துவத் துறையின் வளர்ச்சியை தடுப்பதற்கு முயலக்கூடாது. வாயில்கள் திறந்து இருக்கின்றன. அதற்கு உரிய முறையில் ஈடுபாடுள்ள வர்கள் டாக்டர்களாக பதிவு செய்து கொள்ள முன்வந்து. அந்தத் துறையை செம்மை உடையதாக ஆக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





அதேபோல, இந்தத் துறையில் உள்ளவர்கள் அலோபதி மருந்தை கலந்து தருகிறார்கள் என்ற கருத்தும் இங்கே தெரிவிக்கப் பட்டது. இந்தச் சட்டம் நிறைவேறி செயற்படுத்தப்பட்டு விட்டால் ஒரு ஹோமியோபதி டாக்டர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஹோமியோபதி மருந்தல்லாத வேறு விளைவுகளை உண்டாக்கக்கூடிய, அதுபற்றி தான் உணர முடியாத, எந்த விளைவுகளை ஏற்படுத்தும், அதைத் தடுப்பதற்கு என்ன மருந்து களைத் தர வேண்டும் என்று அறியாத எந்த மருந்துகளையும் எந்த ஒரு ஹோமியோபதி டாக்டரும் பயன்படுத்த முடியாது. அப்படிப் பயன்படுத்தினால், அப்படிப் பயன்படுத்தி விளைவுகள் விபரீதமாகப் போகிற நிலை வருமானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை ஏற்படும். உள்ளபடியே, சில இடங்களில் ஹோமியோபதி டாக்டர்கள் தங்களுக்கு, எந்தெந்த மருந்துகள் எப்படி எப்படி சாதகமாக இருக்கிறதோ, அப்படி பயன்படுத்து கிறார்கள். பாலியேடிவ் மருந்துகள் எல்லாவற்றையும் வழங்கு கிறார்கள். அவற்றை யாவரும் பயன்படுத்தலாம் என்றாலும் கூட, கெடுதல் இல்லை என்றாலும் கூட. சில மருந்துகள் சிலருக்கு விபரீதத்தை உண்டாக்கிவிடுகின்றன. பென்சிலின், ஸ்டெப்டோ மைசின் போன்ற மருந்துகள் எந்த டாக்டரும் போடலாம் என்றாலும் கூட அவை சிலருக்கு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. எந்த டாக்டரும் இதைப் போடலாம் என்றாலும் கூட, விளைவுகள் ஏதேனும் ஏற்பட்டால், யாரிடம் போக வேண்டும் என்பதற்கு அவருடைய அட்ரசையாவது சொல்ல வேண்டும். அப்படி, ஸ்டெப்டோமைசின் போன்ற எதையும் போட்டால், விளைவுகள் விபரீதமாகுமானால், அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை கவுன்சிலின் நடைமுறைத் திட்டத்தால் நிச்சயம் பிறக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இதைப்போல ஒரு துறையில் உள்ள மருந்துகளை யார் யார், எந்தெந்த வகையில் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றிய ஒரு பொது நலன் இருக்க வேண்டும் என்று. இப்போது மூன்று துறையினர்கள் இருக்கிறார்கள். அலோபதி துறையைச் சேர்ந்தவர்கள், இண்டியன் மெடிசின் துறையைச் சேர்ந்தவர்கள், மற்றும் ஹோமியோபதி துறையைச் சேர்ந்தவர் கள். இந்த மூன்று துறையினரும் எந்த நோய்க்கு, எந்த மருந்து, எந்த மருத்துவத் துறையைச் சேர்ந்த மருந்து நல்லது என்பதை உணர்ந்து, எந்த ஒரு நோயாளிக்கு எந்தத் துறை சிறந்தது என்று ஆராய்ந்து, அந்தந்தத் துறையைச் சேர்ந்த மருத்துவரைப் பாருங்கள் என்று சொல்கின்ற பெருந்தன்மையைக் கொள்ள வேண்டும். ஒரு அலோபதி மருந்து நல்ல மருந்து என்று தெரிந்தும் கூட ஹோமியோபதி டாக்டர் அதைக் கூறாமல்

[திரு. க. அன்பழகன்] [1971 டிசம்பர் 8

ஹோமியோபதி மருந்தினை நோயாளிக்கு கொடுக்கின்ற நிலையினால் குற்றங்கள் ஏற்படும். எந்தெந்த நோய்க்கு எந்தெந்த மருந்துகள் சிறந்தவை என்ற அடிப்படையில் மருத்துவர்கள் நோயாளிக்கு அந்தந்தத் துறையைச் சேர்ந்த மருந்து கிடைக்கச் செய்கின்ற நல்ல நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹோமியோபதித் துறையில் மிகச் சிறந்த மருந்துகள் இருக்கின்றன என்பதை இன்றைக்கு உடல்நலக் குறைவினால் மருத்துவ மனையில் இருந்தாலும், இங்கே வந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் என். கே. பழனிச்சாமி அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையிலேயே, மிகச் சிறந்த மருந்துகள் ஏராளமாக இந்த ஹோமியோபதித் துறையில் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே, சில மருந்துகள் மிகவும் விலை மலிவானவை. ரூ. 5, ரூ. 7 என்று செலுத்தித்தான் அலோபதி மருந்துகள் பெற வேண்டும் என்று சொன்னால், அந்த மருந்துகளைவிட அதிகம் நலன் பயப்பவை 50 காசு, 20 காசுக்கு ஹோமியோபதி மருந்துகள் இருக்கின்றன. ஆனால், அதைத் தருகின்ற மருத்துவர்களின் திறமையைப் பொறுத்துத் தான் அந்த மருந்துகள் பலனளிக்கும். இந்த முறையில், நண்பர் பழனிச்சாமி அவர்கள் சொன்னதைப் போல மிகச் சிறந்த மருந்துகள் இத்துறையில் இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, பத்தாண்டுக்காலம் கழித்து பதிவு செய்வது என்று இருக்கிற முறையை நண்பர் பழனிச்சாமி அவர்கள் ஆதரித்து கருத்துத் தெரிவித்தார்கள். அதையும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இனி, இத் துறையின் கவுன்சிலுக்கு நியமனம் செய்வது பற்றி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். அவையெல்லாம் சிறந்த கவனத்தோடு செய்யப்பட வேண்டும், எந்த ஒரு அலோபதித் துறையில் அனுபவம் இல்லாத மெம்பரையும் நியமிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அவை யாவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பதிவு செய்து கொள்வதற்கு ரூ. 100 கட்டணம் என்று இருப்பது அதிகம் என்று பழனிச்சாமி குறிப்பிட்டார்கள். ரூ. 100 என்பது மேக்சிமம் எல்லை. ரூ. 100-க்கு உட்பட்டு கட்டணம் வசூலிக்கலாம் என்று தான் கூறப்பட்டிருக்கிறதேயல்லாமல் ரூ. 100 வசூலிக்கப்பட வேண்டும் என்றல்ல. பிற்காலத்தில் அதிகப்படுத்த வேண்டுமானால் அதற்கு இடம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி வகை செய்யப்பட்டிருக்கிறது ரூ. 50 என்ற அளவில் தான் விதிக்கப்படும் என்பது பொதுக் கருத்து. இது குழுவினருக்கு அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறன்.



1971 டிசம்பர் 8] [திரு. க. அன்பழகன்]

இந்த மருத்துவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி பேசும்போது, இதனால் ஆபத்து இல்லை என்று சொன்னார்கள். அது பெருமளவுக்கு உண்மை. ஆனாலும் ஒரு நோயாளியிடம் இருக்கின்ற நோயின் குறியை இத்துறை மருந்து அதிகப்படுத்தித் தான் அடக்கும் என்ற கருத்து இருக்கிறது. சில குறிப்பிட்ட நோயாளிகளுக்கு நோய்க்குறி அதிகமாகிறபோது அதிகக் கஷ்டம் ஏற்படும். நோய்க்கு உடனடியாக நிவாரணம் இருக்கிறது என்றாலும் கூட ஒரு மருந்தைக் கொடுக்கின்ற போது அந்த மருந்தின் அடையாளம், நோய்க்குறி அதிகமாகும். அதனால், சரியான டாக்டர்கள் சரியான பயிற்சிபெற்றவர்கள் தான் இத்தகைய மருந்தினைத் தரவேண்டும். வேறு சில சில்லறை விளைவுகளையும் இது உண்டாக்கும். உடனடியான தீமை ஏதும் இல்லை என்றாலும் கூட, பொதுவாகவும், குறிப்பாகவும், இதைக்குறித்து எச்சரிக்கை தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, முதலில், தொடக்க நிலையில், அரசாங்கம் தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் திரு. மணலி கந்தசாமி சொன்னார்கள். அரசாங்கம் முழு அக்கறை எடுத்துக் கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சிறந்த மருத்துவ முறையைத் தமிழக மக்கள் எல்லோரும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு எண்ணுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், யூனானி மருத்துவ முறைக்கும் பேராதரவினைத் தர வேண்டும் என்று கேட்டார்கள். இது பற்றியும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கத்தால் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அந்த அளவு இத்துறை முன்னேற்றத்திற்கு, செய்யும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சித்த மருத்துவம் பற்றி வேறு எந்த ஒரு மாநிலத்திலும் ஆராய்ச்சிகள் இல்லை. ஆகவே, சித்த வைத்திய முறை அழிந்து விட்டால் என்ன செய்வது ? எனவேதான் தமிழ்நாட்டிலே சித்த வைத்திய முறைக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அதனால் மற்ற யூனானி முறையையோ அல்லது ஆயுர் வேத முறையையோ நாம் ஆதரிக்கவில்லை என்று அர்த்தமல்ல. மற்ற மாநிலங்களிலே அவை நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருவதால் அதன் பலன் முழுதும் நமக்குக் கிடைக்கும். சித்த மருத்துவத்தைப் பற்றி அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் இருக்கக்கூடிய டாக்டர்களால் அறியப்படும் உண்மைகள் மாநிலம் பூராவுக்கும் உடனுக்குடன் அறிவிக்கப்படும். ஹோமியோபதி, அலோபதி முறைகளைப் பற்றி ஆராய, உலகம் முழுவதும் ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. அந்த ஆராய்ச்சிக் கூடங்களிலே கிடைக்கின்ற பலன்கள் முழுவதும் நமக்கும் கிடைக்கும்.

[திரு. க. அன்பழகன்] [1971 டிசம்பர் 8

ஆகவே, இங்கே பேசிய அங்கத்தினர்கள் அனைவரும் இந்த மசோதாவின்மீது தெரிவித்த கருத்துக்களுக்கு உள்ளபடியே என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, இந்த இணை ஆய்வுக் குழுவின் ஷரத்துக்களை ஏற்று, இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

## பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி, "பிரிவு 4 இந்த மசோதாவுக்குரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திருத்தம் கொடுத்திருந்த உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் திருத்தம் முன்மொழியப் படவில்லை.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 6.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 6 இந்த மசோதாவுக்குரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

* THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

"In clause 6, for the words 'five years', substitute the words 'three years'."

The amendment was duly seconded.



1971 டிசம்பர் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சார், இது நியமிக்கப்படக்கூடிய கவுன்சிலைப் பொறுத்தது. பின்னால் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று இருந்தாலும் கூட இப்போது முதன்முதலாக அரசாங்கத்தால் நியமிக்கப்படக்கூடிய இந்த கவுன்சில் உறுப்பினர்கள், ஐந்தாண்டு காலம் அவர்களுடைய பதவி இருக்குமென்று சொல்லப்பட்டிருக் கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த மசோதாவானது நல்ல முறையிலே கொண்டுவரப்பட்ட ஒரு மசோதா. நாம் இங்கிருந்து அனுப்பும்போது ரெஜிஸ்டிரேஷன் என்பதற்கு மட்டும் அனுப்பி யிருந்தோம். திரும்பி வருகின்றபோது பொறுக்குக் கமிட்டியிலே இருக்கின்றவர்கள் சில திருத்தங்களைக் கொடுத்திருப்பதைப் பார்க்கிறோம். இது விரும்பத்தக்கதல்ல என்றாலும் பொறுக்குக் கமிட்டியிலே இருப்பவர்கள் சில நல்ல திருத்தங்களைச் சேர்த் திருப்பதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. மக்களுக்கு நல்லமுறையில் பயன்படக்கூடிய வகையிலான சில மசோதாக்கள் இதற்கு முன்பும் இதுபோன்ற திருத்தங்களோடு வந்திருக்கின்றன.

முன்பு 1958-ல் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டுவந்த 'கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொட்டெக்டிங் ஆக்ட்' என்ற மசோதா முதலில் அனுப்பப்பட்டதை மாற்றி சில திருத்தங் களோடு வேறு மசோதாவாக வந்தது. அதேமாதிரி 1960-ல் லாண்ட் சீலிங் ஆக்ட்' இம்மாதிரி சில திருத்தங்களோடு திரும்பி வந்தது. 1957-ல் 'மெட்ராஸ் பூதான் யக்ஞ ஆக்ட்' என்ற மசோதா (எல். ஏ. பில் 15) வந்திருக்கிறது. அந்தமுறையிலே இந்த மசோதாவும் சில நல்ல திருத்தங்களோடு மீண்டும் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு கவுன்சில் அமைக்கப்பட்டிருப்பது ரொம்ப பொருத் தமானதுதான். ஆனால் அதன் உறுப்பினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படக் கூடியவர்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் அல்ல. ஆனால், இவ்வளவு சீக்கிரத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் அமைப்பது சாத்தியமல்ல. விரைவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அந்த கவுன்சிலிலே நியமிக்கவேண்டும். எனவே இப்போது இருக்கின்ற உறுப்பினர்கள் ஐந்தாண்டுக் காலம் இருப்பார்கள் என்பதை மாற்றி மூன்றாண்டு காலமாகக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்தத் திருத்தத்தை உங்கள் மூலமாக அமைச்சரவர்களை ஏற்றுக்கொள்ளும்படி நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிற இந்தத் திருத்தம் பற்றி ஏற்கெனவே இணை ஆய்வுக் குழுவில் ஒருவாறு ஆராயப்பட்டது. ஹோமியோபதி மருத்துவர்கள் இன்றைய தினம் எந்தவித ஒரு விதி முறைக்கும் சட்டத்திற்கும் உட்பட்டு

இயங்குகின்ற நிலை இல்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து கவுன்சில் அமைப்பதற்குக் குறைந்தது இரண்டு ஆண்டு காலம் ஆகும். கவுன்சில் அமைத்தாலும், பதிவு செய்து கொள்வதற்கும், பதிவு செய்யப்பட்ட பட்டியலை வெளியிடுவதற்கும் இரண்டாண்டுக் காலம் ஆகும். ஏற்கெனவே சித்த மருத்துவத் துறையில் ஏற்படுத்தப்பட்ட கவுன்சில் அந்தப் பட்டியலை வெளியிட இன்னும் கூட ஆறு மாதகாலம் ஆகும் என்று தெரிகிறது. இதிலும்கூட துவக்கப் பணிகள் முடிய இரண்டாண்டுக் காலம் ஆகலாம்.

இந்த ஹோமியோபதி துறையிலே உள்ள டாக்டர்கள் பல இடங்களிலே இருக்கின்றனர். பல்வேறு குழுக்கள் இருக்கின்றன. ஒரு குழுவுக்கும் இன்னொரு குழுவுக்கும் சில முரண்பாடுகள் இருக்கின்றன. இவையெல்லாம் இந்தக் கவுன்சிலிலே இருந்தால் பல தொல்லைகள் ஏற்படும். ஆகவேதான் இந்தக் கவுன்சிலிலே நியமிக்கப் படும் உறுப்பினர்கள் ஒரு ஐந்தாண்டு காலம் வரையில் இருக்கட்டும் என்ற முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே அன்றி வேறு நோக்கத்தோடு அல்ல. இந்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக தேர்தலை நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை வந்துவிடுமானால் அதேகூட ஒரு பெரிய வாய்ப்பு என்றுதான் நான் சொல்லமுடியும். ஆகவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டது.

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது

## பிரிவு 7

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 7 இந்த மசோதாவுக்குரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following amendment :—

'In clause 7, insert the following as sub-clause (8) at the end : -

"(8) has served two terms continuously as a member of the Council of Homoeopathy".'

The amendment was duly seconded.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** துணைத் தலைவரவர்களே, கட்டாயமாக அமைச்சரவை ஏற்றுக்கொள்ளும் என்ற எண்ணத் தோடுதான் நான் இதை வலியுறுத்த ஆசைப்படுகிறேன். காரணம், இன்றைக்குப் பல குழுக்களிலே இருப்பவர்களை நாம் பார்க்கிறோம்.



இரண்டு முறை தொடர்ச்சியாக ஒருவர் நியமிக்கப்பட்டால் மூன்றும் முறையும் அவரே எப்படியாவது அங்கே ஒட்டிக்கொள்ள வேண்டுமென்று முயற்சி செய்வார். அப்படி ஒருவரே அங்கே ஒட்டிக்கொண்டால் சமுதாயத்தில் எல்லோருக்கும் எப்படி வாய்ப்பு ஏற்படும்? மற்றவர்களுக்கு வழிவிடாமல் ஒருவரே நீண்டநாள் அங்கம் வகித்தால் இது ஒரு இடையூறாக இருக்குமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலையை இன்று கூட்டுறவுத் துறையிலே நாம் பார்க்கிறோம். இரண்டு டெர்ம்ஸ் ஒருவர் பிரசிடெண்டாக இருக்கவேண்டுமென்று சொன்னால் மூன்றும் முறையிலும் அவர் தன் செல்வாக்கைப் பயன் படுத்தி, யாரையாவது பிடித்து மீண்டும் அந்த இடத்தைப் பிடித்து விடுகிறார். இப்படி ஒரு இடம் கொடுத்துவிட்டால் பின்னால் மிக மிகக் கஷ்டமாகப் போய்விடும்.

இப்படிப்பட்ட கவுன்சில்களிலே நியமினம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மேலும் மேலும் தாங்களே நியமனம் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தும் நிலை ஏற்படும். இந்தக் கவுன்சிலில் 15 பேர் இருப்பார்கள். இதில் 6 பேர் அரசாங்கமே நியமனம் செய்ய லாம். அது மாத்திரம் இல்லாமல்

'President also can be nominated by the Government from among its members.

அப்படி வருகின்ற அங்கத்தினர்களிலிருந்து தலைவரை அரசாங்கம் நியமனம் செய்யலாம். இப்படி நியமனம் அரசாங்கத்தின் கையிலே இருக்கும்போது தொடர்ச்சியாக ஒருவரை நியமனம் செய்வது அல்லது ஒருமுறை நியமனம் செய்யப்பட்ட பின் நிரந்தரமாகத் தன்னையே மாற்றாது வைத்துக்கொள்வதற்கு வழி தேடிக்கொள்வதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான ஹோமியோபதி டாக்டர்கள் இருக் கிறார்கள். இரண்டு முறை ஒருவர் இருக்கலாம் என்றாலே பத்தாண்டு காலம் ஆகிவிடுகிறது. இந்தக் கவுன்சிலிலே அங்கம் வகிப்பவர்கள் நியமனம் மூலமாக அல்லாமல் எலக்ஷனிலே போட்டி போட்டு வந்தால் பாவாயில்லை. நியமனம் செய்யும்போது அரசாங்கம் பத்தாண்டுக் காலம் ஒருவரை அமர்த்தியபின் மீண்டும் அவரை நியமிப்பது ஒரு நல்ல சூழ்நிலையாக இராது என்று தெரிவித்துக்கொண்டு, இதை அரசாங்கம் ஆராய்ந்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர் இந்த யோசனையைச் சொல்கிறாரே என்று கட்சிக் கண்ணோட்டத்தைப் பார்க்காது இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பூனையைப் பார்த்து புலி என்று நினைத்து, அந்தப் பூனை புலியைப் போல இருக்கிறது என்று அச்சப்படுவது அவ்வளவு நியாயம்

அல்ல. அதைப்போல இந்தக் கவுன்சில் கூட்டுறவு இயக்கத்தில் அமைந்திருப்பதைப்போல நாடெங்கும் பல்வேறு நிர்வாகங்களில் வந்து உட்கார்வது நிகழ்ச்சி அல்ல. பல்கலைக்கழக அகடமிக் கவுன்சிலைப் போல செயல்படக்கூடிய ஒன்றாகும். இந்தக் கவுன்சிலின் நடைமுறைகள்—இதன் காலம் 72 ஜூன் அளவுக்குத்தான் வரத்தொடங்கும். 82 ஜூனிலும் இந்த அரசாங்கமே இருக்கும், பத்தாண்டு கழித்து இவர்களே ஆட்சியில் இருப்பதனால் இந்தக் கவுன்சில் மெம்பர்களையே அப்போதும் போட்டுவிட்டால் என்ன செய்வது என்று அச்சப் படுவது—இந்த அரசாங்கமே 82 ஜூனிலும் இருக்கும் என்ற தீர்மானத்திற்கே வந்து கவலைப்படுவதாக இருக்கிறது. ஜனநாயகத்தில் என்ன என்ன மாற்றங்கள் வரும் என்று சொல்ல முடியாது. ஒரு சட்டத்தில் தேவையான திருத்தங்களையும், மாற்றங்களையும் அனுபவத்தின்பேரில் செய்துகொள்வதுதான் நல்லதே தவிர அதைப்போல இதில் ஏற்படலாம் என்று அஞ்சி ஒன்றைச் செய்துவிடுவது நல்லதல்ல. கல்வித்துறையில் அவசியம் ஏற்படில் சிலரை வைத்துக் கொண்டு, சிலரை மாற்றுவதன் மூலம் தான் செம்மைப்படுத்த முடியும். ஹோமியோபதி முறை நமது சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பக் கல்வி நிலைக்குக் கூட வந்துசேரவில்லை, கல்லூரி நிலைக்கு உயர்ந்து வளர்ந்தாக வேண்டிய ஒன்று. தகுதி பெற்றவர் ஒருவர் இருப்பாரானால் அத்துறையில் 3-வது முறையும் வருவது தவறு என்று சொல்ல முடியாது. முதல் முறையே பதவிக் காலம் ஐந்து வருஷம் என்றாலும் தவறு இருக்குமானால் ஒருவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசு அதிகாரம் பெற்றிருக்கிறது. ஆகவே இதுபற்றி அச்சம் தேவையில்லை. கூட்டுறவு இயக்கத்தைப்போன்ற குழுவும் அல்ல, ஆகவே இந்தத் திருத்தம் அவசியம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பூனையைப் பார்த்துப் புலி என்று பயப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப் பட்ட பயம் இல்லை. யூனிவர்சிடி வைஸ் சான்சலர் போஸ்டுக்குக் கூட சட்டத்தைக் கொண்டுவந்தே மாற்ற வேண்டியதாக வந்தது. இந்த அரசாங்கம் மாறி வேறு அரசாங்கம் வருகிறது என்றாலும் கூட இதில் அந்தப் பதவியைப் பிடித்தவர்கள், அந்த அரசாங்கத்திலும் ஏதாவது முறையைக் கையாண்டு பதவியைப் பெற்றுக்கொள்ள முடியும், சட்டத்தில் இடம் இருந்தால். ஆகவே தான் திருத்தம் கொடுத்தேன். ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் நான் வற்புறுத்தவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.



பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 8 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்குவிடப் பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 15

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 15 do stand part of the Bill.'

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendments :—

"In sub-clause (1) (b) (ii) for the words "ten years", substitute the words 'five years'.'

'In sub-clause (1) (c) (ii), for the words 'four years', substitute the words 'two years'."

The amendments were duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

"In sub-clause (1) (b) (ii), for the words, 'ten years', substitute the words, 'five years'."

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்தப் பகுதியானது "ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் ப்ராக்டிஷனர்ஸ்" என்பதன் கீழ் வந்திருக்கிறது. ஹோமியோபதி ப்ராக்டீஸ் செய்கின்றவர்கள் பதிவு செய்து கொள்ளவும், அப்படி யார், யார் பதிவு செய்யப்பட்டவர்கள் என்கிற பட்டியலை மக்களுக்கு அளிக்கவும் இது ஒரு நல்ல ஏற்பாடாகும். முதல் மசோதா வந்த போதே இதே இரண்டு திருத்தங்களை நான் சபை முன்னால் சமர்ப்பித்திருந்தேன். பொறுக்குக் கமிட்டிக்குப் போன காரணத்தினால் அந்தத் திருத்தம் வரவில்லை. பொறுக்குக் கமிட்டியில் இதை எந்த அளவு கவனித்தார்கள் என்று தெரிய வில்லை. ஹோமியோபதி ப்ராக்டிஸ் செய்கின்ற பல பேர்களிடம் இருந்து, பல பகுதிகளில் இருந்து எனக்கு வந்திருக்கக்கூடிய மகஜர்களைப் பார்த்தால் அவற்றிலும் இந்த இரண்டு விஷயத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். இப்போது பதிவு செய்துகொள்ள மனுச் செய்துகொள்வதாக இருந்தால் 10 ஆண்டு காலமாக அவர்கள் ப்ராக்டீஸ் செய்து கொண்டு வந்திருந்தால்தான் முடியும் என்றிருக்கிறது. இன்னொரு விஷயம் தொடர்ச்சியாக ஹோமியோபதி டாக்டர் என்று அந்தப் பகுதி மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 4 ஆண்டு காலமாவது ஆகியிருந்தால்தான் ஹோமியோபதி டாக்டர் என்று பதிவு செய்யப்படுவர் என்று இருக்கிறது. இந்த

இரண்டு ஷரத்துக்களும் பெரும்பான்மையானவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும். தொடர்ச்சியாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓராண்டுகாலம் இருந்தால் போதும் என்று அவர்கள் கோரியிருக்கிறார்கள். நான் ஓராண்டுகாலம் என்பதை 2 ஆண்டுகாலம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன் பத்து ஆண்டுகாலம்—ஏதாவது ஒரு சர்டிபிகேட்டை வாங்கி ப்ராக்டீஸ் செய்துகொண்டிருந்தால் பதிவு செய்யப்படும் என்றிருப்பதை 5 ஆண்டுகாலமாகக் குறைக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். இந்த விஷயத்தில் கொஞ்சம் நல்ல மனது வைத்து இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதில் கொள்கைப் பிரச்சினைக்கு இடமில்லை. ஐந்தாண்டுக்கு மேல் ஆறு ஆண்டு, ஏழு ஆண்டுகாலமாக ப்ராக்டீஸ் செய்துகொண்டிருப்பவர்களுக்கு பாதகம் ஏற்படக்கூடாது. 3 ஆண்டுகாலம் தொடர்ச்சியாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கும் பாதகம் ஏற்படக்கூடாது. ஆகவே, என்னுடைய திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, I have only to add to the comments already made by the hon. Member, Thiru K. T. K. Thangamani. This clause will work as a great hardship on the practitioners who have put in a practice of five years because it is stated therein that those practitioners can register themselves only after appearing for an examination within a period of one year from the commencement of this Act. Otherwise, what will happen to them? They will have to stop their practice because they cannot be registered immediately.. The young doctors who have put in a practice of five years are more brilliant than the old doctors . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : That is a fact.

THIRU K. M. SUBRAMANIAN : Yes, many elder persons are better than myself. So also there is no guarantee that those who have put in a practice of ten years would be better doctors than those who have put in a practice of five years. So I earnestly request the Hon. Minister to accept my amendment so that there will not be any hardship to those who have put in a practice of five years and that they can continue their profession.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I endorse the view expressed by the learned member Thiru K. M. Subramaniam. Ten years is too long a period. Five years for this homoeopathy registration will be sufficient. More than that I am very much worried about one aspect. Who should certify that he has practised for ten years? Supposing the doctors come to the M.L.As. and ask them 'give me a certificate'. The M.L.As. will be helpless. We cannot refuse them because we are at their mercy for



getting votes. We cannot blunty tell them 'I would not give a certificate. Because you have not practised for ten years. But at the same time I cannot bluff. Because it is a medical field; I cannot give a certificate that he has practised for ten years, if he has not actually practised for such a period. If I give such a certificate what would be the worth of that certificate ?

So, when we stipulate the period as ten years, we must also stipulate the method of getting the certificate, from whom they should get the cerificate and how they should produce it. I would only request the Hon. Minister not to give this power to the M.L.As. It will really be a tough problem for us. You can prescribe some other authority for issuing such a certificate. But it is not clear in the Act. That may be made clear in the Rules at least. Or, it must be specifically put down that the homoeopathy practitioners should bring a certificate from a person of such and such status or such and such qualification and something like that and not the M.L.As. But as already stated, I feel that ten years is too long a period. It may be reduced to five years by the Hon. Minister.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றிப் போதுமான அளவு ஆய்வுக்குழு மிகத் தெளிவாக விவாதித்தது. மாண்புமிகு அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்ன எல்லாக் கருத்துக்களும் அங்கே எடுத்துச் சொல்லப் பட்டன. பின்னால் வருகிற நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்துத் தான் இந்த முடிவுக்கு வந்தோம். அங்கத்தினர்கள் ஒன்றைத் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் பெறுவதாக இருந்தால் நான்கு ஆண்டுக் காலம் படித்து விட்டு, பின்னர் ஆறு மாத காலம் ஹவுஸ் சர்ஜனாக இருக்க வேண்டுமென்று விதி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது நாலரை ஆண்டுக் காலம் தேவையாக இருக்கிறது. பத்தாண்டுக் காலம் என்று வைத்திருப்பது கல்லூரியில் நாலரை ஆண்டுகள் படித்து வருகின்ற அளவுக்கு அவர்கள் தேர்ச்சி அனுபவத்தால் பெறுகிறார்கள். அனுபவத்தால் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். பிற மாநிலங்களில் படித்துவிட்டு வருகிற டாக்டர்கள்கூட பின்னால் 'ஏ' சர்டிபிகேட் தர வேண்டும். சட்டம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டுக் காலம் என்ற கருத்து இருக்கிறது. சட்டம் வந்ததிலிருந்து பதிவு செய்துகொள்வதற்கு ஓர் ஆண்டுக் காலம் நீட்டிக்க வேண்டியிருக்கும். இரண்டு ஆண்டுக்காலம் நீட்டிக்க வேண்டுமென்ற காரணத்தால், சட்டம் வந்ததற்குப் பின்னால் யார் யார், எவ்வப்போது பதிவு செய்து கொண்டாலும், விண்ணப்பத்தை அனுப்புகின்ற தேதியிலிருந்து பத்தாண்டுக் காலம் (from the day of application) இருந்தால் போதும். நான்கு ஆண்டுக்காலம் படித்தவர்கள் இந்த மன்றத்தால் நடத்தப்படுகிற தேர்வு எழுதி டாக்டர் ஆகலாம். ஆகவேதான் இது

[திரு. க. அன்பழகன்] [1971 டிசம்பர் 8

பத்தாண்டுக் காலம், நான்கு ஆண்டுக் காலம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதுவரை யார் இந்த மருத்துவத்தைச் செய்து வந்தாலும் அத்தனை பேரும் அந்தந்த மாவட்டக் கலெக்டரிடத்தில் பதிவு செய்துகொண்டிருக்க வேண்டும். எந்தத் தேதியிலிருந்து பதிவு செய்துகொண்டிருக்கிறார்களோ அந்தத் தேதி கணக்குக் குறிப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்படியில்லாமல் மருத்துவம் செய்தால் அவர்களுக்கு அந்த உரிமை இல்லை. யார் யார் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருந்தாலும், எந்தத் தேதியில் சட்டம் வந்தாலும், விண்ணப்பம் செய்து கொண்ட தேதிதான் கணக்குக்கு எடுத்துக்கொள்ளப்படும். நான்கு ஆண்டுக்காலம் படித்துவிட்டு பரீட்சை எழுதலாம். யார் தேர்வு எழுதி வெற்றிபெறுகிறார்களோ அவர்கள் டாக்டர்களாக ஆவார்கள். அந்தத் தேர்வை, அதற்காக அமைக்கப்பட்டிருக்கும் கௌன்சில் நடத்தும். நான்கு ஆண்டுக்காலம் என்பதை இரண்டு ஆண்டுக் காலமாகக் குறைத்து விடுவதினால் நன்மை இல்லை. இப்பொழுது ஏராளமான டாக்டர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் தகுதி பெற்றவர்களாக இல்லை. தகுதியே இல்லாமல் டாக்டர்களாகப் பதிவு செய்வது நல்லது அல்ல. எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு பி.யு.சி. முடித்துவிட்டு, நான்கு ஆண்டுக் காலம் படித்துவிட்டு டாக்டர் ஆகலாம். நான்கு ஆண்டுகள் என்று இல்லாமல் இதற்கு இரண்டு ஆண்டுகள் போதும் என்று சொல்வது இதன் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகும். இது யாரையும் பாதிக்காத வகையில், எல்லோருக்கும் நன்மை செய்கிற அளவில் செய்திருக்கிறோம். எல்லோருக்கும் நன்மை கிடைக்கும். ஆகவே, இந்தத் திருத்தங்களுக்கு அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : I am pressing my amendment.

The amendment of Thiru K. T. K. Thangamani was put and lost.

THIRU K. M. SUBRAMANIAM : There is no use of pressing my amendment.

MR. DEPUTY SPEAKER : That is not proper. The hon. Member must say whether he is pressing or not.

THIRU K. M. SUBRAMANIAM : I am not pressing my amendment.

The amendment of Thiru K. M. Subramaniam was, by leave, withdrawn.

Clause 15 was put and carried.

Clause 16 was put and carried.



1971 டிசம்பர் 8]

*Clause 17.*

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 17 do stand part of the Bill".

உறுப்பினர் திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லை. திருத்தம் முன்மொழியப்படவில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Even though the hon. Member who has given notice of the amendment is not here, I would like to say something on this Clause. Originally when this Bill was before the House, the amount fixed was Rs. 50. But when it emerged from the Select Committee, it has been enhanced to Rs. 100. So, at least the old rate of Rs. 50 may be retained. The hon. Member who wanted to move an amendment has reduced it to Rs. 21. So, I would be happy if some assurance is given that this maximum limit of Rs. 100 will not be extracted from the practitioners.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் கருத்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. கௌன்சில் என்ற அமைப்பு ஏற்படுகிறபோது அவர்கள்தான் எந்த அளவுத் தொகை என்பதைத் தீர்மானிக்க வேண்டும். 100 ரூபாய்க்கு மேல் என்று சொல்வது சரியாகாது. எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று முடிவு செய்யும் பொறுப்பு கௌன்சிலுக்கு விடப்பட்டிருக்கிறது.

Clause 17 was put and carried.

Clauses 18 to 21 were put and carried.

பி.ப. 1-00

*பிரிவு 22.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 22 இந்த சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்"

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment.

In clause 22, at the end of sub-clause (7), add the following as sub-clause (7-a).

"7 (a). The minimum qualification for a student of institutions established by or affiliated to the Council will be matriculation or S.S.L.C."

THIRU R. PONNAPPA NADAR : I second the amendment.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* சார், நான் ஏற்கனவே இந்தச் சபைக்கு அறிவித்த பிரகாரம் இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு விடக்கூடிய சமயத்தில், இம்மாதிரியான ஷரத்து இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த ஷரத்து வந்தது வரவேற்கத்தக்க விஷயம்.

இன்னொரு விஷயத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டிலே சித்த வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம் எல்லாம் இருந்தாலும்கூட ஹோமியோபதிக்கு ஒரு கல்லூரி இல்லாமல் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி ஹோமியோபதி கல்லூரி ஆரம்பிக்க வசதியில்லாது இருந்தாலும்கூட, ஒரு ஹோமியோபதி கல்லூரியாவது இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கு வங்கத்திலே 1910-ம் வருஷம், 1920 வருஷங்களிலே ஹோமியோபதி கல்லூரிகள் தோன்றி விட்டன. நான் இந்தத் திருத்தம் கொண்டு வந்ததன் நோக்கமே இந்த கவுன்சிலோடு இணைக்கக்கூடிய இன்ஸ்டிட்யூஷன்களிலே வரக்கூடிய மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பெற வேண்டுமென்பது என்னுடைய நோக்கமாகும். இப்பொழுது இருக்கக்கூடியவர்கள் வேண்டுமானால் 5-வது படித்தவர்களாக, 7-வது படித்தவர்களாக இருக்கலாம். ஆனால் இந்தச் சட்டத்திற்குப் பிறகு ஹோமியோபதி டாக்டராக வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால், படித்துவிட்டு வரக்கூடிய மாணவர்களுக்கு வசதியாக இருக்கின்ற முறையிலே ஒரு குறிப்பிட்ட நிர்ணயம் செய்ய வேண்டும். கவுன்சில்தான் அதை நிர்ணயிக்க வேண்டுமென்று இருந்தாலும்கூட கவுன்சிலுக்கு ஒரு டைரக்ஷன் மாதிரியாக அரசாங்கம் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது மெட்ரிகுலேஷன் வேறு மாநிலங்களாக இருந்தால் அதற்கு தகுந்தபடி சமமாக குவாலிபிகேஷன் இருக்க வேண்டுமென்று சொல்லவேண்டும். அந்த நோக்கத்தோடுதான் இதை நான் கொண்டுவந்திருக்கிறேன். அப்படிச் செய்தால் படித்தும் வேலையில்லமால் இருக்கக்கூடியவர்களும் டாக்டராகப் போகக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், மெடிகல் காலேஜ் செலக்ஷன் கிடைக்காதவர்கள் கூட இந்த முறையிலே படித்து முன்னேறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதால், என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* தலைவர் அவர்களே, இந்த 22-வது விதியினுடைய நான்காவது பிரிவில்

'To provide by regulations courses of study for different examinations held by the council.'

என்று இருக்கிறது. அந்த நான்காவது பிரிவிலே தெரிவிக்கப் பட்டிருக்கின்ற கருத்து.

**'To provide by regulations courses of study for different examinations . . .'**



என்று இருப்பதால் பல்வேறு விதமான படிப்புகளுக்கும் தேர்வுகளுக்கும் எந்தவிதமான தகுதிகள் இருக்க வேண்டுமென்று ரெகுலேஷன் என்ற வகையிலே கவுன்சில் அமைக்கின்ற விதிமுறைகளின்படி இருக்கும். அந்தக் கவுன்சிலிலே உள்ளவர்கள் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் அமைப்பார்கள். சட்ட மன்றம் மினிமம் குவாலிபிகேஷன் எவ்வளவு இருக்க வேண்டுமென்று சொல்லாவிட்டாலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றிருக்க வேண்டுமென்ற கருத்து அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்படும் என்று நினைக்கிறேன். கல்லூரி அமைப்பதையும் அவர்கள்தான் கவனிக்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய ஒன்றிரண்டை செம்மைப்படுத்தி அவற்றை அஃபிலியேட் செய்வதற்கும், தேவையானால் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்கும் அவர்கள் முயற்சி செய்யலாம்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, in view of the assurance given by the Hon. Minister, I am not pressing my amendment.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 22 பேரவையின் முடிவிற்கு விடப்பட்', நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 23, 24 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 25.**

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* பேரவை முன்னுள்ள கேள்வி : " பிரிவு 25 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப் பட வேண்டும் ".

திருத்தம் கொடுத்திருந்த உறுப்பினர் திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* சார், 25-வது பிரிவைப் பொறுத்த வரையிலும் அவர்களுக்கு என்ன என்ன அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்ற முறையிலே

'That the Homoeopathic practitioners can issue certificates for the patients whom they treat'

என்ற அளவிற்காவது இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவர் அவர்களே, 25-வது பிரிவிலே 'Privileges of registered practioners' என்ற தலைப்பிலே

[திரு. க. அன்பழகன்] [1971 டிசம்பர் 8

'Notwithstanding anything contained in any other law for the time being in force ..................'

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும்,

'A certificate required by law to be given by a medical practitioner shall be valid if it is signed by any registered practitioner belonging to such class of registered practioners as may be specified by the Government from time to time . . .'

என்ற அளவிற்கு விதி இருக்கிறது. ஆக, தேவையான துணை விதிமுறைகள் பின்னர் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரிவு 25 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 26 முதல் 38 வரை பேரவையின் முடிவிற்குவிடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "அட்டவணை இந்த மசோதாவிற்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திருத்தம் கொடுத்திருந்த உறுப்பினர் திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லை.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு. நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, " 1971-ஆம் ஆண்டு ஹோமியோபதி மருந்து முறை –ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25[1971) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இந்த ஹோமியோபதி மருத்துவமுறை—ஹோமியோபதி மருத்துவர்கள் பதிவு ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த மசோதாவின் பல்வேறு பகுதிகளையும் முக்கியமான சில திருத்தங்களையும் ஆய்வுக்கு எடுத்து வைத்து அதன்மீது விவாதம் நடத்தி மசோதாவினுடைய எல்லா ஷரத்துக்களையும் இந்த அவை நிறைவேற்றித் தந்ததற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1971 டிசம்பர் 8] [திரு. க. அன்பழகன்]

இந்த மசோதா எவ்வளவு முக்கியமானது எவ்வளவு இன்றியமையாத ஒரு தேவை என்பதை நம்முடைய குடியரசினுடைய தலைவர் வி. வி. கிரி அவர்கள் சில நாட்களுக்கு முன்னாலே தெரிவித்த ஒரு கருத்தைக் கோடிட்டுக் காட்டவேண்டுமென்று விரும்புகிறேன். அவர் குறிப்பிட்ட அந்தக் கருத்து நாம் இந்த நேரத்திலே ஒரு முக்கியமான காரியத்தைச் செய்து இருக்கிறோம் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அவர்கள் கூறியுள்ளது.

" We must find alternative methods of helping the poorer classes, helping the rural area people by some system of medicine, which will be available to them, not supplied by quacks. I am a Homoeopathic quack. I don't want to supply medicines to others, but I want graduates of this character, who have a full training of 4 years in a scientific system of medicine which is acknowledged throughout the world, should be introduced, so that people could be assured that they will be attended to, at the time of illness.

Anyway, I want ultimately, hospitals should be endowed with these experts (Homoeopathic, Allopathics, etc.,) who are not quacks, who have taken the degree or diploma in a recognised college, and then treat people.

Only we should emphasise that we follow scientific methods in teaching Homoeopathy and see that quacks do not spoil the fair name of the Homoeopathic system, which in my view has great potentialities, especially in a poor country like India ".

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்த முக்கியமான கருத்து நம்முடைய சட்டமன்றத்திலே நிறைவேற்றுவது மூலமும் தொடர்ந்து அரசாங்கத்தினுடைய முயற்சிகள் மூலமாகவும் வெற்றியாக்கப்படும் என்ற நம்பிக்கையோடு பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ;

" 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருந்துமுறை--ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து, மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (8) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

101. Notification issued with G.O. Ms. No. 74, Excise and Prohibition, dated the 7th October 1971, in regard to maximum limit of liquor for transport and possession within the State of Tamil Nadu. [Laid on the Table of the House under section 32 (4) of the Tamil Nadu Abkari Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 8 of 1971).]

102. Notification issued with G.O. Ms. No. 2349, Agriculture, dated the 20th August 1971, in regard to certain amendments to Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

103. Notification issued with G.O. Ms. No. 2245, Revenue, dated the 13th August 1971, in regard to erection of three additional check posts around Madras City. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

104. Notification issued with G.O. Rt. No. 1824, Revenue, dated the 12th October 1971, in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Manager, Cathedral Free Primary School, Madras, on 31st October 1971 at Kamadhenu Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

### B. Reports, notifications and other papers.

'Nil.'



[318 ம் பக்கத்தில் 178-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம். கட்டுமானத்திலுள்ள குறைபாடுகளைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) 12. விவரங்கள் கீழே குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(எ) கிழக்கு ஜெர்மனி வழங்கிய டிராக்டர்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் விவரித்துள்ளவாறான மாற்றங்கள் இந்திய அரசு கேட்டுக்கொண்டதின் பேரில் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய எல்லா டிராக்டர்களையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகமும் இந்திய அரசுக்கு எழுதியுள்ளது.

குறிப்பு.—1969-ல் அரசு வாணிகக் கழகம் கிழக்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்த 100 ஆர்.எஸ். 09 டிராக்டர்கள், தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு இந்திய அரசால் ஒதுக்கப்பட்டன. இந்த 100 டிராக்டர்களையும் 1970 ஏப்ரலில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் பெற்றுக் கொண்டது. இவ்வாறு வரப்பெற்ற டிராக்டர்கள், குடியானவர்களுக்கு கொடுக்கப்படுமுன்பு. இதற்கென முகமையில் அனுப்பப்பெற்ற ஜெர்மானிய தொழில் நுட்ப வல்லுநர் குழு துணை கொண்டு இணைக்கப்பட்டுச் சோதித்துப் பார்க்கப்பட்டன. 100 டிராக்டர்களின் மொத்த விலை சற்றேறக்குறைய ரூ. 11 லட்சமாகும்.

2. இந்த ஆர்.எஸ். 09 டிராக்டர் 20 பரித்திறன் கொண்டது. "கருவிகள் தாங்கி" வகையைச் சேர்ந்தது. இந்த டிராக்டரின் வடிவமைப்பு வழக்கமான வகை டிராக்டர்களின்றும் பெரிதும் மாறுபட்டுள்ளது. இந்த டிராக்டரின் முன் பகுதியில் பல்வேறு வேலைகளுக்கு ஏற்ற கருவிகள் பல இணைக்கப்படலாம். விற்பனை வரி உட்பட ஒவ்வொரு டிராக்டரின் சில்லரை விற்பனை விலை ரூ. 14,191 ஆகும்.

3. தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் 1970-ல் 13 டிராக்டர்களை விற்பனை செய்தது. குடியானவர்கள் தெரிவித்த சில குறைபாடுகள் கிழக்கு ஜெர்மானிய எந்திரப் பழுது பார்க்கும் பொறியாளர்களின் உதவியுடன் சரி செய்யப்பட்டன. பஞ்சாப், குஜராத், ஆந்திரப் பிரதேசம் போன்ற பிற மாநிலங்களிலுள்ள ஏனைய வேளாண்-தொழில் கழகங்கள் வழங்கிய கிழக்கு ஜெர்மானிய டிராக்டர்களில் காணப்பட்ட குறைபாடுகளும் இந்திய அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டன. டிராக்டர்களில் குறைபாடுகளுக்கான காரணங்களை ஆய்ந்தறிய தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றை இந்திய அரசு நியமித்தது. குறைபாடுகள்

பட்டியலிடப்பட்டன. "ஒப்பந்தக்" குறிப்பில் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய யோசனைகள் கூறப்பட்டன. இந்த ஒப்பந்தக் குறிப்பு கிழக்கு ஜெர்மானியத் தொழில் நுட்ப வல்லுநர்களாலும், இந்திய அரசுப் பிரதிநிதிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தக் குறிப்பிற்கிணங்க, ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்டு வேளாண்-தொழில் கழகங்களிடம் முடங்கிக் கிடக்கும் டிராக்டர்களுக்குச் சில மாற்றங்களைச் செய்வதற்கு கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்களும் ஒப்புக்கொண்டனர். இதன்படி தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திடமுள்ள கிழக்கு ஜெர்மானிய டிராக்டர்களில் 12—3—1971-ல் தொடங்கி கிழக்கு ஜெர்மானிய தொழில் நுட்ப வல்லுநர்கள் மேற்பார்வையின் கீழ் மாற்றங்கள் செய்யப்பட்டன. குடியானவர்களுக்கு ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட டிராக்டர்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

4. இந்தத் தயாரிப்பில் உள்ள (இப்போதுள்ள ஏற்பாடுகள்) குறைபாடுகளையும் அதன் பின்னர் 1971 மார்ச் தொடங்கி கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் செய்த மாற்றங்களையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கை விரிவாகக் காட்டும். மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர், அண்மையில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்தால் 6 டிராக்டர்கள் விற்பனை செய்யப்பட்டன. குடியானவர்களிடமிருந்து இதுவரை எவ்வித முறையீடும் வரப்பெறவில்லை.

5. டிராக்டர்களில் குறைபாடுகள் இருப்பதாக 12 பேர் குறை இரந்துள்ளனர். இந்த 12 பேர்களுள் கீழ்க்காணும் மூன்று பேர்கள், வேறுவகை டிராக்டர்களை மாற்றிக் கொள்வதற்காக தங்களிடமுள்ள டிராக்டர்களை திருப்பிக் கொடுத்துவிட விரும்புகின்றனர்:—

(1) திரு. கே. துரைசாமி ரெட்டி, செங்கற்பட்டு மாவட்டம்.

(2) திரு. சி. முத்து கவுண்டர், தருமபுரி மாவட்டம்.

(3) திரு ஏ. சவுந்தரராஜன், சேலம் மாவட்டம்.

கீழ்க்காணும் இரண்டு குடியானவர்கள், பணத்தைத் திருப்பிக் கேட்டு, டிராக்டர்களைத் திருப்பி அனுப்பிவிட விரும்புகின்றனர் :—

(1) திரு கே. எம். பாலு நாய்க்கர், செங்கற்பட்டு மாவட்டம்.

(2) திரு. எஸ். காசிலிங்கக் கவுண்டர், கோயம்புத்தூர் மாவட்டம்.

மூன்று பேர்கள் டிராக்டர்களை வைத்துக் கொள்ளக் கூடும். எஞ்சியுள்ள நால்வர் இந்த டிராக்டர்களுக்குப் பதிலாக வேறுவகை டிராக்டர்களை விரும்புகின்றனரா அல்லது பணத்தைத் திரும்பப் பெற விரும்புகின்றனரா என்னும் பதிலை இவர்களிடமிருந்து தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் எதிர்பார்க்கிறது.

6. மாற்றி அமைக்கப்பட்ட ஆர்.எஸ். 09 கிழக்கு ஜெர்மனி, டிராக்டர்கள் எவையேனும் மனநிறைவளிக்கும் வகையில் வேலை செய்யவில்லை எனில், குடியானவர்கள் அவற்றை கிழக்கு



ஜெர்மானிய தயாரிப்பாளர்களுக்குத் திருப்பி அனுப்பி டிராக்டர் ஒன்றுக்கு ரூ. 10,600-ல் ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் தேய்மானத் தொகையாக கழித்துக்கொண்டு, மீதியை பெற்றுக் கொள்ளலாம் என்று இந்திய அரசு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு முன்னர் அறிவித்திருந்தது. 21—2—1971 வரை மாற்றியமைக்கப்பட்டுள்ள டிராக்டர்களை மட்டுமே திரும்பப் பெற்றுக்கொள்ள கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் தயாராக இருப்பதாக இந்திய அரசு, தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகத்திற்கு இப்போது தெரிவித்துள்ளது. இந்த டிராக்டர்களை மாற்றியமைக்கும் பணி இம்மாநிலத்தில் 1971 மார்ச்சிலிருந்து தொடங்கிச் செய்யப்பட்டதால் மேலே இந்திய அரசுக் கடிதத்திற்கிணங்க, இந்த டிராக்டர்களில் எதுவும் கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்களால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகவே விற்பனை செய்யப்படாதவை உட்பட மாற்றி அமைக்கப்பட்ட, மாற்றி அமைக்கப்படாத எல்லா டிராக்டர்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் கடிதம் அனுப்பியுள்ளது. இவர்களிடமிருந்து பதிலைக் கழகம் எதிர்பார்க்கிறது.

7. இதற்கிடையில் தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் இதை இயக்குநர்கள் குழு முன்பு வைத்தது. இயக்குநர்கள் குழு 25—6—71 அன்று நடத்திய அதன் கூட்டத்தில் ஆர். எஸ். 09 டிராக்டர்களைத் திருப்பிவிடுவது குறித்து விவாதித்த பிறகு கிழக்கு ஜெர்மானிய தயாரிப்பாளர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குட்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளின் பேரில், குடியானவர்கள் திருப்பித்தரும் டிராக்டர்களை ஏற்றுக் கொள்ளலாம் என்று தீர்மானித்தது :—

(1) ஆர்.எஸ். 09 டிராக்டரைத் திருப்பி விட விரும்பி அதைக் கழகத்திடம் ஒப்படைத்துவிட்ட அதன் சொந்தக்காரருக்கு, கிழக்கு ஜெர்மானிய கம்பெனி கொடுக்கக்கூடிய தொகை கொடுக்கப்படும்.

(2) கிழக்கு ஜெர்மானிய கம்பெனி டிராக்டர்களை எடுத்துக் கொண்டு தொகை கொடுத்தாலன்றி, கழகம் தொகை கொடுக்காது. இந்தத் தொகைக்காக நிதி உதவும் நிறுவனங்களுக்குக் கழகம் உத்தரவாதக் கடிதம் கொடுக்கும். இந்த உத்தரவாதக் கடிதத்தின் பேரில் நிதி உதவும் நிறுவனம் குடியானவர் புதிய டிராக்டர் வாங்கிக்கொள்ள இரண்டாவது கடன் கொடுக்கலாம்.

(3) வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டவுடனேயே, இந்தக் குடியானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிய டிராக்டர்கள் கொடுக்கப்படும்.

(4) மாற்றி அமைக்கப்பட்ட அல்லது மாற்றி அமைக்கப்படாத எல்லா டிராக்டர்களுக்கும் அவை கிழக்கு ஜெர்மானியத் தயாரிப்பாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குட்பட்டு, இது பொருந்தும்.

(5) (முதலில் டிராக்டருடன் கொடுக்கப்பட்ட) எல்லா இணைப்புகளையும் துணைக்கருவிகளையும் ஆர்.எஸ். 09 டிராக்டர் சொந்தக்காரர்கள் அந்த டிராக்டர்களுடன் திரும்பிக் கொடுக்க கொடுக்கும்.

(6) ஆர்.எஸ். 09 டிராக்டர்கள் வாங்கக் கடன் எதும் வாங்காதவர்களைப் பொறுத்தமட்டில், முன்னுரிமை அடிப்படையில் குடியானவர்களுக்குக் கொடுக்கப்படும் புதிய டிராக்டர் விலையில் மேலே (1)-ல் சொல்லிய தொகையைக் கழகம் கழித்துக்கொள்ளும். மேலும், வேறு டிராக்டர் வாங்குவதாக இல்லை என்று கழகத்திற்கு அவர் உறுதி அளிப்பதன் பேரில், கழகம், மேலே (1)-ல் குறிப்பிட்ட தொகையை ரொக்கமாக அவரிடம் கொடுக்கும் அல்லது ஆர்.எஸ். 09 டிராக்டர் வாங்கக் கடன் கொடுத்த நிறுவனத்துக்குக் கொடுக்கும்.

(7) மாநில, மத்திய அரசுகள், இந்திய அரசு வாணிபக் கழகம் வசூலித்த வரிகள், நிதிக் கட்டணங்கள் செலுத்தியதால் குடியானவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடாகத் தொகை எதுவும் அவருக்குக் கொடுக்கப்பட மாட்டாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கும் முடிவுக்கிணங்க இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(8) டிராக்டர் கைமாறும்போது வில்லங்கம், எதுவுமில்லாமலும் மாற்றிக்கொடுப்பதற்குக் குடியானவர் முழு உரிமையுள்ளவராக இருந்தால் மட்டுமே திருப்பிக் கொடுக்கப்படுகிற டிராக்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விற்பனையாகாத டிராக்டர்கள் திருப்பப்படுவது குறித்து கிழக்கு ஜெர்மானியக் கம்பெனியுடன் கலந்துகொண்டு இந்திய அரசு முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் இதை உடனடியாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இந்திய அரசுக்கு எழுதவதென தமிழ்நாடு வேளாண்-தொழில் கழக இயக்குநர் குழு தீர்மானித்துள்ளது. அதன்படி இது குறித்து மைய அரசுக்கு தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் எழுதியுள்ளது. அதன் முடிவு இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(a) Yes. A statement showing the defects in the construction is appended.

(b) Yes.

(c) 12. Details are given in the Note below.

(d) Modifications as detailed in the statement appended were made to these tractors by G.D.R. suppliers at the instance of the Government of India. The Tamil Nadu Agro Industries Corporation has also addressed the Government of India to take back all these tractors.



*Note.*—In 1969, 100 Nos. of R.S. 09 tractors imported by the State Trading Corporation from the German Democratic Republic were allotted by the Government of India to the Tamil Nadu Agro Industries Corporation. This allotment of 100 tractors was received by the Tamil Nadu Agro Industries Corporation in April 1970. All the tractors received were assembled and checked before delivery, with the guidance of a team of German technicians who were deputed to Madras for this purpose. The total cost of these 100 tractors is about Rs. 11 lakhs.

2. This R.S. 09 tractors is of 20 H.P. and is of 'Implement carrier' type. The design of this tractor varies distinctly from that of other conventional type of tractors. To the front portion of this tractor, a number of implements to suit various operations, can be attached. The retail price of each tractor is Rs. 14,191 including sales tax.

3. The Tamil Nadu Agro Industries Corporation sold 13 tractors in 1970. Certain defects reported by the ryots were set right with the assistance of the G.D.R. Service Engineers. Defects in the G.D.R. tractors supplied by other Agro Industries Corporations in other States like the Punjab, Gujarat and Andhra Pradesh were brought to the notice of the Government of India. The Government of India appointed a Committee consisting of technical experts to investigate the causes of defects in the tractors. The defects were listed out and remedial measures were suggested in a 'Protocal' which was agreed to by the G.D.R. technicians and representatives of the Government of India. According to that Protocal, the G.D.R. manufacturers agreed to carry out certain modifications to the tractors already sold and lying with the Agro Industries Corporations. Accordingly, modifications were carried out from 12th March 1971 onwards to the G.D.R. tractors with the Tamil Nadu Agro Indusries Corporation, under the supervision of G.D.R. technicians. Modifications were also effected to the tractors already sold to the ryots.

4. The appended Statement will indicate in detail the defects in the manufacture (existing arrangements) and the modifications carried out subsequently from March 1971 onwards by the G.D.R. suppliers. After modifications, 6 tractors were sold by the Tamil Nadu Agro Industries Corporation recently and so far no complaints have been received about them from the ryots.

5. Twelve parties have complained of the defects in the tractors. Of these 12 (twelve), the following 3 (three), want to return the tractors for exchange of tractors of other make;

(i) Thiru K. Doraisamy Reddi of Chingleput district.

(ii) Thiru C. Muthu Gounder, Dharmapuri district.

(iii) Thiru A. Soundararajan, Salem district.

The following 2 ryots want to return the tractors for refund of money :—

(i) Thiru K. M. Balu Naicker, Chingleput.

(ii) Thiru S. Kasilinga Gounder, Coimbatore district.

3 (Three) parties are likely to retain the tractors with them. Replies from the remaining 4 (four) parties whether they want exchange of other makes of tractors or refund of money are awaited by the Tamil Nadu Agro Industries Corporation.

6. The Government of India have previously informed the Tamil Nadu Agro Industries Corporation that if any of the modified R.S. 09 (German Democratic Republic) tractors are found to be not working satisfactorily, the ryots could return the same to the German Democratic Republic suppliers and get Rs. 10,600 per tractor *less* depreciation at 8 per cent per annum. But they have since informed the Corporation that the German Democratic Republic suppliers are prepared to take back the tractors modified up to 21st February 1971 only. As the modifications to the tractors in this State started only from March 1971, none of the tractors will be taken back by the German Democratic Repubic suppliers according to the above communication of the Government of India. The Tamil Nadu Agro Industries Corporation has, therefore, referred the matter to the Government of India requesting them to take back all those tractors modified and un-modified including those unsold. Their reply is awaited by the Corporation.

7. Meanwhile, the Tamil Nadu Agro Industries Corporation placed the matter before the Board of Directors. The Board of Directors at its meeting held on 25th June 1971, after discussing the question of return of R.S. 09 tractors, resolved that the return of these tractors by the ryots be accepted on the following conditions subject to the same being taken by German Democratic Republic suppliers :—

(i) Any owner of R.S. 09 tractor desirous of returning the same and has handed over delivery of the tractor to the Corporation be paid the amount that would be paid by German Democratic Republic suppliers.

(ii) Corporation would not pay this amount unless the German Democratic Republic suppliers take possession of the tractor and make payment; the Corporation would give a letter of guarantee to the financing agencies for this amount. On this letter of guarantee, the financing agency may grant a second loan to the farmer for purchase of a new tractor.

(iii) New tractors would be given on priority basis to these farmers as soon as their loans are sanctioned by banks.



(iv) This would apply to all tractors modified or un-modified subject to the same being acceptable to German Democratic Republic suppliers.

(v) The owners of R.S. 09 tractor will return all the attachments and accessories (originally supplied with the tractor) that are available with them.

(vi) In respect of those who have not taken any loan for purchase of R.S. 09 tractors, the Corporation would deduct the amount referred to at (i) above in the price of new tractor which will be supplied to the farmers on priority basis, and where he gives an undertaking to the Corporation that he is not interested in purchase of another tractor, the Corporation would pay the amount referred to at (i) above in cash or to the agency which financed the purchase of R.S. 09 tractor, as the case may be.

(vii) There will be no question of payment of any compensation for the loss suffered by him on payment of various taxes and finance charges collected by the State and Central Governments and State Trading Corporation of India and the same would be dealt with in accordance with the decision of the authorities concerned.

(viii) The return of tractors be accepted only if there is no encumbrance and title is free at the time transfer is effected.

The Board of Directors of the Tamil Nadu Agro Industries Corporation also resolved that the question of return of unsold tractors be taken up with the Government of India, who are seized of the problem, in order that the matter is decided by them in consultation with German Democratic Republic suppliers. The Government of India has been addressed by the Tamil Nadu Agro Industries Corporation and the decision of the Government of India is awaited.

APPENDIX

| Serial number and Part. (1) | Existing arrangements. (2) | Modifications made. (3) |
|---|---|---|
| 1 Clutch plates | 200 dia x 2·5 thick lining not sufficient to transmit the 20 HP. derived from Engine. Transmission torque 13 KPM. | Clutch Plate and Linings changed to 225 dia x 3·5 thick lining. Transmission Torque, increased to 20 KPM. |
| 2 Clutch Release Bearing | Sealed type—to be greased when Engine is overhauled. | Grease lubrication Hose and Nipple added to facilitate frequent greasing by a grease gun. |
| 3 Hose pipe from injection pump to filter. | Rubber Hose. | Replaced by Metal Hose. |
| 4 Diesel Tank | No strainer provided. | Strainer provided. |
| 5 Filter-diesel | One gravity type filter not effective. | Replaced by one gravity type filter, paper type and one Duel—Pressure type Filter. |
| Hydraulic filter | Sealed type not easily cleanable. | Replaced by an open type, can be cleaned effectively. |
| 6 Cut-out | Single coil type. | 3 Coil-type cut-out Indian Made PMP. added for better control of Voltage and Amperes and for charging batteries at Idling speed also. |
| 7 Electrical cables | Aluminium Cables fitted. | Replaced by Copper cables for more current carrying capacity. |
| 8 Lights | Head light glasses fixed by means of a Rubber holder, which gets loose after some time, and due to heat, and drops off during work. | Replaced by local Head lights with Metal Holders for glass. Also the Tail lamps replaced for more elegant appearance. |
| 9 Heater plug | 1·7 V Plug—melts on longer operation, and gets in between piston and cylinder thereby damaging these. | Replaced by 10.7 V, Enclosed type plug. |
| | All four spark connected in series with a resistance. | Resistance removed and the plugs connected in parallel, to give better performance. |
| 10 Hydraulic pump | Plastic bush used as Bearing cover. This results in Air getting into oil due to shrinkage of plastic Bush. | Replaced by Aluminium Bush. |
| 11 Hydraulic hoses from Hydraulic pump to Distributor, and distributor to Hydraulic lift Cylinder | Thick Rubber Hoses fouling with Clutch lever parts, and prevent sometimes the full release of clutch. | Replaced by metal Hoses which are more compact and thus do not foul with clutch lever and with-stand higher pressure. |
| 12 Dynamo | Sealed type. Present cooling arrangement inadequate. | Opening made on both ends to provide ventilation of the Rador and Starter. Sheet metal chute removed in view of this. Needs addition of gauze over the Openings to prevent dust. |
| 13 Battery | German. | Replaced by AMCO batteries. |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1971 டிசம்பர் 9

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

#### வங்காள தேச அகதிகளுக்கு உதவி

* 186 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வங்காள தேசத்திலிருந்து வரும் அகதிகளுக்கு உதவுவதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து பணம் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ் நாடு வங்காள தேச Bangla Desh) உதவிக் குழுவுக்கு முதலமைச்சர் துயர் தணிப்பு நிதியிலிருந்து, ரூ. 25,000 உதவித் தொகையாக 1—6—1971 அன்று வழங்கப்பட்டுள்ளது.

#### உதகையிலுள்ள 'தமிழகம்'

*187 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் (ஊட்டி) உள்ள 'தமிழகம்' விடுதியில் சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குவதற்குக் குறைந்த கட்டணம் வசூல் செய்யும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழக சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் உதகமண்டலத்திலுள்ள 'தமிழகம்' விடுதியில் தமிழக அரசு அலுவல் காரணமாகத் தங்கும்போது அவர்களிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசு சார்பற்றவர்களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி: சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது குழுக் கூட்டங்களுக்குச் சென்றுவிட்டு ஒருநாள் இரண்டு நாள் தொடர்ந்து தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒரு நாளுக்கு

30 ரூபாய் பணம் கேட்கிறார்கள். அது மிக அதிகமான தொகையாக இருப்பதால் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து குழுக் கூட்டங்கள் நடக்கும் காலத்தில் வாங்கும் தொகையையே தொடர்ந்து வசூலிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குழுக் கூட்டம் முடிந்த பிறகு அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசுச் சார்பற்றவர்களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம்தான் இப்பொழுது வசூலிக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** உதகையில் இருக்கும் 'தமிழகம்' சட்ட மன்றம் கூடுவதற்காகவும், சட்ட மன்ற உறுப்பினர்கள் வசதிக்காகவும் முதன்முதலாக வாங்கப்பட்டது. அந்த நிலையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஓய்வுக்காக அதிக நாள் தங்காத நிலை ஏற்படுமானால், சாதாரணமாக அவர்கள் கமிட்டிக் கூட்டத்திற்காகச் சென்று தங்கும்போது அவர்களிடமிருந்து பெறும் அளவே வசூலிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்ட மன்றம் கூடுவதற்காக வாங்கப்பட்ட ஒரே காரணத்திற்காக சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பது இல்லை. இப்போதே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பல கோரிக்கைகள் 'தமிழக'த்தைப் பொறுத்து நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரிலுள்ள தமிழக அரசுச் சுற்றுலா மாளிகையில் தங்குவதற்கு இன்றையதினம் தனி அறைக்கு ரூ. 7.50ம், இரண்டு பேர் தங்கும் அறைக்கு 12 ரூபாயும் குடும்ப அறைக்கு 24 ரூபாயும் வசூலிக்கிறார்கள். எங்களைப் போன்ற சாதாரணச் சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் தங்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்து தயவு செய்து கட்டணத்தைக் குறைக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி கேட்டிருந்தால் பதில் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அதைப்பற்றி, இப்படியொரு கேள்வி வரும் போதுதான் கேட்க வேண்டிய அவசியம் தோன்றியிருப்பதால் அது ஒரு முக்கிய பிரச்சினையாகத் தோன்றவில்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, உதகையிலுள்ள 'தமிழகத்'தில் எல்லாவித வசதிகளும் இருப்பதால் கோடைகாலச் சட்ட மன்றத்தை உதகையில் கூட்டும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லாவித வசதிகளும் நாட்டு மக்களுக்கு வராத காரணத்தால் வசதிக் குறைவாக உள்ள இந்த இடத்திலேயே சட்ட மன்றத்தைக் கூட்டுவது நல்லது என்று கருதுகிறேன்.



**திரு. கா. காளிமுத்து :** உதகையில் உள்ள 'தமிழகம்' என்னும் விடுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் எங்குமுள்ள சுற்றுலா விடுதிகளில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கனவே இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

### வளர்மானப் பணிகள் பற்றிய விளம்பரம்

***188 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பத்திரிகை நிருபர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று வளர்ச்சிப் பணிகளை சுற்றிக் காண்பிக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்னை மாநகரிலுள்ள இதழ்துறையாளர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளைச் சுற்றிக் காண்பிக்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இத் திட்டத்தின்படி, அண்மையில்—1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி முதல் 14-ந் தேதி வரை தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் "வீராணம் திட்டத்தையும்" தஞ்சை மாவட்டத்தில் உள்ள "தில்லையாடி வள்ளியம்மை நகர் திட்டத்தையும்" காண்பிக்க இதழ்துறையாளர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகள் அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்கப்பட்டன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கடந்த முறை பத்திரிகையாளர்களைச் சில மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுப் பயணம் செய்து வைத்ததால் நல்ல பலன் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. ஏனைய மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதற்கு முன்பே ஒரு தடவை எல்லா மாவட்டங்களுக்கும் பத்திரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அடுத்தும் அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்படிச் சென்றவர்கள் நல்ல நியாய உணர்வோடு தங்கள் பத்திரிகைகளில் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நல்ல கருத்துக்களையும் எழுதியிருக்கிறார்கள்.

**THIRU K. M. SUBRAMANIAM :** In view of the over-publicity in radio and cinemas, is it necessary to have further publicity like this, spending Government money ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதை மேலும் ஒரு விளம்பரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பத்திரிகையாளர்களும் நாட்டு நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டு

30 ரூபாய் பணம் கேட்கிறார்கள். அது மிக அதிகமான தொகை யாக இருப்பதால் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து குழுக் கூட்டங்கள் நடக்கும் காலத்தில் வாங்கும் தொகையையே தொடர்ந்து வசூலிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குழுக் கூட்டம் முடிந்த பிறகு அவர்கள் ஓய்வுக்காகத் தங்கும்போது அரசுச் சார்பற்றவர் களிடம் வசூலிக்கப்பெறும் கட்டணத்திற்கு மாறாக மிதமான கட்டணம்தான் இப்பொழுது வசூலிக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** உதகையில் இருக்கும் 'தமிழகம்' சட்ட மன்றம் கூடுவதற்காகவும், சட்ட மன்ற உறுப்பினர்கள் வசதிக்காகவும் முதன்முதலாக வாங்கப்பட்டது. அந்த நிலையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஓய்வுக்காக அதிக நாள் தங்காத நிலை ஏற்படுமானால், சாதாரணமாக அவர்கள் கமிட்டிக் கூட்டத்திற் காகச் சென்று தங்கும்போது அவர்களிடமிருந்து பெறும் அளவே வசூலிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்ட மன்றம் கூடுவதற்காக வாங்கப்பட்ட ஒரே காரணத்திற்காக சட்ட மன்ற உறுப்பினர் களிடமிருந்து குறைந்த கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பது இல்லை. இப்போதே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பல கோரிக்கைகள் 'தமிழக'த்தைப் பொறுத்து நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, மாவட்டத் தலை நகரிலுள்ள தமிழக அரசுச் சுற்றுலா மாளிகையில் தங்குவதற்கு இன்றையதினம் தனி அறைக்கு ரூ. 7.50ம், இரண்டு பேர் தங்கும் அறைக்கு 12 ரூபாயும் குடும்ப அறைக்கு 24 ரூபாயும் வசூலிக் கிறார்கள். எங்களைப் போன்ற சாதாரணச் சட்டமன்ற உறுப் பினர்கள் அதில் தங்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்து தயவு செய்து கட்டணத்தைக் குறைக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி கேட்டிருந்தால் பதில் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அதைப்பற்றி, இப்படியொரு கேள்வி வரும் போதுதான் கேட்க வேண்டிய அவசியம் தோன்றியிருப்பதால் அது ஒரு முக்கிய பிரச்சினையாகத் தோன்றவில்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, உதகையிலுள்ள 'தமிழகத்'தில் எல்லாவித வசதிகளும் இருப்பதால் கோடைகாலச் சட்ட மன்றத்தை உதகையில் கூட்டும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லாவித வசதிகளும் நாட்டு மக்களுக்கு வராத காரணத்தால் வசதிக் குறைவாக உள்ள இந்த இடத்திலேயே சட்ட மன்றத்தைக் கூட்டுவது நல்லது என்று கருதுகிறேன்.



**திரு. கா. காளிமுத்து :** உதகையில் உள்ள 'தமிழகம்' என்னும் விடுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் எங்குமுள்ள சுற்றுலா விடுதி களில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கனவே இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிவிட்டேன்.

### வளர்மானப் பணிகள் பற்றிய விளம்பரம்

***188 வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை பத்திரிகை நிருபர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று வளர்ச்சிப் பணிகளை சுற்றிக் காண்பிக்கும் திட்டம் தற் போது எந்நிலையிலுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்னை மாநகரிலுள்ள இதழ்துறையாளர்களை மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளைச் சுற்றிக் காண் பிக்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இத் திட்டத் தின்படி, அண்மையில்—1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி முதல் 14-ந் தேதி வரை தென்னாற்காடு மாவட்டத்தில் நிறை வேற்றப்படும் "வீராணம் திட்டத்தையும்" தஞ்சை மாவட்டத்தில் உள்ள "தில்லையாடி வள்ளியம்மை நகர் திட்டத்தையும்" காண்பிக்க இதழ்துறையாளர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப் பட்டது. அப்போது தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகள் அவர்களுக்குச் சுற்றிக் காண்பிக்கப்பட்டன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கடந்த முறை பத்திரிகையாளர்களைச் சில மாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுப் பயணம் செய்து வைத்ததால் நல்ல பலன் ஏற்பட் டிருப்பதாக அறியப்படுகிறது. ஏனைய மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதற்கு முன்பே ஒரு தடவை எல்லா மாவட்டங்களுக்கும் பத்திரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அடுத்தும் அவர்கள் அழைத்துச் செல்லப்படுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படும். அப்படிச் சென்றவர்கள் நல்ல நியாய உணர்வோடு தங்கள் பத்திரிகைகளில் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நல்ல கருத்துக்களையும் எழுதியிருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : In view of the over-publicity in radio and cinemas, is it necessary to have further publicity like this, spending Government money ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதை மேலும் ஒரு விளம்பரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பத்திரிகையாளர் களும் நாட்டு நிலையைச் சரிவரப் புரிந்துகொண்டு

அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இருக்கும் தொடர்புகளை எந்த அளவுக்கு மேலும் வளர்க்க வேண்டும் என்பதற்கு அனுசரணையாக அவர்கள் எழுதவேண்டும் என்பதற்காகவும், அதன் மூலமாக மக்கள் போதிய பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதற்காகவும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பொதுவாக, அரசாங்கத்தினுடைய விளம்பரத்திற்காக அல்ல; மக்களோடு அரசாங்கத் திட்டங்களைத் தொடர்புபடுத்துவதற்காக என்பதை நாம் உணர வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** இப்படிப் பத்திரிகையாளர்கள் தமிழகத்தினுடைய வளர்ச்சிகளை ஆங்காங்கு பார்த்தும், சில பத்திரிகைகள் உண்மைகளை எழுதுவதில்லை. அப்படிப்பட்ட பத்திரிகைகள் மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அல்லது, இனியாவது எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சில பத்திரிகைகள் உண்மையை எழுதுவதில்லை என்பது, என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தமிழ்நாட்டின் வேலைத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்களைப் பொறுத்து சினிமாப் படம் பிடித்து விளம்பரம் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதே அந்த முயற்சிகள் செய்யப்படுகின்றன. மேலும் அது தீவிரமாக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தர பாண்டியன் :** நம்முடைய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வெளி மாநில, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் அழைத்து வந்து காட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வெளி மாநிலத்திலுள்ளவர்களுக்கு அந்த அக்கறை இருந்தால் அவர்கள் வந்து பார்த்துச் செல்லலாம். ஆனால், நம்முடைய மாநில வளர்ச்சிகளை நம் மாநிலத்திலுள்ள பத்திரிகையாளர்கள் பார்வையிட்டு அதுபற்றிச் சிறப்பாக எழுதுவதும் மக்களைத் தொடர்புபடுத்துவதும் தான் நியாயம் என்று அரசு கருதுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மத்திய அரசு, பொதுத்துறை எம்மாதிரி செயல்படுகிறது என்பதை அறிந்துகொள்வதற்காக பத்திரிகையாளர்களை இம்மாதிரிப் பயணத்திற்கு அனுப்புகிறார்கள். அந்த முறையில், தமிழகத்தில் பல பொதுத்துறை ஸ்தாபனங்கள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் அவற்றைப் பார்வையிட்டு அவர்களுடைய கருத்துக்களை எழுதுவதற்காக அனுப்பப்படுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக அவர்கள் அந்தத் துறையைப் பார்வையிடுவதற்கு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும்.



**திரு. மு. சுருளிவேல் :** தலைவர் அவர்களே, நாம் என்னதான் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றாலும், ஒருசில பத்திரிகைகள், தங்களுடைய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்கள் ஏழை எளியவர்களுக்குப் பயனளிக்கும் காரணத்தாலும், முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக இருக்கின்ற காரணத்தாலும், பாராட்டி எழுதத் தவறுகின்ற காரணத்தால், அத்தகைய பத்திரிகைகளின் நிருபர்களை அழைக்காமலிருக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அழைக்கும்போதே அவர்களை, 'நீங்கள் பாராட்டித்தான் தீரவேண்டும்' என்று நிபந்தனை வைத்து அழைக்க முடியாது. 'விமரிசனம் செய்யுங்கள்' என்று தான் அழைக்க முடியும். விமரிசனம் செய்வது அவர்களுடைய உரிமை, ஆகவே, அந்த உரிமையை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். விமரிசனம் சரியா, இல்லையா என்பதை ஆராய்ந்து தீர்ப்பளிப்பது பொது மக்களுடைய உரிமை.

### கள்ளப்பள்ளி ஊராட்சி

*189 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி பஞ்சாயத்து செயல்படாமல் இருப்பது குறித்து, பஞ்சாயத்து உறுப்பினர்கள் சமீபத்தில் அரசின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. புகார் மனு மட்டும் வந்துள்ளது.

(இ) மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** குளித்தலை வட்டம், கள்ளப்பள்ளி ஊராட்சி மன்றம் கடந்த ஆறு மாத காலமாகச் செயல்படாமல் இருப்பதுதான் உண்மை, இதை நான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் நன்றாக அறிவேன். பொதுமக்களின் அன்றாடத் தேவைகளுக்கான பணிகள் செய்யப்படாமலிருப்பதாக எனக்கும் அடிக்கடி புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாற்றுத் திட்டம் ஏதாவது ஏற்பாடு செய்து அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சிக் கணக்கைத் தணிக்கை செய்து, ஏற்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக முழு அறிக்கை அனுப்பும்படியாக கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்ட ஆட்சியாளர் உத்தர

விட்டிருக்கிறார். ஆகவே, அந்த உத்தரவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கமும் மேல் நடவடிக்கை எடுக்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

### பொள்ளாச்சி அரசினர் மருத்துவமனை

*190 வினா—**திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகராட்சி மன்றம் பொள்ளாச்சி அரசினர் மருத்துவ மனைக் கட்டட நிதிக்கு நன்கொடையாக ரூபாய் ஒரு லட்சம் கொடுப்பதற்கு அரசிடம் அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம். 18—11—1971-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2552-ல் அதற்கான அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

### திருக்குறள் ஆராய்ச்சி

* 191 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் மாநாட்டின் வருவாயிலிருந்து திருக்குறள் ஆய்வுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்விதம் பயன் படுத்தப்படுகிறது ?

(இ) அதிலிருந்து தனி நபருக்கும் உதவித் தொகை வழங்கப் படுகிறதா ?

(உ) ஆம் எனின், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) நமது மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும், மூன்று லட்ச ரூபாயைப் பயன்படுத்தித் தகுதி பெற்ற விரிவுரையாளர்களை நியமித்து ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Sacred Hearts School at Palayamkottai*

* 192 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether Sacred Hearts School, Palayamkottai, is exempted from general guidelines for selection of candidates for training; and

(*b*) if so, the reasons therefor?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) “ சேக்ரிட் ஹார்ட் ” என்ற பெயரைக் கொண்ட தனியார் பயிற்சிப் பள்ளி எதுவும் பாளையங்கோட்டையில் இல்லை. தனியார் பயிற்சிப் பள்ளி எதற்கும் விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தத் தனியார் பள்ளிகள் பூராவுக்கும் 300 மார்க்குகளுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் அனுமதி வழங்கப்படும் என்று இருக்க பாளையங்கோட்டையிலுள்ள இந்த கிறித்தவக் கல்லூரியில் மட்டும் ஹைகோர்ட் உத்தரவு என்ற காரணத்தினால் அவர்கள் இஷ்டப்படி மாணவர்களை எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு விதி இருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே. ஏற்கனவே 250 மார்க்குகள் இருக்க வேண்டுமென்ற ஒரு விதிமுறையிருந்தது. பிறகு 300 என் என்று ஆக்கினோம். அந்த வகையிலே கூட 1969-70-ஆம் ஆண்டில் தனியார் பயிற்சிப் பள்ளிகளும், அரசினர் பயிற்சிப் பள்ளிகளைப் போல, தாங்கள் தேர்ந்தெடுத்த மாணவர்களின் பட்டியலையும் முதன்மை கல்வி அதிகாரியும், அலுவல் சார்பற்ற அங்கத்தினரையும் கொண்ட பரிசீலனைக் குழுவிற்கு அனுப்பி அதன் ஒப்புதல் பெற வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ்வாணையை எதிர்த்து, பாளையங்கோட்டையில் உள்ள கிருஸ்துராஜா ஆதாரப் பயிற்சிப்பள்ளி நிர்வாகி, ஹைகோர்ட்டில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்தார். நீதிபதிகள் அதை விசாரித்து, அதை அவர்கள் சிறுபான்மையோரின் உரிமையில் தலையிடுவதாகும் என்று தீர்ப்பளித்தார்கள். ஆகவே, அந்தக் குழுவிற்கு அறிவிக்க வேண்டுமென்ற முறை இப்பொழுது கை விடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த முறையே வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் 300 மார்க்குகள் என்பது வற்புறுத்தப் பட்டு, 300-க்கு மேலேதான் இருக்க வேண்டும் என்ற முறையில் 300-க்கு மேலேயிருந்து சேர்ப்பவர்களை அவர்கள் விருப்பப்படி சேர்க்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், 300 மார்க்குகளுக்கு மேலேயிருப்பவர்களை, அரசினரால் நடத்தப்படும் பள்ளிகளிலே அவர்கள் எந்த அளவிற்கு அதிக மார்க் வாங்கியிருக்கிறார்களோ அந்த முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளிலே 300 மார்க்குகளுக்குமேல் 350 மார்க்குகள் வாங்கியவர்கள்கூட சிலசமயங்களில் தேர்ந்தெடுக்கப்படாமல் 310 மார்க்குகள் எடுத்தவர்கள்கூட தேர்ந்தெடுக்கப்படும் நிலையிருக்கிறதே. ஆகவே அரசுப் பள்ளிகளிலே எப்படித் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களோ அந்த முறையில் செலக்ட் செய்ய தாக்கீது அனுப்பப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த நோக்கத்தை நிறைவேற்றத்தான் குழுவின் பரிசீலனைக்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிட்டோம். அதை எதிர்த்து ரிட் போட்டார்கள். அதிலே தலையீடு கூடாது என்று நீதிமன்றம் தெரிவித்தது. எனவே, அதிலே தலையிட முடியவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய சதவிகிதத்தை அளிக்கிறார்களா என்று தான் பார்க்க வேண்டும்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** சார், இந்த மிஷினரிகள் நடத்தும் பாடசாலைகளிலே அவர்களுக்கு ஆர்பனேஜஸ் வைத்து அதாவது அனாதைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து தொழில் பயிற்சி கொடுக்கிறார்கள். சிலர் அப்படிப் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது 300 மார்க்குகள் இருக்க வேண்டுமென்றாலும் சிலவேளைகளில் அவர்கள் அதற்குக் குறைந்த மார்க் எடுத்திருக்கலாம், ஆகவே இப்படிப்பட்ட அனாதைக் குழந்தைகளுக்கு 300 மார்க் என்பதைத் தளர்த்தி அதற்குக் குறைந்த மார்க் எடுத்திருந்தாலும் அவர்களுக்குப் பயிற்சிப் பள்ளிகளில் இடம் கிடைக்கும் அளவிற்கு ஒரு நியதியை இந்த அரசு ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றியது. அவர்கள் பயிற்சிக்குப் பிறகு அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு சொல்லிக் கொடுக்க வேண்டும். எனவே அவர்களின் தரம் உயர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் 300 என்று வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அனாதைக் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு இந்தச் சலுகை தர முடியவில்லை. அவர்கள் வேறு வேலைக்குப் போக வேண்டுமென்றால் போகலாம். எல்லா அனாதைப் பிள்ளைகளும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்றை மட்டுமே நம்பியிருக்க முடியாது. அவர்கள் மார்க் குறைவாக வாங்கியிருக்கிறார்கள் என்றால் பல்வேறு வேறு வேலைகள் இருக்கின்றன. எனவே 300-க்குக் குறைவாகயிருந்தால் தரம் கெட்டுப் போகிறது என்பதால்தான் 250 என்பது 300 ஆக ஆக்கப்பட்டது.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, ஆசிரிய பயிற்சிப் பள்ளிகளிலே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள், 300 மார்க் சிஸ்டம் வந்தவுடன் அதைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்ற வதந்தி வருகிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட இடர்ப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் ஏராளமான விண்ணப்பங்கள் வந்து சதவிகிதத்தினுடைய அளவிற்குப் பொறுக்கி எடுக்கப்படுகிறது. தனிக்கேள்வி போட்டால் எந்த அளவிற்கு இருக்கிறது, இடர்ப்பாடு இருக்கிறதா என்று சொல்ல முடியும்.



*Traffic disturbance near General Hospital*

*193 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the patients in the General Hospital, Madras are subject to disturbance caused by the heavy traffic in the Central Station High Road; and

(b) if so, the action taken in this regard?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister whether there is a proposal to shift the hospital to a convenient place?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the General Hospital at Madras has got its own roots in the place. It is not so easy to remove it from that place because it involves so many crores of money which has been utilised for the development of the hospital for so many long years, for a century and more.

**திரு. மு. சுருளிவேல்:** தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை, வி.ஐ.பி. ரூம், ஸ்டூடன்ட்ஸ் வார்டு . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜெனரல் ஹாஸ்பிடல், மெட்ராஸ் பற்றியது மூலக் கேள்வி.

*Primary Health Centres*

*194 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal before the Government to sanction new Primary Health Centres during this year; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present the Primary Health Centres are given on the basis of one Block one Centre. But there are a number of extensively huge taluks and Panchayat Union Councils in our State. The poverty of the people, the backwardness of the area and lack of communication facilities., etc.—all these things have to be taken into consideration. Only then the number of Primary Health Centres can be decided. There is need to provide additional Centres for backward and extensive taluks. A resolution was also passed by the District Development Council, Dharmapuri some time back with

regard to this matter requesting the Government to reconsider it. May I request the Hon. Minister for Health to consider and see that additional centres are given to extensive Blocks?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The demand is not only even for two, but in so many panchayats it is even for three or four. The demand is always there. But the Government is not able to meet the demand. Therefore, on a rational basis we are attempting to have one Primary Health Centre for every Union and also to build up a proper hospital for that.

*195 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள சித்தையன் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: தலைவரவர்களே, ஆத்தூர் தொகுதியிலுள்ள சித்தையன்கோட்டையிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு ஆஸ்பத்திரி வசதி இல்லை என்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. எஸ். எஸ். மணி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசும் ஒத்துக் கொண்டிருந்தது. அதையொட்டி ஆஸ்பத்திரிக்கு நிலமும் அதற்கு 10.000 ரூபாயும் அவ்வூரிலே உள்ள பொதுமக்கள் வசூல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து அங்கே ஆஸ்பத்திரி அமைக்க ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கின்ற அங்கத்தினர்கள் இதுவரையிலேயுள்ள நடைமுறைய அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பாக, ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு மருத்துவமனை என்ற கொள்கையிருக்கிறபொழுதே, அந்த ஒன்றியத்தில் இப்பொழுதே ஆத்தூர், சின்னாளப்பட்டி என்று 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 374 ஒன்றியங்களில் பெரும்பாலானவைகளில் ஒன்றுக்குக்கூட இன்னும் கட்டிடம் இல்லாத நிலையில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையத்தை அனுமதிப்பதற்கில்லை என்று நான் முதல் கேள்வியின்பொழுது தெரிவித்தேன். இப்பொழுது அந்த ஒன்றியத்தில் 2 மருத்துவமனை உள்ள அங்கத்தினர் 3-வது மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு ஒன்றியத்திற்கு என்று சலுகை காட்டுவது அரசாங்கத்தின் பொதுநோக்கத்திற்கு ஏற்றது அல்ல.



திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, 374 ஒன்றியங்கள் இருக்கின்ற தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை பிளாக்குகளுக்கு இந்தப் பிரதம சுகாதார நிலையம் இல்லாமல் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பிரதம சுகாதார நிலையம் என்பது இப்போது எல்லா ஒன்றியங்களிலும் ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஒன்றியங்களில் மட்டும் எந்த இடத்தில் வைப்பது என்பதிலே தகராறு இருந்தது. அதிலே ஒன்றில் தகராறு தீர்ந்து இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அது சேலம் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம். மற்றொரு ஒன்றியத்தில் வழக்குக்குப் போயிருக்கிற காரணத்தால் திறக்கப்படவில்லை.

THIRU M. A. LATHEEF: Sir, the Hon. Minister has stated that there should be only one health centre for a Union. At least in areas where there are forests and intractable roads and inaccessable areas but with sufficient human habitation with the Government consider the necessity of having more than one health centre or sub-centre there?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Primary Health Centres are formed with a view to serve the whole Union through a particular type of dispensary and it is not always an ordinary dispensary. Wherever there is necessity the Union also may decide to have some dispensary and the Government will come forward with some help of grant.

பீடித்தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் விடுமுறை

*196 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்குப் பண்டிகை நாட்களில் கூலியுடன் விடுமுறை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) தேசிய விடுமுறை நாட்களுக்கும் கூலியுடன் விடுமுறை அளிக்க உத்திரவு இடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) 19—12—70-ம் தேதியிட்ட அரசு நிலை ஆணை எண் 1833 மூலம் அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள், அறிவிப்பு வெளியிட்ட நாளான 27—1—1971 அன்று பீடி அல்லது சுருட்டு அல்லது இரண்டுமே தயாரிப்பது சம்பந்தமான வேலையில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்கள், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய திருவிழா விடுமுறை நாட்கள்) சட்டத்தின் வரம்புகளுக்குட்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 27—1—1971 முதலே நமது பீடித் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஊதியத்தோடு கொடுக்கப்படும் என்ற உத்தரவு போட்ட பிறகும் இன்னும் பல பீடி முதலாளிகள் இதை அமல் நடத்தாமல் இருக்கிறார்கள். அதை அமல் நடத்த அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சில முதலாளிகள் இந்த உத்தரவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களை அதை நடைமுறைக்குக் கொண்டுவரும்படி அரசு ஆணையிட்டிருக்கிறது. குறிப்பாக எந்தெந்த இடங்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்று கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த விடுமுறை நாட்கள் வழங்கலாம் என்று உத்தரவிட்ட பின்னும் எந்தெந்த அமைப்புகள் இந்த உத்தரவை அமல் நடத்தவில்லையோ அந்த அமைப்புகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைத்தான் இதற்கு முன்னால் கேட்ட துணைக் கேள்விக்குப் பதில் கூறும்போது கூறினேன். எந்தெந்த கம்பெனிகளில் அந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லையோ அதைக் குறிப்பிட்டுத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** கழிந்த பொதுத் தேர்தல் நடந்தபோது தேர்தல் நடந்த அன்றைக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறையை சில நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. அப்படித் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? பொதுத் தேர்தல் நடக்கும்போது அந்தத் தினத்திற்கு ஊதியத்தோடு விடுமுறை விடுவது பற்றி அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தக்க விவரம் தந்தால் அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** அரசினுடைய ஆணையை நிறைவேற்றாத நிறுவனங்களின் லைசென்சை ரத்து செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** எந்தெந்த நிறுவனங்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தால் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வரும்.

**திரு. சு. துரைசாமி :** பண்டிகை நாட்களுக்கு, விடுமுறை நாட்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பளம், ஞாயிற்றுக் கிழமை விடுமுறைக்குக் குறைந்த பட்ச கூலி கொண்டு வருகிற இடங்களில் அரசாங்க அதிகாரிகளே அந்தச் சம்பளத்தை முன்நின்று கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கெனவே அப்போப்பட்ட ஆணை இடப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டுவர அரசு உத்தரவிட்டிருக்கிறது.





**திரு. நா. வீராசாமி :** வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக் கூடிய பீடித் தொழில் முதலாளிகள் ஆங்காங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பெய்டு ஹாலிடேஸ் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டும் கூட இப்போது அதைக் கொடுக்கத் தகராறு செய்து கொண்டு பக்கத்திலுள்ள சித்தூர் தாலுகாவில் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். இதனால் அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கருத்தில் கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுபோன்று செய்யும் முதலாளிகளை அரசு அழைத்து தக்க அறிவுரை கூறியிருக்கிறது. மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

## வட ஆர்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள்

* 197 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் அண்மையில் பீடித் தொழிலாளர்களுக்கும், பீடி முதலாளிகளுக்கும் இடையே தொழில் உறவு பற்றிய ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது அமல் நடத்தப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், வட ஆர்க்காடு மாட்டத்தில் பீடி வணிகக்குறி உரிமையாளர்களுக்கும் பீடி சுற்றுபவர்களுக்கும் இடையே, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் **7—7—1970** அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையைத் தவிர வேறு எந்த உடன்படிக்கையும் அண்மையில் ஏற்படவில்லை.

(இ) ஆம்.

**திரு. கே. ஏ. வகாப் :** அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் என்ன ? இன்று நாட்டில் உள்ள பல லட்சக் கணக்கான பீடித் தொழிலாளர்கள் மற்றத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க கூடிய எந்த விதமான வசதிகளையும் பெறாமல் அல்லலுற்றுக் கொண்டிருப்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். மற்றத் தொழிலாளர்கள் பெறுகிற சுகாதார வசதி, மற்றும் எல்லா வசதிகளும் இந்தப் பீடித் தொழிலாளர்களுக்கும் கிடைக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கனவே அந்த உடன்பாட்டில் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதைச் சில முதலாளிகள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சிலர் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதால் அந்த இடங்களில் நடை முறைக்குக் கொண்டு வரத் தடையாக இருக்கிறது. விரைவில் அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. கே. என். குமாரசாமி : நாடு பூராவும் இருக்கும் பீடித் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் சில உரிமைகளை வழங்க வேண்டு மென்பதில் இ.எஸ்.ஐ. திட்டம், பிராவிடன்ட் ஃபன்ட் போன்ற திட்டங்களும் அந்தத் தொழிலாளர்களுக்காக நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நாடு முழுவதும் இருக்கக்கூடிய பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் அளிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படும். அந்தக் கமிட்டியிடம் இந்த விவரங்களைக் கூறினுல் பரிசீலனை செய்யப்படும்.

DR. H. V. HANDE : Sir, are the Government aware of the fact that many of these workers actually do not work in the factory. Their wives and children also work in their houses. The wages that they get are not commensurate with their work-load. Also in view of the unhygienic conditions in which thousands of workers live, will the Government appoint a small committee to go into the health aspect of the workers so that at least medical benefits could be given to them even if the Government cannot do something about their wages.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் அவர்களுடைய யாசனையை அரசு பரிசீலனை செய்யும்.

சொக்கம்பட்டி அரிசனக் குடியிருப்பு

*198 வினு—திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சொக்கம்பட்டியில் அரிசனக் காலனி கட்டி முடிக்கச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ரூ. 9,400.

திரு. கா. காளிமுத்து : அரிசன நல நிதியிலிருந்து ஒதுக்கப் பட்ட தொகை முழுவதையும் கொண்டு வீடுகள் கட்டி முடிக்கப் பட்ட பின்னும் தளம் அமைக்கப்படாமலே இருக்கிறது. தளத்தை உடனடியாக அமைத்து அந்த அரிசனப் பெருமக்கள் குடியேற ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஒரு வீட்டுக்கு 940 ரூபாய் என்ற விகிதத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தளம் அமைக்கிற பிரச்சினை இதிலே எழவில்லை. சிறிய வீடுகள்தான், அவை கட்டி முடிக்கப்பட்டு விடும் என்று குறிப்பிட விரும்பு கிறேன்.



திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம்

*199 வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்ற அரங்கம் ஒன்று புதிதாகக் கட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) முன்னுள் மாவட்டக் கழகக் கட்டிடத்திலுள்ள கூட்ட அரங்கில் இட வசதி போதாமையால் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டங்கள் நடத்துவதற்குத் தனியாக ஒரு கூட்ட அரங்கு கட்ட வேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதுபற்றி ஆய்ந்து தக்க செயற்குறிப்பு அனுப்பும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரைக் கேட்கப் பட்டுள்ளது.

திரு. எம். முத்தையா : அமைச்சர் அவர்கள் கட்டி முடிப்பதாகக் கூறினுர்கள். எப்போது கட்டி முடிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரைக் கேட்டிருக்கிருேம். பதில் வந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

*Collection of Agricultural loans in Coimbatore District*

*200 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether a demand made during the end of June, 1970 has been received by this Government from the Coimbatore District Agriculturists Association for the postponement of the recovery of all agricultural loans by one year; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்திடமிருந்து முறையீடு எதுவும் அரசுக்கு வரவில்லை. எனினும், சங்கம், 23—2—1970 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு ஒன்றைக் கொடுத்தது.

(இ) வான் பொய்த்தமையால் கடும் வறட்சி நிலவுகின்ற பகுதிகளில், அரசுக் கடன்கள் வசூலை 26—3—1970 நாளிலிருந்து 6 திங்கள் கால அளவுக்கு ஒத்தி வைக்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு அதிகாரமளித்தது. மேலும், மிகவும் இன்னலுற்றவர்களுக்கும் இச் சலுகையை அளிக்குமாறும். கட்டாய முறைகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் அரசு கட்டளையிட்டுள்ளது.

DR. H. V. HANDE : Arising out of the answer of the Hon. Minister about the non-levy for six months from June 1970, may I know from the Hon. Minister what is the exact position during current year, whether it has been postponed or have the Government collected it or shown the same concession as last year?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் எங்கெங்கு வரட்சியால் பாதிக்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் கருதுகிறார்களோ அந்த இடத்தில் வரி வசூல் ஒத்தி வைப்பதற்கு அல்லது வரி வஜா செய்யும் உரிமை மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களுக்கு இருக்கிறது. மேற்கொண்டு அவர்களுக்கு இருக்கிற வரம்பிற்கு அதிகமாகப் போகும்போது அரசைக் கேட்பார்கள்.

DR. H. V. HANDE : I would like to know from the Hon. Minister this. Concession was given during last year from June 1970 to December 1970. Has that amount been collected this year?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்த ஆண்டு அங்கு வசூலிக்கிறார்களா, எவ்வளவு வசூலித்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. கே. என் குமாரசாமி :** கோயம்புத்தூரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன்கள் வஜா செய்யப்பட வேண்டும் என்று கோவை அபிவிருத்தி மன்றக் கூட்டத்தின் தீர்மானம் அரசுக்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படித் தீர்மானம் வந்ததா இல்லையா என்பதைப் பற்றிய குறிப்பு இல்லை. கடன்கள் வஜா செய்கிற விஷயம்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களுக்கு வஜா செய்யும் உரிமை தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கிற வரம்பிற்கு மேல் வஜா செய்ய வேண்டுமென்றால் அரசுக்கு எழுத வேண்டும். பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்கள் தான் எழுத வேண்டும்.

## சென்னை நகரில் மத்திய அரசுக்குச் சொந்தமான இடங்கள்

* 201 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான காலி இடங்கள் எங்கெங்கு உள்ளன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விவர அறிக்கை@ ஒன்று சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 100-101-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. சு. துரைசாமி :** இந்த விவர அறிக்கையில் கிராமங்கள் என்று போடப்பட்டுள்ளன. அந்தக் கிராமங்கள் எந்த இடங்கள் என்று புரியவில்லை. இருந்தாலும் மத்திய அரசுக்குச் சொந்தமான இடமாகிய தீவுத் திடல் போன்ற இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாநில அரசைக் கலந்து செய்கிறார்களா அல்லது அவர்கள் தங்கள் இஷ்டத்திற்குச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாநில அரசைக் கலந்து கொண்டு செய்வதில்லை. ஆனால், கலந்து கொண்டு செய்ய வேண்டுமென்று அரசு எழுதியிருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** இப்படி மத்திய அரசுக்குச் சொந்தமான நிலங்களை, நம் நகரத்தில் உள்ளதை, நமக்கே தந்துவிட வேண்டுமென்ற கோரிக்கையை நம் அரசு மத்திய அரசுக்கு விடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படிக் கோரிக்கை விடவில்லை. ஆனால் அந்த இடங்களில் ஏதாவது கட்டடங்கள் கட்ட மாநில அரசைக் கலந்து கொண்டுதான் கட்டடம் கட்டவேண்டுமென்று இந்த அரசு எழுதியுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM : Is it not a fact that the local State Government do not obtain for the construction of their buildings, the plans approved by the Corporation even though there is a statutory rule that all plans should be first approved by the Corporation?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசுக்கு அதுபோன்ற விதி இருப்பதாக எனக்கு நினைவில்லை. அப்படி இல்லை என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தீவுத் திடலில் கட்டடம் கட்டக் கூடாது என்று மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது எழுதினார்கள் ? இதுவரை ஏன் பதில் வரவில்லை ? எப்போது வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்ல முடியும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** சென்னை நகரிலுள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான தீவுத் திடலில் எந்தவிதமான கட்டடங்களும் கட்டக் கூடாது என்று நம் அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கனவே எழுதியிருக்கிறோம் என்று சொன்னேன். மேற்கொண்டு அதுபற்றி விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும் என்றும் சொன்னேன்.

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that construction has already started? The survey has been done for the whole area and plans have already been drawn ? I think beginning work of construction is going on. May I know what is the stage at which the matter stands and what steps have been taken by this Government?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* அரசின் கவனத்திற்கு வந்துதான் அதுபற்றி அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எந்தவிதமான பதிலும் வரவில்லை.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தீவுத் திடலில் கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக கடிதம் எழுதியது மாத்திரமல்லாமல் நேரிலும் சந்தித்து மத்திய அரசில் பொறுப்புள்ளவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை நிச்சயமாக நிறுத்திவிடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஹண்டே அவர்கள் சொல்கிற தகவல் புதிதாக இருக்கிறது. மறுபடியும் அதை வைத்துக் கொண்டு அது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்ன பிறகு வேறு கேள்விகளுக்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

### *Mineral Deposits*

* 202 *Q.*—THIRU N. DENNIS :
THIRU P. MALAICHAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Molybdenite has been founded near Palani in large quantities;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to market the product?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) & (இ) ஆம். பழனிக்கு அருகில் காடிக்குட்டம் என்னுமிடத்தில் மாலிப்டினைட் என்னும் கனிப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாலிப்டினைட் படிவம் உள்ள இப் பகுதியை இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தார் துளைக் கருவியின் மூலம் துளை போட்டு தீவிர ஆய்வு செய்து வருகின்றனர். இவ்விடத்தில் ஏறத்தாழ 36,000 டன், 0.1442% வீதம் மாலிப்டைனைட் தாது 60 மீட்டர் ஆழத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

(உ) இக் கனிப் பொருள் எப்படி பயன்படுத்தப்படும் என்பது பற்றிய முடிவு தற்போது கூற இயலாது.



*திரு. என். டென்னிஸ்:* இப்படிப்பட்ட திட்டம் ஏதேனும் தமிழ்நாட்டில் வேறு இடத்தில் இருக்கிறதா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* அது பற்றிய தகவல் இல்லை.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* பழனிக்கு அருகே கிடைக்கக் கூடிய இந்த மாலிப்டினைட் இருக்கிறதே இது இந்த யுத்தத்திற்கு தேவையான டாங்க்ஸ் போன்றவை வலிவாக இருப்பதற்காக உபயோகப்படுத்தப்படக்கூடிய ஒரு முக்கியமான மூலப்பொருளாக இருப்பதால்—இப்போது மத்திய சர்க்கார் இரண்டு மூன்று இடங்களில்தான் இதைச்செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் 36,000 டன்னுக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதைச் சுற்றியிருக்கக்கூடிய வேறு பகுதிகளையும் சேர்த்து அவர்கள் ஆராய்ச்சி நடத்துவதற்கும் அதற்கான உதவியை தமிழக அரசாங்கம் செய்வதோடு மாத்திரமல்லாமல் மத்திய அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இந்தப் புவியியல் ஆராய்ச்சியை நாமே செய்யலாம். இங்கும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

THIRU M. A. LATHEEF : Two years back the Geological Survey of Central Government conducted a survey in and around Javvadu hills. The report of the Geological Survey would have been sent to Central Government? Has that report been forwarded to this Government?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* இது மதுரை மாவட்டம் பழனியைப் பற்றிய கேள்வி.

* 203 *வினா—திரு. சு. துரைசாமி :* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது என்று ஐ.நா. சபைக்குழு மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) ஆம்.

(இ) ஐக்கியநாடு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கனிப்பொருள் வளர்ச்சித்திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் நடத்திய ஆய்வின் பயனாக திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள கவுதி மலையிலும், மற்றும் அதன் அருகிலுள்ள மலைகளிலும் சுமார் 14 கோடி டன் இரும்புத்தாது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இரும்புத்தாது சுமார் 40 சதவிகிதம் இரும்புச் சத்து கொண்டதாக உள்ளது. இவ்விரும்புத் தாதின் உபயோகத்தன்மையையும் அதை வெட்டியெடுக்கும் சாத்தியக்கூறுகளையும் ஆராயும்படி ஐக்கியநாட்டு வளர்ச்சித் திட்டத்தை மத்திய அரசு வாயிலாக கேட்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that construction has already started? The survey has been done for the whole area and plans have already been drawn ? I think beginning work of construction is going on. May I know what is the stage at which the matter stands and what steps have been taken by this Government?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசின் கவனத்திற்கு வந்துதான் அதுபற்றி அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எந்தவிதமான பதிலும் வரவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தீவுத் திடலில் கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக கடிதம் எழுதியது மாத்திரமல்லாமல் நேரிலும் சந்தித்து மத்திய அரசில் பொறுப்புள்ளவர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை நிச்சயமாக நிறுத்திவிடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஹண்டே அவர்கள் சொல்கிற தகவல் புதிதாக இருக்கிறது. மறுபடியும் அதை வைத்துக் கொண்டு அது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொன்ன பிறகு வேறு கேள்விகளுக்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

### *Mineral Deposits*

* 202 *Q.*—THIRU N. DENNIS :
THIRU P. MALAICHAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Molybdenite has been founded near Palani in large quantities;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken to market the product?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம். பழனிக்கு அருகில் கரடிக்குட்டம் என்னுமிடத்தில் மாலிப்டினைட் என்னும் கனிப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாலிப்டினைட் படிவம் உள்ள இப் பகுதியை இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தார் துளைக் கருவியின் மூலம் துளை போட்டு தீவிர ஆய்வு செய்து வருகின்றனர். இவ்விடத்தில் ஏறத்தாழ 36,000 டன், 0.1442% வீதம் மாலிப்டைனைட் தாது 60 மீட்டர் ஆழத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விரிவான ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது.

(உ) இக் கனிப் பொருள் எப்படி பயன்படுத்தப்படும் என்பது பற்றிய முடிவு தற்போது கூற இயலாது.



**திரு. என். டென்னிஸ்:** இப்படிப்பட்ட திட்டம் ஏதேனும் தமிழ்நாட்டில் வேறு இடத்தில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது பற்றிய தகவல் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பழனிக்கு அருகே கிடைக்கக் கூடிய இந்த மாலிப்டினைட் இருக்கிறதே இது இந்த யுத்தத்திற்கு தேவையான டாங்க்ஸ் போன்றவை வலிவாக இருப்பதற்காக உபயோகப்படுத்தப்படக்கூடிய ஒரு முக்கியமான மூலப்பொருளாக இருப்பதால்—இப்போது மத்திய சர்க்கார் இரண்டு மூன்று இடங்களில்தான் இதைச்செய்து கொண்டிருக்கிறார்கள். அதில் 36,000 டன்னுக்கு அதிகமாகக் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இதைச் சுற்றியிருக்கக்கூடிய வேறு பகுதிகளையும் சேர்த்து அவர்கள் ஆராய்ச்சி நடத்துவதற்கும் அதற்கான உதவியை தமிழக அரசாங்கம் செய்வதோடு மாத்திரமல்லாமல் மத்திய அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தப் புவியியல் ஆராய்ச்சியை நாமே செய்யலாம். இங்கும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

THIRU M. A. LATHEEF : Two years back the Geological urvey of Central Government conducted a survey in and around avvadu hills. The report of the Geological Survey would have een sent to Central Government? Has that report been forwarded this Government?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மதுரை மாவட்டம் பழனியைப் பற்றிய கேள்வி.

* 203 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினைக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது என்று ஐ.நா. சபைக்குழு மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) ஐக்கியநாடு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கனிப்பொருள் வளர்ச்சித்திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் நடத்திய ஆய்வின் பயனாக திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள கவுதி மலையிலும், மற்றும் அதன் அருகிலுள்ள மலைகளிலும் சுமார் 14 கோடி டன் இரும்புத்தாது இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த இரும்புத்தாது சுமார் 40 சதவிகிதம் இரும்புச் சத்து கொண்டதாக உள்ளது. இவ்விரும்புத்தாதுவின் உபயோகத்தன்மையையும் அதை வெட்டியெடுக்கும் சாத்தியக்கூறுகளையும் ஆராயும்படி ஐக்கியநாட்டு வளர்ச்சித் திட்டத்தை மத்திய அரசு வாயிலாக கேட்கப்பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் மூலம் கேட்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான அறிக்கை எப்போது கிடைக்கும்? மேற்கொண்டு அதை விருத்தி செய்ய ஏதாவது திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது நமக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 14 கோடி டன் இரும்புத் தாது கிடைக்கும். சுமார் 40 சத விகிதம் எப்இ கன்டென்ட்ஸ் இருக்கலாம். கஞ்ச மலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மலையில் இரும்புத் தாதுவை வெட்டி எடுப்பது சுலபமாக முடியும் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. ஜப்பானிய நிபுணர்களும் இந்த இடத்தை வந்து பார்வையிட்டு பெல்லட்டைஸேஷன் ப்ளான்ட் போடுவதற்கு நல்ல சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடத்திலும் அறிக்கை பெறுமாறு கேட்டிருக்கிறோம்.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர் பகுதியில், மாணிக்கவல்லி மலையில் இரும்பு இருப்பதாக ஆராயப்பட்டு அறிவித்திருக்கிறார்கள். மற்றப் பகுதிகளில் இருக்கிறதா என்று ஆராயப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்தப் பகுதியில், எங்கெங்கே அந்த மலைத்தொடர் இருக்கிறதோ, அங்கேயெல்லாம் ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் கிடைக்கிற இரும்பு, கஞ்ச மலை இரும்பை விட நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே, கவுதி மலை இரும்புக்கு முன் உரிமை அளித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கஞ்சமலை இரும்புத் தாது பற்றி ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் இரும்பு வெட்டி எடுப்பது சுலபமாகவும், செலவு குறைவாகவும் இருக்கும் என்று கருதப்படுகிறது. அதற்குவேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** ஐ.நா. சபைக்குழு எந்தெந்த மாவட்டத்தில் இரும்புத்தாது இருக்கிறது என்று கண்டுபிடித்து அறிவித்து இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாடு முழுவதும் ஏரியல் சர்வே செய்து இருக்கிறார்கள். எங்கெங்கே கிடைக்கிறது என்பதற்கு தனிக்கேள்வி போடவும்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே. திருவண்ணாமலைக்கருகே இருக்கும் கவுதி மலையில் கிடைக்கும் இரும்பை வெட்டி எடுத்து, அதை நடத்துவதற்கு விலைக்குக் கொடுக்கும்படி தனியார் யாராவது கேட்டார்களா? என்ன விலைக்குக் கேட்டார்கள்? அதை அவர்களுக்குக் கொடுக்காமல், அரசாங்கமே எடுத்து நடத்துமா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விலைக்குக் கேட்கவில்லை. பெல்லட்டைஸேஷன் செய்யலாமா என்று கேட்டார்கள். தனியாருக்குக் கொடுக்க அரசுக்கு இஷ்டம் இல்லை.

**திரு. ஆ. கு சுப்பையா :** சார், கஞ்ச மலை என்று பெயர் அடிபடுகிறதே, அதை மாற்றி கருணை மலை என்று பெயர் வைக்க அரசு ஆலோசனை செய்யுமா ?

(பதில் இல்லை)

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைப் பகுதியில் மிகப் பெரிய அளவில் இரும்பு கிடைக்கும் என்று தெரிந்து, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அந்தப் பணிகள் மேற்கொள்வதற்கு முன்னாலே, நம்முடைய அரசாங்கம் அதற்கு எவ்வளவு செலவாகும், அந்தத் தொழிற்சாலை அமைக்க எவ்வளவு செலவாகும் என்று இப்போது பிளான் போட்டு, அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த மலையில் தொடர்ந்து வேலை நடைபெற்று வருகிறது. அதை எப்படிப் பயன்படுத்தலாம். ஒரு மினி ஸ்டீல் மில் வைக்கலாமா அல்லது பெல்லட்டைஸேஷன் பிளாண்ட் வைக்கலாமா என்று அறிக்கை கேட்டு இருக்கிறோம். அந்த அறிக்கை வந்தவுடன் முடிவு எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், ஆராய்ச்சிகள் மூலம் பல இடங்களில் இரும்புத் தாது கண்டுபிடிக்கப்படுகிறபோது, முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கஞ்ச மலை இரும்புக்கு முன் உரிமை மறுக்கப்படமாட்டாது என்பதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பாரா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இனிமேல் உத்தரவாதம் தேவையில்லை. ஏற்கெனவே அந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு வேலை தொடங்குகிற நிலைமையில் இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : My previous supplementary has got absolute relevancy to this question in the light of the content of the main question. May I know from the Hon. Minister whether the report of the geological survey conducted by the Central Government has been forwarded to this Government and if so, in the light of the report received, whether the Government proposes to act accordingly?

**மாண்புமிகு திரு. செ .மாதவன் :** நான் ஏற்கெனவே சொல்லியது போல், தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தரலாம். ஜவ்வாது மலை பற்றிய விவரங்கள் கைவசம் இல்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே. வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கும் இரும்புக்கனியைப் பற்றிய ஆராய்ச்சி நடத்திய பிறகு அதை நம் மாநில திட்டக்குழு பரிசீலனை செய்ய வேண்டுமா அல்லது அதை சர்க்காரே எடுத்து நடத்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரும்பைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தின் கொள்கை. மாநில அரசாங்கம் அதை ஏற்று நடத்தவேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், அப்படி சர்க்காரே ஏற்று நடத்துவதற்கு பல காரணங்களாலே காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால், ஒரு தனியாரை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டு, பிறகு அதை தேசியமயம் ஆக்கிவிடலாம் அல்லவா? ஆகவே, அதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அம்மையார் அவர்கள் தனியாருக்காக வாதாடுவதைப் பார்த்து, பின்னாலே இருக்கிற அவர் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் தலையில் அடித்துக்கொள்கிறார்கள். நேற்றுதான் தனியார் ஏற்று நடத்தக்கூடாது என்பதற்காக வாதிட்டார்கள்: அந்தக் கருத்து ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தனியாருக்காக யாரும் வாதாடவில்லை. 25-வது அரசியல் அமைப்புச்சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு ஓரே நாளில் எதையும் தேசிய மயம் ஆக்கிவிடலாமே, ஏன் இதைச் செய்யக்கூடாது என்றுதான் கேட்டேன். ஆகவே, இதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியாரிடம் கொடுத்து விட்டதற்குப் பிறகு தேசியமயம் ஆக்கலாம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தேசியமயமாக்கப்போகிறோம் பிறகு என்று அறிவித்து விட்டு. நீங்கள் யாராவது வருகிறீர்களா என்று கேட்டால், எந்த தனியாரும் வரமாட்டார்கள்.

*204 *Q*.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Geological survey of Hosur and Denkanikota taluks in Dharmapuri has been completed; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) ஆம். 1953-56, 1958-63 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் இந்திய புவியியல் ஆய்வுத் துறையினர் ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்களில் முறையான கனிப்பொருள் ஆய்வு நடத்தினர். இந்திய புவியியல் ஆய்வுத்துறையினர் நடத்திய ஆய்வில் மேற்குறிப்பிட்ட வட்டங்களில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கனிப்பொருள் எதுவும் காணப்படவில்லை. டோலிரைட், பார்பிரிட்டிக் சைனைட் என்ற இருவகைக் கற்களும் நல்ல மெருகெடுத்துக் கொள்ளும் தன்மையுடையதால், அழகுபடுத்தும் கற்களாக உபயோகப்படுத்துவதற்காக சில இடங்களில் வெட்டியெடுக்கப் படுகின்றன.





Thiru K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Industries whether that survey report has been sent to the Government? May I also request the Hon. Minister to give us a copy of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதி அனுப்பினால் அந்த அறிக்கை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யலாம்.

### நகராட்சிப் பகுதிகளில் ஊர்தி நீதிமன்றங்கள்

* 205 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில், நடமாடும் நீதிமன்றங்களை இயக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமி திரு. செ. மாதவன் :** கோயம்புத்தூரில் சிறப்பு போக்குவரத்து நடமாடும் நீதிமன்றம் ஒன்றை அமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. ஏனைய நகராட்சிகளை பொறுத்தவரையில் அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, தற்போது நடமாடும் நீதிமன்றங்கள் தமிழகத்தில் எங்கெங்கே இருக்கிறது என்பதனையும் எங்கெங்கே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதனையும், இந்த நடமாடும் நீதிமன்றங்கள் எத்தகைய அடிப்படையின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்கெங்கே அதிகமான வழக்குகள் வருகின்றனவோ அந்தத் தன்மைகளை ஆராய்ந்து, உயர்நீதி மன்றத்தின் சிபார்சின் பேரில் அமைக்கப்படுகிறது. இப்போது சென்னையில் இருக்கிறது. மதுரை நகரத்தில் ஒன்று வைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்த நடமாடும் நீதிமன்றங்களுக்கு ஸ்டாஃபிங் பேட்டர்ன் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு ஹானரரி நீதிபதிகளைப் போடுகிறோம். அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட கிழமைகளில் சென்று குறிப்பிட்ட வழக்குகளை விசாரிக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே. உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவு மதுரையில் அமைப்பதாக இருந்ததே, அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர் நீதிமன்றம் நடமாடும் நீதிமன்றம் அல்ல. இது நடமாடும் நீதிமன்றத்தைப் பற்றிய கேள்வி.

**திரு. எம். தேவராசன் :** நடமாடும் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எத்தகைய அதிகாரகங்கள்—பர்ஸ்ட் கிளாஸ் பவர்ஸா. செகண்டு கிளாஸ் பவர்ஸா. தேர்ட். கிளாஸ் பவர்ஸா—கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த நீதிமன்றங்களுக்கு குறிப்பாக டிராபிக் ரூல்ஸ் பற்றித்தான் கவனிக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது அப்போதைக்கப்போது பரிசீலிக் கப்பட்டு, அதிகமான அதிகாரங்கள் தேவை என்றால் மாற்றி அமைக்கலாம்.

**திரு. ப. முத்துசாமி:** தலைவரவர்களே, நடமாடும் நீதிபதிகளாக நியமனம் பெற எத்தகைய தகுதி தேவை என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெரும்பாலும் சமுதாயத்திலே நல்ல உயர்ந்த நிலையில் உள்ளவர்கள், மக்களாலே மதிக்கப்படு பவர்கள், ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவர்கள், ஏற்கெனவே அந்தத் துறையில் அனுபவம் பெற்றவர்கள் என்று பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் நியமனம் செய்யப்படுகி றார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்த நடமாடும் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் செய்யப்படுவதற்கு குறைந்த அளவு பி. ஏ. பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்றாவது ஒரு புதிய உத்தரவை இந்த அரசாங்கம் பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படிப்பட்டவர்கள் எல்லா இடங்களிலும் கிடைப்பது இல்லை. வருகின்ற மனுக்களிலே அப்படிப்பட்டவர்கள் இருந்தால், அவர்களுக்கு முன்உரிமை கொடுக்கப்படுகிறது.

THIRU M. A. LATHEEF : May I know what are the penal powers conferred upon these Honorary Presidency Magistrates employed in the Mobile Courts and whether they get any pecuniary benefits from the Government by way of allowance ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெகூனியரி பெனிபிட்ஸ் எதுவும் கிடையாது. மொபைல் கோர்ட்டில் நீதிபதிகளாக இருப்பவர்களுக்கு டிராபிக் ரூல்ஸ் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் தான் அளித்து இருக்கிறோம். மற்றபடி, பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ், ஸ்பெஷல் கிளாஸ் என்று ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, சென்னையிலுள்ள இந்த நடமாடும் நீதிமன்றங்கள் உடனடியாக வழக்குகளை பைசல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று அறிகிறேன். என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். ஒரு நாள் பஸ்ஸிலே செல்கிறபோது 50-60 பிரயாணிகள் கொண்ட பஸ்ஸை



நிறுத்தி வைத்துவிட்டு, அந்த வழக்கை பைசல் செய்வதில் உடனடி யாக நடவடிக்கை எடுக்காமல் அதிக நேரம் காக்கவைத்து விட்டார்கள். இதனால் பிரயாணிகளுக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டது. இவற்றைத் தடுக்கும் வகையில். அந்த பஸ்ஸினுடைய கண்டக்டர் டிரைவரை மாத்திரம் நிற்கவைத்து விட்டு அந்த பஸ்ஸை போகச் சொன்னால் நல்லது என்று கருதுகிறேன். அரசு அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பஸ்களுடைய கண்டக்டர், டிரைவர்களை நிற்க வைத்து விட்டால் பஸ்ஸும் நிற்கவேண்டியது தான் இருந்தாலும் இதுபோன்ற குற்றங்கள் போக்குவரத்து அதிகமாக உள்ள நகரங்களில் ஏற்படுவது சகஜம்தான். இருந்த போதிலும், வழக்குகளை விரைவாகவும், வேகமாகவும் முடிவு செய்ய ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

## நாராயணக்காவேரி கால்வாயில் அணை

*** 206 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், நாராயணக்காவேரி கால்வாய்க்கு அணைக்கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், மேற்படி திட்டம் எப்போது செயல்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ & (இ).** இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்தில் நாராயணக் காவேரி கால்வாய்களைச் சீரமைக்க ரூ. 10.25 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் விரிவான ஒரு திட்டத்திற்கு 1963-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மூன்று பிரிவுகளில் வேலைகள் முடிக்கப் பட்டுவிட்டன. மற்றுமிரு பிரிவுகளில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அணைக்கட்டு, தலைமதகுகள் ஆகியவற்றின் கட்டு மான வேலை எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

**திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைசாமி :** தலைவர் அவர்களே, நாராணயக்காவேரி சம்பந்தமாக டெண்டர் விட்டும், இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது இந்தச் சுணக்கத் திற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அநேகமாக இந்தத் திட்டம் சம்பந்தமான வேலைகள் முடிவுறும் நிலையில் இருக்கிறது. அணைக்கட்டு வேலையைப் பொறுத்தவரையில், ரூ. 6 லட்சம் அளவில் டெண்டர் அழைத்து, முடிவு எடுக்கப்பட்ட வுடன் துரிதமாக வேலைகள் செய்யப்படும்.

**திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைசாமி :** தலைவர் அவர்களே, இந்த நாராயணக்காவேரியிலிருந்து பிரிவுக் கால் வாய்கள் மராமத்து செய்ய மதிப்பீட்டில் இடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 'இம்ப்ரூவ் மெண்ட்ஸ் டு டாங்க்ஸ்' என்ற வகையில் ரூ. 2,50,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதில் இவையெல்லாம் வரும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்தத் திட்டம் 63-லேயே அமைக்கப்பட்டும், இப்பொழுதுதான் டெண்டர் அழைத்து இருக்கிறார்கள். இராமநாதபுரம் பின்தங்கிய மாவட்டம் என்பதால் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இருந் தாலும், எட்டு வருஷக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது துரிமாக வேலைகளைச் செய்து, அந்த பின்தங்கிய மக்களுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இராமநாதபுரம் முன்னேற்றத்தில் உறுப்பினர் அக்கறை காட்டுவது பாராட்டத் தக்கது. காலதாமதத்திற்கு நாங்கள் அல்ல, ஏற்கனவே இருந்தவர்கள்தான் பொறுப்பாளிகள். நம்முடைய அரசு வந்தபிறகு துரிதமாக வேலைகள் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் இருக்கிறது.

## *Air Port near Tuticorin*

* 207 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to press the Union Government to locate an Air-Port near Tuticorin in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா .** (அ) & (இ) திருநெல்வேலி மாவட்டத்தில் விமானத் தளம் ஒன்றை அமைப்ப தற்கான அவசியத்தை இவ்வரசு முன்னரே மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளது. மேலும், தூத்துக்குடிக்கு விமானப்போக்கு வரத்துக்கான குறைந்த அளவு போக்குவரத்து வாய்ப்புக்கு இவ்வரசு உத்தரவாதமும் அளித்துள்ளது. ஆனால், திட்டத்தின்கீழ் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையினால் இத்திட்டத்தை இன்னும் சிறிது காலம்வரை எடுத்துக் கொள்வதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்துள்ளது ஆயினும், இத்திட்டத்தை பரிசீலிப்பதற்குத் தேவையான ஆய்வுகள் (Survey) மத்திய உள்நாட்டு விமானத்துறை இயக்குநராலும், இந்திய வான்வழி நிறுவனத் தாலும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே. கன்னியாகுமரியில் ஒரு ஏர் போர்ட் அமைக்க மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இப்பொழுது இல்லை. வற்புறுத்திய திட்டம் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருநெல்வேலி, தூத்துக்குடி பற்றி இருக்கவேண்டும் துணைக் கேள்விகள்.

**திரு. எம். தேவராசன் :** ஒரு இடத்தில் விமானத்தளம் அமைக்க தேவைகள் என்னென்ன? உதகையில் அப்படிப்பட்ட தேவைகள் இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தேவைகளைப் பற்றி எனக்குத் தெரியாது. ஊட்டிபற்றிய பிரச்சினை இப்பொழுது இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, யுத்த காலங்களில் வட நாட்டு விமானத் தளங்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே, தென்னகத்துக்குத் தளங்களைப் பயன்படுத்துகிறார்கள். தூத்துக்குடி விமான தளத்திற்கு இப்பொழுது மத்திய சர்க்கார் தயக்கம் தெரிவிக்காது. ஆகவே, அதை மீண்டும் வற்புறுத்த நம் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தப் போக்கு வரத்து விமானத் தளம் அமைக்க பல தடவைகள், 1967, 68. 70 ம் ஆண்டுகளில் பல தடவைகள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்தையும் மனத்தில் கொண்டு இன்னமும் வற்புறுத்தப்படும்.

Thiru K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware of the fact that air traffic is falling down and the estimated loss for 1972 as forecast by the Indian Airlines Corporation, is about Rs. 22 crores?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரம் என்னிடத்தில் கிடையாது.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே போர்க் காலத்தில் தமிழ் நாட்டில் கட்டப்பட்ட எந்த எந்த விமானத் தளங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன? அப்படிப்பட்ட விமானத்தளங்களையாவது பயன்படுத்த மத்திய சர்க்காரை நம் சர்க்கார் அணுகி வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எத்தனை விமானத் தளங்கள் என்பதுபற்றிய விவரம் இல்லை. குறிப்பிட்ட அளவுக்கு பயணிகள் இருந்தால்தான் தளத்தை அமைக்க முடியும் என்று சொல்கிறார்கள். தூத்துக்குடியைப் பொறுத்த வரையில் அப்படிச் சொன்னார்கள். ஆனால், பயணிகள் பற்றி மினிமம் காரண்டி நம்முடைய அரசு தெரிவித்திருக்கிறது இருந்தும் அனுமதி கிடைக்கவில்லை. ஏற்கனவே கட்டிய விமானத் தளங்கள் எத்தனை என்று விவரம் இல்லை.

[1971 டிசம்பர் 9

**திரு. இரா. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, தற்சமயம் தூத்துக்குடிப் பகுதியில், தூத்துக்குடியிலிருந்து 15 மைல் தூரத்தில் அமைக்க இருக்கிறது இந்த விமானத் தளம். ஆனால் தூத்துக்குடித் துறைமுகத்திற்குத் தென்புறத்தில் நிலம் நிறைய இருக்கிறது. அந்த இடத்தில் மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அங்கே விமானத்தளம் அமைப்பது தூத்துக்குடிக்குச் செல்வதற்கு வசதியாகவும், திருநெல்வேலிக்குச் செல்ல வசதியாகவும் இடைப்பட்ட ஒரு இடத்தில் இருக்கின்ற வாகைகுளம் என்ற இடத்தில் விமானத் தளத்தை அமைக்க முடிவு கட்டி, மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் வற்புறுத்தி எழுதியிருக்கிறது. அவர்கள் இணக்கம் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். மேலும் மத்திய சர்க்காருக்கு மாநில அரசு எழுதி வற்புறுத்தும்.

## Colachel Port

* 208—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the steps taken by the Government to improve the Colachel Port ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** குளச்சல் துறைமுகத்திற்கு கடற்கரைச்சாலை ஒன்று அமைக்க ரூபாய் 53,000-ல் மதிப்பீடு ஒன்றை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக அபிவிருத்திக்கான கமிட்டி, குளச்சல் துறைமுகத்தைப் பார்வையிட்டார்களா? அவர்கள் ஏதாவது அறிக்கை சமர்ப்பித்தார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு கமிட்டி இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியில், மணவாளக்குறிச்சியிலிருந்து மத்திய சர்க்காரால் மணல் கம்பெனி ஒன்று நடத்தப்பட்டு, ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு அந்த மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் பொருள்களை அங்கிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டுபோய் அனுப்ப வேண்டியதாக இருப்பதால் பல சிரமங்கள் இருக்கின்றன. மணவாளக்குறிச்சியிலே ரூ. 20 கோடி செலவில் பெரிய கம்பெனி அமைத்து செயல்பட இருக்கிறார்கள். ஆகவே. குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த 'இலுமனைட்' என்ற மணலை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு வசதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.



1971 டிசம்பர் 9]

## வால்பாறை கூட்டுறவு பண்டகசாலை

*209 வினா.—**திரு. இ. ராமசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கூட்டுறவுப் பண்டகசாலை கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளாரா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) பண்டகசாலையின் நிர்வாகத்தில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டதால் அதன் செயற்குழு கலைக்கப்பட்டது.

**திரு. இ. ராமசாமி :** தலைவர் அவர்களே, நிர்வாக போர்டில் ஒழுங்கீனங்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன ? அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஒழுங்கீனங்களுடைய பட்டியல் எல்லாவற்றையும் என்றால் இப்பொழுது சொல்வதற்கு இயலாது. ஒன்றைமட்டும் குறிப்பாகச் சொல்லலாம். பண்டகசாலையில் இருக்கவேண்டிய பொருள்களைச் சரிபார்த்தபோது. ரூ 3,04,000 அளவில் பொருள்கள் காணப்படவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பண்டகசாலை ஒழுங்கீனம் காரணமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்கிறீர்களே, மு.ப. 10.00
ஒழுங்கீனத்திற்குக் காரணமானவர்கள் யார் ? அவர்களுடைய பெயர்களை தெரிவித்தார்களா, நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அமைச்சர் தெரிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இது கண்டுபிடிக்கப்பட்டது 1970-ல். ஆனால் காரணமானவர்கள், அதற்கு முன்பு இருந்தவர்கள். அவர்கள் பெயர்களை இங்கே கொண்டு வரவில்லை. தெரிவிப்பதும் அவ்வளவு நல்லது அல்ல. தகுந்த நடவடிக்கை எடுக்கின்றோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நடவடிக்கை எப்பொழுது எடுப்பீர்கள்? முடிப்பதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்பதை அமைச்சர் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முதல் நடவடிக்கை எடுத்தாகிவிட்டது. அதை அரசு அதிகாரி மேற்கொண்டிருக்கிறார். இனிமேல் இவர்களை disqualify பண்ணவேண்டும். அவர்கள் மீது பிராசிக்யூஷன் செய்யவும் முடியும். இவ்விவரங்களை வெளிப்படுத்துவது நல்லது அல்ல. வேலை நடந்து கொண்டிருக்கின்றது.

## *Dry Crop Development Scheme*

*149 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals to open Special Farm Projects for dry crop development in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.

(இ) ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. மற்றொரு ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மை வளர்ச்சித் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை வட்டத்தில் நடப்பாண்டில் செயலுக்குக் கொண்டுவர கருதப்பட்டுள்ளது. திட்டத்தை அமுலாக்கும் அரசின் உத்திரவு அண்மையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலும் புன்செய் நிலங்களில் பழைய கிணறுகள் இருக்கின்றன. தற்போது வெட்டப்பட்ட கிணறுகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் புன்செய் சாகுபடி செய்யாமல் அநேக இடங்கள் சும்மாவே கிடக்கின்றன எந்தெந்த பகுதிகளில் இப்படி பயிர் செய்யாமல் இருக்கின்றன என்பதை அரசினர் ஆராய்ந்து ஊக்குவிக்கும் வகையில் ஏதாவது நல்ல வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கோவில்பட்டி வட்டத்தில் திட்டங்குளம், சிதம்பரபுரம், இளம்புவனம், விஜயாபுரி ஆகிய நான்கு கிராமங்களில் இத்திட்டப்பணி மேற்கொள்ளப் படுகிறது. உடனடியாக இத்திட்டத்தின் கீழ் 2,000 ஏஏக்கர் பரப்பு நிலங்கள் கொண்டுவரப்பட்டன. 1973-74-ம் ஆண்டுக்குள், படிப் படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் 8,000 ஏக்கர் பரப்புக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**திரு ஏ. ஆர். சுப்பையா:** இந்தத் திட்டத்துக்கு மானியம் உண்டு என்றால் என்ன தொகை கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, பெருமளவில் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையேதுமில்லையென்ற போதிலும் நிலத்திலுள்ள மேல் மண் அடித்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் பொருட்டும், கரைகள், திட்டுகள் அரித்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் பொருட்டும் நிலச்சரிவில் குறுக்காகச் சிறு கரைகளை அமைப்பது தேவையாக இருக்கலாம். திட்டப் பணிகளுக்காகும் செலவு இதனால் பயன் பெறுபவர்களால் சரிகட்டப்படும். இத் தொகையில் 75% கடனாகவும் 25% உதவித் தொகையாகவும் அளிக்கப்படும்.





**திரு. மா. வே. கரிவேங்கடம்:** தலைவரவர்களே. இந்தத் திட்டத்தின்படி எல்லா பொருள்களும் இலவசமாகவோ அல்லது பாதி மானியத் தொகையாகவோ வழங்கப்படவேண்டும். இந்தத் திட்டத்தை தருமபுரி மாவட்டத்திற்கு விஸ்தரிக்க முயல்வீர்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் சிறப்பாகத் தேர்ந்தெடுத்த பகுதிகளில் புன்செய் வேளாண்மைப் பற்றி ஆராய்ச்சி நடத்தும். மண்வளம் மற்றும் ஈரப் பாதுகாப்பு முறைகள் பற்றிய ஆராய்ச்சிகளின் விளைவுகளைச் செயல்முறையில் கடைபிடித்தல், வரட்சி நிலையிலும் பாதிக்கப்படாத குறுகிய காலப் பயிர்களைப் பயிர் செய்தல், உரிய நேரத்தில் பயிர் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகியவை போன்றவை செய்தல். இப்போது தருமபுரி மாவட்டத்தில் தொடங்க நோக்கம் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இத்திட்டத்தினால் ஏற்படும் பலன் என்ன? இந்த திட்டத்திற்கு மத்திய அரசு உதவி எப்படி இருக்கிறது? மாநில சர்க்கார் எவ்வளவு செலவிடுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்த திட்டத்துக்கு 2.000 ஏக்கர்களில் செயல்படுத்தச் செலவாகும் மொத்தம் 19.89 லட்சம் ரூபாயில் 11.57 லட்சத்தை நீண்ட காலத் தவணைக் கடனாகவும் (மாநில அரசு திட்டமிட்ட ரூ. 13.75 லட்சத்திற்கு மாறாக) ரூ. 8.32 லட்சத்தை உதவி மான்யத் தொகையாகவும் (மாநில அரசு திட்டமிட்ட ரூ. 9.85 லட்சத்திற்கு மாறாக) அளிக்க மத்திய அரசு தற்பொழுது நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கான உத்திரவு 12—8—1971 நாளிட்ட வேளாண்மைத் துறை அரசாணை எண் 2284-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் புன்செய் மேம்பாட்டுத் திட்டம் இரண்டு மாவட்டங்களில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, புன்செய் நிலங்களில் பயிரிடுவோர்கள் மேம்படுத்திய வேளாண்மை நடைமுறைகளையும் பின்பற்ற உதவும் நோக்கத்துடன், மும்முரப் புன்செய் வேளாண்மைத் திட்டம் ஒன்று மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, புன்செய் வேளாண்மை அதிகம் நடைபெறும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தச் சிறப்பு பணியை செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்பொழுது இல்லை.

[1971 டிசம்பர் 9

## புது வகை நெல்

*150 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் இந்த ஆண்டு புதிய ரக நெல் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில். அந்த நெல் ஒரு ஏக்கருக்கு என்ன விளைச்சல் தருகின்றது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) கருணை, காஞ்சி, காவேரி என்ற நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ' கருணை ' என்ற நெல், ஐ.ஆர். 8 என்ற நெல்லுடன் ஏ.டி.டி. 27 என்ற நெல்லை மகரந்தச் சேர்க்கையினால் ஒட்டுச் சேர்த்து கண்டுபிடிக்கப்பட்டு 1970-ல் வெளியிடப்பட்டது. இந்த நெல்லின் வயது 105 முதல் 110 நாட்கள் ஆகும். இந்த நெல்லை மழை, காற்று பாதிக்காது.

(இ) இந்நெல் ஏக்கருக்கு சராசரி 2,300 கிலோகிராம் மகசூலைக் கொடுக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் வேளாண்மைத் துறை அமைச்சர் பதில் அளிக்கையில் கருணை, காஞ்சி. சுஜாதா என்று எல்லாம் பெரர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட பெயர் சூட்டு விழாக்கள் யார் செய்கிறார்கள்? தனித் தமிழ்மொழிப் பெயர் வைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சுஜாதா என்று நான் சொல்லவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கோவை நெல் ஆராய்ச்சிக் கழகத்திலே கண்டுபிடிக்கப்பட்ட நெல்களிலே ஆண்டுக்கு குறைவாக போடுகின்ற மானாவாரிப் பயிர் என்று கண்டு பிடிக்கப்பட்டதா? அப்படிக் கண்டு பிடிக்க சாத்தியக் கூறுகள் அந்த ஆராய்ச்சிக் கழக மூலம் தென்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி ஒன்றுமில்லை. தனியாகக் கண்டுபிடித்தால் விவரம் தருகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : A number of paddy seeds have been evolved by Government. Most of them are intended for warmer areas. But cooler areas like Hosur do not have any new paddy variety which can withstand the cold climate there So the agriculturists feel there is very great need for suitable paddy seeds suitable for cooler areas like Hosur. May I know whether Government have evolved suitable paddy for such areas and if not will they take steps to evolve a suitable seed for such cooler areas ?

**மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுது அப்படி ஒன்றும் இல்லை.



1971 டிசம்பர் 9]

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு கருணை என்ற நெல் காற்று. மழை இவைகள் எல்லாம் தாங்கக்கூடிய நெல் என்று சொல்லப்படுகிறது. ஆகவே எதையும் தாங்கக் கூடிய அந்த நெல்லை தமிழகம் பூராவும் பரப்புவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இது மழை காலத்தில் பெரும்பாலும் பாதிக்கப்படுகின்ற இடங்களிலே இப்போது நடப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் பயிர் பாதுகாப்புக்காக இது கண்டுபிடிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் ஏக்கருக்கு 3½ முதல் 4 டன் வரை, இதுவரை எந்த நெல்லும் உற்பத்திச் செய்ய முடியாத அளவுக்கு கண்டு முதல் கண்டிருக்கிறது என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** கருணை, காவேரி, காஞ்சி என்ற புதிய நெல்கள், மற்ற நெல்களைவிட தரத்திலே எந்த வகையிலே உயர்ந்தது ? மற்ற நெல்களை விட விளைச்சலிலே எந்த அளவிலே அதிகமாகிறது என்பதை அரசு அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இந்த கருணை நெல் வயது 105 முதல் 110 நாட்கள் காலப் பயிராகும். அது ஏறத்தாழ 3½ டன் முதல் 4 டன் உற்பத்தி ஆகிறது. மேலும் அந்த நெல் நல்ல தரத்தையும் உடையதுமாக்கும். அதுபோலவே காஞ்சி 110 முதல் 115 நாட்களுக்குள் விளைகின்றது. தஞ்சை மாவட்டத்திற்குத் தனியாக குறுவை சாகுபடிக்கு உரியது. இந்த நெல் ஜூன் செப்டம்பரில் பயிரிட பயன்படுத்தப்படுகிறது. அதனுடைய தரம் உயர்ந்த தரம் ஆகும். அதுபோலவே காவேரி நெல் கூட ஜூன் செப்டம்பரில் 105-110 என்கிற குறுகிய கால பயிர். இந்நெல் நடுத்தர சன்ன நெல் வகையைச் சேர்ந்ததாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** இப்போது புதிய ரக நெல் ரகங்களைக் கண்டு பிடிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்திடம் ஏதாவது சிறப்புத் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பாராட்டி பரிசு வழங்குவதற்காக இப்போது அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, இதுபோல புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் நெல் ரகங்கள் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேல் எதிர்பார்க்கும் நல்ல பயன் கிடைப்பதில்லை. இதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு ரகத்தைப் பயன்படுத்துவதில்லை. மூன்றாண்டு ஆனவுடன் அதைக் கட்டாயமாக மாற்றித்தான் ஆகவேண்டும். அந்த வகையில் தான் அரசு செயல்பட்டு வருகிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்தப் புதியரக நெல்லை இராமநாதபுரம் மாவட்டத்திலே புன்செய் நிலங்களிலே விதைப்பதாக இருந்தால், அதிகமாக வருமானம் கிடைக்கும் என்று தெரிய வந்திருக்கிறது. அப்படிப்பட்டப் புன்செய் நிலங்களில் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : புன்செய் நிலங்களில் பயிரிடுவது பற்றி இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை.

## பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்தக் கடன்கள்

*210 வினா.—திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பினருக்கு தொழில் நடத்துவதற்கான கடன்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டோருக்கு இப்போது வியாபாரம் செய்வதற்குக் கடன்கொடுப்பதுபோல் பொருளாதாரத்தில் மிகவும் சீர்குலைந்த நிலையிலே இருப்பவர்களுக்கு—பிற்பட்டோருக்கும் கடன் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 250 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் வரை சிறு தொழில் நடத்த கடன் கொடுப்பதற்கு இப்போது ஏற்பாடு செய்ய குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற நெருக்கடியில் உடனடியாகச் செய்ய வாய்ப்பில்லை என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார். பாக்வேர்டு கிளாஸ் கமிஷன் பிற்பட்ட மக்களுக்கு கடன் கொடுப்பது நல்லதென்று பரிந்துரை செய்திருக்கிறதே. அதன் அடிப்படையில் உடனடியாக இந்த அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலாவது நிதி ஒதுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட குழுவின் சிபாரிசின்படி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி செய்கிறவகையில் கடன் கொடுக்கலாம் என்றிருக்கிறது. ஆகையால் பிற்படுத்தப்பட்ட மக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி, கடன் உதவி பெறலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## Rubber plantations

*211 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to improve rubber plantations in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தற்போது இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, வன நிலங்களையொட்டி ரப்பர் தோட்டங்கள் அமைக்கப்படுவதன் மூலம் அதிகமான வருவாய் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே அந்த அடிப்படையில் புதிய ரப்பர் தோட்டங்களை அமைக்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இரப்பர் தோட்டம் ஏற்படுத்துவதானால் அதற்கு இரண்டு, மூன்று பருவமுறைகள் ஒத்துவரவேண்டும். ஒன்று அந்த இடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 800 அடி உயரத்தில் இருக்கவேண்டும். இரண்டாவது 70 முதல் 100 அங்குலம் வரை மழை இருக்கவேண்டும். மூன்றாவது 90 டிகிரி பாரன்ஹிட் தட்ப வெட்ப நிலை இருக்கவேண்டும். இம்மாதிரி சூழ்நிலையில் இருக்கும் ஒரே இடம் கன்னியாகுமரி மாவட்டம்தான். இப்போது அங்கு 5.000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிடப்படுகிறது. இன்னும் 5,000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிடும் திட்டம் உள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ரப்பர் தோட்டம் அமைக்கும் திட்டம் இப்போது இல்லையென்றாலும்கூட, கன்னியாகுமரி ஜில்லாவில் இப்போது இருக்கின்ற ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்றத் தொழிலாளர்களுக்கு, தனியார் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களைவிட ஒரு ரூபாய் குறைவாகக் கூலி கொடுக்கப்படுகிறது. காட்டுவேலையில் ஈடுபட்டுள்ளத் தொழிலாளர்களின் பணி நிரந்தரமாக்கப்படுவதாகத் தெரியவில்லை. இந்தக் குறைகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இப்போது தான் ஒரு வாரத்திற்கு முன்பு தொழிலாளர்களின் ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ரப்பர் தோட்டங்கள் இப்போது தமிழ் நாட்டிலே எந்த எந்த இடங்களில் இருக்கின்றன ? கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர வேறு எந்தெந்த மாவட்டங்களில் ரப்பர் தோட்டம் அமைக்கும் வாய்ப்பு இருக்கிறது ? சுமார் 4,000 அடிக்கு மேல் உயரமுள்ள ஏலகிரி மலையும் ஜவ்வாது மலையும் ரப்பர் தோட்டம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்:** நான் ஏற்கெனவே சொன்னேன். ஆயிரம் அடிக்குமேல் உயரமான இடங்களில் ரப்பர் தோட்டம் அமைப்பதற்கான வாய்ப்பு இல்லையென்று. ஆகவே, தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய ஒரே இடம் கன்னியாகுமரி மாவட்டம் தான் என்று ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்கள் தகவல் தெரிந்துகொள்வதற்காகத் துணைக் கேள்விகள் போடலாம். ஆனால் அமைச்சர்களை சோதனை செய்வதற்காக துணைக்கேள்விகள் போடுவதுபோல் இருக்கக்கூடாது.

**திரு. சோ. அழகர்சாமி:** அமைச்சரவர்கள் கூறும்போது ஒரு வாரத்திற்கு முன்புதான் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இப்போது ஒரு பெண் தொழிலாளருக்கு என்ன கூலி, ஒரு ஆண் தொழிலாளருக்கு என்ன கூலி என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும்தான் ரப்பர் தோட்டம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய அந்தமான் தீவிலும் . . . (பலத்த சிரிப்பு) கேள்வி முழுவதும் சொல்வதற்கு முன்னாலேயே இப்படி எல்லோரும் என்னைக் கிண்டல் செய்தால் நான் எப்படி கேள்வி போடமுடியும்? நான் சொல்ல வந்தது, பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து ரப்பர் தொழிலில் பயிற்சிப் பெற்றவர்கள் ஏராளமான பேர் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களையும் ரப்பர் தொழிலில் ஈடு படுத்துவதற்காக தமிழ் நாட்டிற்கு அருகாமையிலுள்ள அந்தமான் தீவிலும் ரப்பர் தோட்டம் அமைத்து கொடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடுத்தமுறை அம்மையார் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று, அங்கே போய் இதற்கு ஆவன செய்தால் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் ஏன் அங்கே போய் அதைச் செய்யவேண்டும்? இலங்கை, பர்மாவிலிருந்து வரும் மக்கள் மீது உங்களுக்கு அக்கரை இருக்கிறது. அப்படி அக்கரை இருக்கும்போது நீங்களே அதைச் செய்யலாமே.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அம்மையார் இந்த ஆலோசனை கூறும் முன்பே அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்யும் வகையில். அண்மையில் நான் அந்தமான் சென்றிருந்த போது இதுபற்றி அறிந்து வந்திருக்கிறேன். அங்கே ரப்பர் தோட்டம் அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது, நிறைய பேரையும் குடியமர்த்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,





THIRU K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister has stated that for rubber plantation areas having a height of about 1,000 feet are required. But in Hosur and Danganikotta taluks the height is about 3,000 feet. May I know from the Hon. Minister whether those areas will be selected for rubber plantation?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ரப்பர் தோட்டம் அமைப்பதற்கு வசதியாக இருக்குமானால் யோசனை செய்யலாம்.

**திரு. இ. ராமசாமி :** தலைவரவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ரப்பர் மரங்கள் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தது. ஆகையால் இப்பொழுது அந்தப் பகுதியில் ரப்பர் தோட்டம் அமைக்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் ஏற்கனவே சொன்னேன், மரங்கள் நல்ல வளர்ச்சி அடைந்தால் போதாது நல்ல பயன்தரக்கூடியதாகவும் லாபம் கிடைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடம் இப்போது கன்னியா குமரி மாவட்டம் ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மதுரையைச் சுற்றிலும் நகரப்பேருந்துகள்

**212 வினா.*—**திரு பி. எஸ். மணியன்:** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரைச் சுற்றிலும் 20 மைல் தூரத்திற்கு நகரப் பேருந்துகள் ( City buses ) விடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** மதுரை நகரம் மாநகரமாக ஆக்கப் பட்டு மாநகரத்தின் எல்லை விரிவுபடுத்தப்பட்டிருப்பதனால் அன்றாடம் ஆயிரக்கணக்கானவர்கள் மதுரைக்கு வந்துவிட்டுத் திரும்பிச் செல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஆகவே பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் மதுரையில் இருந்து 20 மைல் சுற்றளவுக்கு எல்லா இடங்களுக்கும் நகர் பஸ்களைவிட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ்—ஒரு நகரத்தின் எல்லைக்குள் 15 மைல்களுக்குள்தான் நகர பஸ்கள் விட முடியும். ஆகவே, 20 மைல் சுற்றளவுக்கு நகர பேருந்துகளைவிடுவது சட்டத்திற்கு மாறுபட்டதாகும். 15 மைல்களுக்குள் விடுவதுதான் சாத்தியம். அந்த வகையில் இப்போதே டவுன் பஸ்கள் விடப்படுகின்றன.

**திரு. த. சோலையா:** பதினைந்து மைல்களுக்குள் விடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் காரணமாக இன்றைய தினம் பஸ்கள் திரிபுவனம் முகப்பைத் தொட்டுவிட்டு—பஸ்

ஸ்டாண்டு வரைகூடப் போவதில்லை—போகின்றன. விசேஷ சலுகை காட்டியாவது இந்த பஸ்கள் டவுன் பஸ் ஸ்டாண்டு வரை போய்வர ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** நகரத்தைத் தொட்டு விட்டுப் போனாலே போதும். மற்ற வசதிகள் இருக்கலாம். இதற்காகச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று சொல்வது தமிழகத்தின் வேறுபல எல்லைகளுக்குள் பல்வேறு சங்கடங்களை உண்டாக்கும் என்பதனால் இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** மதுரையில் நடக்கும் டி.வி.எஸ். டவுன் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில்தான் நடப்பதாகச் சொல்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்குகிறபோது இந்த டவுன் சர்வீசை கடைசியாக எடுத்துக்கொள்ள தீர்மானித்து—அதுவரை நடந்து கொண்டிருக்க வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நாட்டுடமை ஆக்குவது என்பது வெறும் லாபத்தைக் கருதியல்ல. மக்களின் நன்மையைக் கருதித்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்றாலும் கூட மக்களின் நன்மையைக் கருதித்தான் நாட்டுமைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** தேசியமயமாக்கப்பட்டவுடன் சென்னை நகரத்திற்குள் தனியார் பஸ்களை எப்படி வரமுடியாது செய்திருக்கிறோமோ அதுபோல மதுரைக்குள் தனியார் பஸ்கள் வாராதவாறு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அமைய இருக்கிற பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் அதைப்பற்றி விரிவான முறையில் யோசித்து என்ன முடிவு செய்கிறார்களோ அதன் படிதான் நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருக்கிறது.

**பழனியில் முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்**

* 213 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்தாண்டு பழனி தேவஸ்தான போர்டு பழனியில் உள்ள முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்து வந்ததை நிறுத்திவிடுமாறு முடிவு செய்யப்பட்டது என்பது உண்மையா ?

(இ) அந்தத் தொழிலாளர்களிடம் இருந்து அரசுக்கு மனு ஏதேனும் வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் என்ன முடிவு செய்யப் பட்டது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.



**திரு. கே. என். குமாரசாமி :** துணைத் தலைவர் அவர்களே, பழனியில் தேவஸ்தானத்திற்கும் முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் 1968- ஆம் ஆண்டில் தகராறு ஏற்பட்டு, அதன்பேரில் ஒரு உடன்பாடு ஏற்பட்டு அவர்களுக்குப் போனஸ் கொடுப்பது என்பது ஒத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி அந்த ஆண்டு 1¼ லட்சம் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல இரண்டாண்டு போனஸ் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு போனஸ் கொடுக்க முடியாது என்கிறார்களாம். அவர்களுக்கு போனஸ் கொடுக்கும் கொள்கையை மீண்டும் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 1379-ஆம் பசலியில் அங்கே கிடைத்த முடிகளின் மூலம் வருமானம் 6 லட்சத்து முப்பதாயிரத்து அறுநூறு ரூபாய். முடி திருத்தும் தொழிலாளர்கள் 436 பேர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு 1¼ லட்சம் அன்பளிப்பாகத் தரப்பட்டது. ஆனால் 1380 ஆம் பசலியில் வருமானம் இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் தான் எதிர்பார்க்கப்படுகிறது. காரணம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் முதல் ஆண்டில் முடிகளை வாங்கியது போல இந்த ஆண்டு வாங்கவில்லை. அதன் காரணத்தினால் இந்த ஆண்டு நபர் ஒன்றுக்கு 50 ரூபாய் அன்பளிப்பாகத் தரலாம் என்பதாக அறங்காவலர் குழுவினர் முடிவு செய்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் சார்பில் வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்த முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க முடியாததற்குக் காரணம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் முடிகளை ஆக்ஷனில் எடுத்துக்கொள்ளவில்லை, சென்ற ஆண்டு ஆக்ஷன் எடுத்துக்கொண்டவைகளே தேங்கி இருக்கிறது என்பதுதான். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, 1379 ஆம் பசலியில் வாங்கிய முடிகளை சரியான முறையில் வெளிநாட்டு ஏற்றுமதி செய்ய முடியாத காரணத்தினால் தேங்கிக்கிடக்கிறது என்பது உண்மை. அதன் காரணமாகத்தான் இந்தப் பசலியில் அவர்கள் முடி வாங்க முன்வரவில்லை. அதன்காரணமாக பொது ஏலத்தில் விடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. பொது ஏலத்தில் விட்டதன் மூலம் இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாய் தான் வந்தது. ஆகவே, ஒரு தொழிலாளருக்கு 50 ரூபாய் என்ற அளவில் அன்பளிப்பு வழங்க அறங்காவலர் குழுவினர் முடிவு செய்திருக்கிறார்கள்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பழனியில் உள்ள முடிதிருத்தகம் தனியாருக்கு காண்டிராக்டுக்கு விடப்பட்டிருக்கிறதே, அதை வாங்கி தேவஸ்தானமே நடத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* 1379 ஆம் பசலிக்குப் பிறகு யாரும் அந்த சரியான தொகைக்குக் கோரவில்லை. இந்த ஆண்டு முதல் அதை தேவஸ்தானமே எடுத்து, தொழிலாளர்களுக்கு ஒரு தொகை கொடுக்க ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார்கள். அரசு அதை இன்னும் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* முடிதிருத்துவோர்களுக்கு தலைக்கு ரூ. 50 கொடுப்பதாகச் சொன்னார்கள். அது கொடுக்கப் பட்டுவிட்டதா ? கொடுக்கப்படாமல் இருந்தால் எப்போது கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* போனஸ் இன்னும் கொடுக்கப்படவில்லை. மதுரை தொழிற் கோர்ட்டில் வழக்கு நடந்துகொண்டிருக்கிறது.

*திரு. கே. என். குமாரசாமி :* உதவி சபாநாயகர் அவர்களே, முன்பு முடி திருத்துவோர்களுக்கே அந்த முடிகள் சொந்தமானதாக இருந்தது. வெளி நாடுகளில் கிராக்கி அதிகமானவுடன் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அதை வாங்க முன்வந்தது. தற்போது அதன்மீது கிடைத்த வருமானம் முழுவதையுமே தொழிலாளர்களுக்குப் போனசாகக் கொடுக்க அரசு முடிவு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

*திரு. எம். சுரேந்திரன் :* அந்தத் தொழிலாளர்கள் முழுவதும் பாடுபட்டு அதனால் கிடைக்கின்ற முடிகளை—அவர்களுக்கே ஒரு விலையில் விற்றுவிட்டால் அதை அவர்கள் லாபத்தில் விற்றுக் கொள்வார்களே, ஏலத்தில் பிறருக்குக் கொடுப்பதைவிட அவர்களுக்கே கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்குச் சரியான கூலியைக் கொடுத்துக்கொண்டிருகிறோம், ஆகவே இப்படிச் செய்வதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

*திரு. ரா. ரா. முனுசாமி :* முடிதிருத்தும் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதாகச் சொல்லப்பட்டதே, அது சர்க்கார் கையில் இருந்து கொடுக்கப்படுகிறதா ? அல்லது கோவில் பண்டில் இருந்து தரப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* முடியை விற்பனை செய்வதன் மூலம் வருகிற வருவாயைக்கொண்டு தரப்படுகிறது.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* சென்ற ஆண்டு ஆறுலட்சமாக இருந்த வருமானம் இந்த ஆண்டு 2 லட்சமாகக் குறைந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே. முடி கொடுக்கிற





பக்தர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதா ? அப்படிக் குறைந்திருந்தால் நமது அறநிலையத்துறையின் மூலம், வருபவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க கவனம் செலுத்துவார்களா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* பக்தர்களின் எண்ணிக்கை குறையவில்லை. பெருகித்தான் இருக்கிறது. அம்மையார் அவர்களும் மேலும் பக்தர்களின் எண்ணிக்கை பெருக பிரார்த்தனை செய்து கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட முடிகளின் தேவை குறைந்திருப்பதால் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அவற்றை வாங்க இந்த ஆண்டு முன்வரவில்லை.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் :* தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் இந்தத் துறையிலே தலையிட்ட பிறகு தான் இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனிப் பட்டவர்கள் மனிதமுடி ஏற்றுமதி செய்யும்போது மனித முடிக்கு ஒருசமயம் அயல்நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தது. அந்தக் கிராக்கியைக் கண்டு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டது, இப்பொழுது மனித முடி பெருமளவில் தேங்கி, அங்குள்ள தொழிலாளர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, அங்குள்ள மனித முடி விற்றாலும், விற்காவிட்டாலும் அங்குள்ள தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டுமென்கிற ஏற்பாட்டைச் செய்ய அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* தலைவர் அவர்களே, மனித முடியை அவர்கள் எடுத்துக்கொள்ளாத காரணத்தால் பெருமளவில் தேங்கிக் கிடக்கிறது. இதை ஏலத்தில் விட வேண்டுமென்று கருதி, கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்தபோது, மிகக் குறை மு.ப. 10-30
வான அளவிற்கு ஏலம் போனது; சரியான அளவில் ஏலம் கோராததால் தேங்கிக் கிடக்கிறது. இதற்கிடையில் அங்குள்ள தொழிலாளிகளில் ஒரு பகுதியினர் தாங்களே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு சங்கம் அமைத்திருப்பதாகவும் அரசாங்கத்திற்கு ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்த மனுவைப் பரிசீலித்து வருகிறது.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

THIRU K. SUPPU : On a point of personal explanation, Sir. நான் நேற்றைய தினம் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம். . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN : If any hon. Member wants to give any explanation to this House, even personal explanation, he should have it in writing and send it to the Hon. Speaker first. After approval only, the hon. Member may give his explanation, and especially for what happened yesterday,

THIRU K. SUPPU : With the permission of the Deputy Speaker, I would like to make a personal explanation.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* எதைப்பற்றி நீங்கள் கேட்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்கள் முதலில் ' எதைப்பற்றி பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் ' என்று எழுத்து மூலமாக எழுதிக் கொடுங்கள். அதை நான் பார்த்து. அதற்கு அனுமதி அளித்தபிறகு நீங்கள் விளக்கம் கேட்கலாம்.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Not even that. The whole explanation should be in writing and after approval of Speaker only the hon. Member may explain it to the House.

## (2) கவன ஈர்ப்பு

### சென்னையில் காலரா நோயும் தடுப்பு நடவடிக்கைகளும்.

DR. H. V. HANDE : Sir, I call the attention of the Hon. Minister for Public Health, to a matter of urgent public importance, namely, the incidence of a number of cases of cholera in the City of Madras and the need to take immediate and effective steps to undertake mass inoculation.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலரா நோயால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை அண்மையில் திடீரென உயர்ந்தது. மாநகரின் பற்பல பகுதிகளில் இந்நோய் பரவியிருந்தது. வடகிழக்குப் பருவ மழையின் தொடக்க நாட்களில் பெய்த பெரு மழைக்குப் பின்னர் சென்னை மாநகரில் தாழ்வாக அமைந்துள்ள பகுதிகளில் நீர் தேங்கியது. நீர் வழங்கு முதன்மைக் குழாய்களில் தரை மட்டத்துக்குக்கீழ் குழிப் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள குழாய்கள் வாயிலாகவும், கசிவுகள் வாயிலாகவும் குடிநீரின் தூய்மை சில இடங்களில் கெட்டுவிட்டது. இவை காலரா நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை திடீரென உயர்ந்ததற்கு ஓரளவு காரணமாகும்.

காலரா நோய்த் தடுப்பிற்காக திறமையான முறையில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உடனடியாகச் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டன. தொற்று நோய்க் கிருமிகளால் பாதிக்கப் பட்ட இடங்களில் தொற்றுநோய்க் கிருமிகளை ஒழிக்கும் மருந்து தெளித்தல், வழங்கப்படும் குடிநீரில் கூடுதலாக குளோரின் கலத்தல், கிணறுகளில் குளோரின் கலத்தல், ஈ, கொசுக்களை ஒழிக்கும் மருந்துகளை மும்முரமாகத் தெளிக்கும் நடவடிக்கைகள் எடுத்தல், காலரா தடுப்பு ஊசிகளை குறிப்பாக, காலரா தோன்றிப் பரவக்கூடிய நிலை உள்ள இடங்களில் அதிக அளவில் குத்துதல், ஆகிய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாதிக்கப்பட்ட பகுதிகளின், பல இடங்களில், நீர்வழங்கு முதன்மை குழாய்களில் தொற்றுநோய்க் கிருமி நீக்கம் செய்யும் பொருட்டு, வட்டார நீர்வழங்கு முதன்மைக் குழாய்களுக்குள் உயர்ந்த அழுத்த நிலையில், திரவ குளோரின் அல்லது சலவைத் தூள் கரைசல்—பிளிச்சிங் பவுடர் சொலூஷன்—செலுத்தப் பட்டது. சென்னை மாநகரில் உள்ள எல்லா முதன்மைக் குழாய் களும் செம்மையாகக் கழுவப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டன.





குளோரின் கலக்கும் அளவு, நீரேற்று நிலையங்களிலும், நீர்ப் பெருக்கு நிலையங்களிலும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுக் கழிப்பிடங்களில் பொருத்தப்பட்டுள்ள எல்லா நீர்த் தொட்டிகளிலும், குழாய்கள் பொருத்தப்பட்ட குழிவிடங்களிலும் செம்மையான முறையில் குளோரின் கலக்கப்பட்டு வருகின்றது.

நீர்வழங்கு முதன்மைக் குழாய்களுக்கு நீர் அளிக்கின்ற பொதுக் கிணறுகளிலும் வாரம் இருமுறை பெருமளவில் குளோரின் கலக்கப்படுகிறது.

துப்புரவுப்பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது; குப்பைக் கூளங்களைக் கண்ட இடங்களில் கொட்டுவது தடுக்கப் பட்டிருக்கிறது. குப்பை கொட்டும் இடங்கள் அனைத்திலும் மருந்து தெளித்து, ஈ, கொசுக்களை ஒழிக்கும் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

தற்போதுள்ள துப்புரவு ஆய்வாளர்கள் 50 பேருக்குக் கூடுதலாக, காலரா நோய்த் தடுப்பு மும்முர நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக அதிகப்படியாகத் துப்புரவு ஆய்வாளர்கள் 70 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்குக் குறைந்தது நூறு பேருக்காவது காலரா தடுப்பு ஊசி போட வேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

1971-ல் அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு வாரத்திலும் நவம்பர் மாதத்தின் முதல் மூன்று வாரங்களிலும் காலராத் தடுப்பு ஊசிகள் பெருமளவில் போடப்பட்டன.

அக்டோபர் மாதம் 2-ம் தேதியோடு முடிவடைகிற வாரத்தில் போடப்பட்ட காலராத் தடுப்பு ஊசிகளின் எண்ணிக்கை 7,644 ஆகும். 9—10—1971-ம் தேதியோடு முடிவடைகிற வாரத்தில் 5,293 என்ற அளவில் காலராத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 16—10—1971-ல் முடிவடைகிற வாரத்தில் 6,747 தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 23—10—1971-ம் தேதியோடு முடிவடைகிற வாரத்தில் 7,052 பேருக்கு காலராத் தடுப்பு ஊசிகள் போடப் பட்டன. இப்படியாகத் தடுப்பு ஊசிகள் நவம்பர் மூன்றும் வார இறுதி வரை போடப்பட்டு வந்து, அதுவரை மொத்தம் 80,991 என்ற அளவில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன.

1971-ல் அக்டோபரில் ஒவ்வொரு வாரத்திலும், நவம்பர் முதல் மூன்று வாரங்களிலும் 2—10—1971 வரையில் 39 பேர் காலராவால் பாதிக்கப்பட்டனர். 9—10—1971 வரை 16 பேர், 16—10—1971 வரை 50 பேர், 23—10—1971 வரை 40 பேர், 30—10—1971 வரை 168 பேர், நவம்பர் மாதத்தில் 6—11—1971-ம் தேதியோடு 233 பேரும், 13—11—1971-ம் தேதியோடு 93 பேரும், 20—11—1971-ம் தேதியோடு 61 பேரும் இந்த நோயால் பாதிக்கப்பட்டனர். இந்த நோயால்

பாதிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவாரத்திலும் ஒருவர் வீதம் இறந்திருக்கின்றனர். இரண்டு வாரங்களில்தான் கூடுதலான எண்ணிக்கை இருக்கிறது. 30—10—1971-ம் தேதியோடு முடிவடைகின்ற கடைசிவாரத்தில் காலராவினால் பாதிக்கப்பட்டவர்கள் 168 பேர். இறந்தவர்கள் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற விகிதத்தில்தான் இருக்கின்றனர்.

6—11—1971 நாளுடன் முடிவுற்ற வாரத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 233 ஆக இருந்தது, 20—11—1971 நாளுடன் முடிவுற்ற வாரத்தில் 61 ஆகப் பெரிதும் குறைந்துள்ளது. சென்னை மாநகராட்சி தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து நோய்த் தடுப்பு விஷயத்தில் பெரிதும் கவனம் செலுத்தி நிலைமையைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. வேண்டிய உடனடி நடவடிக்கைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டன.

DR. H. V. HANDE : May I know whether it is possible for the Hon. Minister to give instructions to the departments to find out the source of cholera? Supposing a patient goes to the hospital and if it is discovered it is a positive case, they leave the patient. They must find out from which particular place he comes, from where he takes food and find out whether the place from which he comes is cholera infected and they must find out the source from which cholera dissipates. Will the Hon. Minister give strict instructions that filling grounds are properly sprayed with bleaching powder (one spray lasts for only a few hours) regularly? Especially in T. Nagar near Arcot Road, they are going to start some work, and water is going to be supplied from there to south Madras. The whole area should be cleaned of the present dirt there. Will the Government take preventive measures in that area with experts?

THE HON. THIRU K. ANBAZHAGAN : What the hon. Member has suggested is the look-out of the authorities concerned at all times. It is not only at times when Cholera infection is taking place. It is only in certain places where the locality is not in good sanitary condition and also there is the peoples' habits. Most of them are poor people and they are accustomed to taking food on the way side and they also do not take food in closed vessels; at times, these things happen. Necessary remedial measures will be taken by the authorities concerned.

DR. H. V. HANDE : I want to put one more question.

THIRU V. M. ABDUL JABBAR : Mr. Hande, one minute please (laughter).

DR. H. V. HANDE : Let me put my question first. If it is a positive case, they are to be admitted into the hospital. But it takes time for the hospital authorities to collect the patients. Information goes to the I.D. Hospital. But there are only two or three vans and they are not functioning properly. Will it be possible to issue instructions through the department to the I.D. Hospital to collect the patients immediately. Even if it is not a positive case, if it is one of vomitting, such case also needs hospitalisation and the hospital authorities must collect such patients also and give them treatment.





THE HON. THIRU K. ANBAZHAGAN : As a doctor, I do not expect Mr. Hande to put such a question. Because even when there are instructions, in the actual implementation, everywhere there is some difficulty. Everywhere there is some delay. Even if there is a van, either the driver or the engine either one of these things becomes sick or under repair. This season is more or less over and therefore, the problem has to be tackled only in the next season.

### 3. தன்னிலை விளக்கம்.

### திரு. க. சுப்பு அவர்கள் அளித்த தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது சட்டப் பேரவை விதிகள்—81-வது விதியின் கீழ் உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிப்பார்கள். அவர்கள் தன்னிலை விளக்கம் அளிக்கும்பொழுது விவாதத்திற்குரிய பிரச்னை எதையும் எழுப்பக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று நான் கொடுத்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பதிலளித்துப் பேசும்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் அவர்களுடைய குலத்தைப்பற்றிக் குறைத்துப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே நான் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அடையக்கூடிய செய்தியாக இருந்தது. நான் மாத்திரமல்ல, நான் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் யாருமே எந்தக் குலத்தையும் குறைத்துப் பேசுவது கிடையாது. அப்படி நான் பேசியதாக முதல் அமைச்சர் அவர்களுக்கு யாரோ தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். நான் எந்த அளவுக்கு வருத்தப்படுகிறேனோ அந்த அளவுக்கு அவர்களுக்கும் வருத்தம் இருந்திருக்கும் என்பதை உணர்கிறேன். நாங்கள் ஜாதியைப்பற்றிப் பேசுவதில்லை. எங்களைப் பொறுத்த வரையில் மனித குலம் ஒரே குலம்தான், அந்தக் குலத்திலேதான் முதல்வர் அவர்களையும் சேர்த்து வைத்திருக்கிறோமே தவிர வேறு எந்தத் தவறான கருத்தையும் நாங்கள் வைத்திருக்கவில்லை. எனவே எந்தவிதமான தவறான கருத்தையும் அவர்கள் வைத்திருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியின் சமுதாயக் கொள்கையைப்பற்றி திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்குப் புறம்பாக நடந்துகொள்வதில்லை என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிப் பேசக்கூடாது என்பதை நான் அவர்கள் விளக்கத்தின் மூலமாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்டமுன்வடிவு**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை நீக்கல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே. இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. தனியார் அலுவல்கள்

(i ) சட்டமுன்வடிவுகள்

**(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர் களுக்குப் பணிக்கொடை வழங்குதல் சட்டமுன்வடிவு**

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணிக் கொடை வழங்குதல் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**(ஆ) 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்டமுன்வடிவு.**

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. அனுமதி வழங்கப்பட்டது.



**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(இ) 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு.**

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்டமுன் வடிவைப் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

**(ஈ) 1971-ம் ஆண்டு வேலைவாய்ப்பகங்கள் (படிகள் வழங்குதல்) சட்டமுன்வடிவு.**

THIRU N. DENNIS : Sir, I move for leave to introduce the Employment Exchanges (Payment of Allowances) Bill, 1971.

The motion was put and carried and leave was granted.

THIRU N. DENNIS : Sir, I introduce the Employment Exchanges (Payment of Allowances) Bill, 1971.

MR. DEPUTY SPEAKER : The Employment Exchange (Payment of Allowances) Bill, 1971 is introduced.

**(உ) 1971-ம் ஆண்டு கிறித்துவ வழியுரிமை (ரத்து) சட்ட முன்வடிவு.**

THIRU J. JAMES : Sir, I move for leave to introduce the Christian Succession (Repeal) Bill, 1971.

The motion was put and carried and leave was granted.

THIRU J. JAMES : Sir, I introduce the Christian Succession (Repeal) Bill, 1971.

MR. DEPUTY SPEAKER : The Christian Succession (Repeal) Bill, 1971 is introduced.

ii தனியார் தனித் தீர்மானங்கள்

**(அ) மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடங்கள் நடத்துதல்.**

THIRU N. DENNIS : Sir, I move the following resolution standing in my name—

" This House recommends to the Government to introduce lessons on the evils of drink in schools and colleges ".

THIRU J. JAMES : I second the resolution.

[1971 டிசம்பர் 9

* திரு. என் டென்னிஸ் : துணைத் தலைவர் அவர்களே, பண்டைக் காலந்தொட்டு ஒழுக்கத்திற்கும், நன்னடத்தைக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து வந்த நாடாக நம்முடைய நாடு இருக்கிறது. இன்னும் ஒழுக்கத்திற்கு நம் நாட்டிலுள்ளவர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். மது அருந்துவது தீய பழக்கம் என்று நம்முடைய பெரியோர்கள் கண்டித்திருக்கிறார்கள். திருவள்ளுவர் போன்ற அறிஞர்கள் பல குறள்களை எழுதியிருக்கிறார்கள். மது அருந்துவது கெட்ட பழக்கம் என்பது மட்டும் அல்லாமல், பல கெட்ட பழக்கங்களையும் அது தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கிறது. காந்தியடிகள் இதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, மது அருந்துதல் களவு செய்யும் குற்றத்தையும், வேசித்தனத்தையும்விட மிகவும் கொடூரமானது என்று கூறினார்கள். ஏனெனில், இந்த இரண்டு குற்றங்களையும் தோற்றுவிக்கக்கூடியதாக மது அருந்துதல் இருக்கின்றது என்பதால், மேலும் பல குற்றங்களையும் தோற்றுவிக்கக் கூடிய காரணமாக அது இருக்கிறது. நமது நாட்டின் எதிர்காலப் பொறுப்பாளிகள், இளம் தலைமுறையினர் தரம் கொண்டவர்களாக வளர வேண்டியது நம்நாட்டின் எதிர்காலம் பத்திரமாக பாதுகாக்கப்படுவதற்கு அவசியமாக இருக்கிறது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும் அறிவுள்ளவர்களாகவும், தேக ஆரோக்கியமுள்ளவர்களாகவும் இருந்தால்தான் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அவர்களால் வழிவகை செய்ய முடியும்.

[திரு. நா. வீராசாமி—தலைமை]

கடந்த இருபத்திரண்டு ஆண்டுக்காலமாக மதுவிலக்குச் சட்டம் அமல் நடத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக மது அருந்துவது சட்டத்திற்குப் புறம்பானது என்று இளந்தலைமுறையினர் கருதிவந்தார்கள். இன்று மது அருந்துவதற்குச் சட்டம் இடம் கொடுத்து இருக்கிறது. மது அருந்துவது சட்டத்திற்கு எதிரானது அல்ல என்று இளந் தலைமுறையினர் கருதுவதற்கு இடமிருக்கிறது. மது அருந்துவது தீமையானது, தவறானது என்று இளைஞர்கள் உணர வேண்டும். இளந்தலைமுறையினர், மாணவர்களில் பலர் மது அருந்தும் பழக்கத்தைக் கடைப்பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை நல்வழிப்படுத்த நாம் கடமைபட்டு இருக்கிறோம். எவ்வாறு மது அருந்துவதிலிருந்து அவர்களை நல்வழிப்படுத்தலாம் என்பதைச் சிந்தித்து வழி வகுக்க வேண்டும். மது அருந்துபவர்கள் நிறைந்த நாடாக இருக்கிறது. பக்கத்தில் உள்ளவர் மது அருந்துகிறவர்களாக இருக்கிறார்கள். தாய்தந்தையர் மது அருந்துபவர்களாக இருக்கிறார்கள். சுற்றத்தைப் பார்க்கும்பொழுது மாணவர்களுக்கு மது அருந்தாமல் இருக்கக்கூடிய முன்மாதிரியைக் கற்றுக் கொள்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது. நேர்மாறாக ஹீரோ ஒர்ஷிப் செய்யக்கூடிய பழக்கமுள்ளவர்களாக இருக்கும் குழந்தைகள் மது அருந்தும் சுற்றத்தவர்களைப் பார்க்கும்



1971 டிசம்பர் 9] [திரு. என். டென்னிஸ்]

பொழுது, மது அருந்தும் தாய் தந்தையரைப் பார்க்கும் பொழுது, மது அருந்தும் பெரியவர்களைப் பார்க்கும்பொழுது சிறுவர்களும் அதைப்பின்பற்றும் ஒரு பழக்கம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடியதாக இருக்கிறது. எனவே அவர்கள் மது அருந்துவதை நிறுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் மதுவை அருந்துவதைப் பின்பற்றும் ஒரு சந்தர்ப்பமே இருக்கிறது.

இன்னும் பார்க்கப்போனால் மது அருந்துவதே கேடு என்பதை உணராத, கல்வியறிவு பெறாத பல தாய் தந்தையர் இருக்கிறார்கள். ஆகவே இளைஞர்கள், மாணாக்கர்கள், சுற்றத்தைப் பார்க்கும்பொழுது அவர்கள் மது அருந்துவதை நிறுத்த அவர்களுக்கு வழியில்லை என்பதை நாம் காண முடியும். எனவே மதுவின் தீமையினை கல்வியின் மூலம் பாடமாக ஆக்குவதன் மூலம், குடிக்கும் பழக்கமில்லாத ஆசிரியர்கள் அதைப்போதிப்பதன் மூலம் மாணவர்களின் வழியைத் திருப்பி, குடிப்பழக்கத்திலிருந்து மாற்ற முடியும்.

மது அருந்துவதன் தீமைகளை, கேடுகளை மாணவர்கள் உணர வேண்டும். மது அருந்துவதன் தீமைகளை உணர்ந்தால், தீமைகளை நினைத்தால் அதை அவர்கள் வெறுப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கும். அவ்விதம் பள்ளிகளில் பாடமாக ஆக்குவதன்மூலம் அவர்கள் மது அருந்துவது தவறு, தீமையானது என்று நினைக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதனால் மது அருந்துவதில் வெறுப்பு ஏற்படுகிறது. அதனால் மது அருந்துவதைக் கைவிட வழி பிறக்கும்.

கல்வியின் மூலம் மாணவர்கள் எதிர்கால வாழ்க்கையை உருவாக்குகிறார்கள். வெறும் கல்வியறிவு மட்டுமல்ல கல்வியின் நோக்கம். அவர்கள் தரம் கொண்ட மாணவர்களாக, எதிர்காலப் பொறுப்பாளிகளாக எல்லா வகைகளிலும் அறிவுபடைத்தவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அறிவில் மட்டுமல்ல, ஒழுக்கத்திலும் வளர வேண்டியது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் முக்கியம். மது அருந்துகின்ற தீய பழக்கம், பல தீய பழக்கங்களுக்குக் காரணமாக இருக்கிறது. மது அருந்துவதில் மாணவர்கள் பழகிவிட்டால் அவர்கள் அதைக் கைவிட முடியாதவர்களாக, தொடர்ந்து மதுவையே குடித்து அவர்கள் கெடுவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதனால் நம்நாட்டின் எதிர்காலம் மிகவும் இருள் அடைந்ததாகிவிடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகளை மாணவர்கள் உணர வேண்டும். அவர்களுக்கு அந்தத் தீமைகளை உணர்த்த வேண்டும். மாணவர்களுக்கு, அதனால் அவர்களுடைய உடல் நலத்தில் குறைவு ஏற்பட்டு தேக ஆரோக்கியம் குன்றிவிடும்

என்பதைச் சிந்திக்கவும், அதனால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும் என்பதை உணர்த்தவும் வேண்டும். பொருளாதார நிலைகளிலே பலவிதமான கஷ்டநஷ்டங்கள் மது அருந்துவதனால் ஏற்படுகிறது, அவர்கள் வாழ்க்கையில் பல கஷ்டங்களும் நேரிடும் என்பதை மாணவர்கள் சிந்திக்க வேண்டும், உணர வேண்டும். மது அருந்துவது சமூகத்திற்கு, சமுதாயத்திற்கு வெறுப்பானது என்பதாக அவர்கள் அறிய வேண்டும். சமுதாயத்திலுள்ளவர்கள் வெறுப்பார்கள், பரிகாசிப்பார்கள் என்பதைப் பொதுவாக மாணவர்கள் உணர்ந்தால் அதைக் கைவிட ஏதுவாக இருக்கும்.

இன்னும் மது அருந்துவது பலவிதமான தீய பழக்கங்களை உருவாக்கும் என்பதை உணர்ந்தால் மது அருந்துவதை கைவிட ஏதுவாக இருக்கும். மது அருந்துவது தெய்வத்திற்கு விரோதமானது, பாவம் என்பதை மாணவர்கள் உணர வேண்டும், சிந்திக்க வேண்டும். மது அருந்துவது தங்களுக்கும், இந்த நாட்டுக்கும் செய்யக்கூடிய துரோகம் என்பதை உணர்ந்தால் அதைக் கைவிட அவர்களுக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அதைக் கற்றுக்கொள்ள இந்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இன்று மதுவிலக்கு கைவிடப்பட்டிருக்கிறது. இந்த மதுவிலக்கு கைவிடப்பட்டதற்கு ஒரு காரணம், பொதுமக்களிடத்தில் இதற்கு ஆதரவு இல்லை என்பது காரணமாக இருக்கிறது. பல காரணங்களில், பொதுமக்கள் இந்த மதுவிலக்குச் சட்டத்தை மீறினார்கள் என்பதும் ஒரு காரணமாக இருந்தது. ஏன் அப்படி இதை மீறினார்கள் என்றால் மதுவினால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பொதுமக்கள் சரியாக உணரவில்லை. சரியாக உணர சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. சரியாக அதைப் படிக்கவில்லை என்பது தான் அதற்குக் காரணமாகயிருந்தது. சட்டத்தின்மூலம் நடந்து போன ஒரு காரியத்தை மாத்திரமே திருப்பிக் கொள்ள முடியும். வருங்காலக் காரியத்திற்கு பரிகாரம் காண சட்டம் இடம் கொடுக்காது. வருங்கால சந்ததியினருக்கு நிரந்தரமான பரிகாரமாக, வருங்கால சந்ததியினர் அந்தத் தீமையான செயலைப் பின்பற்றாமல் இருக்க, கல்விபோதனை மிகவும் அவசியம். சட்டத்தின் மூலமாக தற்காலிகமாக மாத்திரம்தான் ஒரு தடையை ஏற்படுத்த முடியும். ஆதலால் நிரந்தரமான பரிகாரம் காண, கல்விச்சாலைகளிலே, மது அருந்துவதன் தீமைகளை விளக்குவதை பாடமாக ஆக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இன்று மதுவிலக்குச் சட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் இருந்தால் மது அருந்துவது சட்டத்திற்கு விரோதமானது என்று மாணவர்கள் நினைப்பார்கள். ஆனால் இன்று பார்த்தால் சட்டத்திற்கு விரோதமானது என்று கருதாமல் இஷ்டம்போல் குடிக்க சந்தர்ப்பம் இருக்கிறது. அவர்கள் பக்கத்திலேயே மதுக்கடைகளும் இருக்கின்றன. ஆகவே,



மாணவர்கள், வருங்கால சந்ததியினர் மதுவின் தீமைகளை உணர கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் மது அருந்துவதன் தீமைகளை விளக்கி போதிக்கப்பட வேண்டியது அவசியம். மதுவின் தீமைகளைப் போதிக்க வேண்டிய இடம் கல்விச்சாலை. ஏனென்றால் வெளியிலே உள்ள மக்கள், பெரியவர்கள் அதிகமாகக் குடிப் பழக்கத்திலே பழகிவிட்டார்கள். ஆகவே கல்விச் சாலைகளில், மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகளை விளக்கினால்தான் வருங்கால மக்கள் குடிப்பழக்கம் இல்லாத மக்களாகி, அதைப் பின்பற்றி வருங்கால சந்ததியினருக்கு ஒரு நல்ல பழக்கத்தைக் கைக்கொள்ளக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும் என்பதை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மனித குலத்தை நேரடியாகப் பாதிக்கும் மதுவை அருந்துவதன் தீமைகளை கல்வியின் மூலமாக பாடமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் கொடுத்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் கூறலாம் என்று நான் முன்வருகிறேன்.

அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தின் உட்கருத்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மதுவின் தீமையைக் குறித்து பாடம் கற்றுக்கொடுக்க கட்டாயப்படுத்த வேண்டும் என்பது. தமிழகத்திலே ஒரு பழமொழி உண்டு, குடி குடியைக் கெடுக்கும் என்ற பழமொழி பரவலாக நம் நாட்டில் பேசப்படுகிறது. மதுவிலக்கைத் தளர்த்திய நேரத்திலும்கூட ஆளும் தரப்பினர் மது அருந்தலாகாது என்று எதிர்பிரச்சாரம் செய்ய ஒரு இயக்கத்தையே ஏற்படுத்தினார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். மதுவிலக்கை ரத்து செய்த நேரத்தில் மது மு.ப 11-00
அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகளையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. அந்த அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சாரத்தை முடுக்கிவிடும் வகையிலேதான் இந்தத் தீர்மானம் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் என்னென்ன, அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் என்னென்ன என்பதை எடுத்துக்காட்டக்கூடிய அளவில் பல பெரியோர்கள் பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் பாடப் புத்தகங்களாக கட்டாயமாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் புகுத்தினால் அங்கு கற்கின்ற இளம் உள்ளங்கள் மதுவின் தீமைகளை உணர்ந்து அதன் பேரிலே வெறுப்பு ஏற்படும் நிலை பிறக்கும். அதன் காரணமாக அவர்கள் பெரியவர்களான பிறகும் அவர்கள் மதுவின் தீமையை உணர்ந்த நிலையில் மதுவின் பக்கத்தில் செல்லாமல் இருக்கக்கூடிய நிலை பிறக்கும்.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1971 டிசம்பர் 9

பாடப் புத்தகங்களின் மூலமாக மதுவின் தீமையை உணர்த்துவதோடு கூட, மதுவினால் ஏற்படுகின்ற தீமைகள், நோய்கள், தன்னை மறந்து ஒருவன் செய்கிற அட்டகாசங்கள் ஆகியவற்றைத் திரைப்படங்கள் மூலம் போட்டுக் காண்பித்தால் மாணவர்கள் இன்னும் நன்றாக அதன் தீமையை உணர்ந்து கொள்ள முடியும். இப்போது மது அருந்துகிறவர்கள் செய்கிற அட்டகாசங்களைப் பற்றி நாம் பத்திரிக்கையில் படிக்கிறோம். எங்கள் ஊரில் இரண்டு பேர் மது அருந்திவிட்டு, ஒருவருக்கொருவர் தன்னை மறந்து பேசிக் கொள்ளுகிறார்கள். ஒருவர் கூறுகிறார் 'தாஜ்மகாலை விலைக்கு விற்கப் போகிறேன், இத்தனை கோடி ரூபாய் விலை கொடுப்பாயா' என்று. இன்னொருவர் அதை விலை பேசுகிறார். இதை எல்லாம் பார்த்து எள்ளி நகையாடுகின்ற நிலையை திரைப் படக் காட்சியில் காண்பிக்கலாம் இதற்காகத் தனிப் படம் கூட எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. கள்ளுக்கடைக்குப் பக்கத்தில் காமராவை வைத்துக் கொண்டு நின்றால், இந்தக் காட்சிகளை எல்லாம் படம் பிடிக்கலாம்.

இப்போது மதுபானக் கடைகளைத் திறந்திருக்கின்றவர்கள் நல்ல விளம்பரம் செய்கிறார்கள். கவர்ச்சியை உண்டு பண்ணுகிறார்கள். மதுவை அழகான குப்பிகளுடன் கூடிய பாட்டிலில் அழகாக அடைத்து விற்கிறார்கள். அதைப் பார்க்கும்போது கல்லூரி மாணவர்களுக்கும், இளஞ் சிறார்களுக்கும் அதை அருந்திப் பார்த்தால் என்ன என்ற 'டெம்ப்டேஷன்' ஏற்படும். இந்த நிலைமைகளைத் தடை செய்ய முன் வரவேண்டும். இதையெல்லாம் தடை செய்தால்தான் வருங்கால சந்ததியினர் மதுவை அருந்தாமலிருப்பதற்கான வழி ஏற்படும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பழங்காலத்திலிருந்தே மது அருந்துவதற்கு எதிர்ப்பு இந்த நாட்டிலே இருந்து வந்திருக்கிறது. அமெரிக்காவிலே கூட ஒரு சமயம் மது அருந்தக்கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அது தோல்வியடைந்து விட்டாலும் மது அருந்துவதால் தீமைகள் ஏற்படும் என்பதை எல்லா நாடுகளுமே உணர்ந்திருக்கின்றன என்பதை நாம் அறியலாம். அமெரிக்காவில் சிகரெட் விற்பனையாளர்கள் ஒரு பக்கம் சிகரட்டை விற்றுக் கொண்டு, மறு பக்கத்தில் சிகரெட் பிடிப்பதால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றியும் விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள் அந்த முறையிலே நம்முடைய நாட்டிலும் மது குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விளம்பரம் செய்ய வேண்டும்.

இப்போது தவறாக இன்னொரு கருத்தை நாட்டிலே உலவ விட்டிருக்கிறார்கள். மது அருந்துவதால் பல நோய்கள் அற்று விடும் என்று பல பெரியவர்களே மேடையிலே சொல்லுகிற நிலை இருக்கிறது. இதனால் பல நோய்கள் வராது என்று கூறுவது தவறான கருத்து. அனுபவம் பெற்ற டாக்டர்கள் மது அருந்து



1971 டிசம்பர் 9] [திரு. எ. சுவாமிதாஸ்]

வதால் பல நோய்கள் வருகின்றன என்றுதான் ஆராய்ச்சி செய்து கூறுகிறார்கள். குடிப் பழக்கத்தில் இறங்கிவிட்ட ஒருவனுக்கு பின்னால் ஏதாவது நோய் ஏற்பட்டால் எந்த மருந்தும் அவனுடைய உடம்பிலே வேலை செய்வதில்லை என்று கூறுகிறார்கள். ஊசி போட்டால் கூட ஊசி மருந்து உடலில் வேலை செய்யாது என்று கூறுகிறார்கள். இந்தக் கருத்துக்கள் எல்லாம் பாடப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டு, மதுவினால் ஏற்படும் தீமைகளை அவர்கள் உணரச் செய்யவேண்டும். இதைக் கட்டாயப் பாடமாக ஆக்கினால் வருங்காலத்தில் நல்ல ஒழுக்கமுடையவர்களை ஈன்றெடுத்த பெருமை தமிழகத்திற்கு ஏற்படும். அந்த வகையில் இந்தத் தீர்மானத்திற்கு அரசு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன், வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுவினுடைய தீமையைப் பற்றி மாணவர்கள், கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் அறிந்து மதுவை ஒதுக்கி மாண்புமிக்க வாழ்க்கைக்கு அடிப்படையினை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தினோடு இந்தத் தீர்மானம் இங்கு முன்மொழியப்பட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

மதுவே வேண்டாமென்று சொல்லக்கூடிய கட்சியைச் சார்ந்தவன் நான். மது இருந்தால்தானே மதுவினுடைய தீமையைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்கு. ஆகவே, மதுவே கூடாது, மதுவிலக்கு எப்போதும் இருக்க வேண்டுமென்று நாங்கள் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் இன்று மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ரத்து செய்யப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாணவர்களும், இளைஞர்களும் மதுவை அருந்தாமல் மாண்போடு வாழ்ந்திடல் வேண்டுமென்பதற்கு வழிவகைகளைக் காண வேண்டுமென்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் இப்போது இருக்கின்ற சூழ்நிலையிலே எச்சரிக்கையாகச் சொல்லி விடுகிறேன். மதுவிலக்கு வேண்டாமென்று சொன்னவர்கள் இன்று மதுவினுடைய தீமையைக் குறைப்பதற்காக, மதுவினுடைய தீமையிலிருந்து மாணவ சமுதாயத்தைக் காப்பதற்காக பாடங்களை நாம் நிர்ணயிக்க வேண்டுமென்று பேச வந்திருக்கிறார்களே என்று யாரும் நினைத்து விடக் கூடாது என்பதற்காகத்தான், நான் எச்சரிக்கையாக மீண்டும் ஒரு முறை வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

மதுவிலக்கு ரத்து செய்ததை நாம் ஆதரிக்கவில்லை. மது என்பதே நாட்டில் இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய வாதம். இந்த வாதத்தினுடைய ஏற்றத் தாழ்வுகள், அதனுடைய

தன்மைகள் பற்றி எல்லாம் நாம் இங்கே விரிவாக விவாதித்து இருக்கிறோம். அந்த விவாதத்திற்குப் பிறகு இன்று நாட்டிலே மது இருக்கிறது என்ற நிலைமை வந்திருக்கிறபோது குறைந்த பட்சம் மாணவர்களும், இளைஞர்களும் இந்தத் தீமையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்ற அக்கறை நிச்சயமாக நாட்டில் இருக்கும் நல்லோர்களுக்கெல்லாம் இருப்பதிலே வியப்பு ஒன்றும் இல்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை நான் தார்மிக அடிப்படையில் ஆதரிக்கிறேன். அதுவும் இங்கே சொல்லிக் கொள்கிறேன்—சென்ற முறை நாங்கள் மதுவிலக்கை எதிர்த்துப் பேசியபோது நம்முடைய ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் 'எங்களுக்குப் பின்னால் அவர்களும் வந்திருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். நான் இப்போது சொல்லுகிறேன். அந்தத் தீர்மானம் யாரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது இப்போது எங்களுக்கு உரிய பிரச்சினை அல்ல. இந்தத் தீர்மானத்தை யார் கொண்டு வந்திருந்தாலும் நாங்கள் ஆதரித்து இருப்போம். யாருடைய பின்னாலும் செல்லுவதற்கான பிரச்சினை இங்கே எழவில்லை. மதுவிலக்குப் பொறுத்த வரை நான் கூறிக் கொள்வேன்—இன்று சிலர் எதிர்க்கிறார்கள். அவர்களுடைய எதிர்ப்பு அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் நான் சார்ந்திருக்கிற கட்சியும், நான் சார்ந்திருக்கிற சமுதாயமும் இதுகுறித்து, மதுவிலக்கு வேண்டுமென்பதை இன்றல்ல 1400 ஆண்டுகளுக்கு முன்னமேயே செய்து வந்திருக்கிறது. அப்படிச் செய்து வந்திருக்கிற எங்கள் பாரம்பரியத்தின் அடிப்படையில்தான் இன்று மதுவிலக்கு வேண்டும் என்று சொல்கிறோம். நான் ஒரு முஸ்லீம் என்ற முறையில் மட்டுமல்ல, தமிழன் என்ற முறையிலும் கூட எனக்கு மிகுந்த பெருமை உண்டு. மதுவிலக்கு வேண்டும், மது அருந்தக் கூடாது என்று சொல்வது தமிழனின் பண்பாடு. தமிழன் வான்முறை, வாழ்க்கை வழி காட்டிய வள்ளுவனின் வான்முறை கள்ளுண்ணாமை என்ற தலைப்பு ஒன்றைக் கொடுத்து கள் உண்டால் நிச்சயமாக மனித வாழ்க்கையில் மாசு படிந்துவிடும், கள் உண்பவன் கல்லாமைக்கு அடிகோலுவான், மது அருந்துபவன் தனக்குத்தானே கேட்டினைத் தேடிக் கொள்வான் என்று கூறி, மதுவைத் தவிர்த்தால்தான் நாட்டின் பண்பாட்டையும், உயர்ந்த பாரம்பரியத்தையும் அவன் நிலைநாட்ட முடியும் என்ற தத்துவத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே தமிழகத்தில் தோன்றி, தாணிக்கு நல்லதொரு வழிகாட்டியாக விளங்கிய வள்ளுவப் பெருந்தகை நமக்கு எடுத்து ஓதியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் நம்முடைய எதிர்ப்பு, தமிழர்களுடைய எதிர்ப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே, என் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்னரேயே மூத்த குடிமகன் என்ற முறையில் இந்தத் தமிழ் சமுதாயத்தில் மதுவிற்கு எதிர்ப்பு இருந்து வந்திருக்கிறது. ஆகவே, நான் ஒரு



தமிழன் என்ற முறையிலும், ஒரு முஸ்லிம் என்ற முறையிலும் மது அருந்துவதன் மேல் உள்ள என் எதிர்ப்பை இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாணவர்கள் இன்று மது அருந்துகிறார்களா என்ற விஷயத்தை எல்லாம் நான் இங்கு விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். எல்லா மாணவர்களும் மது அருந்துகிறார்கள் என்று யாராவது கருதினால் நான் அந்தக் கூற்றை ஏற்றுக்கொள்ளமாட்டேன். நம்முடைய மாணவர்கள் இந்தியாவிலேயே சிறந்த பண்பாடு உள்ளவர்களாகவும், நல்ல ஒழுக்கம் உள்ளவர்களாகவும் நல்லதொரு பாரம்பரியம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்றால் அது நம்முடைய தமிழ் பாரம்பரியத்தின் ஒரு மரபு என்பதை நாம் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். ஆகையால், மாணவர்கள் இன்று மது அருந்துகிறார்கள் என்ற நிலைமை இல்லை. இருந்தாலும் வருங்காலத்தில் நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பற்றியெல்லாம் இங்கு விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். இன்று இருக்கிற நிலை என்ன? மது அருந்தினால் ஒருவன் தவறி விடுகிறான் என்று சொல்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் இன்று நாட்டில் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. நம் மாண்புமிகு அமைச்சர்களில் ஒருவர் என் தொகுதிக்கு வந்திருந்தபோது அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு மேடையில் உட்கார்ந்திருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்திருக்கிறார்கள். மேடையைச் சுற்றிப் பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களைச் சுற்றி மேடையில் பலர் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் திடீரென்று ஒருவன் மேடைக்கு எதிரே வந்து அவன் பேசிய பேச்சு இருக்கிறதே அதை நான் இந்தச் சபையில் எடுத்து சொல்வதற்கு தயக்கம் அடைகிறேன். காரணம் அந்தப் பேச்சினுடைய தன்மை. ஏன் இந்த நிலை வந்தது? பல்லாயிரக் கணக்கான மக்கள் தம்மைப் பார்க்கிறார்கள், மாண்புக்குரிய, மரியாதைக்குரிய, பொறுப்புமிக்க அமைச்சர் அவர்கள் எதிரிலே வீற்றிருக்கிறார்கள், அதே தொகுதியைச் சேர்ந்தவன், அந்த நபருக்கு நல்ல அறிமுகமான, பிடித்தமான சட்டமன்ற உறுப்பினர் உட்கார்ந்திருக்கிறார், ஏனையோர் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள் என்ற நினைப்பை மறந்துவிட்டு அவன் மேடைக்கு முன் வந்து என்ன பேசுகிறோம், எப்படி நடந்துகொள்கிறோம், வேட்டி கூட உடுத்தாமல் வந்திருக்கிறோமே, மானத்தை மறைக்காமல் வந்திருக்கிறோமே என்ற நினைப்பே இல்லாமல் அங்கு வந்து குழப்பத்தை விளைவிக்கிறான் என்றால் அதற்குக் காரணம் அவனுடைய பண்பாடு, அவனுடைய இயற்கை, தீமையின் அடிப்படையில் அமைந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மது அருந்தியதால் ஏற்பட்ட நிலைதான் அது. இந்த நிலைமையை நம் நாட்டில் பரவ

விடக்கூடாது. அதிலும் குறிப்பாக இளைஞர்களிடம் இத்தீமை பரவக்கூடாது என்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

தனிப்பட்டமுறையில் ஏதோ மது அருந்துவதின் தீமைபற்றி பாடப்புத்தகங்கள் மூலம் போதிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஏன் ? நம்முடைய திருவள்ளுவரின் கள்ளுண்ணாமை அதிகாரத்தை அவர்களுக்கு நல்லமுறையில் போதித்தாலே போதும். அதை அவர்களுக்கு நல்ல முறையில் எடுத்துச் சொன்னால் போதும். பள்ளிகளில் எல்லாப் படிவங்களிலும் இந்தக் கள்ளுண்ணாமை அதிகாரத்தை பாடத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதேநேரத்தில் கல்லூரிகளில் தமிழ் படிக்கிற மாணவர் களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது, இரண்டாம் பாடமாக மொழி தமிழ் படிக்கிற காரணத்தினால் இங்கே கூட இந்த அதிகாரத்தைச் சேர்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. நான் குஜராத்திற்கு மதிப்பீட்டுக் குழு சார்பாகச் சென்றிருந்தபோது அங்கு பார்த்தேன். மிக நல்லமுறையில் அவர்கள் மதுவின் தீமைகள் பற்றி அங்கு பிரசாரம் செய்கிறார்கள். நல்ல சுவரொட்டிகளை கவர்ச்சிகரமான முறையில், கவர்ச்சி என்றால் கவனத்தை ஈர்க்கக்கூடிய படங்களை, அவர்கள் போட்டு மதுவின் தீமைபற்றி—தமிழ்நாட்டில் எப்படி இரண்டிற்கு மேல் வேண்டாம் என்று குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்கிறோமோ அதேபோல்—பிரசாரம் செய்கிறார்கள். சுவர்களில் சுவரொட்டிகளை ஒட்டி, எல்லாப் பொது இடங்களிலும் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள்.

காந்தி மகானின் ஜன்ம பூமியாக இருக்கிறது அது என்ற காரணத்தினால் குஜராத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா பொது நிறுவனங்களிலும், எல்லா அலுவலகங்களிலும் மதுவின் தீமைபற்றி பிரசாரம் செய்து வருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் மட்டுமல்ல, கல்லூரிகளில் மட்டுமல்ல, நான் என் நண்பரின் அனுமதி பெற்று மேற்கொண்டும் ஒரு விளக்கத்தைத் தருவேன். பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் என்று மட்டுமல்லாது எல்லாப் பொது இடங்களிலும் எல்லா அலுவலகங்களிலும் மதுவின் தீமைபற்றி பறைசாற்றப் படவேண்டும். இத்திருத்தத்தோடு வந்தால் நான் மெத்த மகிழ்ச்சி அடைவேன். எந்த ஒரு கட்டாயத்தின் பேரில் மதுவிலக்கு நம் மாநிலத்தில் ரத்து செய்யப்பட்டது என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்பவில்லை. ஏனென்றால் இன்றிருக்கிற நிலையில்—நான் அன்று பேசியபோது கூட குறிப்பிட்டேன்—மதுவிலக்கு அன்றிருந்த நிலையில் என்னவாக இருந்தது ? அது ஒரு கேலிக்கூத்தாக இருந்தது என்பதை இங்கு எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலையில்தான் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட



முன்னேற்றக் கழக அரசு, இவை, மதுவின் தீமையைப் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்வதற்காக தனியானதொரு அமைப்பை அமைத்து நம்முடைய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறது.

ஆகவே இன்று என்னைப் போன்றோருக்கு திடீரென்று மாணவர்களின் மீதும் மற்றவர்கள்மீதும் அக்கறை வந்துவிட்டது என்பதல்ல. இந்தத் தீர்மானம் வருவதற்கு முந்தியே திராவிட முன்னேற்றக் கழகமும், இன்றிருக்கிற ஆட்சியும், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இந்தக் கருத்தினை நடைமுறையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மதுவின் தீமைபற்றி மக்களிடையே பரப்பவேண்டும் என்ற தன்மையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுகூற விரும்புகிறேன்.

ஆகவே இத் தீர்மானத்தின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். மதுவே வேண்டாம் என்பதுதான் எங்கள் நிலை. அது முதல் நிலை. இப்போது இரண்டாம் நிலை, இருக்கிற நிலைமையை வைத்துக்கொண்டு எப்படி இந்தத் தீமையிலிருந்து வருங்கால சந்ததியினரைக் காப்பாற்றவேண்டும் என்ற நிலை வரும்போது எந்தெந்த முறைகளில் சொல்லி இந்தத் தீமையிலிருந்து வருங்கால சந்ததியினரைத் தடுக்கமுடியுமோ அந்த அந்த முறைகளில் எல்லாம் தடுத்திடுதல் என்பதுதான் நோக்கம். ஆக, இந்தத் தீர்மானத்தை நானும் அந்த அளவிற்கு ஆதரித்து அமர்கிறேன். நன்றி.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, "மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடங்கள் நடத்தலாமென அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது" என்கிற திரு. டென்னிஸ் அவர்களின் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விழைகிறேன்.

மது அருந்துவதால் நன்மை என்றோ, மது அருந்துவதால் உடலுக்கு ஊட்டம் என்றோ. யாரும் வக்காலத்து வாங்குகிற பிராந்திக் கடைக்காரர்களின் ஏஜென்டுகளாக இந்த அவையில் இல்லை. மது அருந்தக்கூடாது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். மதுவால் ஏற்படக்கூடிய தீமைகளை நாமே தெளிவாகச் சொல்கிறோம். எல்லாக் கட்சிக்காரர்களும், எல்லாத் தலைவர்களும் அதிலே ஒருமுகமாக இருப்பதைப் பார்த்தோம்.

இந்தத் தீர்மானத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மதுவால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து பாடங்கள் வைக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தனியாக அதற்கு என்று ஒரு சிலபஸ் கொடுத்து, மது குடித்தால் இன்ன தீமை வரும், பிராந்தி குடித்தால் இன்ன தீமை வரும், ஒயின் சாப்பிட்டால் இன்ன விளைவு வரும், கள் குடித்தால் இன்ன

தீமை வரும் என்று இருக்கின்ற மது வகைகளுக்கெல்லாம் உண்டான தீமைகள் குறித்து பாடங்கள்மூலம் சொல்லிக் கொடுத்தால், மது வகைகளின் பெயரைக் கூட அறியாத பாலர்கள், ஓகோ இத்தனை வகை மது இருக்கிறதா, இதனால் இன்னின்ன தீமைகள் விளைவுகள் ஏற்படுமா அதையும் பார்த்து விடலாமே என்று சம்பாஷித்துக் கொண்டே கடைமுன் போய் நிற்பார்கள். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடம் வைத்து விடுவதனாலே எங்களுக்கு ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாது என்று கருதுகிறேன். அப்படி வைப்பதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

நண்பர் லத்தீப் அவர்கள் சொன்னதுபோல், நாட்டிலே எத்தனையோ குற்றங்கள் இருக்கின்றன. திருட்டு செய்தால் இன்ன தீமை, கொள்ளையடிப்பது ஒரு வகை தீமை என்று ஐ.பி.சி.யில் செக்ஷன் வைப்பது போல் வைத்தால் பாடப்புத்தகம் ஒரு கிரிமினல் புத்தகம் போல் காட்சியளிக்குமே தவிர மாணவனுக்கு அறிவு புகட்டுவதாக இருக்காது. நல்ல தத்துவங்கள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள் ரொம்பக் காலமாக. கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், குடித்தால் தீமை குடிக்கக் கூடாது, பொய் சொல்லக்கூடாது, திருடக்கூடாது என்று இப்படி பஞ்சமாபாவங்களால் ஏற்படும் நன்மை, தீமைகளைச் சொல்லி, இவற்றை விலக்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். ஆகையினாலே அப்படி சொல்லிக் கொடுக்கிறபோது, தனியாக அதற்கு என்று பிரத்யேகமாக சிலபஸ் ஒதுக்கினால் மாணவர்களுக்கு அதிலே கூட நாட்டம் வந்தாலும் வந்து விடும். என்ன காரணத்திற்காக சொல்கிறோமோ அதற்கு எதிர் பலன் வந்து விடும்.

15 ஆண்டுகாலமாக மாணவர் உலகத்தில் இருந்தவன். எதற்கும் அனுபவம் தேவை என்று சொல்வார்கள். எனக்கு இருக்கும் அனுபவம் எல்லாம் 15 ஆண்டுகாலம் மாணவர் உலகத்தில் இருந்ததுதான். நீங்கள் எதை வேண்டாம் என்று சொல்கிறீர்களோ. அதைச் செய்வதற்குத்தான் மாணவர்கள் முன்னே இருப்பார்கள். எனக்குக் கூட அந்த எண்ணம் அந்த நேரத்தில் இருந்தது. ஸ்ட்ரைக் வேண்டாம் என்று சொல்வார்கள், செய்வோம் என்று மாணவர்கள் சொல்வார்கள். தனி நாடு கேட்கக்கூடாது என்று சொல்வார்கள், கேட்போம் என்று மாணவர்கள் சொல்வார்கள். ஆக, நீங்கள் எதை வேண்டாம் என்று சொல்கிறீர்களோ, அதற்கு எதிர் நீச்சல் போடுவது தான் மாணவர் சமுதாயத்தின் வழக்கமாக, பழக்கமாகப் போய்விட்டது. நீங்கள் தனியாக பாடங்கள் ஒதுக்கி தருவதாலே ஒன்றும் எதிர்பார்க்கிற நன்மை ஏற்படாது என்றே கருதுகிறேன்.

நம்முடைய பல நல்ல திருமுறைகள் இருக்கின்றன. திருக்குறள் இருக்கிறது. நல்ல தத்துவங்கள் இருக்கின்றன. கீதையின் உபதேசம் இருக்கிறது. காந்தி அண்ணலின் வாழ்க்கை வரலாறு இருக்கிறது. அண்ணாவின் பொன்மொழிகள் இருக்கின்றன. அதோடு



மட்டுமல்ல, எத்தனையோ தலைவர்கள் சொல்கிற அறிவுரைகள் இருக்கின்றன. இவைகளை மாணவச் சமுதாயம் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள அத்தனை குடிமக்களும் தெரிந்து கொண்டு நல்ல வாழ்க்கை வாழலாம் என்று கருதுகிறேன். இதற்கென்று தனியாக சிலபஸ் போட்டுத்தான் சொல்லித்தர வேண்டுமென்பதில்லை.

கல்ப கோடி காலத்திற்குமுன்பே தேவர்களும், அசுரர்களும் சோம பானம் குடித்து விட்டு இருந்தார்கள் என்று படித்து இருக்கிறோம். அந்தக் காலத்திலேயே வேதாந்தங்களும், மரபுகளும், அறிவுரைகளும், தத்துவங்களும் நிறைந்து இருந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் மீறி அவர்கள் பானம் அருந்தியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு, கள்ள மது, கள்ளச் சாராயம், மறுபடியும் மது என்று மாறி மாறி ஏதாவது ஒரு வகையில் வந்து கொண்டே இருக்கிறது. ஆகவே, மதுவினால் ஏற்படும் தீமைகளைக் குறித்து மட்டும் தனியாகப்பிரிவு போட்டு, சிலபஸ் போட்டால் மாணவ சமுதாயத்தில் நாம் எது கூடாது என்று கருதுகிறோமோ அது உள்ளே நுழைந்து விடும் என்று மெத்தப் பணிவோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் லத்தீப் அவர்கள் அழகாகச் சுட்டிக் காட்டினார்கள். திருக்குறளில் இருக்கிற கள்ளுண்ணாமை அதிகாரத்தை பாடமாக வைக்கலாம் என்று சொன்னார்கள். நான் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசாத காரணத்தாலே முன்னேற்றக்கழகத்திற்கு மதுவிலக்குக்கொள்கை மீது நம்பிக்கை இல்லை என்று யாரும் கருதவேண்டாம். முன்னேற்றக்கழகம் மாணவர்கள் மத்தியிலே மட்டுமல்ல, மக்கள் மத்தியிலேயும் மது குடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து பிரசாரம் செய்து வருகிறது.

இந்த அரசு மது விலக்கை எடுத்து விட்டாலும், திராவிட முன்னேற்றக்கழகம் மதுவால் ஏற்படும் தீமைகளைக்குறித்து இந்த நாட்டிலே பிரசாரம் செய்வதற்கு, வேறு எவருக்குமே கிடைக்காத அளவுக்கு படித்தவர்கள், பாட்டாளித் தோழர்கள், நெசவாளத் தோழர்கள், ஆலைத் தொழிலாளிகள், விவசாயப் பெருங்குடி மக்கள், கூலி வேலை செய்வோர், கல் உடைப்போர், ரிக்ஷா இழுப்போர், குதிரை வண்டி ஓட்டுவோர், அலுவலகங்களில் பணிபுரிவோர், மாணவர் சமுதாயம் ஆகியவர்களுடைய செல்வாக்கை பெற்று இருக்கிற மதிப்பிற்குரிய இந்தச் சபையின் அங்கத்தினர் புரட்சி நடிகர் தலைமையில் ஒரு பிரச்சார குழு அமைத்து இருக்கிறார்கள். அந்தக்குழு மாகாண அளவில் பிரசாரத்தில் ஈடுபட்டு இருக்கிறது. மாணவர்களைப் பார்த்துச் சொல்கிறது. மக்களைப் பார்த்துச் சொல்கிறது. நல்ல இதயம் படைத்தவர்களைப் பார்த்துச் சொல்கிறது. மதுவால் ஏற்படுகிற தீமைகளைக் குறித்து விவரமாக பேசுகிறார்கள். விரைவில் அந்தக் குழு நாடெங்கிலும் பிரசாரத்தில் ஈடுபட இருக்கிறது. அப்படி செய்கிறபோது நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அவற்றில் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலிருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களும், அந்தந்தத் தொகுதியில் நடக்கும்

ஆரம்பப்பள்ளி ஆண்டுவிழாக்களில், கல்லூரி ஆண்டு விழாக்களில் மற்றும் பல விழாக்களில் கலந்து கொண்டு மது அருந்துவதால் ஏற்படுகிற தீமைகள் குறித்துப் பேசவேண்டும். முன்னேற்றக் கழகத்தின் தலையாய கொள்கை, உறுதியான கொள்கை மது அருந்தக்கூடாது என்பது தான். மதுவால் குடி கெடும், குடி கெட்டால் குடும்பம் கெடும், குடும்பம் கெட்டால் ஊர் கெடும், ஊர் கெட்டால் நாடு கெடும் என்று அறிந்திருக்கிற காரணத்தினாலே தான் மது அருந்தக்கூடாது என்று பிரசாரம் செய்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

மது அருந்தக்கூடாது என்று நாம் ஒப்புக்கொண்டாலும், இந்தத் தீர்மானம் நல்ல நோக்கத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னாலும், எங்களுக்கு இருக்கும் கவலையெல்லாம் இதற்காகத் தனி பாடங்கள் கல்லூரி களிலும், பள்ளிகளிலும் வைத்தால் அது அதற்கு எதிர் பலன் கொண்டு வந்து விடுமோ என்ற அச்சத்தால், இந்தத் தீர்மானத் தின் மீது அரசுக்கு நான் சொல்வது, மதுவால் ஏற்படுகிற தீமை குறித்து பிரசாரம் செய்வதற்கு நம்முடைய புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையின் கீழ் அமைந்திருக்கும் குழுவைத் தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவையும் அழைத்து பிரசாரத்தை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நீடித்த பிரசாரத்தின் மூல மாகத்தான் இவற்றை தவிர்க்க முடியுமே தவிர, தனியான சிலபஸ் வைப்பதால் நன்மை ஒன்றும் இருக்காது என்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் கொண்டு வந்திருக்கும் "மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடங்கள் நடத்தலாமென அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தின் மீது என் கருத்துக்களை கூற விரும்பு கிறேன்.

கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தின் நோக்கம் நல்லது தான். அதே நேரத்தில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இருக்கின்ற பாடங்களை தேர்ந்தெடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக் கிறது. இதற்காக ஒரு தனி குழு அமைக்கப்பட வேண்டுமா என்பதையும் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். பல்கலைக் கழகத் திற்கும், உயர்நிலைப்பள்ளிகளுக்கும், ஆரம்பப்பள்ளிகளுக்கும் பாடங்களைத் தேர்ந்தெடுப்பது, சிலபஸ் தேர்ந்தெடுப்பது போன்ற நேரங்களில் இந்தக் கருத்தை மனதில் கொண்டே தேர்ந்தெடுக் கிறார்கள். நம்முடைய கல்லூரிகளிலே சைகாலஜி . வகுப்புகளில் பி.ஏ. வகுப்பிற்கும், எம்.ஏ. வகுப்பிற்கும் பாடங்களைத் தேர்ந் தெடுக்கிறபோது, அதிலே ஆல்கஹாலைப் பற்றியும், அதனுடைய



விளைவுகளைப்பற்றியும் தனியாக ஒரு சேப்டர் இருப்பதை நான் அறிவேன். அந்தப் பகுதியில் மது அருந்துவதால் எந்தெந்த அளவுக்கு தீமை ஏற்படுகிறது, அதனுடைய ஆரம்ப நிலை என்ன இடை நிலை என்ன, இறுதி நிலை என்ன என்று தெளிவாக விளக்கப் பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினருக்கும், இந்த மாமன்றத்திற்கும், மாணவ சமுதாயத்திற்கும் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, மது அருந்தும் பழக்கத்தால் ஏற்படுகிற தீமைகளை விளக்குவதற்காக ஒரு தனிப்பட்ட சிலபஸ் போடுவது பொருத்தமாக இருக்காது, சிறந்ததாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

அவர்கள் வாதப்படி இப்படி ஒரு வகுப்பு துவக்கப்படுமானால், மு.ப. 11-30
ஒரு சிலபஸ் ஏற்படுத்தப்படுமானால், அதற்கு என்று கல்லூரி களிலோ, உயர்நிலைப்பள்ளிகளிலோ, ஆரம்பப்பள்ளிகளிலோ, எல்லா இடங்களிலும் ஒரு வகுப்பு நடத்தவேண்டிவரும். அந்த வகுப்பை மதுவிலக்கு வகுப்பு என்று அழைக்க வேண்டிவரும். மாணவர்கள் அந்த வகுப்புக்கு வருகிற நேரத்தில் பலர் உள்ள படியே மதுக்கடைக்குச் சென்றாலும் செல்லக்கூடும். ஆகவே நாமே அவர்களுக்கு மதுவின் தீமையை விளக்க என்று ஒரு வகுப்பு ஏற்படுத்தி அந்த நினைவை ஏற்படுத்துவது உள்ளபடியே சாலப் பொருத்தமானது என்று நான் கருதவில்லை.

மேலும், மது அருந்துவதால், ஏற்படக்கூடிய தீமைகளை எடுத்து விளக்க என்று, நம்முடைய முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தலைமையாகக் கொண்ட குழு ஒன்றை ஏற்படுத்தி பிரசாரம் செய்ய வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் எடுக்கின்ற திரைப்படங்கள் மூலமாகவும் தீமைகளை எடுத்துக்கூற வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. அதோடு, மாநிலத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளும், மதுவினால் ஏற்படும் தீமைகளை, பள்ளியிலிருந்து கொண்டிருக்கும் மாணவர் சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்ல இனிமாக விளம்பரம் செய்ய முன்வந்தால், அதுவும் பயனுள்ளதாக அமையும். மேலும் இந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள் மேலை நாடுகளில், சிகரெட் பெட்டிகளிலேயே சிக ரெட்டினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விளம்பரம் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதே போலவே, நாமும் மதுவினால் ஏற்படும் தீமைகளையும், கேடுகளையும் ஒவ்வொரு கடையிலேயும், மதுவகைகள் வழங்கப்படும் இடங்களிலும், மதுவின் தீமைகளைப் பற்றி அச்சடித்து, பாட்டில்களிலேயே லேபிள் ஒட்டி, விற்பனை செய்தால், அதை வாங்குபவர்களுக்கு மதுவினால் ஏற்படும் தீமை களைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பும் வசதியும் இருக்கும். அதன் மூலம் மது அருந்துவதையும் தடுக்க வழி ஏற்படும். அதோடு மதுக்கடைகளின் எதிர்ப் புறத்தில் விளம்பரத் தட்டிகளையும். போர்டுகளையும் எழுதி வைத்தால், அதைப் பார்க்கின்றவர்கள், மயக்கத்தில் இருந்தாலும் கூட, மயக்கம் தெளிந்த பிறகாவது,

அதைப் போகும் வழியில் படிக்கும் போது, அதைப் புரிந்து கொள்வார்கள். அதனால் கொஞ்சம் தடுத்து நிறுத்த வழிவகை ஏற்படும்.

ஆகவே, நமக்கு இன்னும் ஏராளமான வழி முறைகள் நாட்டில் இருப்பதன் காரணத்தால், பள்ளி மாணவர்களுக்கு சிலபஸ் மூலமாகவோ, பாடம் மூலமாகவோ கட்டுப்படுத்துவது என்பது பயன் தருவதாக இருக்காது. அதைப் படித்து மாணவர்கள் திருந்துவார்கள் என்று எண்ணுவதற்கு ஏதுவும் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சிறந்த நோக்கம் எந்த அளவில் இருந்தாலும், கல்லூரி அளவிலும், உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப் பள்ளி இவற்றில் அளவிலும் சிலபஸ் மூலம் புகுத்துவது சாலச் சிறந்ததாக இருக்காது. சிலபஸ் குழுக்களை கட்டுப்படுத்தி, வற்புறுத்துவது என்பதும் முடியாத காரியம் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்னொரு கருத்தினையும் எடுத்துவைக்க விரும்புகிறேன். ஏற்கனவே, மது அமுலில் இருந்த காலத்தில், ஆரம்பப் பள்ளியில் இருந்த புத்தகத்தின் ஒரு பாடத்தில் மதுக் கொடுமை பற்றி இருந்தது. அந்தப் பாடத்தைப் படித்தால்—ஒரு ஆண் மகன் குடித்துவிட்டு, மனைவியையும் அடித்து, பானையையும் உடைத்துப் போட்ட காட்சியைப் படித்தால்—ஒரு மாணவனும் திருந்தியதாக நான் பார்க்கவில்லை. அதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, பிஞ்சு உள்ளங்களில், நஞ்சைப் புகுத்தி, பாட முறையில் இப்படிப்பட்ட பாடத்தை வைக்கின்றது, உள்ளபடியே நல்ல வழியை ஏற்படுத்துவதாக இருக்காது. தீய வழிக்கு இழுத்துச் செல்வதாகத்தான் அமையும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க மறுக்கிறேன் என்று கூறி, பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஒட்டி சில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தத் தீர்மானம் எந்த அடிப்படையிலே வந்திருக்கிறது என்பதைப் பார்க்கின்ற நேரத்தில், இது நல்ல வகையில் இருக்கிறது. ஆனால் எந்த அளவுக்கு இந்தத் தீர்மானம் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும் என்பதைத்தான் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இன்று இங்கே சில உறுப்பினர்கள் கூறியது போல், பாடப் புத்தகத்தில், எவ்வளவோ நல்ல கருத்துக்களைச் சொல்கிறோம். முன்பெல்லாம் பல பள்ளிக் கூடங்களில் 'மாரல் கிளாஸ்' என்று இருக்கும். நான் மாணவனாக இருந்தபோது, எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. மாரல் கிளாஸ் வாரத்திற்கு ஒரு நாள், அல்லது இரண்டு நாள் என்று இருக்கும். அதில் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவார்கள். அது நன்றாக நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது பல பள்ளிக்கூடங்களில் விசாரிக்கப்





பார்க்கும்போது, மாரல் கிளாஸ், வகுப்பு என்பதையே எடுத்து விட்டார்கள் என்று தெரிகிறது. அப்பேற்பட்ட நிலை இருக்கிறது. ஆனாலும் கூட, தெளிவாக மாணவர்களுக்கு இந்த மதுவினால் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன என்று எடுத்துச் சொல்லக் கூடிய அமைப்பு மிக மிகத் தேவை. அதற்கு வேறு எந்தவிதமான அமைப்பும் இல்லாததால், நான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடிய அளவுக்கு பேசிக்கொண்டு இருக்கிறேன்.

ஆகவே, இந்தப் பள்ளிக்கூடங்களில், நல்லவகையில் இதை எடுத்துச் சொல்ல ஏற்பாடு இல்லாததால், ஒரு வாரத்தில் ஒரு மணியோ, அல்லது 40 நிமிஷம், 45 நிமிஷம் என்று அந்த அந்த பள்ளிக்கூடங்களில் எப்படி எப்படி பாடத்திட்டங்களுக்கு ஒதுக்க பட்டிருக்கிறதோ அந்த வகையில், மதுவினால் ஏற்படக்கூடிய தீமைகளைப் பற்றிச் சொல்லலாம். நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், எதைச் சொன்னாலும், மாணவர்கள் நல்ல விதமாக எடுக்காமல், நேர் விரோதமாகவே எடுத்துக்கொள்வார்கள் என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால், நான் மாணவனாக இருந்தபோது, பல நல்ல கருத்துக்களை நாங்கள் பெரிய பெரிய அரசியல் வாதிகளோ, அல்லது பெரிய பெரிய ஸ்தானத்தில் இருப்பவர்களோ, துணை வேந்தர், பிரின்சிபால் போன்றவர்கள், எடுத்துச் சொல்ல கேள்விப்பட்டு அதனால் நன்மை அடைந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை நல்ல வகையில் நடைமுறைக்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். மாணவர்கள் முதன் முதலிலேயே வழி காட்டியாக இருந்து நல்ல கருத்துக்களை, ஏற்றுக்கொள்வார்கள். அப்படிப்பட்ட கருத்து பரவலாக இருப்பதால், எதைச் சொன்னாலும், மாணவர்கள் எதிர்ப்பார்கள், நேர் விரோதமாக நடப்பார்கள் என்றே கருதுவது, முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து என்பதை நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மாணவர்களுக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட வேண்டும்.

இதிலே 'ஆல்கஹால்' என்று இருக்கிறது. இது பற்றி பல பேர்கள் குறிப்பிடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், பள்ளிகளுக்குள்ளே, 'ஆல்கஹால் ஸ்பிரிசுவஸ் சப்ஸ்டன்ஸ்', ஒரு தரமாகக் கொடுக்கக் கூடிய, பொருள்களில் ஆல்கஹால் 20, 40, 60 சதவிகிதம் என்று இருக்கிறது. ஏற்கனவே விஞ்ஞானத்தில் சயன்ஸ் பாடத்தில், ஆல்கஹாலினால் என்னென்ன தீமைகள், என்னென்ன கேடுகள் வரும் என்று தெளிவாக, விளக்கமாகச் சொல்கிறார்கள். அதையொட்டியே நல்ல வகையில் எடுத்துச் சொல்லலாம். ஆகவே, இந்தத் தீர்மானம் வருகிற சூழ்நிலை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். வந்திருக்கும் தீர்மானம், எதற்காக வந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்தத் தீர்மானம் உண்மையாகவே, தமிழ்நாட்டில், 'ப்ரொஹிபிஷன்' மதுவிலக்கு ரத்துச் செய்யப்படாமல் இருந்தால், வந்திருக்குமா என்பதையும்

பார்க்கவேண்டும். இந்தத் தீர்மானம் வந்ததன் அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராயவேண்டும். இப்பொழுது மதுவிலக்கை ரத்து செய்திருப்பது அல்லது தாற்காலிகமாக ஒத்தி வைத்திருப்பது—அவர்கள் சொல்லும் அந்தப் பாணியையே பயன்படுத்துவோம்—என்பதால் என்னென்ன விளைவுகளைப் பார்க்கிறோம் ? மதுவிலக்கை முழுக்க முழுக்க ரத்து செய்து, ஆங்காங்கே பரவலாக, சுவாரஸ்யமாக போர்டுகளைப் போட்டு, 'ஒயின் ஷாப்', 'விஸ்கி ஷாப்', 'கள்ளுக்கடை', 'சாராயக்கடை' என்றும், இந்தக் கள்ளுக் கடை டிவிஷன் இன்னது, 62-வது வட்டம் என்றும் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அரசியல் வாதிக்கும் ஒவ்வொரு வட்டத்தில் இண்டரெஸ்ட் இருக்கும். நாம் பார்க்கிறோம், 62-வது வட்டம் கள்ளுக்கடை என்று போர்டு போட்டு, கள்ளுக்கடையைப் போட்டு, அந்த இடத்தில் பல விஷயங்கள் நடந்து வருகிறது. பரவலாக தமிழ் நாட்டில், மதுவிலக்கை ரத்து செய்திருப்பதால், பொதுவாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். திரு. டென்னிஸ் அவர்கள் இதை மறுக்கமாட்டார்கள் என்றும் நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை இப்பொழுது புதிதாக உருவாகியிருக்கிறது. அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான சூழ்நிலையைக் கண்டு, வருத்தப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். அந்த நிலையை எடுத்துக்காட்ட ஒரு கடமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

இந்தத் தீர்மானம் அதிகாரப் பற்றற்ற தீர்மானமாக இருக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த நேரத்திலே, நான் பேசுகின்ற நேரத்திலே கூடியவரையில் இதை அரசியல் கண்ணோட்டத்தோடு பேசாமல் சில பொதுவான கருத்துக்களை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறவேண்டிய சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்றும், வாரத்திற்கு ஒரு முறை இப்பேர்பட்ட தீர்மானத்தை விவாதிக்க ஒரு நாள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், அந்த நேரத்தில் நாம் அரசியல் கண்ணோட்டத்தோடு பேசாமல் இருக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் பேசும் நேரத்தில் இந்தச் சமுதாயம் எப்படி இருக்கிறது என்று பார்க்கும் நேரத்தில், பரவலாக ஆங்காங்கு கடைகளில் மதுவை சாப்பிடும் துர்பாக்கியமான, வேதனையான காட்சியை பார்க்கிறோம். நான் பல தாய்மார்களைக் கேட்டுப் பார்த்திருக்கிறேன். எனக்கு சௌகர்யமான சூழ்நிலை இருக்கிறது. தாய்மார்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வருகின்ற நேரத்தில் அவர்களைப் பற்றி கேட்க வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், வேதனையில் சொல்கிறார்கள். இன்று நல்ல மாதிரி இல்லை. வீட்டில் என்னவென்றால், இப்போது திடீர் என்று கணவனும், தம்பியும், மகனும் குடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கண்ணீர் விடக் கூடிய அளவுக்கு அந்தத் தாய்மார்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.



அந்த மாதிரி பேசுகின்ற நேரத்தில் நமக்கு உண்மையாகவே வேதனையான நிலைமை ஏற்படுகிறது. ஏன் இப்படி என்றால், ஆகஸ்டு 30-க்கு முன் அப்படி இல்லை. அதற்குப் பிறகு இப்பேர்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நாம் நிச்சயமாக புரிந்துகொள்ள வேண்டும். எப்பேர்ப்பட்ட காட்சிகள் அவை? இந்த ஆகஸ்டு 30-ம் தேதிக்கு பிறகு எத்தனை பேர் புதிதாக குடிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள் என்பதை நாம் கணக்கு எடுக்கவேண்டும்.

எதற்காக மதுவிலக்கு ரத்தைக் கொண்டு வந்தார்கள்? தவறான பொருள்களை சாப்பிடக்கூடாது, திருட்டு சாராயம் காய்ச்சக் கூடாது, அதன் விளைவாக பல பேர் பெரிய பெரிய பயங்கரமான வகையில் ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால் (பூட் லெக்கர்ஸ்) ஒரு தொழிலை ஆரம்பித்து, அதைத் தடுத்து நிறுத்துவது என்கிற காரணத்திற்காக இப்படிப்பட்ட நிலைமை உருவாக்குகிறோம் என்றும், தவறான பொருள்களை குடித்துக்கொண்டிருக்கும் நபர்களுக்கு சரியான பொருள்கள் கொடுக்கவேண்டுமென்பதற்காகவும் என்று சொன்னார்கள். உண்மை என்னவென்றால் ஏராளமான நபர்கள் இப்போது மீண்டும் புதிதாக குடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுதான் முக்கியமான பிரச்சனை. இது ஆராயவேண்டிய முக்கியமான பிரச்சினை. ஏனென்றால் ஏராளமான நபர்கள் ஆகஸ்டு 30-க்கு பிறகு படிப்படியாக (They have cultivated the habit of drinking) குடிக்கக்கூடிய ஒரு பழக்கத்தை பழகிக்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் சொல்லவேண்டிய கட்டத்தில் இன்று இருக்கிறோம். எத்தனை பேர் இப்படி புதிதாக (New recruits to the drinking world) இந்தக் குடிக்கக்கூடிய உலகத்தில் எத்தனை பேர். ஏராளமான ஆட்கள் இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை ஆதாரபூர்வமாக சொல்லவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்தத் தீர்மானத்திற்கு எந்த அமைச்சர் பதில் கொடுக்கப் போகிறார் என்று தெரியவில்லை. அவை முதல்வர் அவர்களே பதில் கொடுக்கிறார்கள் என்றால் அவர்கள் பதில் கொடுக்கும் நேரத்தில் அந்த வாக்குறுதியைத் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கு ரத்து செய்ததும் அரசாங்கம் சின்ன கமிட்டியை நியமித்து எத்தனைப் பேர் புதிதாக குடிக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரத்தைக் கொடுக்க வேண்டும். நேற்று பழக்கம் இல்லை ஆகஸ்டு 30-ம் தேதிக்கு பிறகு பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எத்தனை பேர் புதிதாக மதுவிலக்கு ரத்தின் காரணமாக இப்பழக்கத்திற்கு இலக்காகி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதற்காக ராண்டம் சாம்பிள் சர்வே செய்ய வேண்டும். குறிப்பிட்ட இடத்தில் அல்ல, தமிழகம் முழுவதும் செய்யவேண்டுமென்று அல்ல, அது எல்லாம் வேண்டாம். ராண்டம் சாம்பிள் சர்வே போதும். மேலும், இப்போது நன்றாக இருக்கிறது வருமானம். ஏதாவது இரண்டு மூன்று டிவிஷன்கள்

சென்னையில் இப்போது 120 வட்டங்கள் இருக்கின்றன. 1/20, 1/24 என்று ஏதாவது எடுத்துக் கொண்டு எந்தெந்த வட்டங்களில் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

நான் இன்னொன்றும் சொல்கிறேன். இதைச் செய்தால் அரசாங்கம் நல்ல வகையில் இந்த அளவிற்கு இந்த புதிதான சூழ்நிலையின் காரணமாக. மதுவிலக்கு ரத்து செய்ததின் காரணமாக இருக்கும். நமது அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்று நான் கருதுகிறேன். வெளியே இருக்கும் சோஷல் ஆர்கனேஸேஷன்கள் இருக்கின்றனவே அவர்களும் ஏதாவது இப்படிப்பட்ட ராண்டம் சர்வே செய்தால் மிக நன்றாக இருக்கும். அதனால் நல்ல வகையில் பயன் அடைய முடியும். அண்மையில் சில இடங்களில் கூட செய்தார்கள். யார் யார் உங்களுக்கு அரசியல் வாதிகள் என்று தெரியுமே, சில அமைப்புகள் சாம்பிள்கள் சர்வே செய்தன. மெயில், ஹிந்து, எக்ஸ்பிரஸ் பேப்பரில் அந்த விவரங்கள் எல்லாம் நாம் பார்த்தோம். அந்த வகையில் சில சோஷல் ஆர்கனேஸேஷன்கள் அதைக் கையாண்டால் அது நன்றாக இருக்கும். அதை அரசாங்கம் நேரடியாகச் செய்ய முடியாது, இல்லாவிட்டால் சி.ஐ.டி. விட்டு கண்டுபிடிக்கலாம். அது நமக்கு நல்ல வகையில் பயன். தரும் என்று கருதுகிறேன்.

முக்கியமாக நம் நாட்டிலே பொதுவாக ஒரு சமுதாயத்திலே தகுந்த சூழ்நிலை உருவாகவேண்டும். நான் இப்போது மதிப்பிற்குரிய நண்பர் திருப்பூர் மொய்தீன் இடத்தில் பேசிக் கொண்டிருந்தேன். யாராவது முஸ்லீம் மதுவில் ஈடுபட்டால் அவரை சமுதாயம் பகிஷ்கரிக்கும் என்றார். நான் கேள்விப் பட்டு ஆச்சரியப்பட்டேன். மொத்தமாக நான் அந்தக் கருத்தை வரவேற்றேன். அந்த வகையில் பொதுவாக எல்லா மத சமுதாயத்திலும் அப்பேர்பட்ட சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

இப்போது எப்படி இருக்கிறது? ஒருவன் சாராயம் குடிப்பது ஒரு ஸ்டைல் ஆகிவிட்டது. இப்போது திருப்பூர் மொய்தீன் சொன்னரே—குடித்தவனை பகிஷ்கரிக்கக்கூடிய அளவுக்கு, திருமணம் செய்துகொள்ள முடியாத அளவுக்கு அது தப்பு என்று —அந்த அளவு சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று கருதுகிறேன். பரவலாகப் பார்க்கிறோம், ரஷிய நாட்டில் எவன் அனாவசியமாக நடக்கிறானோ உடனடியாக சம்பளம் தீர்த்துகொடுக்கும் நிலைமை ஏற்படுகிறது. சம்பளத்தை பாங்கில் கொடுத்து, நாம் பங்கில் பணத்தை பெருகின்ற நோத்தில் கவலை ஏற்படுகிறது, மொத்தத்தில் செலவு செய்யமாட்டான்.

இப்போது புதிதாக ஒரு முறையைக் கையாளுவதை பத்திரிக்கையில் பார்க்கிறோம். ஸ்லீபிங் டாப்லெட்டை சாப்பிடும் அளவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த நோய் நம் நாட்டுக்கும் வந்து கொண்டு இருக்கிறது. ஒரு மாத்திரை சாப்பிட்டாலே மயக்கம்



ஏற்படுகிறது. டிரக் அட்டிக்ஸ் உண்டாவது மோசமாக இருக்கிறது. நல்ல மனப்பான்மையை சமுதாயத்தில் உருவாக்க வேண்டும்.

தாய்மார்களும், பெரியவர்களும் அந்த நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு முதல் கட்டமாக மாணவர்கள் அதிலே ஈடுபடவேண்டும். அதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். குழந்தைகளும், மாணவர்களும், மாணவிகளும் மதுவிலக்கு ரத்தினல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களும், இளைஞர்களும் குடிப்பழக்கத்தினல் கெட்டுப்போவதினல் பெற்றோர்கள் கவலையடைந்திருக்கிறார்கள். மாணவர்கள் மத்தியிலே குடிப்பழக்கம் கெடுதலானது என்ற எண்ணத்தை நாம் ஏற்படுத்திவிடுவோமானல், அவர்களை அந்தக் கெட்ட பழக்கத்திலிருந்து மாற்றிவிடுவோம். அப்போது மது அருந்தக்கூடியப் பெற்றோர்கள் கூட குடிப்பழக்கத்தைக் குறைத்துக்கொள்வார்கள். குறிப்பாகப் பள்ளிப் பிள்ளைகள் முன்னல் குடிப்பதையாவது நிறுத்திக்கொள்வார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தை நான் முழு மனதோடு ஆதரித்து, முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாகக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த தீர்மானத்தை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கை ரத்து செய்தபிறகு எல்லா தரப்பினரும் மது உண்ண ஆரம்பித்துவிட்டார்கள். குறிப்பாக இளைஞர்கள் மதுப் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. காரணம் மதுவிலக்கு வந்தபின், மது அருந்துவதை ஒரு பாஷனகக் கருதி, மதுக்கடைக்குள்ளே இளைஞர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு நுழைகிறார்கள். என் கண்ணலேயே இந்தக் காட்சியை நான் கண்டிருக்கிறேன். அவர்களை மது அருந்தும் பழக்கத்தைத் தூண்டும் வகையில் எங்கு பார்த்தாலும் ஒயின் கடைகள், சாராயக் கடைகள் காணப்படுகின்றன. சாராயக்கடை இல்லாத தெருவே இல்லையென்று சொல்லலாம். சாராயக்கடை இல்லாத கிராமமே இல்லையென்று சொல்லலாம். அதனல் நகரங்களிலே உள்ள இளைஞர்களும், கிராமங்களிலே உள்ள இளைஞர்களும் மது அருந்தும் பழக்கத்திலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லூரி மாணவர்கள் கூட மது அருந்தும் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கல்லூரிக்கு எதிரில் மதுக்கடை ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே உள்ள மாணவர்களில் பலர் அந்தக் கடையில் சென்று மது அருந்துகிறார்கள். இதை நான் மிகைப்படுத்திக் கூறவில்லை. மாணவர்கள் மதுக்கடைகளை நாடிச்சென்று மது அருந்தும்போது, கல்லூரிக்கு எதிரிலேயே மதுக்கடை இருந்தால்

இன்னும் அவர்களுக்கு வசதியாகப் போய்விடுகிறது. அந்தச் சாராயக்கடையை அங்கிருந்து எடுத்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. மதுவைக் குடித்துவிட்டு, அவர்கள் வெளியே வந்து செய்யக்கூடிய அட்டகாசங்கள் பொறுக்கமுடியவில்லை. ஏதோ பணக்காரர்கள் பெர்மிட் வைத்து மது அருந்துகிறார்கள். அது சாதாரண மக்களுக்கும் கிடைக்குமளவில்தான் நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறோம் என்று ஆட்சியில் இருக்கின்றவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மது அருந்துவது இப்போது ஒரு பாஷன் ஆகிவிட்டது என்றால் அது மிகையாகாது.

இளைஞர்கள் இந்த மது அருந்தும் பழக்கத்தை கையாண்டிருப்பதால் அவர்கள் கெட்டுப்போகிறார்கள். அவர்கள் படிப்பு கெட்டுப்போகிறது; அவர்கள் குடும்பம் கெட்டுப்போகிறது. அவர்கள் குடும்பத்திற்கு தொல்லை ஏற்படுகிறது. அவர்கள் ஈடுபட்டிருக்கும் வேலைக்கும் தொல்லை ஏற்படுகிறது. பஸ்களிலே செல்லும்போது அங்கிருக்கக்கூடிய பாசஞ்சர்களுக்கும் தொல்லை கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது மதுவிலக்கை மீண்டும் கொண்டுவரும் எண்ணமில்லாவிட்டாலும் கூட, மாணவர்களையாவது இந்தப் பழக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்.

மது அருந்தும் பழக்கம் எவ்வளவு கொடியது என்று நாம் நன்கறிவோம். ஆத்திச்சூடி, நன்னெறி, நல்வழி, போன்ற நூல்களை படித்திருக்கிறோம். மதுவருந்தும் பழக்கம் தீயது என்பதை விளக்கும் வகையில் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் உள்ள பாடத்திட்டத்தில்—சிலபஸில் சேர்க்க இயலாவிட்டாலும் திருவள்ளுவர் 'கள்ளுண்ணாமை' என்னும் அதிகாரத்தில் மதுவருந்துவதினால் ஏற்படும் தீமைகளை நன்கு விளக்கியுள்ளார். அந்தப் பகுதியைப் பாடப்புத்தகங்களிலே சேர்த்து வெளியிட வேண்டும்.

கள் குடித்தால் உடம்புக்கு நல்லது என்று சொல்கிறார்கள். ஆனால் ஏராளமான பேர் கள் குடித்து, உடம்பைக் கெடுத்துக் கொள்வதைத்தான் பார்க்கிறோம். மதுவருந்தினால் ஏற்படும் தீமைகளை மாணவர்கள் உணரும்படி முதலில் செய்ய வேண்டும். பின் அவர்களைக் கொண்டே பிரச்சாரங்கள் செய்யச் சொல்லலாம். ஆகையால்தான் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து பாடம் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை திரு. டென்னிஸ் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

முன்பெல்லாம் பள்ளிகளிலே 'மாரல்' லெசனுக்கென்று ஒரு பீரியட் வைத்திருந்தார்கள். அந்த மாரல் லெசனில் நல்லொழுக்கங்களைப் பற்றிக் கற்பிப்பார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல பள்ளிகளிலே மாரல் லெசனுக்கு என்று ஒரு கிளாஸ் ஏற்படுத்தி, பள்ளிகளில் பாடங்கள் தொடங்குவதற்கு முன்னால் தினமும் காலையில் ஒரு இருபது நிமிஷங்கள் மது



அருந்துவதினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி விளக்கவேண்டும். கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இம்முறையை நுழைப்பதற்கு, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமெரிக்க நாட்டில் மதுஅருந்தும் பழக்கம் இருக்கிறது. இருப்பினும் அங்கு மது அருந்தாதவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பொது இடங்களுக்கு அல்லது கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்றால், தங்களுக்கு மது கொடுக்கக்கூடாது என்று அறிவிப்பதற்காக அவர்கள் 'ஒயிட் ரோஸ்' குத்திக்கொண்டிருப்பார்கள். நமது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களும் அம்மாதிரியான பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வார்களானால், டெம்பரன்ஸ் சொசைட்டி' அமைத்துக்கொள்வார்களானால் அது அவர்களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் மிகவும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

இப்போது நம் நாட்டில் 'ஹிப்பீஸ்' வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்தபிறகு இங்குள்ள மாணவர்களும், இளைஞர்களும் ஹிப்பிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடையுடைப் பாவனைகள், முடி, தாடி இவைகள் இருந்தாலும் பரவாயில்லை. மது அருந்துவதைவிட கெட்டப் பழக்கமான 'ஓபியம்' கூட அருந்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சிங்கப்பூரில் ரூல் ஏற்படுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன், அதாவது அங்கே செல்லக்கூடிய ஹிப்பிகள் கப்பலிலிருந்தும், விமானத்திலிருந்தும் கீழே இறங்குவதற்கு முன் ஹிப்பீஸ் போல் இல்லாமல் முடி, தாடி இவைகளைத் திருத்தம் செய்துகொண்டு சுத்தமாக இறங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அவ்வாறு இங்கும் ஒரு உத்தரவு பிறப்பித்தால் நல்லது. அதோடு இப்போது இருக்கின்ற ஹிப்பீஸ் போக, மேலும் ஹிப்பீஸ் இங்கு வராவண்ணம் கண்காணிக்க வேண்டிய இன்றியமையாத பொறுப்பையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

இளைஞர்களைக் குடிப்பழக்கத்திலிருந்து மாற்றவேண்டுமானால் முதலில் பெரியோர்கள் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்திலே நான் படித்த ஒரு கதையை இங்கே கூற விரும்புகிறேன். அமெரிக்காவில் ஒருவர் குடித்து, குடித்து அழிந்துகொண்டிருந்ததால் அவருடைய குடும்பம் கெட்டுப்போய்க் கொண்டிருந்தது. அவருடைய நண்பர் ஒருவர் சிறந்த நீதிபதி. அவர் குடிகாரனிடம், "குடிக்காதே, குடிக்காதே, குடியால் உன் உடலும் குடும்பமும் கெட்டுபோகும்", என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அதற்கு அந்த குடிகாரன் இனிமேலாவது தனக்குப் புத்தி சொல்லாமல் இருக்கட்டும் என்று நினைத்து, நீதிபதிக்கு ஒரு நிபந்தனை விதித்து, அந்த நிபந்தனையை நீதிபதி நிறைவேற்றிவிட்டால் தான் குடிப்பதை நிறுத்திவிடுவதாகச் சவால் விட்டான்.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1971 டிசம்பர் 9

நீதிபதி நீதிமன்றத்திற்குச் செல்லும்போது 'காலர்பான்ட்' அணிந்து செல்லவேண்டும். 'நீங்கள் நீதிமன்றத்திற்கு காலர் பான்ட் அணியாமல் செல்வதாக இருந்தால் நான் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிடுகிறேன்' என்று சவால் விட்டான். நீதிபதியும் சவாலை ஏற்றுக்கொண்டார். தன் உத்தியோகம் போனாலும் பரவாயில்லை; அவன் குடிப்பழக்கத்தை விட்டுவிட்டு, அந்தக் குடும்பம் நல்ல முறையில் வாழ்ந்தால் போதுமென்ற நல்ல எண்ணத்தோடு அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டார். இதை அறிந்த நீதிமன்றம் அவருக்கு காலர்பான்ட் அணியாமலே கோர்ட்டுக்குப் போகலாம் என்று அனுமதியளித்தது. "He was an indispensable Judge; with special permission, he was permitted to attend the court without collar band" என்று அனுமதி கொடுத்தார்கள். நீதிபதி காலர்பான்ட் இல்லாமலே நீதிமன்றத்திற்குச் சென்றார். குடிகாரனும் தன் குடிப்பழக்கத்தை விட்டுவிட்டான். இதை நாம் சரித்திரத்தில் படிக்கிறோம்.

ந.ப. 12-00 ஆகவே, குடிப்பழக்கத்தினால் ஏற்படும் கெடுதல்களை மாணவர்கள் அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. நாடும், வீடும், மக்களும் சீர்பெறவேண்டுமானால், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கூறி, எனக்கு இந்தத் தீர்மானத்தைப் பற்றி பேசுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தில் நானும் என் கருத்துக்களைச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு முன்னால் பேசிய கட்சித் தலைவர்களும் மற்ற உறுப் பினர்களும் மதுவினால் ஏற்படுகிற தீமைகளைப்பற்றியும், அதனால் மாணவர் சமுதாயம் எப்படி எப்படி பாதிக்கப்படுகிறது என்று கூறினார்கள். நான் பத்தாண்டுகள் மாணவனாக இருந்திருக் கிறேன். மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்ற வாய்ப் பினையும் பெற்றிருக்கிறேன். கல்லூரியில் பாடம் சொல்கிற நேரத்தில் எம்.ஏ. சைகாலஜி பாடம் இருக்கிறது—அதில் அப்நார்மல் சைகாலஜி என்று வருவதில் ஆல்கஹாலின் தீமையைப் பற்றி—குழந்தை முதல் மது சாப்பிடுவதனால் ஆல்கஹால் ரத்தத்தில் கலந்து என்ன என்ன தீமைகளை விளைவிக்கிறது என்பது எல்லாம் சொல்லித்தரப்படுகிறது.

ஆகவே, இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ளபடி மாணவர்களுக்கு என்று இவற்றைப் பாடமாக வைப்பதனால் எவ்விதப் பலனும் இருக்காது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஏற்கனவே நம்முடைய பள்ளிகளில் அறவுரை என்பதற்காக ஒரு பீரியட் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறவுரை பீரியட்டில் நம் நாட்டு அறிஞர்களின் வாழ்க்கை, பஞ்சபாண்டவர்களின் கதை போன்ற நல்லுரைக் கோவைகள் எல்லாம் போதிக்கப்படுகின்றன. அந்த வகுப்பில் இந்த மதுவினால்



1971 டிசம்பர் 9] [திரு. அ. சின்னசாமி]

ஏற்படுகிற தீமைகள் பற்றியும் அவ்வப்போது மாணவர்களுக்கு உணர்த்துவதற்கு ஆவன செய்யலாம். அதைவிட்டு இதற்கென்று தனியாகப் பாடம் தேவையில்லை என்று கூறி தீர்மானத்தை எதிர்ப்பதோடு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். டென்னிஸ் அவர்கள்,

"மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகளை குறித்து, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடங்கள் நடத்தலாமென அரசுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது."

என்கிற தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். தீர்மானத்தைப் பற்றி பேரவை உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். குடியினால் ஏற்படும் கேடுகளை யாரும் மறுப்பதற்கில்லை. புத்தர் காலத்தில் இருந்து ஏசுநாதர் காலத்தில் இருந்து, வள்ளுவர் காலத்தில் இருந்து உலகத்தைத் திருத்த வந்த உத்தமர்கள் எல்லாம் குடியினால் ஏற்படக் கூடிய கேடுகளைப்பற்றி தொடர்ந்து எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். திருந்தியவர்கள் பலர் உண்டு. திருந்தாதவர்களும் பலர் உண்டு. திருந்திய பலர்களுக்குள்ளே நாம் இருப்பதானால்தான் இங்கே இருக்கிறோம். முன்பு குடி நம்முடைய நாட்டில் இருந்தபோதும்—பழக்கம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அப்போது நம்மைச் சுற்றிலும் இருந்தும் கூட நம்மில் பெரும்பாலானவர்கள் அந்தக் கொடிய பழக்கத்திற்கு ஆளாகாமல் தப்பித்துத்தான் வந்திருக்கிறோம் என்பதை நாமெல்லாம் நன்றாக உணரலாம்.

ஆனாலும் இப்படிப்பட்ட அடிப்படைத்தன்மையைப் பார்க்கிற போது மானவர்களிடையே நல்ல பண்புகள் வளர்க்கப்பட வேண்டும் என்கிற கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பண்புகள் வளர்வதற்கு ஏற்ற இடம் பள்ளிகள் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆகவே குடியினால் ஏற்படுகிற கேடுகளை திரு. டென்னிஸ் அவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டார்கள். திரு. ஹாண்டே அவர்களும் தெளிவாகச் சொன்னார்கள். நண்பர் லத்தீப் அவர்கள் மிக அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். அதை யாரும் மறுப்பதற்கில்லை. அரசாங்கமோ, நாங்களோ குடியின் மேன்மையைப்பற்றி வாதிடவும் இல்லை.

ஆனால், மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கான இன்றியமையாத காரண காரியங்களை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்கள். இங்கே சட்டத்தின் மூலமாக ஒழுங்காக, வெற்றிகரமாக அதை நடத்த முடியவில்லை, எந்த நோக்கத்திற்காக அதைக் கொண்டுவந்தோமோ அந்த நோக்கம் தோற்றுவிட்டது, நம்மைச் சுற்றிச் சூழ

இருக்கிறவர்கள் எல்லாம் மதுவிலக்கை ரத்துசெய்துவிட்டார்கள், நமக்கு சட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாமல் போய் விட்டது, இந்த நிலையில் அதை இங்கும் ஒத்திவைப்பதைத்தவிர வேறு வழியில்லை என்கிற காரண காரியங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி மதுவிலக்குச் சட்டத்தை இங்கே ஒத்திவைக்கிறோமே தவிர மதுவிலக்குக் கொள்கை தள்ளப்பட வேண்டுமென்ற நிலைமையில் இல்லை என்பதை முன்பே இங்கு சொல்லியிருக்கிறோம்.

குடியின் கேடுகளை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். மாணவர்களுக்கு நல்ல பண்புகள்—அந்தப் பருவத்திலேயே வளர்க்கப்படவேண்டும் என்பதும் உண்மை. மாணவ பருவத்தின் முக்கிய நோக்கமே அறிவு பெறவேண்டும், அறிவு பெற்று செயலாற்றும் திறமை பெற வேண்டும், அதோடு நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்கிற இந்த மூன்று நோக்கங்களைக் கொண்டே பள்ளிகளும், கல்விச்சாலைகளும் செயல்பட்டாக வேண்டியதாக இருக்கிறது.

மாணவர் என்ற சொல்லே மாண்பு என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. பண்புகள்—நற்பண்பு—தீய பண்பு என்று இரண்டு. நற்பண்புகள் மாட்சிமைப்பட்டிருப்பதுதான் மாண்பு. அந்த மாண்புக்குரியவர் மாணவர். அந்த மாணவர்கள் மாண்புகளுக்கு உரியவர்களாக பல்வேறுவகையிலும் ஆகவேண்டும் என்கிற அடிப் படையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் செய்ய வேண்டியவை எவை, எவை, செய்யக் கூடாதவைகள் எவை எவை என்பன தெளிவாக போதிக்கப்பட்டாகவேண்டும்.

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்

என்று வள்ளுவப்பெருந்தகை குறிப்பிட்டதுபோல அவர்கள் எவை எவைகளைச் செய்ய வேண்டும், எவை எவைகளைச் செய்யக்கூடாது என்பதைப் பாடங்களில் எடுத்துச் சொல்கிறோம்.

குடியின் தீமையைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி குடிப்பழக்கத்திற்கு ஆளாகக் கூடாது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபாடு இல்லை. மாணவர்களிடத்தில் குடிக்கக்கூடாது என்கிற நற்பண்பு வளர்க்கப்பட வேண்டும் என்று விரும்புவது வேறு. இக் கருத்துடைய பாடங்களைத் தயாரித்து செலபசிலேயே கொண்டு வந்துவிடவேண்டும் என்பது வேறு. அப்படிக் கொண்டுவருவதில் பல கடினம் இருக்கிறது. திரு ஹாண்டே. அவர்களும் குறிப்பிட்டார்கள். திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதை செலபஸ் என்ற அளவில் கொண்டுவர முடியாது. ஆனால் இப்போதுள்ள பாடங்களிலேயே—இதுபோன்ற நற்பண்புகள் எல்லாம் அவர்களிடத்தில் ஏற்படுவதற்கு வசதியாக கருத்துரைகள் தொடர்ந்து இருந்து வருகிறது. இவற்றை சிறப்பாக எடுத்து போதிப்பதற்கு ஏற்ற இடம்—திரு. ஹாண்டே



அவர்கள் குறிப்பிட்டதைப்போல—வாரத்திற்கு ஒரு வகுப்பு ஒழுக்கக்கல்வி என்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதே அதுதான். மாரல் இன்ஸ்ட்ரெக்ஷன்—ஒழுக்கக்கல்வி ஒவ்வொரு பள்ளியிலும் கட்டாயமாக வாரத்திற்கு ஒரு வகுப்பு என்று ஒதுக்கி நடத்தப் படவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். சில இடங்களில் 'செலபஸ் முடியவில்லை' என்பதற்காக அந்த ஒரு வகுப்பை வேறு பாடம் நடத்துவதற்கு முன்பு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அதுபோல ஒழுக்கக்கல்விக்காக ஒதுக்கப்பட்ட வகுப்பை வேறு எதற்கும் எடுத்துக்கொள்ளாது—மாணவர்களிடையே நற்பண்புகள் வளர்வதற்கு ஏற்ற ஒழுக்கக் கல்வி போதிக்கப்படவேண்டும் என்பதாக அரசு வற்புறுத்தியிருக்கிறது. பிஞ்சு உள்ளங்களாக இருக்கிறபோதுதான் நம்முடைய நற்பண்புகளின் அருமை பெருமைகளை எடுத்துச்சொல்லி அவர்களுடைய மனத்திலே ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முயன்றாக வேண்டும் என்கிற அடிப்படையில் இப்போதே ஒவ்வொரு பள்ளியிலும் ஒழுக்கக்கல்வி நடைபெற்று வருகிறது. மாணவர்களால் மதிக்கப்பட வேண்டிய வைகள் எவை எவை, ஒதுக்கப்படவேண்டியவைகள் எவை எவை, கல்வி பெறுவதன் அடிப்படையே எவை எவை என்பன எல்லாம் எடுத்துக் கூறப்படுகின்றன.

பஞ்சமா பாதகங்கள் என்பதில் குடி ஒன்று. கொலை, களவு, காமம், சூது, குடி ஆகியவை தவிர்க்கப்படவேண்டும் என்று உலகைத் திருத்த வந்த அறிஞர் பெருமக்கள் எல்லாம் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். குடிக்காக ஒரு செலபஸ் என்றால், அப்புறம் கொலைக்காக ஒரு செலபஸ், சூதுக்காக ஒரு செலபஸ் என்றெல்லாம் வைத்துப்போவது கடினமாக இருக்கும். உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போன்று இப்போதே நீதிநெறி விளக்கம், அறநெறிச் சாரம், சிறுபஞ்சமூலம், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் என்கிற இலக்கியங்கள் எல்லாம் பாடங் களாகப் புகுத்தப்பட்டு மாணவர்களுக்கு நற்பண்புகள் வளர அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. பள்ளிகளுக்குப் பாட திட்டத்தை அமைக்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆனால் கல்லூரிப் பாடத் திட்டங்களை அமைக்கிற பொறுப்பு பல்கலைக் கழகத்திடம்தான் இருக்கிறது. ஆயினும் கல்லூரிகளில்கூட தமிழ் இலக்கியங்களில் வள்ளுவர் எழுதிய—கள்ளுண்ணாமை பகுதி வைக்கப்படுகின்றது. இப்படி குடியினால் வரும் கேடுகள் பற்றி மாணவர்களுக்கு அங்கங்கே எடுத்துச்சொல்கிற முறை இருப்பதன் காரணமாகத் தனியாக செலபஸ் என்ற முறையில் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.

அதுவும் பள்ளிகள் என்கிறபோது 1-வது வகுப்பிலிருந்து 11-வது வகுப்பு வரை இருக்கிறது என்றால் இங்கே பல சங்கடங்கள் வரும். இதிலே 5 முதல் 17 வயது வரை உள்ளவர்கள் தான் இருப்பார்கள். நாம் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மதுபானம் விற்கக்கூடாது என்றே இந்தச் சட்டத்திலும் கொண்டுவந்திருக் கிறோம். பர்மிட் வைத்திருப்பவர்கள் அப்படி. விற்றால் அவர்கள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 டிசம்பர் 9

மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் முடியும். சட்டம் இடம் தருகிறது. ஆக இந்த வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இதைப்பற்றிய விளக்கங்கள் சொல்வது மிகவும் சிக்கலானது. பொதுவாக குடி என்பது வாழ்வை அழிக்கின்ற ஒன்று, அறிவை மழுங்க வைக்கின்ற ஒன்று, அறிவை இழக்க வைப்பதுடன் மற்றவர்கள் நம்மைக் கண்டு எள்ளி நகையாடச் செய்கின்ற ஒன்று.

வள்ளுவர்கூட ஓரிடத்திலே, குடித்தவரைத் திருத்தி, சரியானபடி நடத்த முடியாது என்கிறார். குடித்தவனைத் திருத்துவது என்றால், விளக்கை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குள் மூழ்கினவனைத் தேடுவதுபோல் இருக்கிறது என்கிறார். கையிலே விளக்கை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குள் போகும் போதே விளக்கு அணைந்து விடும். அப்படி இருக்கத் தண்ணீருக்குள் மூழ்கினவனை விளக்கின் துணைகொண்டு எப்படி தேட முடியும்? அதுபோல குடித்தவனைத் திருத்திச் சரியான நிலைக்குக் கொண்டு வருவது அவ்வளவு கடினமானது என்கிறார். இந்தக் கருத்தை வள்ளுவர்கூடச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போய், கடைசியில் மிக்க சலிப்போடுதான், மிக அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். இதையும் மீறிச் சிலர் குடிக்கிறார்கள். குற்றங்களை இழைக்கிறார்கள் என்பதற்காக நாம் நல்லொழுக்கப் போதனைகளை விட்டுவிடக் கூடாது போதனைகளினால் பலன் பெறுகிறவர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஒரு சிலர் குற்றங்களுக்காளாகிறார்கள். அவர்களுக்காகத்தான் தண்டனைகள் போன்றவை இருக்கின்றன.

இதைப் பாடத் திட்டத்தில் வைக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. குடி கூடாது, அது தீயது என்பதை ஒழுக்க போதனை மூலமாகவும், வேறு வகையிலேயும் செய்து செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். குடித்துவிட்டு மாணவர்கள் தகராறு செய்தாலோ, இடையூறு செய்யும் முயற்சிகளில் இறங்கினாலோ கல்லூரி முதல்வர்களோ, தலைமை ஆசிரியர்களோ அவர்களின்மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. மேலும், 21 வயதுக் குட்பட்டவர்களுக்கு மது விற்பனை செய்தால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒழுக்கக் கல்வியின் மூலமாக மேலும் மேலும் இதைச் சீர்ப்படுத்த முடியும். சட்டத்தின் மூலமாக இதைச் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், சிலபஸ் அளவிலே பாடமாக வைக்க இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத்தவிர, உறுப்பினர்கள் வேறுபல யோசனைகளைச் சொன்னாலும் அதை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தலாம். இதற்காக நாடகங்களைத் தயாரித்து மக்களுக்குப் புரிய வைக்கலாம். பிரச்சாரம் செய்யலாம். மக்களின் உள்ளத்தில் பதியத் தக்க அளவிற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்



1971 டிசம்பர் 9] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

படுகின்றன. நான் கூறிய இந்தக் கருத்துக்களை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் டென்னிஸ் அவர்கள் தமது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. டென்னிஸ் அவர்களின் கருத்தை எடுத்து மேற்கொள்ளவிருக்கிற காரணத்தால் இந்த விளக்கத்தின் அடிப்படையில் அவர்கள் தமது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். குழு ஒன்றை அமைத்து அதில் யார் யார் எல்லாம் இருக்கலாம் என்பது பற்றிச் சொன்னார்கள். அது எவ்வளவு கடினமானது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது புது குடிகாரர்கள் எத்தனை பேர். பழைய குடிகாரர்கள் எத்தனை பேர் என்று பார்க்க வேண்டும். பழைய குடிகாரன் என்று எந்த குடிகாரனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். மேலும் பலர் நன்றாகக் குடித்துவிட்டு வெளியில் வந்து குடிக்காதவர்கள் மாதிரி, தங்களை காட்டிக்கொண்டு "குடிக்கக் கூடாது குடிப்பதனால் கேடுகள் உண்டாகின்றன" என்று எடுத்துச் சொல்பவர்களாக இருக்கிறார்கள். (சிரிப்பு)

எனவே, ஏற்கெனவே இருந்த அளவைவிட இப்போது குடிப்பவர்களின் எண்ணிக்கை சற்று மிகுந்திருக்கிறது. இதை யாரும் மறுக்கவில்லை, அரசாங்கமும் மறுக்கவில்லை. அப்போது சட்டமே இருந்தது, குடிக்கக் கூடாது என்று. அதுவும் இரவு நேரத்தில்தான் குடிக்க வேண்டும் பொது இடங்களில் குடிக்கக் கூடாது என்றெல்லாம் பல கட்டுத்திட்டங்கள் அப்போது இருந்தன. இப்போது கடைகளைத் திறந்து வைத்திருக்கிறார்கள் வாங்கலாம், குடிக்கலாம் என்ற நிலைமையில் அந்த எண்ணிக்கை மிகுதியாக வளர்ந்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த அளவிற்குத்தான் குடிகாரர்கள் இருக்கிறார்கள் என்று எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ளவில்லை. மது அருந்துவது தீயது என்பதை பிரச்சாரத்தின் மூலமும் வேறுபல வகைகளிலும் முயற்சிகள் எடுத்துக்கொண்டு கட்டுப்படுத்தலாம். இந்த விளக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் தமது தீர்மானத்தை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. DENNIS : In view of the statement made by the Hon. Minister, I am not pressing my resolution.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** கனம் உறுப்பினர் அவர்கள் தம்முடைய தீர்மானத்தை வற்புறுத்தாததால், அந்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. அடுத்த தீர்மானம்.

(ஆ) கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு.

***திரு. கே. டி. கே. தங்கமணி :*** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Mr. Deputy Speaker, Sir, I would like to read the resolution in English because I find there is a slight modification in the translation.

" This House is of opinion that suitable legislation be ntroduced and passed at an early date for protection of the Handloom Sector and for enforcing the rights of Handloom-weavers "

*தீர்மானம் முறையாக வழிமொழியப்பட்டது.*

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்ததன் நோக்கம் இரண்டு ஆகும். ஒன்று, அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களைப்பற்றியது. இரண்டாவது, கேந்திரமாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்பதைப்பற்றியது. ஆகவே, இந்த இரண்டு விஷயங்களைப்பற்றியும், நமது சட்டசபையில் இருக்கக்கூடிய உறுப்பினர்களில் பெரும்பாலோருக்கு விவரங்கள் நன்றாகத் தெரியும் என்ற காரணத்தால் சில பிரதான விஷயங்களை மட்டும் உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன்.

நமது கைத்தறித் தொழிலைப்பற்றி ஆண்டுதோறும் விழா நடக்கிறபோது பல அறிஞர்கள் எல்லாம் வந்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுகிறார்கள். இந்தியாவிலே ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிற காரணத்தால், வெகு அண்மையிலே 19-8—1971-லே பாரதப் பிரதமரைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கக்கூடிய முக்கியமான தலைவர்கள் எல்லாம் சேர்ந்து அவரைப் பார்த்து ஒரு மகஜர் சமர்ப்பித்தார்கள். தமிழகத்திலிருந்துகூட சேலத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவுத் தொழிலாளரில் ஒருவர், இந்தத் தூதுக் குழுவில் சென்றிருந்தார். இந்தத் தூதுக் குழுவானது விவரமாக இந்தத் தொழிலைப்பற்றிப் பேசாமலிருந்தாலும்கூட. சில முக்கியமான விஷயங்களை வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த விவரங்களைப் பார்த்தால் இன்றைக்கு இந்த நாடு பூராவிலும் 30 லட்சம் தறிகள் இருக்கின்றன. இந்தத் துறையிலே நேரிடையாகப் பணியாற்றக் கூடியவர்கள் 75 லட்சம் பேர் இருக்கிறார்கள். உப தொழில்களை யெல்லாம் சேர்த்து அதில் பணியாற்றுபவர்களைப் பார்த்தால் 2 கோடிப் பேராவது கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைத் தமிழகத்தோடு இணைத்துப் பார்ப்போமானால்—சரியான விவரத்தை அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டுச் சொல்கிறபோது கொடுப்பார்கள்—எனக்குக் கிடைத்த விவரத்தின்படி மொத்தத் தறிகளில் நான்கில் ஒரு பகுதி தமிழகத்தில் இருக்கிறது. ஏழு லட்சம் தறிகளுக்கு மேலாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலில் எப்படியும் 25 லட்சத்திலிருந்து 30 லட்சம் பேர் வரையிலாவது பணியாற்றும் நிலைமை இருக்கிறது.





(திரு. நா. வீராசாமி—தலைமை)

ஆகவேதான் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களைப்பற்றிப் பேசுகிறபோது, பேசாமல் இருக்க முடியவில்லை. இந்தத் தொழிலில் உற்பத்தியாகக்கூடிய சரக்குகளை எல்லாம் சாதாரணமாக துண்டுத் தறி என்று சொல்வார்கள். வேஷ்டி நெசவு பண்ணக்கூடிய தறி, புடவைகள் பண்ணக்கூடிய தறி, பெட்ஷீட்டுகள் நெய்யக்கூடிய தறி, ஜமுக்காளங்கள் பண்ணக் கூடிய தறி என்றெல்லாம் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் சில்க் கைத்தறியும் முக்கியமான பல இடங்களில் இருக்கின்றன என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தத் தொழிலில், அதிகாரப் பற்றற்ற முறையில் பார்த்தால் வருடத்திற்கு 50 கோடி ரூபாய்க்குக் குறையாத அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. 50 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்தச் சரக்குகளை விற்பதற்கான ஒரு ஏற்பாடு செய்வது அரசினுடைய பொறுப்பாக வந்து சேருகிறது.

ஆகவே, அந்தத் தூதுக் குழுவினர் மத்திய அரசின் பேரிலே ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதுவரையிலும் கைத்தறி நெசவாளர்களுக்காக இருக்கக்கூடிய ஆல் இண்டியா ஹேண்ட்லூம் போர்டு, அகில இந்திய கைத்தறி வாரியத்திலே நடக்கின்ற கூட்டங்களுக்கு முக்கியமானவர்கள்தான் போகிறார்கள். சர் அக்பர் ஹைதரி, டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி, டி.டி. கிருஷ்ணமாச்சாரி, மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி, இப்படிப்பட்டவர்கள் எடுத்த முடிவை அமல் நடத்தச் சக்தி உள்ள அமைச்சர்கள் எல்லாம் அதிலே பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆனால் அந்த முக்கியத்துவம் குறைக்கப்பட்டு அமல்நடத்தச் சக்தியில்லாதவர்கள்தான் இருக்கிறார்கள் என்று குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலே இன்றைக்கு இவ்வளவு கேந்திரமாக இருக்கக் கூடிய கைத்தறித் தொழில், பல தொழில்கள் எல்லாம் இருக்கக் கூடிய ஒரு அமைச்சரிடத்திலேதான் கொடுக்கப்பட்டிருக்கிறது, கைத்தறி, வேறு தொழில்கள், இன்னும் சட்டம், சிறைச்சாலை இப்பேர்ப்பட்ட பல இலாக்காக்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் இவையெல்லாம் ஒரே அமைச்சரிடத்தில்தான் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பின்தங்கிய வகுப்பினருக்காக ஒரு தனி அமைச்சர் அமைக்கப்பட்டதை எல்லோரும் வரவேற்கிறார்கள். அதேமாதிரித் தமிழகத்திலே கைத்தறிக்கும்—கைத்தறியைப் போன்ற குடிசைத் தொழிலை வேண்டுமென்றால் அதோடு சேர்க்கலாம்—அதற்காக மட்டும் தனியாக ஒரு அமைச்சர் இருப்பாரானால் தமிழக அரசு கைத்தறிபால் அக்கறை காட்டுகிறார்கள் என்பது மட்டுமல்லாமல் நடைமுறையிலே அக்கறை காட்டுகிறார்கள் என்று அர்த்தமாகும். எப்படி அவர்கள் மத்திய அரசிலே கைத்தறிக்குத் தனி அமைச்சர் வேண்டுமென்று கேட்டார்களோ அதேமாதிரித் தனி அமைச்சர் இங்கே வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 9

அப்படிச் செய்வோமானால் தமிழ்நாட்டிலே எந்த எந்தக் காலங்களிலே துணிகள் தேங்குகின்றன ; எந்த எந்தக் காலங்களிலே துணிகள் அதிகமாக விற்பனையாகின்றன ; எம்மாதிரியான சரக்குகள் மற்ற மாநிலங்களுக்கு உகந்ததாக இருக்கின்றன ; வெளிநாடுகளிலே என்ன என்ன சரக்குகள் அதிகமாக விற்பனையாகின்றன என்பதையெல்லாம், எக்ஸ்போர்ட் புரமோஷனுக்காக இருக்கக்கூடிய கவுன்சில் இருந்தாலும், அரசே திட்டமிட்டு ஏற்பாடு செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தொழில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, கைத்தறியைப் பொறுத்தவரையிலும் அநேகமாக 1944-ஆம் வருஷத்திலிருந்து கைத்தறி நெசவாளர்களிடம் ஓரளவுக்குத் தொடர்பு எனக்கு மதுரையிலே ஏற்பட்டது. அந்த நேரத்தில் நூல் கிடைப்பது மிகக்கஷ்டமாக இருந்தது. தறிகளையெல்லாம் பரிசீலனை செய்தபிறகே அதற்கேற்ப நூல் சப்ளை செய்யவேண்டுமென்று அங்கிருந்த நெசவாளர்கள் சங்கம் ஏற்பாடு செய்து மதுரைதான் அதற்கு வழிகாட்டியது. அதற்குப் பின்னால் இப்பொழுது அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால் அதைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகத்தான் செய்யமுடியும் என்று ரேயான் போன்றவர்கள் மிகச் சிறப்பாகக் கூட்டுறவு இயக்கத்தை இந்தியாவிலே ஆரம்பித்து நடத்தி கூட்டுறவு மேம்பட்டு இருக்கின்ற நாடுகள் எல்லாம்கூட அவரைப் போற்றக்கூடிய வகையிலே இருந்தது. கூட்டுறவு மூலம் உற்பத்தி 100-க்கு 80 சதவீதம் என்ற அளவுக்கு இருந்ததுபோய் இன்றைக்கு 100-க்கு 20 சதவீதம்தான் கூட்டுறவு மூலம் உற்பத்தி நடக்கின்றது என்ற பரிதாபகரமான நிலைமை வந்திருக்கிறது.

புதிய புதிய சொஸைடிகள் அமைக்கிறோம் என்று பட்ஜெட்டிலே கூறப்படுகிறது. ஆனால் இருக்கக்கூடிய சொஸைடிகள் ஏன் மூடப்படுகின்றன என்று தெரியவில்லை. மூடப்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். செயல்பாட்டில் குறைபாடுகள் இருக்கலாம், அவர்களுக்கு நூல் கிடைக்கக்கூடிய அமைப்பில் இருக்கின்ற கோளாறாக இருக்கலாம். ரிசர்வ் பாங்கிலிருந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பினார்கள். அந்த அறிக்கையைப் பார்த்தால் எந்தவிதமான கூட்டுறவு அமைப்பும் செயல்படமுடியாத நிலைமைதான் இருக்கிறது. அதனுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஸ்டேட் பாங்கோ அல்லது வேறு நேஷனலைஸ்டு பேங்கோ கொடுக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்ற ஆலோசனையைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்மூலம் நன்றாகச் செயல்படாத சொஸைடிகளுக்கு உதவி செய்யவோ அல்லது மூடப்பட்டுவிட்ட சொஸைடிகளைத் திறப்பதற்கோ முயற்சி எடுக்க வேண்டும். அது மத்திய அரசினுடைய பொறுப்பு என்று விட்டுவிடக்கூடாது. தமிழக அரசே இதிலே முன்நின்று ஏற்பாடு செய்தால்தான் சீக்கிரமாக உதவிசெய்யமுடியும். அப்படிச் செய்தால் அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கக்கூடிய தொழிலாளர்களும் நிர்வாகஸ்தர்களும் பெரிதும் வரவேற்பார்கள் என்பதிலே எந்தவிதமான ஐயமும் கிடையாது.



1971 டிசம்பர் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கைத்தறிக்கு வரக்கூடிய துணிகள் இருக்கிறதே—காட்டன் ஹேண்ட் லூம் பற்றித்தான் நான் சொல்கிறேன்—நூலைப் பொருத்தவரையில் அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். கூட்டுறவு அமைப்புகள்மூலம் தயாரிக்கப்படுகின்ற நூல் கூட்டுறவு மில்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பல சிக்கல்கள் காரணமாகக் கிடைக்கவில்லை. குறைந்த விலையில் நூல் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வது மிகமிக அவசியமாகும். தனியார்களுக்கு நூல் கிடைப்பதற்கு ஒரு பூலிங் சிஸ்டம் வைத்திருந்தார்கள். மத்திய அரசு அமைத்ததுதான் அது. மதுரை போன்ற இடங்களிலே இதன் மூலம் நூல் சரியாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அதனால் அந்த சிஸ்டம் சில சமயங்களிலே சரியாக இருப்பதும், சில சமயங்களிலே சரியாக இல்லாமலும் போகக் கூடியதாக இருக்கிறது. எனவே கூட்டுறவு சொஸைடிகளுக்கு நூல் கண்ட்ரோல் விலைக்குக் கிடைக்கச் செய்வது தமிழக அரசினுடைய முக்கியமான பொறுப்பு என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல் கைத்தறிக்குப் பெரிய சரித்திரம் ஏதாவது உருவாகியிருக்கிறதென்றால் அது தமிழகத்திலேதான் உருவாயிற்று. 1952-ஆம் ஆண்டு சி. ராஜகோபாலாச்சாரி தலைமையிலே ஆட்சி நடந்துகொண்டிருந்தபொழுது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து 100 பேர்கள் ஊர்வலமாக வந்து 'பட்டினிப் பட்டாளம்' என்று தங்களை அறிமுகப்படுத்தினார்கள். அன்றைக்குத் தமிழ்நாட்டு அரசின் முயற்சி காரணமாக மத்திய அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி கரைபோட்ட வேஷ்டியும் கலர் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கினார்கள். அதிலே இருக்கக்கூடிய ஊனம் எனக்குத் தெரியும். நான் நாடாளுமன்றத்திலே அதைப்பற்றிக் கிளப்பியிருக்கிறேன். வெள்ளை வேஷ்டியில் கரையில்லாத வேஷ்டியில் கரையைப் போட்டுக்கொள்வதும், சாதாரணத் துணிகளை உற்பத்திசெய்து பிறகு கலர்செய்யக்கூடிய நிலைமையும் பக்கிங்காம் மில்லிலே நடந்துகொண்டிருக்கிறது, இந்தியா பூராவும் நடந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரியில்லாமல் கைத்தறிக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறிக்கு அகில இந்திய ஹேண்ட்லூம் போர்டு என்பது ஒரு அமைப்பாக இருந்தாலும் சட்ட ரீதியாக இருக்கக்கூடிய அமைப்பாக இருக்கவேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையிலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சமயத்திலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. நான் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் சோவியத் யூனியனுக்குச் சென்றிருந்தபோது ஒரு அழகான பாவாடையை ஒரு அம்மையார் உடுத்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் பாவாடையின் மேலே இருந்த கலர் ஊதா கலர். உள்ளே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 டிசம்பர் 9

இருந்த கலர் பச்சை. வெகு அழகாக இருந்தது. நான் அம்மையாரிடத்திலே கேட்டேன், இம்மாதிரித் தறி இந்த நாட்டில் இருக்கிறதா என்று. இல்லை இல்லை தமிழகத்திலிருந்து வந்த ஒருவர் இதை எனக்குச் சன்மானமாகக் கொடுத்தார் என்று சொன்னார்கள். அதைப்பிறகு பார்க்கும்பொழுது கரூரிலேயிருக்கும் இரண்டு கலர்
பி.ப. 12-30 பெட்ஷீட் என்று தெரிந்துகொண்டேன். டூரபிலிட்டி ஐந்தாண்டுக் காலம் ஆகியும்கூடக் கெடவில்லை என்று சொன்னார்கள். நான் சென்றபொழுது நான் கொடுத்த சன்மானம், காஞ்சிபுரத்திலேயிருக்கும் காஞ்சிபுரம் புடவை ஒன்றை மூன்றாக வெட்டி லுங்கியாக சன்மானமாகக் கொடுத்தேன். அந்த சன்மானத்திற்கு இருந்த மதிப்பு வேறு எதற்கும் இல்லை என்பதற்காகச் சொன்னேன். சோவியத் யூனியன் போன்ற மேம்பட்ட நாடுகளில்கூட கைத்தறியிலுள்ள அழுத்தம் போன்று இல்லை என்பதை ஒப்புக் கொண்டார்கள். எனவே அந்த கைத்தறி ஏற்றுமதிக்கு அதிகக் கவனத்தையும், கவலையையும் தமிழக அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வண்ணம்மாவும் சென்னைத் துணியைப்பற்றி அதிகமாகப் பேசினோம். ஆனால் இன்று சில்க் அதிகமாக ஏற்றுமதியாகிறது. மற்றும் ஹேண்ட் கர்சீஃப்—ஹேண்ட் கர்சீஃப் என்றால் கைக்குட்டை அல்ல—கிட்டத்தட்ட 6 கெஜ நீளமும், 1 கெஜ அகலமும் உள்ள நீண்ட துணி. அதை ஆப்பிரிக்காவில் ஆண்களும், அதிக அளவில் பெண்களும் உடுத்தினார்கள். ஆகவே, நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால் ஏற்றுமதி சம்பந்தமாக, நிதானமாகப் பரிசீலனை செய்து, ஏற்றுமதிக்கு இருக்கும் ஆபீசே சென்னையில் தான் இருக்கிறது என்றாலும்கூட குறை சொல்ல முடியாத அளவிற்கு ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்து பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய வெளிநாட்டு ஏற்றுமதி எவ்வளவு என்பதைக் கணக்கு வைத்திருக்கிறார்கள். 1956-ஆம் வருஷம் வரையில், கைத்தறித் துணி எவ்வளவு ஏற்றுமதி, மில் துணி எவ்வளவு ஏற்றுமதி என்று கணக்கு வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது மில் துணி ஏற்றுமதியையும் கைத்தறித் துணி ஏற்றுமதியையும் ஒன்றாகக் கலந்து ஏற்றுமதி எவ்வளவு என்றுதான் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாகத் தமிழகத்திலிருந்து எவ்வளவு ஏற்றுமதி என்ற விவரங்களைத் தமிழகத்திலேயிருக்கும் சட்டசபைக்கு சமர்ப்பிக்கும் முறையிலே விவரங்களை அளிக்கவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர்கள் விஷயத்தைப்பற்றி நான் கொஞ்சம் கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறேன். தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் என்னைப்போன்றவர்கள் பேசுவதற்கு ஆரம்பித்தால் எவ்வளவோ விவரங்கள் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், சுருக்கமாகச் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1971 டிசம்பர் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பீடித் தொழிலாளிகளுக்கு அவர்களது வேலைநேரம் மற்றவைகளுக்குப் பாதுகாப்பதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்த முதலாளிகள் ரிட் மனு போடுவது வேறு விஷயம். ஆனால் பீடித் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று ஒரு சட்டம் இருக்கிறது. அதேமாதிரி சுருட்டுத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு இன்றைக்குச் சட்டம் இருக்கிறது. பீடித் தொழிலாளிகளைப்போல் கிட்டத்தட்ட அந்த முறையில்தான் கைத்தறி நெசவாளத் தொழிலாளிகளும் வேலை செய்கிறார்கள். ஒன்று சொசைட்டியிலே செய்யும் தொழிலாளி, இன்னொன்று தனியாரிடம் வேலை செய்யும் தொழிலாளி, பேக்டரி முறையிலே இருக்கலாம் அல்லது மதுரையிலே கிழக்குப் பகுதியிலே மாஸ்டர் வீவர்ஸிடம் நேரடியாக நூலைக் கொடுத்து அந்த வீட்டிலே தொழில் நடத்தச் செய்து பிறகு துணியைக் கொண்டுவந்து நடத்தக்கூடிய அமைப்பிருக்கிறது. இதை மகாத்மா காந்தி அவர்கள் மிகவும் போற்றினார்கள். வீட்டிலே வேலை செய்து கொண்டு, சோம்பேறித்தனமாக இல்லாமல் நாட்டின் செல்வத்தைப் பெருக்க நம்முடைய தாய்மார்கள் ஈடுபட்டிருக்கும் அருமையான காட்சியை பார்த்தேன் என்று மதுரைக்கு வந்திருந்தபொழுது தான் சொன்னார்கள். அது குடிசைத் தொழிலாகவும், வீட்டிலேயுள்ள எல்லோரும் வேலை செய்யக்கூடிய முறையிலேயும் அமைந்திருக்கிறது. வீட்டிலே எல்லோரும் வேலைசெய்தாலும்கூட மாதம் பூராவிற்கும் வரும் வருமானம் 100 ரூபாய்கூட கிடைப்பது சந்தேகம்தான். மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. ஆகவே கைத்தறி வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு, குறைந்தபட்ச சட்டம் 48-லே, அதன் ஷெட்யூலில் தமிழகத்தைப் பொறுத்த வரையிலே உடனடியாகச் சேர்க்க வேண்டும். அதில் கஷ்டமே கிடையாது. மத்திய அரசாங்கத்தின் சட்டமாகயிருந்தாலும்கூட அந்தச் சட்டத்தில் எந்தெந்தத் தொழில்களைச் சேர்க்க வேண்டுமென்ற அதிகாரம் தமிழக அரசுக்கு இருக்கிறது. இந்த விவாதத்திற்குப் பின்னாலாவது கண்டிப்பாகத் தமிழகத்தில் சேர்க்கப்படவேண்டும், அந்த வாக்குறுதியைக் கொடுத்தால் கைத்தறி தொழிலாளிகளுக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அவர்களுக்கு வேறு எந்தவிதமான பாதுகாப்பும் இருக்கிறதா என்றால், இல்லை. ஒவ்வொரு வருஷமும் கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் நடத்தும் போராட்ட முறையே மகாத்மா காந்தியின் போராட்ட முறைதான். அதிகப்படியான போராட்டம் என்று ஏதாவது இருக்கும் என்று சொன்னால் உண்ணாவிரதம் இருப்பார்கள். உண்ணாவிரதம் இருந்து ஆண்களும் பெண்களும் சேர்ந்து மத்திய அரசுக்கு எதிராகச் செய்ய வேண்டுமென்று சொன்னால் இரயில்வே ஸ்டேஷனுக்குப் போவார்கள், தண்டவாளத்தில்கூட உட்காருவார்கள். மிகவும் அமைதியாக நடத்துவார்கள். 1968-ஆம் வருஷம் என்று நினைக்கிறேன். பரமக்குடியில் ஒரு மகத்தான போராட்டம். இன்றைக்கு, ரிசர்வ் பேங்கின் உத்தரவை மாற்ற வேண்டுமென்பதற்கு அவர்கள்

நடத்திய போராட்டம் தமிழக மக்களுக்கு மட்டும் பெருமை தரக்கூடியது அல்ல, இந்தியாவில் மூலை முடுக்குகளில் உள்ள எல்லாக் கைத்தறி நெசவாளர்களும் வரவேற்றார்கள். அப்படிப் பட்ட போராட்டங்களைத்தான் அவர்கள் நடத்துகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இந்த வசதி வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும்.

இந்த கைத்தறி தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே எல்லா இடத்திலும் பரவலாக இருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல முடியும். மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் மாஸ்டர் ப்ரொடியூசர்களாக இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட்டு, இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் இலாபமாகச் சம்பாதிக்கும் அளவிற்குப் பெரும்புள்ளிகளாக மாஸ்டர் வீவர்ஸ் இருக்கிறார்கள். இன்றைக்கு பரமக்குடியை எடுத்துக்கொண்டால் அல்லது மதுரையை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 7, 8 குடும்பங்களுக்குள்ளேதான் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது தொழிலாளர்கள் எந்தக் காரியத்தைச் செய்ய முடிகிறது ? இந்தத் தொழிலாளிகள், தொழிலாளிகளா இல்லையா என்ற சர்ச்சை இன்றைக்கும் முடியவில்லை. திரு. நாராயணசாமி என்பவர், 46-இல் என்று நினைக்கிறன், அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர், அவர்கள் இம்மாதிரி குடிசைத் தொழிலைப்பற்றி முதன் முறையாக நம்முடைய தமிழகத்தில் ஆராய்ச்சி நடத்தியதில் 2, 3 ரிபோர்ட்டு கொடுத்திருக்கிறார்கள். அதிலே கைத்தறி நெசவாளர் களைப்பற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

'There is an employer-employee relationship'.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் 50, 60 பேர் என்று இல்லாமல் இருக்கலாம். ஆனால் மாஸ்டர் வீவர்ஸ் நேரடியாக நூலைக் கொடுக்கிறார்கள். ஃபினிஷ்ட் ப்ராடக்டை அவர்கள் திரும்ப வாங்கிக்கொண்டு செல்லும் நிலை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கும் அது தீர்ந்தபாடில்லை.

சென்ற வருஷம் என்று நான் நினைக்கிறேன், கும்பகோணத்திலே பட்டு நூல் தொழிலாளிகள், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தங்களுக்குச் சம்பள உயர்வு வேண்டுமென்ற இயக்கத்தை நடத்தினார்கள். கடைசியிலே ஆர்.டி.ஓ. முன்பாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. லேபர் ஆபீசரும் ஏதோ ஒரு ஒப்பந்தம் செய்தார். பிறகு, ஹைகோர்ட்டிற்குப் போனபிறகு ஹைகோர்ட் இம்மாதிரி யான ஒப்பந்தம் இந்த முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் செய்ய முடியாது என்ற அளவில் தீர்ப்பு கொடுத்துவிட்டார்கள். கலெக்டர் முன்னாலேயெல்லாம் தலையிடுவார்கள். ஒப்பந்தம் செய்கிறார்கள். அதற்கு ஸ்டாச்சுடரி, அதிகாரம் இல்லாமல் இருக்கிறது. டுவல் த்ரீ ஒப்பந்தம் என்று சாதாரணமாகத் தொழிற் சங்கத்திலே சொல்லுவார்கள்.

'Twelve-three' *oppandham* is more in the nature of Award. No Award can be given which is binding on the employer.



இந்த பொசிஷன் மாற வேண்டும். தொழிலாளி, முதலாளி என்ற உறவு இருக்கிறது என்பதை நிலைநாட்ட வேண்டும். அதுமட்டு மல்லாமல், தொழிலாளி சார்பில் பேசுபவர்கள் மாஸ்டர் வீவரஸ், சார்பில் பேசுபவர்கள் செய்யும் ஒப்பந்தங்கள் சட்ட ரீதியில் அமல் நடத்தக்கூடிய ஒப்பந்தங்களாக ஆகவேண்டும். அப்படிச் செய்தால் பலப்பலச் சிக்கல்கள் தீர்ந்துவிடும் என்பதை நான் இந்த இடத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் ஆரம்பத்தில் சொன்னது மாதிரி தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கைத்தறி நெசவாளர்கள் குவிந்திருக்கிறார்கள். மதுரையில் இருக்கிறார்கள் ; இராமநாதபுரத்தில் இருக்கிறார்கள் ; திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறார்கள் ; கன்னியாகுமரியில் இருக்கிறார்கள், சென்னையைச் சுற்றியெல்லாம் இருக்கிறார்கள். எந்த மாவட்டத்திலும் கைத்தறி நெசவாளர்கள் இல்லையென்று சொல்ல முடியாது. இவர்கள் இருக்கக்கூடிய அமைப்பு முறைகள் மாறி மாறி இருக்கலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் ஃபாக்டரி முறையே வைத்திருக்கிறார்கள். பெரும் பணக்காரர்கள் ஐநூறு தறிகள், ஆயிரம் தறிகள் என்று வைத்திருக் கிறார்கள். கரூர் போன்ற இடங்களிலும் ஃபாக்டரி மாதிரி வைத்திருப்பவர்கள் இருக்கிறார்கள். கரூரில் ஒரு தீர்ப்பு வந்தது. ஃபாக்டரி எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்ட் படி இதிலே தொழிலாளி களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே உறவு இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய கைத்தறித் தொழிலாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

பட்டு நூல் சம்பந்தமாகச் சில விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து வரக்கூடிய சட்ட மன்ற உறுப்பினர்கள் நான் சொல்லுவதை சரி என்று ஏற்றுக்கொள்ளுவார்கள். இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஐயாயிரம் தறிகள் இருக்கின்றன. கும்பகோணம், தாராசுரம், பட்டீசரம், சோழன்மாளிகை, திருபுவனம், அம்மாசத்திரம், ஆடுதுறை, குறிச்சிமலை, திருமங்கலக் குடி, கதிராமங்கலம், வலங்கிமான், திருச்சேறை, அம்மாப் பேட்டை, அய்யம்பேட்டை, மணச்சநூர், கண்டியூர், கபிஸ்தலம் போன்ற இன்ன பல இடங்களில் பட்டுத் தறிகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் கைத்தறிகளே இல்லையென்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் நான் இவைகளை எல்லாம் சொன்னேன். சாதாரண நூல் கைத்தறி இல்லாமல் இருக்கலாம். இந்த இடங்கள் பூராவும் பட்டு நூல் கைத்தறிகள் இருக்கின்றன. இதிலே நெசவு செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு மாஸ்டர் வீவர்ஸ் கொடுக்கக்கூடிய கூலிக்கும் சொசைட்டியில் கொடுக்கக்கூடிய கூலிக்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஒரு பாவுக்கு 36 கஜம் உள்ள ஒரு பாவில் ஆறு

புடவைகள் உற்பத்தி செய்யலாம் என்று சொன்னால், ஒரு புடவைக்கு தனியார் 20 ரூபாய் கூலி கொடுப்பதாக வைத்துக் கொண்டால் சொசைடியில் பத்து ரூபாய் கொடுக்கிறார்கள்.

ஒரு உதாரணத்திற்காக 20 ரூபாய், 10 ரூபாய் என்று சொன்னேன். இந்த மாதிரி வித்தியாசம் இல்லாத நிலையில் சம்பளத்தைப் பொறுத்தவரை குறைந்தபட்ச சம்பளம் இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்து விட்டால் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பட்டு கைத்தறித் தொழிலாளர்கள் மன அமைதி பெறுவார்கள். பொதுவாக எல்லா இடத்திலும் காஞ்சிபுரம் பட்டைப் பற்றித்தான் சொல்லுவார்கள். தஞ்சையில் இந்தப் பகுதிகளில் உற்பத்தியாகக்கூடிய பட்டின் அழுத்தம் அதை உபயோகப்படுத்துகிறவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். நான் இதை சொந்த அனுபவத்தை வைத்துத்தான் சொல்லுகிறேன். இந்தத் தொழில் நசித்துப் போகாமல் இருக்க சிறந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையில் உண்ணாவிரதம் இருந்து, பெண்கள் எல்லாம் சிறைக்குச் சென்று, கடைசியில் அரசாங்கம் தலையிட்டு கலெக்டரும் உடன் இருந்து ஒப்பந்தம் செய்தும்கூட தறி நடத்தும் தனியார்கள் ஹைகோர்ட்டுக்குச் சென்று அந்த ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்று சொல்லக் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வருஷாவருஷம் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இவர்களுடைய சரித்திரத்தைப் பார்த்தால் 1947-ம் ஆண்டி லிருந்தே இவர்கள் தங்களைத் தொழிலாளர்கள் என்று சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கே பக்தவத்சலு நாயுடு என்ற அட்ஜூடிகேட்டர் ஒரு தீர்ப்பு கொடுத்தார். இரண்டரை லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிற தென்றும், அதைக் கட்டிவிடுங்கள் என்றும் சொன்னார்கள். அதைக் கொடுக்க மறுத்தார்கள். பின்னர் ஒரு புடவைக்கு ஒரு ரூபாயாவது போட்டுக் கொடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை நம் அரசு முறையாகக் கண்காணிக்கு மானால்— It is a very important foreign exchange earner. வெளிநாட்டுச் செலாவணி நிறையக் கிடைக்கும். இன்றைக்கு வெளிநாட்டில் இந்த பட்டுக்கு நிகர் வேறு ஏதும் இல்லை. சட்ட மன்றத்தில்கூட அமைச்சர் அவர்கள் பட்டினுடைய ஏற்றுமதி அதிகமாக இருக்கிறது என்ற விவரத்தைக் கூடச் சொன்னார்கள்.

அடுத்து இருப்பது காஞ்சிபுரம். காஞ்சிபுரத்தைப் பற்றி அதிகமாகத் தெரியும் என்ற காரணத்தால் சொல்லவில்லை. அங்கு பார்த்தால் சொசைடிகள் இருப்பது ஏழு எட்டுதான். மாஸ்டர் வீவர்கள்தான் அதிகம். அடுத்து வட ஆற்காட்டில் இருக்கக்





கூடிய ஆரணி. காஷ்மீர் பட்டு, வங்காளத்தில் இருக்கக்கூடிய பட்டு, நமது தமிழகத்தில் இருக்கக்கூடிய பட்டு எல்லாவற்றிலும் நம்முடைய பட்டுதான் பெண்களால் விரும்பப்படுகிறது. எனக்குத் தெரிந்த நாடாளுமன்ற உறுப்பினர் காஷ்மீர் பட்டை உபயோகப் படுத்தி இருக்கிறார், வங்கப் பட்டை உபயோகப்படுத்தி இருக்கிறார், காஞ்சிபுரம் பட்டை உபயோகப்படுத்தி இருக்கிறார், தாராசுரம் பட்டை உபயோகப்படுத்தி இருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் தமிழகத்தில் உற்பத்தியாகக் கூடிய பட்டுதான் அதிகமாகப் பிடித்திருக்கிறது என்றார். அந்தப் பட்டு நெசவுத் தொழிலாளர் களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஃபாக்டரி சட்டத்தை அமலாக்க வேண்டும். இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டை அமலாக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தைக்கூடச் சொல்ல விரும்புகிறேன். 1969-ம் வருஷம் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ராஜபாளையத்திலே மாநாடு நடத்தினார்கள். இந்தச் சட்டமன்றத்தில் அன்று முஸ்லிம் லீக் உறுப்பினராக இருந்தவர்கூட வந்திருந்தார். திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொண்டது, காங்கிரஸ் கட்சி கலந்து கொண்டது, எல்லாக் கட்சியினரும் கலந்து கொண்டார்கள். அதிலே ஏற்பட்ட ஒருமித்த கருத்து என்னவென்று சொன்னால்— அரசு கொஞ்சம் கவனித்தால் 50 கோடி ரூபாய் அளவுக்குத் துணியை உற்பத்தி செய்கின்ற நிலையிலே—அது தனியார் துறையாக இருக்கட்டும் அல்லது கூட்டுறவுத் துறையாக இருக்கட்டும்—அந்தத் துணிகளை விற்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து உத்தரவாதம் கொடுப்பார்களானால் அந்தத் தொழிலுக்கு பாதுகாப்பு ஏற்படும் என்று அனுபவம் உள்ள பலர் சொன்னார்கள். அதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இம்மாதிரி சட்டங்கள் கொண்டு வருவது புதிது அல்ல. நம்முடைய தமிழகத்தில்தான் முதலில் ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மென்ட் ஆக்ட், கேட்டரிங் எஸ்டாப்ளிஷ்மென்ட ஆக்ட் எல்லாம் கொண்டு வரப்பட்டன. இதை வைத்துக் கொண்டுதான் மற்ற மாநிலங்கள் காப்பி அடித்தார்கள். கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்க நான் மசோதாவாகக் கொண்டு வராததற்குக் காரணம் அரசாங்கமே லா டிப்பார்ட்மென்டைக் கொண்டு நல்ல முறையில் பரிசீலித்து ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்பதற் காகத்தான். அந்த மாதிரியான சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். The moral effect will be great. இதனால் எந்தவிதமான நஷ்டமும் ஏற்படாது. தொழிலாளர் களுக்குத் தார்மீகமாக ஒரு திருப்தி ஏற்படும். இதிலே பணச் செலவு கிடையாது. லா டிப்பார்ட்மென்ட் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து அடுத்த கூட்டத் தொடரிலாவது இம்மாதிரி மசோதா ஒன்றை அரசு கொண்டு வருவது இந்த நெசவுத் தொழி லாளர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். இந்தத் தொழில் பாதுகாக்கப்படவேண்டுமென்பதற்காக மற்ற உறுப்பினர்கள் பல விஷயங்களை எடுத்துச் சொல்லுவதைக் கேட்க

ஆசையோடு இருக்கின்ற நிலையில் அடிப்படையான சில விஷயங்களைக் குறிப்பிட்டேன். இந்தத் தொழிலைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி எனக்குத் தெரிந்த அளவில் சிலவற்றைச் சொன்னேன். முப்பது லட்சம் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிப்பதற்கான காரியங்களைப்பற்றி மற்ற உறுப்பினர்களும் தங்களுடைய ஆலோசனைகளைச் சொல்லுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தத் தீர்மானத்தைச் சபைக்கு முன்னால் நான் சமர்ப்பிக்கிறேன்.

* **திரு. செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, நண்பர் தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானம் இரண்டு பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றியும், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களைப் பற்றி இரு பிரிவாக எடுத்துக்கொண்டு இந்தத் தொழிலுக்கும் இந்தத் தொழிலைச் சார்ந்து வாழ்கின்ற நெசவாளர்களுக்கும் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற எண்ணத்தில் இங்கு ஒரு யோசனை தெரிவித்தார்கள். பொதுவாக, கைத்தறித் தொழிலில் இருக்கும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் நம்பி இருக்கிற அந்தத் தொழில் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை முதலில் ஆராயவேண்டும்.

திரு. தங்கமணி அவர்கள் வெகு தெளிவாகச் சொன்னதுபோல் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, அதேபோன்று வேறு சில மாநிலங்களிலும் கைத்தறித் தொழிலின் பாதுகாப்புக்கு கடந்த பத்து பன்னிரண்டு ஆண்டுகளில் தீவிரமாக எதுவும் செய்யவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. குறிப்பாக, கைத்தறிக்கு மூலப் பொருளாக இருக்கும் நூல் விலையை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. நம்மாலே என்று குறிப்பிடும்போது எந்த மாநில அரசும் நூல் விலையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. இந்தக் கைத்தறி எந்தச் சந்தைக்குப் போகிறதோ அந்தச் சந்தையைக் கட்டுப்படுத்துகிற அதிகாரமும் இல்லை. பம்பாயிலிருந்தோ வேறு மாநிலங்களிலிருந்தோ வேறு துணிகள் கைத்தறிக்குப் போட்டியாக நம்முடைய தமிழகத்திற்கு வருவதை வரம்பு கட்டுவதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. இந்தியச் சந்தையிலும் போட்டியிட வேண்டியிருக்கிறது, உலகச் சந்தையிலும் போட்டியிட வேண்டியிருக்கிறது.

உலகச் சந்தையில் அங்குள்ள மக்களின் கவர்ச்சிக்கு ஏற்றபடி, அவர்களின் நடையுடைபாவனைகளுக்கு ஏற்றபடி, அங்குள்ள மாற்றத்திற்கு ஏற்றபடி பல்வேறு நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு துணிகளைத் தயாரிக்கும்போது அந்த மக்களின் மனப்பாங்கினைத் தெரிந்துகொண்டு அதற்கேற்றபடி நாம் கைத்தறியின் வண்ணத்தினை மாற்றுகிற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்படி அவைகளை மாற்றுகிற நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளபோதிலும் போதுமான அளவிற்கு அதில் நாம் வெற்றி பெறவில்லை.





சமீபத்தில்கூட கேரள மாநிலத்தில் இருந்து கைத்தறித் துறை சம்பந்தப்பட்ட அந்த இலாகாவிற்கு பொறுப்பாளியாக இருப்பவர்கள் தமிழகத்தைக் குற்றஞ்சாட்டி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற கைத்தறித்துறை மிகத் தீவிரமாகவும், மலிவாகவும் துணிகளை உற்பத்தி செய்து போட்டிச் சந்தையில் தங்களை வீழ்த்தியிருப்பதாகவும் அதன் விளைவாக அவர்களுக்கு மிகச் சோதனையான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும், அகில இந்திய ரீதியில் தமிழகத்தோடும், வேறு சில மாநிலங்களோடும் சேர்ந்து பேசி கூலி மட்டுமின்றி வேறு பல வகைகளிலும் ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமது போட்டியைச் சமாளிக்க அவர்களுக்குக் கடினமாக இருக்கலாமே தவிர, நமக்கு இந்தியாவிலுள்ள வேறு சில மாநிலங்களோடு போட்டியிடுவது, அவர்களது போட்டியினைச் சமாளிப்பது கடினமாக இருக்கிறது. வெளி மார்க்கெட்டிலும் போட்டியைச் சமாளிப்பது கடினமாக இருக்கிறது. கைத்தறித் தொழில் எல்லாம் எல்லாயிடங்களிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. மேலும் ஒரே மாவட்டத்தில் இடத்திற்கு இடம் கைத்தறியின் தன்மை வேறுபடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன் கைத்தறிக்கு ஒரு கடுமையான சூழ்நிலை நூல் விலை ஏற்றத்தினால் ஏற்பட்டது. எனக்குத் தெரிந்து கரூர் மார்க்கெட் பாதிக்கப்படவில்லை. அந்தப் பெட் ஷீட்ஸ்க்கு நல்ல மார்க்கெட் இருந்தது. ஈரோடு முறுக்குத் துண்டுகளும் பாதிக்கப்படவில்லை. எடப்பாடியிலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் பக்கத்தில் எட்டு மைலுக்கு அப்பாலுள்ள இடமாகிய வனவாசியில் புடவைகள் பாதிக்கப்பட்டன. நங்கவல்லி நெசவு பாதிக்கப்பட்டது.

இன்று விசைத்தறியின் போட்டியும் இருக்கிறது. விசைத்தறியில் இன்று திருச்செங்கோட்டில் சிலர் மார்கெட் நிலவரத்தைப் பார்த்து, எங்கு நடத்துவது லாபகரமாக இருக்கும் என்று கண்டறிந்து பள்ளிப்பாளயம் போன்ற இடங்களில் தொடங்கி மார்க்கெட் பிடித்து தங்கள் வியாபாரத்தை நல்லமுறையில் நடத்தி வருகிறார்கள். சில ரகங்களுக்கு சில மார்க்கெட்டுகள் இருக்கின்றன. அதைத் தெரிந்துகொண்டு மார்க்கெட் பிடித்து வைத்திருப்பவர்கள் அதில் நல்ல லாபம் அடைய முடிகிறது.

ஆகவே, எந்தெந்த ரகங்களுக்கு எங்கெங்கு மார்க்கெட் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாக வேண்டும். நாம் அரசுக்கு வந்ததற்குப் பிறகு அந்நிலையை உணர்ந்து அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் நாம் வெற்றி அடைய முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு நாவலர் அவர்கள் இத்துறைக்கு பொறுப்பேற்றிருந்த சமயத்தில் ஒரு இடத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். கைத்தறித் தொழிலுக்கு எதிர்காலத்தில் உலகச் சந்தையிலும்

[திரு. செ. கந்தப்பன்] [1971 டிசம்பர் 9

இந்தியச் சந்தையிலும் மில் துணிகளோடும், விசைத்தறித் துணிகளோடும் போட்டி இடுகிற அளவிற்கு வலு இருக்காது, எனவே எதிர்காலத்தில் கைத்தறியை நம்பியிராமல் அந்தத் தொழிலாளர்கள் விசைத்தறி அல்லது வேறு துறையை நம்பியவர்களாக ஆக்கப்படும் ஒரு சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். ஒத்துக்கொள்ளத் தக்க கருத்து அது.

ஆனால், அந்த நேரத்தில் அதற்கு பெருத்த எதிர்ப்பு கிளம்பியது. அப்படிச் சொன்னதினால் அங்கு நடைபெறயிருந்த இடைத் தேர்தலை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் நெசவாளர்களை அழைத்து மணிக்கணக்கில் பேசி நிலைமையைச் சரிசெய்யவேண்டியிருந்தது. நெசவாளர்கள் 20, 40 கவுண்ட்ஸ் போடுகிறவர்களிடம் அதற்கு மார்க்கெட் இல்லை. வேறு ரகத்திற்கு மாறுவிட்டால் மார்க்கெட் இருக்காது என்று சொன்னால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை. இப்படி சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

முன்பு கைத்தறிக்கு மில்தான் போட்டியாக இருந்தது. இப்போது விசைத்தறியையும் சமாளிக்க வேண்டிய நிலை இருக்கிறது. கைத்தறியில்தான் சில நுணுக்கமான, சில நயமான, சில கவர்ச்சிகரமான துணிகளை நெய்யமுடியும் என்ற நிலை மாறி விசைத்தறியின் மூலமும் அப்படிப்பட்ட நயமான, கவர்ச்சிகரமான வண்ண ரகங்களை உண்டாக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக. கைத்தறி விசைத்தறியையும் சமாளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே என் எண்ணங்கள் சிலவற்றினை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். திரு. தங்கமணி அவர்கள் சொல்லுவதைப்போல் லெஜிஸ்லேஷன் நல்லதொரு பரிகாரம் என்று எனக்குத் தோன்றவில்லை. மாநில அரசின் அதிகாரத்திற்குள் மத்திய அரசின் உதவியின்றி மாநில அரசு இதில் ஒரு ஆட்சி செலுத்தக்கூடிய நடைமுறைக்குக் கொண்டுவர லெஜிஸ்லேஷனினால் முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

ரா மெட்டீரியல்ஸின் விலையை நிர்ணயிக்க நம்மால் முடியாது. ரா மெட்டீரியல்ஸின் விலை இருக்கிறது, விலையின் ஏற்றக் குறைவு இருக்கிறது. வெளி மார்க்கெட்டை நம்பியிருக்கிறது இத்துறை. அது உத்தரவாதமற்றதாக இருக்கிறது. கைத்தறி சிறப்பாக இடம் பெறுகிற மாநிலம் தமிழ்நாடாகும். அப்படியிருக்க அகில இந்திய கைத்தறி போர்ட் பாம்பேயில் வைத்திருக்கிறார்கள். நம் அரசு மத்திய அரசிடம் இதைப்பற்றி எடுத்துச்சொல்லி வலியுறுத்தி இந்தக் கைத்தறி போர்டை முதலில் தமிழகத்திற்குக் கொண்டு வர வேண்டும். மில்கள் பெருகியுள்ள இடம் பாம்பே. அப்படி மில்கள் பெருகியுள்ள பாம்பேயில் கைத்தறி போர்டை வைத்துக்கொண்டு அதைக் காப்பாற்ற முயல்கிறார்கள். கைத்தறிக்கு ஆபத்தான இடத்தில்தான் கைத்தறி போர்டு இருக்கிறது. ஆகவே அந்த



1971 டிசம்பர் 9]

கைத்தறி போர்டை முதலில் தமிழ்நாட்டிற்கு கொண்டுவர வேண்டும். மில் ஆதிக்கம் இல்லாத சுற்றுப்புறத்திற்கு அது கொண்டுவரப்படவேண்டும்.

உலகச் சந்தையில் எந்தெந்த ரகங்கள் எடுபடுகின்றன என்பது பற்றி திட்டவட்டமாக, தெளிவாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ற வண்ணம் நாம் மாறிக்கொண்டு போகிற அளவிற்கு சில வாய்ப்பு வசதிகள், நிர்வாகத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்பட்டு அதன் மூலம் மார்க்கெட்டுக்கு ஏற்றவண்ணம், தேவைக்கு ஏற்ற வண்ணம், மக்களைக் கவரும் வண்ணம் கைத்தறித் துணி ரகங்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும். வெளிநாட்டுச் சந்தைகளிலுள்ள தன்மையை வைத்து அதற்கு ஊக்கம் தரும் அளவிற்கு மட்டும் வைத்துக்கொண்டு அதற்கப்பால் இருக்கிற கைத்தறிகள் அத்தனையையும் விசைத்தறிக்கு மாற்றுகிற அளவிற்கு முயற்சி எடுத்து அப்படிப்பட்டவைகளைப் பெருக்காமல் இருக்க என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும்.

முன்பு இருந்த அரசு விசைத்தறிகளை தமிழகத்தில் போட வேண்டுமென்று மத்திய அரசு சொல்லிய நேரத்தில் கைத்தறியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக விசைத்தறிகள் எங்களுக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டார்கள். நான் டெல்லியில் இருந்தபோது அப்போது அதற்கு அமைச்சராக இருந்த திரு. மனுபாய் ஷா அவர்கள், தமிழ் நாடு ஒரு பெரிய தவறைச் செய்கிறது, நாங்கள் விசைத்தறிகள் தருகிறோம் என்று சொல்கிறோம், அவர்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள், ஆனால் எதிர்காலத்தில் பிற மாநிலங்கள் விசைத்தறிகளின் மூலம் உற்பத்தியைப் பெருக்கி தமிழ்நாட்டில் துணிகளைக் கொண்டுவந்து குவிக்கும்போது அதைச் சமாளிக்க முடியாமல் தமிழ்நாடு திண்டாடப் போகிறது, எனவே விசைத்தறியை ஏற்றுக்கொள்வது நல்லது என்று பார்லிமெண்டில் அவர்கள் சொன்னார்கள்.

அன்றைக்கு நெசவாளர்களிடையே தவறான எண்ணங்கள் அச்சங்கள் இருந்து வந்தன என்பதை யாவரும் அறிவீர்கள். கைத்தறிக்கு நிரந்தரமான, உத்தரவாதமான மார்க்கெட்ஸ் பெற முடியாது, பிடிக்க முடியாது. ஆகவே அந்தக் கைத்தறிகளை எல்லாம் விசைத்தறியாக மாற்றுவதற்கு படிப்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டேயாகவேண்டும். அப்படிச் செய்தோமானால் தான் கைத்தறி நெசவாளர்களின் நன்மையைப்பற்றி நாம் சிந்திக்க முடியும். ரிபேட் பெற்றே தொழிலை நடத்த வேண்டுமென்ற நிலை இருக்கும்போது அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்கு எந்தளவிற்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்று பார்க்கவேண்டும்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியம் வழங்குவது என்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. ஆக, பலஹீனமான இந்தத் துறையை ரிபேட் கொடுத்து, ஸ்பூன் ஃபீடிங் செய்து மேலும்

பலவீனப்படுத்தக்கூடாது. ரிபேட் கொடுப்பதன்மூலம் இத் துறையை வளர்க்க முடியாது, வாழவைக்கவும் முடியாது. ஆகவே இதற்கு ஒரு நிரந்தர பரிகாரம் காணவேண்டும். அம்முயற்சியில் நம் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இத்துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மாதவனுர் அவர்கள் கரூருக்கு வந்திருந்தபோது அவரோடு இருக்கிற தொடர்பு எனக்கு ஏற்பட்டது. இத்தொழிலைப் பற்றி அவர்கள் விசாரித்தபோது அவரது முயற்சியை அறிந்து கொள்ளும் ஒரு வாய்ப்பினைப் பெற்றேன். பிறகு எங்கள் மாவட்டத்திற்கு வந்து பலயிடங்களை நேரில் பார்வையிட்டிருக்கிறுர்கள்.

இத்துறையில் இன்ஹெரன்ட்டாக உள்ள சிக்கல்களை எப்படித் தவிர்ப்பது, அரசியல் சட்டத்திலுள்ள சில பிரிவுகளையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அந்த வகையில் ஒரு சட்டத்தை உருவாக்கிவிடுவதால் பயன் ஏற்பட்டுவிடும் என்பதை நான் நம்பவில்லை. பீடித் தொழிலாளர்கள் சட்டத்தில்கூட அப்படி நடந்தது. உதாரணமாக அச்சட்டம் அமல்செய்யப்பட்ட பிறகு கேரளாவில் என்ன நிலை ஏற்பட்டது ? அங்குள்ள பலர் அத்தொழிலை வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று லாபம் பெறுகிறுர்கள். அப்படி தலைமைப் பீடத்தை மாற்றியமைத்ததன் காரணமாக அங்குள்ள மக்கள் தொழில் வாய்ப்பினை இழக்கிற ஒரு நிலைமை ஏற்பட்டது.

அகில இந்திய ரீதியில் மார்க்கெட் ஒன்ருக இருக்கிறபோது, அந்த மார்க்கெட்டில் செல்வாக்கைக்கொண்டு பார்க்கிற நாம், இந்தச் செல்வாக்கை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமேயொழிய, சட்டத்தை உண்டாக்கி வெற்றி பெற முடியும் என்று நான் நம்பவில்லை. அந்தக் கண்ணேட்டத்தில் அவர்
பி.ப. 1-00 களுடைய தீர்மானத்தை நான் பார்க்கவில்லை. இந்த முக்கியமான தீர்மானத்தின் மீது, இந்த முக்கியமான பிரச்சினையின்மீது பேச சந்தர்ப்பம் கொடுத்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் செலுத்தி, அமைகிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நண்பர் தங்கமணி அவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் ஒரு சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன்.

இங்கே தங்கமணி அவர்கள் கைத்தறி தொழிலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி பல கருத்துக்களைக் கூறி வற்புறுத்தினுர்கள். நண்பர் கந்தப்பன் அவர்கள், அதிலே இருக்கும் சிக்கல்களைப் பற்றி 'இன்ஹரண்ட் டிபிகல்டீஸ்' பலவற்றைச் சொன்னுர்கள். இவை இரண்டுமே எல்லோருக்கும் தெரிந்தவை தான்.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாட்டின் இரண்டாவது பெரிய தொழில் கைத்தறித் தொழில். வேளாண்மைக்கு அடுத்தபடியாக இருக்கும் தொழில். நான் நினைக்கிறேன். இன்னும் வெகு காலத்திற்கு இந்த நிலை இப்படியே



நீடிக்கும் என்று. அதற்குக் காரணம் உண்டு. நம்முடைய நாடு ஜனத்தொகை மிகுந்த நாடு. இந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும். வேலை செய்தால் வேதனையற்று வாழ்கிற வகையும் வேண்டும். இந்த இரண்டும் வேண்டுமென்று சொன்னுல், அதற்கு தொழில் வளம் பெருக வேண்டும். அதற்கு பெரிய பெரிய தொழிற்சாலைகள் நிறுவவேண்டும் என்ற கருத்தும் உண்டு. ஆனுலும் பொருளாதாரம் கற்றறிந்த அறிஞர்கள் எல்லோருமே இன்றைக்கு ஒரு கருத்தை ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டைப் போன்ற பெரும்பாலும் வேளாண்மையை நம்பி இருக்கும் ஒரு நாடு, மக்கள் தொகை மிகுந்து இருக்கும் நாடு, பெரும் தொழிற்சாலைகளை, மட்டும் நம்பி வளர முடியாது, முன்னேற முடியாது. சிறு தொழில்களையும், குடிசைத் தொழில்களையும், வேளாண்மையை ஒட்டியுள்ள தொழில்களையும் ஆரம்பிப்பதன் மூலமாகத்தான் இத்தகைய நாட்டின், நாட்டு மக்களின் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க முடியுமே அன்றி, பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் மட்டும் பெரிய, முன்னேறிய பொருளாதாரத்தில் வளமுள்ள நாடுகளில் காணப்படுவது போல் இங்கேயும் செய்வதனுல் மட்டும் இந்தப் பிரச்னை முடிவுறும் என்று கருத முடியாது. ஏதோ ஒரு சில நகரங்களில் மட்டும் தொழில்கள், கனரகத் தொழில்கள் குவிந்து விடாமல், தொழில்கள் நாடு முழுவதும் பரவி, மக்கள் மிகுந்த வளமான வாழ்வு வாழ, ஓரளவு வாழ்க்கை நடத்துகிற அளவுக்கு வசதி உண்டாக்குகிற வகையில் நிலைமை வரவேண்டும். அந்த அடிப்படையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே மொத்தம் இருக்கின்ற கைத்தறிகளிலே ஏறத்தாழ ¼ பங்கு இங்கே இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை திரு. தங்கமணி அவர்கள் சொன்னுர்கள். கிட்டத்தட்ட 30–35 லட்சம் மக்கள் இந்தத் தொழிலை நம்பியிருக்கிறுர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இருக்கிறுர்கள். மற்றும் இதனையொட்டிய பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் இருக்கிறுர்கள். அந்தத் தொழில்களை நம்பித் தான் இந்தத் தமிழகத்தின் பொருளாதாரம் பூராவும் இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். சேலம், கோவை, மதுரை, பரமக்குடி, காஞ்சீபுரம் போன்ற பல நகரங்களில் இருப்பவர்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் வசிக்கிறுர்கள். சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அந்த மாவட்டத்தின் பொருளாதாரமே பெரும்பாலும் கைத்தறி நெசவுத் தொழிலை நம்பித்தான் இருக்கிறது. ஆகவே, என்னதான் சிக்கல்கள் இருந்தபோதிலும் அந்தக் கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாத்து. அதைச் சாகவிடாமல் பாதுகாப்பதைத் தவிர தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வேறு வழியில்லை என்று நான் கருதுகிறேன்.

அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், ஒன்று அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். இன்னென்று, அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க

வேண்டும். அந்தத் தொழிலைப் பாதுகாக்கவேண்டுமென்றால், அந்தத் தொழிலுக்கு மிகுந்த உற்சாகம் கொடுக்க வேண்டும். அந்தத் தொழிலுக்கு அடிக்கடி நோய் வருகிறது. அந்தத் தொழிலுக்கு சில நேரங்களில் நூல் கிடைக்காது. நூல் கிடைத்தால் அதற்கு அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னும் சில காலங்களில், நெசவு செய்து வைக்கப்பட்ட துணி வியாபாரம் ஆவது இல்லை. மாநில கைத்தறி சொசைட்டியிலேயே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான துணிகள் தேங்கி விடுகின்றன. இதனால், அந்த நெசவாளர்களுக்கு வேலை செய்தாலும் கூலி கிடைப்பது இல்லை. இன்னும் இது போன்ற பல அல்லல்கள் ஏற்படுகின்றன.

எனக்கு நினைவு வருகிறது 1951-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். தமிழகத்தில் ஆங்காங்கு கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு கஞ்சித் தொட்டி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சாதாரணமாக கஞ்சித் தொட்டி ஆடுமாடுகளுக்குத்தான் வைப்பார்கள். அந்த நிலைமை கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்பட்டது. இப்படி அடிக்கடி நிலைமைகள் வந்திருக்கின்றன. அது தவிர்க்கப்படவேண்டும். அது தவிர்க்கப்படவேண்டுமென்று சொன்னால், அந்தத் தொழிலுக்கு தனிச் சலுகை கொடுக்க வேண்டும். நண்பர் கந்தப்பன் அவர்கள் "ஸ்பூன் பீடிங்" கூடாது என்று சொன்னார்கள். "ஸ்பூன் பீடிங்" இல்லாது இருப்பது நல்லதுதான். சில நேரங்களில், மனிதர்களில் உடல் நலமில்லாதவர்களுக்கு "ஸ்பூன் பீடிங்" தேவைப்படுகிறது. குழந்தைகளுக்கு ஸ்பூன் பீடிங் தேவைப்படுகிறது. வயது வந்த பிறகும்கூட 25 வயது ஆகியிருந்தாலும்கூட, சிலருக்கு, இன்வேலிட் ஆக இருப்பவர்களுக்கு, தாமாக சாப்பிட முடியாதவர்களுக்கு ஸ்பூன் பீடிங் தேவைதான். அதற்கு மறுக்கிறவர்களிடத்தில் மனிதத்தன்மை இல்லை என்றே சொல்வேன். அதேபோன்ற நிலைமைதான் இந்தத் தொழிலுக்கும் இருக்கிறது. ஆகவே, இதற்கு "ஸ்பூன் பீடிங் " தேவை என்பது என் கருத்து.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. வெறும் மனிதாபிமான உணர்ச்சியோடு மட்டும் இதை எடுத்துச் சொல்லவில்லை. கோடிக்கணக்கான மக்கள் இதில் ஈடுபட்டு இருக்கிறார்கள், என்பதால் மட்டும் சொல்லவில்லை. தமிழகத்தின் பொருளாதாரத்தைக் காப்பாற்ற இது தேவைப்படுகிறது என்ற காரணத்தாலும் குறிப்பிடுகிறேன். இதற்குப் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவற்றை முழுதும் சொல்ல நேரம் இல்லை. ஆனால் போதுமான அளவுக்கு, உரிய நேரத்தில் நாணயமான விலையில் நூல் கிடைக்க வழி வகை செய்யவேண்டும். கூட்டுறவு நூற்பு ஆலைகள் இருக்கின்றன. அந்தக் கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்து கூட்டுறவு சொசைடிகளுக்கு நூல் கொடுக்கிறார்கள். அந்த நூலுக்கு விலை நிர்ணயிக்கிறபோது மார்க்கெட் நிலவரத்தைப் பார்த்து விலையை நிர்ணயம் செய்கிறார்கள். மார்க்கெட் விலை ஏறுகிறபோது, விலையை ஏற்றிவிடுகிறார்கள். ஆனால் எந்த வேகத்தில் மார்க்கெட் விலை ஏறுகிறபோது விலையை ஏற்றுகிறார்களோ, அதே வேகத்தில்





மார்க்கெட் விலை குறைகிறபோது நூல் விலையைக் குறைப்பது இல்லை. இந்தக் குறை நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில் வெளி நாடுகளில் அதிகமாக நம்முடைய கைத்தறித் துணியை வாங்குகிறார்கள். அதற்கு நிரம்ப கிராக்கி இருக்கிறது என்று அடிக்கடி பத்திரிக்கைகளில் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. பார்க்கிறோம். மேலை நாடுகளில் நாகரிகம் மாறிக்கொண்டிருக்கிறது. அந்த நாகரிகத்தின் மாறுதல் எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்றால், தெருவில் போகின்ற ஒருவரை பின்னாலிருந்து பார்த்தால் ஆண், பெண் போல் காட்சி தருகிறார். ஆணா பெண்ணா என்று சரியாக சொல்ல முடியவில்லை. ஏன் என்றால் பெண்கள் அணியவேண்டிய சேலையை ஆண்கள் அணிந்துகொண்டு வருகிறார்கள். ஆண்கள் அணியவேண்டிய துணிகளை பெண்கள் அணிந்துகொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்கு நாகரிகம் மாறியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆண்கள் சேலை கட்டிக்கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியா என்று தெரியவில்லை. சேலைத் துணியில் சட்டை போட்டுக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லலாமே தவிர ஆண்கள் சேலையைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லக்கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இப்போது மேலை நாடுகளிலும் சரி, இப்படி நாகரிகம், பழக்க வழக்கங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. ஆகவே போதுமான அளவுக்கு பல்வேறு நாடுகளிலும் உள்ள பழக்க வழக்கங்களை 'ஸ்டடி' செய்து ஆங்காங்கு எப்படி நாகரிகம் மாறுகிறது என்பதை ஆராய்ந்து அதற்கு ஏற்ப துணிகளை பாணிகளை மாற்றுவதற்கு ஊக்கம் அளித்தால், அந்தத் தொழில் வளர்வதற்கு சரியான வழி வகை ஏற்படும் என்று நினைக்கிறேன்.

பல, இடங்களில், கிராமங்களில் நெசவாளர்கள் இருக்கிறார்கள். பல நாடுகளில் மக்களின் விருப்பத்தில் ஏற்படும் மாறுதல்கள் பற்றி அவர்களுக்குத் தெரிவதில்லை. அவர்களுக்குத் தெரிந்தால், தங்கள் முறையை மாற்றிக் கொள்வார்கள். அவர்களிடம் 'அடாப்டபிலிடி ' நிரம்ப இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது. மாறுதல்பற்றி உடனுக்குடன் தெரிந்தால், அவர்களும் தங்கள் முறைகளை மாற்றிக்கொள்வார்கள். ஆகவே, அந்த வகையில் ' எக்ஸ்போர்ட் பிரமோஷன்' ஏற்றுமதி ஊக்கம் கொடுக்க போதுமான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

அதோடு அவ்வப்பொழுது, கைத்தறித் துணியில் தேக்கம் ஏற்படும்போது, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பஞ்சாலைகளில் சிக்கல்கள் வந்தால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பெரிய ஆலைகளில் சிக்கல்கள் வந்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பார்க்கிறோம் நாம். அமைச்சர்கள் ஓடுகிறார்கள்.

மாநில அமைச்சர்களை மட்டும் நான் குறிப்பிடவில்லை. மத்திய அமைச்சர்களும் செய்கிறார்கள். ஏதாவது ஒரு பெருந்தொழிலுக்கு சிக்கல் என்றால் அமைச்சர் ஓடோடிச் செல்கிறார்கள். ஆனால், சிறு தொழில்கள்—என்னதான் நாம் ஊக்கம் அளிக்கிறோம் என்று சொன்னாலும்—சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவற்றிற்குப் போதுமான ஆக்கமும், உதவியும் தரப்படுவதில்லை. கைத்தறித் துறைக்கும், அதேபோன்று, குடிசைத் தொழில்களுக்கும், 'ஹாண்டி கிராப்ட்ஸ்' இம்மாதிரியானவற்றிற்கு என்று ஒரு தனி அமைச்சகம் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அப்படி இருந்தால், இதற்கென்று அரசில் இருப்பவர்கள் இணைப்பாக ஈடுபட்டு, செயல்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அந்த வகையில் தனி அமைச்சகம் ஏற்படுத்துவது சிறப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்வேன்.

இன்னொன்று, இந்தத் துறையில் கூட்டுறவுக் கொள்கையானது எந்த அளவுக்கு செயல்படவேண்டும், எந்த அளவுக்கு இந்தத் துறையைப் பாதுகாக்க முடியும் என்பதையும் பார்க்கவேண்டும். இந்த நெசவாளி மக்களை கூட்டுறவுத் துறை மூலம் பாதுகாக்க முடியாவிட்டால், யாராக இருந்தாலும், பணம் படைத்தவர்கள், வலிமை படைத்தவர்கள் இவர்களை அமுக்கிவிடுவார்கள். கூட்டுறவுத் துறையானது, இந்தக் கைத்தறித் துறையில் பங்கு கொள்வது குறைந்து வருகிறது என்று புள்ளி விவரம் கொடுத்தார்கள். அதை மாற்றி, கூட்டுறவுத் துறையில் இவர்களையெல்லாம் சேர்ப்பதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும், வேண்டிய அளவில் இவர்களை கூட்டுறவுத் துறையில் ஈடுபடுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கேரளாவில் பீடித் தொழில்பற்றி திரு. கந்தப்பன் குறிப்பிட்டார்கள். அந்த மாநிலத்து அரசு என்ன செய்தது? அத்தனை பேர்களையும் கூட்டுறவுத் துறையில் ஈடுபடுத்தி, கூட்டுறவு முறையில் பல லட்ச ரூபாய்களை ஒதுக்கித் தனியாக பீடித் தொழில் நடத்தி தொழிலாளர்கள் எங்காவது சென்று அலைக்கழிக்கப்படாமலிருக்க வழி செய்தார்கள். கைத்தறித் துறையிலும் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, சரிப்படுத்தி நல்ல முறையில் செயல்பட, அதற்கென ஒரு தனி அமைச்சகம் வேண்டும் என்று சொல்கிறேன்.

அப்படிச் சொல்லும்போது, இன்றைக்கு இருக்கும் அதிகாரிகள் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற பொருளில் சொல்லவில்லை. ஆனால் முனைப்பான வகையில் ஈடுபடவேண்டும் என்றால், அதற்கு என்று தனி அமைப்பு இருந்தால்தான் அதைச் செய்ய முடியும். இப்பொழுது 'ஸ்போர்ட்ஸ்'-க்குக் கூட தனி அமைச்சகம் இருக்கவேண்டும் என்று கோரப்படுகிறது. ஆகவே, இத்துறைக்கு தனி அமைச்சகம் ஏற்படுமானால், அப்பொழுது 'கான்ஸெண்ட்ரேட்' ஆக வேலை செய்ய வசதியாக இருக்கும் என்கிற கருத்தினைச் சொல்லிக்கொண்டு, இந்தத் துறை நசித்துக்கொண்டு போக வேண்டிய ஒரு துறை, தொழில் என்று யாரும் நினைக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. கந்தப்பன் சொன்னதை ஓரளவுக்கு நான் ஒப்புக் கொள்கிறேன். கைத்தறியாளர்களின் எண்ணிக்கையை வளரவிடக் கூடாது, அந்த முறையில் ஆக்கம் அளிக்கக்கூடாது. ஆனால் நெசவாளர்கள், இன்றைக்கு இருப்பவர்கள், நசிந்து போய்விடாமல் பாதுகாக்கப்படவேண்டிய பொறுப்பும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த தொழில் வளம் பெற்றிருப்பது மாநிலத்தின் பொருளாதாரத்திற்கே இன்றியமையாதது. எண்ணிக்கை கூடுதலாகப் போகாமல் பார்த்துக் கொள்ளலாம் ஆனால், இன்றைக்கு ஈடுபட்டிருக்கும் மக்கள், வளம் பெற்று இருப்பது தமிழகத்தின் பொருளாதார செழுமைக்கு இன்றியமையாதது என்கிற உண்மையை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டு, முடிக்கிறேன்.

*திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தை தோழர் தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக இருக்கும் தொழில் கைத்தறித் தொழில். கைத்தறியாளர்கள் வாழவேண்டும், கைத்தறியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று நாம் எல்லோரும் சொல்கிறோம். அப்படிச் சொன்னாலும், கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களுக்கு எல்லா விதமான சலுகைகளையும் அரசாங்கம் அளித்திருக்கிறது. அதே நேரத்தில், தனியார் துறையில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தனியார் துறையை எடுத்துக் கொண்டு பேசும்போது, அதிலே மாஸ்டர் வீவர்கள் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தறிகளை வைத்துக் கொண்டு இயங்குகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையிலே ஒரு தறி, இரண்டு தறிகள் என்று வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். அதே நோத்தில், 10, 20 தறிகள் என்று வைத்திருப்பவர்களும் மாஸ்டர் வீவர்களாக இருக்கிறார்கள். இன்னும் நூற்றுக்கணக்கான தறிகளை வைத்துக் கொண்டிருக்கும் மாஸ்டர் வீவர்களும் இருக்கிறார்கள். இந்த மூன்று வகையில் இருக்கும் வீவர்களும் தனியாக தான் உற்பத்திசெய்யும் துணியை விற்பனை செய்து வாழவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த ஒரு பாதுகாப்பு இருக்கிறதா என்றால், இன்றையதினம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது.

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அவர்களுக்குத் தேவையான, நூல், செயற்கைப்பட்டு, அசல் பட்டு போன்றவற்றை மார்க்கெட்டில் வாங்கிச் செயல்படும் நிலையில் இருக்கிறார்கள். அதே நோத்தில் பணம் படைத்த பிரபுக்கள், வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் நினைத்தால், திடீரென்று விலையை ஏற்றுவார்கள். திடீரென்று ஒரு கிலோவுக்கு 2, 3 ரூபாய் என்று அதிகமாகக்

கேட்கிறார்கள். அப்படி பட்டு விலையெல்லாம் விற்கும் நிலையில், அதை வாங்கி உற்பத்திசெய்யும்போது. மாஸ்டர் வீவர்கள் ஒன்று லாபத்தில் குறைத்துக் கொள்ள வேண்டும், அல்லது, ஏழைக் கைத்தறி நெசவாளர்கள் கூலியைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்கிற சூழ்நிலைதான் ஏற்படுகிறது.

ஆகவே, இந்தக் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நியாயமான விலையில் பட்டு முதலிய நூல்கள் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அப்படிச் செய்யவேண்டும் என்றால், அரசாங்கமே பட்டு நூல் போன்றவற்றை ஒரு பகுதியைக் கொள் முதல் செய்து, இப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு வினியோகிக்கும் செயலில் ஈடுபடுமானால், மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிக்கிறவர்களுக்கு தடுப்பு ஏற்படுத்தும் நிலை அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எப்படி அரிசி விலை இரண்டு ரூபாய், இரண்டு ரூபாய் எட்டு அணா என்று விற்கிறது என்றதும், மக்கள் கஷ்டப் படுகிறார்கள் என்று, நியாயமான விலையில் குறைந்த பட்சம் கொடுக்க வேண்டும் என்று நியாய விலைக் கடைகளை நிறுவி அரசாங்கம் அரிசி வினியோகம் செய்ய புகுகிறார்களோ அதே போல் அந்த முறையையே பின்பற்றி செயல்பட்டால், தனிப்பட்ட வர்கள் நெசவாளிகளைத் துன்புறுத்துவதைத் தடுத்து, கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளிகளுக்கும் மலிவான விலையில் நூல், பட்டு இவற்றை கொடுக்க உதவியாக இருக்கும்.

அடுத்து, கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்ய கைத்தறி வார விழா என்று ஏற்படுத்தி, அங்கேயே விற்பனை செய்து, ரிபேட் போன்றவைகளை யெல்லாம் கொடுக்கிறார்கள். ஆனால் யாரும் ஆதரவற்ற நிலையில் தனியார் துறையில் உள்ள கைத்தறியாளர்களுக்கு இப்படிப்பட்ட ரிபேட் கிடைப்பதில்லை. அப்படிக் கொடுக்கப்படாமல் இருப் பதால், அவர்கள் உற்பத்திசெய்யும் துணி அதிக வேகமாக விற்பனை ஆவதில்லை.

ஆகவே, இந்த அவையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம் கைத்தறி நெசவாளர்கள் கைத்தறி ஆடைகளுக்கு நல்ல ஆதரவு தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளு கிறேன்.

கைத்தறித் தொழில் இந்த நாட்டிலே நிரந்தரமான தொழில் அல்ல இந்தத் தொழிலை மேலும், மேலும் இந்த நிலையில் ஈடுபடுத் தலாமா, அல்லது ஈடுபடுத்தக் கூடாதா என்று ஆலோசிக்கும்போது கைத்தறியாளர்களைக் காப்பாற்றுவதுதான் நல்லது. ஆனால், மேலும் அந்தக் கைத்தறி தொழிலில் ஈடுபட்ட சந்ததியார்களுக்கு அரசாங்கம் கல்விச் சலுகை, உத்தியோகச் சலுகை முதலிய வற்றை கவனம் செலுத்திக் கொடுத்தால்தான் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை இந்த தொழிலில் ஈடுபட்டவர்களை உயர்வுக்கு கொண்டுபோகக் கூடிய நிலைமை ஏற்படும்.





அதே நேரத்தில் கைத்தறித் தொழிலுக்குப் போட்டியாக இன்றையதினம் விசைத்தறி இருக்கிறது. நமது மாநிலத்தில் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அப்படி விசைத்தறிகளை கைத்தறியாளர்கள் போடலாம் என்று நினைத்தாலும் மாஸ்டர் வீவர்களுக்கு விசைத்தறி கொடுக்க முடியாது என்று அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் ஒரு தனிப்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளி ரூ. 4,000, ரூ. 5,000 செலவு செய்து விசைத் தறி போட முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க முடியாது. கைத்தறி நெசவாளி வாழ்வதே கஷ்டம், ஆகவே, பணம் போட்டவர்களுக்கு விசைத்தறி கிடைக்கிறது. விசைத் தறித் தொழிலை இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்தால் நல்ல ரகங்களை உற்பத்திச் செய்ய முடியும். அந்த முறையிலே கூட கைத்தறியாளர்களுக்கு ஒரு மாற்றுத் தொழில் கொடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, செயற்கைப் பட்டு வினியோகம் இன்றையதினம் தனிப்பட்ட கமிட்டியின் தலைமையிலே நடந்து வருகிறது. இந்த செயற்கைப் பட்டு வினியோகிப்பவர்கள் இந்த மாநிலத்தில் நூற்றுக்கணக்கான சங்கங்கள் அமைத்துக் கொண்டு பட்டை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதிலே வரக்கூடிய பட்டுகளை அவர்கள் எடுத்து உபயோகிக்கிறார்கள். அதிகம் இருந்தால் அதை விற்று விடுகிறார்கள். இந்த மாதிரி இந்த செயற்கைப் பட்டு வினியோக முறை நடந்து கொண்டு இருக்கிறது. அண்மையில் நான் கேள்விப்பட்டேன், ரீஜினல் கமிட்டிக்கு கைத்தறி இயக்குநர் அவர்களை தலைவராகப் போட்டு இருப்பதாக. நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் இந்தக் கமிட்டியில் கைத்தறித் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் அங்கம் வகிக்க வேண்டும். அதாவது தொழிலாளி பிரதிநிதிகளை அந்தக் கமிட்டியில் அங்கம் வகிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செயற்கைப் பட்டை குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் அதிகமாக பயன் படுத்துகிறார்கள். நமது மாநிலத்தில் கோவையில் மட்டும்தான் செயற்கைப் பட்டு உற்பத்தி செய்யக் கூடிய ஒரு மில் இருக்கிறது. அந்த மில்லிலே தயார் செய்யக் கூடிய பட்டும் பற்றாது. ஆகவே தமிழகத்தில் புதிதாக, குறிப்பாக மதுரை மாவட்டத்தில் ஒரு செயற்கைப் பட்டு உற்பத்திச் செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை அரசு அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கைத்தறி நெசவாள தொழிலிலே ஈடுபட்டவர்கள் வாழ்க்கைத்தரம் முன்னேற்றம் அடையும் வகையில், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளை எல்லாம் கொள்முதல் செய்து வெளி மாநிலங்களில் அல்லது வெளிநாடுகளிலே விற்பனை செய்ய தகுந்த ஏற்பாடு செய்தால்தான் கைத்தறி நெசவாளர்கள் வாழ முடியும். இல்லையென்றால் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்பட

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1971 டிசம்பர் 9

வேண்டிய நிலைமையில்தான் இருப்பார்கள். காரணம், மில் தொழில், மற்ற தொழில்கள் மேலும் கைத்தறித் தொழிலுக்குப் போட்டியாக இருக்கின்றன. மக்கள் மத்தியில் இன்றையதினம் விசைத்தறி தயார் செய்யக் கூடிய பளபளப்பான துணிகள்தான் கூடுதலாக செலவாகின்றன. அரசாங்கம், மற்ற பல கட்சி நண்பர்களை கைத்தறியாளர்கள் தயார் செய்யக்கூடிய துணிகளைத் தான் கட்ட வேண்டும் என்று ஒரு பிரச்சாரம் செய்ய வேண்டும்.

சென்ற காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும் போது கைத்தறித் துணிகள் தலையிலே சுமந்து தெருவிலே சென்று, மக்கள் மத்தியில் கைத்தறி துணி கட்டவேண்டிய ஒரு பிரசாரத்தை செய்த காரணத்தால் கைத்தறி நெசவு நல்ல முறையில் நடந்தது. அதை பின்பற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், ஆகவே இதை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இங்கே கைத்தறித் துறைக்கு பாதுகாப்பு அளிக்கும் தீர்மானத்தை வரவேற்று பேசும் முகத்தான் என் உரையை துவக்குகிறேன்.

இந்த நாட்டிலே இருக்கின்ற விவசாயத்திற்கு அடுத்தபடியான தொழில் கைத்தறித் தொழில். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோமென்று கூறிய காலத்திலே உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியான தொழில் இந்தத் தொழில் என்று கூறுகின்ற நேரத்திலே, இந்த நாட்டிலே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிற கைத்தறித் தொழில் என்று எல்லோருக்கும் தெரியும். குறள் இயற்றிய வள்ளுவரும் இந்த நெசவுத் தொழிலைச் செய்ததாக நாம் அறிய வருகிறோம். ஆகவே, தொழில் என்று கூறுகின்ற நேரத்திலே அந்த நெசவுத் தொழிலைப் பற்றித்தான் நாம் யோசிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால் அப்படிப்பட்ட நெசவுத் தொழிலில் ஈடுபட்ட மக்களின் வாழ்க்கை எந்த நிலையில் இருக்கிறது என்று சொன்னால், பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. அதை நாம் கண்கூடாக கண்டு வருகிறோம். அதற்குக் காரணம் என்ன வென்றால், அவர்கள் அந்த சோற்றில் இருக்கிற கஞ்சியை தொழிலுக்கு உபயோகித்து விட்டு மீதியை உண்கிறார்கள். அந்த சமுதாய மக்கள் நிலை அவ்வாறு இருக்கிறது. அவர்கள் வாழும் வீடுகளைப் பார்த்தால், இன்று குருவிகள் கூண்டுகளில் வாழ்வதைப் போல் சிறு சிறு குடிசைகளில் வாழ்கிறார்கள். அந்தக் குடிசைகளில் ஒரு பகுதியில் அவன் இருக்கிறான், மற்றப் பகுதியில் அவனுடைய தொழில். அவர்கள் எந்த விதத்திலும் முன்னேற்றம் அடையவில்லை. அவர்கள் ஈடுபடுகின்ற அந்த கைத்தறித் துறைக்கு மேம்பாடு தேவை. அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு வேண்டும். அந்த பாதுகாப்பு அவர்களுக்கு வாழ்வு அளிக்கின்ற ஒரு அம்சமாக இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நாம் நினைத்துப் பார்க்க கடமைப்பட்டு இருக்கிறோம்.



1971 டிசம்பர் 9] [திரு. கே. ஏ. வகாப்]

கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில் தமிழக அரசு நிச்சயமாக நல்ல ஆக்கமும், ஊக்கமும் கொண்டு இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பஞ்சத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கப் படுகிறது. அந்த நிலையில் ஒரு நேரத்திலே அந்த கைத்தறித் தொழிலில் ஈடுபட்ட மக்கள் பஞ்சத்திற்கு ஆளாகி அவதிப்படும் நேரத்தில், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அந்தக் காலத்தில் கைத்தறித் துணிகளை அவர்கள் தோள்களில் ஏற்றி விற்றவர்கள்தான் இன்று அமைச்சரவையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஆட்சியில் அந்தக் தொழில் முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் எடுக்கும் அக்கரையில் மகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் பல முறையிலே அந்தத் தொழில் விளம்பரப்படுத்தி பாதுகாப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலுக்கு இன்றைய தினத்திலே அதிக பாதுகாப்பு கிடைக்க இருக்கிறது என்பதைத் தான் இந்த நேரத்திலே நினைவுபடுத்துகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து, மீண்டும் நாளை காலை 9 மணி அளவுக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

## (6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

105. Notification issued with G.O. Ms. No. 1951, Agriculture, dated the 7th July 1971, in regard to the regulation of trade in castor in the taluks of Gudiyatham, Vaniyambadi, Tirupathur and Polur in the North Arcot District. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

106. Notification issued with G.O. Rt. No. 1805, Revenue, dated the 8th October 1971 in regard to exemption from liability to entertainments tax to the benefit film show organised by the Secretary, Monday (Charity) Club, Madras on 16th October 1971 at Wellington Talkies, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

107. Notification issued with G.O. Ms. No. 1776, Home, dated the 23rd July 1970, in regard to certain amendments to the Tamil Nadu denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules, 1959, published at pages 116-161 of the Rules Supplement to Part I of the *Tamil Nadu Government Gazette*, dated the 18th March 1959 as subsequently amended. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

### *B. Reports, Notifications and Other Papers.*

**'Nil'.**

## இணைப்பு

[408-ம் பக்கத்தில் உள்ள 201-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### சென்னை நகரத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான காலி இடங்கள்.

| இராமம். (1) | சர்வே எண். (2) | பரப்பு (3) காணி. | கிரவுண்டு. | சதுர அடி. | நிலம் பதிவு செய்யப் பட்டுள்ள இலாகா வின் விவரம். (4) |
|---|---|---|---|---|---|
| எழும்பூர் .. | 156/4 | 3 | 17 | 0 456 | தபால் தந்தித் துறை |
| | 453/6 | 0 | 0 | 2,352 | ரயில்வே துறை |
| | 453/7 | 0 | 0 | 1,566 | ,, |
| | 801 | 1 | 18 | 0,823 | ,, |
| | 1601/1 | 6 | 07 | 1,140 | ராணுவத் துறை |
| | 320/1 | 0 | 22 | 0,735 | ரயில்வே துறை |
| | 320/2 | 2 | 0 | 1,658 | ,, |
| | 320/3 | 0 | 18 | 1,627 | ,, |
| | 321/2 | 0 | 0 | 0.432 | ,, |
| | 321/3 | 0 | 0 | 0,227 | ,, |
| | 321/4 | 0 | 0 | 0,276 | ,, |
| | 370/1 | 0 | 12 | 0,222 | ,, |
| | 370/2 | 1 | 11 | 2,256 | ,, |
| | 370/3 | 0 | 14 | 1,426 | ,, |
| | 371 | 0 | 11 | 0,660 | ,, |
| | 377/2 | 0 | 2 | 1,201 | ,, |
| | 388 | 7 | 2 | 1,093 | ,, |
| | 451/1 | 3 | 23 | 2,318 | ,, |
| | 452 | 4 | 10 | 0,427 | ,, |
| | 453-1 | 0 | 13 | 1,842 | ,, |
| | 463/2 | 1 | 06 | 2,322 | ,, |
| | 464 | 4 | 03 | 0,975 | ,, |
| | 465/2 | 5 | 5 | 1,660 | ,, |
| | 465/5 | 0 | 1 | 0,962 | ,, |
| | 761 | 0 | 3 | 1,850 | ,, |
| | 789/1 | 3 | 12 | 0,853 | ,, |
| | 789/3 | 0 | 03 | 1,017 | ,, |
| | 801 | 1 | 18 | 782 | ,, |
| | 807/1 | 0 | 13 | 1,104 | ,, |
| | 808/2 | 0 | 13 | 1,170 | ,, |



| இராமம். (1) | சர்வே எண். (2) | பரப்பு. (3) காணி. | கிரவுண்டு. | சதுர அடி. | நிலம் பதிவு செய்யப் பட்டுள்ள இலாகா வின் விவரம். (4) |
|---|---|---|---|---|---|
| எழும்பூர் .. | 810/1 | 36 | 3 | 0,576 | ரயில்வே துறை |
| | 816/2 | 0 | 0 | 0,154 | ,, |
| | 633/8 | 1 | 3 | 0,962 | ,, |
| நுங்கம்பாக்கம் .. | 20/2 | 0 | 6 | 1,713 | ராணுவத் துறை |
| | 21 | 0 | 15 | 0,428 | ,, |
| | 35/89 | 0 | 2 | 7,013 | தபால் தந்தித் துறை |
| | 96 | 7 | 22 | 3,043 | மத்திய அரசு. |
| | 100 | 7 | 03 | 0,676 | மத்திய பொறியியல் துறை. |
| | 123/2 | 1 | 02 | 0,027 | மத்திய அரசு. |
| | 616/5 | 0 | 0 | 1,653 | தபால் துறை. |
| | 104 | 7 | 16 | 1,738 | ரயில்வே துறை |
| | 535 | 7 | 14 | 1,761 | ,, |
| | 544 | 3 | 13 | 1,671 | ,, |
| | 610/1 | 0 | 16 | 0,676? | ,, |
| | 610/2 | 0 | 22? | 0,383? | ,, |
| | 610/3 | 0 | [illegible] | 1,378 | ,, |
| புலியூர் .. | [illegible] | | | | |
| | 507 | 8 | 10 | 0,000 | ,, |
| | 547 | 1 | 12? | 0,004 | ,, |
| | 600/11 | 0 | 0 | 19 | ,, |
| | 602 | 12 | 15 | 0,014 | |
| | 925 | | 4 | 39 | |
| அரசினர் பண்ணை | 1/1K | | 26 | 82 | மத்திய அரசு |
| கோடம்பாக்கம் .. | T.S. No. 4 in Block 31 | 178 கிரவுண்டு களும் 1,567 சதுர அடியும். | | | மத்திய தற்காப்புத் துறை. |
| தண்டையார்ப் பேட்டை. | 1849/4 | 1 | 9 | 1,228 | மத்திய அரசு |
| | 1846/5 | 1 | 9 | 0,750 | ,, |
| வேப்பேரி .. | 13 | 76 | 18 | 2,242 | ,, |
| | 16 | 61 | 16 | 0 183 | ,, |

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

---

## IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

## IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri. S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings. Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer, and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad

---

PUBLISHED UNDER RULES 234 AND 267 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.